**DKH11 - தமிழ்நாட்டு வரலாறு கி.பி.1967ஆம் ஆண்டு வரை**

## அலகு – 1

### தமிழகம் : வரலாற்றுக்கு முந்தைய காலம்

1. அறிமுகம் : தமிழக வரலாற்றில் புவியியல் இடயியல் ஆசியவற்றின் செல்வாக்கு
2. தமிழக வரலாற்றுச்சான்றுகள்
3. வரலாற்றுக்கு முந்திய காலத்தமிழகத்தில் மக்களின் குடிமரபும்
4. ஆரியர் பெருக்கம்

### சங்ககாலத் தமிழகம்

5. சங்ககாலம் - சங்கத்தின் காலம்
6. பண்டைய சேரர்
7. பண்டைய சோழர்
8. பண்டைய பாண்டியர்
9. சங்ககால ஆட்சிமுறை – பொருளாதாரம் - வாணிபம் - சமூகம் - சமயம் தத்துவம் கலைகட்டிடக்கலை.

## அலகு – 2

10. களப்பிரர்களின் இடையாட்சிக்காலம்
11. களப்பிரர்கள் முற்கால பல்லவர் தோற்றம் - தொடக்கால பல்லவர்கள்
12. முதல் பாண்டிய பேரரசு
13. பிற்கால பல்லவர்கள் - மகேந்திரவர்மன் - நரசிம்மவர்மன்
14. பல்லவர் ஆட்சிமுறை
15. சமூக வாழ்க்கை
16. கலை கட்டிடக்கலை
17. சோழப்பேரரசு – புகழிமிக்கசோழர்கள் - சாளுக்கிய சோழர்கள்
18. சோழர் ஆட்சிமுறை
19. சமுதாய வாழ்க்கை மரபுகள், பழக்கங்கள்
20. சமயம் - தத்துவம்
21. கல்வி, இலக்கியம்
22. கலை, கட்டிடக்கலை
23. இரண்டாம் பாண்டியப்பேரரசு – நிர்வாகம் சமுகவாழ்க்கை, கலை கட்டிடக்கலை

## அலகு – 3

24. மதுரை சுல்தானியம்
25. விஜயநகர ஆட்சியின் கீழ் தமிழகம் - குமாரகம்பனாவின் தமிழக படையெடுப்பு
26. தலைக்கோட்டைப் போர்
27. ஆட்சிமுறை
28. பொருளாதாரநிலை
29. இலக்கியம், சமயம், கட்டிடக்கலை
30. மதுரைநாயக்கர்கள் - விசுவநாதநாயக்கர் - முத்துவீரப்பநாயக்கர் - திருமலைநாயக்கர் - மங்கம்மாள் - மீனாட்சி
31. தஞ்சைநாயக்கர்கள் - செவப்பநாயக்கர் - ரகுநாதநாயக்கர் - விஜயநாகவ நாயக்கர்
32. செஞ்சிநாயக்கர்கள் - வைப்பதூபாக்கிகிருஷ்ணப்பா – முதலாம் கிருஷ்ணப்பா - இரண்டாம் கிருஷ்ணப்பா
33. நாயக்கர் ஆட்சி முறை – வாழ்க்கை முறை – கலாச்சாரம் -கலை, கட்டிடக்கலை
34. இராமநாதபுரம் சேதுபதிகள்
35. தஞ்சை மராத்தியர்கள் - வெங்கோஜி, சரபோஜி - துக்கோஜி – 2ம் சரபோஜி – 3ம் சரபோஜி
36. தமிழகத்தில் ஐரோப்பியர்கள்

## அலகு – 4

37. ஆற்காடு நவாப்புகளின் கீழ் தமிழகம் - கர்நாடகப்போர்
38. நவாப்ஆட்சி கால நிர்வாகம்
39. தமிழ்நாடும் மைசூர்
40. பாளையக்காரர்முறை
41. தென்னிந்திய கிளர்ச்சி
42. வேலூர் கிளர்ச்சி
43. கல்வி மற்றும் ஆட்சி, நிர்வாகம்
44. நிலவருவாய் நிர்வாகம்
45. கம்பெணி ஆட்சியின்கீழ கல்வி
46. கி.பி. 19-20ஆம் நூற்றாண்டில் மொழி இலக்கிய வளர்ச்சி
47. நீதித்துறை அமைப்பு
48. சுயமரியாதை இயக்கம்

## அலகு – 5

49. சுதந்திரப்போராட்டத்தில் தமிழகம்
50. இராஜாஜி
51. காமராசர்
52. கல்வி வளர்ச்சி
53. இந்தி எதிர்ப்புப்போராட்டம்.

**HISTORY OF TAMILNADU UPTO 1967 A.D.**

**Book for Reference**


| | |
|---|---|
| Baliga B.S. | Studies in Madras Administration, 2 Vols., Madras 1949 |
| Balasundaram. N | "The Dravidan Movement in Madras" in State Politics in India, 1967 |
| Dikshitar, V.R.R. | Studies in Tamil Literature and History |
| Edward Thomson | Rise and Fulfilment of British Rule in India |
| Hardgrave L. Robert | The Dravidan Movement |
| Kanakasabai, V. | The Tamils 1800 years ago |
| Krishnaswami, A. | Tamil Country under Vijayanagar |
| KrishnaswamiAiyangar S | Beginning of South Indian History; Ancient India and South Indian History and Culture. |
| Mahalingam T.V | Kanchipuram in the Early South Indian History and Culture; South Indian Policy |
| Majumdar, R.C | History and Culture of the Indian People |
| Meenakshi, C | Administration and Social Life under the Pallavas |
| MukerjeeNilamani | Ryotwari System in Madras |
| Pillai. K.K | Social History of the Tamils |
| Rajayyan. K. | History of Madurai |
| Rajayyan. K. | South India Rebellion : The First war of Indian Independence; Administration and Society in the Carnatic; A History of British Diplomacy in Tanjore; Rise and Fall of the Poligars in Tamil Nadu; History of Tamil Nadu upto 1565; History of Tamil Nadu from 1556 to the |
| Raman. K.V. | The early History of the Madras Region |
| Retnaswamy. M. | Some Influence that Made the British Administrative System |
| RajamanikkamPillai. M. | PallavarVaralaru (Tamil) |
| RajamanikkamPillai. M. | CholarVaralaru (Tamil) |
| Sastri. K.A.N. | A History of South India; The Cholas; The Sangam Age; The Pandyan Kingdom |
| SrinivasaAiyangar P.T. | History of the Tamils |
| Subramanian. N. | The Sangam Polity, History of Tamil Nadu upto 1526 |
| Vridegirisan | Nayaks of Tanjore |

## வரலாற்றுக்கு முந்திய காலத் தமிழகம்

மனிதன் தன்னுடைய வாழ்க்கை பற்றியும், தான் புரிந்த சாதனைகளைப் பற்றியும் எழுத முற்பட்ட நாளிலிருந்து வரலாறு துவங்கிற்று. அப்படிப்பட்ட வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் மனிதனைப் பற்றியறிய பயனுள்ள சான்றுகள் மிகுதியாக இல்லையென்றே கூறலாம். மக்களின் மரபுகள் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தமுறை, மொழிவாரியாக வாழ்ந்த முறை, மக்கட் தொகுதிகளுக்குள் நிலவிய உறவுமுறை, அகழ்வாய்வுகளில் கண்டெடுக்கப்பட்ட பானை ஓடுகள் மனித எலும்புகள் ஆகியவற்றைக் கொண்டு தமிழழக மக்களின் வரலாற்றுக்கு முந்திய காலச் செய்திகளை ஓரளவு அறியலாம். இச்செய்திகள் இதே கால நிலைக்குரிய வேறு சில நிலப்பகுதிகளின் செய்திகளோடு ஒத்திருப்பதையும் காணலாம்..

தமிழ்நாட்டின் வரலாற்றுக்கு முந்திய காலத்தை அறிஞர்கள் நான்கு காலங்களாகப் பிரித்துள்ளனர். அவை: (1) பழங்கற்காலம் (2) புதிய கற்காலம் (3) தாமிர-கற்காலம் (4) ஆதி உலோகக்காலம் என்பனவாம். இவற்றுள் உட்பிரிவுகளும் உண்டு. இது பற்றி தமிழக நாகரிகத்தில் ஒரு சிறப்பை நாம் காணமுடியும். அது என்னவெனில் இவ்வேறுபட்ட காலங்களுக்கிடையே தொடர்ந்து நாகரிகம் வளர்ச்சிபெற்று வந்திருப்பதேயாம். இக்கருத்தினை இராமச்சந்திர தீட்சிதர் ஏற்றுக் கொண்டதோடு, தென்னிந்திய கற்கால நாகரிகத்தை உருவாக்கியவர்களும் தமிழ் மக்ளே என்கிறார். தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பண்டைய தென்னிந்திய மனிதன் பயன்படுத்திய கற்கருவிகளின் அளவு, அமைப்பு-ஆகியவற்றின் அடிப்படையில் அவனது காலத்தைக் கணித்துள்ளனர். மூன்று இலட்சம் ஆண்டுகட்கு முன்பே இங்கு மனிதன் தோன்றி வாழ்ந்துள்ளான் என்பது அவர்கள் கருத்து.

தமிழ்நாட்டில் பழங்கற்கால மனிதர் வாழ்ந்த நிலையை அறிந்து கொள்ள அவர்கள் பயன்படுத்திய கற்கருவிகளே சான்றுகளாக உள்ளன. சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதியில் பண்டைய மனிதர் கையாண்ட கைக்கோடாரிகளும், கததி போன்ற பிளப்பான்களும் கண்டெடுக்கப்பட்டன. இக்கருவிகளைச் செய்த திறனை ‘சென்னைத் தொழில் முறை‘ (Madras Industry) என்பர். ஐயப்பாட்டினைத் தரக்கூடிய தலையோடுகளையும், எலும்புகளைக் காட்டிலும் கற்கருவிகளே மானிடவியல் அறிஞர் கட்கும் (Anthropologists), உயிர்நூல் அறிஞர்கட்கும் (Biologists) ஆய்வு முடிவுகட்கு உறுதுணையாகவுள்ளன. தக்காண பீடபூமியின் தென்கோடியில் தான் மனிதன் முதன் முதல் அவதரித்தான் என பி.டி.சீனிவாச ஐயங்காரும் பிற சில அறிஞர்களும் கருதுகின்றனர்.

சென்னைத் தொழில் முறையில் கண்டெடுக்கப்பட்ட கற்கருவிககள் பல வட இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட கைக்கோடரி தொழில்முறைக் (Chopper Industry) கருவிகளை ஒத்துள்ளன. வடமேற்குப்பகுதியில் இதனையே ”சோஹன் தொழில் முறை” (Sohan Industry) என்பர். செங்கற்பட்டு, வடஆற்காடு பகுதிகளில்

காணப்பட்ட பல கற்கருவிகள் படிக்கல்லாக (Quartx) ஆனவை. இதனால் தமிழகத்தின் பழங்கற்காலத்தில் வாழ்ந்த மனிதனை படிகக்கல் மனிதன் என்றும் அழைப்பர். பழங்கற்காலத்தை அடுத்து மனிதன் சிறுசிறு கற்களால் கருவிகளைச் செய்து கொண்ட காலம் ஒன்றுண்டு. அதனைச் சிறுகற்காலம் (Microlithic Age) என்பர். இதனைப் பின்-கற்காலம் (Late Stone Age) என்றும் அழைப்பர்.

பிந்திய கற்காலத்தில் செய்யப்பட்ட கருவிகள் சிறுகற்களாலானவை. செப்பமற்ற பழங்கற்காலக் கருவிகளைக் காட்டிலும் செப்பமுடையவையாகக் காணப்பட்டன. இவை தூத்துக்குடி, திருநெல்வேலி பகுதிகளில் கண்டெடுக்கப்பட்டன. சிறு கற்காலத்தை கி..மு.8000க்கும் கி.மு.6000க்கும் இடைப்பட்டதாக நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். இக்காலத்தையடுத்தே பானைகள் பயன்படுத்தப்பட்ட காலமும் வந்துற்றது. இப்படி ஒவ்வொரு காலத்திற்குமிடையே நாகரிகத் தொடர்ச்சியும், வளர்ச்சியும் இருப்பதைக் காணலாம்.

பண்டைத் தமிழரின் படிப்படியான வளர்ச்சியில் அடுத்த நிலையாகக் கணக்கிடப்படுவது பெருங்கற்காலமாகும். இக்காலத்தில் பெருங்கற்களால் நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டன. இறந்தோரைப் புதைத்த இடத்தைச் சுற்றிலும், மேலேயும் பெருங்கற்களை வைத்து கல்லறை எழுப்பினர். சிலநேரம் தாழிகளில் அடக்கம் செய்தனர். இத்தாழிகளை திருநெல்வேலி செங்கற்பட்டு மாவட்டங்களில் காணலாம். இவை பெரும்பா்லும் கருங்கல் கொண்ட மேட்டுப்பகுதிகளில், நீர்பாசன ஏரிகளையடுத்:தும் விவசாயிகளின் குடியிருப்புக்களையடுத்தும் காணப்படுகின்றன. இக்காலத்தில்தான் நீர்ப்பாசன நெற்சாகுபடிமுறை தென்னகத்தில் தொடங்கப்பட்டிருக்க வேண்டும் என்பது அறிஞர் கருத்து.

திருநெல்வேலிக்கருகில் உள்ள ஆதிச்சநல்லூர் என்னுமிடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் சிறப்பானவை. இப்பகுதியில் மட்பாண்டங்கள் மிகுதியாகப் புழங்கப்பட்டதையும் அறிகிறோம். சில தாழிகள் மனித உடலை முழுமையாகக் கொள்ளக்கூடிய அளவில் மிகப்பெரியனவாக உள்ளன. சடலங்களை எரியூட்டியதாகத் தெரியவில்லை. இவ்வகைத் தாழிகளைப் பெருங்கற்காலத்தவையாகக் கொள்வதிற்கில்லை. ஏனெனில் தாழிகளைச் சுற்றி பெருங்கல் நினைவுச் சின்னங்கள் ஏதுமில்லை. பெருங்கற்கால மட்பாண்டங்களைவிட ஆதிச்சநல்லு:ார் கண்டுபிடிப்புகளில் மற்றுமொரு சிறப்பு உள்ளது. தென்னிந்தியாவில் வேறெங்கும் காணாத வெண்கலப் பாத்திரங்களும், தங்கத்தாலான மணி மகுடங்களும் கிடைத்துள்ளன. திரிசூலம் அல்லது வேல் போன்ற இறைவனது ஆயுதமும், சேவல் பொறித்த கொடியும் கண்டெடுக்கப்பட்டுள்ளதை நோக்குகையில் ஆதிச்சநல்லு::ார்ப் பண்பாட்டில் வேலன் அல்லது முருகன் வழிபாடு வளர்ந்திருப்பதை உணர முடிகிறது. புதிய கற்கால நாகரிகத்திலிருந்து இரும்புக்கால் பண்பாடு எவ்வாறு உருவெடுத்தது என்பது விளங்கவில்லை. இத்தொடர்புக்கான சான்றுகளும்

இல்லை. மட்பாண்டங்களிலும், வெண்கலப் பாத்திரங்களிலும் அரிசியும், உமியும் காணப்பட்டதால் அன்றைய ஆதிச்சநல்லூர் மக்களுக்கு நெற்சாகுபடி முறை தெரிந்திருக்க வேண்டுமெனலாம்.

புதிய கற்கால மனிதன் படிப்படியாக வளர்ச்சியுற்று உலோக காலத்தை அடைந்தான். வரலாற்றுக்கு முந்தியகால மனிதன் இவ்வுலோக காலத்தில்தான், தன்னுள் பொதிந்து கிடந்த ஆற்றல்களை வெளிக்கொணரலானான். இரும்பு, வெண்கலம், செம்பு ஆகியவற்றாலான புதிய கருவிகளையும் படைத்தான். தனது பேசும் திறனை வளர்த்து, நன்முறையில் அமைந்த வாழ்க்கையை மேற்கொண்டான்.

அடுத்து பண்டைய இலக்கியங்களின் வாயிலாக வரலாற்றுக்கு முந்திய காலத் தமிழகம் பற்றிய செய்திகளைக் காண்போம். விந்தியமலைத் தொடருக்கு தென்பாலுள்ள நிலப்பகுதிகளைப் பற்றிய குறிப்புகள் ஏதும் பழைய சமஸ்கிருத நூல்களிலோ அல்லது பாலிமொழி நூல்களிலோ இல்லை. சமஸ்கிருத இலக்கண ஆசிரியரான பாணினிக்கு தென்னகம் பற்றியே தெரியாது. கி.மு. நான்காம் நூற்றாண்டளவில் வாழ்ந்த சமஸ்கிருத இஇலக்கண வல்லுநரான காத்தியாயனர் தென்னிந்தியாவில் இருந்த சேர, சோழ, பாண்டிய அரசுகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். அர்த்தசாஸ்திரம் இயற்றிய கவுல்டியர் சந்திரகுப்த மௌரியர் காலத்தவராயின் தமிழகம் பற்றி அவர் தரும் குறிப்புகளே மிகப்பழமையானவை. எனினும் கவுல்டியர் காலம் பற்றி கருத்து வேறுபாடுள்ளது. ஆனால் மெகாஸ்தானீஸ் என்னும் கிரேக்க தூதுவர் சந்திரகுப்த மௌரியர் அவையில் இருந்தவர் என்பதில் கருத்து வேறுபாடில்லை. அவர் பாண்டிய நாட்டைப்பற்றியும் அவர்தம் ஆட்சிமுறை பற்றியும் குறிப்பிட்டுள்ளார். டாலமி எழுதிய நிலநூலிலும், பெரிப்புளூஸ் என்ற நூலீலும், தமிழகத்தின் கடல் கடந்த வாணிபம் பற்றியும், காவிரிப்பூம்பட்டினம் போன்ற கடற்கரைப் பட்டினங்கள் பற்றியும் செய்திகள் கூறப்பட்டுள்ளன.

தமிழகத்தின் மூவேந்தர்களைப் பற்றிய முதற் கல்வெட்டுக் குறிப்பு அசோக மன்னரது கல்வெட்டுக்களில் உள்ளன. அதில் சோழர்கள், பாண்டியர்கள், கேரளபுத்திரர்கள், சத்தியபுத்திரர்கள் தனித்தனியே ஆண்டதாகக் கூறப்பட்டுள்ளது. அசோகர் கலிங்கநாடு வரையே படையெடுத்து வந்தார். பின்னர் போரினைக் கைவிட்டார். தென்னகத்தின் மீது படையெடுத்து வராவிட்டாலும் தூதாண்மை உறவுகள் கொண்டிருப்பார் காரவேலரது ஹதிகும்பா கல்வெட்டு தமிழகவேந்தர்களின் கூட்டணிப் படையை வென்று வாகைசூடியதாகக் கூறுகிறது. விலையுயர் நகைகளையும், முத்துக்களையும், யானைகளையும், குதிரைகளையும் காரவேலர் கவர்ந்து சென்றதாகவும் கூறுகின்றது.

சமஸ்கிருத காப்பியங்களான இராமாயணமும், மகாபாரதமும் தென்னக ஊர்கள் பற்றியும், மக்களது பண்பாடு, அரசியல் பற்றியும் பல செய்திகளைக் கூறுகின்றன. தென்னிந்தியாவின் நிலஇயல் அமைப்போடு, இலங்கை பற்றியும்

செய்திகள் உள்ளன. இராமாயணத்தில் கூறப்படும் பல செய்திகளைக் ' கதைகளென கொள்ளலாமே தவிர வரலாறாகக் கொள்ள முடியாது என நீலகண்ட சாஸ்திரி போன்றோர் கருதுகின்றனர். பாலி மொழியில் உள்ள இலங்கைத் தொடர் வரலாறுகளாக மஹாவம்சமும் தீபவம்சமும் தமிழகம் பற்றிய சில செய்திகளைத் தருகின்றன.

தமிழரின் ஆதிக்குடியிருப்பு யாது என்னும் வினாவிற்கு அறிஞர்கள் பல்வேறு விடைகளைத் தந்துள்ளனர். தமிழ் மொழிக்குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழி வேறொரு நாட்டில் பேசப்படுவதன் அடிப்படையில் தமிழர்கள் இங்கிருந்து அங்கு சென்றார்களா அல்லது அங்கிருந்து இங்கு வந்தார்களா என்ற வாதம் எழலாம். பலுச்சிஸ்தானத்தில் திராவிடமொழியின் ஒரு திசை மொழியான பிராஹீ எனும் மொழி பேசப்படுகிறது. இதன் அடிப்படையில் இரண்டு கருத்துக்கள் எழுந்துள்ளன. அதில் ஒன்று இந்தியாவின் தென் பகுதியிலிருந்து திராவிட மொழிபேசும் மக்கள் வடபகுதிக்குக் குறிப்பாக, நிலவழியாக பலுசிஸ்தானம் சென்று தங்கிவிட்டனர்; இந்நிலையில் அவர்கள் பிராஹீ மொழியைப் பேசிவரலாயினர். மற்றொன்று திராவிட மொழி பேசுவோர் புறத்தேயிருந்து இந்தியாவிற்குள் நுழைந்தபோது பலுஸ்தானத்தில் ஒருபிரிவினர் தங்கிவிட்டனர் என்பதாம். இனமரபு ஆய்வின் அடிப்படையில் முன் எடுத்துக்கூறியபடி தமிழ்நாட்டின் ஆதிக்குடியினர் கிழக்கு நடுநிலக்கடல் பகுதியிலிருந்தே வந்தவர்கள் எனக்கொள்ளலாம்.

**ஆரியர் பெருக்கம்**

வரலாற்றுக்கு முற்பட்ட பழங்காலத்தில் தமிழ்நாடு வடஇந்தியாவின் தொடர்பில்லாது தனித்து விளங்கியதாகவே தெரிகிறது. தமிழர் நாகரிகம் அல்லது திராவிடர் நாகரிகம் வெளிநாட்டவரின் செல்வாக்கு ஏதுமின்றி தற்சார்புடையதாகவே வளர்ச்சியுற்றது. இருப்பினும் கடல் வழியாக மத்திய கிழக்கு நாடுகளுடன் தொன்று தொட்டு வணிகத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. பண்டைய திராவிட சமுதாயம் ஆரிய சேர்க்கையற்றதாக ஆரம்பகால குலமரபு நாகரிகப்படியில் இருந்தது. இனமரபு அடிப்படையில் தமிழர் தனித்தனி சிறு குழுக்களாக வாழ்ந்தனர். இனமரபுச் சின்னங்களே வழிப்பாட்டுப் பொருள்களாகவும் வளர்ந்தன. அப்படிப்பட்ட தமிழ்ச் சமுதாயத்தின் மீது ஆரிய நாகரிகமும் பண்பாட்டுக் கூறுகளும் மேலடுக்கப்பட்டன.

ஆரியப்பண்பாடு என்பது யாது? ஆரியர் என்போர் யார்? எதற்காக அவர்கள் இந்தியாவிற்கும், பின்னர் தென்னகத்திற்கும் வந்தனர்? ரேபன்ற வினாக்ககளுக்கு திட்ட வட்டமான விடைகூற இயலாவிட்டாலும் பெரும்பாலான அறிஞர்களிடையே நிலவும் கருத்துக்களை பார்ப்போம். ஆரியர் என்போர் சமஸ்கிருதம், பாரசீகம், ஜெர்மானிய மொழி போன்ற ஏதேனும் ஓர் ஆரிய மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு மொழியைத் தாய் மொழியாகக் கொண்டு பேசுவோர். அவ்வாறே திராவிடர் என்போர் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு பேசுவோர், மொழியின்

அடிப்படையில் இனப்பாகுபாடு செய்வது தவறு என்பது முன்னர் விளக்கப்பட்டது. இருப்பினும் ஆரியர், திராவிடர் என்னும் சொற்கள் அம்மொழிகளைப் பேசுவோர் வளர்த்த நாகரிகத்தையும், பண்பாட்டையும் குறிக்கலாயின. ஒரே மொழியைப் பேசுவோர் பெரும்பாலும் ஒரே இடத்தில் வாழ்தல் இயல்பே. இதனால் அவர் தம் வாழ்க்கை முறைகளும் ஒன்றே போல் அமைகிறது. எனவே ஒரே மொழி பேசும் மக்களின் பண்பாடு ஒன்றாகிறது.

ஆரியர் பெரும்பாலும் மேய்ச்சல் நாடி இடத்துக்கு இடம் அலைந்து திரியும் வாழ்க்கை மரபுடைய இனத்தவராக இருந்தனர். இவர்கள் வெற்றி வீரர்களாக இந்தியாவிற்குள் நுழையவில்லை. அமைதியாக அடங்கிப்போகும் மக்களாக தங்களது வழிபாட்டு முறைகளோடும், உடைமைகளோடும், கால்நடைச் செல்வங்களோடும், இந்தியாவிற்குள் வந்தனர். சிவந்தமேனியைப் பெற்றிருந்த அவர்கள் கருத்தமேனி கொண்டிருந்த பூர்வீகக் குடிகளை இகழ்ச்சியுடன் நோக்கினர். எனினும் அவர்களோடு கட்டுப்பாடின்றி கலந்து வாழ முற்பட்டனர். ஆரியர் மொழி பூர்வீகக்குடிகளது மொழியை புழக்கத்தினின்று நீக்கிற்று பூர்வீகக்குடி நாகரிகத்தின் ஒவ்வொரு கூற்றையும் ஆரிய நாகரிகம் தன் வழிக்கு மாற்றியமைத்தது இத்தகைய தன்னியற்படுத்துதலை ”ஆரியமயமாக்கல் செயலுக்கு வந்தது. விந்திய மலைக்குத் தெற்கே கி.மு.1000 ஆண்டளவில் இவ்விரிவாக்கம் துவங்கியது என்பர். ஆனால் தமிழகததிற்குள் அவர்கள் கி.மு. 6ஆம் நூற்றாண்டு வாக்கிலேயே நுழைந்திருக்கிறார்கள் எனலாம்.

மானிடவியல் வல்லுநர் அண்மையில் ”ஆரியமயமாக்கல்” என்ற சொல்லுக்குப் பதிலாக, ‘சமஸ்கிருதமயமாக்கல்‘ என்ற சொல்லை உருவாக்கியுள்ளனர். வரலாற்றாசிரியர்கள் இச்சொல்லைக் குறை கூறியுள்ளனர். ஏனென்றால் இச்சொல் சற்று வேறுபட்ட ஒரு செயலைக் குறிப்பதாகவுள்ளது. இந்துக்களில் தாழ்ந்த சாதியினராகக் கருதப்பட்ட பிராமணர்களின் பழக்க வழக்கங்களையும் சமயக் கோட்பாடுகளையும், சடங்குகளையும் வாழ்க்கை முறைகளையும் கடைப்பிடித்து வரும் செயலை ”ஸமஸ்கிருதமயமாக்கம்” என்பர்.

சமஸ்கிருதம் என்றால் செம்மை செய்யப்பட்டது என்று பொருள். பீராகிருதம் என்றால் முந்தியது எனப்படும். சமஸ்கிருத மொழியின் அடிப்படையில் ஏற்பட்ட பிராமண பழக்க வழக்கங்களை பிறசாதியினர் மேற்கொள்வதும், ஆரியர்-தென்னிந்தியப் பகுதிகளில் குடியேறியதும் வேறுபட்ட செய்கையாகும்.

ஆரியர்கள் இந்தியாவில் கி.மு.2000 ஆண்டளவில் நுழைந்திருக்கக் கூடும். வடமேற்குப் பகுதியிலிருந்து தென்னிந்தியப் பகுதிகளுக்கு விந்திய மலைத்தொடரைக் கடந்து வந்திருக்க வேண்டும். வட இந்தியாவிற்குள் ஆரியர் வருகை பற்றியும், விரிவாக்கம் பற்றியும், அறிந்து கொள்ள போதிய சான்றுகள்

உள்ளன. ஆனால் தமிழகத்திற்கும் அவர் தம் குடியேற்றம் பற்றி அறிய சான்றுகள் இல்லையெனலாம். இந்தியாவின் வடபகுதியிலிருந்து பலமுறை அலை அலையாக ஆரியர் தக்காணத்தையும் தமிழ்நாட்டையும் நோக்கி வந்து விந்தியத்தின் தென்பால் பல இடங்களில் குடியேறினர் என்றும், இக்குடியேற்ற முயற்சி விரிவடையவே வடஇந்திய தென்னிந்திய திராவிடருக்கும் பலவகையான உறவுகள் பலகிப் பண்பாட்டு ஒற்றுமை பல நிலைகளில் தோன்றலாயிற்று என்றும் பேராசிரியர் ந.சுப்பிரமணியம் கருதுகிறார்.

ஆரிய இனத்திலிருந்து வெளியேற்றப்பட்ட மக்கள் தட்சிணபாதம் சென்று குடியேறினர் என இருக்கு வேதத்தில் உள்ள ஒரு பதிகம் கூறுகிறது. விசுவாமித்திரருக்கு ஏற்பட்ட ஒரு சாபக்கேட்டால் அவரது ஐம்பது புதல்வர்கள் தக்காணத்தின் எல்லைப்பகுதிக்கு விரட்டப்பட்டனர் என்று அய்த்திரேயே பிராமணம் கூறுகிறது. சமஸ்கிருத இலக்கண ஆசிரியர் பாணினிக்கு கலிங்க நாட்டைப் பற்றியும், கோதாவரி நதிக்கரையையொட்டிய இடங்களைப் பற்றியும் தெரிந்திருந்தது தமிழகத்தின் வட எல்லைப் பகுதியில் ஆரிய குடியேற்றங்கள் ஏற்பட்டமைக்குச் சான்றுககள் உள்ளன. தமிழகத்துக்குள் குடியேறிய நாள் திட்டவட்டமாகத் தெரியவில்லை. கி.மு.நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த காத்யாயனருக்கு தமிழகத்தில் இருந்த சேர, சோழ, பாண்டிய அரசர்க் பற்றித் தெரிந்திருந்தது. கங்கைச் சமவெளி மக்களுக்கு வாணிப நோக்கில் தென்னாட்டுத் தடங்கள் (Trade routes) இமாலய நாடுகட்குச் செல்லும் தடங்களைக் காட்டிலும் முக்கியமானவை என கௌடில்யர் கூறியுள்ளார். தென்னகத்து வாணிபப் பொருட்களில் சங்கு, வைரம், முத்து, பொன் ஆகியவற்றால் செய்யப்பட்ட நகைகளும் மதுரையைச் சார்ந்த பகுதிகளில் நெய்யப்பட்ட பஞ்சுத் துணிகளும் பெயர் பெற்றவை என்றும் கௌடில்யர் குறிப்பிட்டுள்ளார்.

ஆரிய பழக்க வழக்கங்களைத் தென்னாட்டுக்குக் கொண்டு வந்தவர்களில் அகத்தியர் முதலாமவராகக் கருதப்படுகிறார். ஆனால் அகத்தியரோ ஒரு வரலாற்றுப் புதிராக உள்ளார். அகத்தியரைத் தமிழ் மொழியின் தந்தையென்றும், அவர் பொதிகை மலைக்கு வந்து வாழ்ந்தாரென்றும், முதல் சங்கத்தில் வீற்றிருந்த ஒரு புலவர் என்றும் தமிழர் நம்புவர். தமிழ் மொழியையும் இலக்கணத்தையும் நெறிபடுததியவர் இவரே என்பாரும் உளர். தொல்காப்பியர் அகத்தியரின் மாணவராகவும் கருதப்படுகிறார். இவ்விருவரும் ஒருவரையொருவர் கடிந்து கொண்டு பகைவர்களாக வாழ்ந்தனர் என்றும் சொல்வர். தொல்காப்பியர் தனது இலக்கண நூலான தொல்காப்பியத்தை அகத்தியரின் உதவியின்றி இயற்றியதாகவும் கூறுவர்.

அகத்தியர் தென்னகம் போந்தமை குறித்து ஒரு புராணக்கதையேயுள்ளது. அகத்தியர் இமயத்தில் வாழ்ந்து வந்ததாகவும், சிவபெருமான் மலைமகளை மணந்த காலையில் தேவர்கள் அனைவரின் வருகையால் இமயம் அமிழ்ந்து தென்னகம்

உயர்ந்தது என்றும், புவிநிலையைச் சரிக்கட்டவே அகத்தியர் தென்னாடு சென்றார் என்றும் புராணங்கள் சொல்லுகின்றனன. ஆரிய மரபினர் தென்னகத்தில் குடியேற அகத்தியர் ஆற்றிய தொண்டு பற்றியும் புராணக் கதையொன்றுள்ளது. வடஇந்தியாவிலிருந்து தென்னிந்தியாவுக்கு வரும் பாதையில் கடத்தற்கரிய மலைத்தொடராக விந்தியமலை நெடிது உயர்ந்திருந்ததாகவும், அது மேலும் உயர்ந்து தடையாக இல்லாதிருக்க அகத்தியர் தனது கவிதையாற்றலைப் பயன்படுத்தினார் என்றும், தமிழகம் சென்றடைந்து துறவிக் குடிலொன்றை அமைத்து வாழ்ந்தார் என்றும் சொல்வர். தமிழகம் வந்த அகத்தியர் காவிரியாற்றை உண்டாக்கியதாக ஒரு கதை கூறும் அகத்தியரைப் பற்றிய குறிப்புகளும், அவரை வழிபாட்டிற்குரிய ஒரு கடவுளாகக் கொண்ட செய்திகளும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் உள்ளன. இவற்றையெல்லாம் நோக்கும்போது ஓர் இனமரபின் பண்பாடு நாகரிகம் நாடுவிட்டு நாடு பரவும் முயற்சியும், கடல் கடந்து செல்வதையும் அறிஞர் பெருமக்கள் அகத்தியராக உருவகித்தனரோ என எண்ணத் தோன்றுகிறது. ஆக அகத்தியர் வரலாறு பிரச்சனையாகவே உள்ளது.

விந்தியமலைக்கு வடபால் ஆரியவர்த்தம் என்றழைக்கப்படும் நிலப்பகுதியிலி ஆரியர் எளிதில் குடியேறி தங்களுடைய நாகரிகத்தை மேம்படச் செய்ததுபோல தென்னிந்தியாவில் இவ்வினமரபினரால் செய்ய முடியவில்லை. கீழைக்கடலோரப் பகுதிகளிலும், தென்னகத்தின் தென்கோடிப் பகுதிகளிலும் குடியேறிய ஆரிய இனமரபினர் தங்களுடைய நாகரிகக் கூறுகளை ஏற்கனவே அங்கு உறைந்தோரிடையே புழக்கத்தில் கொண்டு வந்தனர். ஏற்கனவே தென்னாட்டில் வாழ்ந்தோர் தாங்கள் உருவாக்கியிருந்த நாகரிகத்தைத் தொடர்ந்து பின் பற்றியதோடு ஆரிய நாகரிகத்தின் சில கூறுகளை ஏற்றுக் கொண்டனரே ஒழிய முற்றிலும் மாற்றிக் கொள்ளவில்லை. இதற்கு மாறாக தென்னகம் வந்து குடியேறியோர் இந்நிலப்பகுதியில் பேசப்பட்ட மொழியினைக் கற்றுக்கொண்டதோடு தங்களது வாழ்க்கை முறைகளையும் மாற்றிக் கொண்டதாகவே தெரிகிறது.

வரலாற்றாளர் ஆர்.ஜி.பந்தார்கர் கருத்து ஒன்று ஈண்டு குறிப்பிடத்தக்கதாகும். தென்னகத்தில் பேசப்படும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து பிறந்தமையல்ல என்றும், அவை வேறு குடும்பத்தைச் சார்ந்தவையென்றும், இதன் அடிப்படையில் தான் வடஇந்தியக் கலைகளும் தென்னிந்தியக் கலைகளும் மாறுபட்டுக் காணக்கிடக்கின்றன என்றும் அவர் கூறியுள்ளார். வடஇந்தியாவில் ஆரியர் குடிபுகுந்து வாழத்துவங்கிய முறையினின்று தென்னகம் குடியேறி வாழ முற்பட்ட முறை மாறுபட்டிருப்பதற்குக் காரணம் தென்னகத்தில் ஏற்கனவே சீரிய அரசாட்சி முறைகளும், நாகரிக முதிர்ச்சியடைந்த மக்களும் இருந்ததே எனவும் பந்தார்கர் கருதுகிறார். ஆரிய கூட்டத்தினரை அன்போடு வரவேற்ற மக்கள், அவர் தம் வாழ்க்கைக்கான வசதிகளையும் செய்து தந்தனர். இவ்வாறு தென்னகம் வந்தடைந்த ஆரிய இனமரபினரில் சமணர், பௌத்தர்,

பிராமணர் மற்றும் பலரும் அடங்குவர். இவர்களது குடியேற்றங்களுக்கு வரி விலக்களிக்கப்பட்ட நிலங்கள் நன்கொடையாகவும், வழங்கப்பட்டன. பிராமணர்களது குடியேற்றங்கள் அக்கரகாரம், சதுர்வேதி மங்கலம் என்று அழைக்கப்பட்டன.

ஆரிய இனமரபினர் எவ்வழியே தென்னாடு வந்தனர் என்பது குறித்து அறிஞர்களிடையே பல்வேறு கருத்துக்கள் உள்ளன. கீழைக் கடலோரப் பகுதி வழியாக இவர்களுடைய குடிப்பெயர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டுமென்பவர் ஒரு சாரார். ஆரியர் விரிவாக்கம் வடமேற்குப் பகுதியிலிருந்து கிழக்கேயும் தெற்கேயும் இருபிரிவாக ஏற்பட்டிருக்குமென நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். விந்திய மலையைத் தாண்டியதும விதர்பா நாட்டில் குறியிருப்பு ஒன்று முதலாவதாகத் தோன்றியிருக்க வேண்டும். மேலைத் திசை வழியாக இராமன் நாடோடியாய்த் திரிந்தபோது இன்றைய நாஸிக் நகர் அருகாமையிலுள்ள பஞ்சவடி எனும் ஊருக்குச் சென்றதாக இராமாயணம் கூறுகிறது. மேலைக் கடலோரம் வழியே மைசூர், கோயம்புத்தூர், தமிழ்நாட்டின் உட்பகுதிகட்கு ஆரியர் வந்திருப்பார் என சில அறிஞர்கள் கருதுகின்றனர்.

தென்னாட்டில் ஆரியர் தம் விரிவாக்கம் எப்பொழுது ஏற்பட்டிருக்கும் என்பது குறித்தும் வரலாற்றாசிரியர்களிடையே கருத்து வேற்றுமை உள்ளது. இவ்விரிவாக்கம் மிக மெதுவாக படிப்படியாகவே பல நூற்றாண்டுகளினூடே ஏற்பட்டிருக்க வேண்டும். கி.மு.1000 ஆண்டளவில் ஆரிய நாகரிகம் தென்னாட்டில் பரவியிருக்ககூடும் என நீலகண்ட சாஸ்திரி கருதுகிறார். P.பர்ரோ போன்றவர்கள் பல்வேறு பகுதிகளில் அகழ் ஆய்வு செய்த பயனால் நமக்கு கிடைக்கும் நூற்றாண்டு கி.மு.6ஆம் நூற்றாண்டே என்கின்றனர். ஆனால் திட்டவட்டமான ஆண்டு இதுதான் என சொல்வதற்கில்லை. அய்த்திரேய பிரமாணத்தில் சுறியிருப்பதன் அடிப்படையில் ஆரிய குடியேற்றங்கள் விசுவாமித்திரர், அவர் தம் வழித்தோன்றல்கள் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டுமென பந்தார்கர் கருதுகிறார். ஆனால் பாணினியின் புவியியல் குறிப்புகளை நோக்குமிடத்து அவர்காலத்தில் விந்திய மலைக்கு வடபால் உள்ளபகுதி மட்டுமே தெரிந்திருந்ததாகக் கருத வேண்டியுள்ளது. எனவே அவர் காலத்தில் ஆரியர் வடபகுதியில் மட்டுமே இருந்திருப்பர் எனலாம்.

பாணினிக்குப் பின் வந்துற்ற சமஸ்கிருத இலக்கண ஆசிரியரான காத்யாயனருக்கு தமிழக மூவேந்தர்களைப் பற்றித் தெரிந்திருந்தது. எனவே காத்யாயனர் காலத்தில் தமிழகத்திற்குள் ஆரியர்கள் வந்திருப்பர். பதஞ்சலி காலத்தில் தமிழகம் பற்றிய பல நுணுக்கமான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. இதனடிப்படையில் ஆரிய விரிவாக்கம் சீராகத் தொடர்ந்திருக்கும் எனக் கொள்ளலாம். பாணினியின் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டென்றும், காத்யாயனரின் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டளவில் ஆரியவிரிவாக்கம் ஏற்பட்டிருக்காது. கி.மு.நான்காம் நூற்றாண்டையொட்டியே நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறுகிறார். கிழக்கு

வழியில் ஆரிய மரபினா் கலிங்க நாட்டின் வழியாகவும் மேற்கு வழியில் மகாராஷ்டிரம் வழியாகவும் வந்திருப்பா் என்றும், கி.மு.350ஆம் ஆண்டளவில் மதுரை வரை சென்று குடியேறினா் என்றும் பந்தார்கா் குறிப்பிட்டுள்ளார்.

ஆரிய இனமரபினரது விரிவாக்கம் கி.மு.1000 ஆண்டளவில் துவங்கியிருக்கும் என்றும், அது தென்னாடு நோக்கி அமைதியான முறையில் ஒழுங்காக நிகழ்ந்திருக்கும் என்றும், மௌரியப் பேரரசு நிறுவப்படுவதற்கு முன் அவ்விரிவாக்கம் முற்றுப் பெற்றிருக்கக் கூடும் என்றும் நீலகண்டசாஸ்திரி கருதுகிறார். கி.மு.1000 ஆண்டில் துவங்கிய குடியேற்ற முயற்சிகள் முதலாவதாக தக்காணப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும் என்றும், தமிழகத்துக்கு கி.மு.ஏழாம் நூற்றாண்டளவில் வந்து குடியேறியிருக்கக் கூடும் என்றும், சாஸ்திரி எண்ணுகிறார்.

தென்னகம் நோக்கி ஆரியா் குடியேறக் காரணங்கள் யாவை என்ற வினாவுக்கு வரலாற்றாசிரியா்கள் பல விடைகளைத் தந்துள்ளனா். ஒருசில அடிப்படைக் காரணங்களாலேயே வந்தனா் என்கிறார் பேராசிரியா் சுப்பிரமணியன். அவை பின்வருமாறு 1) வட இந்தியாவின் அரசியல் நிலை டேரியஸ் முதல் அலெக்ஸாண்டா் ஈறாக மேற்கொண்ட படையெடுப்புக்களால் சீர்குலைந்தது. மகதப்பேரரசும் சந்திகுப்த மௌரியா் காலத்தில் சீர்கேடான நிலையை எய்திற்று. இம்மாற்றங்களால் விந்திய மலைக்குத் தென்பாலுள்ள தொலைவு நாடுகட்கு இடம் பெயா்ந்து குடியேற ஆரியா் முடிவு செய்திருக்கலாம். 2) சமணா்களும, பௌத்தா்களும், பிராமணா்களும் தத்தம் சமயங்களையும் தத்துவங்களையும், பிறநாடுகளில் பரப்பும் நோக்குடன் குடிபெயா்ந்திருக்கலாம். 3) சந்திரகுப்த மௌரியா் ஆட்சிகாலத்தில் ஏற்பட்ட வற்கடம் (பஞ்சம்) போன்று பல நேரங்களில் வறட்சி ஏற்பட்டமையாலும், கங்கை நதிப் பள்ளத்தாக்கில் மக்கட்தொகைப் பெருக்கம் ஏற்பட்டமையாலும், அங்குறைந்தோர் நல்வாழ்வு காண வேறிடங்களுக்குக் குடிபெயா்ந்திருக்கலாம். 4) புதிய நாடுகளைக் காண வேண்டும் என்ற துணிகரச்செயல், அவா ஆகியவற்றாலும் ஆரியப் பெருக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

தமிழகம் வந்து குடியேறிய ஆரிய இனமரபினரது நாகரிக-பண்பாட்டுக் கூறுகள் நாளடைவில் ஏற்கனவே அங்கிருந்த திராவிட நாகரிகப் பண்பாட்டுக் கூறுகளோடு இணைந்து ஒன்றாயின. இவ்வொன்றிப்பு என்று துவங்கிற்று? என்று முற்றுப் பெற்றது? என திட்டவட்டமாகச் சொல்ல முடியாது. ஆரியா்களை அன்போடு வரவேற்றமையும், அவா்தம் அறக்கோட்பாடுகளை ஏற்றுக் கொண்டமையும் சங்க இலக்கியங்கள் வாயிலாகத் தெளிவாக அறியமுடிகின்றதென நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார். இருமக்கட் கூட்டத்தினரிடையேயும் ஓரளவு நெருக்கமான தொடா்புகள் ஏற்பட்ட பின்னரே சங்க இலக்கியங்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டுமென்றும் அவா் கருதுகிறார். மொழியினடிப்படையில் ஆரிய மொழியில் கூறுகள் தமிழ் உட்பட திராவிட மொழியியல் கூறுகள் மீது அதிகப்படியான பிணைப்புக்களை அல்லது

தாக்க விளைவுகளை ஏற்படுத்தவில்லை என்றே சொல்லலாம். அதேபோன்று தமிழ்ச் சமய, வழிபாட்டு தத்துவ முறைகளிலும் மிகுதியான மாற்றங்கள் ஏற்படவில்லை என்றே கருதலாம்.

பேராசிரியர் சுப்பிரமணியன் கூறுவதுபோல் தமிழகத்தில் குடியேறிய ஆரிய இனமரபினர் யாவருமே ஆரியமொழி பேசுவதைக் கைவிட்டு வந்த இடத்தில் கண்ட வட்டார மொழியான தமிழைத் தாய்மொழியாகக் கொண்டனர். யாகம் செய்து உயிர்பலியிடடு வழிபாடடு முறையைத் தழுவினர். ஆரியருடைய வருணாசிரம சமூகபக் பாகுபாட்டு முறை அவர் தம் வருகைக்கு முன்பே தமிழகத்தில் நிலவிய ஐந்தில குடிப்பாகுபாட்டோடு இணைந்து பிற்கால சாதி வழி சமுதாயத்திற்கு அடிகோலிற்று. இதனால் ஒருகுடிமணம், தீட்டு, தீண்டாமை முதலியவையும் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ந்தன என்றும் சுப்பிரமணியன் கருதுகிறார்.

ஆரியர் பெருக்கம் கால அடிப்படையில் தனித்தனி அலையாக ஏற்பட்டதென்றால் இரண்டாவது மூன்றாவது அலைகள் குப்த பேரரசுக் காலத்தில் ஏற்பட்டிருக்க வேண்டும். கி.பி.நான்காம் நூற்றாண்டளவில் இனப்பெருக்கம் உச்சநிலையை எட்டிற்று எனக்கருத வேண்டியுள்ளது. இவர்களது குடியேற்ற செயல் விளைவாலேயே ஆரம்பகால பல்லவர்களின் பட்டயங்கள் பிராகிருத, சமஸ்கிருத மொழிகளில் வெளியிடப்பட்டமை தெளிவாகும். தமிழக அரசர்களும், ஆரிய பழக்க வழக்கங்களை மேற்கொள்ளலாயினர். ஊர்களின் பெயர்களும், மக்கட் பெயர்களும் சமஸ்கிருத மொழிப் பெயர்களைப் பெறலாயின. இருப்பினும் ஆரிய-திராவிடச் சேர்க்கை என்றுமே முழுமையடையவில்லை. அதே நேரத்தில் முரண்படவுமில்லை. இதேபோல்தான் பிற்காலத்தே முஸ்லீம்களும், ஐரோப்பியர்களும் தமிழகம் வந்து குடியேறிய நிலையில் தமிழ்ச் சமுதாயம் தனக்கேயுரிய நாகரிக-பண்பாட்டுக் கூறுகளைச் சற்றும் கைவிடாது தற்காத்து நிற்பது கண்கூடாகும்.

## சங்க காலம்

சங்க காலம் தமிழ்நாட்டு வரலாற்றில் மிக முதன்மை வாய்ந்ததொரு காலமாகும். சங்க காலத்தில்தான் தமிழருடைய வரலாறு சீராகத் தொடங்குகிறது எனலாம். அந்த காலத்தை வரையறுப்பதில் வரலாற்றாசிரியர்களிடையேயும், அறிஞர்களிடையேயும் மாறுபட்ட கருத்துக்கள் உள்ளன. அச்சங்சக கால இலக்கியங்களே அக்கால வரலாற்றுக்குத் துணையாக அமைகின்றனவேயன்றி வேறு ஏற்புடைய சான்றுகள் இல்லை. இரண்டொரு மேலைநாட்டு வணிகர் விட்டுச் சென்ற சொற்களும், குறிப்புகளும், சில் பிராமி எழுத்துக் கல்வெட்டுகளும் ஓரளவு உதவுகின்றன.

சங்க இலக்கியங்கள் ஏராளமான வரலாற்றுச் செய்திகளை நமக்குத் தந்தவண்ணமிருக்கின்றன. அன்று நிலவிய சமுதாய, அரசியல் நிலைகளைப் பற்றித்

தெளிவான கருத்துக்களை உள்ளடக்கியுள்ளன. இவற்றை ஆய்வாளர்கள் வெளியிட்ட வண்ணமுள்ளனர். இருப்பினும் சங்கத்தின் அல்லது சங்கங்களின் தோற்றம் பற்றியும், காலம் பற்றியும், இருப்பிடம் பற்றியும் பல்வேறு கருத்துக்கள் நிலவி வருகின்றன. துறறவியர் அமைப்பே சமஸ்கிருதத்தில் சங்கம் எனப்பட்டது. சமண, பௌத்த சமயங்களும் அவற்றின் தத்துவங்களும், அவற்றை பரப்ப வந்த துறவியர்களுமே சங்கம் என்ற அமைப்பையும், சொல்லாட்சியையும் தமிழகத்திறற்குக் கொண்டு வந்திருப்பர்.

மதுரையில் கி.பி.740இல், சமண முனிவரான வச்சிரநந்தி என்பாரால் நிறுவப்பட்ட சமண சமயசக் கழகமான 'திராவிட சங்கமே' தமிழ்ச் சங்கங்கட்கு முன்னோடியாக அமைந்தது என பி.டி.சீனிவாச அய்யங்கார் வெளியிட்டுள்ள கருத்தை ஏற்பதற்கில்லை.. காலக்கணக்கீட்டில் பாண்டிய மன்னர்களால் ஆதரிக்கப்பட்ட தமிழ்ச்சங்கம் வேறு; காலத்தால் முந்தியது. சமண முனிவர் ஏற்படுத்திய திராவிடச்சங்கம் வேறு; காலத்தால் பிந்தியது என்று கொள்ளுதலே முறையாகும். தமிழ்ச் சங்கம் என்ற அமைப்பை தொன்று தொட்டு பாண்டிய மன்னர்கள் உருவாக்கி பேணி வளர்த்தனர் என்ற கருத்து ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மூன்று சங்கங்கள் இருந்தமை குறித்தும் அவை இருந்த ஆண்டுகள் குறித்தும் கருத்து வேற்றுமைகள் உள்ளன.

**சங்கம் பற்றிய இலக்கியச் சான்றுகள்**

இறையனார் அகப்பொருள் உரையில் சங்கங்களின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி முதலியன சுருக்கமாகவம், தெளிவாகவும் கூறப்பட்டுள்ளது. ஆனால் இவற்றில் வரலாற்றாளர்கள் நம்ப முடியாத பல செய்திகளும் கலந்திருப்பதால் இவ்வுரையை ஒரு வரலாற்றுச் சான்றாக ஏற்க அறிஞர் தயங்குகின்றனர். எடுத்துக்காட்டாக முச்சங்கங்கள் 9950 ஆண்டுகள் சிறந்து விளங்கின என்றும் 8598 புலவர்கள் இவற்றில் இருந்தனர் என்றும், இவை 197 அரசர்களால் ஆதரிக்கப்பட்டன என்றும் கூறப்பட்டுள்ளது.

சங்க இலக்கியங்களுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இலக்கண நூலான தொல்காப்பியத்துக்கு பாயிரம் யாத்த பனம்பரனார் அவையம் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். தொல்காப்பியர் தொல்காப்பியத்தை இயற்றியதும் நிலந்தருதிருவிற் பாண்டியனின் அவைக்களத்தில், அதங்கோட்டாசான் தலைமையில் அரங்கேற்றம் செய்ததாகப் பாயிரம் கூறுகிறது. இதில் சங்கம் என்ற சொல் குறிப்பிடப்படவில்லை. அதற்கு ஈடாக அவையம் என்ற சொல் வந்துள்ளது.

மாங்குடி மருதனார் தான் இயற்றிய மதுரைக்காஞ்சியில், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனின் பண்புகளைக் கூறுமிடத்து

பெயர் பெற்ற புலவர்கள் கொண்ட புணர்கூட்டு என்ற சொல் கையாளப்பட்டிருப்பது போற்றற்குரியதாகும். கலித்தொகை 35ஆம் செய்யுளில்

"நிலனாவில் திரிதரூஉம் நீண்மாடக் கூடலார்

புலனாவில் பிறந்தசொற் புதிதுண்ணும் பொழுதன்றோ"

என்ற வரிகளிலிருந்து மதுரையில் கூடியிருந்த சான்றோரையும், அவர் தம் அறிவுடைய நாவன்மையையும் அவர் புதிது புதிதாகப் பாடும் செய்யுட்திறத்தையும் அறிகிறோம். மற்றொரு கலித்தொகைச் செய்யுளில் (68) மதுரையை ஆண்ட பாண்டிய மன்னனுக்கு அமைச்சனைப் போல நூல் வல்ல ஆசிரியர் பலர் மதுரைக்கண் இருந்தனர் என்றும், அவரது செவி செய்யாகவும், சான்றோர் செய்யுட்கள் நீராகவும்‘ அவர் தம் நா ஏராகவும் கொண்டு புலமுழுதுண்ணும் புலவரென்றும், அவர் புதிய புதிய கவிகளை மிகுதியாக உண்டாக்குபவரென்றும் கூறப்பட்டுள்ளது.

"தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின்

மகிழ்நனை மறுகின் மதுரை"

எனவரும் சிறுபாணாற்றுப்படை அகடிள் மதுரையில் தமிழ்ப் புலவர்கள் வீற்றிருந்த தெருவை குறித்தல் காணலாம்.

புறநானூற்றுப் பாடல் ஒன்றில் பாண்டியமன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைச் சார்ந்து புலவர் பலர் இருந்தனர் என்பதும், அவர்கட்கு மாங்குடி மருதன் என்பவர் தலைவராய் விளங்கினார் என்பதும் கூறப்பட்டுள்ளது. இதனின்று பாண்டியன் அவையில் புலவர் பலர் ஒரு புலவர் பெருமான் தலைமையில் ஒத்து வாழ்ந்தனர் என்பதை உணரலாம். பொதியில் தென்றலைவிட மதுரைத் தென்றலுக்குள்ள சிறப்பு, புலவர் செந்நாப் பொருந்திய ஏற்றம் என்பது சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகள் கருத்தாகும். இவ்வாறு மதுரையில் தமிழ் வளர்ந்த சிறப்பை நோக்கியே, மணிமேகலை ஆசிரியரும் "தென்தமிழ் மதுரை" என்றனர். மதுரைக்கும் தமிழுக்கும் தொடர்பு கூறும் சங்கச் செய்யுள் அடிகளைப் போலச் சோழர் நகரத்திற்கோ, சேரர் நகரத்திற்கோ தமிழ்த் தொடர்பான குறிப்பு ஏதும் இல்லாமை நோக்கத்தக்கதாகும். எனவே, மதுரையில் பாண்டியரால் சங்கம் நிறுவப்பெற்றிருந்தது. அதனில் புலவர் தமிழ் வளர்த்தனர் என்பன நக்கு துணியப்படும்.

**சங்கம் இருந்தமைக்குப் பிற்காலச் சான்றுகள்**

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருநாவுக்கரசர் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் தருமி பொற்கிழி பெற்ற செய்தியைத் தேவாரப் பதிகமொன்றில் குறித்துள்ளார். கி.பி.எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆண்டாள் "சங்கத்தமிழ்" என்று திருப்பாவையில் (பாசுரம் 30) கூறுகிறார். அதே நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் "சங்கத்தமிழ்" என்று பெரிய திருமொழியிற் பாடியுள்ளார். கி.பி.ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாணிக்கவாசகர் மதுரையில் புலவர் தமிழாய்ந்த திறத்தைத் திருக்கோவையாரிற் குறித்துள்ளார். பாண்டியநாட்டில்

முத்தமிழும் சிறந்து விளங்கியதை கம்பர் தனது இராமாமயணத்தில் கூறியுள்ளார். கி.பி.பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகக் கருதப்படும் பெரும்பற்றப் புலியூர்நம்பி பாடிய திருவிளையாடற் புராணத்திலும், பதினாறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பரஞ்சோதி முனிவர் பாடிய திருவிளையாடற் புராணத்திலும் மதுரைத் தமிழ்ச்சங்கத்தைப் பற்றிப் பல செய்திகள் காணப்படுகின்றன. இங்ஙனம் கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் ஒவ்வொரு நூற்றாண்டிலும் வாழ்ந்து மறைந்த புலவர்கள் மதுரையில் தமிழ்ச்சங்கம் ஒன்று இருந்தது என்பதைத் தம்பாக்களில் குறித்துள்ளமை சிந்திக்கத்தகும்.

**சங்கங்கள் மூன்றா?**

இறையனார் களவியல் உரையில் முச்சங்கங்களைப் பற்றிச் சில செய்திகள் தரப்பட்டுள்ளன. இன்றுள்ள கன்னியாகுமரிக்குத் தெற்கே ஒரு காலத்தில் பாண்டியநாடு விரிவடைந்திருந்தது. அங்கு பாண்டியனின் தலைநகரான தென்மதுரையில் மன்னவன் ஆதரவில் தமிழ் வளர்க்கச் சங்கம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டு, அதனில் சிவன், முருகன், அகத்தியர் உள்ளிட்ட புலவர் பலர் தமிழாய்ந்தனர். அத்தலைநகரமும் அந்நிலப்பகுதியும் கடல் கொந்தளிப்புக்கு இரையாயின. பின்பு கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச்சங்கம் அமைக்கப்பட்டது. இச்சங்கம் அகத்தியர், தொல்காப்பியர், மோசியார், கீரந்தையார், வெள்ளூர்க்காப்பியன் முதலானோரைக் கொண்டிருந்தது. வெண்டேர்ச்செழியனில் தொடங்கி முடத்திருமாறன் வரை பல பாண்டியமன்னர்கள் இரண்டாம் சங்கத்தின் புரவலர்களாக விளங்கினர். பின்பு கபாடபுரமும் கடலுள் ஆழ்ந்தது. அதன்பின்பு இன்றுள்ள மதுரையில் ஒரு சங்கம் ஏற்பட்டது. கடைச்சங்கம் எனப்படும் மூன்றாம் சங்கத்தின் தலைவராக விளங்கியவர் நக்கீரர், இதில் சீத்தலைச்சாத்தனார், கல்லாடனார், கபிலர், பரணர், மாங்குடி மருதனார் ஆகிய பல புலவர்கள் பாண்டியமன்னர்கள் சங்கத்தை ஆதரித்தனர். இங்ஙனம் மூன்று சங்கங்கள் இருந்தன என்பதற்கு இறையனார் களவியல் உரைக்கூற்றைத் தவிர வேறுசான்றில்லை ஆயின், மதுரையில் தமிழ்ச்சங்கம் இருந்தது என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. இவற்றை முன்பு பார்த்தோம்.

இறையனார் களவியல் உரைச் செய்திகள் யாவும் கற்பனை என்று தள்ளிவிட முடியாது. ஏனெனில் கடற்கோற்களால் தென்னக நிலப்பரப்புகள் மூழ்கியிருக்கும் என்பதைப் பிறநாட்டு நிலநூல் அறிஞரும், ஈழத்து பௌத்த சமய வரலாற்றாளரும் ஒப்புக் கொண்டுள்ளனர். எனவே அடிப்படையாகச் சில உண்மைகள் இருந்திருக்கவேண்டும். தமிழக மன்னர்களுள் குறிப்பாக பாண்டியர்கள் தமிழை வளர்ப்பதிலே தனியார்வம் காட்டினர். தமது அரசவையிலே பழைய நூல்களைக் காக்கவும், புதிய நூல்களை இயற்றவும் ஊக்கமளித்தனர். முச்சங்கங்கள் வெவ்வேறு பாண்டியர் தலைநகரங்களில் வெவ்வேறு காலங்களில் விளங்கின. இன்று சங்க நூல்களாகக் கருதப்படும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, இருகாப்பியங்கள்,

தொல்காப்பியம் ஆகியவற்றை சங்கப்புலவர்களே படைத்திருப்பர் என்பதில் ஐயமில்லை.

திருச்சியண்டைக் கரூர் பற்றி மாணிக்கவாசகம் பிள்ளை கூறும் கருத்து சிந்திப்பதற்குரியது. சேரர்களின் கை ஓங்கி இருந்த காலத்து, அவர்களின் ஆட்சியின் உச்சக்கட்டத்தில் திருச்சி வரை அவர்களது நாட்டெல்லை விரிவடைந்தது. அப்போது புதிதாகச் சேர்க்கப்பட்ட பகுதிக்கு வஞ்சி கருவூர் என்று பெயரிட்டிருக்கலாம் என்கிறார். இன்னும் ஒரே பெயர் கொண்ட பல நகரங்களையும், கிராமங்களையும் நாம் காண்கிறோம்.

சேரர்களின் துறைமுகமாக முசிறி இருந்தது. வெளிநாடுகளுடன் மிளகு வியாபாரம் செய்வதில் அது தலைசிறந்த இடத்தைப் பெற்றிருந்தது இலக்கியச் சான்றுகளிலிருந்தும் அயல்நாட்டவர் குறிப்புகளிலிருந்தும் இவ்வுண்மை புலனாகும். முசிறி துறைமுகப்பட்டினம் பெரியாறு கடலுடன் கலக்குமிடத்தில் அமைந்திருந்தது. தென் கேரளாவில், காலடி அருகில் இருந்த தொண்டியும் சேரர் காலத்தில் சிறந்த துறைமுகப்பட்டினமாக விளங்கிற்று.

**உதியன் சேரல்**

”மன்னிய பெரும்புகழ் மறுவில் வாய்மொழி
இன்னிசை முரசின் உதியஞ் சேரல்”

என்று குமட்ரூர்க் கண்ணனாரால் பதிற்றுப்பத்தில் புகழப்படுகிறான் இவ்வரசன். பாரதப் போரில் இருதரத்து படைவீரர்களுக்கும் இவன் உணவளித்த காரணத்தால் ‘பெருஞ்சோற்று உதியஞ் சொல்‘ என்று சிறப்பிக்கப்பட்டான். இவனுடைய முன்னோர்களின் அறச் செயலை இவன் மீது ஏற்றிச் சொல்வதாக இதைக் கொள்ளலாம் என்பர் நீலகண்ட சாஸ்திரியார்.

இவரது மனைவியின் பெயர் நல்லீனி என்பதும், இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், பல்யானைச் செல்கெழு குட்டுவன் இருவரும் இவன் மக்கள் என்பதும் பதிற்றுப்பத்தின் இரண்டு, மூன்றாவது பதிகங்களாய அறியலாம்.

இவன் தன் நாட்டு எல்லையை விரிவாக்கினான்; தன்னை நாடி வந்தவர்களுக்கு வாரி வழங்கினான் என்பதை

”நாடுகண் அகற்றிய உதியஞ் சேரற்
பாடிச் சென்ற பரிசிலர் போல
உலவினி வாழி!”

என்ற அகநானூற்றுப் பாடலால் அறியலாம். தமிழகம முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டவன் இவன். கிழக்கு மேற்கு ஆகிய இருபெரும் கடல்களை எல்லையாகக் கொண்ட நாடு முழுவதும் இவனே ஆண்டதை,

"நின்கடல் பிறந்த ஞாயிறு பெயர்ததும் நின்
வெண்தலைப் புணரிக் குடகடல் குளிக்கும்"

என்று புறநானூற்றில் முரஞ்சியூர் முடிநாகராயர் குறிப்பிடுகின்றார்.

கரிகாற் பெருவளத்தானுடன் போரிட்டுப் பெற்ற புறப்புண்ணுக்காக நாணி உயிர்விட்ட சேரலாதனைப் பற்றி புறநானூறும் அகநானூறும் குறிப்பிடுகின்றன. அகநானூற்றில் உதியனைச் சிறப்பித்த மாமூலனார் வெண்ணியில் தோற்ற சேரலாதனைப் பற்றிக் குறிப்பிடுவதாலும், ஊதியஞ்சேரலாதனும் கரிகாற் பெருவளத்தானும் சமகாலத்தவரே என்பது ஆராய்ச்சியாளர் கருத்தாதலாலும் கரிகாற் பெருவளத்தானுடன் போரிட்டுத் தோற்றவன் இவனே எனலாம்.

**இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்**

இவன் வடநாடு சென்று, ஆரிய அரசர்களை வென்று, இமயத்தில வில்லைப் பொறித்து மீண்டதால் 'இமய வரம்பன்' என்று சிறப்பிக்கப்பட்டான் என்பதை

**"இமயத்து முன்னோர் மருள வணங்குவில் பொறித்து"**

என்ற அகப்பாடலால் அறிகிறோம். இவனிடம் சிறந்த கடற்படை இருந்ததென்பதையும், கப்பற்படையின் துணைகொண்டு பகைவரை வென்று காவல் மரமான கடம்பை வெட்டி அதைக் கொண்டு முரசம் செய்து கொண்டான் என்றும் அகநானூறு கூறுகிறது.

வேற்ப∴றடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற சோழனுடன் ஏற்பட்ட போரில் இருமன்னர்களுமே உயிர் துறந்தனர் என்று கூறப்படுகிறது. திருப்போர்ப்புறம் என்னுமிடத்தில் நடந்த இப்போரில் இவ்விரு மன்னர்களும் இறந்து வீழ்ந்தமை கண்டு பரணர் வருந்தி பாடியுள்ளமை இக்கருத்துக்குச் சான்றாக அமைகின்றது. தன்னைப் படிாய குமடரூர் கண்ணனார்க்கு உம்பற் காட்டுப் பகுதியைச் சேர்ந்த 500 ஊர்களைப் பிரம்ம தேயமாகக் கொடுத்தது இவனது வள்ளன்னையைக் காட்டும். இவனுக்கு இருமனைவியர், சோழன் மணக்சகிள்ளியின் மகளாகிய நற்சோணைக்குப் பிறந்தவன் செங்குட்டுவன்; வேளாவிக்கோமான் ்பதுமன் மகன் வழிப்பிறந்தவர்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் ஆவர். இவன் 58 ஆண்டுகள் ஆண்டான்.

**பல்யாணை செல்கெழுகுட்டுவன்**

வலிமை மிக்க யானைப் படையை உடையவனாக இருந்ததால் பல்யானை செல்கெழுகுட்டுவன் என்றழைக்கப்பட்டான். இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின்

தம்பியாகிய இவன் சிறந்த வீரனாக விளங்கினான். சோழ, பாண்டியருடன் ஏற்பட்ட போரில் இவன் அவர்களது கடலரணையும் காட்டரணையும் அழித்தான். விற்போரில் வல்ல மழவர்களைத் துணையாகக்கொண்டு இவனை எதிர்த்த சோழ, பாண்டியர்களை வென்றான். கொங்கு நாட்டையும் கைப்பற்றி தன் நாட்டெல்லைக்குட்படுத்தினான். இருபத்தைந்து ஆண்டுகள் அரசாண்ட இம்மன்னன் தன்னைப் பாடிய பாலைக் கௌதமனார் பொருட்டு பத்து வேத வேள்விகளை நடத்தினான் என்பர்.

இவன் தனது அரசைத் தன் குலத்தில் பிறந்தவரிடையே பகிர்ந்து கொண்டான் எனவும், கீழைக் கடலிலிருந்தும் மேலைக் கடலிலிருந்தும் களிறுகள் கொணர்ந்த நீரில் ஒரே நாளில் குளித்தான் எனவும் கூறப்படுகின்றது. அயிரை என்ற மலைக்குரிய இறைவியை ஆர்வமுடன் வழிபட்டான். அவனது புரோகிதர் நெடும்பார்தாயனார் என்பவரைப் பின்பற்றி தவம் புாவதற்காகக் கானகம் சென்றான்.

இமயவரம்பனை அடுத்து அவன் மகன் செங்குட்டுவனுக்குப்பதில் செல்கெழுகுட்டுவன் 'அரசு கட்டில் ஏறியது எங்ஙனம் என்பது புரியவில்லை. சிற்றப்பனான செல்கெழுகுட்டுவன் ஆண்டு இறந்தபின் செங்குட்டுவன் பட்டத்திற்கு வந்திருக்கலாம் அல்லது இருவருமே ஒரே சமயத்தில் வெவ்வேறு பகுதிகளை ஆண்டிருக்கலாம் என்பர்.

**களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரல்**

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனின் இளைய மனைவி வேளாவிக் கோமான் பதுமன் மகள் தேவிக்குப் பிறந்தவர்கள் களங்காய்க்கண்ணி நார்முடிச்சேரலும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனும் ஆவர். களங்காயால் கண்ணியும், நாரால் முடியும் 'செய்து அணிந்திருந்ததால் இவன் இப்பெயர் பெற்றான். சேரநாட்டிற்குரிய அனைத்துப் பகுதியையும் ஆளும்வரை சேரர்க்குரிய கண்ணியும் முடியும் புனையேன்' என்று சூளுரைத்து, அவற்றுக்குப் பதிலாக களங்காய்க்கண்ணியும் நார்முடியும் புனைந்து நின்றமையால் இப்பெயர் பெற்றான் என்பர்.

நன்னனுக்குரிய பூழி நாட்டின் மீது படையெடுத்துச் சென்று கடம்பின் பெருவாயில், வாகைப் பெருந்துறை என்ற இடங்களில் போரிட்டான். நன்னனை வென்று அவனுடைய காவல் மரத்தை வெட்டி வீழ்த்தினான். அதியமானுடைய குலத்தோன்றலான நெடுமிடல் என்பானை வென்றான். இவனைப் பாடிய காப்பியாற்றுக் காப்பியனார் நாற்பது நூறாயிரம் பொற்காசுகளையும் அரசின் ஒரு பகுதியையும் பெற்றார் என்பதனைப் பதிற்றுப்பத்தால் அறியலாம்.

## கடல்பிற கோட்டிய செங்குட்டுவன்

சேர மன்னர்களுள் சிறந்தவனாகிய செங்குட்டுவன், இமயயவரம்பன் நெடுஞ்சேரலாதனுக்கும் நற்சோனைக்கும் பிறந்தவன். மனைவி இளங்கோ வேண்மாள். இவன் தந்தையையும் விஞ்சிய வெற்றிகளை அடைந்தான். சேரநாட்டின் பகுதியாகிய கொடுகூரை ஆண்ட கொங்கர்கள் தொல்லை தந்ததால் படையெடுத்துச் சென்று வென்றான். இடும்பில் என்னுமிடத்தில் சில வேட்டுவரை வென்றான். பழைழயனை வென்று காவல்மரமான வேம்பினை வெட்டி, பழையனது மனைவியரின் கூந்தலைக் கயிறாகத் திரித்து, வேம்பினை வண்டியில் வைத்துத இழுத்து வந்து யானைகளைப் பிணிக்கப் பயன்படுத்தினான். நெரிவாயிலில் சோழர் குலத்தைச் சார்ந்த ஒன்பது இளவரசர்களை ஒருங்கே வென்றான். இவனுடைய கடற்போர் வெற்றி குறிப்பிடத்தக்கது. கடலில் ஆதிக்கம் செலுத்திய கடம்பரை வென்றதால் கடல் பிறகோட்டிய செங்குட்டுவன் எனப்பட்டான். வடநாட்டின் மீது படையெடுத்துச் சென்று கனகவிசயர்களை வென்று, கண்ணகிக்குரிய பத்தினி உருவத்தைச் செய்ய அவர்கள் தலைமீது கல்லை ஏற்றிக் கொணர்ந்ததைச் சிலப்பதிகாரம் கூறுகிறது. இக்கல்லால் பத்தினித் தெய்வ வழிபாட்டை கொடுங்கோளுரில் நடத்தினான். இவனுடன் இலங்கை மன்னன் கயவாகுவும் பங்கேற்றான். தம் நாட்டிலும் பத்தினிக்குச் சிலை எடுத்து, கோயில் சமைத்தான்.

இவன் தந்தையாகிய இமயவரம்பன் அவைக்கு வந்த ஒரு நிமித்திகன் இவனது இளவலாகிய இளங்கோவே முடிசூட்டுவான் என்று கூற, குட்டுவன் கனன்று நோக்கினான். ஆகவே, இளங்கோ தன் இளவரசுப் பதவியைத் துறந்து குணவாயியற் கோட்டத்தில் இளங்கோவடிகளாக வாழ்ந்து சிலப்பதிகாரத்தை இயற்றினார் என்பர். சுமார் 55 ஆண்டுகள் அரசாண்ட இவன் தன் மகன் குட்டுவன் சேரலைப் பரணர்க்கு மாணவனாக அனுப்பினான். குட்டுவன் சேரலைப்பற்றிப் பதிற்றுப்பத்து யாதொன்றும் குறிக்கவில்லை.

## ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்

வானவரம்பன் என்னும் பட்டப் பெயருடன் அரசாண்ட இவன் சில மலை ஆடுகளைத் தண்டகாரரண்யத்துக் கள்வரிடமிருந்து கைப்பற்றியதால் ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் எனப்பட்டான் என்பர். பதிற்றுப்பத்து ஆறாம் பத்துப் பாடல்களிலிருந்து அவன் நடனக் கலையில் பெரிதும் ஈடுபாடுடையவனாதலால் ‘ஆடு‘ என்ற சொல் ஆட்டத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம் என்பர்.

இவன் நறவு என்ற கடற்கரை நகரைத் தலைநகராகக் கொண்டு சேரநாட்டின் வடமேற்குப் பகுதியை ஆண்டான் 38 ஆண்டுகள் அரசு புரிந்தான். மழவர்களுடன் போரிட்டு வென்றான். குடநாட்டிலுள்ள ஓரூரை அந்தணர்களுக்குப் பகிர்ந்தளித்தான். இவன் தன்னைப் பாடிய புலவர் நற்செள்ளையாருக்கு நூறு ஆயிரம் காணப் பொருளும், ஒன்பது துலாம் நிறையுள்ள பொன்னும் அளித்தான்.

சேர நாட்டையாண்ட உதியஞ்சேரலாதனின் மரபில் கடைசி மன்னனாக இவனைக் கொள்ளலாம். இவனுக்குப் பின்னர் வெவ்வேறு குடும்பத்தைச் சார்ந்த மூன்று அரசர்கள் சேர நாட்டை ஆண்டதைப் பதிற்றுப் பத்து மூலம் அறியலாம். பதிற்றுப் பத்து குறிப்பிடும் மூவர் செல்வக் கடுங்கோ வாழியாதன், பெருஞ்சேரல், இரும்பொறை, இளஞ்சேரல் இரும்பொறை ஆவர்.

**செல்வக்கடுங்கோ வாழியாதன்**

அந்துவஞ்சேரல் இரும்பொறையின் மகனாகிய செல்வக்கடுங்கோ வாழியாதன் இருபத்தைந்து ஆண்டுகள் மிகச் சிறப்பாக அரசாண்டான். இவன் பல ஊர்களை ஏற்படுத்தினான். வேத வேள்விகளைப் புரிந்த இவன் திருமாலிடம் பேரன்புடையவன். ஓகந்தூர் என்ற கிராமத்தை திருமாலுக்கு மானியமாக அளித்தான். தன்னை எதிர்த்த பாண்டியர் சோழர்களை வென்றான்.

வேள்ஆவிக்கோமான் பதுமனின் மகளான தேவி என்பாளை மணந்தான். பண்பும், கொடையும், வீரமும் உடைய இவன் கபிலரால் பாடப்பட்டவன். இப்புலவர்க்குத் தக்க முறையில் பரிசளிக்க விரும்பிய அரசன் புலவருடன் நன்றா என்ற குன்றின் மீது ஏறி நின்று கண்ணுக்குப் புலப்படும் எல்லைவரை உள்ள நாடுகளனைத்தையும் புலவர்க்கு அளித்தான் என்று பதிற்றுப்பத்து கூறுகின்றது. (ஒன்பதாம் பத்து 85 ஆவது பாடல்) ”பொய்யில் செல்வக் கடுங்கோ” எனப்படுவதால் இவன் வாக்கு மாறாதவன் என்பது பெறப்படும். இவனுடைய புகழூர்ச் சேர கல்வெட்டொன்று இவன் சமணத் துறவிகளுக்கு (சமணர்களுக்கு) அளித்த நன்கொடைகளைக் கூறும்.

**பெருஞ்சேரல் இரும்பொறை**

செல்வக் கடுங்கோவின் மகனான இம்மன்னன் சேரரில் இரும்பாறைக் குடியைச் சார்ந்தவன்.. தகடூரை ஆண்ட அதியமான், சோழ பாண்டியர் துணையுடன் இவனை எதிர்த்தபோது, அவர்களை வென்றதால் ”தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை” எனப்பட்டான். இப்போரில் அதியன் இறந்தான். இவ்விவரங்கள் அரிசில்கிழார், பொன் முடியார் போன்றோர் எழுதிய தகடூர் யாத்திரையால் அறியலாம். இவன் கொல்லிமலையில் சோழ, பாண்டியரை வென்று ரோ் முரசையும் குடையையும் கைப்பற்றினான். கழுவுள் என்ற இடையர் தலைவனுடைய கோட்டையைத தகர்த்து வென்றான். பதினேழு ஆண்டுகள் அரசாண்டபின் உலகு துறந்தான்.

தமிழிடத்தும் தமிழ்ப் புலவரிடத்தும் மிகுந்த பற்றுடையவன். தன்னைப் பாடிய அரிசில்கிழாருக்கு ஒன்பது நூறாயிரம் காணம் நல்கியதோடு, அரசனும், அரசியும் அரண்மனையை விட்டு வெளியே வந்து அரசுப் பொறுநுப்பையே புலவருக்கு

அளித்தமை இதை உணர்த்தும். அதுமட்டுமன்று, மோசிகீரனார் இம்மன்னனைக் காணவந்தபோது அவனில்லாததால் முரசு கட்டில் என்பது தெரியாமல் உறங்கினார். அக்காலத்தில் இது மிகப்பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. புலவர் உறங்குவதைக் கண்ட மன்னன் அவர் எழும்வரை வெண்சாமரையினை எடுத்துத் தானே வீசினான். தமிழ் மீது அரசன் கொண்ட பற்று இதனால் புலனாகும்.

**குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை**

பதிற்றுப்பத்தில் இறுதியாகப் பாடப்படுபவன் இவனேயாவான். பெருஞ்சேரலின் மகனாகிய இம்மன்னன் சோழ, பாண்டியர்களை வென்றான். விச்சி மலைத் தலைவனை வென்று ஐந்த கோட்டைகளைக் கைப்பற்றினான். சேரப்பெருஞ்சோழனை வஞ்சியில் வென்றான். இளம் பழையன் மாறனையும் வென்றான். வஞ்சி மாநகரில் பெருஞ்சதுக்கப் பூதத்துக்கு வழிபாடு நிறுவினான். முதன் முதலாக மந்திர மரபில் கடவுளுக்கு வழிபாடு நடத்தும் முறையை ஏற்படுத்தினான். பதினாறு ஆண்டுகள் ஆண்ட இவனைப் பெருங்குன்றூர்க்கிழார் பதிற்றுப்பத்தின் ஒன்பதாவது பத்தில் பாடியுள்ளார். அதற்காக மகிழ்ந்த மன்னன் முப்பத்தீராயிரம் காணம் பொன்னும் புலவர் அறியாமல் வீடும் செல்வமும், அணிகலனும் அளித்தான்.

**யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரன் இரும்பொறை**

'வேழ நோக்கின் விறல்வெஞ் சேஎய்' மாந்தரஞ் சேரல் இரும்பொறை எனும் இயற்பெயருடைய இம்மன்னன் யானையின் கண்களைப் போன்ற கண்களை உடையவனாயிருந்தமையின் காரணப்பெயர் பெற்றான். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனுடன் இவன் தலையாலங்கானம் என்ற இடத்தில் போரிட்டபோது, தோற்று சிறைவைக்கப்பட்டான். ஆயினும் சிறையிலிருந்து தப்பி வந்து அரசுகட்டில் ஏறிய செய்தியைப் புறப்பாட்டால் அறிகிறோம். இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் மலையமான் திருமுடிக்காரியும் இவன் மீது போர் தொடுத்தபோது இப்போரிலும் இவன் தோற்றான். ஆனால் குறுங்கோழியூர் கிழார், கூடலூர்கிழார், பொருந்தில் இளங்கீரனார் போன்ற புலவர்கள் பாடும் சிறப்புடையனவாய் இவன் விளங்கினான். இவனை குப்த மாமன்னன் சமுத்திரகுப்தன் வெற்றி கொண்டு, கொரளா (கேரளா)வைக் கைப்பற்றியதாக அலகாபாத் கற்றுடன் அறிக்கையின்படி சிலர் கூறுவர். ஆனால் இது காலவரன் முறையில் முரண்பாடு, மந்த ராஜாவை மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பது தவறு கொரளாவைக் கேரளாவென்று கொள்வதும் தவறு.

**சேரமான் கணைக்கால் இரும்பொறை**

சோழன் செங்கணான் காலத்தில் வாழ்ந்தவன் இம்மன்னன். மூவன் என்ற வீரனை வென்று, அவன் பற்களைப் பிடுங்கி, தொண்டி நகரின் கோட்டை வாசற் கதவில் அழுத்தினான் என்பதைப் பொய்கையார் நற்றிணையில் குறித்துள்ளார்.

இம்மன்னனுக்கும், சோழன் கோச்செங்கனானுக்கும் கழுமலம் என்ற ஊரை அடுத்துள்ள திருப்போர்ப்புறம் என்னுமிடத்தில் போர் நிகழ்ந்தபோது சேரன் தோற்றான்; சிறைவைக்கப்பட்டான். சிறைக்காவலரிடம் நீர் வேண்டியபோது காலந்தாழ்த்திக் கொணர்ந்தமையால், நீருண்ணாது சிறையிலேயே வடக்கேயிருந்து உயிர் நீத்தான். இவனுடைய அவைகளப் புலவரான பொய்கையார், சோழன் வெற்றியைச் சிறப்பித்து ‘களவழி நாற்பது‘ என்ற நூலைப்பாட, சோழன் மகிழ்ந்து சேரனை விடுவிக்க ஆணை பிறப்பித்தான். அதற்குள் சிறையில் ”குழவி இறப்பினும்” என்ற புறநானூற்றுப் பாடலை எழுதி வைத்துவிட்டு சேரன் உயிர் துறந்து விட்டான். ”மானம் இழந்தபின் வாழாமை முன்இனிதே” என்பதற்கேற்ப மானத்திற்காக உயிர் துறந்தான் இம்மன்னன்! இப்பொய்கையாரைச் சிலர் பொய்கை ஆழ்வாராகக் கொள்வதுண்டு. பொய்கையாகும், பொய்கை ஆழ்வா:ரும் வேறுபட்டவர்.

**சேரர் பரம்பரை**

உதியஞசேரலை முதலவனகாக் கொண்ட மூன்று தலைமுறையைச் சார்ந்த ஐந்து மன்னர்கள் பற்றிப் பதிற்றுப்பத்தால் அறிகிறோம். அவர்களனைவருமாகச் சேர்ந்து 201 ஆண்டுகள் அரசாண்டனர். பின்னர் வந்த மூன்று அரசர்களும் சேர்ந்து 58 ஆண்டுகள் அரசாண்டனர். இவஇர்கள் அரசாண்ட வரிசை முறைபறந்றி உறுதியாகச் சொல்வதற்கில்லை. என்.சுப்பிரமணியன் அவர்கள் கூறும் சேரமன்னர்களின் வரிசையும் அரசாண்ட காலமும் கீழ்வருமாறு:-

| வ.எண் | அரசர் | ஆட்சிபுரிந்த ஆண்டுகள் | அரசாண்ட காலம் |
|---|---|---|---|
| 1. | உதியன் சேரல் | | கி.பி.277 |
| 2. | இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் | 58 | கி.பி.27 - 85 |
| 3. | பல்யானைச் செல்கெழுகுட்டுவன் | 25 | கி.பி.85 - 110 |
| 4. | களங்காய்கண்ணி நார்முடிச்சேரல் | 25 | கி.பி.110 - 135 |
| 5. | கடல்பிறகோட்டிய செங்குட்டுவன் | 55 | கி.பி.135 - 190 |
| 6. | ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் | 38 | |
| 7. | செல்வக் கடுங்கோவாழியாதன் | 25 | கி.பி.175 - 200 |
| 8. | பெருஞ்சேரல் இரும்பொறை | 17 | கி.பி.200 - 217 |
| 9. | குடக்கோ இளஞ்சேரல் இரும்பொறை | 16 | கி.பி.217 - 233 |

இக்கால வரையறை செங்குட்டுவன் கயவாகு காலக்கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதாக சுப்பிரமணியம் குறிக்கின்றார்.

எனவே அக்காலச் சேரர்கள் முதல் மூன்று நூற்றாண்டுகள் மிகச்சிறப்பாக ஆண்டனர் என்றறியலாம். இவர்களைத் தவிர சங்க இலக்கியங்கள் இன்னும் பல

சேரமன்னர்களைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. அவர்களைப் பற்றி உறுதியான சான்றுகள் கிடைக்கவில்லை.

**பண்டைச் சோழர்கள்**

அசோகரது கல்வெட்டுக்களில்தான் முதன் முதலாகச் சோழர்களைப் பற்றி நாம் கேள்விப்படுகிறோம். சங்ககாலச் சோழர்களைப் பற்றிச் சங்கப் பாடல்களும், பிற்காலச் சோழர் பற்றி கலிங்கத்துப்பரணி, மூவருலா போன்ற நூல்களும் அறிவிக்கின்றன. இலங்கை வரலாற்று நூலான மகாவமிசமும் சோழர் பற்றி நாமறிய உதவுகின்றது.

சேர சோழ பாண்டியர் மூவருமே ஒரு தாய் வயிற்றில் பிறந்தவர் எனவும், அவர்கள் தென்னாட்டில் தாமிரபரணி கரையில் கொற்கையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டதாகவும், பின்னரே பிரிந்து மேற்கிலும் வடக்கிலும் தத்தம் பெயரால் தனியரசு அமைத்துக் கொண்டனர் என்றும் கூறுவர். சோழர் தம்மைச் சூரிய குலத்தவர் என்று கூறிக்கொண்டனர். தூங்கெயிலெறிந்த தொடிதோட்செம்பியன், காகந்தன், கவேரன், மனுநீதி கொண்ட சோழன், காற்றை ஆடல் கொண்டவன், சமுத்ரஜித் போன்றோர் தொடக்ககாலச் சோழ மன்னர்களாவர்.

பெரிபுளூஸ் என்ற நூலின் ஆசிரியர், தாலமி ஆகியோர் சேரநாட்டைப் பற்றி குறித்துள்ளனர். காவிரிப்பூம்பட்டினமே 'கபெரீஸ்' எனவும் நாகபட்டினமே 'நிகாமா' எனவும, உறையூரே 'ஒர்துரா ரெகியா சோர்நாடி' எனவும் வழங்கியதாகவும் கூறுவர். 'மிலிந்தான் அரசனுடைய கேள்விகள்' என்ற நூல் கி.பி. முதல் நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப்பட்டது. இந்நூல் அக்காலக் கடற்கரைப் பட்டினங்களில் சிறந்ததாகக் 'கேரளபட்டினம்' என்ற ஊரைக் குறிப்பிடுகின்றனது. இக்கேரளபட்டினம் காவிரிப்பூம்பட்டினமே என்பர் ஆராய்ச்சியாளர். (கேரளப்பட்டினம் இன்றும் குமரி மாவட்டத்திலுள்ள ஒரு கடற்கறைப் பட்டினப்பெயராய் வழங்கிவருவது அறியத்தக்கது). காகந்தன் பெயரால் இக்காவிரிப்பூம்பட்டினம் காகந்தி நகரம் எனப்பட்டது. கவேரன் என்பவன் சோழ நாட்டிற்குக் காவிரியைக் கொணர்ந்தான் என்று ஒரு கதை வழங்குகிறது. சேரநாட்டின் வளத்திற்குக் காரணம் காவேரியாறே சோழநாடு, காவிரிநாடு, காவிரிசூழ்நாடு, காவிரி புரக்கும் நாடு என்று புகழப்படுகிறது. 'சோழ வளநாடு சோறுடைத்து' என்பதால் இந்நாட்டின் நீர்வளமும் நிலவளமும் உணரலாம். நீர்வளம் நிரம்பிய காரணத்தால் 'நீர்நாடு' எனவும் சேரநாடு வழங்கப்பட்டது.

சோழர்களின் தலைநககரங்களாக, புகாரும், உறந்தையும் கூறப்படுகின்றன.. சிலப்பதிகாரத்திலும் புகாரும், உறந்தையும் தலைநகரங்களாகக் கூறப்படுகின்றன. பட்டினப்பாலை வாயிலாகக் கரிகாலன் உறந்தையைப் புதுப்பித்தான் என்றறிகிறோம். உறந்தைக்குக் கோழியூர் என்பது மற்றொரு பெயராகும். அதாவது, மிகப்பழங்கா்ல

சோழமன்னர் ஒருவர் வேட்டைக்குச் சென்ற இடத்தில் காட்டுகோழிக்கும் காட்டுயாணைக்கும் சண்டை நடந்ததாகவும் அதில் காட்டுக்கோழி வெற்றி பெற்றதாகவும் கூறப்படுகிறது. இதனைக் கண்ட அச்சோழ மன்னன் அப்பகுதியே தன் உறைவிடமாக இருக்கத்தக்கது என எண்ணி அங்கு தலைநகர் அமைத்தான். எனவே அக்கோழியூர் உறையூர் அல்லது உறந்தை ஆகியது காவிரிப்பூம்பட்டினம் கடலோடு கலக்குமிடத்தில் அமைந்திருந்ததால் புகார் எனவும் வழங்கப்பட்டது.

சோழர்களைப் பற்றி இலங்கை நூலான மகாவமிசத்தில் குறிப்புக்கள் உள்ளன. கி.பி.இரண்டாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இலங்கை சோழ மன்னனால் ஆளப்பட்டது எனவும், அம்மன்னன் நாற்பத்து நான்கு ஆண்டுகள் ஆண்டதாகவும் குறிப்புகள் உள்ளன. இலங்கையை ஆண்ட சோழ மன்னனாகிய ஏலாரா என்றற தமிழ் மன்னன் தன் ஒரே மகன் ஒரு கன்றினைத் தேரேற்றிக் கொன்றுவிட்டதற்காகத் தன் மகனையே அவ்வாறு கொல்லத் துணிந்தான் என்றும் மகாவமிசம் குறித்துள்ளது. பெரியபுராணம் குறிப்பிடும் மனுநீதிச்சோழனும் கன்றுக்காகத் தன் மகனைத் தேர்க்காலிலிட்டவன் என்றறிகிறோம். திருவாரூரிலிருந்து ஆண்ட இவ்வாரூர (ஆலூர்)னே ஏலாராவாதல் கூடுமா என்பது ஆராயத்தக்கது என்பர் ந.சுப்பிரமணியன். எலாரா என்ற சொல்லிலிருந்து பிறந்ததே ஈழம் என்ற சொல்.

சங்க இலக்கியங்களும், இரட்டைக் காப்பியங்களான சிலப்பதிகாரமும் மணிமேகலையும் சோழ அரசர்களைப் பற்றிப் பல செய்திகளைக் குறித்துள்ள போதிலும், அவற்றை வைத்துக் கொண்டு அவ்வரசர்கள் ஆண்ட காலவரிசையைக் கணக்கிடுதல் கடினமாமக உள்ளது. சூரிய குலத்தோன்றல்களாகக் கருதப்பட்ட சோழர்களைப் பற்றிப் புலவர்ககள் பலபடப் பாராட்டியுள்ளனர்.

**உருவப்ப.'.றேர் இளஞ்சேட் சென்னி**

சோழ அரசர்களுள் காலத்தால் முந்தி சோணாட்டை ஆண்ட முதல் மன்னன் இவனே. 'இளையோன்' என்றும் இவனை வழங்குவர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். இவன் மனைவி வேளிர் குடியைச் சார்ந்தவள். இவன் காலத்தில் சோழ அரசு உறையூருக்குச் சற்று மேற்கேயிருந்து கீழைக்கடல் வரையில் பரவியிருந்ததேயன்றி காவிரிக்கு வடபாலுள்ள தொண்டை மண்டலம் முதலிய பிரதேசங்களை உள்ளடக்கவில்லை என்பர். இவன் அழகான பல தேர்களை உடையவனாக இருந்தமையால் இப்பெயர் பெற்றான். பரணரால் பாடப்பட்டவன். 'உருவப்ப.'.றேர் இளையோன் சிறுவன்' என மூடத்தாமக் கண்ணியார் பொருநராற்றுப் படையில கரிகாலனை அழைப்பதால் கரிகாலன் இளஞ்சேட்சென்னியின் மகன் என்று உணரலாம்.

**கரிகாற் பெருவளத்தான்**

சங்ககாலச் சோழமன்னர்களுள் தலைசிறந்தவன் இவனே. இவனுடைய முன்னோன் ஒருவன் காற்றைத் தன் விருப்பப்படி வேண்டிய திசையில் வீசச் செய்யக்கூடிய ஆற்றலைப் பெற்று ”காற்றை ஆடல் கொண்டான்” என்றழைக்கப்பட்டான்.

இவனுடைய தந்தை இளஞ்சேட்சென்னி உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். சிறுவயதில் இவன் தனக்குரிய அரசினை இழந்து தன் மாமனான இரும்பிடர்த்தலையார் பாதுகாப்பில் மறைந்து வாழ்ந்தான் என்றறிகிறோம். இளமைக் க்காலத்தில் இவன் தாயத்தார் கரிகாலனைச் சிறையிலிட்டு நெருப்பு வைத்தனர். இந்நெருப்பிலிருந்து தப்பிக் குதித்து ஓடியபோது கால் கரிந்துவிடவே கரிகாலன் என்றழைக்கப்பட்டான்.

”மூச்சுக் கரமும் அளப்பதற்கு நீட்டிய கால்
இச்சக் கரமே அளந்தால்; - செய்ச் செய்
அரிகால்மேல் தேன்தொடுக்கும் ஆய்புனல் நீர்நாடன்
கரிகாலன் கால்நெருப் புற்று”

என்ற செய்யுள் இவன் பெயர்க் காரணத்தை உணர்த்தும். சிலர் கரிகாலன் என்ற பெயரைக் கரி-காலன் என்று பிரித்து யானைகளுக்குக் காலன் எனவும் பொருள் கூறுவர். கரிகாலனைக் கலிகாலன் என்றாக்கி, கலிப்பகைக்குக் காலன் என்றும் கூறுவர். ஆயின் இவையெல்லாம் ஏற்புடைத்தன்று. கரிந்த காலினை உடையவன் என்பதே பொருந்திய பொருளாகும். ”காய்சின மெய்ம்பிற பெரும் பெயர்க் கரிகால்”, ”கலிகொள் சுற்றமொடு கரிகால் காண” என வரும் அகநானூற்றுப் பாடல் வரிகளில் அவன் பெயர் ‘அன்‘ விகுதி பெறாமல் ”கரிகால்” என்றே வழங்கப்படுவது இதனை வலியுறுத்தும்.

கரிகாலன், தாய் வயிற்றிலிருக்கும்போதே தந்தை இறந்து விட்டான். பிறக்குமுன்பே அரசுரிமையைப் பெற்றவன் இவன் ் என்பதைத் ‘தாய் வயிற்றிலிருந்து தாயம் எய்தி‘ என்று பொருநராற்றுப்படை கூறும். இவனுக்குப் பலகுழந்தைகள் இருந்தனர் என்பதை ‘பொன்தொடிப் புதல்வர் ஓடி ஆடவும்‘ என்ற பட்டினப்பாலை வரிகளால் அறியலாம். அம்மக்கள் யாரென்பது தெரியவில்லை. உறையூர் மணக்கிள்ளி, வேற்ப.்.றடக்கைப் பெருவிறற்கிள்ளி இருவரும் இவனது புதல்வர் என்ற் இராகவையங்கார் கூற்று பலரால் ஏற்கப்படவில்லை.

பட்டினப்பாலையின் பாட்டுடைத்தலைவன் இவனே. இந்நூலை இயற்றிய உருத்திரங்கண்ணனார் கரிகாலனிடமிருந்து பதினாறு இலட்சம் பொற்காசு பெற்றதாகக் கூறுவர். சேரமன்னனான ஆட்டன் அத்தியின் மனைவி ஆதிமந்தி கரிகாலன் மகள் என்பர் இளங்கோவடிகள்.

இவன் ஒப்பற்ற வீரன். இவனுடைய போர்களில் வெண்ணிப்போரும், வாகைப் பறந்தலைப் போரும் குறிப்பிடத்தக்கன. சேரனும் பாண்டியனும் வேளிர் ஒன்பதின்மரும் கூடி தஞ்சாவூரின் அருகில் உள்ள கோயில் வெண்ணி என வழங்கப்படும் வெண்ணி வாயில் என்னுமிடத்தில் கரிகாலனை எதிர்த்தனர். கரிகாலன் ஒருவனாகவே நீன்று போரிட்டு வென்றான். இப்போரில் தான் புறப்புண் நாணிய பெருஞ்சேரலாதன் வடக்கிலிருந்து உயிர்விடத் துணிந்தான். கரிகாலனின் வெற்றிச் சிறப்பினைப் ' பாணர், முடத்தாமக்கண்ணியார், மாமூலனார், கழாத் தலையார், வெண்ணிக்குயத்தியார் போன்றோர் பலபடப் பாராட்டியுள்ளனர். இவனுடைய தாய் பிறந்த அழுந்தூரில் வெற்றி விழாவைக் கொண்டாடினான். இவ்வெண்ணிப்போர் வெற்றியால் தமிழகம் முழுவதும் இவனுடைய ஆட்சியின் கீழ் வந்தது.

கரிகாலனுடன் போரிட்டுத் தோற்ற ஒன்பது வேளிரும் வர்கைப் பறந்தலை என்னும் இடத்தில் கரிகாலனுடன் மீண்டும் போரிட்டனர். இப்போரிலும் கரிகாலனே வென்றான். வேளிர் தமது முரசு, குடை போன்றவற்றைப் போர்க்களத்திலேயே போட்டுவிட்டு ஓடினர். வடக்கேயிருந்த அருவாளரும் தெற்கேயிருந்த ஒளியரும் இவன் ஆட்சிக்குட்பட்டனர். இவன் வடவர்களை வென்று இமயம் வரை படையெடுத்துச் சென்று இமயமலையில் புலிக்கொடியைப் பொறித்து வந்தான் என்று சிலப்பதிகாரம் கூறும் வரும் வழியில் வக்சிர நாட்டரசன் கொடுத்த முத்துப்பந்தல், மகத நாட்டரசன் கொடுத்த பட்டிமண்டபம், அவத்தி வேந்தன் கொடுத்த தோரணவாயில் முதலியவற்றைப் பெற்றான்' எனவும் இளங்கோ அடிகள் குறிக்கின்றார்.

நீதியும் நேர்மையும் நிறைந்த ஆட்சி நடத்தினான். தொண்டை மண்டலம் வரை அக்காலத்தில் அடர்ந்திருந்த காடுகளை அழித்து நாடாக்கினான். காவிரியின் குறுக்கே கல்லணை கட்டிச் சோழ நாட்டை வளப்படுத்தினான். சிங்களத் தீவை இவன் வென்றபோது பிடித்து வந்த கைதிகளை இவ்வணை கட்டும் பணியில் ஈடுபடுத்தினான். இவனுடைய ஆட்சிக்காலம் பொற்காலமாக அமைந்தது எனலாம்.

**நலங்கிள்ளி**

கரிகாலனுக்குப் பின் சோழர் வரலாறு குழப்பமடைகிறது. ஆயினும் சிலப்பதிகாரம், புறநானூறு முதலிய சங்க நூல்களிலிருந்து சோழர் ஆட்சி வரன்முறையை ஒருவாறு அறியலாம்.

கரிகாலனுக்கு மணக்கிள்ளி, வேற்ப.்றடக்கைப் பெருவிறற்கிள்ளி என்ற இரு புதல்வர் இருந்தனர். மணக்கிள்ளி உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். அவனுக்கு நெடுங்கிள்ளி என்ற மகனும் நற்சோணை என்ற ஒரு மகளும் இருந்தனர். இந்நற்சோணைதான் இமயவரம்பனை மணந்தவன். செங்குட்டுவனும் இளங்கோ அடிகளும் இவள் பிள்ளைகளே. கரிகாலனது இரண்டாம் மகன் வேற்ப.்றடக்கை

புகாரிலிருந்து ஆண்டான். அவனுக்கு மூன்று பிள்ளைகள் இருந்தனர். கிள்ளிவளவன், நலங்கிள்ளி, சேட்சென்னி, மாவளத்தான் என்பவர்களாவர். கரிகாலனுடைய காலத்திற்குப் பின் நாட்டில் குழப்பமேற்பட்டது. நெடுங்கிள்ளியும், நலங்கிள்ளியும் பெரியப்பன் மகனும் சிற்றப்பன் மகனுமாயிருப்பினும் ஒருவரையொருவர் பகைத்துப் போரிட்டனர். நலங்கிள்ளி வீரமிக்கவன் அவன் நெடுங்கிள்ளி தங்கியிருந்த ஆவூர் கோட்டையை முற்றுகையிட்டபோது நெடுங்கிள்ளி கோட்டையைவிட்டு வெளியே வரவேயில்லை. ஒன்று அவன் கோட்டையை விட்டு வெளியே வந்து போரிடவேண்டும். அல்லது தோல்வியை ஒப்புக்கொள்ள வேண்டுமேயல்லாது கோட்டைக்குள்ளே பதுங்கியிருப்பது கோழைத்தனமென்று கோவூர்க்கிழார் என்னும் புலவர் இடித்துரைத்தார். இவ்விரு மன்னர்களையும் ஒற்றுமைப்படுத்துவதற்காகக் கோவூர்க்கிழார் பலமுறை முயன்றார். ஒருமுறை இளந்தத்தன் என்ற புலவன் புகாரிலிருந்து உறையூர்வர அவனை ஒற்றன் என்று தவறாக எண்ணி நெடுங்கிள்ளி யானையால் இடறிக் கொல்ல முற்பட்டபோது அவனுடைய சினத்தைத் தணிவித்துப் புலவரைக் காப்பாற்றியவர் கோவூர்கிழாரே காரியாறு என்னுமிடத்தில் நெடுங்கிள்ளிக்கும் நலங்கிள்ளிக்கும் ஏற்பட்ட போரில் நெடுங்கிள்ளி கொல்லப்பட்டான். அதனால் காரியாற்றுத்துஞ்சிய நெடுங்கிள்ளி எனப்பட்டான். இப்போரில் தன் மூத்தவன் கிள்ளளிவளவனுக்காக நலங்கிள்ளி போரிட்டான்.

**கிள்ளிவளவன்**

புகாரில் வேற்ப.்.றடக்கைப் பெருவிறற் கிள்ளிளயை அடுத்து மன்னவன் ஆனான். இவன் சிறந்த வீரனாகவும், கவிபாடும் ஆற்றலுடையோனாகவும் விளங்கினான். வெள்ளைக்குடி நாகனார் இவன் காலத்தவர். இவன் ஈழத்து நாக வணிகனான வளைவணனுடைய மகளாம், பீலிவளையை மணந்ததாகவும், பீலிவளைக்குப் பிறந்த இளந்திரையன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு தொண்டைமண்டலத்தை ஆண்டான் என்றும் மணிமேகலையால் அறியலாம்.

**கோப்பெருஞ்சோழன்**

உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான். அரசனாகவும், அறிவுடைய புலவனாகவும் வாழ்ந்த இவன் நட்புக்கு இலக்கணமாய் விளங்கினான். பிசிராந்தையாரும் பொத்தியாரும் இவனுடைய உயிரனைய நண்பர்களாக விளங்கினர். இவன் இளஞ்சேரல் இரும்பொறையுடன் ஏற்பட்ட போரில் தோல்வி கண்டான். இரு புதல்வர்களுடன் ஏற்பட்ட போரால் மனம் நொந்தான். இப்பழி சேர, பாண்டியர் செவியுட் சென்று புகு முன்னரே உயிர்விட விரும்பி வடக்கிருந்தான். இவனைக் காணாமலே அன்பு கொண்ட பிசிராந்தையார் சோழன் வடக்கிருத்தலைக் கேள்விப்பட்டு அங்கு வந்து சோழனுடன் தாமும் வடக்கிருந்து உயிர் நீத்தார்.

**சோழன் செங்கணான்**

'சேரமான் கணைக்காலிரம்பொறை சோழன் செங்கணாணோடு திருப்போர்ப்புறத்துப் பொருது, பற்றுக்கோட்பாட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையில் கிடந்து தண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்ற புறநானூற்றுக் குறிப்பால் இவன் சேரமான் கணைக்கால் இருப்பொறையை வென்றதை அறிகிறோம். பொய்கையார் இவனைப் புகழ்ந்து 'களவழி நாற்பது' பாடினார். அம்பர், வைகம், நன்னிலம் ஊர்களில் உள்ள சிவன் கோவில்கள் இவனால் கட்டப்பட்டவை என்பர். முற்பிறவியில் சிலந்தியாய்ப் பிறந்தவன் என்றும் அடுத்த பிறவியில் சிவனுறையும் நலந்தோறும் கோயில் அமைத்து வழிபட்டான் என்றும் பெரிய புராணத்தில் சேக்கிழார் குறிப்பிடுகின்றார். கோச்செங்கட்சோழன் என்று அறியப்படும் இம்மன்னன் அறுபத்துமூன்று நாயன்மார்களுள் ஒருவராக வைக்கப்பட்டுள்ளமை இவனது ஆழ்ந்த வைசசமயப் பற்றை உணர்த்தும்.

சோழர்கள் வரலாற்றைப் பற்றி நாமறிய உதவுவன தமிழ் இலக்கியங்களும், இலங்கை நூலான மகாவமிசமுமேயாகும். இலங்கைமீது கரிகாலன் படையெடுத்ததைக் குறிக்கும் மகாவமிச நூலின் குறிப்பிலிருந்து அவன் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு எனலாம். இவனது மகள் நற்சோணையின் வயிற்றுப் பிள்ளையான சேரன் செங்குட்டுவனின் காலத்துடன் ஒப்பிட்டால் கரிகாலன் இரு நூற்றாண்டுகளிலும் வாழ்ந்திருக்கலாம். கோக்செங்கட் சோழனது காலம் கி.பி.மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதி என்பர் ந.சுப்பிரமணியன். ஆனால் செங்கணான் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணுவின் காலத்தவன் என்பதைக் கொண்டு அவன் கி.பி.ஆறாம் நூற்றாண்டைச் சார்ந்தவன் என்று டி.வி.மகாலிங்கம் போன்றோர் கருதுகின்றனர்.

## தமிழக வரலாற்றில் நிலவியல் இடயியல் ஆகியவற்றின் செல்வாக்கு

### நிலவியல் : பொதுத்தன்மை

மனித வரலாற்றுப்போக்கில் நிலவியலும், இயற்கை அமைப்புகளும் அதிக அளவில் செல்வாக்குச் செலுத்துவன என்பது பொதுவான கருத்து. வரலாற்றின் சமுதாய, பொருளாதாரத் தன்மைகளை நிலயியலே இயக்குகிறது எனலாம். ஒரு நாட்டின் மலைகள், நிதிகள் தட்ப வெட்ப நிலை போன்ற நிலவியலடிப்படையிலான கூறுகள் அந்நாட்டு மக்களின் பொருளாதார, சமுதாய வாழ்க்கையைப்பெருமளவில் வரையறுக்கின்றன. தனி மனிதன் தனக்கெனத் தேர்ந்தெடுக்கும் தொழில் அவனது உடல், உள்ளத்திறன்கள், அவனது வாழ்க்கைத்தரம், அவனது சமுதாய அமைப்புக்கள் பழக்க வழக்கங்கள் ஆகிய பல்வேறு உண்மைகள் அவன் வாழும் நாட்டின் பழக்க வழக்கங்கள் வாழ்க்கைத்தரம், அவது சமுதாய அமைப்புக்கள் பழக்க வழக்கங்கள் ஆகிய பல்வேறு உண்மைகள் அவன் வாழும் நாட்டின் நிலவியல் தன்மைகளின் அடிப்படையிலேயே அமைகின்றன. தொன்று தொட்டு

வரும் நிலவியல் அமைப்புச் செல்வாக்கின் கூட்டுச் சேர்க்கையாகவே மனிதர்களின் தனித்த பண்பு நலன்களும் அமைகின்றன. புறவமைப்பில் மாறுதலை விளைவிக்கக் கூடிய சமயங்கள் அவ்வப்போது தோன்றும் தலை சிறந்த மனிதர்களின் சீரிய சாதனைகள், சமுதாயத்தைப் பாதிக்கும் போர், பஞ்சம் போன்ற விளைவுகள் போன்றவை மக்களின் முன்னேற்றப்பாதையில் தமது அடிச்சுவட்டைப் பதித்துச் செல்வன. மனித வாழ்வினை உருவாக்கும் பணியில் மேற்கூறிய புறமாறுதல்களுக்கான காரணிகள் ஒவ்வொன்றின் பங்கும் நாட்டிற்கு நாடு மாறுபடுகின்றது. ஆனால் ஒரு நாட்டின் அங்கு வாழும் மனிதர்களின் வரலாறுகள் உறுதியாக நிலயியமைப்பினாலேயே பெரிதும் நடத்திச் செல்லப்படுகின்றன. எனவே எல்லா வகைகளிலும் மனிதன் நிலவியலமைப்பிற்குப் பெரிதும் கட்டுப்பட்டனவாகவே உள்ளான். சான்றாக தமிழர்களின் கடல் வாணிபம், தமிழக நிலவியலமைப்பின் பிதிபலிப்பாகவே காணப்படுகிறது.

**தமிழக நிலயியல் :**

தமிழர் வாழும் தமிழகம் இந்தியத் துணைக்கண்டத்தில் தென்கோடியில் அமைந்துள்ளது. தமிழகம் $15^0$ வட அட்சரேகைக்குத் தெற்கில் அமைந்துள்ளது. நக்கீரர் தன் இறையனார் அகப்பொருள் என்னும் நூலில், முதற்சங்க காலத்தில் தமிழகம் இப்போதிருப்பதைவிடத் தெற்கிலும், கிழக்கிலும் விரிந்திருந்ததாகவும் 49 முக்கிய பிரிவுகளைக் கொண்டிருந்ததாகவும் கூறுகிறார். மண்ணியன் விற்பன்னர்களும், மானிட வளர்ச்சிச்சரித்திர வல்லுநர்களும் தென்கோடியிலிருந்த இந்திய நிலப்பரப்பு குமரிக் கண்டம் அல்லது லெமூரியா என்றழைக்கப்பட்டதாகவும், அந்நிலப்பரப்பு நெடுங்காலத்திற்கு முன்பே இந்துப்பெருங்கடலால் கடல் கோட்பட்டதாகவும் கூறுவர்.

மூன்றாம்தமிழ்ச சங்க காலத்துத் தமிழக வட, தென் எல்லைகள் “வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகு” என்னும் கூற்றால் விளங்கும் தமிழகம் தெற்கில் இந்துப்பெருங்கடலாலும், மேற்கில் அரபிக்கடலாலும், கிழக்கே வங்கவிரிகுடாவாலும் சூழப்பட்டுள்ளது. வடகிழக்கில் வேங்கடமலையும், வடக்கிலும் வடமேற்கிலும் மைசூர் பீடபூமியும் அமைந்துள்ளன. தமிழர்கள் தமிழகத்தைக் குடபுலம், குணபுலம், தென்புலம் என் பிரிந்திருந்தனர். வேங்கடப் பிரதேசம் கடக்க முடியாத காடுகளால் அமைந்திருந்தன. மூந்நீரின் இணைப்பைப் புலப்படுத்துவதாகக் கன்னியாகுமரியில் மூன்று கடல்களும் சந்திக்கின்றன. இது ஒரு புனித யாத்திரைத் தலமாகும். தென்னிந்திய, வட இந்திய இணைப்பைப் புலப்படுத்துவது போல் யாத்ரீகர்கள் இங்கு காணப்படுகின்றனர்.

வேங்கடமலைக்கு வடபுறம் வாழ்ந்த மக்கள் வடுகர் என அழ்க்கப்பட்டனர் மலைத் தொடரை அடுத்துத் தமிழகத்தையொட்டியவ ட புலத்தின் எருமைநாடு இருந்தது. எருமை நாட்டிற்கு மேற்கில் துளு நாடு, குடகு நாடு, கொங்கணம் ஆகியவை இருந்தன. தீபகற்ப இந்தியாவின் தென் கிழக்கில் p லங்கா (இலங்கை)

அமைந்துள்ளது. அரசியலடிப்படையில் இது ஒரு தனிநாடாக விளங்கினும், நிலவியல், கலாசார அடிப்படையில் இது தீபகற்ப இந்தியாவின் தொடர்ச்சியாகவே தோன்றுகிறது. இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையில் காணப்பட்ட மணிபல்லவத்தீவு காவிரிக்கரையிலமைந்திருந்த தொன்மைமிகு புகார் துறைமுகத்திலிருந்து 30 யோசனைத் தொலைவில் இருந்ததாகக் கூறப்படுகிறது. கொற்கையிலிருந்து ஜாவாவிற்குச் சென்ற கப்பல்கள் மணிபல்லவத்தீவின் வழியே சென்றதாகத் தெரிகிறது. நிர்வாண (காட்டு மிராண்டி) நாகர்கள் வாழ்ந்து வந்த தீவுகள் இலங்கைக்குக் கிழக்கே அமைந்திருந்தன.

தென்னிந்திய வரலாற்றின் ஆரம்பகாலத்தில், கொங்கணத்திற்குத் தெற்கில் நீண்டுகிடப்பதும், இக்காலத்தில் கேரளா என்று அழைக்கப்படுவதுமாகிய நிலப்பரப்பு பண்டைத் தமிழகத்தின் ஒரு அங்கமாகவே இருந்தது. கி.பி.9-ஆம் நூற்றாண்டிற்குப் பின் பண்டைத் தமிழகம் தமிழ்நாடு, கேரளா என இரண்டாகப்பிரிக்கப்பட்டது. கேரள மக்களால் பேசப்படும் மலையாளம் கொடுத்தமிழிலிருந்து (சொல் வழக்குத் தமிழ்) தோன்றியது எனலாம்.

தமிழகம் 12 நாடுகள் அல்லது மாநிலங்களாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவை முறையே பாண்டிநாடு, குட்டநாடு, குடநாடு, கற்காநாடு, வேணாடு, பூமிநாடு, பன்றிநாடு, அருவாநாடு, வடஅருவாநாடு, சீதநாடு, மல்நாடு, புனல்நாடு என்பவையாகும். இவை பன்னிரண்டும் பாண்டிய நாடு, சேரநாடு, சோழநாடு, தொண்டைநாடு, கொங்குநாடு, வேளிர்நாடு என்ற பெரும் பிரிவுகளுள் அடங்கும்.

காவிரிக்குத் தெற்கிலுள்ள இக்காலத்து மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டங்கள் அடங்கிய நிலப்பரப்பே அக்காலத்துப்பாண்டிய நாடு என அழைக்கப்பட்டது. இது வெள்ளாற்றுக்குத் தெற்கிலும் கன்னியாகுமரிக்கு வடக்கிலும், பெருவேலிக்கு கிழக்கிலும், வங்காளவிரிகுடாவிற்கு மேற்கிலும் அமைந்துள்ளது. இது பல கூற்றங்கள் எனப்படும் உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இங்கு செந்தமிழ் பேசப்பட்டுவந்தது. இதன் தலைநகராகவும், சிறந்த உள்நாட்டுப் பட்டிணமாகவும் மதுரை விளங்கிற்று, இது வைகை நிதிக்கரையில் அமைந்துள்ளது இது. கோபுரம் சார்ந்த கோட்டைகளால் சூழப்பட்ட ஒரு நகரம். எனவே இது 'நான் மாடக்கூடல்' என்றும் அமைக்கப்பட்டது. வட இந்தியாவின் மதுரை என்னும் நகரிலிருந்து இவ்வூரை வேறுபடுத்திக்காட்டத் தமிழ்ப் புலவர்கள் இவ்வூரைத் 'தென் மதுரை' அல்லது 'தென்கண மதுரை' என்றும் அழைத்தனர். தாமிரபரணி முகத்துவாரத்தில் அமைந்திருந்த கொற்கை இந்நாட்டின் துறைமுகமாகும். கொற்கை மக்களின் முக்கிய தொழில் முத்துக்குளித்தல் ஆகும். இதர துறைமுகங்களான விளினம், சாலியூர் என்பன விறுவிறுப்பான ஏற்றுமதி, இறக்குமதி வாணிகத்தில் ஈடுபட்டிருந்தன.

இக்காலக் கேரளமும் தமிழகத்தின் கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும் சேலம் மாவட்டத்தின் ஒரு பகுதியும் கொண்ட நிலப்பரப்பே அக்காலச் சேர நாடாகும்.

இது பன்னிரண்டு உட்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இது வடக்கில் பழனிமலைகளாலும், கிழக்கில் திருச்செங்கோடாலும், மேற்கிலும் தெற்கிலும் கடலாலும் சூழப்பட்டிருந்தது. இந்நாட்டின் தலைநகர் பெறியாற்றின் கரையில் அமைந்திருந்த திருவஞ்சைக்களம் என கருதப்படுகிறது. இந்நகரம் வலுவான கோட்டைகளால் பாதுகாக்கப்பட்டது. தலைநகரில் அமைந்திருந்த முக்கிய கட்டிடங்கள் ஒரு விஷ்ணு கோவில், ஒரு புத்தவிகாரம், ஒரு (நிகரந்த) சமணமடாலயம் ஆகியவை, பேரியாற்றின் முகத்துவாரத்திற்கருகில் முசிறி எனப்படும் துறைமுகம் ஒன்று இருந்தது. மேற்குக் கரையில் அமைந்திருந்த மற்றொருவளமான துறைமுகம் தொண்டி ஆகும்.

பன்றி நாட்டிற்கு அப்பால் புனல்நாடு என அழைக்கப்படும் சோழ நாடு அமைந்திருந்தது. புனல் என்னும் சொல் நீரினைக் குறிக்கும். எனவே நீர்வளம் மிக்க சோழநாடு புனல்நாடு என அழைக்கப்பட்டது. இது கோடிக்கரைக்குக் கிழக்கிலும், கடலுக்கு மேற்கிலும், வெள்ளாற்றிற்கு வடக்கிலும் அமைந்திருந்து. சோழர் தலைநகர் உறையூராகும். இது காவிரியின் தென்கரையில் அமைந்திருந்தது. காவிரியின் முகத்துவாரத்தில அமைந்திருந்த புகார், (காவிரிப்பூம்பட்டினம்) சிறந்த ஏற்றுமதி வணிகத் தலமாகும். புகார், மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் என இரு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. தலைநகரில் பல பெரிய கட்டிடங்கள் காணப்பட்டன.

பவளமலைக்குக் கிழக்கிலும், வேங்கடமலைக்குத் தெற்கிலும், உவரிக்கு மேற்கிலுமாக அமைந்திருந்த நிலப்பரப்பு தொண்டை நாடாகும். இதன் தலைநகரம் காஞ்சிபுரம் ஆகும். இது திரையர்களால் ஆளப்பட்டது. பின்னர் பல்லவர் இப்பகுதியைக் கைப்பற்றினர். படிப்படியாகச் சோழநாடு முழுவதும் தம் ஆதிக்கத்தை விரிவுபடுத்தினர்.

வடக்கில் தலைமையாலும், தெற்கில் வைகாவூர் அல்லது பழனிமலையாலும், மேற்கில் வெள்ளியங்கிரியாலும் சூழப்பட்டுள்ள நிலப்பரப்பே கொங்குநாடு எனப்படுவது. பூர்வீகத்தில் இந்நாடு, இக்காலக்கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும், சேலம், மாவட்டத்தின் தென் பகுதியும் கொண்டதாக இருந்தது.

வேளிர் எனப்படும் சிற்றரசர்கள் எழுவரும் தமக்கெனத் தனித்தனி இராச்சியங்களையும், தலைநகர்களையும் கொண்டு விளங்கினர். பறம்பு நாடு, தகடூர், கோவிலூர், ஆய்க்குடி, நாஞ்சில் நாடு, மோகூர், குதிரை மலை, செங்கணமா, மிழலை என்பன குறிப்பிடத்தக்க வேளிர் தவிர்த்த வேறுசில சிற்றரசுகள் ஆகும்.

சங்காலத் தமிழர்களின் வாழ்வும், வளமும் இத்தமிழகத்தின் நிலவியல் அமைப்போடு பின்னிப் பிணைந்து கிடந்தன. காலத்தால் மூத்த தமிழ் நூலாம் தொல்காப்பியத்தில் தமிழர் வாழ்ந்த நிலப்பகுதிகளை நிலவியல் அடிப்படையில் நால்வகை நிலங்களாகப் பிரிந்திருக்கின்றனர். இதனையொட்டியே பூமியை 'நானிலம்' எனவும் கூறுவர். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. மயலயம்

மலைசார்ந்த பகுதிகளும் குறிஞ்சி எனவும், காடும் காடு சார்ந்த பகுதிகளும் முல்லை எனவும், நிலமும் நிலம் சார்ந்த பகுதிகளும் மருதம் எனவும், கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல் எனவும் அழைக்கப்பட்டன. பிற்காலத்தில் நீா் வறண்ட முட்புதர்கள் நிறைந்த மணற்பகுதியைப் 'பாலை' என்ற பெயரிட்டு அழைத்தனா். முன்னா் குறிப்பிட்ட நானிலங்களுடன் இதனையும் சேர்த்து ஐவகை நிலமாகக் கொண்டனா். ஐவகை நிலங்களும் நிலவியடிப்படையில் தத்தமக்கேயுரிய தொழில், வாணிபம், கலை, கலாசாரம், வழிபாடு, சமூக அமைப்பு, தாவரங்கள், விலங்குகளைக் கொண்டவையாக விளங்கின.

## இடவிவரம் (Topography) :

அரபிக்கடலுக்கும், வங்காளவிரிகுடாவிற்கும் இடைப்பட்டிருக்கும் இத்தீபகற்ப நாடு தென்புறம் குறுகி, கன்னியாகுமரி முனையில் முடிகின்றது. குமரி முனையிலிருந்து மேற்றிசையில் வடக்கு நோக்கிச் செல்கின்ற மலையாளக் கடற்கரை மற்றும் கொங்கணக் கடற்கரையும் 'கீழ்த்திசையில் வடக்கு நோக்கிச் செல்கின்ற சோழமண்டலக் கடற்கரையும், தமிழகத்தின் விளிம்புகளாக அணி செய்கின்றன. கடல் வணிகத்தை ஊக்குவிக்கும் வகையில் இருகரைகளிலும் இயற்கைத் துறைமுகங்கள் அமைந்துள்ளன. துறைமுகங்கள் ஆழமானவை: இயற்கையானவை சீனாவையும் மத்திய தரைக்கடல் நாடுகளையும் சேர்க்கும் கடல்வழியில் ஏறத்தாழ நடுநாயகமாக அமைந்துள்ள தமிழகத்தின் அமைவிடம், அது கிழக்கு, மேற்கு நாடுகளுடன் விறுவிறுப்பான கடல் வாணிபத்தில் ஈடுபடப் பெரிதும் துணையாக இருந்தது.

எண்ணிக்கையில் குறைவான இயற்கைத்துறைமுகங்களைப் பெற்றிருந்தாலும் தமிழகம் கடல் வாணிபத்தில் வளம் பெற்று விளங்கியது. கிழக்குக்கரையில் அமைந்திருந்த காவிரிப்பூம்பட்டினம், கொற்கை என்பனவும் மேற்குக்கரையில் காணப்பட்ட தொண்டி, முசிறி என்பனவும், அளவில் அவ்வளவு பெரியவை அல்ல. அக்காலத்து நாட்டுக் கப்பல்கள் மட்டுமே வந்து தங்குவதற்கு ஏற்றவையாக அவை இருந்தன. மேற்கு, கிழக்குக் கடற்கரைகள் ஒரே சீராகவும், பிளவுபடாமலும் உள்ளன. இருப்பினும் மேற்குக்கரையில் பிளவுப்பட்ட சில பகுதிகள் காணப்படுகின்றன. இங்கு உப்பங்கழிகள் அமைந்துள்ளன. இவ்வுப்பங்கழிகள் உள்நாட்டு, அயல் நாட்டு வாணிகத்தைப் பெருக்க வசதியாக உள்ளன.

### மேற்கு கிழக்கு மலைத்தொடர்கள்

மலைகள், மலைத்தொடர்கள், ஆறுகள், வளங்கள், விளைநிலங்கள், வளமற்ற தரிசு நிலங்கள் ஆகியவை ஒன்றோடொன்று கலந்து நிலவியலின் பலவகைப் பெருக்கங்களுக்கு வழி வகுத்து பொருளாதாரத் தன்னிறைவை ஏற்படுத்துகின்றன. கிழக்கு, மேற்கு மலைத்தொடர்கள் தீபகற்பத் தமிழகத்தில் முறையே கிழக்கு, மேற்குக் கடற்கரைகளுக்கு இணையாகச் செல்லுகின்றன. காசர்கோட்டில் தொடங்கி, ஆரம்பொழியில் முடிவுறும் மேற்கு மலைத்தொடர்கள், தமிழகத்தின் இயற்கை

அரணாக பிரம்மாண்டமான கடல் தடுப்புச் சுவராக அமைந்துள்ளன. நெடிதுயர்ந்த, கரடுமுரடான மலைத்தொகுப்பான இவை, வடக்கில் கடல் மட்டத்திலிருந்து 2000 அடி வரை உயர்ந்துள்ளன. கொங்கு நாட்டு நீலகிரியில் இருமலைத்தொடர்களும் சந்திக்கின்றன. நீலகிரி மலைகளின் ஆண்டு மழைப்பொழிவு மிக அதிகம் இதுபல்வகைத் தாவரங்களுக்கும் வனப்புமிகு இயற்கைக்காட்சிகளுக்கும் பெயர் பெற்ற தலமாகும். இவ்விரு மலைத்தொடர்களுக்கும் இடையில், தொன்மைமிகு நாகரிகத் தொட்டில்களான பரந்த தாழ்நிலங்கள் அமைந்து உள்ளன.

மேற்கு மலைத் தொடரில் பல கணவாய்கள் அமைந்துள்ளன. 24 மைல் அகலமுள்ள பாலக்காட்டுக் கணவாய் மிக அகன்ற ஒன்று கடக்க வியலாக் காடுகளைக் கொண்டு, கொடிய விலங்குகளின் உறைவிடமாக விளங்கும் இக்கணவாய், கன்னடத்திற்கும் மலபாருக்குமான நெருங்கிய தொடர்பிற்கு வழிவகுத்தது. கொச்சி, கள்ளிக்கோட்டை போன்ற மேற்குக் கரை நகரங்களிலிருந்து கன்னடத்திற்கும் இதர உள்நாட்டு நகரங்களுக்குமான எளிதான பாதையாகி வரலாற்றில் சிறப்பிடம் பெறுகிறது. பாலக்காட்டுக் கணவாய் இவ்வாறு சற்று ஆபத்து நிறைந்த பாதையாக இருந்ததால், கேரளத்திற்கும், கிழக்கிலுள்ள அண்மை நாடுகளுக்குமான சிறந்த தொடர்புவழியாகச் செங்கோட்டை ஆரம்பொழி கணவாய்கள் பயன்பட்டன. ஆரம்பொழி, செங்கோட்டை கணவாய்களின் மூலம் ஏற்பட்ட படையெடுப்புகளும் நுழைவுகளும் கணக்கிலடங்கா, ஆரம்பொழி கேரளத்தின் போர்க்களமாகச் செயல்பட்டது என்றே கூறலாம்.

இம்மலைத் தொடரின் தென்புலத்தில் காணப்படும் மலைகளில் பழனி, கொடைக்கானல், சேர்வராயன், பொதியை, ஆனைமலைக்ள குறிப்பிடத்தக்கவை ஆனைமலையிலுள்ள சில சிகரங்கள் சுமார் 8000அடி வரை உயர்ந்துள்ளன.

அடர்ந்த காடுகளில் காணப்படும் தாவரங்களில் விலைமதிப்புள்ள தேக்கு, சந்தனம், மூங்கில், முதலியை குறிப்பிடத்தக்கவை. அன்றியும் காப்பி, தேயிலை, ஏலம், மிளகு போன்ற மலைத் தோட்டப்பயிர்களும் இங்கு விளைகின்றன. காடர், இருளர், புலையர் போன்ற பழங்குடி மக்களின் உறைவிடங்களாக இம்மலைப் பகுதிகள் அமைந்துள்ளன.

கிழக்குத் தொடர்ச்சிமலை, மேற்குத் தொடர்ச்சி மலைகளைப் போல நேரானதும், தொடர்ச்சியானதும், சீரானதும் அல்ல. அவை இடையிடையே பிளவுபட்டு சிதறுண்டு காணப்படுகின்றன அன்றியும் மேற்கு மலைத்தொடரைவிடச் சற்றுத் தாழ்வானவை. மண்ணியலடிப்படையில் மேற்கு மலைத்தொடரைவிட கிழக்கு மலைத்தொடர் காலத்தால் முந்தியது. ஆனால் விளைபொருட்களிலும் வனப்பிலும் இவ்விரண்டு மலைத்தொடர்களும் மாறுபட்டவை கிழக்கு மலைத்தொடர் பிளவுண்ட, சிதறிக்கிடக்கின்ற ஒரு மலைத்தொடர் எனலாம். ஒரிஸ்ஸாவில் தொடங்கிகிழக்குக் கரைக்கு இணையாகச் செல்லும் இம்மலைத்தொடர், சென்னையை அடுத்துத் தென்மேற்காகத் திரும்பித் தக்காணப்பீடபூமியின் தெற்கு விளிம்பாக அமைகிறது. பழனிமலை, சேலம் மாவட்டத்திற்கருகிலுள்ள சேர்வராயன் மலைகள் போன்றவை

தனித்து நிற்கும் மலைகள். இவை பிரதான மலைத்தொடரிலிருந்து பிரிந்து செல்கின்றன. தமிழகத்தில் பாயும் ஆறுகளில் பல மேற்கு மலைத் தொடரில் தோன்றி, கிழக்கு மலைத்தொடரை ஊடறுத்துக் கொண்டு வங்கவிரிகுடாவில் கலக்கின்றன. எனவெ இப்பிளவுகள் கிழக்குக்கரைச் சமவெளிக்கும், தக்காண பீடபூமிப்பகுதிக்கான போக்குவரத்தினை எளிதாக்குகின்றன.

பண்டைத் தமிழகம் முக்கோண வடிவில் அமைந்து, அதன் முனை தெற்கு நோக்கி நீண்டிருந்தது. இருமலைத்தொடர்களும் நீலகிரி மலை வரை தமிழகத்தின் இரு விளிம்புகளையும் இணைப்பதாக அமைந்துள்ளன. நீலகிரிமலைக்குத் தெற்கில் பொது இணைப்பு பெரிதும் பாதிக்கப்படுகிறது. தமிழகத்தின் உட்புறம் காணப்படும் சிறுகுன்றுகளும், மேடுகளும் நாட்டைப்பல்வேறு சிறு சிறு பிரிவுகளாகப் பிரிக்கின்றன. பண்டைத் தமிழகத்தில் அரசியல் ஒற்றுமையின்மைக்கு இதுவே தலையாய காரணமாகும். இதுவே, சேர, சோழ, பாண்டிய மன்னர்களும், திரையர், வேளிர் போன்ற குறுநில மன்னர்களும் தமக்கெனத் தனிநாடுகளை அமைத்துக்கொள்ள வழிவகுத்தது. வலிமையும், திறமையும் மிக்க கரிகாலன், செங்குட்டுவன், நெடுஞ்செழியன், முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் போன்ற மன்னர்களின் காலத்தில் மட்டுமே தமிழகத்தில் அரசியல் ஒற்றுமையைக் காண முடிகிறது. தமிழக மக்களிடையே காணப்படும் மாறுபட்ட பழக்க வழக்கங்களும்கூட சமுதாயரீதியில் தனிமைப்படுத்துவதற்கான மற்றுமொரு பாலை நிலம் என்ற ஐவகை நிலமக்களும் தமதுநடை, உடை, பாவனை, பண்பாட்டின் சூழ்நிலைக்கேற்ப ஒழுகினர். அகன் சாலைகளும், இருப்புப் பாதைகளும் அமைக்கப்பட்ட பின்னரே தனித்திருக்கும் இத்தன்மை படிப்படியாகத் தகர்க்கப்பட்டது எனலாம்.

**ஆறுகள்**

தமிழகம், காவி, பாலாறு, வைகை, பெண்ணாறு, வெள்ளாறு, தாமிரபரணி, பாளியாறு, பரதப்புழா, பெரியாறு போன்ற ஆறுகள் பலவற்றைத் தன்னத்தே கொண்டது. இவ்வாறுகள் எண்ணிக்கையில் குறைவாகவும், அதிக நீளம் இல்லாதனவாகவும் இருந்த போதும், இவை ஆண்டு முழுவதும் விவசாயத்திற்கு வேணடிய நீர் வசதியை அளிக்கின்றன. பெரியாறு, பரதப்புழா ஆகிய இரண்டு ஆறுகள் தவிர்த்த ஏனைய இவ்வாறுகள் மேற்கு மலைத்தொடரில் உற்பத்தியாகி, தமிழக நிலப்பரப்பில் பாய்ந்து வங்க விரிகுடாவில் கலப்பவை. பெரியாறும், பரதப்புழாவும் மேற்குமலைத் தொடரில் உற்பத்தியாகி, கேரள மாநிலத்தில் பாய்ந்து அரபிக் கடலில் கலப்பவை.

‘தென் கங்கை’ என அழைக்கப்படும் காவிரி “வான் பொய்ப்பினும் தான்பொய்க்காது” வளம் சுரக்கின்ற காரணத்தால் “காவிரி போற்றுதும் காவிரி போற்றுதும்” என வாழ்நததாகவும்.

“பூவார் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்

காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி" எனவும் சிலம்பிசைத்த செல்வர் இளங்கோவடிகளாலும், இன்னபிற புலவர்களாலும் போற்றப்படுகிறது. புதுமணப் பெண்ணாய் ஆரவாரமின்றி கன்னட மாநிலத்தில் பாய்ந்து. பொங்கும் துரை தங்கும் புலனருவியாய்த் தமிழகத்தில் அடியெடுத்து வைக்கின்றது. இடையில் கன்னட மாநிலத்துப் புனிதத்தலங்களான pரங்கப்பட்டினம், சிவசமுத்திரம் ஆகியவற்றைத் தொடுகிறது. தமிழகத்திலும் திருச்சிராப்பள்ளிக்கு மேற்கில் 15 கி.மீ. தொலைவில் காவிரி, கொள்ளிடம் என இரு பிரிவுகளாப் பிரிந்து, ஒரு அரங்கத்தைத் தோற்றுவித்து (pரங்கம்) அங்கு அரங்கநாதனைக் கிடந்தநிலையில் காட்சியளிக்கச் செய்கிறது. தன் காதலனாம் கடலரசனோடு கலக்குமுன் பல்வேறு கிளைகளாகப் பிரிந்து, தஞ்சை, திருச்சி மாவட்டங்களைத் தன் குன்றாப் புனலால் குளிர்வித்து, பசுமை வயல்களின் நெற்பயிருக்குப் பாட்டிசைக்கிறது. பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கு முன்னர் கரிகாற்சோழன் காவிரிக்குக் கரை எழுப்பியதால் அதன் வெள்ளச் சேதம் மிகுதியும் குறைக்காவிரியின் வெள்ளப்பெருக்கினைக் கட்டுப்படுத்திப்பாசன வசதிக்கு வகை செய்தது. இவ்வாற்று பெருக்கால் வளம்பெறும் சோழ நாட்டைப் புலவர்கள் "சோணாடு சோறுடைத்து" எனவும் தஞ்சை மாவட்டத்தைத் தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனவும் அழைப்பர். இவ்வளவு வளம் தரும் இக்காவிரி இன்று காய்ந்து கிடப்பதைக் காணும்போது நம்புபம்படி இல்லை.

மைசூர் மாநிலத்திலுள்ள நந்திதுர்க்கத்தில் பாலாறு உற்பத்தியாகிறது. இதுவட ஆற்காடு, செங்கல்பட்டு மாவட்டங்களின் வழியே பாய்ந்து, வங்க விரிகுடாவில் கலக்கிறது. இவ்வாற்றின் கரையில் அமைந்துள்ள முக்கிய நகரங்கள் வாணியம்பாடி, வேலூர், ஆற்காடு, செங்கல்பட்டு, வாலாஜாபாத் ஆகியவை இந்த ஆறு குறுகிய பரப்பிற்கே பாசன வசதி அளிக்கிறது.

பெண்ணாறு கன்னட மாநிலத்திலுள்ள சென்னராயன் பேட்டையில் உற்பத்தியாகிறது. இது பெங்களூர், சேலம் ஆகிய நகரங்களை யொட்டிப்பாய்கிறது. கடலூருக்கு வடக்கே கடலோடு கலக்கிறது. இது தன் முகத்துவாரத்திலுள்ள நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது.

வைகையாறு பழனிமலைகளில் உற்பத்தியாகிறது. மதுரை நகரின் வழியே பாய்ந்து வங்க விரிகுடாவில் கலக்கிறது. இக்காலத்தில் இவ்வாறு ஆண்டில் பலமாகதங்கள் வறண்டே காணப்படுகிறது. இவ்வாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள வைகை ஆணை, மதுரை-இராமநாதபுரம் மாவட்டங்களில் குறிப்பிட்ட அளவு நிலங்களுக்குப் பாசன வசதியளிக்கிறது. மெகஸ்தனீஸின் இண்டிகா என்னும் நூலில் கட்டப்பட்டுள்ள தாமிரபரணி ஆறு மேற்குத் தொடர்ச்சி மலையின் தெற்கில் அமைந்துள்ள அடர்ந்த காடுகள் சார்ந்த பொதிகை மலையில் உற்பத்தியாகிறது. இது திருநெல்வேலி மாவட்டத்தின வழியே பாய்கிறது. தென்மேற்கு பருவக்காற்றினால் இவ்வாறு தண்ணீர் பெறுகிறது. தனது கழிமுகத்தில் அகன்ற டெல்டாக்களை ஏற்படுத்திக் கொண்டு, இந்த ஆறு வங்கவிரிகுடாவில் கலக்கிறது.

இங்குதான் முத்துக் குறித்தலுக்குப் புகழ்பெற்ற கொற்கைத்துறைமுகம் அமைந்திருந்தது.

கேரளமாநிலத்தில் மிக நீளமான ஆறு பரதப்புழா (250 கி.மீ) ஆகும். இவ்வாற்றின் கரைகளில்தான் சித்தூர் பாலக்காடு, திருநாவாய், பொன்னானி போன்ற சிறந்த நகரங்கள் எழுந்துள்ளன. பெரியாறு (234 கி.மீ.) வழிபாட்டிற்குரிய பெண் தெய்வமான கொற்றவை கோயில் கொண்டுள்ளதாக கருதப்படும் அயிரைமலையில் தோன்றுகிறது. இது காலடி, ஆல்வாய் வழியே பாய்கிறது. இதன் கிளைநதிகளில் ஒன்று சேர மன்னர்களின் தலைநகரமாகக் கருதப்படும் கொடுங்கோளுர் வழியே பாய்கிறது. தென்திருவாங்கூரில் பாயும் பல ஆறுகளுள் பறளியாறு என்றழைக்கப்படும். ப.்றுளியாறு குறிப்பிடத்தக்க ஒன்று இது மகேந்திரகிரியில் தோன்றி, நாஞ்சில் நாட்டின் வழியே பாய்ந்து, மணக்குடி முகத்துவாரத்தில் கடலோடு கலக்கின்றது. இவ்வாற்றின் குறுக்கே எழுப்பப்பட்டுள்ள பாண்டியன் அணை, இப்பகுதியை ஆண்ட பாண்டிய மன்னர்களை நம் நினைவிற்குக் கொண்டு வருகிறது.

குறுநில நதிகளில் கழிமுகம் பெரும்பாலும் தாழ்நிலப் பரப்பினதாக சிவப்புச் சரளையாலும், களிமண்ணாலும் அமைந்துள்ளது. எனவே இப்பகுதிகள் விளைபயிர் உற்பத்திக்கு அவ்வளவு உகந்தவை அல்ல. ஆனால் டெல்டாப் பகுதிகள் உணவுக் களஞ்சியங்களாக, நெல் போன்ற உணவுப்பயிர்களும், புகையிலை, பருத்தி, கரும்பு போன்ற பணப்பயிர்களும் விளையுமிடங்களாக விளங்குகின்றன. தகடூரை ஆண்ட அதிகமான நெடுமானஞ்சியின் முன்னோர்களுள் ஒருவரே தமிழகத்தில் முதன் முதலில் கரும்பு விளைவித்தார் என்ற கருத்து ஔவையாரின் புறநானூற்றுப்பாடல் ஒன்றினால் அறியக்கிடைக்கிறது.

பொதுவாக ஆற்றுச் சமவெளிகளே நாகரிகத்தின் பிறப்பிடங்களாகக் காணப்படுகின்றன. ஆற்றங்கரைப் பகுதிகளில் மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களை எளிதில் பெற முடிகிறது. இப்பகுதி மக்கள் மீன்பிடிப்பதிலும், பயிரிடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். காவிரி, வைகை, பாலாறு பெரியாறு போன்ற ஆற்றங்கரைகளில் தான் தமிழகத்தில் தோன்றிய பேரரசுகளிற்பல தம் தலைநகர்களைக் கொண்டு விளங்கின. இப்பகுதிகளே எண்ணற்ற திருக்கோயில்களைப் பெற்றவையாகவும், உள்நாட்டுக் கலைகளின் உறைவிடமாகவும், வரலாற்றுக் முந்திய காலத் தொழில்களைப் பெரும்பாலும் பேணிக் காப்பவையாகவும் விளங்குகின்றன.

**மண்வளமும் கனிச்செல்வமும்**

தமிழகத்து மண்வளம் தன் இயல்பிலும், வளத்திலும் இடத்திற்கு இடம் வேறுபாடுடையன, இங்கு வளமிக்க வண்டல் மண்ணை ஆறுகளின் கழிமுகப் பகுதிகளிலும், பருத்திப் பயிருக்கேற்ற கரிசல் மண்ணைச் காணமுடிகிறது. கரிசல்மண் வளம் குன்றியது. எனவே, பருத்தி, இதர புன்செய தானிய பயறு வகை விளவசாயங்கள் இம்மண் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. செம்மண்

வேளாண்மைக்கு அவ்வளவு உகந்ததல்ல. மரங்களற்ற இடையிடையே தனித்து நிற்கும் குன்றுகளும் பாறைகளும் விரவிக் கிடக்கின்ற சமநிலமே செம்மண் பகுதியாக அமைகிறது. இப்பகுதிகள் வறட்சியானவை! வெப்பமான காலநிலை கொண்டவை வளமான வண்டல் பகுதிகளிலேயே வேளாண்மை அதிக அளவில் மேற்கொள்ளப்படுகிறது.

வடஇந்திய மாநிலங்களோடு ஒப்புநோக்கும்போது, கனிவளமும் கனிப்பொருட்கள் தொடர்பான தொழில்களும் தமிழகத்தில் மிகக் குறைவு என்றே கூறலாம். கேரள மாநிலத்திலும், சேலம் மாவட்டத்திலும் மின்சக்தியும், நீர்வசதியும் சற்று மலிவாகக் கிடைப்பதாகக் கொள்ளலாம். சேலம் மாவட்டத்தில் இரும்புக் கனியும் அத்துடன் இயைபுடைய பொருட்களான மோனசைட், குரோமைட், குவார்ட்ஸ், பாக்சைட், சுண்ணாம்புக்கல், டாலேமைட் போன்ற கனிப்பொருளும் கிடைக்கின்றன. திருச்சிராப்பள்ளியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் பொறுக்குப் பாறைகளில் ஜிப்சமும், மிக்க குறைந்த அளவில் இரும்புக்கனிகளும் கிடைக்கின்றன. பாண்டிச்சேரி, விருத்தாச்சலம் பகுதிகளின் நீர் வறண்ட பொறுக்குப்பாறைப் பிரதேசங்களில் லிக்னைட் என்னும் பழுப்பு நிலக்கரி ஏராளமாகக் கிடைக்கிறது. சோடியம், நைட்ரேட் போன்ற இரசாயனப் பொருட்கள் பெறுவதற்குத் தேவையான கனிவளம் திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டக் கடற்கரை மணற்பரப்பில் மிகுதியாகக் காணப்படுகிறது.

பல்லாவரம், தென்னாற்காடு, திருநெல்வேலி, நாஞ்சில்நாடு போன்ற பகுதிகளில் காணப்படும் பாறைகளில் கோவில்களும் விண்ணளாவிய கட்டிடங்களும் கட்டுவதற்கு உகந்த கற்கள் கொண்டு செலுக்கப்படும் சிற்பத் தொழில் செழித்திருந்தது. சத்தியவீடு, நாகலாபுரம், காஞ்சிபுரம் இவற்றிற்கருகில் கிடைக்கும் மணற்கற்கள் கட்டிடங்கள் கட்டவும், கவினுறு வேலைப்பாடுகளுக்கும் பயன்படுகின்றன. சங்கரி துர்க்கமலைப் பகுதிகளிலும், திருநெல்வேலிக்கருகில் தாழையூத்திலும் கிடைக்கும் வெள்ளைச் சுண்ணாம்புக் கற்கள் சிமெண்ட் உற்பத்திக்கும், சலவைத்தூள் தயாரிக்கவும் உதவுகின்றன.

**மழைபொழிவு, நீர்ப்பாசனம், வேளாண்மை**

“தென்னிந்தியாவில் தமிழகம் மிகவும் ‘தாகமுற்ற’ பகுதிகளில் ஒன்றாகும். இதுபெரும்பாலும் தனது உயிர் வாழ்க்கைக்காக மழையைப் பெற, விண்ணையே நோக்கி நிற்க வேண்டியுள்ளது. பொதுவாகப் பருவமழை உரிய காலங்களில் துவங்குகின்றது. சில சமயங்களில் தொடர்ந்து சில ஆண்டுகள் பருவமழை பொய்த்து விடுவதால் பஞ்சமும், வறட்சியும் பெருகும், கன்னியாகுமரி மாவட்டத்தின் ஒரு சில நிலப்பரப்பும், கேரளா முழுவதும் தென்மேற்குப் பருவக் காற்றினால் நல்ல மழையைப் பெறுகின்றன. (ஜீன் முதல் அக்டோபர் வரை) ஆனால் தமிழகம் முழுவதற்கும் நல்ல மழை தருவது வடக்கிழக்குப் பருவக் காற்றேயாகும் (அக்டோபர் முதல் டிசம்பர் வரை).

மழைப்பொழிவே நீா் பெறுவதற்கான அடிப்படை ஏதுவாகும், நீரைப் பெறுவதற்கான இக்கால ஏற்பாடுகள் எல்லாம் பருவமழையை அடிப்படையாகக் கொண்டே செய்யப்படுகின்றன. மழைப்பொழிவால் ஏற்படும் நீா்பாசனப் பற்றாக்குறையை ஈடு செய்யவே செயற்கைமுறைப் பாசன ஏற்பாடுக்ள மேற்கொள்ளப்படுகின்றன.

கிணறுகள், ஏற்றங்கள், கால்வாய்கள், ஆா்டீசியன் நீருற்றுக்கள் ஆகியவை தமிழகத்தில் வெற்றிகரமாகப் பின்பற்றப்பட்டு வரும் சில பாசன ஏற்பாடுகள் ஆகும். இத்தகைய பாசன வசதிக்கு அதிகப் பணச் செலவு ஏற்படுகிறது. இருப்பினும் விவசாயிகள் நவீன இயந்திரங்களைப் பெற்று வேளாண்மையைப் பெருக்குவதற்கான வாய்ப்புக்கள் பலவற்றை அரசு வழங்கியுள்ளது.

தொல்காப்பியக் காலத்தில் மழைப்பொழிவு அடிப்படையில் தமிழகம் நான்கு பெரும் நிலப்பிரிவுகளாகப் பகுக்கப்பட்டிருந்தது. அவை முறையே மலை சாா்ந்த இடம், காடு சாா்ந்த மேய்ச்சல் நிலம், வளமிக்க விளை நிலம கடற்கரை நிலம் என்பன, ஆனால் இளங்கோவடிகள் காலத்தில் இந்நால்வகை நிலங்களுடன் பாலை எனப்படும். ஐந்தாவது வகை நிலத்தையும் தமிழா் சோ்த்தனா். இந்த ஐவகை நிலங்களும் தத்தமக்கான மாந்தரையும் தொழிலையும், கடவுகளையும் பெற்றுள்ளன.

தமிழக மக்களில் பெரும்பாலோா்க்கு வேளாண்மையே முக்கியத் தொழில், திருவள்ளுவா் தனது திருக்குறளில் உழவு என்னும் அதிகாரத்தில் வேளாண்மையின் சிறப்பைத் திறம்பட எடுத்து மொழிகிறாா். நெல், சோளம், கம்பு, கேழ்வரகு ஆகிய தானியங்கள் மிகுதியும் பயிரிடப்பட்டன. பணப்பயிா்களான நிலக்கடலை, பருத்தி, கரும்பு ஆகியவையும் பயிரிடப்பட்டன. உணவுப் பயிா்கள் தவிர எண்ணெய் வித்துக்கள், எள்ளு, நிலககடலை, இஞ்சி, ஆமணக்கு போன்றவை தமிழகத்திலும், கேரளத்திலும் விளைகின்றன. துவரை, உளுந்து, தட்டப்பயிறு போன்ற பருப்பு, பயறு வகைகளும் பலபகுதிகளில் பயிரிடப்படடுகின்றன. இவைதவிர தென்னை, பாக்கு, மா, வாழை, வெற்றிலை, மிளகாய், புகையிலை மற்றும் இதர காய்கறிகளும் இங்கு பயிராகின்றன. தமிழகத்துப்பொருட்களான முத்து, யானைத்தந்தம், மிளகு, கிராம்பு, சந்தனம், தேக்கு தோத்கத்தி, ஏலம் ஆகியவற்றிற்கு அந்நிய நாடுகளில் பெரும் தேவை உண்டு தமிழகத்திலிருந்து மெசப்பட்டாமியாவிற்கு அரிசியும், ரோமாபுரிக்கு முத்துக்களும், இதர ஐரோப்பிய நாடுகளுக்கு மரமும் தென்னை நாா்க்கயிறும் அனுப்பப்பட்டன என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

**காலநிலையும் காற்றுகளும்**

பூமியின் நிலநடுக்கோட்டிற்குச் சற்று வடக்காக அமைந்துள்ளமையால், தமிழகம் முழுவதும் வெப்ப மண்டலத்திலேயே அடங்குகிறது. கன்னியாகுமரி $8^0$ வட அட்சரேகையில் அமைந்துள்ளது. எனவே, நாம் ஆண்டில் பல மாதங்கள் அதிக வெப்பத்தைப் பெறுகிறோம். ஏப்ரல், மே, ஜீன் மாதங்களில் மிகவும் உயா்ந்தபட்ச வெப்பத்தைத் தமிழகம் பெறுகிறது. ($85^0$Fம் அதற்கு மேலும்)

நவம்பர், டிசம்பர், ஜனவரி, மாதங்களில் வெப்ப அளவு ($80^0$கும் அதற்கு குறைவாகவும்) காணப்படுகிறது.

காற்றில் கலந்துள்ள வெப்ப, தட்பம், நீர்ப்பசை அல்லது வறட்சி ஆகியவற்றைப் பொறுத்தே அக்காற்று வீசும் பல்வேறு பகுதிகளின் காலநிலை வரையறுக்கப்படுகிறது. மலைப்பகுதிகளை அடுத்து வீசும் மேல்மட்டக் காற்றுகள் அதிக வேகம் உடையன. பாலக்காடு, செங்கோட்டை, ஆரம்பொழிக் கணவாய்ப் பகுதிகளில் இக்காற்றுக்கள் பயங்கரமாகவும், சில சமயங்களில் புயலாகவும் கூட வீசுவதுண்டு. பொதுவாகத் தமிழகத்தின் மேற்குபகுதியில் ஜீலை, ஆகஸ்ட் மாதங்களில் காற்று சற்று வேகமுடையதாகவுள்ளது. வடகிழக்கு பருவக்காற்று முடிவடையும் தருவாயில் காற்றுவீசும் போக்கில் பின்னோக்கித் திரும்பும்போது செப்டம்பர் மாதத்தில் அதந் வேகம் மிகவும் குறைந்து அக்டோபர் முழுவதும் வறண்டு விடுகிறது.

வெளிநாடுகளில் புகழ்பெற்ற வேலைப்பாடுமிக்க துணி உற்பத்தியில் தமிழகம் சிறந்து விளங்கியது. தென்புலத்தில் அகழ்ந்து பெறப்பட்ட மட்பாண்டங்களும், தாழிகளும் பண்டைத் தமிழகக் கலைவல்லார்களின் கைவண்ணத்திற்குச் சான்று பகர்வன. பாண்டிச்சேரிக்கு அருகிலுள்ள அரிக்கமேடு என்னுமிடத்தில் அகழ்ந்து பெற்ற நாணயங்கள், தமிழகம் மேலை நாடுகளுடன் கொண்டிந்த விரிவான கடல் வாணிபத்தைப் புலப்படுத்துகின்றன. தமிழகத்தில் கிட்டியுள்ள உரோமாபுரி நாணயங்களும், உரோமாபுரியில் கிடைத்துள்ள தமிழக நாணயங்களும் இவ்விரு நாடுகளிடையே அக்காலத்தில் சிறப்புடன் நடைபெற்று வந்த கடல் வாணிபத்தை மெய்ப்பிக்கின்றன.

மேற்கூறிய பல்வேறு விவரங்கள் தமிழர்க்கெனத் தனித்த வாழ்க்கையையும் தமக்கெனத் தனி ஒரு கலாசாரத்தையும் அவர்கள் வளர்த்துக் கொள்ளவும் துணை நின்றன என்ற உண்மை புலனாகிறது. இந்தியத்துணை கண்டத்தின் தென்கோடியில் ஒதுங்கி நின்ற இத்தமிழகச் சூழல்கள் வட இந்தியக் கலாசாரத்தினைப் போல அரசியல் அல்லது இதர கலாச்சாரச் செல்வாக்குகளோடு கலந்து விடாமல் தனது தனித்தன்மையை நிலைநாட்டி வந்துள்ளன. உள்நாட்டைச் சார்ந்தனவும் அயல் நாட்டில் தோன்றியவையுமான பண்டைய இலக்கியங்கள் தமிழகக் கலாசாரத்தின் சிறப்பிற்கு ஏராளமான சான்றுகள் வழங்குகின்றன. வட இந்தியாவிலிருந்து முற்றிலும் மாறுபட்ட அரசியல் ஆட்சி அமைப்புகளைத் தோற்றுவிக்க இதன் அமைவிடம் உதவுகிறது. கிரேக்க, உரோமானிய, எகிப்திய ஆசிரியர்களால் காவிரிப்பூம்பட்டினம், கொற்கை, தொண்டி ஆகிய இடங்களில் நடைபெற்று வந்த கடல் வாணிகத்தின் சிறப்புப்பாராட்டி எழுதப்பட்டுள்ளது.

அனைத்து கலாசார வரலாறுகளும், அவை விலங்கு நிலையிலிருந்து, காட்டு மிராண்டி நிலையினைத் தாண்டி, படிப்படியே இயற்கைச் சக்திகளை எதிர்த்துப்போராடி வென்று நாகரிக முதிர்ச்சிக்கு அடியெடுத்துவைத்துள்ள வளர்ச்சிப்படிகளை நமக்கு உணர்த்துகின்றன. இயற்கை அமைப்பின் விளைவுகளை

விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் ஓரளவிற்கு மாற்றி அமைத்துள்ள போதிலும், மனித வாழ்வில் நிலவியலின் செல்வாக்கு தொடர்ந்து நீடித்தே நிற்கிறது. இயற்கை அன்னையின் சீற்றத்தின் விளைவுகளை அடியொட்டியே விஞ்ஞான முன்னேற்றம் கூட அமைகிறது எனலாம். இவ்வாறு மலைகள், ஆறுகள், கடல்கள் இயற்கையாகக் கிடைக்கும். இதர சக்திச்செல்வங்கள் போன்ற நிலவியல் சூழ்நிலைகளைப் பொறுத்தே எந்த நாகரிகமும் அமைகிறது என்பது தெளிவு.

வரலாற்றின் அனைத்து வளர்ச்சிகளும் நிலவியலமைப்பாலேயே உருவாக்கப்படுகிறது. நிலவியலூண்மைகளை உள்ளத்திற்கொண்ட வரலாற்று ஆய்வுகள் துவக்கப்பட வேண்டும் என்று கருதுமளவிற்கு வரலாறும் நிலவியலும் பின்னிப்பிணைந்து கிடக்கின்றன.

## தமிழக வரலாற்றுச் சான்றுகள்

"மனிதனின் பரிணாம வளர்ச்சிப் பயணத்தில் அவன் விட்டுச்செல்லும் சான்றுகளைக் கொண்டு, வரலாற்றாளர் கடந்த காலத்தை திருத்தியமைக்கின்றனர்". எனவே ஒரு நாடு பெற்றுள்ள வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையிலேயே, அந்நாட்டின் வரலாறு அமைகிறது. பண்டைய இந்திய வரலாற்றைப் பொறுத்தமட்டில் வரலாற்றாளரின் பணி மிகவும் சிரமமான ஒன்றாகிறது. காரணம் வரலாற்று மூலச்சான்றுகள் போதுமான அளவு கிட்டாமையே. சிலவேளைகளில் அவர் 'ஒரு பெரும் வைக்கோற் போரினைக் கிளர்ந்து, ஒரு சிறு குண்டூசியினைத் தேட வேண்டிய நிலைக்கு ஆட்படுத்தப்படுகிறார்" என்றார் பேராசிரியர் ஆர்.சத்தியநாதய்யர். இருப்பினும் முஸ்லீம்களின் வருகைக்குப்பின் நிலைமை சற்று மாறியது. அவர்கள் காலத்தில் திரளான வரலாற்றிலக்கியச் சான்றுகள் படைக்கப்பட்டுள்ளன.

ஆனால் தமிழக வரலாற்றைப் பொறுத்தவரை நிலைமை முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. "தமிழகம் இந்தியாவின் ஓர் அங்கமாக இருந்தாலும், தனக்கெனத் தனி ஒரு வரலாற்றைக் கொண்டுள்ள தன்மையில் அது சற்று வேறுபட்டே நிற்கிறது. எனவே தமிழக வரலாற்றை எழுதுவதற்குத் துணை நிற்கும் சான்றுகளும், தமது தன்மையில் பிறவற்றிலிருந்து தனித்து நிற்பனவாகவே உள்ளன" என்கிறார் பேராசிரியர் என்.சுப்பிரமணியன். தமிழக வரலாற்றைப் புதுப்பித்து எழுதுவதற்கான சான்றுகள் எண்ணற்றவை; இயல்பால் வேறுபட்டவை. அவை முறையே 1. உள்நாட்டுச் சான்றுகள், 2. வெளிநாட்டுச் சான்றுகள் என பகுக்கப்படலாம். உள்நாட்டுச் சான்றுகளை இருபெரும் பிரிவுகளாக வகைப்படுத்தலாம். அவை முறையே 1.தொல்பொருட்கள், 2.இலக்கியங்கள் என்பன. தொல்பொருள் சான்றுகளை மேலும் நாம் (அ) கல்வெட்டுக்கள் (ஆ) நிலத்தின் மேற்பரப்பில் கிடைப்பனவும், அகழ்வாய்ந்து பெற்றனவுமான சான்றுகள், (இ) நாணயங்கள் என மூவகைப்படுத்தலாம். வெளிநாட்டுச் சான்றுகள், பெரும்பாலும் இலக்கியச் சான்றுகளேயாகும்.

## தொல்பொருள் சான்றுகள்

**சாசனயியல் சான்றுகள்:** கற்களிலும் செப்பேடுகளிலும் செதுக்கப்பட்ட எழுத்துக்களை பற்றிப் படிப்பதே சாசனயியலாகும். இவை பாறைகளிலும், கற்றூண்களிலும், கோவிற் சுவர்களிலும் பொறிக்கப்பட்டுள்ளன.. கல்வெட்டுக்களே இந்திய வரலாற்றிற்கு, குறிப்பாகத் தென்னிந்திய வரலாற்றிற்கான, வளமிக்க நம்பகமான சான்றுகளாகும்" என்றார் பேராசிரியர் கே.ஏ.நீலகண்டசாஸ்திரி. அனைத்துக் கல்வெட்டுக்களையும் தமிழக வரலாற்றிற்கான முக்கியத்துவம் வாய்ந்தவை என்று நம்மால் குறிப்பிடவியலாவிடினும், வரலாற்றுச் சான்றுகளாகக் கருதத்தக்கவை பல இன்னும் விடுபட்டுள்ளன என்பது உண்மை.

தமிழக முடியரசுகளைப் பற்றிக் குறிப்பிடும் தமிழிலல்லாத முதல் கல்வெட்டுக்கள் அசோகருடையவையாகும். அவற்றில் சோழர்கள், பாண்டியர்கள், சத்தியபுத்திரர்கள், கேரளபுத்திரர்கள் ஆகியோரைச் சுதந்திர மன்னர்களாகக் காட்டும் குறிப்புகள் காணப்படுகின்றன. புத்த மதத்தைப் பரப்பும் நோக்கில் அசோகர் தனது நல்லெண்ணத் தூதுவர்களை சேரர், சோழர், பாண்டியர், சிங்களவர் அரசவைகளுக்கு அனுப்பி வைத்ததாகத் தெரிய வருகிறது. தமிழக எல்லைக்குள் கிட்டிய தொன்மையான கல்வெட்டு "தமிழக மாவட்டங்களின் இயற்கையான குகைகளில் காணப்படும் சுருக்கமான கல்வெட்டுக்களே" ஆகும். இவை போதுமான விவரங்களைத் தருவனவாக இல்லை. கலிங்கமன்னர் சார்வேலரால் ஆக்கப்பட்ட ஹதிகும்பா கல்வெட்டுக்களிலிருந்து (கி.மு. 2ஆம் நூற்றாண்டின் முற்பாதி) தமிழக முடிவேந்தரின் குழு (League) ஒன்றிருந்ததை அறிகிறோம். இக்குழு தனது வலிமையைப் பெருக்கிக் கொண்டு 13 ஆண்டுகள் வரை நீடித்ததாக (ஹதிகும்பா கல்வெட்டு பிறப்பிக்கப்படும் வரை)வும், கலிங்கத்தை அச்சுறுத்தியாகவும் அறியக் கிடக்கிறது. ஹதிகும்பா கல்வெட்டு பிறப்பிக்கப்படுவதற்கு முந்திய 113 ஆண்டு காலகட்டம் பிந்துசாரரின் ஆட்சிக்கால முற்பகுதியுடன் பொருந்துவதாக இருப்பது தெளிவு என தமிழக வரலாற்றாளர்கள் கருதுகின்றனர்.

வரலாற்றுச் சான்றுகளாகப் பயன்படும் கல்வெட்டுக்களின் நிரலில் அடுத்து முன்னிற்பது பராந்தக நெடுஞ்சடையனால் பிறப்பிக்கப்பட்ட வேள்விக்குடி சாசனம் ஆகும். சங்ககால அரசனான பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியால் அந்தணர் குடும்பத்திற்கு இறையிலியாக வழங்கப்பட்ட வேள்விக்குடி என்னும் கிராமத்தை திரும்பவும் அவ்வந்தணர் வழித்:தோன்றல்களுக்கே உரிமையாக்கிப் பிறப்பிக்கப்பட்டதாக இக்கல்வெட்டு அமைந்துள்ளது. புதுக்கோட்டைக்கருகிலுள்ள குடுமியான்மலை 'இசைக்கல்வெட்டுக்கள்' கி.பி. அல்லது 8ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவை. இவை முதலாம் மகேந்திரவர்மப் பல்லவன் காலத்தில் பொறிக்கப்பட்டவை. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. அடுத்து குறிப்பிடத்தக்கது திருக்கோவலூர் கல்வெட்டாகும். இது சங்ககாலப் புலவரான கபிலர் தன்னைத் தீயிட்டு அழித்துக் கொண்ட செய்தியைக் குறிப்பிடுகிறது. தான்

அவ்வாறு இறந்துவிடுவதற்கு முன்னர் அவர் பாரி மகளிர் இருவரையும் திருக்கோவலூர் மன்னனான மலையமானுக்கு மணமுடித்து வைத்ததாகத் தெரிகிறது.

விஜயாலய அரச வமிசத்தினர் வரலாற்றாய்விற்குப் பெரிதும் பயன் தரத்தக்க பல்வேறு கல்வெட்டுக்களையும், செப்பேடுகளையும் விட்டுச் சென்றுள்ளனர். கோவிலின் கற்சுவர்களில் வரலாற்றுண்மைகளைப் பொறித்தல் என்ற வழக்காற்றினை முதன் முதல் புகுத்தியவர் முதலாம் இராசராசரே. அன்றியும் வரலாற்றுண்மைகள் பொதிந்த பல செப்பேடுகளையும் அவர் பிறப்பித்துள்ளார். முதலாம் இராஜேந்தரரின் மால்பாடி கல்வெட்டுகளும் தஞ்சை ராசராசேசுவரர் கோவிற் சுவர்களில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டுக்களும் குறிப்பிடத்தக்கவை. தெளிவான அரசியல் தகவல்கள் பலவற்றை நமக்களிப்பதாக அவரது திருவாலங்காடு செப்பேடுகள் அமைகின்றன. மக்கள் நல்வாழ்விற்குதவும் கல்லூரி, மருத்துவமனை போன்றவற்றிற்கு மானியமளித்தமையைப் புலப்படுத்தும் வீரராஜேந்திரரின் திருமுக்கூடல் கல்வெட்டுக்கள் மிக நீளமானவை. மூன்றாம் இராஜேந்திரர்க்குற்ற இன்னல்களைத் தெளிவுபடுத்துவதாக திருவேதிபுரம் கல்வெட்டு அமைகிறது. இத்தருணத்தில் தனது சமகால ஹொய்சா்ல மன்னரிடமிருந்து அவருக்குக் கிடைத்த உதவி பற்றியும் இது கூறுகிறது. எனவே இக்கல்வெட்டு முழுவதும் ஒரு வரலாற்றுச் சான்றாகவே கருதப்படுகிறது. திருவிடைவாயில் (தஞ்சாவூர்) கல்வெட்டு சோழர் காலத்துத் தல ஆட்சி முறையின் சிறப்புத் தன்மைகளை வெளிக் கொணர்கிறது.

சோழர் காலக் கல்வெட்டுக்கள் எண்ணற்றவை: தனித்தன்மை பெற்றவை. சமகாலத்தவரான அண்டை நாட்டு வம்சத்தினர் வெளியிட்டுள்ள கல்வெட்டுக் களிலிருந்தும் சோழர் வரலாற்றிற்கானன சான்றுகள் பெறப்படுகின்றன. மூன்றாம் கிருஷ்ணர் காலத்தவையான இராட்டிரகூடர் கல்வெட்டுக்கள், கீழே, மேலைச் சாளுக்கியர்களின் கல்வெட்டுக்கள், கீழைக் கங்கர்களின் கல்வெட்டுக்கள் ஆகியவை, சோழர்களின் சான்றுகளால் பெறப்படும் வரலாற்று உண்மைகளை நிறுவுவன அல்லது சற்றுத் திருத்தியுரைப்பனவாக அமைகின்றன. ஹொய்சா்லர்களின் சான்றுகள் (பதிவேடுகள்) ஓரளவு அதன் வீழ்ச்சிக்கால அரசியல் நிலை பற்றி விளக்குவன. பிற அரச வம்சத்தவர் வெளியிட்டுள்ள கல்வெட்டுகளில் சோழர் வரலாறு பற்றிய குறிப்புகள் காணப்படுவது போலவே, சோழர் தம்குடையின்கீழ் கொணர்ந்த நிலப்பகுதிகளிலும் சோழர் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன. கன்னட நாட்டின் கோலார் நகரில் அமைந்துள்ள கோலாரம்மா கோவிற் சுவர்களில் சோழர் கல்வெட்டுக்கள் பல காணப்படுகின்றன.

பிறநாடுகளில் கிடைக்கும் குறிப்புகளிலிருந்து தமிழ்நாடு கீழ்த்திசை நாடுகளில் ஏற்படுத்திய குடியேற்றங்கள், அந்நாடுகளுடன் கொண்ட வாணிப உறவு இவை பற்றி அறிய முடிகிறது. இவற்றுள் ˙போர்னியோவிலுள்ள மூலவரம் என்ற இடத்தில் கிடைத்துள்ள யுபா கல்வெட்டுக்களைச் சிறந்தவையாகக் குறிப்பிடலாம்.

இவற்றில் மூலவர்மன் என்னும் பெயர் கொண்ட அரசன் ஒருவன் வேதாகமச் சடங்குகள் நிறைவேற்றியமை பற்றியும், அவன் அந்தணர்க்களித்த கோதானம் (பசுக்களை வழங்குதல்), தட்சிணை (காணிக்கை) பற்றியும் கூறப்படுகிறது. இந்தோ-சீனாவிலுள்ள சம்பா என்னுமிடத்தில் கிட்டியுள்ள லோகான் சான்றுகள் அடுத்துக் குறிப்பிடத்தக்கவை. இவை யுபா கல்வெட்டுக்களை விடக் காலத்தால் அரை நூற்றாண்டு மூத்தவை. தா-குவ-பா என்னுமிடத்தில் கிடைத்துள்ள தமிழ்க்கல்வெட்டுக்கள் அங்கு ஒரு வைணவக் கோவில் இருந்த உண்மையைப் புலப்படுத்துகிறது. கோவிலை அடுத்துக் குளம் ஒன்று அமைக்கப்பட்டதாகவும், அதனைப் பராமரிக்க சில ஊழியர்கள் நியமிக்கப்பட்டதாகவும், இச்சான்றுகளால் பெறப்படுகிறது. அன்றியும் இக்கல்வெட்டுக்கள் பல்லவர் வரலாற்றில் காட்டப்படும் மூன்றாம் நந்திவர்மனுக்குரிய வேறு பெயரான ‘அகததி நாராஉணா‘ என்பதையும் குறிப்பிடுகின்றன.

செப்புப் பட்டயங்களின் பிறப்பினைக் குறிததுச் சித்திரிக்கின்ற வேளையில், அவை ஒரே சமயததில் எண்ணிக்கையில் இரட்டிப்பாகப் (Duplicity) பிறப்பிக்கப்பட்டுள்ள உண்மை கருதத்தக்கது. சங்க காலத்துச் செங்கணான் பற்றிக் குறிப்பிடும் அன்பில் செப்புப் பட்டயங்கள் முக்கியமானவை. மமபிராகிருத, வடமொழிகளில் செப்புப் பட்டயங்களைப் படைத்தவர்களுள் பல்லவர்களே முன் நிற்கின்றனர். சோழர்காலச் செப்புப் பட்டயச் சாசனங்கள் மிக நீளமானவை. இராசராசரின் வேடன் சாசனமும், முதலாம் இராஜேந்திரனின் திருவாலங்காடு, கரந்தைச் செப்பேடுகளும், வீரராசேந்திரனின் சரலா செப்பேடுகளும் இவற்றிற்கான சான்றுகளாகும்.

**தொல்பொருள் சான்றுகள்**

தமிழக வரலாற்றைச் சீர்திருத்தி எழுதும் பணியீல் தொல்பொருள் சான்றுகளின் சிறப்பான பங்கு பற்றி என்.சுப்பிரமணியன் ”தமிழகத்தின் தொன்மைக்கால வரலாறு இருண்ட (தெளிவற்ற) தொல்பொருட் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டே புனையப்படுகிறது. இவை தொன்மைக்கர்லத் தமிழர் வரலாற்றினை நன்கு புலப்படுத்துவதாக இல்லை. சிந்துவெளி, நைல்வெளி, மெசபொடாமிய வெளி நாகரிகச் சான்றுகள் பல அவ்வப்பகுதிகளில் நிலத்தின் மேற்பரப்பிலும், அகழ்வாய்ந்ததன் வழியும் கிடைத்துள்ளமையால், மறைந்துவிட்ட இவற்றின் வரலாறுகள் நன்கு புனையப்பட்டுள்ளன. தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இத்தகைய அகழ்வாய்வுகள் நடத்தப்படவுமில்லை; நடந்ததற்கான வாய்ப்புகளும் இல்லை. பண்டைத்தமிழகம் குறித்த வரலாற்றாளர்களுக்கு உண்மையாக பண்டைகாலச் சான்றுகள் ஏதும் கிடைக்கவில்லை” என்று கூறுகிறார். ஆனால் இன்று ஆதிசசநல்லூார், அழகாரை, உறையூர், திருக்கம்புலியூர், அரிக்காமேடு, மதுரையில் சில இடங்களில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்னிந்தியத் தொல்பொருளாய்வுத்துறையின் முன்னோடியாகக் கூறப்படும் புரூஸ்ஃபூட் அவர்களே திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்சநல்லூர்க் கண்டுபிடிப்புக்களுக்குக் காரணமானவர். பாண்டிச்சேரியை அடுத்த அரிக்காமேடு என்னுமிடத்தில் கிடைத்துள்ள தொல்பொருள்சான்றுகள் அடுத்து அமைவன. அரிக்காமேடு சான்றுகள் தமிழகத்திற்கும், யவனர்க்கும் (இந்தோபாக்ட்ரியர்கள்) இடையே சங்ககர்லத்தில் நடைபெற்ற கடல் வாணிபத் தொடர்பை எடுத்துரைப்பன. ”அரிக்காமேடு அகழ்வாய்வுகளை நடத்திய மார்டிமர் வீலர் அவர்களே. இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு நிரலில், தமிழகத்தையும் சேர்த்தார். இதன்வழிப் பண்டைத்தமிழக வரலாற்றிற்கு ஒரு புதிய விவிவாக்கமும் அளித்தார்”.

**நாணயவியல்**

நாணயங்களை விஞ்ஞான அடிப்படையில் ஆய்வதே நாணயயியலாகும். ஆனால் பண்டைக்காலம் பற்றிய ஆய்விற்குப் போதுமான தகவல்களை இந்த நாணயங்கள் அளிப்பதில்லை. எனவே தொல்பொருட்சான்றுகளில் இரண்டாம் நிலையை பெற்றனவாகவே இந்த நாணயயியல் கருதப்படுகிறது. கோவை, மதுரை மாவட்டங்களில் அண்மையில் கிட்டியுள்ள உரோமாபுரி நாணயங்கள், தமிழகத்தில் தமது வாணிப வளர்ச்சி நோக்கில் உரோமானியர்ககள் தமிழகத்திலேயே தங்கள் நாணயச்சாலை நிறுவியிருந்தனர் என்பதைத் தெளிவாக்குகின்றன. அரிக்காமேட்டுப் பகுதிகளில் கிடைத்துள்ள உரோமப் பேரரசன் அகஸ்டஸ் காலத்தில் வெளியிடப்பட்டுள்ள நாணயங்கள் இவ்வுண்மையை நிறுவுகின்றன.

தமிழக அரச வம்சத்தினர் வெளியிட்டுள்ள சில நாணயங்களும் பண்டைத் தமிழக வரலாறு குறித்த குறிப்புகள் சிலவற்றைக் கொடுக்கின்றன. தமிழக நாணயங்களுள் பாண்டியர், சோழர், பல்லவர் ஆகியோரின் நாணயங்கள் முக்கியமானவை. இந்நாணயங்கள் உருவாக்கப் பயன்படுத்தப்பட்டுள்ள உலோகம், அதன் அமைப்பு, அளவு, அவற்றின் பொறிக்கப்பட்டுள்ள உருவங்கள், எழுத்துக்கள் ஆகியவை அக்காலத்தைய நாட்டின் வளத்தையும் மக்களின் சமுதாய மேம்பாட்டையும் விளக்குவனவாக அமைகின்றன. பொதுவாகச் செம்மையும், சில வேளைகளில் ஈயத்தையுமே நாணயங்கள் அச்சிடப் பயன்படுத்தினர். இருப்பினும் தங்கமும், வெள்ளியும் கூட நாணயம் வடிக்கப் பயன்படுத்தப்பட்டன.

சோழர் நாணயங்கள் புலியின் உருவத்தைத் தாங்கி நிற்கும் பாண்டியர் நாணயங்களின் ஒரு புறததில் மீன் இலச்சினையும், சேரர் நாணயங்களில் வில்லும் பொறிக்கப்பட்டிருக்கும். ஹொய்சாலர்களின் நாணயங்களும் (பணம்), விஜய நகர ஆட்சியாளர்களின் வராகனும், அவ்வரசர்கள் தமிழகத்தில் செலுததிய மேலாதிக்கததை விளக்குவனவாக அமைகின்றனன. மதுரை சுல்தான்களால் வெளியிடப்பட்ட நாணயங்கள் திருத்தமானவை. சற்று மேம்பாடுடையவை. ஆனால் இவை டெல்லிச் சுல்தானியர்களின் நாணயத்தை ஒத்திருக்கின்றன.

## இலக்கியச் சான்றுகள்

வரலாற்றை அறிய உதவும் அடுத்த முக்கியமான சான்றுகள் இலக்கியங்களே. பிற நாடுகளில் இலக்கியங்கள் வரலாற்றின் அடிப்படையாக அமைகின்றன. ஆனால் இந்தியாவில் அவை சோதனைகளாக (Snares) உள்ளன. இருப்பினும் தமிழக வரலாற்றைச் சரிவர எழுதுவதற்கான இலக்கியங்கள் பல உள்ளன. இலக்கியச் சான்றுகளை விரிவான அளவில் இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை (1) பிற நாட்டவை (2) இந்திய நாட்டவை. இந்திய வரலாற்றுச் சான்றுகளை மேலும், தமிழல்லாத பிறமொழி இலக்கியங்கள்: உள்நாடடுத் தமிழ் இலக்கியங்கள் எனவும் நாம் வகைப்படுத்தலாம்.

## பிறநாட்டு இலக்கியச் சான்றுகள்

தமிழகம் பற்றிக் குறிப்பிடுகின்ற முதல் அந்நிய நாட்டர் மெகஸ்தனிஸே ஆவார். ஆனால் தமிழக மக்களின் மொழி தெரியாததால், மொழி பெயர்ப்பாளர் ஒருவரின் துணைகொண்டே, தான் கண்டவற்றையும், கேட்டவற்றையும் குறித்திருக்க வேண்டும். பகுத்தாய்ந்து விளக்கம் பெறுவதில் சற்றுச் சிரமமுற்றிருக்க வேண்டும். ஆனால் இவரது படைப்பான 'இண்டிகா' என்னும் நூல் வரலாற்றாளர் பலராலும் போற்றப்படுகிறது. ஹெராக்கின்ஸ் என்பவரின் மகளான பாண்டையாவுக்குக் கொடுக்கப்பட்ட தென்புலமே பாண்டியநாடு; இந்தியாவின் ஒரு பகுதியான பாண்டிய நாட்டில் நடைபெற்று வந்த ஆட்சி முறை பற்றி மிகத் தெளிவான குறிப்புகளைத் தருகிறார். துரதிர்ஷ்டவசமாக 'இண்டிகா' முழு நூலும் நமக்குக் கிடைக்கவில்லை. அதன் சில பகுதிகளே காலததின் கோர அழிவுகளிலிருந்து தப்பிக் கிட்டியுள்ளன. தமிழக வரலாற்றுக்கான பிறநாட்டுச் சான்றுகளுள் காலத்தால் முந்தியதாகக் குறிப்பிடத்தக்கது பெயர் தெரியாத ஆசிரியர் ஒருவரால் யாக்கப்பட்ட 'எரிதிரியக் கடலின் பெரிப்ளூஸ்' என்னும் நூலும். டாலமி அவர்களால் எழுதப்பட்ட நிலவியல் என்னும் நூலுமாகும். இவை பண்டைத் தமிழகத்தில் கடல் வாணிபச் சிறப்புக்களைச் செப்புவன. இந்நூல்களில் காவிரிப்பூம்பட்டினம் போன்ற நகரங்களைப் பற்றிய செய்திகளும் காணக்கிடைக்கின்றன.

தூதரகம் வாயிலான சீனச்சான்று ஒன்று தமிழகக் காஞ்சிபுரத்தை 'ஹௌவாஞ்சி' (Houanche) எனக் குறிப்பிடுகிறது. இதன் சமகாலத்தில் கன்னடநாட்டு சந்திரவாலியில் கண்டெடுக்கப்பட்ட சீன நாணயம் ஒன்று இவ்வுண்மையை நிறுவுகிறது. சீனப்பயணிகளான பாஹியான், யுவான் சுவாங் ஆகியோரின் பயணக் குறிப்புக்கள் முக்கியமானவை. குப்தபேரரசர் இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த பாஹியானால் தமிழகச் செய்திகள் குறிப்பிடப்பட்டுள்ளன. கி.பி.ஏழாம் நூற்றாண்டில் இந்தியாவிற்கு வந்த யுவாங்சுவாங்கின் பயணக் குறிப்புகளில் தென்னிந்தியாவை குறிப்பாகத் தமிழகம் பற்றிய விவரங்கள் ஏராளமாகக் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழகம் பற்றிக் குறிப்பிடும் கீழ்த்திசைகளின் தொடர் வரலாறுகளும், பாலி மொழியில் எழுதப்பட்ட மஹாவம்ச,

தீபவம்ச என்னும் இலங்கை தொடர் வரலாறுகள் குறிப்பிடத் தக்கவை. பதிமூன்றாம் நூற்றாண்டில் பாண்டிய நாட்டுக்கு வந்த மார்க்கோபோலோ சிறந்த பல செய்திகளை குறித்துச் சென்றுள்ளார்.

விஜயநகர ஆட்சிக்காலத்தில் வெளிநாட்டுப் பயணியர் பலர் தென்னிந்தியாவிற்கு வருகை தந்தனர். ”வேறெங்குமுள்ள இந்துக்களின் அல்லது இந்த அரசர்களின் வரலாறுகளைவிட, விஜயநகர மராத்தியர் வரலாறுகள் நன்கு அறிந்து கொள்ளத்தக்கவையாக உள்ளன”. இத்தாலியப் பயணி நிக்கோலோ கோண்டி, பாரசீகத் தூதுவர் அப்துர் ரசாக் உருகிய வணிகர் அதானிசியஸ் நிகிடின், பாரசீகப்பயணி ∴பெரிஷ்டா, இத்த்ர்லியக்கனவான் லுடோவிகோ, டி.வர்தேமா, போர்த்துக்கீசிய மொழி பெயர்ப்பாளர் துவார்தே பார்போசா, போர்த்துக்கீசிய வரலாற்றுப் பதிவாளர்களான டாமின்கோ பேயஸ், ∴பெர்னாலோ நூலிஸ் ஆகியோரால் யாக்கப்பட்டுள்ள தொடர் வரலாறுகள், பயணக் குறிப்புகள், விவர நூல்கள், தென்னிந்திய மக்களின் வாழ்க்கை நிலைமையும் அரசுகளின் அமைப்பையும் படம் பிடித்துக் காட்டவல்லன.

**இந்திய இலக்கியச் சான்றுகள்**

**தமிழல்லாத பிறமொழி இலக்கியங்கள்**

இந்தியாவில் கிடைத்துள்ள தமிழல்லாத பிறமொழி இலக்கியச் சான்றுகள், பண்டைத் தமிழக வரலாற்றிற்குப் போதுமான தகவல்களை அளிப்பனவாக இல்லை. வேத நூற்களில் காணப்படும் குற்றங்கள் மிகப்பரவலானவை. அன்றியும் அவை ஒதுக்குப்புறமான தென்னகத்தலங்கள் பற்றி அதிகமாகக் குறிப்பிடவில்லை. தமிழர் வாழ்வுமுறை பற்றிய மேலெழுந்த வாரியான தகவல்களைப் பண்டைய இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் நமக்களிக்கின்றன. ‘முத்துக்கும, விலையுயர்ந்த கற்களுக்கும் புகழ்மிக்க பாண்டி நாட்டுக் கவாத” என்னும் இடம் பற்றிய குறிப்பு ஒன்றினை நாம் வால்மீகி இராமாயணத்தில் காண்கிறோம் (இராமாயணம்-கிட்கித்தகாண்டம்).. இதில் கபாடபுரம் பாண்டியர்களின் இரண்டாவது தலைநகரமாகக் கட்டப்படுகின்றது. வியாசரின் மகாபாரதத்தில் ‘பாண்டியர்‘ பற்றிய குறிப்பு ஒன்று காணப்படுகிறது. சந்திரகுப்த மௌரியரின் அமைச்சரான கௌடில்யர் தனது அர்த்தசாஸ்திரத்தில் ”பாண்டிய சுவாத” பற்றியும், மதுரை பற்றியும் குறிப்பிடுகின்றார்.

**தமிழிலக்கியங்கள்**

பண்டைய தமிழிலக்கியங்களை சங்க இலக்கியங்கள் என அழைக்கின்றோம். இவையே சங்க காலம் பற்றிய நம்பகமான, தெளிவான, மதிப்புமிக்க சான்றுகளாக அமைவன. பொதுவாகச் சங்க இலக்கியங்களை கீழ்க்கண்ட வகையில் வகைப்படுத்துகிறோம்.

அவை:

1. தொல்காப்பியம் - தொன்மை மிகு தமிழ் இலக்கண நூல்.

2. எட்டுத்தொகை - நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு.

(நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல் கற்றறிந்தார் ஏத்துங் கலியோடு அகம்புறமென்று இத்திறந்த எட்டுத்தொகை)

3. பத்துப்பாட்டு - திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல் வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடு கடாம் என்பன.

(முதுகு பொருநூறு பாணிரண்டு முல்லை பெருகு வளமதுரைக் காஞ்சி-மருவினிய கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்பாலை கடாத்தோடும் பத்து)

4. பதினெண் கீழ்க் கணக்கு - நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவை நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை, குறள், திரிகடுகம், ஆதாரக் கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி.

(நாலடி நான்மணி நானாற்பது ஐந்திணை முப்பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம் இன்னிலைய காஞ்சியோடு ஏலாதி என்பவே கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு.)

**5. இரட்டைக் காப்பியங்கள் - சிலப்பதிகாரம், மணிமேகலை**

ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும், செய்யுளியற்றிய ஆசிரியரின் பெயர், இயற்றிய இடம், பொழுது ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளன. (இவ்விதிக்குச் சில விலக்குகளும் இருக்கின்றன). எனவே பண்டைத் தமிழகம் மக்களின் சமுதாய, பொருளாதார, அரசியல் சமய வாழ்க்கைமுறை பற்றிய பல்வேறு தகவல்கள் இவற்றினால் பெறப்படுகின்றன. ஆனால் ”சங்க காலத்தில் அரசியல், ஆட்சிமுறை, வாணிகம் ஆகியவை வளர்ச்சி பெற்றிருந்த அளவிற்குச் சமயமும், தத்துவமும் வளரவில்லை. சுருங்கக்கூறின் அது ஒரு சமயச் சார்பற்ற காலமாகும்” என

சுப்பிரமணியன் கருதுகிறார். சங்க காலத்தைக் கடந்துவரும் வரலாற்று மாணவர் அடுத்து இருண்ட காலத்தைச் சந்திக்கின்றனர். இக்காலம் பற்றிய நம்பகமான வரலாற்றுச் சான்றுகள் இன்னும் சரிவரக் கிடைக்கவில்லை. இக்காலத்தைக் (களப்பிரர் இடையாட்சிக் காலம்) கடந்து வருபவர், வரலாற்றுச் சான்றுகள் விரவிக் கிடக்கும் தமிழகச் சமயகாலத்தை அடைவார். இக்காலத்துப் படைக்கப்பட்ட இலக்கியங்கள் பெரிதும் சமயத்தை மையமாகக் கொண்டவை. எனவே இவை வரலாற்றாய்விற்கு அவ்வளவாகத் துணை நிற்பனவல்ல. "பக்திக்காலம் தொடங்கிய பின்னர் இலக்கியங்கள் பக்தியையும், மரபினையும் கருப்பொளாகக் கொண்டே யாக்கப்பட்டுள்ளன. எனவே இவை வரலாற்றுச சான்றுகளாகப் பயன்படுபவைஅல்ல." .இருப்பினும் நந்திக் கலப்பகம், பாண்டிக்கோவை போன்ற நூல்கள் வரலாற்றாய்விற்குத் துணை நிற்கும் நூல்களுள் குறிப்பிடத்தக்கவை.

"விஜயாலயன் மற்றும் அவரது வழித்தோன்றல்களால் ஆளப்பட்ட சோழப் பேரரசின் ஆட்சிக்கா்லம், தென்னிந்தியாவின் சிறப்புமிக்க இலக்கிய சமய மறுமலர்ச்சிக் கா்லங்களில் ஒன்றாகக் கருதத்தக்கது." தென்னிந்தியயச் சைவசித்தாந்தப் படைப்புகள் நம்பியாண்டார் நம்பி அவர்களால் உருவாக்கப் பெற்றன. இவரது நூல்களின் அடிப்படையில் சேக்கிழாரால் திருத்தொண்டர் புராணம் என அழைக்கப்படும் பெரியபுராணம் இயற்றப்பட்டது. சேக்கிழார் 12ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த இரண்டாம் குலோத்துங்க சோழரின் சமகாலத்தவர். பெரிய புராணத்திற்கு ஒப்பாகக் கருதத்தக்க வைணவ நூல்கள் திவ்ய சூரிசரிதை, குருபரம்பரை என்பன. இவை வைணவத் தொண்டர்களான ஆழ்வார்களுக்கும் நம்புதற்குரிய காலவமைதியைக் காட்டுகின்றன. இதை அடுத்து வருவது பௌத்த ஆசிரியர் புத்தமித்திரரால் எழுதப்பட்ட வீரசோழியம் என்னும் தமிழ் இலக்கண நூல் ஆகும். இது வீரராசேந்திரர் காலத்தில் எழுதப்பட்டது. செயங்கொண்டாரின் காவியமாகிய கலிங்கத்துப்பரணி ஓர் அழியாப் படைப்பாகும். முதலாம் குலோத்துங்கனின் தளபதியாகிய கருணாகரத் தொண்டைமான் கலிங்கநாட்டின் மீது படையெடுத்து வென்ற நிகழ்ச்சியைக் கருப்பொருளாகக் கொண்டு இந்நூல் புனையப்பட்டுள்ளது. சோழர் வமிசாவளி பற்றிய விளக்கமான தகவல்கள் பலவற்றையும், குலோத்துங்கனின் கலிங்கப் படையெடுப்பு நிகழ்ச்சிகள் குறித்த பல தகவல்களையும் இது நமக்குத் தருகிறது. மேற்கூறிய பரணியைப் போல உலா என்பனவும் மிகமுக்கியமான நூல்களாகும். அமைதிக்காலத்து மக்கள் வாழ்க்கை நிலைகளை இவை விளக்குகின்றன. "பரணி என்பது மக்களின் ˙போர்க்கா்ல வாழ்க்கை முறையை விளக்குவது போல, கவலைகள் மனப் பரபரப்புகளற்ற அமைதிக்கால வாழ்க்கை முறையை உலா விளக்குகிறது:. விக்கிரம சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன் ஆகியோரைத் தலைவராகக் கொண்ட மூவருலா தவிர, ஒட்டக்கூத்தர் குலோதுங்க சோழன் பிள்ளைத் தமிழையும் இயற்றியுள்ளார். இவற்றுடன் சில தொடர் வரலாறுகள், வட மொழியில் இயற்றப்பட்ட சோழ வம்ச

சரிதை மற்றும் கொங்குதேச ராசாக்கள் சவிஸ்தார சரிதை போன்ற தலபுராணங்களும் சிறிய அளவில் பயன்தரத்தக்கவை.

கங்காதேவியின் மதுரா விஜயம், வடமொழியில் இயற்றப்பட்ட ஓர் அழகிய நூல். இந்நூல் முதலாம் புக்கரின் மகனான குமாரகம்பணா மதுரையின் மீது எடுத்த படையெடுப்புகள் பற்றியும், மதுரை சுல்தானியர்களால் வெற்றி கொள்ளப்பட்டதையும் விளக்குவது. 'காவில்கள்' என அழைக்கப்படும் கிராம நிர்வாகச் சான்றுகளும், கர்னல் மக்கன்ஸி அவர்களால் தொகுக்கப்பட்ட 'கை.'.பியாத்துக்கள்' என அழைக்கப்படும் கையெழுத்துப் படிகளும், விஜயநகர மன்னரிகளின் ஆட்சிக்காலத்தில் தமிழக கிராமப் பகுதிகளில் நிலவிய அரசியல், பொருளாதார, சமய சமுதாயநிலை பற்றிய தகவல்ககள் பலவற்றை அளிக்கின்றன.

**தமிழகத்தின் இனமரபுகளும் பழங்குடிகளும்**

பல்வேறு இனங்களும் பண்டாடுகளும் நிறைந்த ஓர் அரும்பொருள் காட்சியகமே இந்தியா. இக்கருத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் தமிழ் நாட்டின் இனமரபு வரலாறு திகழ்கிறது. 'இனம்' என்னும் சொல்லிற்குத் தமிழில் வர்க்கம், குலம், சுற்றம், நிரை, ஒப்பு ஆகிய பொருள்கள் வழங்கி வருகின்றன. இனம் என்னும் சொல் ஆங்கிலத்தில் (Race) எனப்படும். இது எதனைக் குறிக்கிறதென்றால் மனித இனத்தில் உடலுறுப்புகளினுடைய அமைப்பின் அடிப்படையில் கொள்ளப்பட்ட பாகுபாட்டையேயாகும். சற்று விளக்கமாகக் கூறினால் உயிரின மரபுரிமை மூலம் வழி வழியாகக் கொண்டு செல்லக்கூடிய பொதுவான ஆனால் எளிதில் கண்டறியத்தக்க உடற்கூற்றுப் பண்புகளையுடைய மனிதர்களின் சேர்க்கையே, தொகுதியே இனம் எனலாம்.

**மொழிவழி இனப்பாகுபாடு முறையானதா?**

உலகில் பேசப்படுகின்ற மொழிகளை மொழியியல் அறிஞர்கள் அவற்றைப் பல குடும்பங்களாகப் பாகுபாடு செய்துள்ளனர். இப்பகுப்புமுறை மொழிகளை வகைப்படுத்தப் பொருந்துமே அன்றி, மனித இனத்தை உடற்கூற்று அமைப்பிலோ, வாழுகின்ற நாட்டின் அடிப்படையிலோ பகுப்பதற்குப் பொருந்தாது. மொழி ஆராய்ச்சிக்கென வகுத்துக் கொள்ளப்பெற்ற விதிமுறைகளை இன ஆராய்ச்சியில் கொண்டு வந்து பொருத்திக் காட்டுவது முறையல்ல. ஆனால் இத்தவற்றை அண்மைக்காலமாக இந்திய, குறிப்பாகத் தென்னிந்திய, ஆராய்ச்சியாளர்கள் செய்து வந்துள்ளனர். இந்தியாவில் பேசப்படும் மொழிகளை மொழியியலார் 'ஆரிய மொழிகள்' 'திராவிட மொழிகள்' என்ற இருபெரும் பிரிவுகளாகப் பிரித்தனர். இம்மொழிகளைப் பேசும் மக்களை மொழிக் குடும்பப் பெயர்களின் அடிப்படையில் ஆரியர், திராவிடர் என இனப்பாகுபாடு செய்வது ஏற்புடைத்தல்ல. உலகில் பல்வேறு பகுதிகளில் நிகழ்ந்ததைப் போன்றே இந்தியாவிலும் கடந்த பல நூற்றாண்டுகளாகப்

பல்வேறு இனங்கள் பெருமளவில் கலந்துள்ளன. எனவே மொழியையும் இனத்தையும் ஒன்றுபடுத்திக் காட்டமுடியாது.

மனிதரின் உடற்கூற்று அமைப்பில் காணப்பெறும் முனைப்பான சில இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு இனங்களாக மானிடவியல் நூலார் மக்களினத்தைப் பாகுபாடு செய்துள்ளனர். தோலின் நிறம், மண்டை ஓடு, உடற்கட்டு, கண்மணி, உதடுகளின் அமைப்பு, தலைமுடி ஆகிய பல்வேறு உடற்கூற்றுப் பண்புகளின் வேற்றுமைகளைக் கருத்தில் கொண்டு இனப்பாகுபாடு செய்யப்பெறுகிறது. இந்தியாவில் வாழும் மக்களிடையே காணப்பெறும் உடற்கூற்று இயலர்புகளை ஆராய்ந்து அதன் வழி இந்திய மக்களைப் பல இனங்களைச் சேர்ந்தவர்களாக மானிடவியலார் வகைப்படுத்தியுள்ளனர். அந்த இனங்களாவன: திராவிட இனம் இந்திய-ஆரிய இனம், மங்கோலிய இனம்.

**இனப்பாகுபாட்டின் அடிப்படை**

தமிழகதர்தின் இனமரபு வரலாற்றினைப் பற்றித் தனியே விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் தமிழகம் உட்பட்ட இந்தியாவைப் பற்றி மேல்நாட்டு அறிஞர்கள் விரிவாக ஆய்ந்துள்ளனர். அவர்தம் ஆய்வுரைகளில் தமிழகத்தில் வாழும் மக்கள் இனம் பற்றிய செய்திகள் பல இடம் பெற்றுள்ளன. இனமரபு ஆய்வில் நிலையான தொழில்நுட்ப அளவுகோல் ஒன்றும் திட்டவட்டமாகப் பயன்படுத்தப்படவில்லை. மற்றும் மனிதனுடைய பல்வேறு உடற்கூற்று இயல்புகளின் இனச்சிறப்புப் பண்புகளை வரையறுக்கும் முறையும் போதிய அளவிற்கு வளர்ச்சியடையவில்லை. இவ்விரு காரணங்களால் இனமரபியல் ஆய்யவாளர்கள் பலதிறப்பட்ட கொள்கைளளைக் கொண்டுள்ளனர்; வேறுபட்ட கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

தமிழகம் பற்றி நாம் படிக்கும்போது மற்றொரு கருத்தையும் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். மண்ணியல் அறிஞர்களின் கூற்றுப்படி இன்றுள்ள தமிழகத்திற்குத் தென்பால் லெமூரியா என்றொரு பெருநிலப்பரப்பு பல நூறாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தது. பின்னர் ஏற்பட்ட ஊழிகளால் இன்றுள்ள அளவிற்குத் தமிழக நிலப்பரப்பு சுருங்கிற்று. இம்மாற்றங்கள் பல நூறாயிரம் ஆண்டுகளினூடே ஏற்பட்டபோது மனித இனமே தோன்றவில்லை. மானிடவியலாரின் கருத்துப்படி இனமரபு பாகுபாடுகளை மூவாயிரம அல்லது நாலாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த மக்களிடையேதான் காணமுடிகிறது. அத்தொன்மைக் காலந்தொட்டே தமிழகத்தில் மனிதன் தனித்து வாழ்ந்து வந்திருக்க முடியாது. வடஇந்தியப் பகுதிகளோடு தொடர்பு கொண்டிருக்க வேண்டும். மக்களிடையே குடிப்பெயர்ச்சி ஏற்பட்டிருக்கும். எனவே தமிழ்நாட்டு மக்களின் இனமரபு வரலாற்றினைத் தனியே பகுத்தறிவதைவிட இந்தியாவின் ஒரு கூறாகக் காண்பதே முறையாகும்.

ஜே.எச்.ஹட்டன் மிக விரிவான திட்டத்தின் அடிப்படையில் மானிடவியலிலும், இனமரபியலிலும் ஏற்பட்டுள்ள வளர்ச்சிகளையும் புதுமைப் போக்குகளையும் கருத்தில் கொண்டு 1933இல் இந்தியக் குடிமக்களின் கணிப்பைத் தொடங்கினார். இனத்திற்கும் மொழிக்கும் பண்பாட்டிற்கும் இடையேயுள்ள தொடர்புகளையும், கிளையுறவுகளையும் அவர் நுட்பமாக ஆராய்ந்துள்ளார். அதன் விளைவாக 'இந்தியாவில் வாழும் மக்கள் எல்லோருமே வெளிநாடுகளிலிருந்து வந்தவர்' என்னும் முடிவிற்கு அவர் வந்தார். ஹட்டன் இந்திய மக்களின் இனமரபுகளை எட்டுவகையாகப் பாகுபடுத்தியுள்ளார். அடுத்து இந்திய மானிடவியல் மதிப்பீட்டுத் துறையின் நெறியாளராகப் பணியாற்றிய பி.எஸ்.குகா இநதிய மக்களின் இனப் பண்பாட்டைப் பற்றி ஆராய்ந்து சில சிறந்த முடிவுகளை வெளியிட்டுள்ளார். இந்திய மக்களை ஆறு முதன்மையான இனங்களாகவும், அவற்றோடு தொடர்புடைய பதினொரு துணை வகைகளாகவும் அவர் வகைப்படுத்தியுள்ளார். அவை பின்வருமாறு:

1. **நீக்ரிட்டோக்கள் (Negritos):** ஆப்பிரிக்காவிலிருந்து வந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். குறுகிய தலையையுடையவர்கள். இவர்கள் இந்தியாவிற்கு வந்த மிகப் பழைய மக்களாவர். இப்பொழுது அந்தமான தீவுகளிலும், மலேயாயவிலும் வாழுகின்றனர். அஸ்ஸாமிலுள்ள நாகர்களிடத்திலும், தென்னிந்தியாவில் குறிப்பிட்ட சில பழங்குடி (காடர், புலையர், இருளர்) மக்களிடத்திலும் இவ்வினக் கூறுகளைக் காணலாம்.

2. **ஆஸ்திரிய மக்களின் மூதாதையர் (Proto-Australoids):** இவர் கீழை நடுநிலக்கடல் பகுதியிலிருந்து (பாலஸ்தீனம்) இந்தியாவிற்கு வந்தவர்கள். நீக்ரிட்டோக்ககளை அடக்கி ஒடுக்கிவிட்டுக் குடியேறினர். இம்மரபினர் கரிய நிறத்தினர்; நீண்ட தலையோட்டினர் ; அகன்ற மூக்கினர். இவர்கள் தமிழகத்திற்கு வந்தனர். மலைப்பகுதிகளில் வாழும் சில பழங்குடியினரில் இவர்களின் சாயலைக் காணலாம்.

3. **மங்கோலியப் பழங்குடியினர் (Mongoloids):** இவர்களுள் பண்டைய மங்கோலியர், திபெத்திய மங்கோலியர் என்ற இருவகையினர் உள்ளனர். இந்தியாவின் வட எல்லைக் கோடியிலும் கிழக்கு எல்லை ஓரத்திலும் வாழும் இனத்தவர். தமிழ்நாட்டில் இவ்வினத்தவர் இல்லை.

4. **நடுநிலக்கடல் இனத்தவர் (Mediterranean type):** இவர்களுள் பண்டைய நடுநிலக்கடல் இனத்தவர். நடுநிலக்கடல் இனத்தவர், கீழை நாடுகளில் உள்ள நடுநிலக்கடல் இனத்தவர் என்னும் மூவகையினர் உள்ளனர். இவர்கள் கரிய நிறத்தினர்; இடைப்பட்ட உயரம் உடையவர் ; குறுகிய மூக்கினர். தென்னிந்தியாயவில் இவர்கள் பெருமளவில் காணப்படுகின்றனர். 'திராவிடர்' என்னும் பெயர் உடைய இவ்வினத்தைச் சேர்ந்தவர்களே தமிழக மக்கள்.

**5. குறுகிய தலையையுடைய இனத்தவர் (Brachycephalic):** இவர்களுள் அல்பைனர், தினாரிக்குகள், அர்மினாய்டுகள் என்னும் மூன்று பிரிவுகளுண்டு. இவர்கள் கன்னடநாட்டிலும், தமிழ்நாட்டிலும் காணப்படுவதோடு வங்காளத்திலும், ஒரிஸ்ஸாவிலும் காணப்படுகின்றனர்.

**6. நார்டிக்குகள் (Nordics):** இவர்கள் வேதகால ஆரிய இனத்தவர். குறுகிய மூக்கும் அகன்று நீண்ட தலையோடும் உடையவர் ; வேதகால ஆரிய மொழியை இந்தியாவிற்கும் கொண்டு வந்தவர்.

டாக்டர் குகா அவர்களின் மேற்குறிப்பிட்ட பாகுபாடே இன்று இனமரபியல் ஆய்வாளர்களால் சிறப்பு மிக்கதாகப் போற்றப்படுகிறது. மேலும் செம்மையான ஆய்வுமுடிகள் வெளிவருமானால் இனமரபியல் பற்றிய நம்முடைய கருத்துக்களை நாம் மாற்றிக் கொள்ள நேரலாம். குகா ஈறாக இந்திய மக்களை இனவழிப் பாகுபாடு செய்த இனமரபியல் அறிஞர்கள் அனைவருமே இந்திய மக்களினத்தை வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களாகக் கொள்வதிலேயே நாட்டம் உடையவர்கள்.

**தமிழகத்தின் இனமரபினர்:**

தமிழகத்தின் தென்மேற்குப் பகுதியில் வாழ்ந்துவரும் காடர், புலையர், இருளர் என்போர் தமிழகத்து மிகப்பழையன இனமான நீக்ரிட்டோவைச் சேர்ந்தவர்கள் எனலாம். தென்னகத்தின் மக்களிடையே பழங்கற்கால நடுநிலக்கடல் இனத்தவரின் சில கூறுகளையும் காணலாம். தமிழகத்தின் கடலோரப்பகுதிகளின் அல்பைன் இனத்தவரின் (Alpines) சாயல்களையும் காணலாம். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் வாழும் மக்களை இனவாரியாகப் பிரித்துக்காட்டல் இயலாது. ஏனென்றால் பல்லாயிர ஆண்டுகளாக பல்வேறு இனமரபினர் தமிழகத்திற்கு வந்து கலந்திருக்கின்றனர். இத்தகைய கலப்பினாலும், குடிப்பெயர்ச்சியாலும் இனமரபு வரலாற்றையோ, மக்களின் தோற்றத்தையோ திட்டவட்டமாக கூறமுடியாத நிலை உள்ளது. தமிழகத்தில் இனமரபுகளில் தனிச்சிறப்பான ஓர் உண்மை உண்டு. அது என்னவெனில் நீலகிரியில் வாழும் தோடர்கள், மேற்கூறப்பட்ட எந்த இனமரபுப் பாகுபாட்டினுள்ளும் அடங்காது தனிப்பட்ட பழங்குடியினராக இருந்து வருகின்றனர்.

மிகப்பண்டைக் கர்லத்துத் தமிழர் எல்லோரும் ஒரே இனமரபினர் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவர்களின் பெரும்பாலோர் நீக்ரிட்டோக்களே என்று கூறலாம். இவர்கள் தமிழகத்திற்கு வந்த காலத்தில் கற்காலத்துக்கு முற்பட்ட பண்பாட்டை உருவாக்கியிருந்த மக்களைச் சந்தித்திருப்பார். கால அடிப்படையிலும் இக்கருத்து ஏற்புடையதாய் உள்ளது. நீக்ரிடோக்களை அடுத்து தமிழகத்தில் இரண்டறக் கலந்துள்ள இனமரபினர் ஆஸ்திரஸாயிடுகள் ஆவர். இவர்கள் தென்னிந்தியாவிலிருந்து ஆஸ்திரேலியா வரை ஆதிகாலத்தில் பரந்து கிடந்த ஒரு மக்கள் இனம் இவர்கள். சராசரி உயரமும் குறுகிய மூக்கும் உடைய

‘இடைக்கபாலர்‘ (Mesocephalic)கள், இவர்கள் தமிழ்நாட்டிலேயே தோன்றி வளர்ந்தவர்களா அன்றி வெளிப்பகுதியிலிருந்து தமிழகத்துள்ள மிகப்பண்டைக்காலத்தே புகுந்தவர்களா என்பதைத்திட்டவட்டமாகக் கூறமுடியவில்லை குறும்பர்கள் மற்றும் சில காடுவாழ் பழங்குடி மக்களை ஆஸ்திரலாயிடுகள் எனக் கருதலாம். ஆதி ஆஸ்திரலாயிடுகள் இந்தியாவில் பரந்து காணப்படும் இனத்தவர். இவர்கள் மொகஞ்சசோதாரோவிலும் இருந்ததாகத் தெரிகிறது. இதனடிப்படையில் சிலர் ஆதிகால தமிழ்மக்களுக்கும் ஆதிசிந்து வெளியினருக்கும் இனமரபு வகையில் தொடர்பு உண்டு என்று கருதுகின்றனர்.

இன்று தமிழகத்தில் காணப்பெறும் பெரும்பான்மை மக்கள் ஆதி நடுநிலக்கடல் பிரிவினர் என்பதில் அறிஞர்களிடையே கருத்து ஒற்றுமை உள்ளது. இவ்வின மரபினர் இடைப்பட்ட உயரம், நீண்ட குறுகிய தலை, நீண்ட அல்லது சற்று வளைந்த சராசரி நாசியோடு இலங்குபவர். கீழை நடுக்கடல் பகுதியிலிருந்து தமிழகத்திற்குச் சில ஆயிரம் ஆண்டுகட்கு முன்பு வந்தெய்திய மக்கள் திராவிடர் எனலாம். தமிழ்நாட்டில் இடைக் கற்காலத்தை அடுத்து வந்தது புதிய கற்காலம். திராவிடர் இக்காலத்ே:தே தென்னகம் போந்து பல்கிச் செழித்தனர். தொல்பொருள் துறையினர் நடத்திய அகழ்வாய்களின் கண்டுபிடிப்புகள் நடுநிலக்கடல் நாகரிகத்தோடு பொருந்துகின்றன. திராவிடரோடு அர்மினாய்டு, ஆல்பைன் என்னும் சிறு இனவகைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன. அர்மினாய்டு வகையினர் தென்மேற்கு ஆசியப்பகுதியில் தோன்றி காஸ்பியன் கடற்கரையிலிருந்து இந்தியாவரை பரவியவர்கள். இவ்வினமரபினர் தமிழ்நாட்டில் ஓரளவு காணப்படினும், பண்டைய நீக்ரிட்டோவினர் ஆதி ஆஸ்திரலாயிடுகள் என்போரைத் தவிரப் பிறரைத் தமிழ்நாட்டின் ஆதி இனத்தவராகக் கொள்ளமுடியாது. மங்கோலிய இனம் மட்டுமே இங்கு சிறிதும் காணமுடியாத ஒன்றாகும்.

நார்டிக்குகள் எனப்படும் ஆரியர்கள் இந்தியாவிற்கு வரும் முன், நாகரிகத் தொடக்க காலத்தைச் சேர்ந்த திராவிடர்கள் நல்லதொரு நாகரிகத்தை உருவாக்கியிருந்ததாக அறிஞர் கருதுகின்றனர். தென்னிந்தியாவிலும் ஆரியர் வருகைக்கு முன்பே திராவிட நாகரிகம் தழைத்திருந்தது என்றும் கருதப்படுகிறது. பாண்டிய நாட்டில வாழ்ந்த தமிழர் தம் நாகரிகமே பண்டைய திராவிடர்களின் நாகரிகமென இராபர்ட் கால்டுவெல் கருதுகிறார். இந்நாகரிகம் இங்கேயே உருவாகியிருக்கவேண்டும். ஆனால் ஆரியர்களின் குறிப்பாகப் பிராமணர்களின் வருகைக்குப் பின்பே விரைவான வளர்ச்சியைப் பெற்றிருக்கவேண்டும் என்றும் கர்ல்டுவெல் கூறுகிறார். தென்னகம் போந்து குடியேறிய பிராமணர்களின் தலைவரலக அல்லது அவர்களுள் செல்வாக்கு மிக்கவராகத் திகழ்ந்தவர் அகத்தியர் என்றும், இவர்களின் வருகை இராமாயணத்திற்கும் மகாபாரதத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கும் என்றும் கால்டுவெல் கருதுகிறார்.

பண்டைய தமிழகத்தின் இனமரபுபற்றி வி.கனகசபைப்பிள்ளை கருத்தொன்றை வெளியிட்டுள்ளார். தமிழகத்தின் ஆதி இன மரபினர் வில்லவரும் மீனவருமே என்பது அவர் தம் கூற்று. வில்லையுடைய வில்லவர் மலையிலும், மலையைச் சார்ந்த இடங்களிலும் வேட்டையாடுதலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தனர். பள்ளத்தாக்குகளிலும், சமவெளிகளிலும், கடற்கரையோரஙங்களிலும் மீன்பிடித்தலைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் மீனவர். அரைகுறை நாகரிகம் கொண்ட இப்பழங்குடியினரை நாகர்கள் வந்து அடக்கி ஒடுக்கியதாகவும், இந்நாகர்கள் எண்ணிக்கையில் பெருமளவினராக நாகரிகமடைந்தவராக இருந்தனர் என்னும், ஒரு காலத்தில் பர்மா, இலங்கை, இந்தியாவின் பெரும்பகுதியில் இருந்தனர் என்னும் கனகசபை கருதுகிறார். நாகர்களைப் பற்றி இராமாயணத்தில் குறிப்புள்ளதென்றும், தக்கணத்தில் இவர்களது தலைநகரம் பற்றிச் சிறப்பான வருணனை உள்ளதென்றும் அவர் கூறுகிறார். இக்கருத்துக்களை எல்.டி.பார்னட், வி.ஏ.ஸ்மித் போன்ற அறிஞர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

திராவிடர் நடுக்கடல் இனமரபின் ஒரு பிரிவினர் அல்லது அவர்களோடு நெருங்கிய தொடர்புடைய இனமரபினர் என கில்பர்ட் ஸ்லேட்டர் கூறுகிறார். தலையோட்டின் அமைப்பிலும், முடியின் வண்ணத்திலும், இழை நயத்திலும், கண்களின் வண்ணத்திலும், உடற்கட்டு அமைப்பிலும் குறிப்பிடத்தக்க ஒற்றுமைகளைக் காணலாமென்கிறார். திராவிடரில் பெரும்பாலோருக்கு உடலின் நிறம் சற்றுக் கருப்பாகவே இருக்கும்; முடியானது சுருட்டையாகவும் இழை நயமுடையதாகவும் இருக்கும்; நடுநிலக்கடல் இனமரபினரைக் காட்டிலும் தடித்த உதடுகளும் அகன்ற நாசிகளும் இருக்கும்; இம்மாற்றங்கள் திராவிடர்கள் இந்தியாவிற்குள் வந்த பின் இங்கிருந்தாரோடு ஏற்பட்ட இனக்கலப்பின் விளைவாக ஏற்பட்டிருக்கும என்றும் கில்பர்ட் ஸ்லேட்டர் கருதுகிறார். நடுநிலக்கடல் பகுதியிலிருந்து திராவிடர்கள் மெஸோபொடாமியா, பலுச்சிஸ்தானம் வழியாகச் சுமேரிய நாகரிகம் தோன்றுவதற்கு முன்பாக இந்தியாவிற்குள் நுழைந்திருக்க வேண்டும் என்றும், இங்கு புதிய சுற்றுப்புறச் சூழ்நிலையில் வெளிப்புற செல்வாக்குகளோடு திராவிட நாகரிகத்தை உருவாக்கியிருக்க வேண்டும் என்றும் ஸ்லேட்டர் The Dravidian Elements in Indian Culture என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தின் ஆதி இனமரபினராகக் கருதப்படும் திராவிடர்கள் இங்கேயே தோன்றியவர்கள் அல்லர்; வெளியிலிருந்தே வந்தவர்கள் என்பதில் பெரும்பாலான அறிஞர்களிடையே கருத்தொற்றுமை உள்ளது. ஆனால் எப்பொழுது இந்தியாவிற்குள் வந்தனர் என்பதில் கருத்து வேற்றுமை இருந்து வருகிறது. கனகசபைப் பிள்ளையும், ஸ்லேட்டரும் திராவிடர்கள் இந்தியாவிற்குள் கி.மு.1300க்கு முன் வந்திருக்க வேண்டுமெனக் கருதுகின்றனர். ஆனால் இலண்டன் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹைமண்டார்.ஃப் கூற்றின்படி திராவிடர்களும் ஆரியர்களும் ஏறத்தாழ ஒரே காலத்தில்

கி.மு.2000-1000 இந்தியாவிற்குள் வந்திருக்க வேண்டும் ; அதிலும் திராவிடர்கள் கடல்வழியோ மேலை கடலோரப் பகுதிகள் வழியோ வந்திருக்கக்கூடும். சங்க இலக்கியங்கள் கூறும் திராவிடர்கள் கி.மு.500ஆம் ஆண்டளவில் தமிழகத்திற்குள் வந்திருக்கக்கூடும் எனவும் இப்பேராசிரியர் கருதுகிறார். இக்ககூற்றை ஏற்பதிலுள்ள சில இடர்ப்பாடுகளை கே.ஏ.நீலகண்டசாஸ்திரி எடுத்துக் கூறியுள்ளார். கர்நாடக நாட்டில் கண்டெடுக்கப்பட்ட அசோகரது கல்வெட்டுக்களில், சீரான முறையில் நிறுவப்பட்டு இயங்கிக் கொண்டிருந்த தமிழக அரசுகள் குறிக்கப்பட்டுள்ளதைக் காணும்போது இவற்றை உருவாக்கிய திராவிடர்கள் தமிழகம் போந்த காலத்தை முன்னுக்குக் கூட்டிக் கணக்கிட வேண்டுமென சாஸ்திரி கருதுகிறார். மேலும் அவர் தம் கருத்துப்படி தென்னிந்தியாவிற்கு திராவிடரும், ஆரியரும் சற்றேறக் குறைய ஒரே நேரத்தில் வந்திருக்கவேண்டும்.

தென்னிந்திய மொழிகளின் அடிப்படையில் வேறுபட்ட கருத்துக்களை அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். தமிழ், தெலுங்குக, கன்னடம், மலையாளம் ஆகியவை திராவிட மொழியினத்தை சேர்ந்தவை; மராத்தி இந்தோ-ஆசிய மொழியினத்தைச் சார்ந்தவை திராவிட மொழியினத்தைவிட ஆஸ்திரோ-ஆசி மொழியினம் பழமையானது; இந்தோ-ஆரிய மொழிக்குடும்பம் பிந்தியது என நீலகண்ட சாஸ்திரி கூறுகிறார்.

தென்னகம் வந்துற்ற திராவிடர்கள் தங்களது தனித்தன்மையை வரலாற்றுக்கு முந்திய காலம் வரை காத்தனர் என்றும், ஆனால் வடஇந்தியாவில் திராவிடர்களைப் பின் வந்துற்ற இனமரபினர் தத்தம் மரபுடன் ஒன்றச் செய்துவிட்டனர் என்றும் கேரள சமூக வரலாறு என்ற நூலின் ஆசிரியர் எல்.ஏ.கிருஷ்ண ஐயர் சொல்லியுள்ளார். திராவிட இனமரபுக் கூறுகளையும் அவர்கள் ஒடுக்கிவிட்டனர். அதிலுங் குறிப்பாக ஆரியர்கள் சிறிய கூட்டத்தினராக வந்த் காலையில் தங்களது மேலாதிக்கத்தை நிறுவ தத்தம் நாகரிகக் கூறுகளையே நிலை நாட்டுவதில் நாட்டங்கொண்டனர். எனவே ஆரியர் வருகைக்கு முற்பட்டிருந்த நாகரிகம் அவர்களின் நாகரிகத்திற்கு உட்படுத்தப்பட்டது எனலாம். ஆரியர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருந்தனர். எண்ணிக்கையில் மிகுந்திருந்த திராவிடர்களால் தங்களது நாகரிகம் சிதைந்துவிடுமோ என அஞ்சினர். அதற்காக தங்களுக்கு முற்பட்டிருந்த நாகரிகத்தை தங்கள் வயப்படுத்தியபோது தங்களது சிறப்பு நிலை குன்றாவண்ணம் பார்த்துக் கொண்டனர். வாழ்க்கைக் கோட்பாடுகளையும் நடத்தைகளையும் இறுகக் கட்டிகாத்தனர். போர் முறைகளிலும், அரசாட்சி முறைகளிலும் அரிய இனமரபின் அடிப்படைகளை வைத்துக்கொண்டனர். பண்பாட்டின் பிறகூறுகளை திராவிடர்களுடனான நல்லுறவுக்காகவும், மனநிறைவுக்காகவும், தொடர்ச்சியாகவும் அப்படியே தக்க வைத்துக்கொண்டனர். இரண்டு இனமரபினரிடையே கூட்டு ஏற்பட்டாலும், தத்தமக்குரிய சிறப்புகளை விட்டுவிடாமல் வாழமுடியும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக தென்னகததில் ஆரியரும், திராவிடரும் வாழ்ந்தனர் என

கிருஷ்ண ஐயா விளக்கியுள்ளார். பல்லாயிர ஆண்டுகளாக இனமரபுத் தொடர்பு ஏற்பட்டு வந்துள்ள நிலையில் இவர்களைப் பிரித்துக் காட்ட இயலாது என்றும் அவர் கருதுகிறார்.

வி.ஆர்.இராமச்சந்திர தீட்சிதர் கூறுவது போல (Origin and Spread of the Tamils) தமிழகத்தில் பல்வேறு இனமரபுகள் தொன்று தொட்டு ஒன்றறக் கலந்துவிட்டன. அத்தோடு புதிய புதிய வாழ்க்கைத் தொழில்களும், பழக்க வழக்கங்களும் மக்களிடையே வளர்ந்துவிட்டன. பண்பாட்டில் நாகரிகத்தில்- வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டு வந்துள்ளது. இருப்பினும் பல பண்டைய பழக்கவழக்கங்கள் சமூகத்தில் தொக்கி நிற்பதையும் காணலாம்.

## பிற்காலச்சோழர்கள்

தமிழகத்தை ஆட்சிபுரிந்த அரசவம்சங்களுள் நீண்ட காலம் ஆட்சிபுரிந்தவர்கள் சோழர்களே ஆவார். சோழ வரலாற்றை அவர்கள் நிர்வாக வசதிக்காகப் பயன்படுத்திய தலைநகரங்களை அடிப்படையாகக் கொண்டு மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். முற்கால ஏகாதிபத்தியச் சோழர்கள் கி.பி.1014 வரையிலும் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு தங்கள் நாட்டை ஆட்சிபுரிந்தனர். எனவே அவர்கள் தஞ்சாவூர் சோழர்கள் என அழைக்கப்பட்டனர். ஆனால் முதலாம் இராஜேந்திரன் தனது ஆட்சி காலத்தில் கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஒரு புதிய நகரை கட்டி அதைத் தலைநகராகக் கொண்டான். எனவே இராஜேந்திர சோழனும் அவனுக்குப்பின் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தவர்களும் கங்கைகொண்ட சோழர்கள் எனப்பட்டனர். சோழ நாட்டை ஆண்ட அதிராஜேந்திரனுக்குப்பின் நாட்டை ஆட்சிபுரிய நேரடி வாரிசு இல்லாத காரணத்தால் சாளுக்கிய நாட்டிலிருந்து சோழநாட்டுக்கு மிக நெருங்கிய உறவுடைய முதலாம் குலோத்துங்கன் தத்தெடுக்கப்பட்டான். முதலாம் குலோத்துங்கனையும் அவனது வாரிசுகளையும் சாளுக்கியச் சோழர்கள் என வரலாறு குறிப்பிடுகிறது.

### தஞ்சாவூர் சோழர்கள் (கி.பி.850 – கி.பி.1014)

### விஜயாலயன்

பிற்கால சோழ வசம்சத்தைத் தோற்றுவித்தவன் விஜயாலயச் சோழன் ஆவான். இவன் பல்லவ சிற்றரசனாக குமாரன்குசன் என்பவனின் மகன். சோழர் காலத்தைச் சார்ந்த அன்பில், திருவலங்காடு, கன்னியாகுமரி, அனேரிமங்கலம் ஆகிய பட்டய பொறிப்புக்களும், ஒட்டக்கூத்தரின் உலா, செயங்கொண்டாரின் கலிங்கத்துப்பரணி ஆகிய இலக்கியச்சான்றுகளும் விஜயாலயன் சங்ககால சோழர் வழிவந்தவன் எனக் குறிப்பிடுகின்றன. இவன் முத்திரையரிடமிருந்து தஞ்சாவூர் பகுதியைப் பல்லவர்களின் துணையுடன் கைப்பற்றித் தஞ்சாவூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்தான். இவ்வெற்றியை நினைவுகூரும் வண்ணம் தஞ்சாவூரில் ஒரு நிசம்பசூதனி (தூர்க்கை) ஆலயத்தைக் கட்டினான். தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள

கும்பகோணத்தில் கி.பி.885 திருப்புரம்பியம் போர் நடைபெற்றபொழுது இவன் சோழ நாட்டை ஆண்டு வந்தான். தான் வயது முதிர்ந்தவனாகக் காணப்பட்டதால் இப்போரில் பங்கெடுக்கத் தனது மகன் ஆதித்தியனை அனுப்பிவைத்தான். தஞ்சாவூர் பகுதியிலுள்ள சில கிராமங்களுக்கு இவனது நினைவாக விஜயலாய சதுர்வேதி மங்கலம், விஜயாலயநல்லூர் என்னும் பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. விஜயாலய சோழேஸ்வரம் ஆலயம் இவனது ஆட்சி காலத்தில் கட்டப்பட்டது ஆகும்.

**முதலாம் ஆதித்தியன் (கி.பி.871-கி.பி.907)**

விஜயாலயனுக்குப்பின் அவனது மகன் முதலாம் ஆதித்தியன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தான். பேராசை மிக்க இவர் ஒரு சிறந்த அரச தந்திரி ஆவார். இவர் ஒரு சிறந்த போர் வீரர். இவரது ஆட்சியில் நிகழ்ந்த ஒரு முக்கிய நிகழ்ச்சி திரும்புரம்பியம் போர் ஆகும். இப்போரில் இவர் பல்லவமன்னன் அபராஜிதனுக்கு ஆதரவாகப் பங்கெடுத்தார். இப்போரில் அபராஜிதன் வெற்றிபெற்றாலும் திறமையற்றவராக விளங்கினான். எனவே ஆதித்தியன் கி.பி.890-ல் பல்லவ மன்னன் அபராஜிதனைத் தோற்கடித்துத் தொண்டை மண்டலத்தைக் கைப்பற்றினான்.

சோழ அரசன் முதலாம் ஆதித்தியன் ஒரு சிறந்த அரசதந்திரி ஆவார். இவர் கொங்குநாட்டையும், கங்கநாட்டின் மேற்குப்பகுதியையும் சேர அரசன் ஸ்தானுரெவி என்பவரின் துணையுடன் கைப்பற்றினார். சேரநாட்டுடன் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்குடன் முதலாம் ஆதித்தியன் தனது மகன் முதலாம் பராந்தனுக்குச் சேர நாட்டு இளவரசியைத் திருமணம் செய்து வைத்தான். முதலாம் ஆதித்தியன் இராஷ்டிர கூடர்களோடும், பல்லவர்களோடும் திருமண உறவுகளை ஏற்படுத்தித் தனது நிலையை உறுதிப்படுத்தினார். இவர் இராஷ்டிரகூட அரசன் இரண்டாம் கிருஷ்ணனின் மகளான இளங்கோபிச்சி என்பவளையும் பல்லவ இளவரசி திருபுவனமகாதேவி என்பவளையும் திருமணம் செய்து கொண்டார். இத்திருமண உறவுகள் மூலமாக இவர் இராஷ்டிரகூடர்களோடும், பல்லவர்களோடும் நல்லுறவை ஏற்படுத்தினார். கங்க நாட்டு மன்னன் இரண்டாம் பிரிதிவிபதியும் சோழ அரசன் திருபுவனமகாதேவி என்பவளையும் திருமணம் செய்து கொண்டார். இத்திருமண உறவுகள் மூலமாக இவர் இராஷ்டிர கூடர்களோடும், பல்லவர்களோடும் நல்லுறவை ஏற்படுத்தினார். கங்க நாட்டு மன்னன் இரண்டாம் பிரிதிவிபதியும் சோழ அரசன் ஆதித்தியனின் மேலாண்மையை ஏற்றுக்கொண்டுத்திறை செலுத்தினான். திருமண உறவுகள், போர் நெறிகள் ஆகியவற்றின் மூலம் விரிவுபடுத்தப்பட்ட சோழ அரசை உறுதிப்படுத்தவும், சட்ட ஒழுங்கை நிலைநாட்டவும் முதலாம் ஆதித்தியன் ஒரு சிறந்த ஆட்சி முறையை அமுல்படுத்தினான்.

முதலாம் ஆதித்தியன் சிவனை வழிப்பட்டான். சைவ மதத்தைப் பரப்பும் நோக்குடன் சிவனுக்காக பல கற்கோயிற்களைக் கட்டினான். அவற்றுள் திருபுரம்பியத்திலுள்ள ஆதித்தியேஸ்வர ஆலயமும், திருவெரும்பூர் ஆலயமும் முக்கியமானவைகளாகும். முதலாம் ஆதித்தியன் சிற்றூர் மாவட்டத்திலுள்ள தொண்டைநாட்டில் கி.பி.907-இல் காலமானார். இவரை அடக்கம் செய்த இடத்தில்

இவரது நினைவாகக் கோதண்டேஷ்வரர் ஆலயத்தை இவரது மகன் முதலாம் பராந்தகன் எழுப்பினான்.

**முதலாம் பராந்தகன் (கி.பி.907 – கி.பி. 955)**

முதலாம்ஆதித்தியனுக்குப்பின் முதலாம் பராந்தகன் பரகேசரி என்ற புனைப்பெயருடன் சோழ அரியணையேறினான். சோழ நாட்டை ஆண்ட முதல் சிறந்த அரசன் இவன் ஆவான். நாற்பத்தெட்டு ஆண்டுகள் ஆட்சி புரிந்த இவன் அண்டை நாடுகளைக் கைப்பற்றி ஒரு பெரிய சோழ பேரரசை உருவாக்கினான்.

**சோழ பாண்டிய போர்**

சோழ நாட்டை விரிவடையச் செய்யவேண்டும் என்ற நோக்குடன் முதலாம் பராந்தகன் பாண்டிய நாட்டின் மீதுபடையெடுத்து அதை ஆண்டுவந்த இரண்டாம் மாரவர்மன் இராஜசிம்கன் என்பவனைத் தோற்கடித்தான். இப்போரில் பராந்தனுக்கு எதிராக இலங்கையை ஆண்டுவந்த ஐந்தாம் காசப்பனின் உதவியைப் பாண்டிய மன்னன் நாடினான். மிகச் சிறந்த போர் வீரனானப் பராந்தகன் கி.பி.915-இல் வெல்லூர் என்னுமிடத்தில் நடந்த போரில் பாண்டிய இலங்கைக் கூட்டுப்படைகளைத் தோற்கடித்தான். இப்போரின் விளைவால் தெற்கு கன்னியாகுமரி வரையிலும் சோழப்பேரரசு பரவியது. கொடும்பாலூர், கிளப்பாலூர் ஆகிய இரு பகுதிகளை ஆண்ட குறுநில மன்னர்கள் முதலாம் பராந்தகனுக்கு உதவிபுரிந்தனர். இவ்வுதவிக்குக் கைமாறாக முதலாம் பராந்தகன் தனது மகனுக்குக் கொடும்பாலூர் தலைவனின் மகளானப் பூதியடிச்சப்பிடாரி என்பவளைத் திருமணம் செய்து வைத்தான்.

இப்போரைப் பற்றி இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. இப்போரில் இலங்கை நாட்டுத்தளபதி கொலை செய்யப்பட்டான் என்றும் அங்கு நிலவிய கொள்ளைநோயின் காரணமாக இலங்கைப்படைகள் போர்க்களத்திலிருந்து பின்வாங்கின எனவும் இலங்கை நாட்டுக் கோவையான மகாவம்சம் குறிப்பிடுகிறது. ஆனால் சோழப்பொறிப்புகள் இப்போரில் பாண்டிய இலங்கைக் கூட்டுப்படையை முதலாம் பராந்தகன் தோற்கடித்தான் எனக் குறிப்பிட்டுள்ளது. தோல்வியடைந்த பாண்டியமன்னன் இரண்டாம் இராஜசிம்கன் இலங்கைக்குத் தப்பியோடி தனது அரச ஆபரண ஆடம்பரப்பொருட்களை இலங்கை அரசனது அவையில் விட்டு விட்டான். எனவே பராந்தகனால் அப்பொருட்களைப் பெறமுடியவில்லை. ஆகையால் அக்கால மரபின்படி அவ்வணிகலன்களைப் பெறாததால் அவனது வெற்றி முழுமையடையவில்லை. ஆனால் இவ்வணிகலன்களை முதலாம் இராஜராஜனுடைய மகனான முதலாம் இராஜேந்திரன் தனது இலங்கைப் படையெடுப்பின்போது கைப்பற்றினான். வெல்லூர் போரில் பராந்தகன் பாண்டிய இலங்கை மன்னர்களைத் தோற்கடித்தால் ‘மதுரைகொண்ட’ ‘மதுரையும் ஈழமும் கொண்ட’ ஆகிய புனைப் பெயர்களைச் சூட்டிக் கொண்டான்.

## சோழ இராஷ்டிரகூடப் போர்

முதலாம் பராந்தகனின் ஆட்சிக் காலத்தில் சோழ இராஷ்டிர கூட விரிசல் அதன் உச்சநிலையை அடைந்தது. சுயநலமே இப்போருக்கு முக்கிய காரணம் ஆகும். இராஷ்டிரகூட மன்னன் இரண்டாம் கிருஷ்ணன் தனது மகள் இளங்கோபிச்சிக்கும் ஆதித்தியனுக்கும் தோன்றிய கண்ணன் தேவனை முதலாம் பராந்தகனுக்குப் பதிலாகப்பட்டத்துக்குக் கொண்டுவர விரும்பினான். இது ஈடோறாமல் போகவே இரண்டாம் கிருஷ்ணன் பராந்தகன் மீது பொறாமை கொண்டான். இவன் பாணர், வடும்பர் ஆகிய குறுநில மன்னர்களின் உதவியுடன் கி.பி.910-இல் சோழ நாட்டின் மீது படையெடுத்தான். இப்போரில் இரண்டாம் கிருஷ்ணனின் கூட்டுப்படையைக் கங்க நாட்டு மன்னன் இரண்டாம் பிரிதிவிபதியின் துணையுடன் முதலாம் பராந்தகன் தோற்கடித்தான். இப்போருக்குப்பின் இரண்டாம் கிருஷ்ணனுக்கு உதவிபுரிந்த பாணர், வடும்பர் ஆகியோர் முதலாம் பராந்தகனால் வன்மையாகத் தண்டிக்கப்பட்டனர். இப்பொருடன் சோழ இராஷ்டிரகூட சண்டை முற்றுப்பெறவில்லை.

இரண்டாம் பிரதிவிபதி இறந்தவுடன் இரண்டாம் புக்கன் கங்கநாட்டு மன்னன் ஆனான். இவன் இராஷ்டிரகூடநாட்டு இளவரசியைத் திருமணம் செய்து அந்நாட்டுடன் நல்லுறவை ஏற்படுத்தினான். எனவே சோழருக்கு கங்க மன்னனின் உதவி கிடைப்பது அரிதாகிவிட்டது. இத்தருணத்தில் பாணர், வகும்பர் ஆகிய குறுநில மன்னர்களும் சோழருக்கு எதிராகப் போர் புரிய தக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்தனர்.

இரண்டாம் கிருஷ்ணனுக்குப்பின் இராஷ்டிரகூட அரியணையேறிய மூன்றாம் கிருஷ்ணன், இரண்டாம் கிருஷ்ணனைப் போன்று சோழர் மீது பகைமை கொண்டு அந்நாட்டின் மீது படையெடுத்தான். இத்தருணத்தில் நாட்டின் வடக்கு எல்லைகளைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்த முதலாம் பராந்தகன் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டான். இரு முக்கிய பகுதிகளான திருநாவலூர், முடியூர் ஆகிய இடங்களுக்கு யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, ஆகியவற்றைத் தனது மகன்களான இராஜாதித்தியன், அரிஞ்சயன் ஆகியோரின் தலைமையில் முதலாம் பராந்தகன் அனுப்பிவைத்தான். இப்போரில் மூன்றாம் கிருஷ்ணன், பாணர், வடும்பர், கங்கநாட்டு மன்னன் இரண்டாம் புக்கன் ஆகியோன் துணையோடு கி.பி.949-இல் தக்கோலம் என்ற இடத்தில் முதலாம் பராந்தகனோடு மோதினான். தக்கோலம் அரகோணத்திற்குத் தென் கிழக்குப் பகுதியில் காணப்படும் ஒரு இடம் ஆகும். இது ஒரு கடுமையான போர் ஆகும். இப்போரில் இரண்டாம் புக்கன் எய்த அம்பு குறிதவறாமல் சோழபட்டத்து இளவரசன் இராஜாதித்தியனைத் தாக்கியது. யானைமீது அமர்ந்து போர் புரிந்து கொண்டிருந்த போது இவன் இறந்ததால் யானைமேல் துஞ்சிய சோழன் என்ற பெயரைப்பெற்றான். இராஜாதித்தியனின் இறப்புப் போரின் தலைவிதியை நிர்ணயித்தது. இது சோழர்களுக்குப் பெரும்அதிர்ச்சியைக் கொடுத்து இராஷ்டிரகூடர்கள் சோழ தலைநகர்

தஞ்சாவூரைக் கைப்பற்றி அதை நிர்மூலமாக்கினார். காஞ்சி, தஞ்சாவூர் உட்பட சோழநாட்டின் பெரும்பகுதி இராஷ்டிரகூடர்களால் கைப்பற்றப்பட்டது.

முதலாம் பராந்தகன் ஒரு சிவபக்தன். சைவத்துறவியான மாணிக்கவாசகர் இவன் காலத்தைச் சார்ந்தவர் ஆவார். இவன் சிவனுக்காகப் பல ஆலயங்களைக் கட்டினான். சிதம்பரத்திலுள்ள நடராஜன் ஆலயத்திற்கு இவர் ஏராளம் வெகுமதிகளை வழங்கி அதில் நடராஜர் வீற்றிருக்கும் இடத்தின் மேல்பகுதியைப் பொன் தகட்டால் வேய்ந்த பொன் வேய்ந்த பராந்தகன் என்ற புனைப்பெயரைப் பெற்றான், மேலும் இவன் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடை மருதூர், திருவாடுதுறை, திருச்சந்துரை ஆகிய இடங்களில் சிவனுக்காக எழுப்பிய ஆலயங்கள் சிறப்பு வாய்ந்தவைகளாகும். இவன் பிராமணர்களை அதிகமாக ஆதரித்ததால் இக்காலத்தில் பிராமணர் செல்வாக்குத் தமிழகத்தில் நிலைகொண்டது.

முதலாம் பராந்தகன் ஒரு சிறந்த ஆட்சியாளராகவும் விளங்கினான். கி.பி.919, 921 ஆகிய ஆண்டுகளில் இவன் உத்தரமெரூர் என்ற இடத்தில் பொறித்தது வைத்த கல்தூண்பொறிப்புகள் அக்கால கிராம சுய ஆட்சியை விளக்குகுகின்றன. நீர்பாசனத்தைப் பெருக்க எழுப்பிய வீராணம் குளமும், கட்டுமன்னார்குடி பட்டணமும் முதலாம் பராந்தகன் காலத்தைச் சார்ந்தவை ஆகும். இவனுக்குப்பின் சோழ நாட்டில் அமைதியின்மை நிலவியது.

**சோழ வரலாறு முதலாம் பராந்தகனுக்குப்பின் முதலாம் இராஜராஜன் வரை**

முதலாம் பராந்தகன் இறந்தது முதல் முதலாம் இராஜராஜன் அரியணை ஏற்வது வரையிலுள்ள சோழ வரலாறு தெளிவுற்றுக் காணப்படுகிறது. இக்காலத்தில் சோழ நாட்டை பல அரசர்களாக ஆட்சிபுரிந்தனர். திறமையற்ற இவ்வரசர்களைப் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன.

**கண்டாராதித்தியன்**

கண்டாராதித்தியன், முதலாம் பராந்தகனின் இரண்டாவது மகன் ஆவான். இவனது மனைவி செம்பியன் மகாதேவி. கண்டாராதித்யனும் அவனது மனைவியும் அரசியலைவிடச் சமயத்துறையில் அதிகக் கவனம் செலுத்தினர். இவன் இயற்றிய திருவிசையப்பா பன்னிரு சைவத்திருமறைகளின் ஒன்பதாவதாக விளங்குகிறது. இவனது மனைவி அறப்பணிகளுக்காகப் பல நன்கொடைகளை வழங்கியதுடன் ஆலயங்கள் எழுப்புவதற்கும் மானியங்களை வழங்கினான். நீண்ட காலம் வாழ்ந்த இவன் முதலாம் இராஜராஜன் காலம் வரையிலும் வாழ்ந்தான். கண்டாராதித்தியன் சமய காரியங்களில் அதிக அக்கரைகாட்டியதால் நிர்வாகத்தில் அதிகக் கவனம் செலுத்தவில்லை. இவனுடைய ஆட்சி காலத்தில் தமிழகத்தில் சைவ மதம் வளர்ச்சியடைந்தது.

### அரிஞ்சயன்

கண்டாராதித்தியனுக்குப்பின் அவனது சகோதரன் அரிஞ்சயன், சோழ அரியணையேறினான். இவன் சிறிது காலமே சோழ நாட்டை ஆட்சிபுரிந்தான். கீழேச் சாளுக்கிய இளவரசி கல்ணாயி என்வளை திருமணம் செய்தார். அருர் என்னுமிடத்தில் மாண்டான். முதலாம் இராஜராஜன் மேல்பாடி என்னுமிடத்தில் அரிஞ்சயேஸ்வரம் என்ற ஆலயத்தை அரிஞ்சயனின் ஞாபகார்த்தமாக எழுப்பினான்.

### இரண்டாம் பராந்தகன்

அரிஞ்சயனுக்குப்பின் அவனது மகன் இரண்டாம் பராந்தகன் சோழ அரியணையேறினான். மிக அழகுடையவனாகக் காணப்பட்டதால் இவன் சுந்தரச்சோழன் எனவும் அழைக்கப்பட்டான். இவனது தாய் கல்யாணி என்பவள் ஆவாள். இவன் வானவன் மகாதேவி என்பவளைத் திருமணம் செய்தான். இரண்டாம் ஆதித்தியன், முதலாம் இராஜராஜன் அருமொழி ஆகியோர் இவரது பிள்ளைகளாவார்கள். இவர்களுள் இரண்டாம் ஆதித்தியன் எதிரிகளால் கொலை செய்யப்பட்டான். தனது மகனின் இறப்பு இரண்டாம் பராந்தகனைப் பெரும் துயரத்திற்குள்ளாக்கியது. இவன் காஞ்சிபுரத்திலுள்ள தனது தங்கமாளிகையில் காலமானான். இவன் இறந்தவுடன் அவனது மனைவி வானவன்மகாதேவி சதி மூலம் தனது உயிரை மாய்த்துக்கெண்டாள். பராந்தகனின் இரண்டாவது மகனான் முதலாம் இராஜராஜன் உத்தமச்சோழனுக்குப்பின் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தான்.

### உத்தமச்சோழன்

உத்தமச்சோழன் கண்டராதித்தியனின் மகன் ஆவான். இவன் நல்லதந்தைக்குப்பிறந்த கெட்ட மகனாவான். பதினைந்து ஆண்டுகள் இவன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தான். இவன் நாணயங்களை வெளியிட்டான். மதராஸ் மியூசியம் சாசனம் இவனது நிர்வாக முறையை விளக்குகின்றது. நாட்டை ஆழதிறமையற்றவனாகவும், தகுதியற்றவனாகவும் விளங்கினாலும் இவனது ஆட்சி காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. இவனது அரசு தெற்கே காஞ்சிபுரம் வரையிலும் வடக்கே திருவண்ணாமலை வரையும் பரவியிருந்தது. இவனுக்கு ஏராளம் மனைவிமார்கள் காணப்பட்டார்கள். இவன் கி.பி.985 வரை ஆட்சிபுரிந்தான். உத்தமச்சோழனுக்குப்பின் சோழநாட்டை இரண்டாம் பராந்தகனின் மகனான முதலாம் இராஜராஜன் ஆட்சிபுரிந்தான்.

### முதலாம் இராஜராஜன் (கி.பி.985 - கி.பி.1014)

சோழப்பேரரசை ஆண்ட மிகச்சிறந்த அரசன் முதலாம் இராஜராஜன் ஆவான். இவன் இரண்டாம் பராந்தகனின் இரண்டாவது மகன். சேரநாட்டு அரசிவானவன் மகாதேவி இவனது தயர் ஆவாள். இவனது இளமைப்பருவத்தைப்பற்றித் திருவலம்காடு சாசனம் எடுத்தியம்புகிறது. இவன் கி.பி.985-ஆம் ஆண்டு ஜுன் மாதம் சோழ அரியணையேறினான். சங்க கால அரசன் கரிகாலனைப்போன்று பிற்காலத்தில் இராஜராஜன் தலைசிறந்து விளங்கி வரலாற்றில் மங்காத

இடத்தைப்பெற்றான். முப்பது ஆண்டுகள் சோழ நாட்டை ஆண்ட இவன் பல போர்களில் வெற்றிபெற்று ஒரு வலிமைமிக்கப்பரந்த சாம்ராஜ்யத்தை ஏற்படுத்தினான். இவனது லிமை மகிக் தரைப்படையும், கடற்படையும் பல போர்களில் வெற்றியைத் தேடிக்கொடுத்தன.

**படையெடுப்புகள்**

முதலாம் இராஜராஜன் ஒரு சிறந்த போர் வீரன் ஆவான். இவனது படையெடுப்புகளைப் பற்றித் திருவலங்காடுச் செப்பேடு விளக்கிக் கூறுகின்றது. இராஜராஜன் அறியணையேறியதும் தனக்கெதிராகச் செயல்பட்ட எதிரிகளை வீழ்த்துவதில் அதிக கவனம் செலுத்தினான். அதற்கென ஒரு சக்திவாய்ந்த படையை உருவாக்கினான். இப்படையால் சேர, பாண்டி, இலங்கை அரசர்களை வென்று தென்னிந்தியாவில் தனது நிலையை உறுதிப்படுத்தினான்.

**சேர நாட்டைக் கைப்பற்றுதல்**

சேர நாட்டை ஆண்டு வந்த பாஸ்கர ரவிவர்மன் என்ற சேர மன்னன் சோழ மன்னனின் தூதுவனைச் சிறைபிடித்து கொடுமைப்படுத்தினான். இதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்ட இராஜராஜன் அந்நாட்டின் மீது படையெடுத்தான். இது இவனது முதல் படையெடுப்பாகும். இவன் சேர நாட்டுக் கடல்படையைத் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள கந்தளூர்ச்சாலை என்னுமிடத்தில் தோற்கடித்தான். கோபிநாத்ராவ் என்பவர் திருவனந்தபுரத்திலுள்ள வலியசாலைதான் அன்று கந்தளூர்ச்சாலை என அழைக்கப்பட்டு வந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். ‘கந்தளூர்ச்சாலை கலம் அறுத்தருளிய’ எனக் கல்வெட்டு குறிப்பிடுகின்ற சொற்றொடர் இது ஒரு கடல்போர் எனச் சுட்டிக்காட்டுகிறது. இப்போரில் பாஸ்கர ரவிவர்மன் திருவடி தோற்கடிக்கப்பட்டான். தோல்வியடைந்த இவன் கொல்லத்திற்குத் தப்பியோடினான். சேரநாடு, சோழருக்குத் திறை செலுத்தும் நாடாக மாறியது. இவ்வெற்றியை நினைவுகூரும் வண்ணம் சிவனுக்கு ஒரு ஆலயத்தை கட்டினான்.

**இலங்கை மீது படையெடுத்தல்**

சேரநாட்டை வென்றபின் சோழ படை இலங்கை நோக்கிச் சென்ற இவ்விலங்கைப்போர் கி.பி.1001க்கும் கி.பி.1004ற்கும் இடைப்பட்ட காலத்தில் நிகழ்ந்திருக்கக் கூடும் என அறிஞர்கள் கருதுகின்றனர். இப்போரில் இலங்கை மன்னன் ஐந்தாம் மகேந்திரன் தோற்கடிக்கப்பட்டான். தோல்வியடைந்த இவன் இலங்கையின் தென்பகுதியில் அடைக்கலம் புகுந்தான். சோழப்படை சுமார் ஆயிரம் ஆண்டுகளாக இலங்கை நாட்டின் தலைநகராக இருந்த அனராதபுரத்தைக் கைப்பற்றி அதை நிர்மூலமாக்கியது. இலங்கையின் வடபகுதியைக் கைப்பற்றிய இராஜராஜன் பொலன் ரூபாலைத் தலைநகராக் கொண்டு ஒரு சோழ மாநிலத்தை ஏற்படுத்தினான். இப்படையெடுப்பைப் பற்றி மாகவம்சம் எத்தகைய தகவலையும் குறிப்பிடவில்லை. முதலாம் இராஜராஜனின் இலங்கைப்படையெடுப்பு ஒரு நிலையான விளைவை ஏற்படுத்தியது என கே.ஏ. நீலக்கண்டசாஸ்திரி குறிப்பிட்டுள்ளார். இவ்வெற்றியை

நினைவுகூர தனது தாயின் நினைவாக வானவன் மகாதேவி ஈஸ்சுரம் என்ற ஆலயத்தைப் பொலன் ரூபாவில் கட்டினான். இது ஒரு இந்து சமய நினைவுச் சின்னமாக இன்றும் இலங்கையில் காணப்படுகிறது. இப்படையெடுப்பு சோழர் கப்பல் படையின் மேலாண்மையை வெளிப்படுத்தியது.

**பாண்டியரை வெல்லுதல்**

அதன் பின் சோழர்கள் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தனர். அப்போது பாண்டிய நாட்டை அமரபுஜன்கா என்ற மன்னன் ஆண்டுவந்தான். தோற்கடிக்கப்பட்ட இவன் சோழரின் மேலாண்மையை ஏற்று கப்பம் கட்டுவதாக உறுதியளித்தான். சேர, பாண்டிய, இலங்கையை வென்ற இராஜராஜன் இவ்வெற்றிகளின் நினைவாக மும்மூடி சோழன் என்ற புனைப்பெயரை ஏற்றுக்கொண்டான்.

**ஊட்டியைத் தாக்குதல்**

முதலாம் இராஜராஜன் சேர, பாண்டிய ஆதிக்கத்தைக் குறைப்பதற்காக உதகமண்டலத்தின் மீது தாக்குதலை மேற்கொண்டான். சோழ மன்னனின் தூதுவனை உதகை மன்னன் நிந்தித்தான் எனவும் இதைத் துடைப்பதற்காக அந்நாட்டின் மீது படையெடுத்து அதைவென்று தீக்கிரையாக்கினான் எனக் கூறப்படுகிறது. இவன் இந்நாட்டை கி.பி.1008-இல் முற்றுகையிட்டான். இப்போரைப் பற்றி கலிங்கத்துப்பரணி திறம்பட எடுத்தியம்புகிறது.

**வடநாடுகளை வெல்லுதல்**

தென்மாநிலங்களைக் கைப்பற்றிய பிறகு முதாலம் இராஜராஜன் வடக்கு நோக்கிப்புறப்பட்டு கங்காவதி நொலம்பாவதி, தொடிகைவதி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினான். இவன் வடக்கு நோக்கிப் படையெடுத்த போது இராஷ்டிரகூட நாடு வீழ்ச்சியுற்று காணப்பட்டது. எனவே வடபகுதிகளை மிக எளிதில் வெல்ல முடிந்தது. இப்போருக்குப்பின்னும் சுமார் நூறு ஆண்டுக்குள் சோழர் ஆதிக்கம் கங்க நாட்டின் மீது செலுத்தப்பட்டுவந்தது.

**மேலைச் சாளுக்கியரை வெல்லுதல்**

சோழர்களின் அண்டை நாடான மேலைச் சாளுக்கிய நாடு சோழ நாட்டின் எல்கைப் பகுதியில் அமைதியின்மையை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. எனவே சோழர்க்ள சாளுக்கியர்களுடன் பகைமை கொண்டனர். முதலாம் இராஜராஜன் மேலைச் சாளுக்கிய நாட்டை ஆண்டுவந்த இரண்டாம் தைலரைத் தோற்கடித்து 150 யானைகளைக் கைப்பற்றினான். தோல்வியடைந்த தைலர் சோழருக்கு ஒழுங்காக் கப்பம் கட்டுவதாக உறுதியளித்தான். ஆனால் தைலருக்குபின் நாட்டை ஆட்சிபுரிந்த சத்தியசிரையன் சோழர்களுக்குக் கப்பம் கட்ட மறுத்துவிட்டான். எனவே ஆத்திரைமடைந்த முதாலம் இராஜராஜன் ஒரு பெரும் படையைத் தனது மகன் இராஜேந்திரனின் தலைமையில் சாளுக்கிய நாட்டிற்கு அனுப்பினான். போரில் வெற்றிபெற்ற இராஜேந்திரன் அந்நாட்டுச் கருவூலத்தைக் கைப்பற்றிக்கொண்டான்.

மேலும் இவன் சாளுக்கிய நாட்டைச் சூறையாடி பிராமணர்கள், குழந்தைகள், பெண்கள் ஆகியோரைக்கொன்று குவித்தான். பெண்களுடைய கற்பு சூறையாடப்பட்டது. சாளுக்கியத்தளபதியாகிய கேசவன் கைதியாகப் பிடிக்கப்பட்டு இழிவுபடுத்தப்பட்டான். இப்போருக்குபின் சோழநாட்டின் வடக்கு எல்கை துங்கபத்திரை நிதியாக மாறியது. இப்போரைப்பற்றித் திருவலங்காடு , கரந்தை ஆகிய செப்பேடுகள் தெளிவுபடுத்துகின்றன.

**கிழேச்சாளுக்கியருடன் தொடர்பு**

முதலாம் இராஜராஜன் தனது ஆட்சி காலத்தில் கீழே சாளுக்கிய நாட்டின் விவகாரத்திலும் தலையிட்டான். அந்நாட்டு மன்னன் தனர்நவா இறந்துபடவே அவனது இருபிள்ளைகளான சக்திவர்மனும், விமலாதித்தியனும் அரியணைக்காகச் சண்டையிட்டனர். முதலாம் இராஜராஜன் இதில் தலையிட்டு சத்திவர்மன் அரியணை ஏற துணைபுரிந்தான். மேலும் சக்திவர்மனின் சகோதரனான விமலாதித்தியனைத் திருப்திப்படுத்த இராஜராஜன் தனது மகளான குந்தவையை அவனுக்குத் திருமணம் செய்து வைத்தான்.இச்செயல்களால் முதலாம் அராஜராஜன் மேலைச் சாளுக்கியரும், கீழேச்சாளுக்கியரும் சோழருக்கு எதிராக ஒன்று சேர்வதைத்தடுத்தான்.

**மாலத்தீவுகளைக் கைப்பற்றுதல்**

அதன்பின் இராஜராஜன் 12,000 தீவுகளைக் கொண்ட மாலத்தீவுக் கூட்டத்தைக் கைப்பற்றினான். இது இவனின் கடைசி படையெடுப்பாகும். இப்போரைப்பற்றி அறிய போதுமான சான்றுகள் இல்லை. மேலும் இராஜராஜன் கலிங்கநாட்டையும், ஆந்திரதேசத்தையும் வென்றான். இந்நாடுகள் சோழர்களுக்கு ஒழுங்காக கப்பம் கட்டிவந்தான்.

கி.பி.1012-ஆம் ஆண்டு முதலாம் இராஜராஜன் தனது மகன் முதலாம் இராஜேந்திரனைச் சோழ நாட்டின் வாரிசாக மூடிசூட்டினான். தென்னிந்திய வரலாற்றில் ஒளிச்சுடராய் விளங்கிய இராஜராஜன் பல்வேறு விருதுகளைப் பெற்றான். அவற்றுள் முக்கியமானவை ‘மும்மூடிச்சோழன்’ ‘ஜெயம் கொண்டான்’, ‘சிவபாத சேகரன்’ என்பவைகளாகும்.

**கலைக்கு ஆற்றிய தொண்டு**

முதலாம் இராஜராஜன் சிறந்த போர் வீரன் மட்டுமல்லாமல் கலை வளர்ச்சிக்காகவும் பாடுபட்டான். இவன் காலத்தில் எழுப்பப்பட்ட ஆலயங்களும், அரண்மனைகளும் இவன் கலைக்கு ஆற்றிய தொண்டினைப் பறை சாற்றுகின்றன. அவற்றுள் மிக முக்கியமானது தஞ்சை பெரிய கோயில் ஆகும்.

**ஆட்சிமுறை**

முதலாம் இராஜராஜன் சிறந்த போர் வீரன் மட்டுமல்லாமல், ஆட்சியாளராகவும் விளங்கினான். இவன் தனது அதிகாரத்தை ஒரு சிறந்த ஆட்சிமுறையின் மூலமாக உறுதிப்படுத்தினான். நிர்வாக வசதிக்காக நாட்டை மண்டலங்களாகவும்,

வளநாடுகளாகவும் பிரித்துத் தனது அதிகாரத்தை அங்கு உறுதிப்படுத்தினான். நிலவரிசை ஒழுங்குபடுத்துவதற்காக நாட்டை அளந்து திட்டபடுத்தி அதன் தன்மைகளுக்கேற்ப வரிகள் நிர்ணயிக்கப்பட்டன. இவன் கி.பி.1000-ல் நாட்டை அளந்ததாகப் பொறிப்புகள் குறிப்பிடுகின்றன. கிராமங்களுக்கும், நகராட்சிகளுக்கும் சுயாட்சியை வழங்கினான். சிறந்தபடையை உருவாக்கி நாட்டைப்பாதுகாத்தான். தனது உரிமையையோ, முயற்சியையோ, பிறர் பறித்துவிடாமல் அவற்றின்மீது தணிக்கையினையும், கட்டுப்பாட்டினையும் செலுத்திய முறை போற்றுதற்குரியது ஆகும்.

இவன் சிவனை வழிப்பட்டான், முப்பது ஆண்டுகள் தென்னிந்தியாவை ஆட்சிபுரிந்து சோழர் ஏகாதிபத்தியத்தை அங்கு நிலை நாட்டினான். தான் ஏற்படுத்திய சோழ சாம்ராஜ்யத்தைத் தனது மகன் முதலாம் இராஜேந்திரனுக்கு விட்டு விட்டு கி.பி.1014-ல் இவ்வுலக வாழ்வை நீத்தான். தென்னிந்திய வரலாற்றில் தன்னிகரற்று விளங்கிய இவன் மகா இராஜராஜன் எனச் சிறப்பிக்கப்பட்டான். “தென்னிந்திய பேரரசை ஏற்படுத்தியவர்களில் தலைசிறந்தவனாக இராஜராஜன் விளங்கினான்.” எனப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி இவனைப் புகழ்ந்து கூறியுள்ளார்.

**கங்கை கொண்ட சோழபுரம் சோழர்கள்**

**முதலாம் இராஜேந்திரன் (கி.பி.1012-கி.பி.1044)**

இராஜராஜனுக்குப்பின் அவனது மகன் இராஜேந்திரன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தான். இவன் தனது தந்தையைப் பின்பற்றி அதே நிர்வாக முறையையும், போர் நெறியையும் கடைப்பிடித்தான். எனவே இவனது ஆட்சி இராஜராஜனின் ஆட்சியின் தொடர்ச்சி எனக் கூறலாம். இவன் 33 ஆண்டுகள் சோழப்பேரரசை ஆட்சி புரிந்தான். தந்தையின் காலத்தில் ஆளுநராகப் பணிபுரிந்து நிர்வாகத்தில் தேர்ச்சி பெற்று விளங்கினான். இவரது ஆட்சியின் ஆரம்ப காலத்தை நிர்ணயிப்பதில் சில கருத்துவேறுபாடுகள் நிலவுகின்றன. முதலாம் இராஜராஜன் கி.பி.985 முதல் கி.பி.1014 வரை ஆட்சிபுரிந்தான் என வரலாறு கூறுகிறது. ஆனால் இராஜேந்திரன் கி.பி.1012 முதல் கி.பி.1014 வரை ஆட்சிபுரிந்தான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தந்தையும் மகனும் சேர்ந்து நாட்டை கி.பி.1012 முதல் கி.பி.1044 வரை ஆட்சிபுரிந்தனர். மரபுப்படி இளவரசராகப் பணிபுரிந்த காலத்தையும் ஆட்சியில் சேர்த்துக் கொள்ளும் வழக்கம் நிலவியதால் முதலாம் இராஜேந்திரன் கி.பி.1012 முதல் கி.பி. 1044 வரை ஆட்சிபுரிந்தான் எனக் குறியிடப்பட்டுள்ளது. அரியணையேறியதும் முதலாம் இராஜேந்திரன் மேற்கொண்ட போர் நெறிகள் இவனது பெயரை மிக உன்னத நிலைக்கு உயர்த்தியது. இவனதுப் படையெடுப்புக்களை அதன் தன்மையைப் பொறுத்து மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்.

**தென்னிந்தியாவை வெல்லுதல்**

முதலாம் இராஜேந்திரன் தனது தந்தையைப் போன்று போர் நெறிகளை மேற்கொண்டு பல நாடுகளைக் கைப்பற்றினான். இவனது முதல் படையெடுப்ப இலங்கையை முற்றுகையிடுதல் ஆகும். அதற்கென ஒரு சிறந்த கப்பல்படையை உருவாக்கினான். இவன் கி.பி.1017-ல் இலங்கை மீது படையெடுத்து அதைக் கைப்பற்றித் தனது ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டினான். இப்போரில் இலங்கை மன்னன் 5-ஆம் மகேந்திரன் சிறைபிடிக்கப்பட்டதோடு அவரது உரிமைகளும் கவரப்பட்டன. கைதியாகத் தமிழ்நாட்டிற்குக் கொண்டுவரப்பட்ட மகேந்திரன் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப்பின் சோழ நாட்டில் உயிர் நீத்தார். இவன் இலங்கையில் சிவனுக்காகவும், விஷ்ணுவுக்காகவும் பல ஆலயங்களை எழுப்பினான். இவன் காலத்தில் இலங்கை ஒரு சோழ மாநிலமாக மாற்றப்பட்டு ஆளுநரால் ஆட்சிபுரியப்பட்டுவந்தது. பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப்பின் இலங்கையை மகேந்திரனின் மகன் காஸ்கயப்பன் திரும்பக் கைப்பற்றினான் எனச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

இலங்கையைக் கைப்பற்றியபின் சோழர் படை பாண்டிய நாட்டை முற்றுகையிட்டது. இப்போரைப் பற்றித் திருவலங்காடு செப்பேடு குறிப்பிடுகிறது. போரில் தோல்வியடைந்த பாண்டிய மன்னன் தப்பியோடி மலேயாமலையில் அடைக்கலாம் புகுந்தான். பாண்டிய அரசைச் சோழப்பேரரசுடன் இணைத்து தனது மகன் இராஜாதிராஜனைச் சோழ பாண்டியன் என்ற விருதுடன் அப்பகுதியின் ஆளுநராக்கினான்.

திருவலங்காடு செப்பேட்டில் இவன் சேரநாட்டையும் வென்றான் எனக் குறிப்பிட்டுள்ளது. முதலாம் இராஜராஜன் ஆட்சி காலத்தில் சேர நாடு முழுமையாக கைப்பற்றப்பட்டு தங்களது ஆதிக்கத்தை முழுமையாக அங்குச் செயல்படுத்திவந்தமையால் மீண்டும் சேர நாட்டைக் கைப்பற்ற வேண்டிய தேவை இல்லை என அறிஞர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

அதன் பின் முதலாம் இராஜேந்திரன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டை ஆண்டுவந்த இரண்டாம் ஜெயசிம்கனைத் தோற்கடித்து கப்பம் கட்டுமாறு கட்டாயப்படுத்தப்பட்டான். இப்போரினைப் பற்றி இரண்டுவிதமான கருத்துக்கள் நிலவுகின்றன. சாளுக்கிய கல்வெட்டுக்கள் ஜெயசிம்மனுடைய படை சோழப்படையைத் தோற்கடித்தது எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் தமிழ்பொறிப்புக்கள் சோழப்படை சாளுக்கியப் படையைத் தோற்கடித்து புறமுதுகுகாட்டி ஓடவைத்தன எனக் கூறுகின்றது. இப்போரில் அடைந்த வெற்றியின் நினைவாக முதலாம் இராஜேந்திரன், ஜெயம் கொண்டான் என்ற புனைப் பெயரைச் சூட்டிக்கொண்டான்.

## வட இந்திய படையெடுப்பு

முதலாம் இராஜேந்திரனின் சாளுக்கியப்படையெடுப்பின் போது கலிங்கமன்னன் சோழருக்கெதிராகச் செயல்பட்டான். இதனால் ஆத்திரமடைந்த சோழ மன்னன் கலிங்கநாட்டின் மீது படையெடுத்தான். அதன் பின் சோழப்படை கலிங்க நாடு வழியாகக் கங்கைப்பகுதியை அடைந்தன. இப்படையெடுப்பின்போது இராஜேந்திரன் தன் படையின் பொறுப்பைத் தனது தளபதியான தந்ததாதன் (Dhandanatha)என்பவரிடம் ஒப்படைத்தான். இப்படையெடுப்பிற்கான காரணங்களைப்பற்றி வரலாற்று ஆசிரியர்கள் பல்வேறு கருத்துக்களைக் குறிப்பிடுகின்றனர். கே.ஏ. நீலகண்டசாஸ்திரி, இதைப்படையெடுப்பு எனக் குறிப்பிடுவதை விட கங்கைப் பகுதிக்கு புனித யாத்திரிகை மேற்கொண்டான் என்பது பொருத்தமானது எனதான் எழுதிய "சோழர்கள்" என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார் எனவே கங்கையாற்று நீரைக் கொணர்வதுதான் இப்படையெடுப்பின் முக்கிய நோக்கமம் ஆகும். இருப்பினும் இப்படையெடுப்பிற்கு அரசியல் காரணமும் பின்னணியாக இருந்தது. சோழப் பேரரசனின் வலிமையை வடஇந்திய அரசர்களுக்கு உணர்த்த வேண்டும் என்பதற்காகப் இப்படையெடுப்பு மேற்கொள்ளப்பட்டதாகவும் அறிஞர்கள் கருதுகின்றனர். இப்படையெடுப்புச் சுமார் இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாக நடைபெற்றது. சோழப்படையானது கோதாவரி, ஒரிசா ஆகிய பகுதிகளை ஆண்டுவந்த அரசர்களைத் தோற்கடித்து விட்டு மேற்கு வங்காளத்தை (கங்கை) அடைந்தது. அப்பொழுது வங்காளத்தைப் பால அரசனான முதலாம் மகிபாலர் ஆட்சி புரிந்துவந்தார். சோழப்படை மகிபாலரைத் தோற்கடித்து கங்கைப் பகுதியைக் கைப்பற்றியது. இவ்வெற்றியை நினைவு கூரும் வண்ணம் முதலாம் இராஜேந்திரன் தனது தலைநகரில் கங்கை நீரைப்பயன்படுத்தி தூண் ஒன்றை எழுப்பினான். இது இப்படையெடுப்பின் வெற்றியின் சின்னமாக விளங்கியது. மேலும் இவ்வெற்றியைப் போற்றும் சின்னமாக விளங்கியது. மேலும் இவ்வெற்றியைப் போற்றும் வகையில் இராஜேந்திரன் 'கங்கை கொண்டான்' என்ற புனைப்பெயரைச் சூட்டியதோடு, கங்கை கொண்ட சோழபுரம் என்ற ஒரு புதிய அழகிய தலைநகரையும் கட்டினான்.

## கடல் கடந்து படையெடுத்தல்

கி.பி.1025-ஆம் ஆண்டு முதலாம் இராஜேந்திரன் கடாரத்திற்கும் ஸ்ரீவிஜயாவிற்கும் எதிராகக் கடல் படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டான். கடாரம் எங்கு இருந்தது என்பதை அறுதியிட்டுக் கூறக்கூடிய சான்றகள் எதுவுமில்லை. இருப்பினும் இது மலேயா தீபகர்ப்பத்தின் ஒரு பகுதியாக இருந்திருக்கக்கூடும் என அறிஞர்கள் கருதுகின்றனர். சுமத்திராவிலுள்ள ஒரு சிறிய அரசு ஸ்ரீவிஜயா ஆகும். இப்படையெடுப்பின்போது ஸ்ரீவிஜயா கடாரத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டிருந்தது. இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையே நடைபெற்ற கடல் வணிகம் ஸ்ரீவிஜயா அரசின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. சீனாவோடு நெருங்கிய நேரடித் தொடர்பை மேற்கொள்ள முற்பட்ட சோழர்கள் ஸ்ரீவிஜயாவின் எண்ணங்களுக்கு இசைந்தே அந்த

உறவை நடத்தவேண்டியதிருந்தது. இக்கட்டுப்பாட்டைச் சோழ அரசன் முதலாம் இராஜேந்திரன் விரும்பவில்லை. மேலும் கடல் கடந்து ஒரு திக்விஜயத்தை நடத்த வேண்டும் என்ற ஆசையும் இப்படையெடுப்பிற்கு மற்றொரு காரணமாகும். இதன் விளைவால் இருநாட்டிற்குமிடையே இருந்த நல்லுறவு முறிந்தது. முதலாம் இராஜேந்திரனின் கடல் கடந்த படையெடுப்பு அவனுக்கு முழு வெற்றியைக் கொடுத்தது. போரில் ஸ்ரீவிஜயா அரசன் சிறைபடுத்தப்பட்டான். ஸ்ரீவிஜயா, கடாரம் உட்பட பல இடங்கள் சோழர்கள் வசமாயின. இறுதியில் அவ்வரசர்கள் சோழ மேலாண்மையை ஏற்றவுடன் நாடு அவர்களுக்கேத்திரும்பிக்கொடுக்கப்பட்டது. இவ்வெற்றியை நினைவு கூரும் வண்ணம் முதலாம் இராஜேந்திரன் 'கடாரம் கொண்டான்' என்ற புனைப்பெயரைச் சூட்டிக்கொண்டான்.

**கலகங்களை ஒடுக்குதல்**

முதலாம் இராஜேந்திரனின் ஆட்சியின் கடைசி காலத்தில் பாண்டிய நாடு, சேர நாடு, இலங்கை, சாளுக்கியப் பகுதிகள் ஆகியவை சோழருக்கெதிராகக் கலகம் செய்தன. இக்கலகங்களை முதலாம் இராஜேந்திரன் தனது மக்ள முதலாம் இராஜாதிராஜனின் துணையுடன் ஒடுக்கினான். ஆனால் மேலைச்சாளுக்கிய மன்னன் முதலாம் சோமேஸ்வரன் சோழரின் மேலாண்மையை உதறி எறிந்துவிட்டு வேங்கியைக் கைப்பற்றியதோடு சோழ நாட்டையும் முற்றுகையிடத் திட்டமிட்டான். எனவே ஆத்திரமடைந்த சோழ அரசன் மேலைச்சாளுக்கிய நாட்டின் மீது படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டான். இப்படையெடுப்பின் போது இராஜேந்திரனின் மகள் இராஜாதிராஜன் படையை நடத்திச்சென்றான். அந்நாட்டைத் தோற்கடித்துக் கல்யாணியைச் சூறையாடினான். மேலும் அங்கு காணப்பட்ட துவாரபாலகரின் உருவச்சிலையைச் சோழ நாட்டிற்குக் கொண்டுவந்தான். இப்படையெடுப்பின் போது மைசூரின் சில பகுதிகளும் சூறையாடப்பட்டன. சாளுக்கியப்போரில் சோழர்கள் தமிழ்மரபை மீறி வெறிச்செயல்களில் ஈடுபட்டனர். பசுக்களைக் கவர்ந்ததோடு, பெண்களது கற்பையும் சூறையாடி, குழந்தைகளையும், பெண்மணிகளையும் கொன்று குவித்தனர். பிற்காலத்தில் வரலாற்று ஆசிரியர்கள் இச்செயலை மகி வன்மையாகக் கண்டித்தனர்.

முதலாம் இராஜேந்திரன் ஒரு சிறந்த போர் வீரர் மட்டுமல்லாமல், திறமைவாய்ந்த ஆட்சியாளராகவும் விளங்கினார். சுமார் முப்பத்திரண்டு ஆண்டுகள் தன் அதிகாரத்தைப் பயன்படுத்திச் சோழநாட்டின் பெருமையை உயர்த்தினார். முதலாம் இராஜேந்திரன் 'மும்முடி கொண்டான்', 'கடாரம் கொண்டான்', 'கங்கை கொண்டான்', 'பண்டிதன்', 'ஜெயம் கொண்டான்' ஆகிய விருதுகளைப் பெற்றிருந்தான். இவன் கலையையும், கல்வியையும் ஆதரித்தான். பாசன வசதிக்காகக் கால்வாய்கள் பலவற்றை வெட்டினான். சீனாவுடன் நல்லுறவு கொண்டிருந்தான். குறிப்பாக இவன் சிறந்த தந்தைக்குப் பிறந்த சிறந்த மகனாக விளங்கினான். கி.பி.1044 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தான்.

**கலைக்கு ஆற்றிய தொண்டு**

முதலாம் இராஜராஜனைப்போன்று கலை வளர்ச்சிக்காகப் பாடுபட்டான். இவன் கட்டிய ஆலயங்கள், அரண்மனைகள், பட்டணங்கள் ஆகியவை இக்கால கலை வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன.

**கல்வி வளர்ச்சி**

இவன் காலத்தில் கல்வி வளர்ச்சியுற்றது. கல்வி வளர்ச்சிக்காக மிகுதியான நன்கொடைகளை வழங்கினான்.

**பின் தோன்றல்கள்**

முதாலாம் இராஜேந்திரனும் முதலாம் இராஜாதிராஜன், இரண்டாம் இராஜேந்திரன், முதலாம் வீர இராஜேந்திரன் என்ற மூன்று ஆண்பிள்ளைகளும் அமங்கதேவி என்ற மகளும் இருந்தனர். அமங்கதேவி கீழே சாளுக்கிய நாட்டை ஆண்டு இராஜராஜனுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்பட்டாள். இவர்களுக்குப் பிறந்த முதலாம் குலோத்துங்கன் பிற்காலத்தில் சோழ நாட்டை ஆண்டான் என்பது குறிப்பிடத்தக்கது. முதலாம் இராஜாதிராஜன் கி.பி.1044-ஆம் ஆண்டு சோழ அரியணையேறினான். இலங்கை, சாளுக்கிய அரசுகள் மீது தாக்குதலை மேற்கொண்டான். சாளுக்கிய நாட்டைக்கைப்பற்றி அதன் தலைநகரைச் சூறையாடினான். கி.பி.1052-ஆம் ஆண்டு கோப்பம் என்ற இடத்தில் சாளுக்கிய மன்னன் முதலாம் சோமேஸ்வரனுடைன் புரிந்த போரில் படுகாயமுற்று இறந்தான்.

முதலாம் இராஜாதிராஜனுக்குப்பின் அவனது சகோதரனான இரண்டாம் இராஜேந்திரன் சோழ அரசை கி.பி.1052 முதல் கி.பி.1064 வரை ஆட்சிபுரிந்தான். இவனும் சாளுக்கியர்களோடு போர் புரிந்தான். இரண்டாம் இராஜேந்திரனுக்குப்பின் அவனது சகோதரனான முதலாம் வீர இராஜேந்திரன் சோழ நாட்டை ஆண்டான். இவன் சாளுக்கிய நாட்டின் மீது படையெடுத்துச் சென்று அந்நாட்டை ஆண்டுவந்த விஜயாதித்தியன் என்பவனைத் தோற்கடித்தான். இவன் கி.பி.1070 ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தான். வீர இராஜேந்திரனுக்குப்பின் அவனது மகன் ஆதிஇராஜேந்திரன் சோழநாட்டை ஆண்டான். ஆட்சிக்கு வந்த சில மாதங்களுக்குள் நோய் வாய்ப்பட்டு இறந்தான். ஆதி இராஜேந்திரனுக்குக் குழந்தைகள் இல்லாத காரணத்தால் விஜயாலன் நேர்வழி வந்த சோழ வேந்தர்களின் ஆட்சி இவனுடன் முற்றுப்பெற்றது.

**சாளுக்கியச் சோழர்கள்**

**முதலாம் குலோத்துங்கன் (கி.பி.1070 – கி.பி.1120)**

குலோத்துங்கன் சோழ அரசை ஆண்ட முதல் சாளுக்கியச்சோழன் ஆவான். இவனுடைய தந்தை சாளுக்கிய நாட்டைச் சார்ந்த முதலாம் இராஜராஜன், தாய் முதலாம் இராஜேந்திரனின் மகன் அமங்கதேவி. சாளுக்கிய அரசன் முதலாம் இராஜராஜன் சோழ அரசன் முதலாம் இராஜராஜனிடமிருந்து வேறுபடுத்திக்காட்ட

சாளுக்கிய அரசன் முதலாம் இராஜராஜ நரேந்திரன் என அழைக்கப்பட்டான். தனது தந்தை கி.பி.1060 ஆம் ஆண்டு இறந்துபடவே முதலாம் குலோத்துங்கன் கீழே சாளுக்கிய நாட்டின் அரியணையேறினான். சோழ அரசன் ஆதி இராஜேந்திரன் வாரிசு இன்றி இறக்கவே சோழ நாட்டை ஆட்சிபுரிய அரசனைத் தெரிவு செய்வதால் சிக்கல்கள் பல எழுந்தன. இச்சூழ்நிலையில் நாட்டில் அராஜகம் தலைதூக்கியது. எனவே நாட்டைப்பாதுகாக்க எண்ணி தலைநகரிலுள்ள அறிஞர்கள் ஒன்றாககக் கூடி ஆலோசித்து சோழ நாட்டோடு நெருங்கிய தொடர்புடைய முதலாம் குலோத்துங்கனைச் சோழ நாட்டை ஆட்சிபுரிய அழைப்பதற்கு முடிவெடுத்தனர்.

**குலோத்துங்கன் அரியணையேறும் முன் சோழ நாட்டின் நிலைமை**

ஆதி இராஜேந்திரனுக்குப்பின் சோழ நாட்டை ஆட்சி புரிய வாரிசு இல்லாமல் போகவே நாட்டில் அராஜகம் தலைதூக்கியதாகக் கலிங்கத்துப்பரணியின் ஆசிரியர் ஜெயங்கொண்டார் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் பிராமண வழிபாட்டு முறை கைவிடப்பட்டது எனவும், மக்கள் அறுவகை அறிவியலை மறந்தனர் எனவும், ஆலயங்களின் மந்திரம் ஓதுவது நிறுத்தப்பட்டது எனவும், ஜாதி முறையில் கலப்பு நிலவியது எனவும், ஆலயங்களிலுள்ள தெய்வங்கள் தங்கள் முக்கியத்துவத்தை இழந்தன எனவும், பெண்கள் தங்களது கற்பை இழந்து அவல நிலையில் காணப்பட்டனர் எனவும் வர்ணித்துள்ளார். இச்சூழ்நிலையில் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றக் குலோத்துங்கன் நாட்டில் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டினான்.

முதலாம் குலோத்துங்கன் கி.பி.1070-ஆம் ஆண்டு ஜீன் திங்கள் ஒன்பதாம் நாள் சோழநாட்டு அரசனாக முடிசூட்டினான். ஒரே வேளையில் சாளுக்கிய நாட்டையும் சோழ நாட்டையும் ஆட்சிபுரிந்ததால் இவன் சாளுக்கியச் சோழன் என அழைக்கப்பட்டான். சோழ நாட்டை ஆண்ட இவன் அந்நாட்டு வரலாற்றில் ஒரு புதிய சகாப்தத்தை ஏற்படுத்தினான். இவன் ஐம்பது ஆண்டுகள் சோழநாட்டை ஆண்டான். தனது ஆட்சிகாலத்தில் தேவையற்ற போர்களைத் தவிர்த்து திறமையாக நாட்டை ஆட்சிபுரிந்து அமைதியை நிலைநாட்டினான்.

**மேலைச் சாளுக்கியருடன் போர்**

சோழ நாட்டின் முதல் எதிரி மேலைச்சாளுக்கிய நாட்டை ஆண்ட ஆறாம் விக்கிரமாதித்தியன் ஆவான். இவன் கீழே சாளுக்கியரும் சோழரும் இணைவதை விரும்பவில்லை. எனவே முதலாம் குலோத்துங்கன் சோழ நாட்டின் அரியணையேறுவதை எதிர்த்தான். மேலும் அந்நாட்டின் மீது படையெடுக்கவும் திட்டமிட்டான். இச்சூழ்நிலையில் விக்கிரமாதித்தியனின் மூத்த சகோதரன் இரண்டாம் சோமேஸ்வரன் நாட்டின் சில பகுதிகளைத் தனக்குத் தரவேண்டும் என கட்டாயப்படுத்தினான். விக்கிரமாதித்தியன் இதற்கு இணங்காததால் இருவருக்குமிடையே சண்டை ஏற்பட்டது. இச்சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகக் எண்ணிய முதலாம் குலோத்துங்கன் விக்கிரமாதித்தியனுக்கு எதிராக இரண்டாம்

சோமேஸ்வரனுக்கு உதவிபுரிந்தான். தனது நிலையை உறுதிப்படுத்த எண்ணிய விக்கிரமாதித்தியன் யாதவ தேவகிரி ஆகிய அரசுகளுடன் கூட்டை ஏற்படுத்திச் சோழ நாட்டின் மீது படையெடுத்தான். கி.பி.1076-ஆம் ஆண்டு கோலார் என்ற இடத்தில் நடைபெற்ற போரில் முதலாம் குலோத்துங்கன் விக்கிரமாதித்தியனின் படையைத் தோற்கடித்தான். தோல்வியடைந்த விக்கிரமாதித்தியன் துங்கபத்திரைப் பகுதிக்குப்பின் வாங்கினான். சோழப்படை துங்கபத்திரை நதிவரை அவனைப் பின்தொடர்ந்தது. அதன்பின் குலோத்துங்கன் தான் துணைபுரிந்த இரண்டாம் சோமேஸ்வரனை வென்று அவனது பகுதிகளையும் சோழநாட்டுடன் இணைத்தான். சோழப்படையானது சாளுக்கிய தலைநகரைச் சூறையாடி அங்கிருந்த செல்வங்களைக் கொள்ளையடித்தது. சோழத் தலைநகரில் குவித்தது. ஏராளம் யானைகளும் அங்கிருந்து பிடித்து வரப்பட்டன.

**பாண்டியருடன் போர்**

பாண்டிய நாடு முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோரின் ஆட்சி காலத்தில் ஒரு சோழ மாநிலமாக விளங்கியது. இவர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆளுநர்கள் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அதை ஆட்சிபுரிந்தனர். ஆனால் ஆதிஇராஜேந்திரனின் இறப்பிற்குப்பின் ஏற்பட்ட அமைதியின்மையை தங்களுக்குச் சாதகமாக் கொண்டு பாண்டிய நாடு விடுதலை அடைந்தது. அந்நாடு ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஐவரால் ஆளப்பட்டுவந்தது. பாண்டிய நாட்டில் தனது ஆதிக்கத்தை மீண்டும் உறுதிப்படுத்த எண்ணிய முதலாம் குலோத்துங்கன் கி.பி.1081-ஆம் ஆண்டு ஒரு படையை அங்கு அனுப்பினான். இப்படை பாண்டிய நாட்டை ஆண்டுவந்த ஐவரையும் தோற்கடித்தது. அந்நாட்டைச் சோழ அரசோடு இணைத்துக்கொண்டது.

**சேர நாட்டை வெல்லுதல்**

சோழ நாட்டில் நிலவிய அமைதியின்மையைப் பயன்படுத்திச் சேரநாடும் சுய ஆட்சியை ஏற்படுத்திக்கொண்டது. எனவே முதலாம் குலோத்துங்கன் சோழப்படையைச் சேர நாட்டிற்கும் அனுப்பினான். சோழப்படை நாகர்கோவிலின் ஒரு பகுதியான கோட்டாற்றில் நடைபெற்ற போரில் சேரப்படையைத் தோற்கடித்தது. கோட்டாறு தீக்கிரையாக்கப்பட்டது. அதன்பின் விழிஞத்திலும், திருவனந்தபுரத்திற்கு அருகாமையிலுள்ள சாலையிலும் நடைபெற்ற போர்களிலும் சேரப்படையை நிர்மூலமாக்கின. தோல்வியடைந்த சேர மன்னன் குலோத்துங்கனுக்குத் திறை செலுத்துவதாக வாக்களித்தான். எனவே அந்நாடு அவனிடமே திருப்பி அளிக்கப்பட்டது. ஆனால் கிளர்ச்சிகள் மீண்டும் தோன்றாது தடுப்பதற்காகச் சோழப்படையொன்று அங்கு நிறுத்தப்பட்டது.

**இலங்கையை இழத்தல்**

சோழநாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை இலங்கையையும் விடுதலை அடைவதற்குத் துண்டியது. கி.பி.1073-இல் முதலாம் விஜயபாகு என்ற மன்னன்

அனுராதபுரத்தைக் கைப்பற்றி இலங்கையை ஆட்சிபுரிந்தான். விஜயபாகுவைத் தண்டிப்பதற்காகவும், இழந்த பகுதியை மீண்டும் கைப்பற்றுவதற்காவும் முதலாம் குலோத்துங்கன் படையொன்றை அங்கு அனுப்பினான். போரில் தோல்வியடைந்த விஜயபாகு பின்வாங்கி மறைவிடத்தில் பதுங்கி கொண்டான். அங்கிருந்து கொண்டே தந்திரமாகப் படைகளை அனுப்பி அனுராதபுரம், பொலனரூபா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினான். சோழப்படை படுத்தோல்வியடைந்தது. இலங்கை நாடு சோழர் பிடியிலிருந்து நிரந்தரமாக விடுபட்டது. கி.பி.1088-ஆம் ஆண்டு முதலாம் குலோத்துங்கன் விஜயபாகுவுடன் அமைதியை ஏற்படுத்திக் கொண்டு தனது மகள் சுத்தமல்லியார் என்பவளை இலங்கை இளவரசன் வீரபெருமாள் என்பவருக்கு மணம் முடித்துவைத்தான். இத்திருமண உறவு சோழருக்கும் இலங்கைக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தியது.

**கலிங்கப்போர்**

முதலாம் குலோத்துங்கன் கலிங்க நாட்டிற்கெதிராக இரண்டு படைகளை அனுப்பினான். கலிங்க நாட்டின் தென்பகுதியை ஆண்டுவந்த நரலோகவீரன் சோழருக்கு எதிராக கலகம் செய்தான். இக்கலகத்தை ஒடுக்குவதற்காக கி.பி.1096-ஆம் ஆண்டு குலோத்துங்கன் முதல் படையை அனுப்பினான். இப்படை அந்நாட்டை ஆண்டு நரலோக வீரனைத் தோற்கழத்தது. தோல்வியடைந்த நரலோக வீரன் சோழரின் மேலாண்மையை ஏற்றுத்திறை செலுத்துவதாக வாக்களித்தான். கலிங்கத்துப்பரணியில் குறிப்பிடும் கலிங்கபோர் குலோத்துங்கனின் இரண்டாவது போர் ஆகும். இப்போர் கி.பி.1110-இல் நடைபெற்றதாகக் குலோத்துங்கனின் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. இப்போரைப் பற்றிக் கலிங்கத்துப்பரணி மிகத் திறம்பட எடுத்தியம்புகிறது. வடகலிங்கத்தை ஆண்டுவந்த அனந்தவர்மன் சோழருக்குக் கப்பம் கட்ட மறுத்தான். இது இப்போருக்கு முக்கிய காரணமாகும். ஆனந்த வர்மனுக்குப் பாடம் புகட்ட எண்ணிய குலோத்துங்கன் தனது தளபதியான கருணாகரத் தொண்டைமானின் தலைமையில் படை ஒன்றை அங்கு அனுப்பினான். காஞ்சியிலிருந்து அணிவகுத்துச் சென்ற சோழப்படை பாலாறு, தென் பெண்ணை, கோதாவரி ஆகிய நதிகளைக் கடந்து கலிங்க நாட்டை அடைந்து அந்நாட்டின் முக்கிய நகரங்களைச் சூறையாடின. சோழநாட்டுப்படையைத் துரத்தியடிக்குமாறு ஆனந்தவர்மன் தனது படைக்கு ஆணைபிறப்பித்தான். இரு நாட்டுப்படைகளும் கடுமையாகப் போர் புரிந்தன. கி.பி.1112-ஆம் ஆண்டில் நடைபெற்ற மிகக் கடுமையானப் போரில் எதிர்த்து நிற்க இயலாத கலிங்கப்படை தோல்வியடைந்து பின் வாங்கின. வெற்றி பெற்ற சோழப்படை யானைகள், குதிரைகள், மகளிர், கொள்ளைப் பொருட்கள் ஆகியவற்றைக் கைப்பற்றிக் கொண்டு சோழ நாடு திரும்பியது.

**வட பகுதிகளை இழத்தல்**

முதலாம் குலோத்துங்கன் தனது ஆட்சியின் இறுதி காலத்தில் வடபகுதியிலுள்ள சோழ மாநிலங்களாகிய கங்காபதி, நுலம்பாவதி, வேங்கி

ஆகியவற்றை இழந்தான். கி.பி.1116-இல் கொய்சள மன்னன் விஸ்மவர்தனன் சோழரிடமிருந்து கங்காவதியைக் கைப்பற்றினான். சோழ நாட்டை முற்றுகையிட்ட இவன் இராமேஸ்வரம் வரையிலும் படையெடுத்து நாட்டைச் சூறையாடி பெரும் சேதத்தை ஏற்படுத்தினான். கி.பி.1118-இல் கல்யாணியை ஆண்ட ஆறாம் விக்கிரமாதித்தியன் சோழரின் ஆதிக்கத்திலிருந்து வேங்கியைக் கைப்பற்றினான். நாடுகள் விடுதலை அடையத் தொடங்கவே சோழ அரசு சிறுகிக்கொண்டே சென்றது.

**வெளிநாட்டுத் தொடர்பு**

முதலாம் குலோத்துங்கன் சோழ நாட்டின் வடபகுதியோடும் அயல் நாட்டோடும் நெருங்கிய உறவை ஏற்படுத்தியிருந்தான். இவன் கடாரத்தை நிர்மூலமாக்கினான் எனக் கூறப்பட்டாலும் அதை எவ்வித ஆதாரமும் உறுதிப்படுத்தவில்லை. இருப்பினும் குலோத்துங்கனுக்கும் கடாரத்து மன்னனுக்குமிடையே நல்லுறவு நிலவியது. கி.பி.1090-இல் கடாரத்தை ஆண்டு வந்த அரசன் ஒரு தூதுகுழுவைச் சோழநாட்டிற்கு அனுப்பினான். இக்குழு குலோத்துங்கனிடம் நாகப்பட்டிணத்தில் புத்த விக்கிரகம் அமைக்க தானமாகக் கொடுக்கப்பட்ட இடத்திற்கு வரிவிலக்கு அளிக்குமாறு வேண்டியது. மேலும் இக்காலத்தில் அயல்நாட்டு வணிகம் சிறப்புற்று விளங்கியது. வணிகத்தின் பொருட்டு ஸ்ரீவிஜயா மன்னன் தூத்துக்குழு ஒன்றைத் தமிழகத்திற்கு அனுப்பினான். அதேபோன்று, முதலாம் குலோத்துங்கன் கி.பி.1077-இல் 72 வணிகர்களைக் கொண்ட தூதுக்குழு ஒன்றைச் சீனாவுக்கு அனுப்பினான். இதன் விளைவால் இரு நாட்டிற்குமிடையே வணிகம் சிறப்புற்றது. இவ்வுறவு முதலாம் குலோத்துங்கனின் ஆட்சி காலம் முழுவதும் நீடித்தது.

**சீர்திருத்தங்கள்**

முதலாம் குலோத்துங்கன் தன் ஆட்சிகாலத்தில சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டான். சுமார் 50 ஆண்டுகள் சோழநாட்டை ஆட்சிபுரிந்த இவன் பல்வேறு மக்கள் நலத்திட்டங்களை அமுல்படுத்தினான். வணிகத்தை ஊக்குவிக்க எண்ணிய இவன் அதற்குத் தடையாக இருந்த வரிகளை நீக்கினான். இதனால் வணிகம் பெருகியது. எனவே இவன் 'சுங்கம் தவிர்த்த சோழன்' என்றச் சிறப்புப் பெயரைப் பெற்றான். மேலும் இவன் கி.பி.1086-லும் 1110-லும் சோழமண்டலத்தை அளந்து திட்டப்படுத்த ஆணைகளைப் பிறப்பித்தான். எனவே குலோத்துங்கன் 'நிலமளந்த பெருமாள்' என்ற புனைப்பெயரைப் பெற்றான். சான்றோர்களையும், சிவனடியார்களையும் இவன் ஆதரித்தான். கலிங்கத்துப்பரணியை இயற்றிய ஜெயங்கொண்டார், பெரியபுராணத்தை இயற்றிய சேக்கிழார், இந்துமதத்துறவியான இராமானுஜார் ஆகியோர் இவன் காலத்தைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். குலோத்துங்கன் சிவனை வழிப்பட்டான். தெய்வபக்தியின் காரணமாக திருநீற்றைத் தனது உடம்பில் அதிகமாகப் பூசும் பழக்கமுடையவன். எனவே 'திருநீற்றுச்சோழன்' என்றப் பெயரைப் பெற்றான். இவன்

சிவனிடம் அதிக அக்கரை கொண்டாலும், பிறசமயத்தவரையும் ஆதரித்தான். மன்னர் குடியில் கட்டப்பட்ட திருமால் கோயிலும், நாகப்பட்டினத்தில் எழுப்பப்பட்ட பௌத்தப்பள்ளியும் இவனது சமய சகிப்புத்தன்மைக்குத்தக்க சான்றுகளாகும். இந்து கோயில்களுக்கு நிலங்களைத் தானமாக வாங்கினான். இசையில் அதிக ஆர்வம் கொண்டான். தமிழ், தெலுங்கு, ஆரிய மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தான். இவனது தலைநகரம் கங்கை கொண்ட சோழபுரம் ஆகும். குலோத்துங்கனது ஆட்சிகாலத்தில் சோழ சாம்ராஜ்யம் அதன் பரப்பளவில் சிறியதாகக் குறைக்கப்பட்டாலும் அதற்குப் புத்துயிர் ஊட்டிய பெருமை இவனைச்சாரும். கி.பி.1122-இல் இவ்வுலக வாழ்வை நீத்தான்.

**முதலாம் குலோத்துங்கனுக்குப்பின் சோழ நாடு**

**விக்கிரமச் சோழன் (கி.பி.1120 – 1133)**

முதலாம் குலோத்துங்கனுக்குப்பின் அவனது மகன் விக்கிரமச்சோழன் கி.பி.1120-இல் அரியணையேறினான். இவன் கி.பி.1127-ஆம் ஆண்டு வேங்கிமீது படையெடுத்து சோழர் ஆதிக்கத்தை அங்கு நிலைநாட்டினான். கங்காவதியையும் இவன் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. சிதம்பரத்திலுள்ள நடராஜர் ஆலயத்திற்கு ஏராளம் நன்கொடைகளை வழங்கினான்.

**இரண்டாம் குலோத்துங்கன் (கி.பி.1136 – கி.பி.1150)**

விக்கிரமச்சோழனுக்குப்பின் இரண்டாம் குலோத்துங்கன் சோழநாட்டை ஆட்சிபுரிந்தான். இவன் சிதம்பரம் ஆலயத்திற்கு ஏழு அடுக்குகளைக் கொண்ட கோபுரம் ஒன்றை அதன் நுழைவாயிலில் கட்டினான். இதைத்தவிர ஆலயத்தின் உட்பகுதியிலுள்ள கோபுரம், பெண் தெய்வங்களுக்குத் தனி ஆலயம் ஆகியவற்றைக் கட்டினான். இவ்வாறு சிதம்பரம் ஆலயம் இவனால் அழகுபடுத்தப்பட்டது. இராமானுஜரைச் சோழ நாட்டிலிருந்து வெளியேற்றினான். எனவே இவன் கிருமிகந்த சோழன் என்ற பெயரைப் பெற்றான். இவனது காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. ஏராளம் தமிழ் இலக்கியங்கள் தோன்றின. இவன் ஒட்டக்கூத்தர், சேக்கிழார், கம்பன், புகழேந்தி ஆகிய புலவர்களை ஆதரித்தான்.

**இரண்டாம் இராஜராஜன் (கி.பி.1150 – கி.பி.1173)**

இரண்டாம் குலோத்துங்கனுக்குப்பின் இரண்டாம் இராஜராஜன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தான். இவனது ஆட்சிகாலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. இவனது ஆட்சிக்காலத்தில் குறுநில மன்னர்களின் செல்வாக்குப் பெருகியது. இவர் இரண்டாம் இராஜதிராஜனிடம் நாட்டின் பொறுப்பை கி.பி.1163-இல் ஒப்படைத்தான். கி.பி.1173-இல் இவ்வுலக வாழ்வை நீத்தான்.

**இரண்டாம் இராஜாதிராஜன் (கி.பி.1173 – கி.பி.1178)**

இவன் இரண்டாம் இராஜராஜனின் பேரன் ஆவான். இவனது ஆட்சிக்காலத்தில் பாண்டி நாட்டில் பராக்கிரமப்பாண்டியனுக்கும் குலசேகரப்பாண்டியனுக்குமிடையே அரசுரிமைப்போர் ஏற்பட்டது. இதில் இராஜாதிராஜன் குலசேகரப்பாண்டியனைத் தோற்கடித்து இறுதியில் இவன் கொலை செய்யப்பட்டான். ஆனால் இராஜாதிராஜன், குலசேகரப்பாண்டியன் ஆகியோரின் நட்பு நீண்ட நாள் நீடிக்கவில்லை. இருவருக்குமிடையே பகைமை ஏற்படவே, சோழ அரசன் இராஜாதிராஜன் பாண்டிய நாட்டிற்கு ஒரு படையை அனுப்பிக் குலசேகரனைப் பதவி இறக்கம் செய்துவிட்டு பராக்கிரம பாண்டியனின் மகன் வீரபாண்டியனைப் பாண்டிய அரியணையில் அமர்த்தினான்.

**மூன்றாம் குலோத்துங்கன் (கி.பி.1178 – கி.பி.1218)**

சோழ நாட்டை ஆண்ட கடைசி சிறந்த அரசன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான். சோழப்பேரரசைச் சிதையாமல் பாதுகாத்தப் பெருமை இவனைச்சாரும். பாண்டிய அரசனை ஆண்ட வீரபாண்டியன் சோழர் அளித்த உதவியை மறந்துவிட்டு இலங்கை வேந்தனோடு உறவை ஏற்படுத்தினான். இதனால் ஆத்திரமடைந்த மூன்றாம் குலோத்துங்கன் ஒரு படையை அனுப்பி வீரபாண்டியனைப் பதவியிலிருந்து இறக்கிவிட்டு விக்கிரமப்பாண்டியன் என்பவரைப் பதவியில் அமர்த்தினான். குறிப்பாக இக்காலத்தில் பாண்டியர் செல்வாக்குப் பெருகியது. மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் சோழ நாட்டைத் தாக்கிச் சிதம்பரம் வரை முன்னேறினான். பாண்டியரின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத குலோத்துங்கன் தனது மகன் மூன்றாம் இராஜராஜனுடன் கொய்சால நாட்டிற்குத் தப்பியோடினான். கொய்சால அரசனின் தலையீட்டால் சோழருக்கும் பாண்டியருக்குமிடையே ஒரு உடன்படிக்கை ஏற்பட்டது. இதன் விளைவால் மாறவர்மன் சுந்தரப்பாண்டியன் தான் கைப்பற்றிய நாட்டைச் சோழருக்குத் திருப்பிக் கொடுத்தான். இவன் இவ்வாறு செய்ததால் 'சோழ நாடு வழங்கி அருளிய பாண்டியன்' என்ற விருதைப் பெற்றான். மூன்றாம் குலோத்துங்கனும் கலையை வளர்த்தான். திருப்புவனம் ஆலயம் இவன் காலத்தில் கட்டப்பட்டது ஆகும். இவன் கலைஞர்களையும் புலவர்களையும் ஆதரித்தான். பெரியபுராண ஆசிரியர் சேக்கிழார் இவனது அமைச்சர் ஆவார் நாயன்மார்களின் வரலாற்றை எழுதுவதற்கு இவர் சேக்கிழாருக்குப் பெரும் உதவி புரிந்தார்.

மூன்றாம் குலோத்துங்கனுக்குப்பின் சோழ நாட்டை மூன்றாம் இராஜராஜன், மூன்றாம் இராஜேந்திரன் ஆகியோர் ஆட்சி புரிந்தனர். இக்காலத்தில் அதிகச் செல்வாக்குப்பெற்றுவிளங்கிய பாண்டியர்கள் இவர்களைத் தங்களது சிற்றரசர்களாக்கிக் கப்பம் கட்டுமாறு கட்டாயப்படுத்தினர்.

## ஆட்சி முறை

பிற்காலச் சோழர்கள் நான்கு நூற்றாண்டுகளுக்கு மேல் தமிழகத்தை ஆட்சிபுரிந்தனர். பரந்த சோழ சாம்ராஜ்யம் மிகத்திறம்பட ஆட்சிபுரியப்பட்டு வந்தது. இக்காலத்தில் இரண்டு விதமான ஆட்சிமுறை நடைமுறையிலிருந்தது. சோழ நாட்டை ஆண்ட அரசனிடம் அனைத்து அதிகாரங்களும் குவிந்து காணப்பட்டன. இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தி அரசன் மத்திய அரசை ஆட்சிபுரிந்து வந்தான். ஆனால் கிராமங்களில் தொன்று தொட்டு நிலவிவந்த மக்களாட்சிமுறை சிறந்து விளங்கியது. மத்திய அரசு கிராம நிர்வாகத்தில் தலையீடு செய்யவில்லை. குறிப்பாக, இக்காலத்தில் மத்தியில் கொடுங்கோல் ஆட்சியும் கிராமங்களில் மக்களாட்சியும் சிறப்புற்று விளங்கின. சோழர் காலத்து ஆட்சிமுறையை அறிவதற்கு இலக்கியங்களும், பொறிப்புக்களும் சான்றுக்களாகப் பயன்படுகின்றன.

### மத்திய ஆட்சி முறை (Central Administration)

#### அரசன்

சோழர்காலத்தில் அரசாட்சி நிலவியது. அரசன் மத்திய அரசை ஆட்சிபுரிந்தான். அரசுரிமை பாரம்பரீகமானது. நாட்டை ஆண்ட அரசன் தனது மூத்த மகனை வாரிசாக நியமனம் செய்தான். இவன் யுவராஜா என அழைக்கப்பட்டான். இவனுக்கு உயர் கல்வியும், சிறந்த இராணுவப்பயிற்சியும் அளிக்கப்பட்டன. அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குக் கல்வி கற்பித்த ஆசிரியர் ‘இராஜ குரு’ என அழைக்கப்பட்டார். யுவராஜாக்கள் பொதுவாக மரிநலங்களில் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டு அதைத் திறம்பட ஆட்சிபுரிந்து வந்தனர். மூத்த மகன் திறமையுற்றவனாக இருந்தால் திறமையுடையவனுக்கு இவ்வுரிமை வழங்கப்பட்டது. நாட்டை ஆட்சி புரிய நேரடி வாரிசு இல்லாமலிருந்தால் சோழ நாட்டோடு நெருங்கிய தொடர்புடைய ஒருவரைத் தத்து எடுக்கின்ற முறையும் நிலவியிருந்தது. இதற்கு முதலாம் குலோத்துங்கன் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். நாட்டை ஆண்ட மன்னனிடம் அதிகாரங்கள் குவிந்து காணப்பட்டாலும் அவன் கொடுங்கோல் மன்னனாகச் செயல்படவில்லை. அன்று நடைமுறையிலிருந்த சட்டங்களை அரசன் மதித்து அவற்றிற்குக் கட்டுப்பட்டிருந்தான். அக்காலத்தில் சட்டம் அரசனைக் கட்டுப்படுத்தியதே தவிர அரசன் சட்டத்தைக் கட்டுப்படுத்தவில்லை. நாட்டை ஆட்சிபுரிந்த மன்னன் மக்களின் தேவைகளை நேரில் கண்டறிய பயணங்களை அடிக்கடி மேற்கொண்டான். அரச முகாம்கள் ஆலயங்களிலும், மண்டபங்களிலும் நடைபெற்றன. அரசர்கள் ஆயல வழிபாட்டிற்கும் அதிக முக்கியத்துவம் அளித்தனர். இவர்கள் சிதம்பரம், திருவாரூர், காஞ்சிபுரம் ஆகிய ஆலயங்களில் நடைபெற்ற திருவிழாகளில் பங்கெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சோழ அரசர்கள் மக்களின் நலனின் அதிக அக்கரை காட்டினர். மக்களும் அரசனைக் கடவுகளின் பிரதிநிதியாக நினைத்து அவனை வணங்கினர். மக்கள் மன்னைச் ‘சக்கிரவர்த்திகள்’ அல்லது ‘திரிபுவன சக்கரவர்த்திகள்’ என மதிப்புடன்

அழைத்தனர். ஆனால் சோழர் கால ஆவணங்கள் அரசனை ‘உடையார்’ எனக் குறிப்பிடுகிறது. சோழ அரசர்கள் இராஜகேசரி, பரகேசரி, சிவபாத சேகரன், மும்முடி கொண்டான், ஜெயம் கொண்டான், கடாரம் கொண்டான், ஆகிய புனைப் பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். இப்புனைப்பெயர்கள் நாட்டை ஆண்ட அரசர்களின் அதிகாரத்தையும், நிலையையும் உயர்த்தின. அரண்மனையில் தங்கிய அரசன் ஆடம்பர வாழ்க்கை நடத்தினான். அரசனின் அரண்மனை தலைநகரின் மத்தியில் அமைந்திருந்தது. இவர்கள் நிர்வாக வசதிக்காகத் திருவாரூர், சிதம்பரம், காஞ்சிபுரம் ஆகிய இடங்களிலும் அரண்மனைகளை அமைத்திருந்தனர்.

நாட்டை ஆண்ட அரசன் மிக உயர்வாகக் கருதப்பட்டான். அரசன் பெற்றிருந்த அரண்மனைகளும், அழகான அந்தப்புரங்களும், அளித்த வெகுமதிகளும், நடத்திய வேள்விகளும், படைபலமும், கொண்டிருந்த இரதமும், பணியாட்களும் அவனது நிலையை உயர்த்தின. தலைநகரான தஞ்சாவூரில் காணப்பட்ட அரண்மனையில் 3000 நாட்டிய பெண்களும், பணியாட்களும் மன்னனுக்குப் பணிவிடை செய்து வந்தனர். நாட்டை ஆண்ட அரசன் ஆலயங்களுக்கும் பிராமணர்களுக்கும் நிலங்களைத் தானமாகத் வழங்கினான். கலையை ஆதரித்தனர். ஏராளம் ஆலயங்கள் கட்டப்பட்டன. ஆலயங்களுக்கு மன்னனின் பெயர்கள் சூட்டப்பட்டன. ஆலயங்களில் காணப்பட்ட அரசன், அரசியர் ஆகியோரின் உருவங்களை மக்கள் வணங்கினர். குறிப்பாக, தஞ்சாவூர் ஆலயத்தில் வைக்கப்பட்டிருந்த இரண்டாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன் அவனது மனைவி லோக மகாதேவி ஆகியோரின் உருவங்களை மக்கள் வணங்கினர். மேலும், கண்டராதித்தியனின் மனைவியான செம்பியன் மகாதேவியின் உருவத்தையும் மக்கள் வணங்கினர்.

போரினால் கைப்பற்றப்பட்ட பரந்த பேரரசை சோழ அரசர்கள் ஆட்சிபுரிந்தனர். அமைச்சர்கள் அரசனுக்கு நிர்வாகத்தில் உதவிபுரிந்தனர். அக்காலத்தில் காணப்பட்ட அமைச்சரவை ஒரு ஆலோசனைக் குழுவாகச் செய்யப்பட்டது. அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் அரசனைப்பின்தொடர்ந்தனர். எனவே இவர்களுக்கு ‘உடன் கூட்டத்தார்’ என்று பெயர். இவ்வாலோசனைக் குழுவில் பொருந்தாரம், சிறுதாரம் என்ற இரு அமைப்புக்கள் காணப்பட்டன. அதைத் தற்போதுள்ள உயர் அதிகாரிகள், அவர்களின் கீழ் பணிபுரிகின்ற பிற அதிகாரிகள் ஆகியோரோடு ஒப்பிடலாம். அமைச்சர்கள் பரம்பரை பரம்பரையாக அரசனுக்கு ஆலோசனை வழங்கினர். அமைச்சர்களும், உயர் அதிகாரிகளும் பெரும்பாலும் பிராமணர்களாகக் காணப்பட்டனர். இவர்களுக்கு மாதச் சம்பளம் அளிக்கப்படவில்லை. ஆனால் இவர்களின் தகுதிகளுக்கேற்ப, நிலம் தாணமாக வழங்கப்பட்டது. அமைச்சரவையில் காணப்பட்ட அமைச்சர்களின் எண்ணிக்கை நிரந்தரமானது அல்ல. பதிமூன்றாம் நூற்றாண்டைச் சார்ந்த சீனப்பயணி ஒருவர் சோழ அமைச்சரவையில் நான்கு அமைச்சர்கள் காணப்பட்டனர் எனக் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக, அமைச்சர்களும், அதிகாரிகளும் அரசனின்

ஆணைகளை அமுல்படுத்துதல், மேற்பார்வையிடுதல், ஒழுங்குபடுத்துதல் ஆகிய பணிகளில் ஈடுபட்டனர்.

**வருவாய்**

அரசு வருவாய்க்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தது. அன்னிய படையெடுப்பிலிருந்து நாட்டைப் பாதுகாக்கவும், குடிமக்களின் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டவும் அரசனுக்கு வருவாய் தேவைப்பட்டது. சோழப் பேரரசின் வருவாயில் பெரும்பகுதி நிலவரிமூலமாகக் கிடைத்தது. இந்நிலவரி 'எணிக்கடன்' எனப்பட்டது. நிலவரியை நிர்ணயிப்பதற்கு வசதியாக நிலத்தை அளந்து திட்டப்படுத்தி அதன் தன்மைக்கேற்றவாறு பல பிரிவுகளாகப் பிரித்தனர். குறிப்பாக, இக்காலத்தில் விளச்சலில் 1/6 பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. சில சமயங்களில் இவ்வரி உயர்த்தப ்படுவதுமுண்டு. முதலாம் இராஜராஜன் சோழ நாட்டை ஆட்சிபுரிந்தபோது போர்செலவு அதிகமானதால் நிலவரிசை 1∴3 ஆக உயர்த்தினான். இவ்வரி பணமாகவும், பொருளாகவும் செலுத்தப்பட்டது. ஆலயங்களுக்கும், பிராமணர்களுக்கும் அளிக்கப்பட்ட நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. வரியைப் பிரிப்பதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் வரியைப் பிரிக்கக்கொடுமையான முறைகளைக் கையாண்டனர். வரி கட்டத்தவறியோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இதற்குப் பெண்களும் விதிவிலக்கல்ல. இரண்டாம் இராஜராஜனின் ஆட்சிகாலத்தில் ஒரு வருவாய் அதிகாரியின் கொடுஞ்செயலால் பெண்ணொருத்தி விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டாள் என அக்காலச் செய்திகள் குறிப்பிடுகின்றன. வரிக்கொடுமை தாங்காது மக்கள் இடம் விட்டு இடம் பெயர்ந்ததாக ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. நீதிமன்றங்களிலிருந்தும் அரசுக்கு வருவாய் கிடைத்தது. இதற்குத் 'தண்டப்பணம்' என்று பெயர். இவற்றை தவிர அரசுக்குச் சுரங்கங்கள், காடுகள், உப்பளங்கள் ஆகியவற்றிலிருந்தும் வருவாய் கிடைத்தன. இக்காலத்தில் அயல் நாட்டு வாணிகம் சிறப்புற்று விளங்கியது. ஏற்றுமதி இறக்குமதிப் பொருட்கள் மீது பிரிக்கப்பட்ட வரிக்குச் 'சுங்கம்' எனப் பெயர். போர்க்காலத்தில் அபகரித்த செல்வங்களும், கொள்ளையடித்த பொருட்களும், அரசனுக்குக் கிடைத்த கப்பத்தொகையும், அன்பளிப்புகளும் அரசனின் வருவாயாகக் கருதப்பட்டன. வருவாயின் ஒரு பெரும்பகுதி அரசனின் சொந்த செலவிற்காகவும், இராணுவப் பராமரிப்புக்காகவும், ஆலயங்கள், அரண்மனைகள் கட்டுவதற்காகவும் செலவிடப்பட்டன. சாலைகள் அமைத்தல், குளங்கள், கால்வாய்கள் வெட்டுதல், சமயப்பணி, கல்வி வளர்ச்சி, மருத்துவ வசதி போன்றவற்றிற்கும் அரசு செலவு செய்தது. நிதித்துறையில் கட்டுப்பாடு, தணிக்கை ஆகிய முறைகளைப் பின்பற்றினர். இம்முறை நிதிகையாடலைப் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தியது.

## நிதி

சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்ட அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. நீதியை நிலை நாட்டுவதில் கிராமங்கள் முக்கிய பங்கு வகித்தன. கிராம மன்றங்கள் சிவில், கிரிமினல் (குற்றவியல்) வழக்குகளை விசாரிப்பதற்குத் தேவையான அதிகாரங்களைப் பெற்றிருந்தன. தலைநகரில் காணப்பட்ட மன்னனின் நீதிமன்றம் பெரிய வழக்குகளை விசாரித்தது. இதற்கு 'தர்மாசனம்' என்று பெயர். சட்டத்துறையில் தேர்ச்சிபெற்ற பிராமணர்கள் நீதி வழங்குவதில் அரசனுக்குத் துணைபுரிந்தனர். பொதுவாக, முதல் கட்டத்தில் வழக்குகள் கிராம மன்றங்களில் விசாரிக்கப்பட்டன. கிராம நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு திருப்தி அளிக்கவில்லையென்றால், மேல் மன்றங்களுக்கு முறையீடு செய்யப்பட்டன. சிறிய குற்றங்களுக்குச் சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டன. ஆலயங்களில் காணப்பட்ட சிலைகளையும், ஆபரணங்களையும் திருடியவர்களுக்குக் கடும் தண்டனை விதிக்கப்பட்டது. இக்குற்றவாளிகளின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டு அவை பொது ஏலத்திற்கு விடப்பட்டன. இதில் கிடைத்த வருவாய் அரச கருவூகத்தில் செலுத்தப்பட்டன. இதைப்போன்ற திருட்டு, கலப்படம், ஏமாற்றுதல் ஆகிய குற்றங்களுக்கும் கொடிய தண்டனைகள் அளிக்கப்பட்டன. இவர்கள் கிராமமன்றங்களின் உறுப்பினர்களாக நிற்க அனுமதிக்கப்படவில்லை. கொலைக்குற்றத்திற்குரிய தண்டனையும் கடுமையாக இருந்தது. கொலை செய்தவன் கொலை செய்யப்பட்டவன் ஞாபகார்த்தமாக ஒரு அணையா விளக்கை அருகாமையிலுள்ள ஆலயத்தில் இயற்றி வைக்க வேண்டும். இதற்காக 60 பசுக்கள் அல்லது 96 ஆடுகள் ஆலயத்திற்கு அளிக்குமாறு கட்டாயப்படுத்தப்பட்டான். அரசனுக்கும், அரச குடும்பத்திலுள்ளவர்களுக்கும் எதிரான வழக்குகளை அரசனே விசாரித்தான். குற்றவாளிகளிடமிருந்து பெருந்தொகை தண்டனையாகக் குற்றவாளிகள் மரத்தில் கட்டிவைக்கப்பட்டு அவர்களுக்கு ஐம்பது அல்லது அதற்கு மேல் அடிகள் கம்பால் கொடுக்கப்பட்டன. அரச துரோகக் குற்றங்கள் மன்னனின் நீதிமன்றங்களில் விசாரிக்கப்பட்டு கொலைத் தண்டனை அளிக்கப்பட்டன. குறிப்பாக இவர்கள் யானையால் மிதியுண்டு கொலை செய்யப்பட்டனர். பொதுவாக விசாரணையின் பொது சாட்சிகள் மட்டுமன்றி பிரதிவாதிகளையும் விசாரித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

## படை

சோழர்கள் ஒரு நிலையானப் படையை வைத்திருந்தனர். இது அரசனின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. சோழப்படை பல அணிகளைக் கொண்டது. முதலாம் இராஜராஜன் காலத்தில் இப்படையில் 30 அணிகள் காணப்பட்டன. என வெங்கையா தான் வெளியிட்ட 'சோழப் பொறிப்புக்கள்' என்ற நூலில் கூறிப்பிட்டுள்ளார். ஒவ்வொரு அணிக்கும் தானாக இயக்கும் உரிமை அளிக்கப்பட்டிருந்தது. சில அணிகள் தங்களது பெயரில் ஆலயங்களைக் கட்ட நிதி உதவிகளை அளித்தன. சில அணிகள் தங்களின் இடத்தின் பெயரால்

அழைக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று 'பாண்டிப் படை' ஆகும். சோழப்படையில் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, கப்பல் படை ஆகிய பிரிவுகள் காணப்பட்டன. சோழப்படைக்குத் தகுந்த பயிற்சி அளிக்கப்பட்டு கட்டுப்பாடுடன் காணப்பட்டது. குதிரைப்படைக்குத் தேவையான குதிரைகள் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. பொலனருபாலிலுள்ள விஜயபாகுவின் கல்வெட்டுக்கள் சோழப்படையில் வாள் வீரர்களுக்கும், வில் வீரர்களுக்கும் பல தனிப்பிரிவுகள் காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளன. சோழப்படையிலுள்ள மூன்று பிரிவுகளிலும் ஆயிரக்கணக்கான படை வீரர்கள் காணப்பட்டார்கள். இப்படையானது சோழ நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்டன. பல்வேறு பகுதிகளில் காணப்பட்ட இப்படைகளுக்குக் கடகங்கள் என்று பெயர். சோழப்படையில் யானைகள் முக்கியப் பங்குவகித்தன. சோழர்கள் தங்கள் நாட்டின் மேற்குப் பகுதியைக் கைப்பற்றுவதற்கு 60,000 போர் யானைகளைக் பயன்படுத்தியதாகச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

பொதுவாக, படையானது பிற நாடுகளைக் கைப்பற்றுவதற்கும், புரட்சிகளை ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்பட்டன. படையில் பாரம்பரீகப்படை வீரர்கள், கூலிப்படையினர், சாதாரண போர்வீரர்கள் ஆகியோர் காணப்பட்டனர். பாரம் பரீகப்படை வீரர்கள் மன்னனின் பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு அரசு கருவூலத்திலிருந்து ஊதியம் வழங்கப்பட்டது. படையில் பணிபுரிந்த 'கைகோலர்கள்' இப்பிரிவைச் சார்ந்தவர்கள் ஆவார்கள். சாதாரண படை வீரர்களுக்கு 'நாட்டுப்படை' அல்லது 'ஜனப்படை' என்று பெயர். இது உள்நாட்டுப் பாதுகாப்பிற்குப் பயன்படுத்தப்பட்டது. கூலிப்படை தேவைப்படும் பொழுது மட்டும் உருவாக்கப்பட்டது. சோழர்காலத்தில் ஆலயங்களைப் பாதுகாக்கவும் படைகள் பயன்படுத்தப்பட்டன. இப்படையின் பராமரிப்புக்கானத் தொகையை ஆலயங்கள் அரசிடமிருந்து மானியங்களாகப் பெற்றுக்கொண்டன. படைத் தளபதிக்குச் 'சேனாபதி' அல்லது 'மாதண்டநாயகர்' என்று பெயர். சிறிய போர்களுக்குச் சேனாபதிகளும் பெரிய போர்களுக்கு அரசர்களும் தலைமைதாங்கினர். படைவீரர்கள் எவ்வாறு தெரிவு செய்யப்பட்டார்கள் எனக் கல்வெட்டுக்கள் குறிப்பிடவில்லை.

சோழர்களுக்கு ஒரு நிலையான கப்பல்படையும் காணப்பட்டது. இக்கப்பல்படை சோழர்கள் தங்களது ஆதிக்கத்தை இலங்கை, கடாரம், ஸ்ரீவிஜயா, மாலத்தீவுகள், மலைநாடு ஆகியவற்றில் நிலைநாட்ட முக்கிய பங்கு வகித்தன. கப்பல்படையில் கப்பல்கள் பயன்படுத்தப்பட்டன. கப்பல் கட்டுதல் தமிழ் மக்களின் முக்கிய தொழில் ஆகும். போர் காலங்களில் கப்பல் படை பிற படைகளுக்குப் பக்கபலமாகவும் செயல்பட்டன. கப்பல்களின் போக்குவரத்திற்குத் துறைமுகங்கள் பயன்படுத்தப்பட்டன.

போர்க்காலங்களில் படைவீரர்கள் பொதுமக்களுக்குக் கொடுந்துன்பங்களை விளைவித்தனர். கற்பழித்தல், நிந்தித்தல், கொலைசெய்தல், கொள்ளையடித்தல், சூறையாடுதல், சொத்துக்களை நாசமாக்குதல் ஆகிய செயல்களைப் போர்க்காலங்களில் செய்தனர். போரில் வெற்றியடைய அனைத்து நுணுக்கங்களும்

கையாளப்பட்டன. போர்க் கைதிகள் இழிவாக நடத்தப்பட்டனர். பொதுவாக, நாட்டின் பெருமை, படையின் வலிமையைச் சார்ந்தது.

**மாநில ஆட்சி முறை**

படையெடுப்பால் விரிவுபடுத்தப்பட்ட சோழப்பேரரசு நிர்வாக வசதிக்காகப் பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இம்மாநிலங்களுக்கு 'மண்டலங்கள்' என்று பெயர். முதலாம் இராஜராஜனின் ஆட்சிக்காலத்தில் இப்பேரரசு எட்டு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றை நிர்வகிக்க ஆளுநர்கள் நியமிக்கப்பட்டனர். பொதுவாக, இளவரசர்கள் அல்லது அரசனின் நெருங்கிய உறவினர்கள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். மேலும் மண்டலம் வளநாடுகளாகவும், வளநாடு நாடுகளாகவும், நாடு கூரம்களாகவும் அல்லது கோட்டங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கோட்டமும் தன்னாட்சி பெற்ற பல கிராமங்களைக் கொண்டிருந்தன.

எழுதப்பட்ட அரசியலமைப்பு அக்காலத்தில் காணப்படாததால் மாநிலத்தை ஆட்சிபுரிந்த ஆளுநர்கள் தங்களது விருப்பத்திற்கேற்றவாறு ஆட்சிபுரிந்தனர். எனவே மாநில நிர்வாகம் அதை ஆட்சிபுரிந்த ஆளுநர்கள் விருப்புவெறுப்புக்கு ஏற்றவாறு மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்டுக்காணப்பட்டது. பெரும்பாலான மாநிலங்கள் போர் நெறியால் கைப்பற்றப்பட்ட பகுதிகளாகையால், புரட்சி ஏற்படாமல் தடுப்பதும், வரியைப் பிரிப்பதும் ஆளுநர்களின் முக்கிய நோக்கமாய் இருந்தது.

**கிராம அல்லது தல நிர்வாகம்**

சோழ அரசர்கள் கிராம நிர்வாகத்திற்கு முன்னுரிமை அளித்தனர். செங்கல்பட்டு மாவட்டத்தில் உத்தரமேரூர் என்ற இடத்தில் காணப்படுகின்ற முதலாம் பாராந்தகனின் இரண்டு கல்தூண் கல்வெட்டுக்கள் சோழரின் தல நிருவாகத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. சுயாட்சி பெற்று விளங்கிய கிராமங்கள் ஜனநாயக முறைப்படி நிர்வகிக்கப்பட்டு வந்தன. கிராமங்களுக்கு அதிக அதிகாரம் வழங்கப்பட்டிருந்தன. உத்தரமேரூர் கல்வெட்டுக்கள் கிராமங்களில் காணப்பட்ட ஊர், சபை, நகரம் ஆகிய மன்றங்களின் செயல்முறைகளைப் பற்றி விளக்குகின்றன. ஊர் என்பது பொது மக்களின் மன்றம் ஆகும். கிராமத்தில் வாழ்ந்த நில உரிமையுடையவர்கள் இதில் உறுப்பினர்களாக இருந்தனர். சபை என்ற மன்றத்தில் பிராமணர்கள் அதிகமாக பங்கு வகித்தனர். வணிகர்களும் வியாபாரிகளும் நகரத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். இம்மன்றங்கள் ஒன்றுக்கொன்று அருகாமையில் செயல்பட்டு வந்தன. சில முக்கிய தீர்மானங்கள் எடுப்பதற்குமுன் இம்மன்றங்கள் கலந்து ஆலோசித்தன.

கிராம நிர்வாகம் மக்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பல குழுக்களால் கவனிக்கப்பட்டு வந்தன. இக்குழு உறுப்பினர்கள் ஜனநாயக முறைப்படி மக்களால் தெரிவு செய்யப்பட்டனர். திட்டங்களைச் சிறந்த முறையில் அமுல்படுத்த வசதியாகக் கிராமம் பல வார்டுகள் அல்லது வாரியம் அல்லது குடம்புகளாகப்

பிரிக்கப்பட்டிருந்தன. வார்டுகளின் எண்ணிக்கையும், அதில் தெரிவு செய்யப்பட்ட ஊறுப்பினர்களின் எண்ணிக்கையும், அதில் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையும் கிராமத்தின் பரப்பளவு, மக்கள் தொகை ஆகியவற்றிற்கு ஏற்ப மாறுபட்டு காணப்பட்டன. பொதுவாக ஒரு கிராமத்தில் 30 வார்டுகள் காணப்பட்டன. உத்தரமேரூர் கல்வெட்டு கிராம சபைகளுக்குத் தெரிவு செய்யப்படுகின்ற உறுப்பினர்களுக்கு இருக்கவேண்டிய தகுதிகளைக் குறிப்பிட்டுள்ளது.

**தகுதிகள்**

தேர்தலில் போட்டியிட விரும்புகின்றவர் ¼ வேலி நிலத்தையும் அதில் ஒரு வீட்டையும் சொந்தமாகப் பெற்றிருத்தல் வேண்டும். இத்தகுதி அவருக்கு அக்கிராமத்தோடுள்ள உறவை வெளிப்படுத்துகிறது. உத்தரமேரூர் கல்வெட்டு தேர்தலில் போட்டியிடுகின்றவர் 35 வயதிற்கு மேற்பட்டவராகவும் 70 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகுதி அனுபவம் மிக்கவர்களுக்குத் தேர்தலில் போட்டியிட வாய்ப்பை அளித்துள்ளது. மேலும் வேங்களையும், பிரமாணங்களையும் கற்றுத் தேர்ந்தவர்களுக்கும், அறநெறிவழுவாது நடப்பவர்களுக்கும் தேர்தலில் போட்டியிட முன்னுரிமை அளிக்கப்பட்டது. இது மக்களுக்குத் தொண்டுபுரிகின்றவன் கல்வியில் சிறந்தவனாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. மேலும் மூவாண்டிற்குள் எந்த வாரியத்திற்கும் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பெறாதவராக இருந்தால் அவர் தேர்தலில் நிற்க தகுதியுடையவர் எனக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. உறுப்பினர்களாகப் பணியாற்றிய காலத்தில் கணக்குக் காட்டாதவர்களும், கையூட்டு வாங்கியவர்களும், கொடுங்குற்றம் இழைத்தவர்களும், ஊருக்குத்துரோகம் செய்தவர்களும் தேர்தலில் போட்டியிடுவதற்குத் தகுதியற்றவராவர். இறுதியாகத் தீயோருடன் உறவுகொண்டு கெட்டுப்போனவர்களும் தேர்தலில் போட்டியிட உரிமையற்றவர்களாவார்கள்.

**தேர்தல் முறை**

மேற்கூறிய தகுதியுடைய மக்கள் தலநிர்வாகத்தைக் கவனிக்க குடஓலை முறைப்படி தேர்ந்தெடுத்தனர். இவ்முறைப்படி, தேர்தலில் போட்டியிட தகுதியுடைய நபர்களின் பெயர்களைப் பனை ஓலையில் எழுதி ஒரு குடத்தில் போட்டு குலுக்குவார்கள். பின்னர் ஒரு சிறு குழந்தைகளின் மூலமாகக் குழுக்களுக்கு எத்தனை அங்கத்தினர்கள் தேவையோ அத்தனை ஓலைகளையும் எடுக்க வைப்பார்கள். அந்த குழந்தை எடுக்கக்கூடிய ஓலைகளில் யாருடைய பெயர்கள் காணப்படுகிறதோ அவர்கள் மக்களுக்கு ஒரு ஆண்டு காலம் பணியாற்றும் அங்கத்தினர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

இம்முறைப்படித் தெரிவு செய்யப்பட்ட 30 பேரில் 12 பேர் வருடாந்தர குழுவிலும், 12 பேர் தோட்ட குழுவிலும், 6 பேர் குளங்களைக் கவனிக்கும் குழுவிலும் பணியாற்றினார்கள். மேற்குறிப்பிட்ட குழுக்களைத்தவிர ஒரு நிலையான

குழுவும், ஒருபொன் குழுவும் காணப்பட்டது. இக்குழு உறுப்பினர்களுக்கு எவ்வித ஊதியமும் அளிக்கப்படவில்லை. இவ்உறுப்பினர்கள் வாரியப் பெருமக்கள் என அழைக்கப்பட்டனர். கிராமத்தில் மதிப்புடன் காணப்பட்டாலும் தவறு செய்தால் இவர்களும் தண்டிக்கப்பட்டனர். மக்களால் தெரிவு செய்யப்பட்ட இம்மன்றங்கள் கிராமத்திலுள்ள ஆலயங்களின் வராந்தாவிலோ, குளங்களின் கரைகளிலோ, மரங்களின் நிழல்களிலோ கூடிய. இம்மன்றங்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் ஆலயங்களின் சுவர்களில் எழுதிவைக்கப்பட்டன.

கிராமநிர்வாகத்தைப் பொறுத்தவரையில் இம்மன்றங்கள் முழு அதிகாரத்தைப் பெற்றிருந்தன. நீதிமன்ற குழுக்கள் கிராமத்திலுள்ள வழக்குகளை விசாரித்தன. திருட்டு, கலப்படம் செய்தல், பிறரை ஏமாற்றுதல், பிறர்மனைநயத்தல், கழுதை மீது சவாரிசெய்தல் ஆகியவை கடுமையான குற்றங்களாகும். என உத்தரமேரூர் கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இக்குற்றங்களுக்குக் கடுமையான தண்டனை அளிக்கப்பட்டன. கொலைக்குற்றம் புரிந்தவன் அபாராதமாக 16 பசுக்களைக் கொடுப்பதோடு, அரண்மனையிலுள்ள ஆலயத்தில் ஒரு அணையாவிளக்கையும் வைக்க வேண்டும் எனக்கட்டாயப்படுத்தப்பட்டான். கிராம மன்றங்கள் பல மக்கள் நலப்பணிகளையும் மேற்கொண்டன. இங்குக் காணப்பட்ட பல்வேறு மன்றங்கள் சாலைகள், குளங்கள், தோட்டங்கள், ஆலயங்கள், மருத்துவமனைகள், பஞ்ச நிவாரணப்பணிகள், கணக்குகள் ஆகியவற்றை மேற்பார்வையிட்டு வந்தன. தர்ம வாரியம் பல்வேறு மக்கள் நலப்பணிகளைமேற்கொண்டன. மேலும் கிராம மன்றங்கள் கிராமத்திலுள்ள வரிகளைப் பிரித்து அரசாங்க கருவூலத்தில் செலுத்தின. குறிப்பாக இக்காலத்தில் கிராம மன்றங்கள் ஒழுங்காகச் செயல்பட்டு கிராம வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களை அமுல்படுத்தின.

சோழர் காலம் கிராம சபைகளின் பொற்காலம் என அழைக்கப்பட்டது. கி.பி.921க்கும் கி.பி.1120க்கும் இடைப்பட்டக் காலத்தில் ஏராளம் கிராம சபைகள் சோழ நாட்டில் சிறப்புற்று விளங்கின. சோழ நாட்டை ஆட்சிபுரிந்த முதலாம் பராந்தகன், இரண்டாம் பராந்தகன், முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன், முதலாம் குலோத்துங்கன் ஆகிறோர் கிராம மன்றங்களுக்கு அதிக ஊக்கமளித்தனர். சிறந்து விளங்கிய இம்மன்றகள் உள்நாட்டு கலகத்தாலும், வெளிநாட்டு முற்றுகையாலும் கி.பி.11ம், 12ம் நூற்றாண்டுகளில் வீழ்ச்சியடைந்தன. கிராம நலத்தின் மீது அக்கரையில்லாத கிராம கந்தகர்களின் செயல்பாடுகள் கிராமங்களின் வளர்ச்சிக்கு மூட்டுக்கட்டையாக இருந்தன. இறுதியாக, முஸ்லீம்களின் படையெடுப்பு கிராம மன்றங்களின் வீழ்ச்சிக்கு அடிப்படையாக இருந்தன. குறிப்பாக, சோழர் காலத்தில் பின்பற்றப்பட்ட ஆட்சிமுறை கிராமசுயஆட்சியை வெளிப்படுத்துவதுடன் பிற்கால ஜனநாயக முறைக்கும் அது வழி வகுத்தது.

**பொருளாதாரநிலை**

சோழர் காலத்துப் பொருளாதார நிலையை அக்காலத்தில் நிலவிய விவசாயம், தொழில், வணிகம் ஆகியவை நிர்ணயித்தன. நாட்டை ஆண்ட

அரசர்கள் அதன் பொருளாதார வளர்ச்சிக்கு அதிக அக்கரை காட்டினர். இருப்பினும் இங்கு காணப்பட்ட நிலவியல் அமைப்பும், இயற்கையின் சீற்றமும், இடைவிடாப்போர்களும், தேவையற்ற செலவீனங்களும் நாட்டின் பொருளாதாரத்தின் மந்தத்தை ஏற்படுத்தின.

**விவசாயம்**

சோழர் காலத்துப் பொருளாதார நிலையை நிர்ணயிப்பதில் விவசாயம் பெரும் பங்கு வகித்தது. அங்கு நிலவிய நிலவியலுக்கேற்றவாறு விவசாய முறைகளிலும் வேறுபாடுகள் காணப்பட்டன. இருப்பினும் நாட்டின் பெரும்பான்மையான மக்களும் விவசாயத்தை நம்பியிருந்ததால் அரசு அதன் வளர்ச்சிக்கு அதிக அக்கரை காட்டியது.

**தண்ணீர் வினியோகம்**

விவசாயத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் அரசு நீர்பாசன வசதிகளைப் பெருக்கியது. சோழ நாட்டின் பெரும்பான்மை விவசாயிகளும் விவசாயத்திற்குப் பருவ மழையையே நம்பியிருந்தனர். ஆனால் மழைநீர் விவசாயத்திற்குப் போதி அளவு கிடைக்கவில்லை. சில வேளைகளில் பருவ மழை விவசாயிகளை ஏமாற்றின. எனவே இயற்கையாகக் கிடைத்த நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாகக் காவிரி ஆற்றுநீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த கால்வாய்கள் வெட்டப்பட்டன. இவற்றைத் தவிர நீர்பாசன வசதிக்கென நாட்டின் பல்வேறு பகுதிகளில் குளங்கள் வெட்டப்பட்டன. சோழ நாட்டுக் கல்வெட்டுக்கள் அக்காலத்தில் வெட்டப்பட்டன. சோழ நாட்டுக் கல்வெட்டுக்கள் அக்காலத்தில் வெட்டப்பட்டு ஒழுங்காகப் பராமரிக்கப்பட்டுவந்த அநேகக் குளங்களைப் பற்றிய தகவல்களைத் தருகின்றன. அவற்றுள் மதுரை மாவட்டத்தில் ஆனைமலையிலுள்ள கலியாண் ஏரியும், சோழ புரத்திலுள்ள கள்ளிநங்கை குளமும், உத்தரமேரூரிலுள்ள வைரமேகத்தடாகமும், பாகூரிலுள்ள பெரியகுளம், புங்கனூரிலுள்ள இராஜேந்திர சோழ பெரிய ஏரியும் முக்கியமானவைகள். கிராம மன்றங்கள் இக்குளங்களைப் பராமரித்ததோடு, தண்ணீரை விவசாயத்திற்குப் பயன்படுத்துவதிலும் சில ஒழுங்கு முறைகளைப் பின்பற்றின. குளத்து நீரைப் பயன்படுத்த முடியாத இடங்களில், கிணற்று நீர் விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. கிணற்று நீரை இறைப்பதற்குக் காளைகளும், எருதுகளும் பயன்படுத்தப்பட்டன. நீர்வளம் பெருகியதால் விவசாய உற்பத்தி பெருகியது. மேலும் தரிசு நிலங்களும், காடுகளும் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன. எனவே உற்பத்தி பெருகியது.

**நிலப்பங்கீட்டு முறை**

சோழர் காலத்தில் நிலம் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. அவை வேலன் வகை நிலம், இலிமோசினறி நிலம், மானிய நிலம் என்பவைகளாகும். விவசாயிகள் அரசிற்கு நிலவரி செலுத்தி வந்த நிலத்திற்கு வேலன்வகை நிலம் எனப் பெயர். பாரம்பரியமாக நில உரிமை பெற்றுவந்த இவ்விவசாயிகள்

இறகைக்குடிகள் எனப்பட்டனர். ஏராளம் நிலங்களை உரிமையாகப் பெற்றிருந்தவர்கள் பெரும் குடிகள் எனப்பட்டனர். இவர்கள் அரசுக்கு நிலவரி செலுத்தி வந்தனர். சில வேளைகளில் பொது மக்களின் இந்நிலங்கள் பிரம்மதேய நிலங்களாகவும், தேவதான நிலங்களாகவும் மாற்றப்பட்டன. இவ்வாறு மாற்றப்பட்டபின் விவசாயிகள் நிலவரியை அரசுக்குச் செலுத்துவதற்குப் பதிலாக ஆலயங்களில் கட்டினர்.

பிராமணர்களுக்கும், ஆலயங்களுக்கும் மன்னன் தானமாக வழங்கிய பிரம்மதான, தேவதான நிலங்களுக்கு இலிமோசினி நிலம் என்று பெயர். கிராமத்தில் காணப்பட்ட மிகச் செழிப்பு மிக்க நிலங்கள் இவர்களுக்கு அளிக்கப்பட்டன. பிராமணர்கள் தங்கிய இவ்விடங்களுக்கு அளிக்கப்பட்டன. பிராமணர்கள் தங்கிய இவ்விடங்களுக்குச் சதுர்வேதிமங்கலம், பிரம்மபுரம், அக்கிரகாரம், பிரம்மதேசம் என்று பெயர். இந்நிலங்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. சில சமயங்களில் இந்நிலங்களிலிருந்து ஒரு சிறு தொகை வரியாகப்பிரிக்கப்பட்டது. இவ்வரிக்கு இறையிலிகாசு எனப்பெயர். இந்நிலங்களை விவசாயம் செய்ய சாதாரண குடிமக்களும், அடிமைகளும் பயன்படுத்தப்பட்டனர். இவர்களுக்கு எவ்வித ஊதியமும் அளிக்கப்படவில்லை. அரசு பணிபுரிந்தவர்களுக்கு ஊதியத்திற்குப்பதிலாக நிலம் மானியமாக அளிக்கப்பட்டது. மானியமாக அளிக்கப்பட்ட இந்நிலங்களுக்கு ஜீவிதம் நிலம் எனறும் பெயர். பிராமணர்கள், வைத்தியர்கள், கலைஞர்கள் ஆகியோரின் சேவைக்காக அளிக்கப்பட்ட நிலங்களுக்குப் போகம் நிலம் எனப்பெயர். ஆலயங்களில் வழிபாடு அல்லது பூஜை நடத்துவதற்காக பிராமணனுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் ‘அர்ச்சன போகம்’ ஆகும். மருத்துவமனைகளில் பணிபுரிந்த வைத்தியர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலத்திற்கு வைத்திய போகம் என்று பெயர். அரண்மனைகளில் நடனமாடிய நாட்டிய கலைஞர்களுக்கும் நிலம் தானமாக வழங்கப்பட்டது. இந்நிலத்திற்கு ‘நிர்த்த போகம்’ என்று பெயர். ஆலயங்களிலும், மடங்களிலும் கல்வி கற்பித்த பிராமண ஆசிரியர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம் ‘விருத்தி நிலம்’ ஆகும். பொதுவாக, நடனமாடுகின்ற, பாடுகின்ற, இசைக்கருவிகளை மீட்டுகின்ற கலைஞர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலங்களுக்குக் ‘காணி நிலம்’ என்று பெயர். கிராமமன்றங்களின் மக்கள் நலப்பணிக்காகவும், ஆலயங்களை சுத்தம் செய்வதற்காகவும் வழங்கப்பட்ட நிலம் ‘புறம் நிலம்’ ஆகும். படையில் பணிபுரிந்த இறந்துபட்ட போர் வீரனின் குடும்பத்திற்கு நிலம் தானமாகக் கொடுக்கப்பட்டது. இந்நிலத்திற்குப் ‘பட்டி’ என்று பெயர். கிராமங்களில் காணப்பட்ட குளங்களை ஒழுங்காகக் சுத்தம செய்வதற்கு அளிக்கப்பட்ட நிலமும் ‘பட்டி’ என்று பெயர். கிராமங்களில் காணப்பட்ட குளங்களை ஒழுங்காகச் சுத்தம் செய்வதற்கு அளிக்கப்பட்ட நிலமும் ‘பட்ட’ என அழைக்கப்பட்டது. போர்க் காலங்களில் அரசனுக்குப் படையைக் கொடுத்து உதவிய நிலப்பிரபுக்களுக்குக் தானமாக அளிக்கப்பட்ட நிலம் ‘புரெ’ எனப்பட்டது. இவ்வாறு சோழர் காலத்தில் நிலம் பல்வேறு பிரிவினர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது.

## நிலவரி

நிலவரி அரசின் முக்கிய வருவாய் ஆகையால் அதை வசூலிப்பதற்கு அதிக கவனம செலுத்தப்பட்டது. நிலவரியை ஒழுங்குபடுத்துவதற்காக நிலங்கள் அளந்து திட்டப்படுத்தப்பட்டன. நிலவுரிமை சான்றாக விவசாயிகளுக்கு பட்டா வழங்கப்பட்டது. குறிப்பாக, இக்காலத்தில் நிலம் பன்னிரண்டு பிரிவுகளாக அல்லது தரமாக பகுக்கப்பட்டிருந்தது. நிலங்களின் தன்மையைப் பொறுத்து நிலவரி பிரிக்கப்பட்டது. முதலாம் இராஜராஜன் காலத்தில் செழிப்புமிக்க ஒரு வேலி நிலத்திலிருந்து 30 கலங்கள் நெல்லும், சாதாரண நிலத்திலிருந்து 28 கலங்கள் நெல்லும் நிலவரியாகப் பிரிக்கப்பட்டன. ஆனால் தேவதான நிலங்களிலிருந்து ஒரு வேலி நிலத்திற்கு 100 கலங்கள் நெல்வரியாகப் பெற்றதாக முதலாம் இராஜராஜனின் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. நிலங்களின் தன்மைகளின் மாற்றத்திற்கேற்ப நிலவரியும் மறு மதிப்பீடு செய்யப்பட்டன. பொதுவாக விளைச்சலில் 1/6 பங்கு வரியாக வசூலிக்கப்பட்டது. சில சமயங்களில் வரிகள் உயர்த்தப்பட்டன. குறிப்பாக, முதலாம் இராஜராஜன் காலத்தில் ஏற்பட்டப் போர் செலவுகளுக்காக இது 1/3 பங்காக உயர்த்தப்பட்டது. அரசுக்கு ஒழுங்காக வரி செலுத்திய நபர்களுக்கு அரசன் வெகுமதிகளை வழங்கினான். நிலவரி கொடுக்கத் தவறியவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். அவர்களின் நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. பணம் கையாடல் செய்த வருவாய் அதிகாரிகள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

## கால் நடைப் பண்ணைகள்

விவசாயத்தோடு ஆடு, மாடுகளுக்கு நெருங்கியத் தொடர்பு காணப்பட்டதால் அவற்றின் பாதுகாப்பிற்காகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தன. குறிப்பாக, காளை, எருது ஆகியவை நிலங்களை உழுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. அவற்றின் எருக்கள் உரமாகப்பயன்படுத்தப்பட்டன. சோழா் காலத்தில் இடையா்கள் ஆடு, மாடுகளை வளா்த்து வந்தனா். ஆடு மாடுகளுக்கென புல்வெளிகளை அரசு ஒதுக்கியது.

## தொழில்

ஒரு நாட்டின் வளா்ச்சி தொழில் வளா்ச்சியை மையமாகக் கொண்டுள்ளது. இதை உணா்ந்த சோழா்கள் தொழில் வளா்ச்சிக்கு அதிக அக்கரைகாட்டினா். தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் சந்தைகளில் விற்கப்பட்டன. குறிப்பாக, கிராமங்களில் கடைக்கப்பெற்ற சாதாரண கச்சாப் பொருட்களை மக்கள் தொழில் வளா்ச்சிக்குப் பயன்படுத்தினா்.

## முக்கியத்தொழில்கள்

### உலோகத்தொழில்கள்

சோழர்காலத்தில் உலோகத்தொழில் கூடங்கள் சிறப்புற்று விளங்கின. சமூதாயத்தில் வாழ்ந்த செல்வந்தர்கள் உலோகத்தாலானப் பொருட்களை அதிகமாகப் பயன்படுத்தினர். வெங்கலம், பித்தளை, தாமிரம் ஆகியவற்றால் ஆண், பெண் தெய்வங்களின் உருவங்கள் செய்யப்பட்டன. இவை ஆலயங்களில் தொழுகைக்காக வைக்கப்பட்டன. தஞ்சாவூர் ஆலயத்தில் பல்வேறுபட்ட ஏராளம் உருவங்கள் காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அணிகலன்கள் செய்தல் அக்காலத்திலுள்ள ஒரு கவர்ச்சி மிக்க தொழில் ஆகும். பொற்கொல்லர்கள் தங்கம், விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பல்வேறுபட்ட அழகிய அணிகலன்களைச் செய்தனர். சோழர் காலத்தில் பொற்கொல்லர்களால் செய்யப்பட்ட அணிகலன்களின் தொகுப்பைக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அக்காலத்தில் விலையுயர்ந்த மாணிக்கம், பவளம், முத்து, தங்கம் ஆகியவற்றால் செய்யப்பட்ட பல்வேறுபட்ட அணிகலன்கள் ஆலயங்களில் குவிந்து காணப்பட்டதாகச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. மேலும், இக்காலத்தில் வாழ்ந்த அரசர்கள் போருக்கு அதிக முக்கியத்துவம் அளித்ததால், போர்க்கருவிகள் செய்வதற்கென தனித் தொழிற்சாலைகள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் காணப்பட்டன.

### உப்பு தயாரித்தல்

உப்பு தயாரித்தல் அக்காலத்தில் காணப்பட்ட ஒரு முக்கிய தொழில் ஆகும். இத்தொழில் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. மர்கானம், கன்னியாகுமரி, வாரியூர், ஆய்துறை ஆகிய இடங்களில் உப்பு தயாரிக்கின்ற உப்பளங்கள் காணப்பட்டன. குறிப்பாக, கடற்கரைப் பகுதிகளில் இவ்வுப்பளங்கள் அமைந்திருந்தன. கடல் சீற்றத்தால் இவ்வுப்பளங்கள் அடிக்கடி நீர்மூலமாக்கப்பட்டன.

### ஆயலத்தோடும் அரண்மனையோடும் தொடர்புடைய தொழில்கள்

மேற்குறிப்பிட்ட தொழிற்சாலைகளில், சிலவை அரண்மனைகளுக்கும், ஆலயங்களுக்கும் தேவைப்பட்ட பொருட்களை மட்டும் உற்பத்திச் செய்தன. காஞ்சிபுரத்திலுள்ள நெசவாளர்கள் அரண்மனைக்குத் தேவையான ஆடைகளை உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்பட்டனர். ஆலங்களுக்குத் தேவையான உருவங்களும், அணிகலன்களும் ஒரு சில தொழிற்கூடங்களால் செய்யப்பட்டன. இவர்கள் இக்கலையில் கைதேர்ந்து விளங்கினர். உத்தமசோழன் ஆட்சி காலத்தில் நெசவாளர்கள் ஆலயங்களின் வரவு செலவு கணக்குகளைக் கவனிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டனர். ஆலயங்களின் நிர்வாகத்தைக் கவனித்த இவர்கள் அரசுக்கு ஒவ்வொரு மாதமும் கணக்குகளைச் சமர்ப்பித்து வந்தனர்.

**வணிகம்**

சோழா் காலத்தில் வணிகம் சிறப்புற்று விளங்கியது. முக்கியமான வியாபார மையங்கள் ரோடுகளால் இணைக்கப்பட்டிருந்தன. குறிப்பாகச் சோழ சாம்ராஜ்யத்தில் ஏராளம் ரோடுகள் அமைக்கப்பட்டிருந்தன. இவ்ரோடுகள் பொருட்களை இடம் விட்டு இடம் கொண்டு செல்லவும், மக்கள் போக்குவரத்த்திற்கும் பயன்படுத்தப்பட்டன. நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டுவந்த வணிக கழகங்கள் உள்நாட்டு, வெளிநாட்டு வணிகங்களை ஒழுங்குபடுத்தின.

**ரோடுகள்**

தண்ணீா் போக்குவரத்திற்கு அதிக வசதிகள் இல்லாததால் சோழா்கள் சாலைப்போக்குவரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தனா். சோழா் கால கல்வெட்டுக்கள் அக்காலத்தில் காணப்பட்ட ரோடுகளைப் பற்றியத் தகவல்களைத் தருகின்றன. ரோடுகள் வழிகள் எனப்பட்டன. கிராமங்களில் காணப்பட்ட சிறு வழிகளுக்கு நடைபாதைகள் என்று பெயா். இவை சக்கர வாகன போக்குவரத்திற்கு தகுந்தவைகள் அல்ல, இந்நடைபாதைகள் உள்நாட்டுப் பண்டங்களைச் சந்தைகளுக்குக் கொண்டு செல்வதற்குப்பயன்படுத்தப்பட்டன. இப்பாதைகளின் பராமரிப்பு கிராம மன்றங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. பெரிய ரோடுகளுக்குப் பெருவழிகள் என்று பெயா். இவை நாட்டின் பல்வேறு பகுதிகளை இணைத்தன. மிகப்பெரிய ரோடுகளுக்கு வடுகப்பெரு வழி என்று பெயா். இது 24 அடி அகலமுடையது. வணிகத்திற்காவும், இராணுவ அணிவகுப்பிற்காகவும் இச்சாலைகள் பயன்படுத்தப்பட்டன.

**உள்நாட்டு வணிகம்**

சோழ நாட்டில் காணப்பட்ட பல்வேறு ரோடுகள் பொருட்களைத் தங்குதடையின்றி இடம் விட்டு இடம் கொண்டு செல்ல பெரிதும் உதவின. பொதுவாக சக்கரவாகனங்கள் பொருட்களைக் கொண்டு செல்ல பயன்படுத்தப்பட்டன. உள்நாட்டு வணிகத்திற்கு சந்தைகள் அல்லது அங்காடிகள் பயன்படுத்தப்பட்டன. சந்தைகளில் பொருட்களை விற்பதற்கும் வாங்குவதற்கும் உரிய எல்லா வசதிகளும் காணப்பட்டன. சந்தைகளில் பொருட்களை விற்க தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவற்றை மீறி பொருட்களை விற்பனை செய்வா்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனா். மக்கள் பொருட்களை விற்கவும் வாங்கவும் வாங்கவும் பண்ட மாற்று முறையைப் பின்பற்றினா். அக்காலத்தில் வணிக வளா்ச்சிக்குத் தடையாக திருடா்கள் செயல்பட்டனா். திருடா்களுக்கு பயந்து வணிகா்கள் இடம் விட்டு இடம் பெயரும்போது கூட்டம் கூட்டமாகச் சென்றனா். வணிகா்களுக்கு பாதுகாப்பைக் கொடுக்க இராணுவம் பயன்படுத்தப்பட்டது. வணிகா்கள் தங்களது தொழிலில் நோ்மையுடன் விளங்கவேண்டும் என எதிா்பாா்க்கப்பட்டது. உண்மை பேசிய வணிகா்கள் சத்தியவாக்காஸ் அல்லது தன்ம வணியா் எனப்பட்டனா். தமிழ்நாட்டிற்கு அருகாமையிலுள்ள நாடுகளோடு வணிகத்

தொடர்பு கொண்டிருந்தவர்களுக்கு நானாதேசியதிசை ஆயிரத்தைனூறுவர் என்று பெயர். கடற்கரை கிராமத்தோடும், நகரத்தோடும் வணிகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள் மணிகிராமத்தார் எனப்பட்டனர். முக்கியமான நகரங்களில் வணிகம் புரிந்துவந்தவர்கள் நகரத்தார் என அழைக்கப்பட்டனர். திருநெல்வேலியிலுள்ள வணிகர்கள் வலஞ்ஞியர் எனப்பட்டனர். நாகப்பட்டினத்திலுள்ள முகம்மதிய வணிகர்கள் அஞ்சுவனத்தா என்று அழைக்கப்பட்டனர். அக்கால வணிகர்கள் கடவுள் நம்பிக்கை மிக்கவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் ஆலயங்கள் கட்டுவதற்கும் திருவிழாக்கள் நடத்துவதற்கும் அதிக நன்கொடைகளை வழங்கினர்.

**அயல்நாட்டு வணிகம்**

**வணிக சங்கம் - கழகம்**

சோழர்காலத்தில் அயல்நாட்டு வணிகம் தழைத்தது. அக்காலத்தில் வணிக சங்கங்களும், கழகங்களும் சிறந்த முறையில் செயல்பட்டு வந்தன. இவை அயல்நாட்டு வணிகத்தை ஊக்குவித்ததோடு அதன் செயல்களை ஒழுங்குபடுத்தியது. வணிக வளர்ச்சிக்கு சங்கம் ஆற்றிய தொண்டினை சுமத்திரா, ஜாவா, சீனா ஆகிய நாடுகளில் காணப்படும் கி.பி.1088-ஆம் ஆண்டைச் சார்ந்த கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. மேலும் கல்வெட்டுக்கள் தமிழகத்தின் முக்கிய நகரங்களாகிய காஞ்சி, மகாபலிபுரம் ஆகிய இடங்களில் செயல்பட்டு வந்த வணிக அமைப்பாகிய நகரத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. தன்னிச்சையாகச் செயல்பட்டு வந்த இந்த அமைப்புக்கள் உள்நாட்டு வணிகத்தை ஊக்குவித்து அதன் செயல்முறைகளை ஒழுங்குபடுத்தின. அயல்நாட்டு வணிகத்தின் போது வணிகர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்றனர். பொதுவாக எல்லா நாடுகளிலும் வணிகர்களுக்குப் பெரும் மதிப்பு இருந்தது. சோழ அரசர்களும், அவர்களின் கீழ் செயல்பட்ட உள்நாட்டு நிறுவனங்களும், இந்த வணிக அமைப்புகளுக்கு முழு ஆதரவளித்தனர். வணிகர்களுக்கும், வணிகக் கிடங்குகளுக்கும் போதியப்பாதுகாப்பு அளிக்க இவ்வணிக சங்கங்கள் கூலிப்படை ஒன்றையும் வைத்திருந்தன.

**அயல்நாட்டுடன் வணிக உறவு**

பண்டைக் காலம் முதலே தென்னிந்தியா, இத்தீபகற்பத்தின் இருபகுதிகளிலுள்ள அயல்நாடுகளோடு கடல் கடந்த வணிகத்தை மேற்கொண்டு வந்தன. கி.பி.9-ஆம் நூற்றாண்டில் தென் ஆசிய நாடுகள் தென்னிந்தியாவோடு நெருங்கிய வணிக உறவை ஏற்படுத்தியிருந்தன. குறிப்பாக, இக்காலத்தில் தமிழ் நாட்டிற்கும் சீனா, மலேயா. இந்தோசீனா ஆகிய நாடுகளுக்குமிடையே நெருங்கிய வணிக உறவு காணப்பட்டது. சீனா, நீக்கோபார், மாலத்தீவு ஆகிய நாடுகளைச் சார்ந்த வணிகர்கள் தங்களது நீண்ட தாள் பயணத்தின்போது தமிழகத்துறைமுகங்களில் தங்கி இளைப்பாறிச் சென்றனர். கி.பி.9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சீனாவின் அரசியலில் அமைதியின்மை நிலவியது. இது

அந்நாட்டுடன் உண்டான வணிக உறவைப்பெருமளவிற்குப் பாதித்தது. இக்காலத்தில் சீனாவிற்குச் செல்ல வேண்டிய வணிகர்கள் மலேயாவிற்கும், சுமத்திராவிற்கும் சென்றனர். எனவே சீன வணிகர்கள் தங்களுக்கு வேண்டிய பண்டங்களை இங்கு வந்து வாங்கிச் சென்றனர். ஆனால் சிறிது காலத்திற்குள் சீனாவில் அமைதி ஏற்படவே மீண்டும் அந்நாட்டுடன் வணிகம் தழைத்தது. சோழ நாட்டை ஆண்ட முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோர் சீனாவுடன் நெருங்கிய வணிக உறவை ஏற்படுத்தியிருந்தனர். கி.பி.1015-இல் முதலாம் இராஜராஜன் வணிகத்தின் பொருட்டு ஒரு தூதுக்குழுவைச் சீனாவிற்கு அனுப்பினார். அக்காலத்தில் சீனாவிற்கும், தமிழகத்திற்குமிடையே நடைபெற்ற வணிகத்தை ஸ்ரீவிஜயா கட்டுப்படுத்தியது. இதைச் சோழ மன்னன் முதலாம் இராஜேந்திரன் விரும்பவில்லை. எனவே அந்நாட்டின் மீது படையெடுத்து அதைத் தோற்கடித்து சீனாவுடன் நேரடித்தொடர்பை ஏற்படுத்திக்கொண்டான். கி.பி.1077-ஆம் ஆண்டு தமிழ்நாட்டை ஆட்சிபுரிந்து வந்த முதலாம் குலோத்துங்கனும் தூதுக்குழு ஒன்றைச் சீனாவிற்கு அனுப்பினார். இதனால் இருநாட்டிற்குமிடையே வணிகம் தழைத்தது. சோழர்களின் ஆட்சிக்குப்பின் அயல்நாட்டு வணிகமும் வீழ்ச்சியுற்றது.

**வணிகப் பண்டங்கள்**

தமிழ்கத்தில் உற்பத்தி செய்யப்பட்டப் பொருட்களுக்கு அயல்நாடுகளில் அதிக தேவை காணப்பட்டது. தமிழகம் வெளிநாடுகளுக்கு ஆடைகள், வாசனைத்திரவியங்கள், போதைப் பொருட்கள், ஆபரணங்கள், தந்தம், ஒளி ஊடுருவும் கண்ணாடி, பருத்தியாடைகள், பல்வேறு நிறங்களை உடைய சில்க் ஆடைகள், கோதுமை, பார்லி, பவளப்புற்று, சணல், சணல்செடி, இபானிமரம், தானியப்பொருட்கள், வரை பயிறு வகைகள், சூடம், கத்தாளை, ஏலம், கிரம்பு ஆகிய பொருட்களை ஏற்றுமதி செய்தன. சோழப்படைக்குத் தேவையான குதிரைகள் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. செட்டிகள் குதிரைவணிகத்தில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். குறிப்பாக, இக்காலத்தில் ஏராளம் குதிரைகள் அரேபியாவிலிருந்து தென்னிந்தியாவிற்கு இறக்குமதி செய்யப்பட்டன.

துறைமுகங்கள்

அயல்நாட்டு வணிகத்திற்கு துறைமுகங்களும், கப்பல்களும் பயன்படுத்தப்பட்டன. தமிழநாடு பல இயற்கைத் துறைமுகங்களைக் கொண்டிருந்தது. தமிழகத்தின் கிழக்குக் கடற்கரைப்பகுதியில் மகாபலிபுரதம், காவிரிப்பூம்பட்டினம், சாலியூர், கொற்கை ஆகியவையும் மேற்குப்பகுதியில் கொல்லமும் முக்கிய துறைமுகங்களாக விளங்கின. இத்துறைமுகங்களில் தற்காலத்தில் காணப்படுவதுபோன்று எல்லாவசதிகளும் காணப்பட்டன. துறைமுகத்தின் அருகாமையில் காணப்பட்ட ரோடுகளிலும், சந்தைகளிலும் இரவு நேரங்களில் விளக்கு வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இது வணிகர்களுக்குப் பாதுகாப்பைக் கொடுத்தது. அயல்நாட்டு ஏற்றுமதி, இறக்குமதிப் பொருட்களிலிருந்து அரசு வணிகவரியைப் பிரித்தது. இதற்குச் சுங்கம் எனப்பெயர். முதலாம்

குலோத்துங்கன் தனது ஆட்சி காலத்தில் வணிக வளர்ச்சிக்காகப் பல சுங்கவரிகளை ரத்து செய்தான் எனச் சான்றுகள் புலப்படுத்துகின்றன. குறிப்பாக, இக்காலத்தில் நாட்டின் பொருளாதார நிலை உயர்வாகக் காணப்பட்டது.

### சோழர் கால கலை வளர்ச்சி

தமிழக வரலாற்றில் கலை வளர்ச்சிக்கு முதன் முதலில் ஆர்வம் காட்டியவர்கள் பல்லவர்கள் ஆவார்கள். பல்லவர் மரபைப் பின்பற்றிய சோழர்களும் கலை வளர்ச்சிக்கு ஊக்கமளித்தனர். கலையை ஆதரித்த சோழ அரசர்கள் தங்களது வருவாயின் பெரும்பகுதியை ஆலயங்கள், அரண்மனைகள், பெரிய கட்டிடங்கள் ஆகியவைகள் கட்டுவதற்குச் செலவு செய்தனர். இக்கால கலை திராவிட பாணியை மையமாகக் கொண்டிருந்தது. குறிப்பாக இக்காலத்து நினைவுச் சின்னங்கள் சோழர்கள் கலை, கட்டிடக்கலை ஆகியவற்றிற்குக் காட்டிய ஆர்வத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களை அதன் அமைப்பு காலம், தன்மை ஆகியவற்றைப் பொறுத்து மூன்று பெரும்பகுதிகளாகப் பிரிக்கலாம்.

முற்கால ஆலயங்கள்

முற்கால சோழ ஆலயங்கள் கி.பி.850-க்கும் கி.பி.985-க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டவை. இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களைப் பற்றிபொறிப்புக்கள் குறிப்பிடுகின்றன. இக்கால ஆலயங்கள் அளவில் சிறியவை. சோழ அரசர்களால் இக்காலத்தில் கட்டப்பட்ட பெரும்பான்மை ஆலயங்களும் வடிவமைக்கப்பட்டவைகள் ஆகும். சோழ சாம்ராஜ்யத்தை நிறுவிய விஜயாலயச் சோழனால் நாத்தமலையில் கட்டப்பட்ட விஜயாலய சோழேஸ்வரம் என்னும் ஆலயம் இக்காலத்தைச் சார்ந்த முதல் ஆலயம் ஆகும். போரில் முத்தரையரைத் தோற்கடித்ததின் நினைவாக விஜயாலயன் இவ்வாலயத்தை எழுப்பினான். இவ்வாலயத்தின் முன்பகுதியிலுள்ள மண்டபத்தில் காணப்படும் தூண்கள் பல்லவர் பாணியைச் சார்ந்தது ஆகும். இதில் காணப்படும் துவாரபாலகரின் கரங்கள் பல்லவ நினைவுச் சின்னத்தைப் போன்று அமைந்துள்ளது. போதிய பாதுகாப்பும் பராமரிப்பும் இல்லாத காரணத்தால் இவ்வாலயம் சீர்குலைந்து காணப்படுகிறது. இக்காலத்தைச் சார்ந்த முக்கியமான ஆலயங்களுள் ஒன்று பாலசுப்பிரமணிய ஆலயம் ஆகும். இது கண்ணனூர் என்னும் இடத்தில் கட்டப்பட்டுள்ளது. குண்பகோணத்தில் கட்டப்பட்டுள்ள நாகேஸ்வர ஆலயமும் இக்காலத்தைச் சார்ந்தது ஆகும். இவ்வாலயத்தில் அக்காலத்தில் சோழநாட்டை ஆட்சிபுரிந்த அரசர் மற்றும் அரசியருடைய உருவங்கள் காணப்படுகின்றன. முதலாம் ஆதித்தியன் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களுள் திருக்காட்டுத்தலையிலுள்ள சுந்தரேஸ்வரர் ஆலயமும், திருச்செந்துரையிலுள்ள மகாதேவர் ஆலயமும் குறிப்பிடத்தக்கவைகள் ஆகும். பனன்குடியிலுள்ள அகஸ்தீஸ்வரர் ஆலயம் இக்காலத்தைச் சார்ந்தது ஆகும்.

**கொரங்க நாதர் ஆலயம்**

இவ்வாலயம் திருச்சி மாவட்டத்தில் ஸ்ரீனிவாச நல்லூரில் அமைந்துள்ளது. இது மிகவும் அழகுடைய ஆலயம் ஆகும். இவ்வாலயத்தை முதலாம் பராந்தகன் கட்டினான். இது 50 அடி நீளமுடையது. மிக எளிய நிலையில் காணப்படும் இவ்வாலயத்தில் ஆண், பெண் தெய்வங்களின் சிற்பங்கள் அதன் சுவர்களில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் சரஸ்வதி, லெட்சுமி ஆகியோரின் சிற்பங்கள் சிறப்புவாய்ந்தவைகள் ஆகும். அங்குக் காணப்படுகின்ற காளியினுடைய உருவத்திற்குக் கீழே அசுரனின் உருவம் கொத்திவைக்கப்பட்டுள்ளது. இது சோழர்களின் முற்காலக் கலைக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் புள்ளமங்கையில் கட்டப்பட்டுள்ள பிரம்மபுரீஸ்வரர் ஆலயமும் முதலாம் பராந்தகனால் கட்டப்பட்டது ஆகும். இவ்வாலயம் கும்பகோணத்திலுள்ள நாகேஸ்வரர் ஆலயத்தினைப் போன்ற வடிவமைப்பினை உடையது. தஞ்சாவூர் திருவிடை மருதூரில் உள்ள மகாலிங்க சுவாமி ஆலயம் கி.பி.910-இல் கட்டப்பட்டது ஆகும். இவ்வாலயம் முதலாம் பராந்தகன் ஆட்சிக்கு வந்த நான்காவது ஆண்டில் கட்டப்பட்டது. மேலும் கொடும் பாலூரிலுள்ள முக்குண்டேஸ்வரர் ஆலயமும், தென்னார்க்காடு மாவட்டத்தில் திருநாம நல்லூரிலுள்ள பக்தஜனீஸ்வரர் ஆலயமும், திருச்சி மாவட்டத்தில் அந்தநல்லூரிலுள்ள வடதீர்த்தநாத ஆலயமும், எரும்பூரிலுள்ள கடம்பவனீஜ்வரர் ஆலயமும், முற்கால சோழர்களின் கலை, கட்டிடக்கலை ஆகியவற்றைப் பறைசாற்றுகின்றன. கொடும்பாலூரிலுள்ள மூவர் கோயில் ஆலயம் இரண்டாம் பராந்தகச் சோழனின் ஆட்சிக்குட்பட்டிருந்த பூதிவிக்கிரமகேசரி என்ற குறுநில மன்னனால் கட்டப்பட்டது. இது பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியைச் சார்ந்தது. இவ்வாலயத்தின் சுவரில் காணப்படுகின்ற வெவ்வேறு வடிவமைப்பினைக் கொண்ட சிவனுடைய சிற்பங்கள் முற்காலச் சோழர்களின் கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன. மேற்குறிப்பிட்ட ஆலயங்களைத் தவிர வேறுபல ஆலயங்களையும் அக்காலக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. அவைகள் அவ்வளவு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகள் அல்ல.

**இடைகால ஆலயங்கள்**

கி.பி.985க்கும் கி.பி.1070க்கும் இடைப்பட்ட காலத்தில் எழுப்பப்பட்ட ஆலயங்கள் இடைக்கால ஆலயங்கள் என அழைக்கப்படுகின்றன. முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோரின் ஆட்சிகாலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் இக்காலத்தைச் சார்ந்தவைகள் ஆகும். திருநெல்வேலி மாவட்டத்தில் பிரம்மதேசம் என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள திருவல்லீஸ்வரம் ஆலயம் இக்காலத்தைச் சார்ந்ததது ஆகும். இது சதுர வடிவம் கொண்டது. இவ்வாலயத்தில் ஏராளம் மிருகங்கள், தெய்வங்கள் ஆகியவற்றின் உருவங்கள் பொலிவுடன் காணப்படுகின்றன. தாஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள உத்தரகைலாச ஆலயம், திருமலவாடியிலுள்ள வைத்தியநாத ஆலயம், தென்னார்க்காடு மாவட்டத்தில்

தாராபுரத்தில் சிவனுக்காகவும், விஷ்ணுவுக்காகவும் எழுப்பப்பட்ட ஆலயங்கள், இலங்கையில் பொலனரூபாவில் கட்டப்பட்ட சிவாலயா ஆலயம் ஆகியவைகளும் முதலாம் இராஜராஜன் காலத்தைச் சார்ந்தவைகள் ஆகும். இவ்வாலயங்கள் வடிவத்தில் சற்றுச் சிறியவையாக இருந்தாலும் சிறந்த கலைத்திறன் கொண்டவை.

**தஞ்சை பெரிய கோயில்**

சோழர் காலத்தில் கட்டப்பட்ட தஞ்சைபெரிய கோயிலும், கங்கைகொண்டசோழபுரம் கோயிலும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். இவைகள் சோழர்கால கட்டிடக்கலை வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. தஞ்சாவூரில் கட்டப்பட்டுள்ள இராஜராஜேஸ்வர பிரகதீஸ்வரர் ஆலயம் இந்தியாவிலுள்ள ஆலயங்களில் மிகவும் உயரமானது ஆகும். இவ்வாலயத்தை முதலாம் இராஜராஜன் கட்டினான். இவ்வாலயத்தின் வேலை கி.பி.1003-இல் ஆரம்பிக்கப்பட்டு கி.பி.1010-இல் முடிவடைந்நதது. இது இராஜராஜச் சோழனின் வெற்றிகளின் நினைவுச் சின்னம் ஆகும். இது அவனது சிறப்பை வெளிப்படுத்துகின்றன. இவ்வாலயம் கட்டுவதற்குத் தேவையான பொருட்களையும், செல்வங்களையும் முதலாம் இராஜராஜன் தானமாக வழங்கினான். வெளிநாட்டுப்போர்கள் மூலமாகக் கிடைத்த செல்வத்தின் பெரும்பகுதி இவ்வாலயம் கட்டுவதற்குச் செலவிடப்பட்டன. மேலும் இக்காலத்தைச் சார்ந்த பிரபுக்களும், செல்வந்தர்களும் இவ்வாலயம் கட்டுவதற்கு ஏராளம் பொருட்களைத் தானமாக வழங்கினர். பித்தளை, தங்கம் ஆகியவற்றால் செய்யப்பட்ட ஏராளம் சிற்பங்கள் இவ்வாலயத்தில் காணப்படுகின்றன. இவைகள் விலையுயர்ந்த அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. இங்குக் காணப்படுகின்ற சிற்பங்கள், அணிகலன்கள் ஆகியவற்றைப் பற்றிய தகவல்களை அங்குள்ள ஆலயக் கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்ற பெரும்பான்மை சிற்பங்களும், ஆபரணங்களும் தற்பொழுது அங்குக் காணப்படவில்லை.

மேலும், இவ்வாலயத்தின் அன்றாடச் செலவிற்காக ஏராளம் நிலங்கள் தானமாக வழங்கப்பட்டுள்ளன. இந்நிலங்களுக்குத் தேவதான நிலங்கள் என்று பெயர். இந்நிலத்திலிருந்து சுமார் 1,16,000 கலங்கள் நெல் இவ்வாலயத்திற்குக்கிடைத்தன. இவ்வாலயத்தில் நடனமாடிய நடனமாதருக்கெனத் தனி நிலங்கள் ஒதுக்கப்பட்டன. குறிப்பாக, இவ்வாலயத்தில் நடனமாடிய 400 நடனமாதருக்கென இரண்டு பெரிய தெருக்கள் முதலாம் இராஜராஜனால் கட்டப்பட்டன எனச் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

இவ்வாலயத்தின் உள்சுவரில் ஏராளம் பொறிப்புக்கள் காணப்படுகின்றன. இவை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை. இவைகள் முதலாம் இராஜராஜனின் சிறப்புக்களையும் அவன் அடைந்த வெற்றிகளையும் குறிப்பிடுகின்றன. மேலும் இப்பொறிப்புக்கள் இவ்வாலயத்தில் பணிபுரிந்த சமயல்காரர்கள், தோட்டக்காரர்கள், மலர் கோசரிப்பவர்கள், பூமாலை செய்பவர்கள், இசைஞர்கள், முரசு அடிப்பவர்கள், நாட்டியக்காரர்கள், நாட்டியக்குழுக்கள், தச்சர்கள், உயர் அதிகாரிகள்,

ஆலயபணியாளர்கள் ஆகியோரைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. இவ்வாயலத்தின் முதல் அடுக்கின் உள் சுவரில் ஏராளம் நாட்டிய பெண்களின் சிற்பங்கள் காணப்படுகின்றன. குறிப்பாக, இச்சுவரில் ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ள 108 நாட்டிய பெண்களின் நடன சிற்பங்கள் காண்போர் மனதை கவர்கின்றன. இவை இந்திய கலை வளர்ச்சியை உணர்த்தும் ஆவணங்களாக விளங்குகின்றன.

இவ்வாலயம் கிரானைட்டால் கட்டப்பட்டது. இதன் சுற்றளவு 45.72 சதுர மீட்டர்கள் ஆகும். இவ்வாலயத்தின் உட்பிரகாரத்தின் சுற்றளவு 30.48 சதுர மீட்டர்கள் ஆகும். இவ்வாலயத்தின் உட்சுவர்கள் சிவன், விஷ்ணு, துர்க்கை, கணேசன், ஸ்ரீதேவி, பூதேவி, லெட்சுமி, நடேசன், துவாரபாலா ஆகியோர்களின் சிற்பங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. இவ்வாலயத்தில் மத்தியில் காணப்படும் கோபுரம் அல்லது மண்டபம் 216 அடி உயரமுடையது. இது 14 மாடிகளைக் கொண்டது. இக்கோபுரத்தின் உச்சியில் 81.284 டன் எடையுடைய ஒரு பெரிய கல் வைக்கப்பட்டுள்ளது. இக்கல்லை கோபுரத்தின் மேல் பகுதிக்குக் கொண்டு செல்ல இவ்வாலயத்தின் 6.44 கி.மீட்டர் துரமுள்ள சாரபல்லம் என்ற இடத்திலிருந்து மண்ணால் சாய்வு அமைக்கப்பட்டதாகச் செய்தகிள் கூறுகின்றன.

தஞ்சை பெரிய கோயிலின் முன்புறத்தில் ஒற்றைக் கல்லில் அமைக்கப்பட்ட அழகான ஒரு நந்தி காணப்படுகிறது. இதன் உயரம் 12 அடி ஆகும். இக்கல் பச்சைமலை என்ற இடத்திலிருந்து கொண்டு வரப்பட்டதாகும். இவ்வாலயத்திற்குக் கேரளத்தங்கள், இராஜராஜ, திருவனுக்கன் என்ற நுழைவாயில்கள் காணப்படுகின்றன. இவ்வாலயத்தின் விமானத்தின் மேல்பகுதியிலுள்ள செம்பு கலசம் இராஜராஜனின் பெயரால் அறியப்படுகிறது. இவ்வாலயத்தின் நுழைவாயிலில் முதலாம் இராஜராஜன் அவனது அரசியா ஆகியோரின் உருவங்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இவ்வாலயத்தைச் சுற்றிலும் ஒர பெரிய சுவர் எழுப்பப்பட்டுள்ளது. இது இவ்வாலயத்திற்குப் பாதுகாப்பைக் கொடுகின்றது. இக்காலத்தில் வாழ்ந்த குருவூர் தேவர் என்ற புலவர் தஞ்சைப் பெரிய கோயிலைப் புகழ்ந்து பல பாடல்களைப் பாடியுள்ளார்.

**கங்கைகொண்டசோழபுரம் ஆலயம்**

கங்கை கொண்ட சோழபுரம் திருச்சி மாவட்டத்தில் ஜெயம் கொண்டான் என்னும் ஊருக்கு அருகாமையில் உள்ளது. இங்குள்ள ஆலயத்தை முதலாம் இராஜேந்திரன் கட்டினான். இது அவனது வடஇந்திய போரின் வெற்றியின் ஞாபகர்த்தமாகக் கட்டப்பட்ட ஒரு வரலாற்று நினைவுச்சின்னம் ஆகும். தஞ்சை பெரிய கோயிலைக் கட்டிய இருபது ஆண்டுகளுக்குப்பின் இவ்வாலயம் கட்டப்பட்டது. இக்கோயில் அளவில் சற்றுச் சிறியதாயினும் தஞ்சைப்பெரிய கோயிலை ஒத்துள்ளது. முதலாம் இராஜேந்திரன் இக்கோயிலைக் கட்டுவதற்கு ஏராளம் நன்கொடைகளை வழங்கினான். இது நீள்சதுர வடிவம் கொண்டது. இது 340 அடி நீளமும் 100 அடி அகலமும் உடையது. இவ்வாலயத்தினுள் 40 தூண்கள் காணப்படுகின்றன. இதன் கோபுரம் 160 அடி உயரமுடையது. இக்கோயிலில் காணப்படும் சிற்பங்கள் தஞ்சை

பெரிய கோயிலைவிடவும் சிறப்பாகவும், அழகாகவும் உள்ளன. இதில் இடம்பெற்றுள்ள வெண்கலப்பதுமைகள் அக்காலத்துக் கலைத்திறனுக்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இதைச் சுற்றிலும் காணப்படுகின்ற கோட்டைச்சுவர் இவ்வாலயத்திற்கு போதிய பாதுகாப்பை அளிக்கின்றது. இவ்வாலயத்திற்கு தேவையான தண்ணீர் சுமார் மூன்று கிலோமீட்டர் தொலைவிலுள்ள பொன்னேரி என்ற நீர்தேக்கத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. தனது வடநாட்டுப்போரின்போது கங்கை ஆற்றிலிருந்து கொண்டுவரப்பட்ட தண்ணீரை இராஜேந்திரன் இந்த நீர்தேக்கத்தில் ஊற்றினான் எனச் சான்றுகள் கூறுகின்றன. திருவிழாக்காலங்களில் இவ்வாலயத்திற்குத் தேவையான விறகு சுமார் 1.5 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வானாதிபட்டம் என்ற கிராமத்திலிருந்து சேகரிக்கப்பட்டது. தஞ்சை ஆலயத்தைப் போன்று கங்கைகொண்ட சோழபுரம் ஆலயமும் இந்திய கட்டிடக்கலை வரலாற்றில் மங்காத இடத்தைப் பெற்றுள்ளது.

**பிற்கால ஆலயங்கள்**

பிற்கால ஆலயங்கள் கி.பி.1070க்கும் கி.பி.1250க்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டவைகள். இக்காலத்தில் ஏராளம் ஆலயங்கள் கட்டப்பட்டன. அவை அனைத்தும் அளவில் சிறியவைகள். இக்காலத்தில் கட்டப்பட்ட எல்லா ஆலயங்களும் ஒன்றுபோல் காணப்படுகின்றன. கி.பி.1113-ஆம் ஆண்டு முதலாம் குலோத்துங்கன் மேலக்கதம்பூர் என்ற இடத்தில் கட்டிய அமிர்தகாதேஸ்வரர் ஆலயம் இரதத்தினுடைய வடிவமைப்பைக் கொண்டது. இதன் ஒவ்வொரு பக்கமும் இரண்டு சக்கரங்கள் இருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது. இவன் தஞ்சாவூரில் சூரிய தேவனுக்கும் ஒரு ஆலயத்தைக் கட்டினான். இச்சூரியனார் கோயில் குலோத்துங்கன் பெயரால் குலோத்துங்கச் சோழ மார்த்தாண்டலயத்து சூரியதேவர் என அழைக்கப்படுகிறது. சோழநாட்டை விக்கிரமச்சோழன் ஆட்சிபுரிந்த காலத்தில் சிதம்பரம் ஆலயத்தைப் புதுப்பிக்கவும் அழகுப்படுத்தவும் ஏராளம் நன்கொடைகளை வழங்கினான். இரண்டாம் குலோத்துங்கனும் இவ்வாலயத்தைக் கட்டி முடிப்பதற்கு ஏராளம் பொருளுதவி செய்தான்.

சோழ அரசன் இரண்டாம் இராஜராஜன் தஞ்சாவூரில் திருப்பந்தல், தாரசூரம் ஆகிய இடங்களில் சிவனுக்காக ஆலயங்களை எழுப்பினான். இவ்வாலயங்கள் பன்னிரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சார்ந்தவை. தாரசூரம் ஆலயத்தில் காணப்படும் ஐந்து அடுக்குகளைக் கொண்ட விமானம் போன்ற அமைப்பு இவ்வாலயத்திற்கு அதிக வனப்பைக் கொடுத்துள்ளது. இதில் காணப்படும் திருமண்டபம் இரதத்தின் வடிவத்தையுடையது. இதை யானைகள் இழுத்துச் செல்வது போன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயத்தின் உட்சுவரில் பெரிய புராணக்காட்சிகள் அழகுற தீட்டப்பட்டுள்ளன. கட்டிடக்கலை வளர்ச்சிக்குத் தொண்டாற்றிய கடைசி சோழ அரசன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவான். இவன் திருப்புவனம் என்ற இடத்தில் காமகரேஸ்வர் ஆலயத்தைக் கட்டினான். இவ்வாலயத்தில் தீட்டப்பட்டுள்ள பரதநாட்டிய பெண்களை மத்தளம்,

இசைக்கருவிகள் ஆகியவற்றை மீட்டுபவர்களும், சீம்கங்களும், யானைகளும், பின்தொடர்வது போன்ற உருவமைப்பினைக் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, தாரசூரம், திருப்புவனம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் சோழ கட்டிடக்கலையை முழுமையாகப் பின்பற்றி எழுப்பப்பட்டவைகளாகும். இவைகளும் சோழ கட்டிடகலை வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

சோழர் காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் மக்களின் சமய உணர்வைத் தூண்டுபவைகளாக உள்ளன. இக்காலத்தில் வளர்ந்த சோழகலை தென்னிந்தியாவில் மட்டுமல்லாமல் பிறநாடுகளிலும் பரவின. குறிப்பாக, சோழநாடு வணிக உறவை ஏற்படுத்தியிருந்த இந்தோசீனா, தூரக்கிழக்கு ஆகிய நாடுகளில் இக்கலைப்பரவியது.

**அரண்மனைகள்**

சோழ அரசர்கள் கட்டிய அரண்மனைகள் அக்கால கலை, கட்டிடக்கலை வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. சோழ அரசர்கள் ஆடம்பரத்துடன் வாழ்ந்து வந்தனர். இதற்குத் தஞ்சை அரண்மனைச் சான்றாகும். இவர்கள் தஞ்சையில் மட்டுமன்றி பழையாறை, சிதம்பரம், காஞ்சி ஆகிய இடங்களிலும் நிர்வாக வசதிக்காக அரண்மனைகளைக் கொண்டிருந்தனர். முதலாம் இராஜேந்திரன் கங்கை கொண்ட சோழபுரம் என்ற இடத்தில் உள்கோட்டை என்ற மேட்டில் ஒரு பெரிய அரண்மனையைக் கட்டினான். இது அரண்மனைமேடு அல்லது மாளிகை மேடு என அழைக்கப்படுகிறது. அரண்மனைகளின் பாதுகாப்பிற்காக அதைச் சுற்றிலும் பெரிய மதில் சுவர்கள் எழுப்பப்பட்டுள்ளன. இவ்வரண்மனையில் சித்திரகூடம், அந்தபுரம் உட்பட அனைத்து வசதிகளும் காணப்பட்டன. அரண்மனைகளை அழகுபடுத்துவதற்காக அதன் சுவர்களில் சிற்பங்கள், ஓவியங்கள், மிருகங்கள், பறவைகள் ஆகியவற்றின் ஓவியங்கள் ஆகியவை பயன்படுத்தப்பட்டன. அக்காலத்தில் கட்டப்பட்ட அரண்மனைகளில் சில மட்டுமே இன்றும் நல்ல நிலையில் காணப்படுகின்றன.

**சிற்பங்கள்**

சோழர்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களும், அரண்மனைகளும் கல், இரும்பு, பித்தளை, தங்கம் ஆகியவற்றால் செய்யப்பட்ட சிற்பங்களால் அழகுபடுத்தப்பட்டன. ஆலயங்களில் காணப்படுகின்ற சிற்பங்களும், லண்டன், பாரிஸ், சென்னை, ஆம்ஸ்டர்டாம் ஆகிய பொருட்காட்சி சாலைகளில் பாதுகாக்கப்பட்டு வரும் சோழர்கால சிற்பங்களும் இக்கால சிறிய கலை வளர்ச்சியை வெளிப்படுத்துகின்றன. சிற்பிகள், கற்கள், உலோகங்கள் ஆகியவற்றால் தெய்வங்கள், தேவதைகள், துறவிகள், மக்கள், பறவைகள், நாட்டிய பெண்மணிகள், புராணக்கதைகள், மிருகங்கள் ஆகியவற்றின் சிற்பங்களை அழகுற வடிவமைத்துள்ளனர். இக்காலத்தில் உருவாக்கப்பட்ட சிற்பங்கள் மத சார்புடையவைகள் ஆகும். அவற்றுள் கொரங்கநாதர் ஆலயத்திலுள்ள தட்சிண மூர்த்தியின் சிற்பமும்,

புள்ளமங்கை ஆலயத்திலுள்ள துர்க்கையின் சிற்பமும், சிதம்பரம் ஆலயத்திலுள்ள நடராஜா் சிற்பமும் குறிப்பிடத்தக்கவைகளாகும். வைணவ ஆலயங்களில் திருமாலின் சிற்பம் மூன்று நிலைகளில் வடிவமைக்கப்பட்டள்ளன. சோழ நாட்டை ஆண்ட சில அரச, அரசிகளின் சிற்பங்களும் ஆலயங்களில் வைக்கப்பட்டிருந்தன. எடுத்துக்காட்டாக, முதலாம் இராஜராஜன், அவனது மனைவி ஆகியோரின் உருவங்கள் தஞ்சை பெரிய கோயிலின் நுழைவாயிலில் வைக்கப்பட்டுள்ளன. தஞ்சை கோயிலை அழகுப்படுத்த ஏராளம் சிற்பங்கள் சுவா்களில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. அவைகளுள் பித்தளைச் சிற்பங்கள் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும். மேலும் இக்கோயிலில் பித்தளைச் சிற்பங்களால் செய்யப்பட்ட 63 நாயன்மாா்களின் கதைகளை அவ்வாலய கல்வெட்டுக்கள் சிறப்புற விளங்குகின்றன. தாரசூரம் ஆலயத்தில் பெரியபுராணத்தின் கதைகள் அழகுறத் தீட்டப்பட்டுள்ளன. திருநெல்வேலி மாவட்டத்தில் திருவல்லீஸ்வரத்தில் அமைந்துள்ள சில ஆலயத்தில் சிவனுடைய சிற்பங்கள் அழகுற செதுக்கிவைக்கப்பட்டுள்ளன. சோழா்கால பித்தளைச் சிற்பங்களுள் பல்வேறு வடிவங்களைக் கொண்ட நடராஜனுடைய உருவங்கள் மக்களின் நன்மதிப்பைப் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் உலகம் முழுவதிலுமுள்ள பொருட்காட்சி சாலைகள் கவா்ச்சி பொருளாகப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் இவை தென்னிந்திய ஆலயங்களில் தெய்வங்களாக வணங்கப்பட்டு வருகின்றன. மக்கள் இவற்றை தெய்வங்களாக கருதுகின்றனா்.

**ஓவியங்கள்**

ஓவியக் கலையும் சோழா்காலத்தில் சிறப்புற்று விளங்கியது. இது பாண்டிய, பல்லவ ஓவியக்கலையைப் பின்னணியாகக் கொண்டது. இக்கால ஓவியா்கள் கறுப்பு, மஞ்சள், தவிட்டு நிறம், சிகப்பு, நீலம், பச்சை இளநீலம் ஆகிய நிறக்கலவைகளைப் பயன்படுத்தி ஆலயங்கள், அரண்மனைகள், வீடுகள் ஆகியவற்றை அழகுபடுத்தினா். தஞ்சாவூா், நாா்த்தமலை, மலையடிப்பட்டி, திருமாயம், மாமண்டூா், சித்தன்ன வாசல் ஆகிய இடங்களில் அமைந்துள்ள ஆலயங்கள் பல்வேறு வண்ணங்களை உடைய ஓவியங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இக்காலத்தில் தீட்டப்பட்ட ஓவியங்கள் சமய சாா்புடையவைகளாகும். தஞ்சை பெரிய கோயிலின் சுவரில் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ள பெரிய புராண, திருத்தொண்டா் புராண நிகழ்ச்சிகள் காண்பவா் மனதைக் கவா்கின்றன. சைவத் துறவி சந்தரரின் திருமணகாட்சி அழகுற தீட்டப்பட்டுள்ளன. மேலும் ஆலயங்களில் நாட்டிய பெண்கள், தேவகன்னியா் ஆகியோரின் ஓவியங்களும் தீட்டப்பட்டுள்ளன. குறிப்பாக, இக்காலத்தில் தீட்டப்பட்டுள்ள ஓவியங்கள் அக்கால, சமூக, சமய, கலாச்சார வரலாற்றை வெளிப்படுத்துகின்றன.

**இசை**

பாடல், நடனம், பாவனை ஆகியவற்றோடு இசைக்கு நெருங்கிய தொடா்பு உண்டு. புனிதப் பாடல்கள் புனித இசையாகக் கருதப்படுகின்றன. அரசா்களும், உயா்குடி மக்களும் நாடகம், கூத்து ஆகியவற்றை ஊக்குவித்தனா். இசைஞா்கள்

மத்தளம், துளைக்கருவி, நரம்பு கருவி ஆகிய இசை கருவிகளைப் பயன்படுத்தினர். இக்காலத்தில் யாள், வீணை ஆகியவையும் பயன்படுத்தப்பட்டன. ஆலயங்களில் ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோரின் பாடல்கள் பண்ணுடன் பாடப்பட்டன. இப்பாடல்களைக் கேட்ட மக்கள் பக்தி பரவசத்தில் மூழ்கினர். அக்கால ஆலயங்களில் இசைஞர்களின் சிற்பங்கள் அவர்களின் இசைக்கருவிகளுடன் வைக்கப்பட்டிருந்தன. குறிப்பாக, இசை மக்களைப் பெரிதும் கவர்ந்தது.

**நாட்டியம்**

சோழர்கள் நாட்டியக் கலையையும் வளர்த்தனர். ஆலயங்களில் காணப்பட்ட தேவதாசிகள் தெய்வங்களின் சிற்பங்கள் முன் நடனமாடினர். இவர்கள் ஆலயங்களில் காணப்பட்ட மண்டபங்களிலும் நடனமாடினர். இவர்கள் தமிழ் கூத்து, ஆரியக்கூத்து, சாக்கக் கூத்து ஆகியவற்றைச் சில முக்கிய தினங்களில் நடத்தினர். ஒவ்வொரு ஆலயங்களிலும் தனி நடன அரங்குகள் காணப்பட்டன. அரசர்களும் செல்வந்தர்களும் தேவதாசிகளுக்குப் பொன்னையும், பொருளையும், நிலத்தையும் தானமாகக் கொடுத்து ஆதரித்தனர். நாட்டிய பெண்களின் சிற்பங்களும், ஓவியங்களும் ஆலயங்களில் பாதுகாக்கப்பட்டு வந்தன.

**நாடகம்**

நாடகம் ஒரு முக்கியமான கலை ஆகும். நாடகங்கள் நாடக அரங்குகளிலும், நாடக சாலைகளிலும் நடித்துக்காட்டப்பட்டன. திருவிடை மருதூர் ஆலயகல்வெட்டு சோழ நாட்டில் நாடக அரங்குகள் இருந்தன எனக் குறிப்பிட்டுள்ளது. நாடக அரங்குகள் எல்லாவித வசதிகளையும் பெற்றிருந்தன. முதலாம் இராஜராஜன் காலத்தில் இராஜராஜவிஜயம், இராஜராஜேஸ்வர நாடகம் ஆகியவை பெரிய ஆலயங்களில் மட்டும் நடித்துக் காட்டப்பட்டன. நாயன்மார்கள், ஆழ்வார்கள் ஆகியோரின் வரலாறும் நாடகங்களாக நடிக்கப்பட்டன. குறிப்பாக, இக்காலத்தில் மக்கள் வீர நாடகங்களையும் சமய நாடகங்களையும் பெரிதும் விரும்பினர்.

## சமயம்

ஆலயம், மடம் ஆகியவை தென்னிந்தியாவிற்கு இந்துமதம் வழங்கிய இரண்டு நன்கொடைகளாகும். இவ்விரண்டு நிறுவனங்களும் மெதுவாக வளர்ச்சியடைந்து சோழர்காலத்தில் தங்களது செல்வாக்கை உறுதிப்படுத்தின. நாளடைவில் சமயமும், ஆலயமும் மக்களைக் கட்டுப்படுத்தியதோடு அவர்களது செயல்முறைகளை ஒழுங்குபடுத்தியது. இக்காலத்தில் இந்து சமயத்தின் இருபெரும் பிரிவுகளான வைணவம், சைவம் ஆகியவை தழைத்தோங்கின. அத்துடன் இச்சமயங்களைச் சார்ந்த வேறுபட்ட தத்துவங்களும் தோன்றின.

**சைவம்**

சோழர் காலம் தென்னிந்தியாவின் சைவ, வைணவ சமயங்களின் காலம் ஆகும். சோழ அரசர்கள் சைவ சமயத்தை ஆதரித்தது மட்டுமல்லாமல் அதன்

வளர்ச்சிக்காகப் பல ஆலயங்களையும் கட்டினர். அவற்றுள் பெரும்பான்மையும் சிவனுக்காக எழுப்பப்பட்ட ஆலயங்கள் ஆகும். சோழர்கால அரசிகளும் இந்து மத வளர்ச்சிக்கு அதிக அக்கரை காட்டினர். இவர்கள் ஆலயங்கள் கட்டுவதற்கு நன்கொடைகளை வழங்கினர். அவர்களுள் செம்பியன் மகாதேவி, வானவன் மகாதேவி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

இக்காலத்தில் சைவ துறவிகளான நாயன்மார்களும் அதன் வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டனர். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற இவர்களின் உருவங்கள் சைவ ஆலயங்களில் வைக்கப்பட்டன. இவற்றை மக்கள் தெய்வங்களுக்குச் சமமாகக் கருதி வணங்கினர். இவர்களின் பெயரால் திருவிழாக்கள் எடுக்கப்பட்டன. பவனியாகக் கொண்டு சென்றனர். நாயன்மார்களின் பெயரால் காஞ்சி, வழிவல்லம், திருவாதிகை ஆகிய இடங்களில் மடங்களும் நிறுவப்பட்டன. இவர்களின் பாடல்கள் ஆலயங்களில் பண்ணுடன் பாடப்பட்டன. இப்பாடல்கள் தமிழ் மொழியில் பாடப்பட்டதால் இவை சாதாரண மக்களை எளிதில் கவர்ந்தன.

சோழர் காலத்தில் தென்னிந்திய சைவர்களும், வட இந்திய சைவர்களுக்குமிடையே நெருங்கிய உறவு காணப்பட்டது. இது சோழ நாட்டில் சைவ சமயம் வலுவடைய காரணமாயிருந்தது. முதலாம் இராஜராஜன், முதலாம் இராஜேந்திரன் ஆகியோரின் காலத்தில் வாழ்ந்த நம்பியாண்டார் நம்பி பன்னிரெண்டு சைவத் திருமறைகளைத் தொகுத்து வெளியிட்டார். மேலும் இக்காலத்தில் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரின் கொள்கைகளை மையமாகக் கொண்ட சைவ சித்தாந்த தத்துவங்கள் தோன்றின. இத்தத்துவங்களுக்குச் சந்தனச் சரியார் பிரிவைச் சார்ந்த துறவிகள் புதுவிளக்கமளித்துச் சாதாரண மக்களிடையே மிக வேகமாகப் பரப்பினர். அவர்களுள் மெய்கண்டார், அருள்நந்தி, மறைஞானர், உமாபதி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவார்கள். சைவ மதத்தைச் சார்ந்த காபாலிகர், காலமுகர் ஆகியோரைப்பற்றியும் இக்கால சான்றுகள் குறிப்பிடுகின்றன.

**வைணவம்**

வைணவமும் சைவமும் இந்து சமயத்தின் இரு கண்களாகும். ஆனால் சோழர்காலத்தில் இவ்விரு சமயங்களும் சமமாகக் கருதப்படவில்லை. இச்சமயத்திற்குச் சொற்ப ஆலயங்களே சோழ நாட்டில் காணப்பட்டன. இருப்பினும் இது வைணவ துறவிகள், அறிஞர்கள் ஆகியோரின் கடும் முயற்சியால் சிறப்புற்று விளங்கியது. அவர்களுள் நாதமுனி குறிப்பிடத்தக்கவராவார். இருப்பினும் வைணவம் சோழர் காலத்தில் பல்வேறு இடையூறுகளைச் சந்திக்க வேண்டியதிருந்தது. திருமாலை வழிபட்ட வைணவர்கள் இக்காலத்தில் ஆச்சாரியர்கள் எனப்பட்டனர். இவர்கள் வைணவக் கருத்துக்களை ஆலயங்களிலும், மடங்களிலும், வீடுகளிலும் பாடல்கள் மூலமாகப் பரப்பினர். இக்காலத்தில் சிறந்து விளங்கிய நாதமுனி வைணவ நூலாகிய நாலாயிரதிவ்விய பிரபந்தத்தைத் தொகுத்து வெளியிட்டார். இதன் பாடல்கள் வைணவ ஆலயங்களில் பண்ணுடன் பாடப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் தங்கியிருந்த இவர் நியாயத்துவம் என்னும் தத்துவத்தை வகுத்தார்.

இவரது தத்துவம் வைணவத்தின் அடிப்படை கோட்பாடுகளிலிருந்து மாறுபட்டு காணப்பட்டாலும் மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது. இவர் ஏற்படுத்திய வைணவ சமய பிரிவிற்கு ஸ்ரீவைணவம் என்று பெயர்.

**யமுனாச்சாரியார்**

யமுனாச்சாரியார் நாதமுனியின் வழிவந்தவர் ஆவார். வைணவ சமயத்தின்பால் அதிக ஈடுபாடு கொண்ட இவர் சோழ மன்னனது அவையில் ஒரு பண்டிதரை வென்று சோழ அரசியால் ஆழவந்தார் என்னும் பட்டத்தைப் பெற்றார். இவர் வகுத்த கொள்கை விஷிஷ்ட அத்வைதம் என அழைக்கப்படுகிறது.

**இராமானுஜர்**

யமுனாச்சாரியருக்குப் பின் இராமானுஜர் வைணவ சமயத்தில் சிறப்புற்று விளங்கினார். இவர் கி.பி.1010-இல் செங்கல்பட்டு மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் என்னுமிடத்தில் பிறந்தார். இவரது காலத்தில் வைணவம் பல நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டியிருந்தது. இவர் காஞ்சியில் தங்கியிருந்த காலத்தில் சங்கரரின் அத்வைத கோட்பாட்டைக் கடைப்பிடித்தார். இக்கொள்கையில் வெறுப்புற்ற இவர் ஆழ்வார்களின் நூல்களைக் கற்றார் அதன்பின் ஸ்ரீரங்கத்தில் தங்கியிருந்து சமயத் தொண்டாற்றிய இவர் பல சமய நூற்களை எழுதினார். இவர்படைத்த நூற்களில் மிகவும் சிறந்தவை வேதாந்தசாரம், வேதாந்தசம்கிரகம், வேதாந்ததீபம் என்பவைகளாகும். இவர் பிரம்ம சூத்திரம், பகவத்கீதை ஆகிய நூற்களுக்கு விளக்க உரை எழுதியுள்ளார். விஷிஷ்ட அத்வைத கோட்பாட்டை தீவிரமாகக் கடைப்பிடித்தார். மக்களிடையே புரட்சிக் கருத்துக்களைப் பரப்பி அவர்களின் பேராதரவைப் பெற்றார். சாதாரண மக்கள் இறைவனை வணங்குவதற்காகச் சமூகக் கட்டுப்பாட்டை மீறி ஆலயங்களைத்திறந்தார். இவரது இச்செயலை சோழ அரசன் ஆதிராஜேந்திரன் மிக வன்மையாகக் கண்டித்ததோடு கடுமையான தண்டனையையும் வழங்கினார். இவரது செயல்கள் கட்டுக்கடங்காமல் போகவே ஆதிராஜேந்திரனுக்குப் பின் சோழநாட்டை ஆட்சிபுரிந்த முதலாம் குலோத்துங்கன் இவருக்கு மரணத்தண்டனையை வழங்கினான். வைணவ சமயத்தின் முதல் இரத்தசாட்சி இவரே ஆவார்.

**வடகலை தென்கலை பிரிவுகள்**

இராமானுஜருக்குப் பின் வைணவ சமயத்தில் அதன் கோட்பாடுகளின் அடிப்படையில் கருத்துவேறுபாடுகள் ஏற்பட்டன. கொள்கை, மொழி, இடம் ஆகியவற்றின் அடிப்படையில் இவர்கள் வடகலை, தென்கலை என இருபிரிவுகளாகப் பிரித்தனர். வடகலை பிரிவைத் தோற்றுவித்தவர் வேதாந்ததேசிகா ஆவார். இவர் சமஸ்கிருத மொழியில் 95 நூற்களையும் தமிழ் மொழியில் 25 நூற்களையும் இயற்றினார். இந்நூற்களில் வடகலை வைணவ கொள்கைகள் காணப்படுகின்றன. வடகலை பிரிவினரின் தலைமை மையமாகக் காஞ்சிபுரம் விளங்கியது. இவர்கள் ஜாதி பிரிவினைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். குறிப்பாகப் பிராமணர்களின்

மேலாதிக்கத்தை அங்கீகரித்தனர். வடகலையினர் தங்களது நெற்றியில் ஒரு தனிப்பட்ட நாமத்தைப் போட்டிருந்தனர். வழிபாட்டு வேளையில் மணியை அடிக்கின்ற பழக்கம் இவர்களிடையே காணப்பட்டது.

மணவாளமகாமுனிவர் தென்கலைப் பிரிவைத் தோற்றுவித்தார். இவர் கி.பி.1370 ஆண்டு பிறந்தார். இவர் திருமலை ஆழ்வார்மண்டபம் என்ற ஒன்றை ஏற்படுத்தித் தென்கலைக் கொள்கைகளை மக்களிடையே பரப்பினார். இவர்களின் தலைமை மையமாக ஸ்ரீரங்கம் விளங்கியது. இவர்கள் ஜாதி வேற்றுமைக்கு ஊக்கமளிக்கவில்லை. இறைவனின் முன் அனைவரும் சமம் என இவர்கள் வலியுறுத்தினர். இவர்கள் நெற்றியில் போட்ட நாமம் வடகலையினரின் நாமத்தைவிட மாறுபட்டிருந்தது. வழிபாட்டு வேளைகளில் மணியை அடிக்கின்ற பழுக்கம் இவர்களிடையே காணப்படவில்லை. குறிப்பாக வடகலையினரும், தென்கலையினரும் தென்னிந்தியா முழுவதும் பரவலாகக் காணப்பட்டனர்.

**சைவ சித்தாந்த தத்துவம்**

சைவ சித்தாந்த தத்துவத்தை உருவாக்கியவர்களில் முக்கிய பங்கு வகித்தவர்கள் மெய்கண்டார். அருள்நந்தி, உமாபதி, மணவாசகம் ஆகியோர் ஆவார்கள். மெய்கண்டார் அச்சுதகளப்பாளரின் மகன் ஆவார். இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் பெண்ணாடம் என்ற இடத்தில் பிறந்தார். சைவ சித்தாந்த தத்தவத்தை இவர் பரஞ்சோதி என்பவரிடம் பயின்றார். மெய்அறிவைப் பெற்றமையால் இவர் மெய்கண்டார் என அழைக்கப்பட்டார். சிவஞானபோதம் என்ற நூலை இயற்றினார். மூன்றாம் இராஜராஜன் காலத்தைச் சார்ந்தவர்.

அருள்நந்தி விழுப்புரத்திற்கு அருகாமையிலுள்ள திருத்துறையூர் என்னும் இடத்தைச் சார்ந்தவர். இவர் மெய்கண்டாரின் மாணவன். உண்மை விளக்கம் என்ற நூலை இவர் இயற்றினார். மணவாசகம், உமாபதி ஆகியோரும் சைவ சித்தாந்த கொள்கைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தனர். சைவ சித்தாந்தத் தத்துவங்கள் பக்தி, ஆத்மீகம், பாசம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

**வீரசைவனம்**

முதல் முதலில் வீரசைவம் கர்நாடகம் பகுதியில் தோன்றியது. அங்கிருந்து அது ஆந்திரதேசம், தமிழ்நாடு ஆகிய பகுதிகளுக்குப் பரவியது. இவர்கள் சிவனை லிங்கவடிவில் வழிப்பட்டனர். வேதக் கொள்கைகள் இவர்களால் புறக்கணிக்கப்பட்டது. மறுபிறப்பில் இவர்கள் நம்பிக்கை வைக்கவில்லை. குழந்தைத் திருமணத்தைக் கடுமையாக எதிர்த்தனர். விதவைகளின் மறுமணத்திற்கு ஊக்கமளித்தனர். பிராணமர் ஆதிக்கத்தை எதிர்த்தனர். கர்நாடக இலக்கியம் இவர்களால் வளர்ச்சியடைந்தது. இவர்களின் சமூக, சமய இயக்கத்தால் சமண, பௌத்த சமயங்கள் அதன் முக்கியத்துவத்தை இழந்தன.

### சைவ வைணவ மோதல்

சோழர்களின் ஆட்சியின் ஆரம்ப காலத்தில் சைவ, வைணவர்கள் நல்லிணக்கத்துடன் காணப்பட்டனர். சில இடங்களில் சைவ, வைணவ ஆலயங்கள் மிக அருகாமையில் அமைக்கப்பட்டிருந்தன. இதை நாம் சிதம்பரத்தில் காணலாம். அதேப்போன்று வைணவ தெய்வங்களின் உருவங்களை சைவ ஆலயங்களிலும், சைவ தெய்வங்களின் உருவங்களை சைவ ஆலயங்களிலும், சைவ தெய்வங்களின் உருவங்களை வைணவ ஆலயங்களிலும் வைக்கும் பழக்கம் நிலவிலிருந்தது. மேலும் தேவாரம், நாலாயிரத்திவ்யபிரபந்தம் திருவாசம் ஆகியவற்றின் முக்கிய பகுதிகளை வைணவ, சைவ ஆலயங்களில் பதித்து வைத்தனர். இந்நிகழ்ச்சிகள் சைவ, வைணவ நல்லிணக்கத்தைக் காட்டுகின்றன.

ஆனால் நாளடைவில் இவ்விரு சமயங்களும் ஒன்றை ஒன்று குறை கூறி எதிரிகளாயினர். இவர்களின் செயல்முறைகள் இந்து சமய வரலாற்றில் பெரும் களங்கத்தை ஏற்படுத்தியது எனலாம். சோழ நாட்டை ஆண்டுவந்த கோவிந்தராஜனின் சிலையை அகற்றிவிட்டு அவ்விடத்தில் நடராஜனின் சிலையை வைத்தான். இது போன்ற நிகழ்ச்சிகள் திருமாயன், புதுக்கோட்டை ஆகிய ஆலயங்களிலும் நிகழ்ந்தன. சில இடங்களில் சைவ, வைணவ துறவிகள் ஒன்றை ஒன்று மோதிக்கொண்டனர். இதன் விளைவால் சில இடங்களில் ஆலயவழிபாடுகள் தர்காலிகமாக நிறுத்தப்பட்டன. சைவ பிரிவினர் வைணவரோடு தொடர்பு கொள்வது விலக்கப்பட்டது. இதை மாறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர். இதன் விளைவால் நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டது. எனவே, சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலை நாட்ட அரசு கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. தீவிரவாதிகளுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. எஞ்சியோர் நாட்டிலிருந்து துரத்தியடிக்கப்பட்டனர். இச்சூழ்நிலையிலும் சோழ அரசர்கள் வைணவ சமயத்திற்கு உதவுவதை நிறுத்தவில்லை.

### மடங்கள்

ஆலயங்களைத் தவிர மங்களையும் சோழ அரசர்கள் தங்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைத்தனர். இம்மடங்களின் சமயக்கூட்டங்களும், மாநாடுகளும் நடத்தப்பட்டன. மடங்கள் கல்விக் கூடமாகவும் செயல்பட்டன. இவை இலக்கணம், மருத்துவம், சமயம் ஆகியவற்றைப் போதித்தன. இம்மடங்கள் பிராமணர்களுக்கும் துறவிகளுக்கும் உண்டி வழங்கின. ஆலயங்களைப் போன்று மடங்களுக்கும் நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டிருந்தன. இது யாத்திரீகர்களுக்கு உப்பு, குடிநீர், விளக்கு ஆகியவற்றை வழங்கின. இவைகள் நோயாளிகளுக்கு மருத்துவ உதவியையும் அளித்தன.

### பௌத்தமும் சமணமும்

இந்து மதத்தில் ஏற்பட்ட மறுமலர்ச்சியால் சமண பௌத்த மதங்கள் தமிழ்நாட்டில் வீழ்ச்சியுற்றன. பெரும்பான்மை சோழ அரசர்களும் மதசகிப்பு

தன்மையைக் கடைபிடித்ததால் எல்லாச் சமயங்களையும் ஒன்றுபோல் நடத்தினர். சோழ அரசர்கள் சமணபள்ளிகளுக்கு நன்கொடைகளை வழங்கினர் என இக்கால கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. சமண, பௌத்த சமயங்கள் சோழர்காலத்தில் வீழ்ச்சியடைந்தாலும் தமிழ்நாட்டில் சில மையங்களில் அவை சிறப்புற்று விளங்கின. கி.பி.11-ஆம் நூற்றாண்டு வரையிலும் நாகர்கோவிலிலுள்ள நாகம்மான் ஆலயம் ஒரு சமண மையமாக விளங்கியது. முதலாம் குலோத்துங்கன் தஞ்சாவூரில் ஒரு சமண பள்ளியைக் கட்டுவதற்கு உதவியளித்தான். பொதுவாக சோழ அரசர்கள் சமணத்திற்கு எதிரானக் கொள்கைகளைக் கடைப்பிடித்தனர். இதன் விளைவால் பல சமண மையங்கள் இந்து மையங்களாக மாற்றப்பட்டன. சமண மதம் வீழ்ச்சியடைகின்ற தருவாயிலும் தமிழ் மொழி வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டாற்றின. திருத்தக்க தேவர் சீவக சிந்தாமணி என்ற நூலை இயற்றினார். பெருங்காதை என்ற நூலும் இக்காலத்தைச் சார்ந்தது ஆகும். பௌத்த சமயம் சமண சமயத்தைவிட மிக வேகமாக வீழ்ச்சியடைந்தாலும் அது தமிழ் மொழிக்கும், சமூகத்திற்கும் ஆற்றிய தொண்டைக் குறைத்து மதிப்பிடஇயலாது.

**அம்மன் கோயில்கள்**

சங்ககாலம் முதலே அம்மை வழிபாட்டு முறை தமிழகத்தில் நடைமுறையிலிருந்தது. சோழர்கள் இவ்வழிபாட்டு முறைக்குப் புத்துயிர் அளித்து பல ஆலயங்களைக் கட்டினர். இவ்வாலயங்களுக்குத் திருகாமக்கோட்டம் என்று பெயர். முதலாம் இராஜராஜன் காலம் முதல் இத்தெய்வத்திற்கு ஆதரவளித்து பல ஆலயங்கள் கட்டப்பட்டன. சைவ, வைணவ ஆலயங்களில் அம்மனுக்குத் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டன. தீமையிலிருந்து விடுபட மக்கள் இத்தெய்வத்தை வணங்கினர்.

**விநாயகர் வழிபாடு**

தமிழர்களுக்கு விநாயகர் புதியவர். திரவிடர்களின் தெய்வங்களின் பட்டியலில் விநாயகர் இடம்பெறவில்லை. தமிழகத்தை முற்றுகையிட்ட ஆரியர்கள் விநாயகரை வெறுத்தனர். பல்லவ நாட்டை ஆண்டு வந்த முதலாம் நரசிம்மன் தனது சாளுக்கியப் படையெடுப்பின்போது தனது வெற்றியின் சின்னமாக விநாயகரை வாதாபியிலிருந்து தமிழ்நாட்டிற்குக் கொண்டுவந்தான். இராஜசிம்மனின் காலம் வரையிலும் இது இந்து ஆலயங்களில் அனுமதிக்கப்படவில்லை. அதன்பின் இதற்கு முக்கியத்துவம் அளித்து பாங்குடி, திருப்பந்தலூர், திருக்காட்டலை ஆகிய ஆலயங்களில் விநாயகருக்குத் தனி இடங்கள் ஒதுக்கப்பட்டன. தற்போது விநாயகர் வழிபாடு முறை தமிழ்நாட்டில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

**நவகிரக வழிபாடு**

சோழர் காலத்தில் நவகிரக வழிபாடு தமிழகத்தில் சிறப்புற்று விளங்கியது. சோழ அரசர்கள் தங்களது பிறந்த நாட்களில் ஆலயங்களில் திருவிழாக்கள் நடத்தினர். அதேப்போன்று நவகிரக வழிபாட்டு முறையும் சோழ நாட்டில்

பின்பற்றப்பட்டது. இவ்வழிபாட்டு முறை மக்களிடையே பெரும் செல்வாக்குப் பெறவே சூரிய இறைவனுக்குத் தனி ஆலயங்கள் கட்டப்பட்டன. முதலாம் குலோத்துங்கன் காலத்தில் சூரிய கடவுள் ஆலயத்தில் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. சூரியகிரகண - நாட்களில் இவ்வாலயங்களில் சிறப்புத் திருவிழாக்கள் நடத்தப்பட்டன. இவ்வாறு சோழர் காலத்தில் பல்வேறு சமயங்கள் சிறப்புற்று விளங்கின.

**ஆலய பொருளாதாரம்**

ஆலயம் சமூகம், பொருளாதாரம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் அமைப்பாகவும், மக்களிடையே சமய உணர்வைத் தூண்டும் கருவியாகவும் செயல்பட்டது. சோழர் காலத்தில் சிறப்புற்று விளங்கிய ஆலயங்கள் கோட்டைகள், கருவூலங்கள், பூங்காக்கள், பொருட்காட்சி மையங்கள், கல்வி மண்டபங்கள், கவின்கலை மன்றங்கள் ஆகியவைகளைக் கொண்டிருந்தன. ஆலயங்கள் சமயத்தொண்டாற்றியது மட்டுமல்லாமல், மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கான செயல்களிலும் ஈடுபட்டன. இக்காலத்தில் ஏராளம் அழகிய வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆலயங்கள் கட்டப்பட்டன. இவ்வாலயங்களுக்குச் சொந்தமாக ஏராளம் நிலங்களும், தங்கம் உட்பட பல வித விலையுயர்ந்த செல்வங்களும் காணப்பட்டன. ஆலயங்களின் அன்றாட நிர்வாகத்தைக் கவனிக்க பல்வேறு அதிகாரிகளும், சமயச்சடங்குகளை நடத்துவதற்குப் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த கலைஞர்களும் நியமிக்கப்பட்டிருந்தனர். நடனமாதர், நாட்டிய குருக்கள், பாடகர்கள், ஊதுகின்றவர், மத்தளம் அடிப்பவர், தையல்காரர்கள், குயவர்கள், பார்பர்கள், யோசியர்கள், கணக்காயர்கள் ஆகியோர் ஆலயங்களில் பணிக்காக அமர்த்தப்பட்டனர் என இக்கால கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன.

ஆலயங்கள் இவர்களுக்கு ஊதியமாக நிலங்களை மானியமாக வழங்கியது. நிலத்தை ஊதியமாக வழங்கப்படாதவர்களுக்கு, ஒரு குறிப்பிட்ட அளவு நெல் அல்லது ஆலயத்தில் தயாரிக்கப்பட்ட உணவில் ஒரு பகுதி ஊதியமாக அளிக்கப்பட்டது. சில வேலைகளில் இவர்களுக்கு நிலமும், வீட்டுமனையும், உணவும் ஊதியமாக வழங்கப்பட்டன. சில பணிகளுக்கு ஊதியமாக ஒவ்வொரு நாளும் ஒரு குறிப்பிட்ட அளவு நெல்லும், வருடத்திற்கு ஒரு குறிப்பிட்ட அளவு தங்க நாணயமும் அளிக்கப்பட்டன. இவ்வூதியம் ஆலயத்திற்கு ஆலயம் பணியாளர்களின் பணியின் தன்மையைப் பொறுத்து மாறுபட்டுக் காணப்பட்டன. ஆலயங்களில் காணப்பட்ட உருவங்களையும், அவைகளுக்கு அணியப்பட்டிருந்த ஆடைகளையும் புனித நீரால் சுத்தம் செய்ய தனிப் பணியாட்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்குக் குறிப்பிட்ட சிறப்பு ஊதியம் வழங்கப்பட்டது. சலவைக்காரர்கள் ஆலயத்தில் காணப்பட்ட விளக்குகளுக்குத் தேவையான பருத்தி நூற்களை வழங்கினர். இவர்கள் தேவதைகளுக்கு முன்பாக விளக்குகளையும் ஏந்திச் செல்ல பயன்படுத்தப்பட்டார்கள். நிரந்தர பணியாளர்கள் மட்டுமல்லாமல், தற்காலிக பணியாளர்களையும் ஆலய பழுது பார்க்கும் பணிக்காக நியமிக்கப்பட்டனர். ஒரு

வீட்டு மனையும் ஒரு குறிப்பிட்ட அளவு நிலமும் இவர்களுக்கு ஊதியமாக அளிக்கப்பட்டது. பிராமணர்கள் வழிபாடுகளையும் பலிகளையும் ஆலயங்களில் நடத்தினர். இவர்கள் பரம்பரையாக இப்பணியைச் செய்து வந்தனர். மேற்குறிப்பிட்ட இப்பணியாளர்கள் ஆலயத்தோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். ஆலயத்திற்காகத் தங்கள் உயிரைக் கொடுக்கவும் இவர்கள் தயங்கியதில்லை. இக்கால ஆலயங்கள் மக்களின் பொருளாதார நிலையையும் நிர்ணயித்தன. இவைகள் மக்களுக்குப் பல்வேறு வேலை வாய்ப்புகளை அளித்தன.

இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் சோழ அரசர்களுக்கு இந்து மதத்தின் மீதுள்ள ஈடுபாட்டையும், கவின் கலைகள் மீதான நாட்டத்தையும் வெளிப்படுத்துகின்றன. மேலும் இவைகள் அக்காலத்தில் நாட்டை ஆட்சிபுரிந்த அரசர்களின் பொருளாதார நிலையையும் பிரதிபலித்து காட்டுகின்றன. முதலாம் இராஜராஜனும், முதலாம் இராஜேந்திரனும் எழுப்பிய ஆலயங்கள் இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆகும். இவைகள் வரலாற்றுச் சின்னங்களாக இன்றும் காட்சியளிக்கின்றன. சில ஆலயங்களுக்கு அரசர்களும் பிரபுக்களும் ஏராளம் செழிப்புமிக்க நிலங்களைத் தானமாக அளித்தனர். எடுத்துக்காட்டாக, முதலாம் இராஜராஜன் தஞ்சை ஆலயத்திற்கு ஏராளம் கிராமங்களைத் தானமாக வழங்கினான். இவற்றைத் தவிர மக்களால் வழங்கப்பட்ட நன்கொடைகளும், காணிக்கைகளும் ஆலயங்களில் குவித்துக் காணப்பட்டன. ஆலயங்களுக்கு தானமாக வழங்கப்பட்ட தேவதான நிலங்களுக்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு ஆலயங்கள் நிலப்பிரபுக்களைப் போன்று செயல்பட்டுவந்தன. இந்நிலங்களை ஆலய பணியாட்களால் விவசாயம் செய்யவோ அல்லது குத்தகைக்கு விடவோ செய்தனர். ஆலயங்களுக்குச் சொந்தமாக ஏராளம் கட்டிடங்களும் காணப்பட்டன. இவைகள் ஆலய பணியாளர்களுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. ஆலய மேற்பாவையாளர்கள் இவ்வாடகைகளை ஒழுங்காகப் பிரித்தனர். கட்டிட வாடகைகளும், நிலத்திலிருந்து கிடைத்த வருவாயும், கிடைத்த காணிக்கைகளும் ஆலயத்தின் வருவாயாகக் கருதப்பட்டது. சில ஆலயங்களில் வருவாய் அதிகமாகவும் சில ஆலயங்களில் வருவாய் குறைவாகவும் காணப்பட்டன. ஆலயங்களுக்கு ஏராளம் தோட்டங்களும் இருந்தன. இங்கிருந்து பூக்களும், பழங்களும் கிடைத்தன. பழங்கள் விற்பனை செய்யப்பட்டன. பூக்கள் ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டன.

ஆலயங்கள் ஏழைகளின் மறுவாழ்வு மையங்களாகச் செயல்பட்டன. இது ஆலயங்கள் ஆற்றிய மகத்தான சேவை ஆகும். ஆலயங்கள் உணவு, உடை, கல்வி ஆகியவற்றை ஏழைகளுக்கு அளிப்பதற்கு தனிநிதியை திரட்டியது. இந்நிதி ஆலய நிதியோடு சேர்க்கப்பட்டிருந்தது. சில ஆலயங்களில் கல்வி நிறுவனங்களும் காணப்பட்டன. கி.பி.1122-ஆம் ஆண்டைய கல்வெட்டு சோழ அரசன் குன்னூரில் உள்ள 44 கிராமங்களை ஆலயத்திற்குத் தானமாக வழங்கியதாகக் குறிப்பிடுகிறது. இக்கிராமங்களின் நெசவாளர்கள் குடியேற அனுமதிக்கப்பட்டனர். எண்ணாயிரம் கல்வெட்டும் இதைப்போன்று 45 வேலி நிலங்களை தானமாக வழங்கியதாகக்

குறிப்பிடுகிறது. சில ஆலயங்களில் கிடைத்த எஞ்சிய வருவாய்கள் ஏழைகளின் மறுவாழ்வுக்காகச் செலவிடப்பட்டன. ஆனால் சில ஆலயங்களில் இவ்எஞ்சிய வருவாய் விழாக்கள் கொண்டாடவும், தங்க அணிகலன்கள் உண்டுபண்ணவும், உலோக பாத்திரங்கள் உண்டுபண்ணவும் பயன்படுத்தப்பட்டன. இப்பொருட்கள் ஆலயத்தில் தனியாகப் பாதுகாக்கப்பட்டு வந்தன.

ஆலயத்தின் கட்டுப்பாட்டின் கீழ் ஏராளம் வீட்டுமனைகள் காணப்பட்டன. இவற்றைக் கட்டுவதற்கும் பயன்படுத்துவதற்கும் தனிச் சட்டங்கள் காணப்பட்டது. இவ்வீட்டுமனைகள் ஆலயத்தில் பணிபுரிந்த பணியாளர்களுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுக்கப்பட்டன. இவ்வாடகை ஆலய மேற்பாவையாளர்களால் ஒழுங்காகப் பிரிக்கப்பட்டது. இவ்வீடுகளைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் இத்தொகை செலவிடப்பட்டது. இவ்வீட்டுமனை விளாகத்தில் ஏராளம் தென்னை மரங்கள் காணப்பட்டன. இதிலிருந்து கிடைத்த எண்ணெய் ஆலயவழிபாடுகளுக்குப் பயன்படுத்தப்பட்டது. ஆலயங்கள் விவசாய வளர்ச்சிக்கும் அதிக அக்கரை காட்டின. ஆலயங்களுக்குச் சொந்தமான தரிசு நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டன. குத்தகைக்காரர்கள் இந்நிலங்களில் வாழை, கரும்பு, புளி, இஞ்சி, தென்னை ஆகியவற்றைப் பயிரிட்டனர். இவற்றிலிருந்து மிகக் குறைந்த அளவு வரி விதிக்கப்பட்டது. இவ்வரி தானியமாகவோ, தங்கமாகவே கட்டப்பட்டன. பொதுவாக இந்நிலங்களில் பிராமணர்கள் குடியமர்த்தப்பட்டனர். முதலாம் இராஜராஜன் காலத்தில் திருவலங்காடு ஆலயத்திற்குச் சொந்தமான நிலத்தில் 25 பிராமண குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டனர். இக்குடியேற்றம் இராஜேந்திரச்சோழப்பாடி என அழைக்கப்பட்டது. இதில் குடியேறியவர்கள் ஆலயத்திற்குச் சொந்தமான 15 ஆடுகளைப் பராமரிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டனர்.

ஆலயங்கள் குடிமக்களிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டன. பணியாளர்களின் அவசரத்தேவைகளுக்காக ஆலய நிதியிலிருந்து பணம் கடனாக அளிக்கப்பட்டது. இதேபோன்று வசதியற்ற குடியானவர்களுக்கும் நிலங்களைப் பராமரிக்கவும், விவசாயம் செய்யவும் கடனுதவி அளிக்கப்பட்டன. மேலும் ஏழைக் குடியானவர்களின் பெண்களின் திருமணத்திற்கும் ஆலயங்கள் நிதி உதவி அளித்தன. பணபற்றாக்குறை ஏற்படும்பொழுது ஆலயங்கள் தங்களுக்குச் சொந்தமான நிலங்களை விற்று கிராமத்தில் காணப்பட்ட குளங்களின் பராமரிப்புப் பணிகளை மேற்கொண்டன. சில சந்தர்ப்பங்களின் கிராமமன்றங்கள் வீட்டு மனைகள் வாங்குவதற்கும் ஆலயங்கள் கடனுதவியளித்தன. ஆலயங்கள் மீது மக்களுக்கு அதிக நம்பிக்கை காணப்பட்டதால் தங்களது எஞ்சிய செல்வங்களை ஆலயங்கள் சேமித்து வைத்தனர். இவ்வாறு ஆலயங்கள் பாதுகாப்பு பெட்டகங்களாகவும் செயல்பட்டன.

ஆலயங்களில் பல்வேறு பொருட்கள் உற்பத்திச் செய்யப்பட்டன. இவை பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டன. ஆலயப்பணியாட்கள் ஆலயத்துக்குச் சொந்தமான நிலத்தில் உற்பத்திச் செய்யப்பட்ட தேங்காய், சந்தனம், அரிசி, புளி,

இலை, பூ, விளக்கு, நெய், உப்பு, நல்லமிளகு, பாக்கு, வெத்திலை, சர்க்கரை, பழவகைகள், விறகு ஆகியவற்றை விலைக்கு வாங்கினர். குறிப்பாக இவர்கள் வாசனைப்பொருட்களை விரும்பி வாங்கினர்.

விவசாயம் செய்யும்பொழுது ஆலய நிலங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. குறிப்பாக, ஆலயநிலங்களுக்கு முதன் முதலில் குளம், கால்வாய் ஆகியவற்றிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. ஆலயத்திற்குச் சொந்தமாகத் தனிகுளங்கள் காணப்பட்டன. இவற்றின் நீரைப் பயன்படுத்த பொதுமக்கள் அனுமதிக்கப்படவில்லை. இதை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட்டதோடு மதவிலக்குச் செய்யப்பட்டனர். ஆலயத்திற்குச் சொந்தமாக ஏராளம் ஆடு, மாடுகளும் காணப்பட்டன. இவைகள் கிராமத்திலுள்ள புல்வெளிகளில் மேய்வதற்கு எத்தகைய தடையும் விதிக்கப்படவில்லை. குழந்தைகளின்றி இறப்போரின் சொத்துக்கள் ஆலயநிலங்களோடு இணைக்கப்பட்டன. திருமண வேளைகளில் கிராம மக்கள் ஒரு குறிப்பிட்ட தொகையை ஆலயத்திற்கு அன்பளிப்பாக அளித்தனர். ஆலயத்திற்குச் செல்லப்படும்போது அவற்றிற்கு வரி விலக்கு அளிக்கப்பட்டிருந்தது. ஆலயத்திலுள்ள உருவங்கள் தெருக்கள் வழியாகப் பவனியாகக் கொண்டு செல்லப்படும் பொழுது தேவையான விளக்கு வசதிகளை கிராம மன்றங்கள் அமைத்துக்கொடுத்தன.

ஆலயங்களில் பல்வேறு வகையான செல்வங்கள் குவிந்துகாணப்பட்டன. அரசர்களும், பிரபுக்களும், செல்வந்தர்களும் ஏராளமான விலையுயர்ந்த பொருட்களை ஆலயங்களுக்குத்தானமாக வழங்கினர். தஞ்சாவூர் ஆலயத்திற்குத் தானமாக அளிக்கப்பட்ட மணிகள், ஆபரணங்கள் மற்றும் தங்க, செம்பு பொருட்களைப் பற்றிய பட்டியலை அவ்வாலயக்கல்வெட்டுக்குறிப்பிடுகிறது. திருடர் பயத்தால் பாதுகாப்பதற்கு வசதியற்ற சில பொருட்கள் ஆலய அதிகாரிகளால் ஏலமிடப்பட்டன. குறிப்பாக, ஆலயங்களில் குவிந்து காணப்பட்ட செல்வங்கள் படையெடுப்பாளர்களின் கவனத்தைக் கவர்ந்தன. கி.பி.1310-ஆம் ஆண்டில் தமிழகத்தை முற்றுகையிட்ட மாலிக்காபூர் இங்குள்ள ஆலயங்களைக் சூறையாடி 1,92,000 கிலோ தங்கத்தை வடஇந்தியாவிற்குக் கொண்டு சென்றான். எனவே அறிஞர்களும், அரசியல் வாதிகளும், சீர்திருத்தவாதிகளும் ஆலயங்களில் குவிந்து காணப்படும் இச்செல்வங்களை ஆக்க வேலைகளுக்கு பயன்படுத்துமாறு வலியுறுத்துகின்றனர்.

**சமுதாயமும் ஆலயமும்**

சோழ அரசர்கள் இந்துமதத்தின் காவலர்களாகத் திகழ்ந்தனர். பல்லவர்களைப் போல சோழர்களும் வர்ணாசிரமதாமத்தை அமுல்படுத்துவதைத் தங்களது குறிக்கோளாகக்கொண்டிருந்தனர். எனவே இவர்கள் எண்ணிக்கையில் அதிகமான ஆலயங்களைத் தங்கள் பேரரசில் கட்டினார்கள். இந்த ஆலயங்களைத் தங்களது பேரரசில் கட்டினார்கள். இந்த ஆலயங்கள் ஆகமமுறைப்படி கட்டப்பட்டன. ஆலயங்கள் கட்டுவதைத் தங்களது நிர்வாகத்தின் ஒரு பாகமாகச் சோழஅரசர்கள் கருதியதால் அதற்கு ஏராளமான செல்வத்தையும், நிலத்தையும்

தானமாக அளித்தனர். ஆலயங்கள் கட்டுவதன் மூலம் தெய்வத்திற்கும், சமயத்திற்கும் சோழ அரசர்கள் தொண்டாற்றினர். இவர்கள் தங்கள் வருவாயின் பெரும் பகுதியை ஆலயம் கட்டுவதற்குச் செலவிட்டனர். மேலும் ஆலயங்களின் செயல்பாட்டிற்காக ஏராளம் மானியங்களை வழங்கினர். அரசர்கள் ஆலயங்களுக்குத் தானமாக அளிக்கப்பட்ட நிலங்களுக்குத் தேவதானம் என்று பெயர். ஆலயங்களில் ஏராளம் செல்வங்கள் குவிந்திருந்தன. இவைகள் தங்கம், தங்க ஆரபணங்கள், விலையுயர்ந்த கற்கள், பாத்திரங்கள், சிற்பங்களாக இருந்தன. ஆலயத்திலிருந்தும் ஆலய நிலங்களிலிருந்தும் கிடைத்த வருவாயும் ஆலயங்களிலேயே பாதுகாக்கப்பட்டன. இவ்வாறு ஆலயங்கள் நிலபிரபுக்களைப் போன்றும், கருவூலங்களைப் போன்றும் செயல்பட்டன. ஆலயங்கள் வளர்ச்சி அடையவே பிராமணர்களின் நிலையும் உயர்ந்தது.

ஆலயங்களில் பணிகள் பெருகவே, அதில் பணிபுரிய அதிகம் பிராமணர்கள் தேவைப்பட்டனர். எனவே ஏராளம் பிராமணர்கள் தெலுங்கு, கன்னடம், மைசூர், குஜராத் ஆகிய பகுதிகளிலிருந்து தமிழகத்திற்கு வரவழைக்கப்பட்டனர். இவர்கள் தங்குவதற்காகத் தனியிடங்கள் தானமாக அளிக்கப்பட்டன. இந்த இடங்களுக்குப் ‘பிரம்மதானம்’ என்று பெயர். பிராமணர்கள் தங்கிய இடங்களுக்குச் சதுர்வேதிமங்கலம், பிரம்மதேசம், மங்கலம், பிரம்மபுரம், பிரம்மமங்கலம், அகரம், அக்கிரகாரம், அக்ரபிரமதேயம், அக்ரபிரமதேசம் என்று பெயர். இந்நிலங்களில் மனிதவாழ்க்கைக்குத் தேவையான எல்லா வசதிகளும் காணப்பட்டன. இந்நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தன. இவர்களின் பாதுகாப்பிற்குத் தனிபடையும் அமைக்கப்பட்டிருந்தன. சில முக்கிய நாட்களில் பிராமணர்களுக்கு ஆலயங்களில் உணவு வழங்கப்பட்டது. குறிப்பாகப் பௌர்ணமி நாட்களில் பிராமணர்களுக்கு உணவு வழங்குவதற்குத் தனிநிதி ஒதுக்கப்பட்டிருந்ததாக முதலாம் குலோத்துங்கச்சோழனின் கல்வெட்டு குறிப்பிடுகிறது. பிராமணர்கள் தங்கிய இடங்கள் பொதுவாக ஆலயங்களின் அருகாமையிலேயே அமைந்திருந்தன. இவர்கள் அரசர்களின் ஆதரவை அவ்வப்போது பெற்றனர். அரசர்களின் நன்மதிப்பைப் பெற்ற இவர்கள் உயர்ஜாதியினராகக் கருதப்பட்டனர்.

சமுதாயத்தில் பிராமணர்கள் மதிப்பும், மரியாதையும் பெற்றிருந்தனர். சமயத்துறையில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக்கொண்ட இவர்கள் வேதம், புராணம், உபநிடம் ஆகியவற்றிற்கு விளக்கமளித்தனர். புராணக்கதைகளை, மக்களுக்குப் புகட்டினர். கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய இவர்கள் அரண்மனைகளில் இராஜகுருக்களாக அமர்த்தப்பட்டனர். நாளடைவில் அரசர்களின் ஆதரவைப்பெற்ற இவர்கள் அமைச்சர்களாகவும் நிர்வாகிகளாகவும் நியமிக்கப்பட்டனர். குறிப்பாகச் சோழர் காலத்தில் காணப்பட்ட முதல் அமைச்சர்களும், படைத்தளபதிகளும் பிராமணர்களாகவே காணப்பட்டனர். நீதிமன்றங்களில் நீதிபதிகளாகவும் இவர்கள் அமர்த்தப்பட்டனர். உயர்பதவி வகித்த இவர்கள் அரசர்களிடமிருந்து பல்வேறு சலுகைகளைப் பெற்றுவந்தனர்.

ஆலயங்கள் சமூகத்தோடு நெருங்கிய தொடர்புடையதாக விளங்கியது. இது மக்களுக்கு வேலைவாய்ப்புக்களை அளித்தது. குறிப்பாக மக்கள் ஆலயத்திலும், ஆலய நிலங்களிலும் வேலைக்காக அமர்த்தப்பட்டனர். மேலும் குயவர்கள், கொல்லர்கள், பொற்கொல்லர்கள், சலவைத்தொழிலாளர்கள் ஆகியோரும் ஆலயங்களில் பணிபுரிந்தனர். அக்காலத்தில் ஆலயங்கள் எல்லா வசதியும், வளமும் பெற்று விளங்கியதால் ஏராளம், மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளித்துவந்தது. தஞ்சாவூர், திருவாரியூர் ஆலய கல்வெட்டுக்கள் ஆலயங்களில் பணிபுரிந்த பணியாட்களையும், அவர்களுக்கு அளிக்கப்பட்டுவந்த ஊதியத்தையும் பற்றிக் குறிப்பிட்டுள்ளன.

வீடற்ற பணியாளர்களுக்கு வீடுகளை அமைத்துக்கொடுப்பதிலும் ஆலயங்கள் முக்கிய பங்கு வகித்தன. இதற்கென ஆலயவளாகத்தில் கட்டப்பட்ட வீடுகளிலிருந்து மிகக்குறைந்த கட்டணமே வரியாக வசூலிக்கப்பட்டன. மேலும் ஆலயங்கள் சாதாரண மக்களுக்கு உடையும், உண்டியும் அளித்த ஆதரித்தன. ஆலயங்கள் மக்களுக்குக் கல்வி புகட்டுவதிலும் அதிக அக்கரை காட்டியது. இக்கல்வி சமய சார்புடையதாக விளங்கியது. மேலும் ஆலயங்கள் பொது மக்களுக்கு மருத்துவ உதவியும் அளித்து வந்தன. இவற்றிற்கெல்லாம் மேலாக கிராமத்தில் காணப்பட்ட விவசாயிகளுக்கு விவசாயம் செய்யவும், நிலங்களைச் செப்பனிடவும் ஆலயங்கள் பொருளுதவி அளித்தன. ஆலயங்களின் இச்செயல்கள் விவசாயிகள்மீது அவைகள் கொண்டிருந்த அக்கரையைக் காட்டுகிறது. மேலும் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களில் அதிக அளவில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதால் கிராமத்தில் நிலவிய உணவு பற்றாக்குறை கணிசமான அளவு குறைக்கப்பட்டது.

பொதுவாக, தேவதான, பிரம்மதான நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களுக்குக் கிராம மக்களிடையே அதிக கிராக்கிக் காணப்பட்டது. ஆலயங்கள் அக்காலத்தில் சிறந்த கலைக்கூடங்களாகவும் திகழ்ந்தன. அக்கால ஆலயங்களும், மடங்களும் நாட்டியம், நாடகம், இசை, சிற்பம், ஓவியம் ஆகியவற்றைப் பேணி வளர்த்தன. மக்கள் இவற்றைக் கண்டுகளித்தனர். இவ்வாறு ஆலயங்கள் கலாச்சார, பொருளாதார, சமூக வளர்ச்சிக்குப் பெரும் பங்கு ஆற்றின.

அக்காலத்தில் கிராமங்களிலும், நகரங்களிலும் வாழ்ந்த மக்கள் ஆலயங்களோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். எனவே இவர்கள் ஆலங்களைச் சுற்றிலும் அதிகமாக வசித்தனர். நாளடைவில் மக்கள் தொகை பெருகவே ஆலயங்களை மையமாகக் கொண்ட புதிய கிராமங்களும், நகரங்களும் பல்கிப்பெருகின. அக்காலத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களாக ஆலயங்கள் மட்டுமே காணப்பட்டதால் மக்கள் அதற்கு பெரும் மதிப்பையும், முக்கியத்துவத்தையும் அளித்தனர். மேலும் அக்காலத்தில் நிலவிய அறிவியல் பொருளாதார சூழ்நிலைகள், மக்களுக்கு ஆலயங்களோடு நெருங்கிய ஈடுபாட்டை ஏற்படுத்தியது. பிரம்மதான, தேவதான நிலங்களுக்கு அருகாமையில் அதிகமாக

குடியேறிய மக்கள் பிராமணர்களையும், ஆலயங்களையும் தங்களது வழிகாட்டியாகவும், பாதுகாவலராகவும் கருதினர். இதைத் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்ட பிராமணர்கள், ஆலயத்தின் பெயரால் மக்களைக் கட்டுப்படுத்தினர். இவ்வாறு மதசார்புடைய சமுதாயம் உருவானது.

வர்ணாசிரமக்கொள்கையைச் சோழர்கள் முழுமையாகக் கடைபிடித்ததால் சமுதாயத்திலும், சமயத்திலும் பிராமணர்கள் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டினர். கிராமங்களின் அன்றாட செயல்பாட்டில் தலையீடு செய்து அதன் செயல் முறைகளைத் தங்களுக்குக் சாதகமாக ஒழுங்குபடுத்தினர். நிலச்சுவாந்தார்கள் போல் செயல்பட்ட இவர்கள் அரசின் பெயராலும், ஆலயத்தின் பெயராலும் கிராமமக்களிடமிருந்து நிலவரி, வீட்டுவரி ஆகியவற்றைப் பிரித்தனர். சமுதாயத்தில் அதிக செல்வாக்குப்பெற்று விளங்கிய பிராமணர்கள் பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட குடிமக்களைத் தீண்டாதவர்கள், அடிமைகள் எனப் புறக்கணித்தனர். உரிமைகள் பறிக்கப்பட்ட இவர்கள் சமயத்தின் பெயராலும், அரசின் பெயராலும், ஒடுக்கப்பட்டனர். இவர்களை இடங்கையினர் என முத்திரை குத்தினர். நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே, புறக்கணிக்கப்பட்ட இடங்கையினர், சமயத்தின் பெயராலும், அரசின் பெயராலும் ஏகபோக வாழ்க்கை வாழ்ந்த பிராமணர்களுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர். இவர்களுக்குப் பாதுகாப்பளித்த ஆலயங்களை இடித்துத் தள்ளியதோடு பண்டாரங்களைச் சூறையாடினர். நிலவுடைமையை எதிர்த்த இவர்கள் வரிகட்ட மறுத்தனர். இதனால் சமுதாயத்தில் அமைதியின்மை நிலவியது. பிராமணர்கள் தங்கிய இடங்களும் நிர்மூலமாகக்கப்பட்டன. கி.பி.1071-இல் பிராமணர்கள் தங்கிய சதுர்வேதிமங்கலத்தை மக்கள் தீக்கிரையாக்கியதாகப் பொறிப்புக்கள் குறிப்பிடுகின்றன. இவ்வாறு பிராமணர்கள் ஆலயங்களைத் தவறான முறையில், தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தியதால் சமூகத்தில் விரிசல்கள் ஏற்பட்டன.

**வலங்கை, இடங்கைப் பிரிவினர்**

சோழசாம்ராஜ்யத்தில் நிலவிய வலங்கை, இடங்கைப் பிரிவினை அச்சமூகத்தில் நிலவிய சமூக ஏற்றத்தாழ்வை சுட்டிக்காட்டுகின்றன. இப்பிரிவுகள் எப்போது தோன்றின என்று திட்டவட்டமாகக் கூற இயலவில்லை. இவர்களைச் சோழ அரசன் கரிகாலனோடு தொடர்புபடுத்திக் கூறுகின்றனர். அவர்களுள் ஒரு பிரிவினர் கரிகாலனின் வலதுபுறமும், மறுபிரிவினர் இடதுபுறமும் நின்று தங்களது குறைகளை முறையிட்டனர். அரசனின் வலதுகைப்பக்கம் நின்றவர்கள் வலம்கையினர் எனவும், இடதுகைப்பக்கம் நின்றவர்கள் இடம்கையினர் எனவும அழைக்கப்பட்டதாகக் கட்டுக்கதைகள் குறிப்பிடுகின்றன. வலம்கை, இடம்கை, பிரிவுகளில் 98 உட்பிரிவுகள் அல்லது இனங்கள் வீதம் காணப்பட்டன. எனப் புராணச்சான்றுகள் கூறுகின்றன. ஆனால் சோழ கல்வெட்டுகள் இப்பிரிவின் ஒன்றிற்கொன்று எதிரிகளாகச் செயல்பட்டனர் எனக் குறிப்பிடுகிறது. பிற்காலத்தில் வலுவடைந்த இப்பரிவுகள் அரசியல், சமுதாயம், இராணுவம் ஆகிய துறைகளில்

தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்தினா். முதலாம் இராஜராஜனின் இராணுவத்தில் ஏராளம் படைப்பிரிவுகள் வலங்கையினரைக் கொண்டிருந்தது. சமுகத்தில் தங்களுக்கு இருந்த நிலையைக் குறிப்பிட இப்பிரிவுகளின் பெயர்களை மக்கள் பயன்படுத்தினா். வலங்கைப்பிரிவினருக்கு எல்லாவித அரசியல், சமுதாய, பொருளாதார, சமய சலுகைகளும் அளிக்கப்பட்டபோது இடங்கையினருக்கு இவைகள் மறுக்கப்பட்டன. தாழ்வாகக் கருதப்பட்ட இடங்கையினருக்குக் கல்வி, அரசாங்க வேலை, பாதுகாப்பு, நிலஉரிமை, ஆலயப்பிரவேசனம் மற்றும் பிற சிவில் உரிமைகள் மறுக்கப்பட்டன. தேவதாசிகள், நாட்டியப்பெண்கள் ஆகியோரிடையேயும் இப்பிரிவுகள் வேரூன்றி இருந்தன. குறிப்பாக, இடங்கையினரின் நிலைபரிதாபகரமாக இருந்தது. அரசாங்கமும், உயர்குடியினரும் இப்பிரிவினருக்கெதிராகச் செயல்பட்டதால் ஆத்திரமடைந்த மக்கள், சமூகத்தில் அமைதியின்மையை ஏற்படுத்தினா். இது முதலாம் குலோத்துங்கன் ஆட்சி காலத்தில் தீயவிளைவுகளை ஏற்படுத்தியது. குறிப்பாக கி.பி.1071-ல் பிராமணா்கள் தங்கியிருந்த சதுா்வேதிமங்கலத்தையும், ஏராளம் ஆலயங்களையும் இவா்கள் தீக்கிரையாக்கியதாகச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. அரசு அடக்கு முறைகளைக் கையாண்டு இக்கலங்களை ஒடுக்கியது. இடம்கையினரை அரசு திருடர்கள், சமூக வீரோதிகள் எனக்குறை கூறி வன்மையாகத் தண்டித்தது. சோழா்காலத்திற்குப் பின்பும் இப்பிரிவினா் தமிழ்நாட்டில் காணப்பட்டனா்.

### தேவதாசி முறை

தென்னிந்தியாவில் காணப்பட்ட ஆலயங்களில் பணிபுரிந்தவா்களில் தேவதாசிகள் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனா். ஆலயங்களில் காணப்பட்ட தெய்வங்களுக்குத் தங்களை அற்பணித்துக்கொண்டவா்கள் 'தேவதாசிகள்' என அழைக்கப்பெற்றனா். தெய்வத்திற்குப் பணிவிடை செய்ய தெரிவுசெய்யப்பட்ட இவா்கள் 'தேவரடியாா்கள்' எனப்பட்டனா். வயதிற்குவராத அழகிய பெண்கள் மட்டுமே தேவதாசிகளாகத் தெரிவு செய்யப்பட்டனா். பொதுவாக ஆறுவயதிற்கும், ஒன்பது வயதிற்கும் இடைப்பட்ட காலத்தில் இவா்கள் தேவதாசிகளாக அற்பணம் செய்யப்பட்டனா். இவா்கள் தங்கிய வீடுகள் ஆலயங்களைச் சுற்றியுள்ள தெருக்களில் அமைந்திருந்தன. அழகான, இளமையான, கவா்ச்சிமிக்க இவா்கள் கலைவிழாக்களில் நிகழ்ச்சிகள் நடத்துவதற்கும், நிதித்திரட்டுவதற்கும் பயன்படுத்தப்பட்டனா். தேவதாசிகள் இசை, நடனம், நாட்டியம், மற்றும் பிற கலைகளில் தோ்ச்சி பெற்று விளங்கினா். மக்களின் புகழ்ச்சிக்குரியவா்களாக இவா்கள் காணப்பட்டாா்கள். மக்களோடு சுதந்திரமாகப் பழகிய இவா்கள் செல்வந்தா்களோடு நெருங்கிய உறவை வைத்திருந்தனா். ஆலயத்தில் நாட்டியமாடிய இவா்கள் ஆலயத்திற்கு வெளியே நடைபெற்ற சாந்திக்கூத்து, ஆரியக்கூத்து, காக்கைக்கூத்து, தமிழ்க்கூத்து ஆகியவற்றிலும் பங்கெடுத்தனா். கவா்ச்சியுடன் காணப்பட்ட இவா்கள் பிறருடன் ஆடம்பர வாழ்க்கை நடத்தினா். தங்களுக்குக் கிடைத்த வருவாயை ஆலயங்களுக்கு அற்பணித்தனா். ஆலயங்களில்

பணிகள் பெருகவே, தேவதாசிகளின் மதிப்பும் அதிகரித்தது. தேவதாசிகள் மீது அதிக நாட்டம் கொண்ட அரசர்கள் பிரபுக்கள், செல்வந்தர்கள் இவர்களை ஆதரித்தனர். இவர்கள் தேவதாசிகளின் பெயரில் ஆலயங்களுக்கு நன்கொடைகளை வழங்கினர். மூன்றாம் குலோத்துங்கனின் திருவாரியூர் ஆலயக் கல்வெட்டு நாட்டிய பெண் ஒருத்திக்காக ஆலயத்திற்கு நன்கொடை அளிக்கப்பட்டதைப் பற்றிய செய்தியைத் தருகின்றன. திருமண வாழ்க்கை நடத்துவதற்கும் இப்பெண்கள் அனுமதிக்கப்பட்டனர். கி.பி.1049 –ஆம் ஆண்டைச் சார்ந்த திருவாரியூர் கல்வெட்டு தேவதாசி ஒருத்தி குடிமகன் ஒருவனைத் திருமணம் செய்த செய்தியைக் குறிப்பிட்டுள்ளது. மூன்றாம் குலோத்துங்கனின் காலத்தைச் சார்ந்த தஞ்சாவூர் கல்வெட்டும் இத்தகைய ஒரு செய்தியைக் குறிப்பிட்டுள்ளது.

தேவர்களுக்குத் தங்களை அற்பணம் செய்துகொண்ட தேவரடியார்கள் ஆலயங்கள் அங்கீகரித்து அதற்கான முத்திரையைப் பதித்தன. கி.பி.1119-ஆம் ஆண்டு திருவல்லம் ஆலயத்திற்குச் சில பெண்கள் தங்களை அற்பணித்துக்கொண்டனர். தேவரடியார்களை விலைக்கு வாங்குகின்ற பழக்கமும் ஆலயங்களுக்குக் காணப்பட்டது. கி.பி.1119-ஆம் ஆண்டு நான்கு பெண்களை 700 காசுக்கு திருவலங்காடு ஆலயம் விலைக்கு வாங்கியது. இது இரண்டாம் இராஜாதிராஜனின் ஆட்சிக்காலத்தில் நிகழ்ந்தது. விலைக்கு வாங்கப்பட்ட இந்தக் தேவதாசிகள் மதஅடிமைகள் எனப்பட்டனர். இவர்களை அடிமைகளைப்போல் நடத்தினர். இவர்களுள் பெரும்பான்மையோர் பஞ்சத்தின் கொடுமையாலும், வறுமையினாலும் ஆலயங்களுக்கு விற்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அரசு ஆணையின் மூலம் தேவதாசிகள் ஒரு ஆலயத்திலிருந்து மற்ற ஆலயங்களுக்குத் தற்கால அரசு அலுவலர்களைப்போன்று மாற்றப்பட்டனர். எடுத்துக்காட்டாக 400 தேவதாசிகள் பிற ஆலயங்களிலிருந்து தஞ்சாவூர் ஆலயத்திற்கு மாற்றப்பட்டனர். இசை, நாட்டியம் ஆகியவற்றில் சிறந்து விளங்கிய தேவதாசிகளுக்குத் 'தலைக்கோல்' என்ற விருதை அளித்து கௌரவித்தனர். தேவதாசிகளின் உருவங்கள் ஆலயங்களில் கவர்ச்சிக்காகக் கொத்தி வைக்கப்பட்டன. குறிப்பாக, சிதம்பரம், திரிபுவனம், தஞ்சாவூர் ஆகிய ஆலயங்களில் தேவதாசிகளின் உருவங்கள் அதிகமாகக் காணப்படுகின்றன. சிதம்பரம் ஆலயத்திலுள்ள ஒரு கோபுரத்தில் தேவதாசிகளின் உருவங்கள் 108 பாவனைகளில் கொத்தி வைக்கப்பட்டுள்ளன.

செல்வத்தின் மீது அதிக நாட்டம் கொண்ட தேவதாசிகள் விபச்சாரத்தில் ஈடுபட்டனர். நாளடைவில் விபச்சாரம் தேவதாசிகளின் கைவந்த கலையாக மாறிவிட்டது. இச்செயலை மக்கள் எதிர்த்தனர். எனவே இதற்கெதிராகப் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. எனவே தேவதாசி என்ற அமைப்பு இறுதியில் கி.பி.1930-இல் சட்ட ரீதியாக நிறுத்தப்பட்டது. இருப்பினும் இம்முறை 'குடிகாரி' என்ற பெயரில் சில ஆலயங்களில் காணப்படுகிறது. பண்டைய தமிழக வரலாற்றில்

இசை, நாடகம், நாட்டியம் மற்றும் பிற கவின்கலை ஆகியவற்றின் வளர்ச்சிக்குத் தேவதாசிகள் ஆற்றிய தொண்டு விலைமதிப்பிட முடியாததாகும்.

**கல்வியும் கல்வி நிலையங்களும்**

பாரம்பரிய முறையிலான கல்விமுறை சோழர்காலத்தில் நடைமுறையிலிருந்தது. பிறப்பும், செல்வமும், கல்விகற்பதற்கு அடிப்படைத் தகுதிகளாயிருந்தன. ஆசிரியர்கள் தங்களது மாணவர்களைத் தேர்வு முறையில் தெரிவு செய்தனர். பொதுவாக ஆசிரியர்கள் உயர்குடியைச் சார்ந்த மாணவர்களையே தெரிவு செய்தனர். அக்கால சூழ்நிலைக்கேற்ற தொழிற்கல்வியும் சோழர்காலத்தில் நடைமுறையிலிருந்தது. அக்கால பழக்கவழக்கம், ஜாதி நெறிகள் ஆகியவற்றிற்குட்பட்ட தொழிற்கல்வி கலைஞர்களின் வீடுகளில் நடைமுறையில் இருந்தன. மேற்கூறிய கல்விமுறையின் மூலமாகக் குறிப்பிட்ட பிரிவினருக்கு மட்டுமே கல்விபுகட்டப்பட்டது. இதனால் சோழ நாட்டில் காணப்பட்ட பெரும்பாண்மை மக்களும் கல்வி அறிவு அற்றவர்களாகவே காணப்பட்டனர். எனவே நாட்டின் ஆக்கப்பணிகள் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது.

சோழர்காலத்தில் செயல்பட்ட கல்வி நிறுவனங்களைப் பற்றி அறிய போதிய சான்றுகள் இல்லை. கிராம பாடசாலைகள் அங்குக் காணப்பட்ட சாதாரண கல்வி நிலையங்கள் ஆகும். இது மரங்களின் நிகழ்களில், ஆலயங்கள் அல்லது மடங்களின் பணிபுரிந்த ஆசிரியர்கள் வாத்தி எனப்பட்டனர். கிராமத்திற்குச் சொந்தமான நிலங்களிலிருந்து கிடைத்த வருவாயிலிருந்து ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டது. சோழர்காலகல்வெட்டு ஒன்று தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பணியவாரம் என்ற இடத்திலுள்ள பாடாசலையில் செயல்முறைகளை விளக்குகின்றது. இந்தக் கிராம பாடசாலைகள் சமயசார்புடைய கல்வியை மாணவர்களுக்குப் போதித்தன. குறிப்பாக இராமாயணம், மகாபாரதம், புராணங்கள் ஆகியவற்றின் கருத்துக்கள் மாணவர்களுக்குப் போதிக்கப்பட்டன. மேலும் சைவதர்மம், சோமசித்தாந்தம், இராஜமானுஜபாஷ்யம் ஆகியவற்றின் தத்துவங்களும் போதிக்கப்பட்டன.

உயர்கல்விக்கும் அரசு ஊக்கமளித்தது. இது மதசார்புடையதாக விளங்கியது. உயர்கல்வி நிலையங்கள் ஆலயங்கள், மடங்கள் ஆகியவற்றுடன் இணைந்து காணப்பட்டது. இவைகள் மடம், பள்ளி, விகாரம், என்ற பெயர்களில் அறியப்பட்டு வந்தன. இந்த உயர்கல்வி நிலையங்களில் அனைத்து வசதிகளும் கொண்ட நூல்நிலையங்கள் காணப்பட்டன. இதில் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த கையெழுத்துப் பிரதிகள் பாதுகாக்கப்பட்டுவந்தன. நாட்கள் செல்லச்செல்ல இதனுடைய அளவு பெருகிக் கொண்டே சென்றது. இங்கு காணப்பட்டக்கல்லூரிகளில் ஏராளம் மாணவர்கள் கல்விபயின்றனர். இவர்கள் கல்விகற்பதற்கும், தங்குவதற்கும் அனைத்து வசதிகளும் இங்குக்காணப்பட்டன. திறமையுடைய மாணவர்கள் மட்டும் இக்கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் தேர்வு மூலம் தெரிவு செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்லூரிகளில் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த பாடங்கள் பயிற்றுவிக்கப்பட்டன. கல்லூரிகளைத்தவிர தனிநபர்களால் நடத்தப்பட்ட கல்வி நிறுவனங்களும் அக்காலத்தில் காணப்பட்டது. இதில் பிரபாதகார மிமாம்சா, இலக்கணம் ஆகியவை கற்பிக்கப்பட்டன. இந்த நிறுவனங்களுக்கும் அரசுமானியம் வழங்கியது.

சோழகல்வெட்டுக்கள் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய பல உயர்கல்வி நிலையங்களின் செயல்முறைகளை விளக்குகின்றன. இக்கல்வி நிலையங்களின் செயல்முறைகள் பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தன. நாட்டை ஆண்ட அரசர்களும், கொடை உள்ளம் கொண்ட பொதுமக்களும் இக்கல்வி நிறுவனங்களுக்குப் பொருளுதவி புரிந்தனர். சந்தோககிடைப்புறம் என்ற இடத்தில் காணப்பட்ட ஒரு வேத பாடசாலைக்குத் தென்னார்க்காடு மாவட்டத்தில் காமபுள்ளூர் என்ற இடத்திலுள்ள கிராம மக்கள் நிலத்தைத் தானமாக வழங்கியதாக கல்வெட்டு ஒன்று குறிப்பிடுகிறது. மேலும், சோழநாட்டை ஆட்சிபுரிந்த முதலாம் பராந்தகனும், சுந்தரசோழனும் கல்விநிறுவனங்களுக்காகக் கிராமசபையிடமிருந்து நிலத்தை விலைக்கிவாங்கியதாக மற்றோர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. கி.பி.999-ஆம் ஆண்டு, முதலாம் இராஜராஜன் ஆட்சி காலத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தில் அரூர் என்ற இடத்திலுள்ள மகாசபை பட்டா என்ற பாட்டாச்சாரியருக்குக் கல்வி நிறுவனம் அமைப்பதற்கு அனைத்து வசதிகளும் செய்து கொடுத்ததாக இக்கால கல்வெட்டுக் குறிப்பிடுகிறது. இவர் வேதம், இலக்கணம், மற்றும் பிற பாடல்களை மாணவர்களுக்குப் போதித்தார். இந்தக் கல்வி நிறுவனம் மிகவும் சிறப்புற்று விளங்கியது.

முதலாம் இராஜேந்திரனின் ஆட்சிகாலத்தில் தென்னார்க்காடு மாவட்டத்தில் எண்ணாயிரம் என்ற இடத்தில் காணப்பட்ட இராஜராஜசதுர்வேதிமங்கலம் என்ற கிராமத்திலுள்ள சபை அரசனின் ஆலோசனையின் பெயரில் வேதகல்லூரி ஒன்றை நிறுவியது. இக்கல்லூரியின் செயல்முறைகளை மேற்பார்வையிட அரசு அதிகாரி ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருந்தார். இக்கல்லூரி 270 இளநிலை மாணவர்களுக்கும் 70 முதுநிலை மாணவர்களுக்கும் உயர்கல்விபுகட்டியது. இக்கல்லூரியில் 14 ஆசிரியர்கள் பணிபுரிந்தனர். அரசு ஆசிரியர்களின் ஊதியத்திற்கும், மாணவர்களின் உணவு வசதிக்கும் அனைத்து வசதிகளையும் செய்து கொடுத்தது. இக்கல்லூரியில் மாணவர்கள் தங்கி கல்விகற்றனர். இங்கு இலக்கணம், அதர்வணவேதம், பௌதாயனகிரயஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. இது தென்னிந்தியாவிலுள்ள கல்வி நிறுவனங்களில் மிகவும் சிறப்புற்று விளங்கியது.

இதேபோன்ற கல்லூரி ஒன்ற பாணடிச்சேரியிலுள்ள திரிபுவனி என்னுமிடத்தில் காணப்பட்டதாகக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இக்கல்லூரியில் 260 மாணவர்களும் 12 ஆசிரியர்களும் காணப்பட்டார்கள். எண்ணாயிரம் என்ற இடத்தில் காணப்பட்ட கல்லூரியில் கற்பிக்கப்பட்ட பாடங்கள் இங்கும் கற்பிக்கப்பட்டன. கி.பி.1048-ஆம் ஆண்டைச் சார்ந்த இராஜாதிராஜன் கல்வெட்டு இக்கல்லூரியின்

செயல்முறைகளையும் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் அளிக்கப்பட்ட நிதி உதவியையும் விளக்குகிறது. ஆசிரியர், மாணவர் ஆகியோரின் நிலைகளுக்கு ஏற்றவாறு இவர்களுக்கு நாள்தோறும் தானியங்கள் படியாக அளிக்கப்பட்டன. இக்கல்லூாயீல் கல்விகற்பித்த ஆசிரியர்களும், கல்விபயின்ற மாணவர்களும் கிராமத்திலுள்ள குழுக்கள் உறுப்பினர் பதவிகளுக்குப் போட்டியிட அனுமதிக்கப்படவில்லை என இக்கால கல்வெட்டுக்கள் குறிப்பிடுகின்றன. அரசியல் ஈடுபாடு இன்றி தன்னிச்சையாக இக்கல்லூரி செயல்பட்டது என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது.

கி.பி.1067-ஆம் ஆண்டைச் சார்ந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திருமுக்கூடல் கல்வெட்டு சோழநாட்டை ஆண்ட வீரராஜேந்திரன் என்ற அரசன் ஒரு மகாவிஷ்ணு ஆலயத்திற்கு அளித்த நிதியைப்பற்றிய செய்தியைக் குறிப்பிடுகிறது. இந்நிதி அங்குக் காணப்பட்ட ஒரு கல்லூரிக்கும், மருத்துவமனைக்கும் செலவிடப்பட்டதாக இக்கல்வெட்டு குறிப்பிடுகிறது. இது ஒரு சிறிய கல்வி நிறுவனம் ஆகும். இங்கு இரண்டு ஆசிரியர்களும் இருபது மாணவர்களும் காணப்பட்டனர். இங்கு வேதமும் வாயாகரணமும் கற்பிக்கப்பட்டன. இதில் கல்வி கற்பித்த தேவ ஆசிரியருக்கு நான் ஒன்றுக்கு ஒரு படக்கு நெல்லும், ஆண்டு ஒன்றிற்கு நான்கு பொற்காசுகளும் ஊதியமாக அளிக்கப்பட்டன. ஆனால் இங்குள்ள வாயாகரண ஆசிரியருக்கு நான் ஒன்று இரண்டு படக்கு நெல்லும், ஆண்டு ஒன்றிற்கு பத்துப்பொற்காசுகளும் ஊதியமாக வழங்கப்பட்டன. இங்குள்ள வேதக்கல்லூரி ஒரு அத்தியாயன பாடசாலையாகும். இங்கு வாய்மொழிகல்வி நிலவிலிருந்தது. இங்குக் கல்விகற்ற மாணவர்களுக்குப் போதிய சிறந்த உணவும், தங்கும் வசதியும் அளிக்கப்பட்டது. மேலும் மாணவர்களுக்குத் தேவையான எண்ணெய், ஆடைகள், விளக்குள் போன்றவைகளும் கொடுக்கப்பட்டன. மாணவர்களுக்குத் தேவையான காரியங்களை இரண்டு வேலையாட்கள் கவனித்துவந்தனர். ஆனால் இக்கல்வெட்டு அங்குச் செயல்பட்டு வந்த மருத்துவமனையில் செயல்முறைகளைத் தெளிவுப்படுத்தவில்லை. இருப்பினும் சோழ அரசர்கள் இம்மருத்துவமனைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்தனர். எனச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. இங்குப் பணிபுரிந்த வைத்தியர்கள் எல்லாவித நோய்களையும் கவனித்து வந்தனர். இங்குப் பல்வேறு நோய்களுக்கான மருந்துக்கான பாதுகாக்கப்பட்டுவந்தன.

கி.பி.1121-ஆம் ஆண்டைச் சார்ந்த விக்கிரமச்சோழனின் கல்வெட்டு திருவாடுதுறை என்ற இடத்தில் காணப்பட்ட மருத்துவ பாடசாலையைப் பற்றியச் செய்தியைக்குறிப்பிடுகிறது. இப்பாடசாலையில் கல்விபயின்ற மாணவர்களுக்கு இலக்கணம், சாஸ்திரம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்பட்டன. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள பெருவெல்லூர் என்ற இடத்தைச் சார்ந்த ஆசிரியர் ஒருவர் இப்பாடசாலையில் மருத்துவ கல்வியைக் கற்பிக்க நியமிக்கப்பட்டார். இங்கு மாணவர்கள் தங்கி கல்விபயின்றதால் அவர்கள் தங்குவதற்கென வீடு ஒன்று ஒதுக்கப்பட்டிருந்தது. இப்பாடசாலைக்கென ஏராளம் மானியங்கள் அளிக்கப்பட்டு வந்தன. தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவிடைக்காளி என்னுமிடத்தில் கி.பி.1229-ல்

கொத்திவைக்கப்பட்ட கல்வெட்டு இப்பாடசாலையில் கல்வி பயின்ற மலபார் பகுதியைச் சார்ந்த ஒரு பிராமண மாணவனுக்கு அளிக்கப்பட்ட மானியத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது. இது பிற பகுதியிலிருந்தும் மாணவர்கள் இங்கு வந்து கல்வி பயின்றனர் என்பதை வெளிப்படுத்துகிறது. இராஜேந்திர சோழ சம்புவராயன் என்பவர் இங்குக் கல்விபயின்ற மாணவர்களின் பீஸ் கட்டணத்திற்காக ஒரு வைப்புநிதியை மானியமாக வழங்கினார், எனச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. சோழர் காலத்தில் பொலிவுற்று விளங்கிய பாடசாலைகளும் கல்லூரிகளும் சோழ அரசு வீழ்ச்சியடையவே அதன் முக்கியத்துவத்தை இழந்தன.

சோழர்கால கல்வெட்டுக்கள் அக்காலத்தில் காணப்பட்ட பாடசாலைகளிலும் கல்லூரிகளிலும் பின்பற்றப்பட்ட பயிற்று மொழிகளைப்பற்றிய செய்திகளைத் தருகின்றன. இங்குப்பணியாற்றிய ஆசிரியர்கள் சமஸ்கிருத பண்டிதர்களாக விளங்கியதால் அம்மொழிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இருப்பினும் சில கல்வி நிறுவனங்களில் தமிழ் மொழிக்கும் முன்னுரிமை கொடுக்கப்பட்டது. அக்காலத்தில் நிலவிய கல்வி சமய சார்புடையதாகவும், சமய சார்பு அற்றதாகவும் காணப்பட்டது. மேற்குறிப்பிட்ட கல்விமுறை ஐரோப்பியர்கள் தமிழகம் வருவது வரையிலும் நிலவிலிருந்தது.

**இலக்கியம்**

சோழர்காலத்தில் தமிழ், சமஸ்கிருத இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன. இக்காலத்தில் தோன்றிய இலக்கியங்கள் சமயசார்புடையவைகளாகும். அக்காலத்தில் நிலவிய அரசியல், சமுதாய, பொருளாதார, கலாச்சார வாழ்க்கையை இவைகள் வெளிப்படுத்துகின்றன. மேலும் சோழர் காலத்தில் பொறிக்கப்பட்டுள்ள பொறிப்புக்களில் காணப்படுகின்ற முன்னுரைகளும் இலக்கியங்களாகக் கருதப்படுகின்றன. இவைகள் பல்வேறு வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றன.

**சீவகசிந்தாமணி**

சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை ஐம்பெரும் காப்பியங்கள் ஆகும். இவற்றுள் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் சங்க காலத்தில் தோன்றியவைகளாகும். எஞ்சிய சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி ஆகியவை சோழர்காலத்தைச் சார்ந்தவைகளாகும். ஐம்பெரும் காப்பியங்களுள் சீவகசிந்தாமணி மிகவும் சிறப்பு வாய்ந்தது ஆகும். இதன் ஆசிரியர் திருத்தக்கத்தேவர் ஆவார். இவர் சேக்கிழாரின் காலத்தைச் சார்ந்தவர். இது கி.பி.10-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இது ஒரு சமய இலக்கியமாகக் காணப்பட்டாலும் அக்காலத்தில் நிலவிய சமூக, அரசியல், கலாச்சார வரலாற்றையும் ஆங்காங்கே குறிப்பிடுகின்றன. விருத்தப்பாக்களால் அமைக்கப்பட்ட முதல் காப்பியம் இதுவாகும். உள்நாட்டு, வெளிநாட்டு அறிஞர்கள் இதனைப் புகழ்ந்து கூறியுள்ளனர்.

இந்நூல் சீவகனின் தீரச்செயல்களைச் சித்தரிக்கிறது. ஆடம்பர வாழக்கையில் அதிக நாட்டம்கொண்ட இவன் அதிக அழகும் கவர்ச்சியுமுடைய எட்டு இளவரசிகளோடு சேர்ந்து வாழ்ந்தான். அவர்கள் மூலமாக உலக இன்பங்களைத் துய்த்து வாழ்ந்த இவன் இறுதியில் சிந்தாமணி என்பவளைத் திருமணம் செய்தான். உலக இன்பங்கள் அவனுக்கு மனஅமைதியை அளிக்கவில்லை. எனவே மனித வாழ்க்கை சூனியமானது என எண்ணினான். எலக இன்பங்கள் அற்பமானவைகள் என எண்ணிய இவன் தனது அரியணையைத்துறந்து காட்டிற்குச்சென்று தவத்தை மேற்கொண்டான். இறுதியில் தியானத்தின் மூலம் முத்தியடைந்தான். இவ்வரலாற்றைத் திருத்தக்கத்தேவர் தனது நூலில் அழகுறப்படம் பிடித்துக்காட்டியுள்ளார். இது ஒரு சமணநூல் ஆகும். இந்நூல் நான்கு வரிகளாலான 3145 பதிகங்களைக் கொண்டது. இந்நூலின் 2700 பதிகங்களைத் திருத்தக்கத்தேவரும் எஞ்சிய 445 பதிகங்களை அவரது ஆசிரியரான நச்சினார்க்கினியரும் இயற்றியதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. இதனுடைய நடை, அமைப்பு, உவமைகள், கற்பனைத்திறன் ஆகியவை மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளது.

**வளையாபதி**

வளையாபதி ஒரு சமண நூல் ஆகும். இதில் 65 பதிகங்கள் உள்ளன. இந்நூலைப்பற்றி அறிய போதிய சான்றுகள் இல்லை. இந்நூலும் அக்காலத்தைப்பற்றிய பல செய்திகளைத்தருகின்றன.

**குண்டலகேசி**

குண்டலகேசி ஆசிரியர் நாதகுத்தனார் ஆவார். இது ஒரு பௌத்த இலக்கியம் ஆகும். இது சமணமதத்தையும் அதன் கொள்கைகளையும் மிக வன்மையாகக் கண்டித்துள்ளது. இவ்விலக்கியத்தின் கதாநாயகி குண்டலகேசி ஆவாள். இவன் பல இந்துமத அறிஞர்களை வாதிட்டு வென்றான். இவளது முயற்சியால் பௌத்தமதம் தழைத்தோங்கியது. இந்நூல் விருத்தப்பாவால் ஆனது. எனவே இந்நூலுக்குக் குண்டலகேசிவிருத்தம் என்று பெயர். இந்நூல் சமய சொற்போருக்குப் பயன்படுத்தப்பட்டது. உலகில் வாழும் மக்களின் துன்பத்திற்குச் சிற்றின்பம் தான் காரணம் என இந்நூல் வலியுறுத்திக்கூறுகின்றது. இந்நூல் மணிமேகலையைப் போன்று துறவு வாழ்க்கையை வலியுறுத்துகின்றது.

ஒரு சமயம் குண்டலகேசி அரசு காவலர்களால் தெருவழியே நடத்திச்செல்லப்பட்ட அழகான இளவயதுடைய வாலிபன் ஒருவனைக் கண்ணுற்றாள். திருடனான அவன் மீது காதல் கொண்ட குண்டலகேசி அவனையே திருமணம் செய்தாள். அவன் அவளது விலையுயர்ந்த அணிகலன்களை எப்படியாவது அடையவவேண்டும் என எண்ணினான். இறுதியில் குண்டலகேசியைக் கொலைசெய்ய எண்ணி அவளை ஒரு மலை உச்சியிலிருந்த ஆலயத்திற்கு இறைவனை வணங்குவதற்காக அழைத்துச்சென்றான். இதை உண்மையென நம்பிய

குண்டலகேசி அவனது விருப்பத்திற்கு இணங்கி அவனுடன் மலை உச்சிக்குச் சென்றான். அவனது எண்ணத்தைத் தெரிந்து கொண்ட குண்டலகேசி தன்னைக்கொலை செய்வதற்குமுன் அவனை மலையிலிருந்து தள்ளிக் கொலை செய்தான். வாழ்க்கையில் வெறுப்படைந்த குண்டலகேசி இறுதியில் பௌத்தமதத்தைப் பின்பற்றினாள்.

**கலிங்கத்துப்பரணி**

கலிங்கத்துப்பரணியைப் ஜெயங்கொண்டார் இயற்றினார். இவர் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் வாழ்ந்தார். இது ஒரு வரலாற்று நூலாகும். முதலாம் குலோத்துங்கனின் கலிங்கப்படையெடுப்பை இது அழகுற விளக்குகிறது. முதலாம் குலோத்துங்கனின் படைத்தளபதியான கருணாகரத்தொண்டைமான் கலிங்கமன்னன் அனந்தவர்மனுக்கெதிராகப் படையெடுத்துச் சென்றான். இப்போர் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இப்போரின் நிகழ்ச்சிகளை ஜெயங்கொண்டார் மிகத்திறம்பட எடுத்தியம்பியுள்ளார். இந்நூலின் சில பகுதிகளை வி.கனகசபை என்பவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.

**பெரியபுராணம்**

பெரியபுராணத்தைச் சிறுதொண்டர்புராணம் எனவும் அழைப்பர். இதன் ஆசிரியர் சேக்கிழார் ஆவார். இவர் குன்றைவளநாட்டிலுள்ள துன்றத்தூர் என்னும் இடத்தில் பிறந்தார். இது தொண்டை மண்டலத்திலுள்ள புலியூர் கோட்டத்தின் ஒருபகுதி ஆகும். இவர் சீவைக்காவலர், கங்கைகல திலகம் என்ற பெயர்களையும் கொண்டிருந்தார். இவர் வெள்ளாளர்குலத்தைச் சார்ந்தவர். அரசு அதிகாரியாகப் பணிபுரிந்த இவர் மிகக்குறுகிய காலத்திற்குள் மன்னனின் அமைச்சராகப் பதவி உயர்வு பெற்றார். கல்வி அறிவில் சிறந்து விளங்கிய இவரை மூன்றாம் குலோத்துங்க மன்னன் 'உத்தம சோழப்பல்லவன்' என்ற விருதை அளித்து கௌரவித்தான். மன்னனின் தூண்டுதலின் பெயரில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைக் கொண்ட பெரியபுராணம் என்ற நூலைச் சேக்கிழார் இயற்றினார். இந்நூலை இயற்றுவதற்கான அனைத்து வசதிகளையும் மன்னன் இவருக்குச் செய்து கொடுத்தார். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த இந்நூலை இயற்றச்சேக்கிழார் சிதம்பரம் ஆலயத்திலுள்ள ஒரு மண்டபத்தைத் தெரிந்து கொண்டு அதில் தங்கினார். என்றும் இறைவன் அருளைப் பெற்று இந்நூலை எழுதத் தொடங்கினார் என்றும் செய்திகள் குறிப்பிடுகின்றன. நூலின் வளர்ச்சியை அவ்வப்போது அரசனுக்குத் தெரிவித்து வந்தனர். இது நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை மிக அழகுடன் சித்தரித்துள்ளது. இது 4253 பதிகங்களைக் கொண்டது. பெரியபுராணம் இந்துக்களின் ஐந்தாவது தமிழ்வேதமாகவும் சைவர்களின் பன்னிரண்டாவது திருமறையாகவும் கருதப்படுகிறது. இந்நூலை இயற்றிய சேக்கிழாரை அரசன் 'தொண்டர் சீர்பரவுவார்' என்ற பட்டத்தைச் சூட்டி கௌரவித்தான்.

**இராமாயணம்**

இராமாயணத்தைக் கம்பர் இயற்றினார். தமிழ் இலக்கியங்களுள் மிகச்சிறந்த நூலாக இது கருதப்படுகிறது. இந்நூல் வால்மீகியின் இராமாயணத்தைப் பின்பற்றி எழுதப்பட்டதாயினும், கம்பர் இதை எழுத கையாண்ட முறை போற்றுதற்குரியதாகும். இது பிறதமிழ் இலக்கியங்களைப் போல் அல்லாமல் தனிச்சிறப்புப் பெற்று விளங்குகிறது. இது வரலாற்றை மையமாகக் கொண்டு எழுப்பப்பட்ட நூல் ஆகும். கம்பர் சேக்கிழாரின் காலத்தைச் சார்ந்தவர் ஆவார். சோழ மன்னன் இவரை ஆதரித்த ஒரு நிலத்தையும் தானமாக அளித்தான். இவ்விடம் 'கம்பநாடு' என அழைக்கப்பட்டது. மேலும் அரசன் இவருக்குக் 'கவிசக்கரவர்த்தி' என்ற பட்டத்தையும் சூட்டடினான். சேக்கிழார் கம்பராமாயணத்தைத் தவிர ஏரெழுபது, சடகோபரந்தாதி, சரஸ்வதியந்தாதி, லெட்சுமியந்தாதி ஆகிய நூற்களையும் இயற்றினார்.

**உலாக்கள்**

உலா பிரிவைச்சார்ந்த இலக்கியமும் இக்காலத்தில் தோன்றின. ஒட்டக்கூத்தர் 'மூவருலா' என்ற நூலை இயற்றினார். இது முதலாம் குலோத்துங்கனுக்குப் பின் சோழ நாட்டை ஆட்சிபுரிந்த விக்கிரமச்சோழன், இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராஜராஜன் ஆகிய மூன்று சோழர்களின் வரலாற்றைக் குறிப்பிடுகிறது. உலாக்களுக்கும் பரணி இலக்கியங்களுக்குமிடையே சில தனித்தன்மைகள் காணப்படுகின்றன. பரணி இலக்கியங்கள் போர் நிகழ்ச்சிகளுக்கு அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்தன. ஆனால் உலாக்கள் அரசர்கள் அவர்களது மூதாததையர்கள் ஆகியோர்களின் சிறப்புக்களை வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக உலாக்கள் சோழ அரசர்களின் நிர்வாகத்திறமைகளைப் பற்றிய தகவல்களைத் தருகின்றன. மூவருலாவைத் தவிர ஒட்டக்கூத்தர் குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ் என்ற நூலையும் இயற்றினார். இது இரண்டாம் குலோத்துங்கனின் சிறப்பியல்புகளை எடுத்தியம்புகின்றன.

**நளவெண்பா**

புகழேந்தி என்ற புலவர் நளவெண்பாவை இயற்றினார். இவர் களத்தூரில் பிறந்தார். இது ஒரு இன்பியல் இலக்கியம் ஆகும். இது நளன், தமயந்தி ஆகியோரின் கதையை அழகுற சித்தரிக்கிறது. இந்நூல் சுயம்வரக்காண்டம், கலிங்ககாண்டம், கலித்தொடர்காண்டம் என மூன்று காண்டங்களைக் கொண்டது. இது அக்காலத்தில் நிலவிய சமூக, சமய வரலாற்றை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த நூல் ஆகும். குறிப்பாக இது அக்காலத்தில் நடைமுறையில் காணப்பட்ட சுயம்வர திருமணமுறையை அழகுற சித்தரித்துள்ளது.

**நாலாயிரதிவ்விய பிரபந்தம்**

நாலாயிரதிவ்விய பிரபந்தம் ஒரு வைணவ நூலாகும். இதில் நான்காயிரம் புனித பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இதனை நம்பியாண்டார்நம்பி தொகுத்து வெளியிட்டார். இது தென்னிந்தியாவிலுள்ள வைணவ சமய வரலாற்றை விளக்கும் ஒரு வரலாற்று நூலாகும். இது சைவ சமயத்தின பதினொன்றாவது திருமறையாகக் கருதப்படுகிறது.

கம்பரின் மகன் அம்பிகாபதியும் ஒரு சிறந்த கவிஞர் ஆவார். இவர் அம்பிகாபதி, அம்பிகாபதிகோவை ஆகிய நூற்களை இயற்றியுள்ளார். இவற்றில் காதல் கருத்துக்கள் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

சைவ சித்தாந்த சாஸ்திரங்களும் இக்காலத்தைச் சார்ந்தவைகளாகும். இவற்றின் எண்ணிக்கை பதினான்கு ஆகும். இவைகள் சேக்கிழாரின் காலத்திற்குப்பின் எழுதப்பட்டன. இவற்றில் ஆகம, பக்தி நெறிகள் காணப்படுகின்றன. இது இந்துக்களின் தமிழ் சைவ வேதமாகக் கருதப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட இலக்கியங்களைத் தவிர வேறு பல இலக்கியங்களும் இக்காலத்தில் தோன்றின. குறிப்பாக, இக்கால இலக்கியங்கள் சோழர் கால அரசியல், சமய, சமூக நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ளும் முக்கிய சான்றுக்களாகத் திகழ்கின்றன.

**முதலாம் மாரவர்மன் இராஜசிம்கன் (கி.பி.730 – கி.பி.765)**

கோச்சடையனுக்குப்பின் அவனது மகன் முதலாம் மாரவர்மன் இராஜசிம்கன் பாண்டிய அரசை ஆட்சிபுரிந்தான். இவனது ஆட்சிக்காலத்தில் பல்லவநாட்டில் உள்நாட்டு போர் ஏற்பட்டதால் அங்கு அமைதியின்மை நிலவியது. எனவே பல்லவ நாட்டின்மீது படையெடுத்து அந்நாட்டின் சில பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான். கொங்கு நாடும் இவனால் கைப்பற்றப்பட்டது. இவன் கங்க நாட்டு மன்னனைத் தோற்கடித்து அவனது மகளைத் திருமணம் செய்து கொண்டான். மேலைச் சாளுக்கிய அரசனையும் இவன் வென்றதாகக் கூறப்படுகிறது.

**நெடுங்சடைநன் பராந்தகன் (கி.பி.765 – கி.பி.815)**

இவன் முதலாம் மாறவர்மனின் மகன், பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த மிகச் சிறந்த அரசன் இவனாவான். இவன் தான் ஆட்சிக்குவந்த மூன்றாவது ஆண்டில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த வேள்விக்குடி சாசனத்தை வெளியிட்டான். இது பல்யாக சாலை முதுகுடுமி பெருவழுதி என்பவன் வேள்விக்குடி என்ற கிராமத்தைக் கொற்கைகிழான்நர்கோத்திரன் என்ற பிராமணனுக்குத் தானமாகக் கொடுத்தான் எனக் குறிப்பிட்டுள்ளது. ஆனால் இக்கிராமம் களப்பிரர்களால் கைப்பற்றப்பட்டது. எனவே பராந்தகன் தனது ஆட்சிக்காலத்தில் இக்கிராமத்தைக் கைப்பற்றிக் கொற்கைகிழான் என்பவனின் உறவினரான நரசிங்கன் என்பவனுக்கு அளித்தான் என்றும் இது குறிப்பிடுகிறது. இச்சாசனம் மேலும் பராந்தகன் நெடுஞ்சடையனின் பல்வேறு

சாதனைகளையும் குறிப்பிட்டுள்ளது. மேலும் திருச்சி, ஆனைமலை, கழுகு மலை, அம்பாசமுத்திரம் ஆகிய கல்வெட்டுகளும், சென்னை மியூசியம் பட்டயமும் இவனது ஆட்சியை அறிய உதவும் பிறச்சான்றுக்களாகும்.

இவன் பல்லவநாட்டையும், பெண்ணாடகம் பகுதிகளையும் கைப்பற்றினான். இவன் அதிகமானை அரியவேலியூர், புங்கலியூர் ஆகிய போர்களில் தோற்கடித்தான். இப்போரில் அதிகமானுக்கு உதவிபுரிந்த சேர, பல்லவ அரசர்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். இவனை எதிர்த்த கொங்கு நாட்டு மன்னன். சிறை பிடிக்கப்பட்டான். வேணாட்டுமன்னன் இவனால் தோற்கடிக்கப்பட்டான். விழிஞ்ஞம் என்னும் பட்டணத்தை இவன் நிர்மூலமாக்கினான். வைணவத்துறவியான பெரியலூர் இவன் காலத்தைச் சார்ந்தவர் ஆவார். இவரது ஆட்சி காலத்தில் பல வைணவ ஆலயங்கள் கஞ்சிவைப்பெருவூர் என்ற இடத்தில் கட்டப்பட்டன. குறிப்பாக இவனது ஆட்சிக்காலத்தில் வைணவம் சிறப்புற்று விளங்கியது.

**முதலாம் வரகுணண் (கி.பி.815 – கி.பி.835)**

பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்த அடுத்த மன்னன் முதலாம் வரகுணன் ஆவான். இவன் கி.பி.815 முதல் 835 வரை பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்தான். இவன் காலத்தைச் சார்ந்த ஏராளம் பொறிப்புக்கள் இக்கால வரலாற்றை வெளிப்படுத்துகின்றன. இவன் சைவ மதத்தைப் பின்பற்றினான். சைவத்துறவியான மாணிக்கவாசகர் இவரது அமைச்சரவையில் பணிபுரிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

**சீமாறன் சீவல்லபன் (கி.பி.835 – கி.பி.862)**

இவன் முதலாம் வருகுணபாண்டியனின் மகன். இவனுடைய ஆட்சிக்காலத்தில் பாண்டிய, பல்லவ பூசல் அதன் உச்சிநிலையை எய்தியது. குடமுச்கு என்னுமிடத்தில் நடைபெற்ற போலில் இவனுக்கு எதிராகச் செயல்பட்ட பல்லவ, கங்க, சோழ, கலிங்க, மகத நாட்டுப்படைகளைத் தோற்கடித்தான் என வரலாறு குறிப்பிடுகிறது. மேலும் விழிஞ்ஞம் என்னுமிடத்தில் நடைபெற்ற போலில் சேரப்படையைத் தோற்கடித்தான். இவன் இலங்கையை முற்றுகையிட்டு அங்குள்ள நினைவுச் சின்னங்களைக் நிர்மூலமாக்கியதோடு அந்நாட்டு கருவூலத்தையும் கைப்பற்றினான். தோல்வியடைந்த இலங்கை மன்னன் மால்வாய் என்ற இடத்திற்குத் தப்பி ஓடினான். தனது மேலாண்மையை ஏற்றுக்கொண்டதால் சீவல்லபன், தான் கைப்பற்றிய நாட்டை இலங்கை மன்னனுக்கேத் திருப்பி அளித்தான். ஆனால் அரிசிலாறு என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் பல்லவமன்னன் நிருபதுங்கன் பாண்டிய அரசனைத் தோற்கடித்து பாண்டிய நாட்டின் வடபகுதியைக் கைப்பற்றினான்.

**இரண்டாம் வரகுணன் (கி.பி.862 – கி.பி.885)**

பாண்டிய நாட்டை ஆண்ட அடுத்த மன்னன் இரண்டாம் வரகுணன் ஆவான். இவன் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த திருப்புறம்பியம் போரில் பங்கெடுத்து

படுதோல்வியடைந்தான். எனவே தமிழ்நாட்டில் பாண்டிய அரசு அதன் சிறப்பை இழந்தது.

**பராந்தக வீர நாராயணன் (கி.பி.885 – கி.பி.905)**

இரண்டாம் வரகுணனுக்குப்பின் அவனது இளைய சகோதரனான பராந்தக வீரநாராயணன் பாண்டிய அரியணை ஏறினான். இவன் தான் ஆட்சிக்குவந்த ஏழாவது ஆண்டில் தளவாய்புரம் சாசனத்தை வெளியிட்டான். இக்காலத்தில் வெளியிடப்பட்ட சின்னமனூர் சாசனம் இவனது சாதனைகளைக் குறிப்பிடுவது. இவன் சேர நாட்டுடன் நல்லுறவை வைத்திருந்தான். இவனது மனைவி வானவன்மகாதேவி சேரநாட்டு இளவரசி ஆவாள்.

**இரண்டாம் இராஜசிம்மன் (கி.பி.905 – கி.பி.920)**

இரண்டாம் இராஜசிம்மன் பராந்தக வீரநாயணனுக்குப்பின் பாண்டிய நாட்டை ஆட்சிபுரிந்தான். இவன் சோழமன்னன் முதலாம் பராந்தகனால் தோற்கடிக்கப்பட்டான். இவனது மகன் வீரபாண்டியன் என்பவனாவான். முதற்பாண்டியப்பேரரசை ஆட்சிபுரிந்த கடைசி அரசன் வீரபாண்டியன் ஆவான். சோழ அரசன் இரண்டாம் ஆதித்தியன் இவனைத் தோற்கடித்தான். இவனது ஆட்சிக்காலத்தோடு முதற்பாண்டிய பேரரசின் வரலாறு முற்றுப்பெற்றது.

## இரண்டாவது பாண்டியப்பேரரசு

மூன்றாவது குலோத்துங்கச் சோழனின் ஆட்சி கி.பி.1218-இல் முடிவடைவது வரையிலும் பாண்டியர்கள் சோழர்களுக்குத் திறை செலுத்தி அவர்களின் ஆதிக்கத்திற்கு உட்பட்டு காணப்பட்டனர். ஆனால் கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பாண்டியர்கள் புத்துயிர் பெற்று சோழர் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டனர். இரண்டாவது பாண்டியப்பேரரசின் வரலாற்றை அறிவதற்குப் பொறிப்புக்களும், வெளிநாட்டு, உள்நாட்டு இலக்கியங்களும் பெரிதும் துணைபுரிகின்றன.

**ஷீதலளம் சனையவர்புன் குலசேகரப் பாண்டியன் (கி.பி.1190 – கி.பி.1215)**

இவன் விக்கிரமபாண்டியனின் மகன் சோழ அரசன் மூன்றாம் குலோத்துங்கனுக்கு இவன் திறை செலுத்தி வந்தான். மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய பகுதிகள் அடங்கிய பாண்டி நாட்டை இவன் ஆண்டு வந்தான். இவன் இறப்பதற்குச் சற்று முன்னதாக மாறவர்மன் சுந்தர பாண்டியனைப் பட்டத்திளவரசனாக மூடிசூட்டினான்.

**முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1216 – கி.பி.1238)**

பாண்டியப்பேரரசை ஆட்சிபுரிந்த இரண்டாவது அரசன் இவனாவான். இவன் திறமையும், பேராசையும் கொண்டவன். சோழ மன்னன் மூன்றாம் இராஜராஜனின்

காலத்தைச் சேர்ந்தவன். கி.பி.1219-இல் சோழ நாட்டை முற்றுகையிட்டு அதை ஆட்சிபுரிந்துவந்த மூன்றாம் இராஜராஜனைத் தோற்கடித்து அந்நாட்டின் பகுதியைக் கைப்பற்றினான். இவ்வெற்றியை நினைவுகூரும் வண்ணம் "சோழநாடு கொண்டருளிய" என்ற பட்டத்தைச் சூட்டிக்கொண்டான். இவனது ஆட்சிக்காலத்தில் கொய்சாலர்கள் உறவை ஏற்படுத்திப்பாண்டியர்களுக்கெதிராகச் செயல்பட்டனர். இத்தருணத்தில் சோழ அரசன் மூன்றாம் இராஜராஜன் பாண்டியருக்குச் செலுத்த வேண்டிய திறையை செலுத்தவில்லை. எனவே சுந்தரபாண்டியன் கி.பி.1231-இல் சோழ நாட்டின் மீது படையெடுத்து அதன் ஆதிக்கத்திற்கு உட்பட்ட திருச்சி, புதுக்கோட்டை ஆகிய பகுதிகளைக் கைப்பற்றினான். மேலும் இவன் கொங்கு நாட்டின் மீது படையெடுத்து அதன் அதிகாரத்திற்கு உட்பட்டிருந்த சில பகுதிகளையும் கைப்பற்றினான்.

**இரண்டாம் சடையவர்மன் குலசேகரப்பாண்டியன் (கி.பி.1238)**

இரண்டாம் சடையவர்மன் குலசேகரப்பாண்டியன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப்பின் அரியனை ஏறினான். பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி இவன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனின் ஆட்சியின் இறதிகாலங்களில் பட்டத்திளவரசனாக இருந்திருக்கக்கூடும் என்றும், சுந்தரபாண்டியன் இறப்பதற்குமுன் இறந்திருக்கக்கூடுமெனவும் கருதுகின்றார்.

**இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1238 – கி.பி.1257)**

சடையவர்மன் குலசேகரப்பாண்டியனின் இறப்புக்குப்பின் அவனது சகோதரன் இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் அரியணையேறினான். இவன் கொய்சாலர்களுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொண்டான். இவனது ஆட்சிக்காலத்தில் சோழ நாட்டை மூன்றாம் இராஜேந்திரன் ஆட்சிபுரிந்து வந்தான். இவன் பாண்டிய நாட்டை முற்றுகையிட்டு அதைக் கைப்பற்றினான். இவ்விகாரத்தில் தலையீடு செய்த கொய்சால அரசன் வீரசோமேஸ்வரன், பாண்டியருக்கும் சோழருக்குமிடையே உடன்படிக்கையை ஏற்படுத்தி பாண்டிய அரசனை மீண்டும் அரியணையில் அமர்த்தினான். ஒப்பந்தபடி பாண்டிய அரசன் சோழருக்குக் கப்பம் கட்டுவதாக உறுதியளித்தான்.

**முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் (கி.பி.1257 – கி.பி.1268)**

இரண்டாம் மாறவர்மன் சுந்தரபாண்டியனுக்குப்பின் பாண்டிய நாட்டை முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சிபுரிந்தான். பாண்டிய நாட்டை ஆண்ட மிகச்சிறந்த அரசன் இவனாவான். இவனது ஆட்சிக்காலத்தில் பாண்டிய நாடு அதன் வளர்ச்சியின் உச்சநிலையை அடைந்தது. நெல்லூர், குடப்பா ஆகிய மாவட்டங்கள் பாண்டிய அரசின் வடக்கு எல்லைகளாக விளங்கின. இவன் பல போர்களில் வெற்றிபெற்றான். இவனால் தோற்கடிக்கப்பட்ட சேர, சோழர்கள் பாண்டியரின் மேலாண்மையை ஏற்றுக் கப்பம் செலுத்தி வந்தனர். கொய்சாலர்களைத்

தோற்கடித்து அவர்களுக்குச் சொந்தமான கண்ணனூர்கோப்பம் என்ற கோட்டையைக் கைப்பற்றினான். அதன்பின் இலங்கைமீது படையெடுத்து அந்நாட்டு அரசனைத் தோற்கடித்துக் கப்பம் கட்டுமாறு கட்டாயப்படுத்தினான். கடவகோப்பெருஞ்சிங்கன் என்ற மன்னைத் தோற்கடித்து சேந்தமங்கலம் என்ற கோட்டையைக் கைப்பற்றினான். மேலும் பாணர்களையும், கொங்கு நாட்டையும் வென்றான். தெலுங்கு பகுதியைச் சார்ந்த சோழ குறுநில மன்னனான கந்தகோபாலனை தோற்கடித்து கொன்றான். காஞ்சியையும் இவன் கைப்பற்றினான். இந்து மதத்தை ஆதரித்த இவன் சிதம்பரம், ஸ்ரீரங்கம் ஆகிய ஆலயங்களுக்கு ஏராளம் நன்கொடைகளை வழங்கினான். இவ்வாலயங்களின் பிரகாரங்களின் மேல் பகுதியைப் பொன் தகட்டால் வேய்ந்தான் என சான்றுகள் சாட்சியளிக்கின்றன. எனவே இவன் ‘கோயில் பொன்வேய்ந்த பெருமாள்’ என்ற சிறப்புப் பெயரைப் பெற்றான். இவன் சமணபள்ளிகளுக்கும் பல நன்கொடைகளை வழங்கினான். இவனது தெற்கு எல்லையாகக் குமரி விளங்கியது. இவனது ஆட்சிக்காலத்தை இரண்டாம் பாண்டிய சாம்ராஜ்யத்தின் பொற்காலம் எனலாம்.

### முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் (கி.பி.1268 – கி.பி.1310)

பாண்டிய நாட்டை ஆட்சி புரிந்த கடைசி சிறந்த அரசன் முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் ஆவான். இவன் சேரரிடமிருந்து கொல்லத்தைக் கைப்பற்றிக் கொல்லம் கொண்டான். என்ற பெயரைச் சூட்டிக்கொண்டான். ஈழத்தின் மீது படையெடுத்து அந்நாட்டிற்குப் பெரும் நாசத்தை ஏற்படுத்தினான். இவன் காலத்தில் வெனிஸ் நாட்டு யாத்திரீகரான மார்கோபோலோவும், முஸ்லீம் வரலாற்று ஆசிரியரான வாசப் என்பவரும் பாண்டிய நாட்டிற்கு வருகை தந்தனர். இவர்களது குறிப்புக்கள் அக்கால அரசியல் பொருளாதார, சமூக, சமய நிலைகளைத் தெரிந்து கொள்ள பெரிதும் உதவுகின்றன. இவனது மரணத்திற்குப் பின் பாண்டிய நாடு வீழ்ச்சியடைந்தது. முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியனுக்குப்பின் அவனது புதல்வர்களான சுந்தரப்பாண்டியன் வீரபாண்டியன் ஆகியோரிடையே அரியணைச் சண்டை ஏற்பட்டது. இது இரண்டாவது பாண்டிய சாம்ராஜியம் அழிந்துபோகக் காரணமாயிருந்தது.

### பொருளாதார நிலை

பாண்டியர் காலத்துப் பொருளாதார நிலையை அக்காலத்தில் நிலவிய விவசாயம், தொழில், வணிகம் ஆகியவை நிர்ணயித்தன. இக்காலத்தில் விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பாண்டியர் காலத்தில் பின்பற்றப்பட்டத் தொழில்கள் பாரம்பரியத் தன்மையுடையதாக காணப்பட்டது. அரசு வணிக வளர்ச்சிக்கு அதிக அக்கரை காட்டியது.

### விவசாயம்

மக்களின் முக்கியமான தொழில் விவசாயம் ஆகும். அக்கால மக்களின் பெரும்பாண்மையோர் விவசாயத்தை நம்பியே வாழ்ந்தனர். இங்கு ஓடிய வைகை,

தாமிரபரணி ஆகிய ஆறுகள் நீர்வளத்தைக் கொடுத்தன. இவற்றின் தண்ணீர் விவசாயத்திற்குப் போதிய அளவு காணப்படவில்லை. எனவே அரசு பல்வேறு நீர்நிலைகளை நாட்டின் பல்வேறு பகுதிகளில் அமைத்து மழை நீரை அதில் சேமித்து வைத்தது. விவசாயத்திற்குப் பயன்படுத்திய நிலம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மக்கள் பாரம்பரியமாக விவசாயம் செய்துவந்த நிலங்களுக்கு ‘வேலன்வகை நிலங்கள்’ என்று பெயர். இந்நிலங்கள் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. இந்நிலங்கள் ஒழுங்காக அளக்கப்பட்டு அவை குடிமக்களுக்கு அளிக்கப்பட்டன. இந்நிலங்களிலிருந்து வரிபிரிக்கப்பட்டது. விவசாயிகள் ஒழுங்காக அரசிற்கு வரி செலுத்திவந்தனர்.

இவற்றைத் தவிர அரசு ஏராளம் நிலங்களைப் பிராமணர்களுக்கும், ஆலயங்களுக்கும் தானமாக வழங்கின. இந்நிலங்களுக்கு முறையே பிரம்மதான, தேவதான நிலங்கள் என்று பெயர். மிகவும் செழிப்பான இந்த நிலங்களின் மக்கள் வாழ்க்கைக் கேற்ற எல்லா வசதிகளும் காணப்பட்டன. இந்நிலங்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. மேலும் கிராமங்களில் காணப்பட்ட சில பிரிவினருகுத் தங்களின் சேவைகளுக்கான நிலம் தானமாக அளிக்கப்பட்டது. குறிப்பாகப் படையின் பணிபுரிந்த போர் வீரர்களுக்கு ஊதியத்திற்குப் பதிலாக நிலம் தானமாக அளிக்கப்பட்டது. மேலும், போகம், சாலம், விரிச்சி, காணி ஆகிய நிலங்களும் பல்வேறு பிரிவினருக்கு அரசால் தானமாக அளிக்கப்பட்டது.

விவசாய வளர்ச்சிக்காக அரசு தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் குளங்களும், கால்வாய்களும் வெட்டப்பட்டன. ஊர், சபை ஆகியவற்றின் உறுப்பினர்கள் அரசன், அரசு ஊழியர்கள் ஆகியோரின் உதவியுடன் குளங்களையும், கால்வாய்களையும் உருவாக்கியதாக அக்கால செம்புபட்டயங்கள் குறிப்பிடுகின்றன. கிராமங்களில் காணப்பட்ட ஏரிவாரியம் குளங்களையும், நீர்நிலைகளையும், ஒழுங்காகப் பராமரித்துவந்தன. இவைகள் நீர்பாச்சுவதில் பல கட்டுப்பாடுகளை ஏற்படுத்தியிருந்தன. விவசாயத்தை விரிவுபடுத்தும் நோக்கத்தோடு, தரிசு நிலங்கள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டன. இவ்வாறு விவசாயம் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியது.

தொழில்வளர்ச்சி

பாண்டியர்கள் தொழில் வளர்ச்சிக்கு அதிக ஊக்கமளித்தனர். இக்காலத்து தொழில்களில் பெரும்பான்மையும் பராம்பரியத்தன்மையுடையவை. நூல்நூற்றல், ஆடைநெய்தல் ஆகிய தொழில்கள் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கின. இத்தொழில்களில் பெண்கள் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். மக்கள் பருத்தி நூலால் அதிக அளவில் திரிகளை உற்பத்தி செய்தனர். இத்தொழில் மதுரையிலும் பிறமுக்கிய நகரங்களிலும் சிறப்புற்று விளங்கியது. பாண்டி நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பட்டு, சில்க் ஆகியவற்றிற்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி காணப்பட்டது. எனவே இவை அதிக அளவில் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி

செய்யப்பட்டன. இத்தொழிலில் கைக்கோலர்கள் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். இவர்கள் அரசுக்குத் தறிஇறை, பஞ்சுபீலி ஆகிய வரிகளைச் செலுத்தினர்.

எண்ணெய் உற்பத்திக்கு அக்காலத்தில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பொதுவாக படை, ஆலையம் ஆகியவற்றிற்கு எண்ணெய் அதிக அளவில் தேவைப்பட்டது. வைத்தியர்களும் மருந்து தயாரிக்க எண்ணெயைப் பயன்படுத்தினர். எண்ணெய் உற்பத்தி ஒரு குடிசைத்தொழில் ஆகும். எண்ணெய் உற்பத்தி செய்வதற்குச் 'செக்கு' பயன்படுத்தப்பட்டது.

கடற்கரையில் வாழ்ந்த மக்கள் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், சங்கு உற்பத்தி செய்தல், உப்பு தயாரித்தல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டிருந்தனர். சமூதாயத்தில் வாழ்ந்த பிராமணர்களைத் தவிர அனைத்து மக்களும் மீனை உண்டனர். முத்துக்குளித்தல் ஒரு கவர்ச்சியானத் தொழில் ஆகும். பாண்டி நாட்டில் விளைந்த முத்து உலகின் பல்வேறு பாகங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பாண்டி நாட்டிற்குப் பயணம் செய்த மார்க்கோபோலோ முத்து குறித்தலைப்பற்றிய பல்வேறு செய்திகளைத் தனது பயணக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். சங்குகளால் பல்வேறுபட்ட வளையல்கள் செய்யப்பட்டன. இக்காலத்தைச் சேர்ந்த ஏராளம் வளையங்களைப் புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கொற்கை பட்டினத்தில் கண்டுபிடித்துள்ளனர்.

கடற்கரையில் அதிக அளவு உப்பு தயாரிக்கப்பட்டது. பரதவர்கள் இத்தொழிலில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். இத்தொழில் அரசின் கட்டுப்பாட்டின் கீழ் காணப்பட்டது.

ஆபரணங்கள் தயாரித்தல் ஒரு முக்கிய தொழில் ஆகும். பொற்கொல்லர்களுக்குச் சமூகத்தில் அதிக மதிப்பு காணப்பட்டது. இவர்கள் பல்வேறுபட்ட அழகிய விலையுயர்ந்த அணிகலன்களைச் செய்தனர். அரசர்கள், அரசியலார்கள், செல்வந்தர்கள் ஆகியோர் இவற்றை விரும்பி அணிந்தனர். போர் ஆயுதங்கள், விவசாய உபகரணங்கள், வீட்டில் பயன்படுத்துகின்ற பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கின்ற தொழில்களும் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியது. இத்தொழிலை மேற்கொண்டவர்கள் அக்காலத்தில் சிறப்புற்று விளங்கியது. தச்சர்கள் அரண்மனைகள், ஆலயங்கள், வீடுகள் ஆகியவற்றைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டனர். மண்பாண்டங்கள் செய்தலும் ஒரு முக்கியத்தொழில் ஆகும். சிற்பிகள் பல்வேறுபட்ட சிற்பங்களைச் செய்தனர். அரண்மனைகள், வீடுகள், ஆலயங்கள் ஆகியவற்றைச் சிற்பங்களால் அழகுபடுத்தினர். இறைவனுடைய சிற்பங்கள் ஆலயங்களில் வைக்கப்பட்டன. இவற்றை மக்கள் வணங்கினர். குறிப்பாக இக்காலத்தில் செயல்பட்ட தொழிறசாலைகள் உள்நாட்டு மக்களுக்குத் தேவையான பண்டங்களை உற்பத்தி செய்தனர். மேற்குறிப்பிட்ட உற்பத்திப்பொருட்கள் அனைத்தும் சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டன.

**வணிக வளர்ச்சி**

பாண்டியர் காலத்தில் உள்நாட்டு, அயல்நாட்டு வணிகங்கள் சிறப்புற்று விளங்கின. கிராமங்களில் உற்பத்தி செய்யப்பட்ட விவசாயப்பண்டங்களும் தொழிற்சாலைகளில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும் உள்நாட்டுச்சந்தைகளில் விற்பனை செய்யப்பட்டன. பண்டமாற்று முறை அக்காலத்தில் நடைமுறையிலிருந்தது. பொருட்களை வாங்க மக்கள் நாணயங்களையும் பயன்படுத்தினர். தங்க நாணயங்கள் வெளிநாட்டு வணிகத்திற்குப் பயன்படுத்தப்பட்டன.

பாண்டிய நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட சில பண்டங்களுக்கு வெளிநாடுகளில் அதிக கிராக்கி காணப்பட்டது. அக்காலத்தில் செயல்பட்டுவந்த வணிக சங்கங்களும், வணிக கழகங்களும் வெளிநாட்டு வணிகத்தை ஊக்குவித்தன. வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள் நானாதேசிகர், நகரத்தார் என அழைக்கப்பட்டனர். இவர்கள் தென்கிழக்கு ஆசிய நாடுகளான மலேயா, சுமத்திரா, ஜவா, இலங்கை ஆகிய நாடுகளுடன் வணிக உறவு கொண்டிருந்தனர்.

வெளிநாட்டு வணிகத்திற்காகத் துறைமுகங்களும், கப்பல்களும் பயன்படுத்தப்பட்டன. கப்பல்கள் மரத்தால் செய்யப்பட்டன. எனவே இதற்கு மரக்கலம் என்று பெயர். கப்பல் கட்டுதல் தமிழ் மக்களின் ஒரு முக்கிய தொழில் துறைமுகங்களில் அனைத்து நவ$^{3}$ன வசதிகளும் காணப்பட்டன. அக்காலத்தில் திருடர் பயம் அதிகமாகக் காணப்பட்டதால் வணிகர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. காயல் துறைமுகம் பாண்டியர் காலத்தில் சிறப்புற்று விளங்கியது. பல்வேறு பண்டங்கள் இத்துறைமுகம் வழியாக ஏற்றுமதியும், இறக்குமதியும் செய்யப்பட்டன. குறிப்பாக, விலையுயர்ந்த ஆபரணங்கள், வாசனைத்திரவியங்கள், ஆடைகள், சந்தனம், முத்துக்கள், பவளம் ஆகியவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களில் குதிரை முக்கிய இடத்தைப் பெற்றது. குதிரைகள் அரேபியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இக்குதிரைகளை அரசர்கள் விலைக்கு வாங்கினர். குதிரைப்படை பாண்டிய படையில் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பாண்டிய நாட்டை ஆண்ட குலசேகரப்பாண்டியன் சீனாவை ஆண்ட குப்ளேக்கானுடன் நெருங்கிய வணிக உறவை வைத்திருந்தான். இவன் கி.பி.1281-இல் வணிகத்தின் பொருட்டு தூதுக்குழு ஒன்றை சீனாவிற்கு அனுப்பினான். குறிப்பாகப் பாண்டிய காலத்தில் வணிகம் சிறப்புற்று விளங்கியது.

## சமுதாய நிலை

### பிராமணர்கள் நிலை

சோழர்காலத்தில் நிலவிய சமுதாய நிலை பாண்டியர்காலத்திலும் தொடர்ந்து நடைமுறையிலிருந்தது பாண்டிய அரசர்கள் பிராமணர்களுக்கு ஏராளம் சலுகைகளையும், உரிமைகளையும் வழங்கினர். சமூகத்தில் உயர்நிலையில்

காணப்பட்ட பிராமணர்கள் தனி இடங்களில் தங்கினர். இவர்கள் தங்கிய இடங்களுக்கு அக்கிரகாரம், சதுர்வேதி மங்கலம் என்று பெயர். தளவாய்புரம், வேள்விக்குடி செம்புபட்டயங்கள் பிராமணர்களுக்குத் தானமாக கொடுத்த நிலங்களைப் பற்றிய செய்திகளைக் குறிப்பிடுகின்றன. பிராமணர்களுக்கு நிலத்தைத் தானமாக வழங்குவதை அரசன் அறம் எனக் கருதினான். பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் ஒரு கிராமத்தை 138 பிராமணர்களுக்குத் தானமாக வழங்கினான். இக்கிராமத்திற்கு 'அவனிவேதசதுர்வேதிமங்கலம்' என்று பெயர். அதேப்போன்று பராந்தக விக்கிரநாராயணன் என்ற பாண்டிய அரசனும் திருமங்கலம், சோமச்சிக்குறுச்சி என்ற கிராமங்களை பிராமணர்களுக்குத் தானமாக வழங்கினான். கி.பி.1267-ஆம் ஆண்டு முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன் என்ற அரசன் சதுர்வேதிமங்கலம் ஒன்றை 121 பிராமணர்களுக்குத் தானமாக அளித்தான் எனப்பொறிப்புக்கள் குறிப்பிடுகின்றன. மேலும் இவன் இருநூறு வேலி நிலத்தையும் அவர்களுக்கு விவசாயம் செய்வதற்கு அளித்தான். அரசர்களைப்போன்று அரசியர்களும் பிராமணர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கினர். இந்நிலங்கள் அவனிமூலுகுடையால் சதுர்வேதி மங்கலம், கோதண்டராமன் சதுர்வேதிமங்கலம் என அழைக்கப்பட்டன. இவ்வாறு பாண்டியர் காலத்தில் பிராமணர்நிலை மேலோங்கி இருந்தது.

**விவசாயிகள் நிலை**

நிலத்தில் விவசாயம் செய்தவர்கள் வெள்ளாளர்கள் எனப்பட்டனர். இவர்களை மண்ணின் மைந்தர்கள் எனப்பொறிப்புக்கள் குறிப்பிடுகின்றன. இவர்களுக்கென தனி அமைப்புக்கள் காணப்பட்டன. இதற்குச் சிந்திரமேலி பெரிய நாட்டார் எனப்பெயர். விவசாயம் இவர்களின் முக்கிய தொழில் ஆகும். இவர்கள் அரசவையிலும் இராணுவத்திலும் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தனர். பாண்டிய அரசர்கள் இவர்களுக்குப் பல்வேறு சலுகைகளை அளித்தனர்.

**இடையர்கள்**

இடையர்கள் சமூகத்தில் உயர்வாகக் கருதப்படவில்லை. மக்கள் இவர்களை மதித்தனர். இவர் மதப்பற்றுடையவர்களாகவும், கலாச்சாரமுடையவர்களாகவும் காணப்பட்டார்கள். ஆலயங்களுக்கு இவர்கள் நன்கொடைகளை வழங்கினர். கிருஷ்ணன், பலராமன் ஆகிய தெய்வங்களை வணங்கினர். ஆயர்குல பெண்கள் மார்கழி மாதத்தில் நோன்பு இருக்கும் பழக்கமுடையவர்கள். இக்காலத்தில் இவர்கள் பால், நெய் ஆகியவற்றை உண்பது இல்லை. இவர்கள் அதிகாலையில் குளிக்கின்ற பழக்கமுடையவர்கள்.

**நகரத்தார்கள்**

பாண்டியர் காலத்தில் காணப்பட்ட வணிகர்கள் செட்டியார் அல்லது நகரத்தார் என அழைக்கப்பட்டனர். இவர்களின் முக்கிய தொழில் வணிகம் ஆகும். இவர்கள் ஏற்றுமதி, இறக்குமதிகளில் அதிகமாக ஈடுபட்டிருந்தனர். இவர்கள் நான்கு

திசைகளிலுமுள்ள நாடுகளோடு வணிகம் மேற்கொண்டதால் ‘நானாதேசிகர்’ என அழைக்கப்பட்டனர். இவர்கள் தனித்தெருக்களில் தங்கினர். இத்தெருக்களுக்கு நானாதேசிகர் தெரு அல்லது ஐநூறுவர் தெரு என்று பெயர். இவர்கள் தங்குவதற்கான தனி கிராமங்களும் காணப்பட்டன. இவர்கள் கிராமங்களை விலைக்கு வாங்கி அதில் தங்கினர் என ஆவணங்கள் குறிப்பிடுகின்றன. நகரத்தார்களில் பல்வேறு பிரிவினர் காணப்ப்ட்டனர். இவர்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தங்கினர். இவர்களைத் தவிர கொல்லன், பொற்கொல்லன், தச்சன், சிற்பி, நெசவாளர்கள் ஆகியோர்களும் சமூதாயத்தில் காணப்பட்டனர்.

**வலங்கை இடங்கைப்பிரிவினர்**

சோழர் காலத்தில் காணப்பட்டது போன்ற வலங்கை இடங்கைப்பிரிவினர் பாண்டிய நாட்டிலும் காணப்பட்டனர். இவர்களிடையே பூசல்கள் நிலவிக்கொண்டெ இருந்தன.

**மார்க்கோபோலோவின் குறிப்புக்கள்**

“இடைக்கால பயணிகளின் இளவரசர்” என அழைக்கப்பட்ட மார்க்கோபோலோ வெனிஸ் நாட்டைச் சார்ந்தவர். இவர் பாண்டிய நாட்டு மக்களின் சமூக, பொருளாதார நிலைகளை மிகத் தெளிவாகத் தொகுத்து குறிப்பிட்டுள்ளார். இவர் பாண்டிய நாட்டிற்கு வருகை தந்தபோது அதை முதலாம் மாறவர்மன் குலசேகரபாண்டியன் (கி.பி.1268 – கி.பி.1310) ஆட்சிபுரிந்துவந்தான். வெனிஸ் நாட்டில் பிறந்த மார்க்கோபோலோ பன்னிரண்டு ஆண்டுகள் சீன நாட்டு அரசன் குப்ளேக்கான் அவையில் அமைச்சராகப் பணிபுரிந்தார். இத்தருணத்தில் குப்ளேக்கான் தனது மகளை பாரசீக மன்னனுக்குத் திருமணம் செய்து கொடுத்தான். திருமணப்பெண்ணுடன் கி.பி.1292-இல் சீனாவிலிருந்து புறப்பட்ட மார்க்கோபோலோ இலங்கை வழியாக தமிழ்நாட்டை அடைந்தார். பாண்டி நாட்டில் சில காலம் தங்கிய இவர் தமிழ் மக்களிடையே காணப்பட்ட சில பழக்கவழக்கங்களைக் குறிப்பிட்டுள்ளார்.

**முத்துகுளித்தல்**

முத்துகுளித்தல் பாண்டிய நாட்டிலுள்ள முக்கியமான தொழில் ஆகும். மார்க்கோபோலோ தனது குறிப்பில் முத்துக்குளித்தலைப்பற்றி தெளிவுறக் குறிப்பிட்டுள்ளார். முத்துக்குளித்தல் ஏப்ரல் மாதம் ஆரம்பித்து மே மாதம் பதினைந்தாம் நாள் வரை நடைபெற்றது. பெரிய முத்துக்களும், சிறிய முத்துக்களும் இவ்வேளையில் அதிகமாகக் கிடைக்கப்பெற்றன. கிடைத்த முத்தில் பத்துப்பகுதி பாண்டியப் மன்னனுக்கு அளிக்கப்பட்டது. பதினொன்றாவது பகுதி முத்து குறிப்பதற்கு துணையாக இருந்த மந்திரவாசதிக்கு அளிக்கப்பட்டது. எஞ்சிய பகுதியை முத்து குளிப்பவர்கள் தங்களது பங்காகப் பெற்றனர். பாண்டிய நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட முத்து உலகின் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. இதனால் பாண்டிய நாட்டில் செல்வம் குவிந்தது.

**குதிரை வணிகம்**

பாண்டிய நாட்டில் நிலவிய குதிரை வணிகத்தைப்பற்றி மார்க்கோபோலோ திறம்பட எடுத்தியம்பியுள்ளார். பாண்டிய நாட்டு மக்களுக்கு குதிரையை வளர்ப்பதற்குரிய போதிய அறிவு இல்லாமையால் இங்குக் குதிரைகள் சிறப்பாக வளரவில்லை என இவர் குறிப்பிட்டுள்ளார். எனவே தேவையான குதிரைகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஒவ்வொரு வருடமும் சுமார் 2000 குதிரைகளைப் பாண்டிய அரசர்கள் இறக்குமதி செய்தனர். குதிரைகளை ஒழுங்காகப் பராமரிக்கத் தெரியாத இவர்கள் மாடுகளை வளர்ப்பது போல் வளர்த்தனர். எனவே ஆண்டுதோறும் ஏராளம் குதிரைகள் இறந்தன. இதனால் ஒவ்வொரு வருடமும் குதிரைகளை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. தமிழர்படையில் குதிரைப்படைச் சிறப்புற்று விளங்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

**ஆடை, ஆபரணங்கள்**

பாண்டிய மக்கள் அணிந்த ஆடை, ஆபரணங்களைப் பற்றி மார்க்கோபோலோ பல விசித்திரமான செய்திகளைக் குறிப்பிட்டுள்ளார். மக்கள் நிர்வாணமாகக் காணப்பட்டதால் மதுரை மாநிலத்தில் தையல்காரர்கள் காணப்படவில்லை எனத் தனது குறிப்பில் குறித்துள்ளார். இது முற்றிலும் தவறான ஒரு செய்தியாகும். மக்கள் தங்களது உடம்பை மறைப்பதற்கு ஒரு சிறியதுண்டு துணியைப் பயன்படுத்தினர். நாட்டை ஆண்ட அரசனும் ஒரு துண்டு துணியால் தனது உடம்பின் இடைப்பகுதியை மறைத்தான் எனவும் மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளார். போர்வீரர்கள் போர்களத்திற்கு நிர்வாணமாகச் சென்றனர் எனவும், கேடயம், வேல் ஈட்டி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தினர் எனவும் குறிப்பிட்டுள்ளார். அக்காலத்தில் ஆண்களும் பெண்களும் தங்களது உடம்பை அணிகலன்களால் அழகு செய்தனர். அரசனும், அரசகுடும்பத்தைச் சார்ந்தவர்களும், செல்வந்தர்களும் தங்கம், முத்து, பவளம் ஆகியவற்றால் செய்த விலையுயர்ந்த அணிகலன்களை அணிந்தனர். சாதாரணமக்கள் செம்பு, இரும்பு, உடைந்த கண்ணாடிகள் ஆகியவற்றால் செய்த அணிகலன்களால் தங்களது உடம்பை அழகு செய்தனர்.

**அரசனின் மனைவியர்கள்**

பாண்டிய அரசனது அரண்மனையில் காணப்பட்ட அந்தபுரத்தில் ஏராளம் மனைவியர்கள் காணப்பட்டனர். குறிப்பாகப் பாண்டிய அரசனுக்கு 500 மனைவியர்கள் காணப்பட்டதாக மார்க்கோபோலோ தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். நாட்டில் எங்காவது அழகிய பெண்கள் காணப்பட்டால் அவர்களை மனைவியராக்கின்ற பழக்கம் அக்கால அரசர்களிடையே காணப்பட்டது. அரசன் இறக்கின்ற பொழுது அவனது மனைவியர்களும் சதி மூலம் தங்களது உயிரை மாய்த்துக்கொண்டனர். அரசனின் ஆணைக்குட்பட்டு காணப்பட்ட பிரபுக்களும் அரசனுடன் இறக்கின்ற பழக்கம் காணப்பட்டது.

**செல்வக் குவியல்கள்**

பாண்டிய நாட்டில் செல்வங்கள் குவிந்து காணப்பட்டன. அக்காலத்தில் காணப்பட்ட ஆலயங்களில் பல்வேறுபட்ட ஏராளம் செல்வங்கள் குவிந்து காணப்பட்டதாக மார்க்கோபோலோ குறிப்பிட்டுள்ளார். அயல்நாட்டு வணிகத்தின் மூலம் பிறநாட்டு செல்வங்கள் இங்கு வந்து குவிந்தன. அரசன் இறந்தபின் அவனது சொத்துக்களை அவனது வாரிசுகள் நாடுவதில்லை. அதே போன்று பதிமூன்று வயது நிரம்பிய ஆண்கள் தங்களது பெற்றோரின் செல்வத்தை நம்பி இருக்காமல் சுயமாகச் சம்பாதிக்கத் தொடங்கினர். எனவே நாட்டின் பல்வேறு பகுதிகளில் செல்வங்கள் குவிந்து காணப்பட்டன. இச்செல்வத்தின் மீது நாட்டம் கொண்ட அன்னியர்கள் தமிழகத்தின் மீது பிற்காலத்தில் படையெடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**குத்தங்களும், தண்டனைகளும்**

குற்றவாளிகளுக்குச் கடுமையானத் தண்டனைகள் அளிக்கப்பட்டன. கொலைத் தண்டனை பெற்றவர்கள் தங்களது உயிரை ஏதாவது ஒரு தெய்வத்திற்கு அற்பணிக்க அரசால் அனுமதிக்கப்பட்டனர். அவ்வாறு அற்பணிக்கப்பட்டவர்கள் தங்களது நண்பர்கள் உறவினர்களால் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு பன்னிரெண்டு கத்திகளை ஒன்றன்பின் ஒன்றாக அவர்களிடம் கொடுப்பார்கள். அவர்கள் அக்கத்தியால் தங்களது உடம்பில் காயத்தை ஏற்படுத்தித் தாமாகவே உயிர் நீத்தனர். இந்நிகழ்ச்சியை மக்கள் விமரிசையாகக் கொண்டாடினர். அப்படி இறந்தவர்களின் மனைவியர்களும் சதிமூலம் தங்களது உயிரை மாய்த்துக் கொண்டனர். இப்பெண்களை சமூகம் வியந்து பாராட்டியது.

**பிற பழக்க வழக்கங்கள்**

மக்கள் உருவங்களை வழிபட்டனர். ஒரு சிலர் எருதுகளை வணங்கினர். பாண்டிய நாட்டில் அரசன் உட்பட அனைத்து மக்களும் தரையில் உட்காருகின்ற பழக்கமுடையவர்கள். விவசாயிகள் நெல், கோதுமை ஆகியவற்றை உற்பத்தி செய்தனர். மக்கள் தங்களது உடம்பை இரண்டு தடவை தண்ணீரால் சுத்தம் செய்தனர். நல்ல காரியங்களுக்கு மக்கள் தங்களது வலது கையைப்பயன்படுத்தினர். தண்ணீர் குடிக்கும்போது தங்களது உதடுகளைப் பயன்படுத்தும் பழக்கம் அன்றைய மக்களுக்குகிடையாது. ஏழைகளும், வீடு அற்றவர்களும் தெருக்களில் தங்கினர். கள் குடிப்பவர்கள் மக்களால் மதிக்கப்படவில்லை. இவர்களின் கருத்துக்களுக்கு மக்கள் அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. பிற பெண்களோடு தகாத முறையில் உடல் உறவு கொள்வது பாவம் எனக் கருதப்பட்டது.

**ஜோதிடம்**

மக்கள் ஜோதிடத்தில் அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். சமுத்திரிகாவை மக்கள் நன்கு அறிந்திருந்தனர். உடம்பின் அமைப்பை வைத்து ஒருவனின்

குணத்தையும், நடைமுறையையும் அளிந்து கொண்டனர். சகுணத்தை உண்மையென நம்பினர். குழந்தை பிறந்தவுடன் ஜாதகம் பார்க்கும் பழக்கம் மக்களிடையே காணப்பட்டது. நல்ல காரியங்கள் செய்வதற்குமுன் ஜோதிடர்களின் ஆலோனைகளை மக்கள் பெற்றனர்.

**காலநிலை**

தமிழ்நாடு உஷ்ண மண்டலத்தில் காணப்பட்டதால் இங்குச் சூடு அதிகம், ஜீன், ஜீலை, ஆகஸ்ட் ஆகிய மாதங்களில் பாண்டிய நாட்டில் மழை பெய்தன என மார்க்கோபோலோ தனது பயணக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

**தேவதாசிகள்**

மார்க்கோபோலோ தனது பயணக்குறிப்பில் பாண்டிய நாட்டிலுள்ள ஆலயங்களையும், அங்கு நடைபெற்ற வழிபாட்டு முறைகளையும் குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள ஆலயங்களில் ஏராளம் தேவதாசிகள் காணப்பட்டார்கள். இவர்கள் பெற்றோரால் ஆலயங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஆலயங்களில் காணப்பட்ட தெய்வங்கள் முன்னால் நடனமாடவும், பிராமணர்களின் காமப் பசியைத் தீர்த்துக்கொள்ளவும் பயன்படுத்தப்பட்டனர். ஆலயங்களிலுள்ள ஆண் தெய்வங்களும், பெண்தெய்வங்களும் அடிக்கடி ஒன்று சேர்வதாக மக்கள் நம்பினர். இவைகளைத் தவிர மக்களிடையே காணப்பட்ட பல்வேறு பழக்க வழக்கங்களையும் மார்க்கோபோலோ தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். குறிப்பாக மார்க்கோபோலோவின் பயணக்குறிப்பு அக்கால மக்களின் சமூக நிலையை அறிந்துகொள்ள பெரிதும் உதவுகின்றன.

**கொய்சாலர்கள்**

தக்காணத்தை ஆட்சிபுரிந்த கொய்சாலர்கள் தென்னிந்திய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளனர். இவர்கள் தமிழ்நாட்டோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். இந்த அரசைத் தோற்றுவித்தவன் சாலா என பராம்பரீகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. ஆனால் வரலாறு குறிப்பிடுகின்ற முதல் மன்னன் முதலாம் வினயாதித்தியன் ஆவான். இவன் கி.பி.1006க்கும் கி.பி.1022க்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த அரசை ஆட்சிபுரிந்தான். இவன் மைசூரின் சில பகுதிகளை ஒருங்கிணைத்து சோசவீரைத் தலைநகராகக் கொண்டு ஒரு சிறிய அரசை ஆட்சிபுரிந்தான் எனச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. இவனும் இவனுக்குப்பின் ஆட்சி புரிந்த நிருபகமா(கி.பி.1022 – கி.பி. 1047) இரண்டாம் வினயாதித்தியன் (கி.பி.1047 – கி.பி.1100), முதலாம் பல்லாலன் (கி.பி.1100 – கி.பி. 1111), விஷ்ணுவர்த்தனன் (கி.பி. 1111 – கி.பி.1141), முதலாம் நரசிம்கன் (கி.பி.1141 – கி.பி.1173) ஆகியோர் பிற்கால மேலைச்சாளுக்கியர்களின் கீழ் சிற்றரசர்களாகச் செயல்பட்டு வந்தனர். விஷ்ணுவர்த்தனின் ஆட்சிகாலத்தில் இதன் தலைநகர் துவாரசமுத்திரத்திற்கு மாற்றப்பட்டது. கொய்சால நாட்டை ஆட்சிபுரிந்த மிகச்சிறந்த அரசன் இவன் ஆவான். இவன் கி.பி.1117-இல் சோழர்களிடமிருந்து கங்காவதியைக்

கைப்பற்றித் 'தலக்காடுகொண்டான்' என்ற புனைப்பெயரைச் சூட்டிக்கொண்டான். முதலாம் குலோத்துங்கனின் ஆட்சிகாலத்தில் இவன் நொலம்பாவதியை முற்றுகையிட்டது மட்டுமல்லாமல் சோழநாட்டில் இராமேஸ்வரம் வரையிலும் படையெடுத்துவந்தான். கி.பி.1137-இல் மைசூர் முழுவதையும் தன் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவந்தான். சமண மதத்தில் அதிக ஈடுபாடு கொண்ட இவன் தனது ஆட்சியின் பிற்பகுதியில் வைணவ மதத்தைப் பின்பற்றினான். இவன் ஏராளம் இந்து ஆலயங்களைக் கட்டினான். அவற்றுள் பெல்லூர் ஆலயம் சிறப்பு வாய்ந்தது ஆகும். இந்து மதத்தைப் பின்பற்றிய இவன் பிறமத வளர்ச்சிக்குத் தடையாக இருக்கவில்லை. இவனுக்குப்பின் முதலாம் நரசிம்கன் கொய்சால அரசை ஆட்சிபுரிந்தான். சிற்றின்பத்தில் அதிக ஈடுபாடு கொண்ட இவன் நிர்வாகத்தில் அதிக அக்கரை காட்டவில்லை. இவனுக்கு பின் இரண்டாம் வல்லாலன் (கி.பி.1173 – கி.பி.1220), இந்நாட்டை ஆண்டான். இவன் சாளுக்கிய மன்னன் நான்காம் சோமேஸ்வரனைத் தோற்கடித்து அந்நாட்டின் பெரும்பகுதியைக் கைப்பற்றினான். இவனது ஆட்சிகாலத்தில் கொய்சால நாடு சாளுக்கிய பிடியிலிருந்து விடுபட்டு சுதந்திர நாடாக மாறியது. கி.பி.12-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.14-ஆம் நூற்றாண்டில் விஜய நகர அரசு தோன்றுவது வரையிலும் கொய்சாலர்கள் தென்னிந்தியாவில் ஆட்சிபுரிந்து வந்தனர்.

கொய்சால அரசை இரண்டாம் நரசிம்கன் (கி.பி.1220 – கி.பி.1235) ஆட்சிபுரிந்தபோது யாதவநாட்டு அரசன் சிங்கண்ணன் இந்நாட்டிற்குள் ஊடுருவி கிருஷ்ணாநிதிக்கும், துங்கபத்திரை நதிக்கும் இடைப்பட்ட பகுதியைக் கைப்பற்றிக் கொண்டான். இத்தோல்வியை ஈடுசெய்யும் வண்ணம் இரண்டாம் நரசிம்கன் பாண்டிய நாட்டின் பல பகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டான்.

இரண்டாம் நரசிம்கன் கொய்சால அரசை ஆட்சிபுரிந்த போது பாண்டிய அரசன் முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன் சோழ நாட்டின் மீது படையெடுத்து அதை ஆண்டு வந்த மூன்றாம் இராஜராஜனைச் சிறைப்பிடித்தான். சோழ அரசன் மூன்றாம் இராஜராஜன் கொய்சால மன்னனின் நெருங்கிய நண்பன் ஆவான். எனவே கொய்சால மன்னன் இந்த விவகாரத்தில் ஈடுபட்டு சோழருக்கும் பாண்டியருக்குமிடையே உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினான். இதன் விளைவால் பாண்டியன் தான் கைப்பற்றிய பகுதிகளை சோழருக்குத்திரும்ப அளித்தான். இது முதல் சோழர்கள் பாண்டியருக்குக் கப்பம் செலுத்தும் சிற்றரசர்களாகச் செயல்பட்டு வந்தனர்.

இரண்டாம் நரசிம்கனுக்குப் பின் அவனது மகன் சோமேஸ்வரன் (கி.பி.1235 – கி.பி.1254) கொய்சால அரசை ஆட்சிபுரிந்தான். இவனும் தனது தந்தையைப்போன்று பாண்டியர்கள் சோழ நாட்டைக் கைப்பற்றுவதற்கு எதிராகச் செயல்பட்டனர். சோமேஸ்வரனுக்குப்பின் அவனது பிள்ளைகளான மூன்றாம் நரசிம்கன், வீர இராமனாதன் ஆகியோர் கொய்சால நாட்டை இருப்பகுதிகளாகப் பங்கு வைத்தனர்.

இச்செயலால் கொய்சால நாடு அதன் முக்கியத்துவத்தை இழந்தது. வீர இராமநாதன் ஆட்சிபுரிந்த பகுதியைப் பாண்டியர்கள் கைப்பற்றினர்.

கொய்சால அரசை இறுதியில் ஆட்சிபுரிந்த சிறந்த அரசன் மூன்றாம் பல்லாலன் ஆவான். இவன் பாண்டிய அரசனைத் தோற்கடித்து வீர இராமநாதன் இழந்த பகுதியைக் கைப்பற்றி கொய்சால அரசை மீண்டும் இணைத்தான். இவன் முஸ்லீம்கள் தென்னிந்தியாவில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்கெதிராகச் செயல்பட்டான். முஸ்லீம் தளபதியான மாலிக்காபூர் கி.பி.1310-இல் இவனைத் தோற்கடித்தான். இவனது எதிர்ப்பு கட்டிற்கடங்காமல் போகவே கி.பி.1342-இல் இவன் முஸ்லீம்களால் கொலை செய்யப்பட்டான். இவன் மீது ஆத்திரமடைந்த முஸ்லீம்கள் இவனது தோலை உரித்து அதில் வைக்கோலை அடைத்து மதுரை நகரின் சுவரில் தொங்கவிட்டனர் என வரலாறு குறிப்பிடுகிறது.

மூன்றாம் பல்லாலனுக்குப்பின் அவனது மகன் நான்காம் பல்லாலன் (கி.பி.1342 – கி.பி.1346) கொய்சால நாட்டை ஆட்சிபுரிந்தான். இவன் தான் இறப்பது வரையிலும் முஸ்லீம்களுக்கு எதிராகச் செயல்பட்டான். கொய்சால அரசை இறுதியாக ஆண்ட அரசன் இவன் ஆவான். கொய்சாலர்களின் முஸ்லீம் எதிர்ப்பு கொள்கை சங்கம சகோதரர்களைத் தூண்டியதால் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த விஜயநகர அரச தென்னிந்தியாவில் தோன்றியது.

கொய்சாலர்கள் தமிழக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர். இவர்கள் போருக்கு அதிக முக்கியத்துவம் அளித்தாலும், இலக்கியம், கலை. கட்டிடக்கலை ஆகியவற்றையும் ஊக்குவித்தனர்.

**கன்னட இலக்கியம்**

கொய்சாலர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு அதிக ஊக்கமளித்தனர். இக்காலத்தில் பல கன்னட இலக்கியங்கள் தோன்றின. நாகச்சந்திரா, கந்தி. கரீஸ்வரா, இராகவன்கா, நெமிச்சந்திரா ஆகியோர் இக்காலத்தில் வாழ்ந்த சிறந்த எழுத்தாளர்கள் ஆவார்கள். கொய்சால அரசன் விஷ்ணுவர்த்தனன் நாகச்சந்திராவை ஆதரித்தான். இவர் இராமச்சந்திரபுராணம் என்னும் நூலைக் கன்னட மொழியில் இயற்றினர். இது ஒரு சிறந்த நூல் ஆகும். சமணமதத்துறவியான கந்தி ஒரு பெண்பாற்புலவர் ஆவார். இவரும் விஷ்ணுவர்த்தனின் காலத்தைச் சார்ந்தவர். இக்காலத்தைச் சார்ந்த இராஜாதித்தியர் ஒரு கணித பண்டிதர் ஆவார். இவர் பிறமொழி நூல்களிலிருந்து பல கணித கோட்பாடுகளைக் கன்னட மொழியில் மொழிபெயர்த்தார். கரீஸ்வரா, இராகவங்கா ஆகியோர் வீரசைவ சித்தாந்தத்தை மையமாகக் கொண்டு முறையே கிரிஜாகல்யாணம், கரிச்சந்திர காவியம் ஆகிய நூற்களை கி.பி.1165-இல் இயற்றினார். நெமிச்சந்திரா என்பவர் ஒரு சமண எழுத்தாளர் ஆவார். இவர் கி.பி.1170-இல் லீலாவதி என்ற நாவலை எழுதினார். கன்னட மொழியில் தோன்றிய முதல் சிறந்த நாவல் இது என்பது குறிப்பிடத்தக்கது. மாதவர் என்பவரும் சிறந்த அறிஞர் ஆவார். இவர் தனது பதினாறாவது வயதில்

துறவியாக மாறினார். இவர் பழங்களை அதிகமாக விரும்பிச்சாப்பிடும் பழக்கம் உடையவர். இவர் பிரமசூத்திரம், உபனிடதம், பகவத்கீதை ஆகிய நூற்களுக்கு விளக்க உரைஎழுதியுள்ளார். பாரததாத்பர்ய நிர்ணயம் என்ற நூலையும் இவர் இயற்றினார். இவர் எழுதிய நூற்களில் மிகச்சிறந்த நூல் இது ஆகும். இவர் உடுப்பி என்ற இடத்தில் கிருஷ்ண தேவனுக்காக ஆலயம் ஒன்றையும், எட்டு மண்டபங்களையும் கட்டினார். இது இந்து மதத்தின்பால் இவர் கொண்டிருந்த ஈடுபாட்டைக்காட்டுகிறது. மேலும் ஜன்னர், யாண்டையர், மல்லிகார்ஜீனர், கேசிராயர் ஆகியோரும் பல கன்னட இலக்கியங்களை இயற்றினர். இவர்களுக்குக் கொய்சால அரசர்கள் அதிக ஆதரவு, ஊக்கமும் அளித்தனர். இக்காலத்தைச் சார்ந்த ஒரு சிறந்த நூல் மதனவிஜயம் ஆகும். இது சிவபெருமானின் பல்வேறு நிலைகளை அழகுற சித்தரித்துள்ளது. இதன் ஆசிரியர் யாந்தையார் ஆவார். சுகிசுதர்வம் என்ற நூலை மல்லிகார்ஜீனர் என்ற அறிஞர் இயற்றினார். இது கன்னட மொழியிலுள்ள ஒரு சிறந்த இலக்கண நூல் ஆகும். இவ்வாறு கொய்சாலர்கள் தங்களது ஆட்சிக்காலத்தில் கன்னட மொழி இலக்கிய வளர்ச்சிக்கு அரும்பெரும் தொண்டு ஆற்றினர்.

**கலை, கட்டிடக்கலை**

கொய்சாலர்கள் காலத்தில் கலை, கட்டிடக்கலை ஆகியவையும் வளர்ச்சியுற்றது. இவர்கள் ஏராளம் ஆலயங்களை துவாரசமுத்திரம், பெல்லூர், சோமநாதபுரம் ஆகிய இடங்களில் கட்டினர். இராமாயண, மகாபாரத கதைகளை வர்ணிக்கக்கூடிய ஓவியங்களும் சிற்பங்களும் இந்த ஆலயங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. இவர்கள் கட்டிய ஆலயங்கள் சாளுக்கிய பாணியைப்பின்னணியாகக் கொண்டவைகள். ஹலேபீட்ல் கட்டப்பட்டுள்ள கொய்சனேஸ்வரா ஆலயம் நரசிம்கனுடைய காலத்தைச் சார்ந்தது ஆகும். இந்த ஆலயத்தின் சுவர்கள் பறவைகள், மிருகங்கள், நாட்டிய பெண்கள் ஆகியவற்றின் சிற்பங்களால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. இவைகள் கொய்சாலர்களின் கலைத்திறனை வெளிப்படுத்துகின்றன. பெல்லூர் என்னுமிடத்தில் கட்டப்பட்டுள்ள ஆலயத்திலுள்ள மண்டபத்தில் 46 தூண்கள் காணப்படுகின்றன. இந்த அழகிய தூண்கள் கொய்சாலர்களின் கலைத் திறனை இன்றும் பறைசாற்றுகின்றன. இக்கால ஆலயங்களின் கலைத்திறனின் சிறப்பை வியந்து கூறுகின்ற நாடுகளில் காணப்படும் ஆலயங்ககளின் தன்மைகளிலிருந்து முற்றிலும் மாறுபட்டு காணப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

**சமூகமும் சமயமும்**

முற்கால கொய்சாலர்கள் சமணமதத்தைப் பின்பற்றினர். ஆனால் இராமானுஜரின் முயற்சியால் பிற்கால அரசர்கள் வைணவ சமயத்தை ஆதரித்தனர். மத்துவச்சாரியாரின் சமயக்கொள்கைகள் கொய்சால நாட்டில் அதிக செல்வாக்குப்பெற்று விளங்கின. கொய்சாலர்கள் இந்து மதத்தைப்பின்பற்றினாலும் அவர்கள் பிற சமயவளர்ச்சிக்குத் தடையாக இருக்கவில்லை. ஏராளம் சமணமத

அறிஞர்கள் இவர்களால் ஆதரிக்கப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இக்காலத்தில் கொய்சாலர்கள் சைவ, வைணவ சமயத்திற்கு அதிக ஆதரவளித்ததால் பௌத்த, சமண சமயங்கள் அதன் முக்கியத்துவத்தை இழந்தன. இக்கால அரசர்கள் விவசாயம், தொழில் வணிகம் ஆகியவற்றின் வளர்ச்சியிலும் அதிக அக்கரை காட்டினர். கொய்சாலர்கள் முஸ்லீம்களுக்கு எதிராகச் செயல்பட்டதால், இஸ்லாமிய சமயம் தென்னிந்தியாவில் பரவுவதை வன்மையாக எதிர்த்தனர்.

கொய்சாலர்கள் இந்து மத வளர்ச்சிக்கு அதிக அக்கரை காட்டியதால் அதன் கலாச்சார வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளித்தனர். மேலும் அயல்நாட்டுக் கலாச்சாரம் தங்களது நாட்டில் பரவுவதை வன்மையாக் எதிர்த்தனர். குறிப்பாக இக்காலத்தில் கலை, கட்டிடக்கலை, சமயம், அரசியல் ஆகியவற்றில் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டது.

## முஸ்லீம் படையெடுப்பு

பாண்டிய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுக்போர் முஸ்லீம்கள் தமிழக அரசியலில் தலையீடு செய்யவழிவகுத்தது. பாண்டிய நாட்டை ஆண்ட முதலாம் மாறவர்மன் குலசேகரப்பாண்டியன் என்ற அரசனுக்குச் சுந்தர பாண்டியன், வீரபாண்டியன் என இருப்பிள்ளைகள் காணப்பட்டார்கள். குலசேகரப்பாண்டியன் தனது இரண்டாவது மகன் வீரபாண்டியன் அரியணையேறுவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்தார். எனவே அரியணையைப் பெற தகுதியுடைய மூத்த மகனான சுந்தரபாண்டியன் பாண்டியநாட்டின்மீது படையெடுத்து, தன் தந்தையைக் கொலை செய்தான். தனது சகோதரன் வீரபாண்டியனையும் நாட்டைவிட்டு துரத்தினான். அதன்பின் சுந்தரபாண்டியன் கி.பி.1310-இல் பாண்டிய அரியணை ஏறினான். ஆனால் வீரபாண்டியன் சுந்தரபாண்டியனின் ஆட்சிக்கு எதிராகச் செயல்பட்டு வந்தான். எனவே தனது நிலமையை உறுதிப்படுத்த எண்ணிய, சுந்தரபாண்டியன் அலாவுதீனின் தளபதியான மாலிக்காபூரின் துணையை நாடினார். இச்சூழநிலையைக் காரணமாகக் கொண்டு மாலிக்காபூர் பாண்டிய நாட்டை கி.பி.1311-இல் முற்றுகையிட்டான். இவ்வாறு பாண்டிய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப்போர் அன்னிய படையெடுப்பில் முடிவுற்றதோடு, அந்த அரசன் வீழ்ச்சிக்கும் வழிவகுத்தது.

### மாலிக்காபூரின் படையெடுப்பு

பாண்டிய நாட்டில் ஏற்பட்ட உள்நாட்டுப்போர் மாலிக்காபூர் பாண்டிய நாட்டில் புகுந்து அந்நாட்டுப்பொருட்களைச் சூறையாடுவதற்கு வாய்ப்பினை அளித்தது. மாலிக்காபூர் சுந்தர பாண்டியனின் எதிரியான வீரபாண்டியனைத் தோற்கடிப்பதற்காக அவனது தலைநகரான பிர்துகல் மீது படையெடுத்தார். முஸ்லீம் படையோடு எதிர்த்துப்போட்டியிட சக்தியற்ற வீரபாண்டியன் அடர்ந்த காட்டுப்பகுதிக்குள் தப்பிச் சென்றான். அதன்பின் சிதம்பரத்தை அடைந்த மாலிக்காபூர் அங்குக் காணப்பட்ட ஆலயத்தின் செல்வத்தைக் கண்டுபிரமித்து அவற்றைக் கொள்ளையடித்தார். இதற்கு

எதிராகச் செயல்பட்ட இந்துக்கள் ஈவு இரக்கமின்றி கொலை செய்யப்பட்டனர். சிதம்பரம் ஆலயமும் நிர்மூலமாக்கப்பட்டது. அதைப்போன்று ஸ்ரீரங்கம் ஆலயமும் சூறையாடப்பட்டது. அதன்பின் கி.பி.1311-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் திடீரென மாலிக்காபூர் மதுரைமீது படையெடுத்தார். மாலிக்காபூரின் படையெடுப்பின் உள்நோக்கத்தை உணர்ந்து கொண்ட சுந்தரபாண்டியன் தனது உறவினர்களோடும், கருவூலத்தோடும் தலைநகரை விட்டு வெளியேறினான். இத்தருணத்தில் சுந்தரபாண்டியனின் மாமாவான விக்கிரமபாண்டியன் முஸ்லீம் படையோடு மோதினான். தலைநகரைக் கைப்பற்றிய மாலிக்காபூர் மதுரையில் காணப்பட்ட ஆலயத்தைச் சூறையாடினான். சூறையாடப்பட்ட பொருட்கள் டெல்லிக்கு கொண்டு செல்லப்பட்டன. குறிப்பாக 500 யானைகளையும், 5000 குதிரைகளையும், விலைமதிப்பற்ற ஏராளம் செல்வங்களையும் இவன் டெல்லிக்குக் கொண்டு சென்றான் எனச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. இது முஸ்லீம்களின் முதல் தென்னிந்தியப்படையெடுப்பாகும். இந்தப் படையெடுப்பு ஆலயங்களையும் பட்டணங்களையும் சூறையாடிவேண்டுமென்ற நோக்கத்தோடு அமைந்ததே தவிர ஒரு அரசை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணம் காணப்படவில்லை.

டெல்லி சுல்தானியத்தை ஆண்டுவந்த அலாவுதீன் கில்ஜி இறந்துபடவே கி.பி.1316-இல் அதன் அரசியலில் வியத்தகுமாற்றங்கள் நிகழ்ந்தன. சூழ்ச்சியின் காரணமாக மாலிக்காபூரும் அதே ஆண்டு கொலை செய்யப்பட்டான். அதன்பின் அலாவுதீன்கில்ஜியின் மூன்றாவது மகனான குத்புதீன் முபாரக் டெல்லி அரியணையேறினான். இத்தருணத்தில் தென்னிந்தியாவில் காணப்பட்ட யாதவ, பாண்டிய அரசுகள் டெல்லி சுல்தானியத்திற்கெதிராகக் கிளர்ச்சி செய்தன. இப்புரட்சிபடையை அடக்குவதற்காக குத்புதீன் முபாரக்ஷா தனது தளபதியான குஷ்ருக்கானைத் தென்னிந்தியாவுக்கு அனுப்பினான்.

இத்தருணத்தில் சுந்தரபாண்டியனுக்கும் வீரபாண்டியனுக்குமிடையே உள்நாட்டுப் போர் நடைபெற்றுக்கொண்டிருந்தது. இப்போரில் சுந்தரபாண்டியனை அவனது சகோதரனான வீரபாண்டியன் தோற்கடித்தான். எனவே சுந்தரபாண்டியன் தனது சகோதரனைத் தோற்கடிப்பதற்காகக் குஷ்ருக்கானின் உதவியை நாடினான். சுந்தரபாண்டியனின் வேண்டுகோளை ஏற்று குஷ்ருக்கான் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். இது முஸ்லீம்களின் இரண்டாவது படையெடுப்பாகும். இப்படையெடுப்பு மாலிக்காபூரின் படையெடுப்பைப் போலல்லாமல் மதுரையில் ஒரு முஸ்லீம் அரசை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தது.

**துக்கிளக்குளின் படையெடுப்பு**

கில்ஜி வம்சம் வீழ்ச்சியடைந்தபின் துக்கிளக்குகள் டெல்லி சுல்தானியத்தை ஆட்சிபுரிந்தனர். அதன் முதல் சுல்தான் கியாசுதீன் ஆவான். இவனது ஆட்சிக்காலத்திலும் தென்னிந்திய அரசுகள் சுதந்திரத்திற்காக கலகம் செய்தன. இக்கலகத்தை ஒடுக்குவதற்காக உளுக்கான (முகமது பின் துக்கிளக்)ன் தலைமையில் படையொன்றை கியாசுதீன் தென்னிந்தியாவிற்கு அனுப்பினான். இவன்

பாண்டிய நாட்டின்மீது படையெடுத்து ஸ்ரீரங்கம் ஆலயத்தை இரண்டாவது முறையாகச் சூறையாடினான். இது கி.பி.1321-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. பாண்டிய அரசன் பராக்கிரமதேவன் தோற்கடிக்கப்பட்டு கைதியாக டெல்லிக்குக் கொண்டு செல்லப்பட்டான். இப்போரைப் பற்றிய புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள கல்வெட்டு குறிப்பிடுகிறது.

கியாசுதீன் துக்கிளக் தீடீரென விபத்தின் மூலம் மரணமடையவே முகமது பின் துக்கிளக் சுமார் கி.பி.1325-இல் டெல்லி அரியணையேறினான். இவனும் கி.பி.1327-இல் மதுரை மீது படையெடுத்து அதைக் கைப்பற்றினான். இவன் மதுரையை டெல்லி சுல்தானியத்தின் ஒரு மாநிலமாக மாற்றினான். இதை ஆட்சிபுரிவதற்காக ஜலால்லுதீன் கேஷன்ஷா என்ற ஆளுநரை கி.பி.1327-ஆம் ஆண்டு நியமித்தான்.

**மதுரை சுல்தானியம்**

முகமதுபின்துக்கிளக்கின் ஆட்சிக்காலத்தில் டெல்லி சுல்தானியத்தின் பல்வேறு பகுதிகளில் கலகங்கள் நிகழ்ந்தன. இவற்றை அடக்குவதில் சுல்தான் அதிக கவனம் செலுத்தினான். இச்சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திய ஜலாலுதீன் கேஷன்ஷா டெல்லி சுல்தானியத்திலிருந்து விடுபட்டு மதுரை சுல்தானியத்தை கி.பி.1335-இல் ஏற்படுத்தினார். இவனது பெயரில் தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டான். இவன் மீது பொறாமை கொண்ட அலாவுதீன் உதகை இவனைக் கொலை செய்து ஆட்சியைக் கைப்பற்றினான். அலாவுதீன் உதகை ஒரே ஒரு ஆண்டு மதுரை சுல்தானியத்தை ஆட்சிபுரிந்தான். இவனுக்குப்பின் குத்புதீன் மதுரை சுல்தானாக முடிசூட்டிக்கொண்டான். இவன் ஆட்சிக்கு வருவதைப் பிரபுக்கள் விரும்பவில்லை. எனவே ஆட்சிக்கு வந்த நாற்பது நாட்களுக்குள் இவன் படுகொலை செய்யப்பட்டான். அதன்பின் கியாத்துதீன் தமகன் மதுரையை ஆட்சிபுரிந்தான். இவன் இரத்தவெறி கொண்டவன். முஸ்லீம் அல்லாதவர்களை இவன் கொடுமைப்படுத்தினான். இவனைக் கொய்சால மன்னன் மூன்றாம் பல்லாலன் கொலை செய்தான். தமகனுக்குப்பின் அவனது மருமகன் நசுருதீன் மதுரை சுல்தானானான். இவன் கொடுங்கோல் ஆட்சி புரிந்தான். நசுருதீனுக்குப்பின் குர்பத்கசன்கங்கு சிறிது காலம் மதுரையை ஆட்சிபுரிந்தான். திறமையற்ற இவன் ஒரு கோமாளியைப்போல் செயல்பட்டான். விஜயநகர அரசன் முதலாம் புக்கன் இவனைச் சுமார் கி.பி.1352-இல் தோற்கடித்தான். அதன்பின் அடில்ஷாவும் பக்ருதீன் முபாரக்ஷாவும் கி.பி.1359 இல் கி.பி.1371 வரை மதுரை சுல்தானியத்தை ஆட்சிபுரிந்தனர். மதுரை சுல்தானியத்தின் கடைசி சுல்தானான பக்ருதீன் முபாரக்ஷா விஜயநகர அரசன் முதலாம் புக்கனின் மகனான குமார கம்பனனால் கி.பி.1371-இல் கொலை செய்யப்பட்டான். இத்துடன் மதுரை சுல்தானியத்தின் ஆட்சி முடிவுற்றது. அதன்பின் மதுரை விஜய நகர அரசர்களால் நிர்வகிக்கப்பட்டுவந்தது.

**கலை, கட்டிடக்கலை**

முஸ்லீம்களின் ஆட்சிகாலத்தில் கலை, கட்டிடக்கலை வளர்ச்சியில் வியத்தகு மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்கால கலை வளர்ச்சியை அக்காலத்தில் கட்டப்பட்ட அரண்மனைகள், முஸ்லீம் பள்ளிகள், கல்லறைகள், கட்டிடங்கள் ஆகியவற்றின் மூலம் தெரிந்து கொள்ளலாம். இக்காலத்தில் சமயச்சார்புடைய பள்ளிகளும் கல்லறைகளும் ஏராளம் கட்டப்பட்டன. அவற்றுள் சில சமயச்சார்பு அற்றும் காணப்பட்டன. மக்கள் எளிதில் சென்று வருவதற்கு வசதியாக முஸ்லீம் பள்ளிகள் (ஆலயங்கள்) நுழைவாயில்கள் மிகப்பெரியவைகளாகக் காணப்பட்டன. ஆனால் அக்கால கல்லறைகளின் வாயில்கள் மிகச்சிறியவைகளாகக் காணப்பட்டன. முஸ்லீம்கள் சோழ, பாண்டியர்களின் கலையைப்பின்பற்றவில்லை. முஸ்லீம்கள் தங்களது ஆட்சிகாலத்தில் கட்டிய கட்டிடங்கள் உள்நாட்டுக்கலை, காலநிலை, கிடைக்கப்பெற்ற பொருட்கள், வேலையாட்களின் திறன் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தன.

இக்காலத்தில் தமிழகத்தில் காணப்பட்ட இஸ்லாமியக்கலை இந்து கலையைப்போன்று கவர்ச்சியும் அழகும் அல்லது எளிமையும், தூய்மையும் உடையதாக விளங்கின. இந்து ஆலயங்களில் காணப்பட்டது போன்று தூண்களும், உத்திரங்களும் இஸ்லாமிய ஆலயங்கள் காணப்படவில்லை. இதற்குப்பதிலாக வளைவுகள் அதிகமாக இஸ்லாமிய ஆலயங்களில் காணப்பட்டன. இந்து, முஸ்லீம் கலைகள் அடிப்படையில் மாறுபட்டு கொண்டாலும் நாளடைவில் இவற்றின் சில அம்சங்கள் ஒன்று சேர்ந்து புதிய கலை உருவானது. இதைப் பிற்காலத்தில் தோன்றிய இந்து ஆலயங்களிலும் இஸ்லாமியப் பள்ளிகளிலும் காணலாம். இப்புதிய கட்டிடக்கலைக்குச் சரசோனிக் கட்டிடக்கலை என்று பெயர்.

இப்புதிய கட்டிடக்கலையில் இந்துகலையின் பாரம்பரிய அம்சங்களான கைவேலைப்பாடுகள், அழகான வடிவமைப்பு போன்றவைகள் இடம்பெற்றன. இவை ஆடம்பரமற்ற வளைவுகளையும், மிருதுவான ஆடம்பரம் அற்ற சுவர்களையும் அதிக பரப்பளவுடைய உள்பகுதிகளையும் கொண்ட இஸ்லாமிய கலையுடன் இணைந்தன. இப்புதிய கட்டிடங்கலையைப் பின்பற்றிப் பிற்காலத்தில் பல நினைவுச் சின்னங்களும், மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் வீடுகளும், தெருக்களும், ஆலயங்களும் அமைக்கப்பட்டன. மேலும் இக்கலை கைத்தொழில் பொருட்களான காகிதம் செய்தல், உலோகம் ஆகியவற்றால் பொருட்கள் செய்தல் ஆகியவற்றிலும் பின்பற்றப்பட்டன. பிற்காலத்தில் அணிகலன்கள் செய்வதற்குக் கூட இக்கலையைக் கலைஞர்கள் பின்பற்றினர்.

நாளடைவில் இக்கலையைப்பின்பற்றி புதிய பாணியிலான வளைவுகளையும், புதிய வடிவமைப்புக்களையும் அமைத்து ஏராளம் சிறிய கட்டிடங்களும், பெரிய ஆலயங்களும் கட்டப்பட்டன. குறிப்பாகப் பிற்காலத்தில் எழுப்பப்பட்ட இந்து முஸ்லீம் ஆலயங்களும் நினைவுச்சின்னங்களும், கல்லறைகளும், வீடுகளும் பிற அமைப்புகளும் இக்கலையை வெளிப்படுத்தும் சான்றுகளாக விளங்குகின்றன.

இக்கலைகளின் இணைவு பிற்காலத்தில் இந்து முஸ்லீம்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்த அடிகோலியது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மொழியும் கல்வியும்

இஸ்லாமியர்கள் மொழி வளர்ச்சிக்கும் ஊக்கமளித்தனர். இக்காலத்தில் இந்து, இஸ்லாமிய, பிராந்திய மொழி இலக்கியங்கள் வளர்ச்சியடைந்தன. குறிப்பாக, இந்து முஸ்லீம் தொடர்பின் காரணமாகப் புதிய மொழியாகிய உருது தோன்றியது. இப்புதிய மொழியை முஸ்லீம் ஆட்சியாளர்கள் ஆதரித்தனர். எனவே மிகக் குறுகிய காலத்திற்குள் இந்த மொழி மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. இம்மொழியில் பல இலக்கியங்கள் பல பாரசீக மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன. இம்முறையை முஸ்லீம் ஆட்சியாளர்களும், அறிஞர்களும் ஆதரித்தனர். இதனால் இந்து கலாச்சாரம் பிற நாடுகளில் பரவும் வாய்ப்பு ஏற்பட்டது.

இக்கால சமயத்துறவிகள் சாதாரண மக்களின் மொழிக்கு முக்கியத்துவம் கொடுத்து அம்மொழியில் தங்களது சமயக் கருத்துக்களை மக்களிடையே பரப்பினர். இக்கருத்தை மையமாக வைத்துத் தோன்றிய பக்தி நெறி இயக்கம் சாதாரண மக்கள் புரிந்து கொள்ளும் நோக்குடன் பல்வேறு இலக்கியங்களை உருவாக்கின. அதே போன்று இஸ்லாமியர்களும் தங்களது சமயக்கருத்துக்களைச் சாதாரண மக்களிடையே பரப்பும் முயற்சியில் ஈடுபட்டனர். எனவே இந்து இஸ்லாமிய மொழிகளை அடிப்படையாகக் கொண்ட சாதார மக்களின் மொழியாகிய உருது மொழி தோன்றியது. இம்மொழி சாதாரண மக்களை எளிதில் கவர்ந்ததால் மிக வேகமாக வளர்ச்சியடைந்தது. மேலும் இக்காலத்தில் பாரசீக மொழியில் வரலாறுகளும். சுயசரிதங்களும், கடிதங்களும் எழுதப்பட்டன. இவை வரலாற்று இலக்கியச் சான்றுகளாக விளங்குகின்றன. மேலும் இஸ்லாமியர்களின் வருகையால் காகிதத்தைப் பயன்படுத்துதல், காகிதங்களில் படங்களைப் பதித்தல், கைப்பிரதிகளுக்கு விளக்கமளிக்கும் முறை ஆகியவைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

முஸ்லீம் ஆட்சியாளர்கள் அறிஞர்களையும், கல்விமான்களையும் ஆதரித்தனர். கல்விகற்றவர்கள் சமுகத்தில் உயர்வாகக் கருதப்பட்டனர். இவர்களை மக்கள் பெரிதும் மதித்தனர். ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமிடையே நல்லுறவு இக்காலத்தில் நிலவியது. மாணவர்கள் ஆசிரியர்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என எதிர்ப்பார்க்கப்பட்டது. அக்காலத்தில் நிலவிய குருகுல முறையிலான கல்விமுறையை முஸ்லீம்களும் கைப்பற்றினர். கல்வி பயிலும் மாணவர்களில் மிகச்சிறந்த மாணவனை ஆசிரியருக்கு உதவி புரிய நியமிக்கின்ற பழக்கமும் அக்காலத்தில் காணப்பட்டது. முஸ்லீம் பெண்மணிகளுக்குக் கல்வி மறுக்கப்பட்டது. முஸ்லீம் ஆட்சியாளர்கள் கல்வியை ஆதரித்தனர். நாட்டின் பல்வேறு பகுதிகளில் கல்வி நிறுவனங்களையும் நூல்நிலையங்களையும் நிறுவினர். கல்வி நிலையங்களில் மக்களுக்குத் தேவையான கல்வி புகட்டப்பட்டது. நூல் நிலையங்களில் பல்வேறுபட்ட நூற்கள் காணப்பட்டன.

நாட்டை ஆண்ட சுல்தான் அறிஞர்களை ஆதரித்தான். கவிஞர்களும், எழுத்தாளர்களும், தத்துவஞானிகளும் முஸ்லீம் ஆட்சியாளரின் அவையை அலங்கரித்தனர். அக்காலத்தில் அச்சகங்கள் காணப்படாததால் கையால் எழுதுவதற்கு தனி நபர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். நாட்டை ஆண்ட சுல்தானின் ஆணைப்படி அறிஞர்கள் சமஸ்கிருத மொழியைக் கற்க வற்புறுத்தப்பட்டனர். இவர்களால் சமஸ்கிருத நூற்கள் பாரசீக மொழியால் மொழி பெயர்க்கப்பட்டன.

அக்கால கல்விக்கூடங்கள் சமயசார்புடையனவாக விளங்கின. இங்குச் சமயக்கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இருப்பினும் இலக்கணம், கணிதம், இலக்கியம், பௌதீகம், தத்துவம் ஆகியவைகளும் போதிக்கப்பட்டன. முஸ்லீம் மாணவர்களுக்கு அரபி மொழி கட்டாய பாடமாக இருந்தது. இக்காலத்தில் பல்வேறு இலக்கியம், பௌதீகம், தத்துவம் ஆகியவைகளும் போதிக்கப்பட்டன. முஸ்லீம் மாணவர்களுக்கு அரபி மொழி கட்டாய பாடமாக இருந்தது. இக்காலத்தில் பல்வேறு இலக்கியங்கள் தோன்றின. இந்த இலக்கியங்கள் தமிழ் சமூகத்தையும் தமிழ் இலக்கிய பாரம்பரியத்தையும் பின்னணியாகக் கொண்டிருந்தன.

**முஸ்லீம் ஆட்சியின் விளைவுகள்**

கி.பி.14-ஆம் நூற்றாண்டு வரையிலும் தமிழர்கள் வட இந்தியாவோடு எவ்வித கலாச்சாரத் தொடர்பையும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இவர்கள் திராவிட கலாச்சாரத்தைப் பின்பற்றி அதோடு நெருங்கிய தொடர்பை வைத்திருந்தனர். முஸ்லீம்களின் கலாச்சாரத்தை இவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. மேலும் முஸ்லீம்களை தங்களது எதிரிகளாகக் கருதினர். ஆனால் நாளடைவில் இவர்கள் தங்களது பகைமைகளை மறந்தனர். இதனால் இவ்விரு கலாச்சாரங்களும் இணைந்தன. இதன்விளைவால் தமிழ் முஸ்லீம் சமுதாயம் உருவானது. விரோதிகளாக இருந்த இந்த இனத்தவர்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்திய பெருமை இந்து முஸ்லீம் துறவிகளைச் சாரும்.

தமிழகத்தை ஆட்சிபுரிந்த அரசர்கள் ஆடம்பரவாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். இவர்கள் ஆடம்பர நாகரீகத்தையும் கவர்ச்சிமிக்க அரச அவைகளையும் கொண்டிருந்தனர். ஆடம்பரமிக்க நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தனர். எளிய வாழக்கை நடத்திவந்த முஸ்லீம்களை இவைகள் பெருமளவில் கவர்ந்தன. எனவே முஸ்லீம்களும் தங்களது ஆட்சிகாலத்தில் இந்து அரசர்களைப்போன்று ஆடம்பரத்தில் திளைத்தனர்.

நாளடைவில் இந்து முஸ்லீம் கலாச்சார இணைப்பு ஏற்பட்டதன் விளைவால் இந்துக்கள் முஸ்லீம்களின் ஆடை அணியும் முறை, சில சமுதாய நிகழ்ச்சிகள் போன்றவற்றைப் பின்பற்றத் தொடங்கினர். அதேபோன்று முஸ்லீம்களும் இந்துக்கள் நாள்தோறும் பின்பற்றிவந்த சில பண்புகளையும், ஆடை, அணிகலங்களையும்,

தினமும் குளிக்கின்ற முறையையும், திருவிழாக்களை ஆடம்பரமாக நடத்துகின்ற முறைகளையும் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்தினர்.

முஸ்லீம்களின் வருகையால் தமிழகத்தில் தொன்று தொட்டு நிலவிவந்த சமுதாயத்தூய்மை கெட்டது. முஸ்லீம்கள் உடல் உறவு கொள்வதற்கு வலுக்கட்டயாமாக இந்து பெண்மணிகளைப் பயன்படுத்தினர். இந்து பெண்மணிகளின் கற்பைக் கெடுப்பது முஸ்லீம்களின் அன்றாட பழக்கமாயிருந்தது. எனவே இந்து குடும்பத்தில் பெண்கள் பிறப்பதைத் தீயசகுனமாக மக்கள் எண்ணினர். குறிப்பாக இச்செயல் இந்து சமயத்தைப் பெருமளவு பாதித்தது.

முஸ்லீம்கள் தமிழகத்தைக் கைப்பற்றுவதற்குமுன் ஜாதிமுறை இங்கு வேரூன்றி காணப்பட்டது. பிராமணர்கள் எல்லா உரிமைகளையும் பெற்று உயர்வாகக் கருதப்பட்டனர். இவர்கள் பிற ஜாதியினரை இழிவாகக் கருதினர். ஆனால் முஸ்லீம்களின் வருகைக்குப்பின்னர் பிராமணர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டன. அவர்களின் உயர்வுக்குக் காரணமாயிருந்த ஆலயங்கள் புறக்கணிக்கப்பட்டன. எனவே ஜாதி முறையின் சீற்றம் முஸ்லீம்களின் வருகையால் குறைந்தது. குறிப்பாக முஸ்லீம்கள் இந்துக்களைத் தங்களது அடிமைகளாகக் கருதினர்.

முஸ்லீம்கள் இஸ்லாமிய மதத்தின் மீது அதிக நம்பிக்கையும் மதிப்பும் கொண்டிருந்தனர். இவர்களும் கிறிஸ்தவர்களைப்போன்று தங்களது சமயத்தை தமிழகத்தில் பரப்புவதில் அதிக ஆர்வம் காட்டினர். எனவே இந்துக்களை வலுக்கட்டாயமாக இஸ்லாமிய மதத்தில் சேர்த்தனர். இஸ்லாமிய ஆலயங்கள் பெருகிக்கொண்டே சென்றன. இதனால் இந்துமதம் நலிவடைந்தது. எனவே பிற்காலத்தில் இஸ்லாமிய மதத்திலிருந்து இந்துமதத்தைப் பாதுகாக்க பல்வேறு பத்திநெறி இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

முஸ்லீம்கள் தங்களது ஆட்சிகாலத்தில் இந்து அரசர்கள் பின்பற்றிவந்த பல நிர்வாக அமைப்புக்களைப்பின்பற்றினர். இந்து அரசர்களின் நிதிநிர்வாகம் திறம்பட செயல்பட்டு வந்ததால் அம்முறையை முஸ்லீம் அரசர்களும் பின்பற்றினர். மேலும் நிதியைப் பராமரிக்கின்ற முறையையும் முஸ்லீம்கள் இந்துக்களிடமிருந்து தெரிந்து கொண்டனர்.

முஸ்லீம்கள் வருகையால் தமிழ் மக்களைச் சுற்றி காணப்பட்ட பாரம்பரீக சமய, சமூக, கலாச்சார தடைகள் அனைததும் அகற்றப்பட்டன. இதன் விளைவால் இதுகாறும் தமிழ்நாட்டிற்குள் ஒதுங்கி வாழ்ந்த தமிழர்கள் வெளிஉலகத்துடன் நேரடித்தொடர்பு கொள்கின்ற வாய்ப்பு ஏற்பட்டது. மேலும் முஸ்லீம்களின் நிர்வாக கலத்தில் தமிழ் நாட்டின் காணப்பட்ட பிரபுக்களும், மக்களும் பெருமளவு பாதிக்கப்பட்டனர். மது அருந்துவதும் விற்பதும் தடை செய்யப்பட்டது. மது அருந்தும் பழக்கமுடைய பிரபுக்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதைப்பிரபுக்கள் வன்மையாக எதிர்த்தனர். எனவே பிரபுக்கள் தங்களது வீடுகளின்

மட்டும் மது அருந்தலாம் எனச் சுல்தானால் ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் பொதுமக்கள் மது அருந்துவது முழுமையாகத் தடை செய்யப்பட்டது. மேலும் பிரபுக்கள் சமுதாய நிகழ்ச்சிகளில் பங்கெடுப்பதற்கும், தங்களது குடும்பங்களில் திருமண ஒழுங்குகளைச் செய்வதற்கும் சுல்தானின் முன் அனுமதியைப் பெற வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டது. இச்செயல்கள் பிரபுக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தியது.

முஸ்லீம் பெண்மணிகள் பர்தா அணியும் பழக்கமுடையவர்கள். இதை இந்து பெண்மணிகளும் அணிய வேண்டும் என வற்புறுத்தினர். குறிப்பாக அரண்மனைகளில் காணப்பட்ட இளவரசிகளும் இம்முறையைப் பின்பற்ற கட்டாயப்படுத்தப்பட்டனர். இது மக்களிடையே ஆத்திரத்தைத் தூண்டின.

மேலும் முஸ்லீம்கள் புகுத்தியச் சமயக் கட்டுப்பாடுகளும் இந்துக்களுக்கிடையே சலசலப்பை ஏற்படுத்தியது. இந்து ஆலயங்களும், மக்களின் செல்வங்களும் அடிக்கடி சூறையாடப்பட்டன. இந்துக்களின் சமய உரிமைகள் பறிக்கப்பட்டன. இந்துக்கள் பாரம்பரீகமாகக் கொண்டிருந்த சொத்துக்கள் எவ்வித அனுமதியும் இன்றிப் பறிமுதல் செய்யப்பட்டன. மேலும் இந்து தெய்வங்கள் நிந்திக்கப்பட்டன. இதற்கு எதிராகச் செயல்பட்ட இந்துக்கள் ஈன இரக்கமின்றி கொலை செய்யப்பட்டனர். ஆண்கள் தூண்களில் கட்டி வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டனர். பெண்கள் தங்களது தலைமுடியோடு சேர்த்து கட்டப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டனர். பால் குடித்து கொண்டிருந்த பச்சிளம் குழந்தைகள் தாயின் மார்போடு இந்த நிலையில் மக்கள் மிகவன்மையாகக் கண்டித்தனர்.

இவ்வாட்சி காலத்தில் விவசாயம் புறக்கணிக்கப்பட்டது. மதுரையில் காணப்பட்ட தென்னை மரங்கள் முறிந்தெறியப்பட்டன. அவ்விடங்களில் கொலை செய்யப்பட்ட இந்துக்களின் தலைகளைத் தொங்கவிடும் இருப்புத்தூண்கள் அமைக்கப்பட்டன. இது இந்துக்களின் அவலநிலையைக் சுட்டிக்காட்டுகிறது.

இந்துக்கள் மீது கடுமையான வரிகள் சுமத்தப்பட்டன. வருவாயில் பாதி நிலவரியாகப் பிரிக்கப்பட்டது. மேலும் புதிய வரிகளாகிய ஜசியா, வருமானவரி, வீட்டு வரி, சுங்க வரி போன்றவைகள் புகுத்தப்பட்டன. உயர்நிலையில் காணப்பட்ட நிலவரியைப் பிரித்த இந்து அதிகாரிகளுக்கும், கிராமத்தலைவர்களுக்கும் கூட எவ்வித சலுகைகளும் அளிக்கப்படவில்லை.

முஸ்லீம்களின் ஆட்சிகாலத்தில் இந்துக்கள் ஒடுக்கப்பட்டதால் பல நூற்றாண்டுகளாகச் சிறப்புற்று விளங்கிய இந்து கலாச்சாரம் அதன் சிறப்பை இழக்கத் தொடங்கியது. மேலும் சமுதாய அரசியல் நிலைகளிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. எனவே இக்காலத்தை இந்து சமயத்தின் இருண்ட காலம் எனலாம். இக்காலத்தில் முஸ்லீம்களுக்கு எதிராகத் தோன்றிய பல கலகங்கள் ஈனஇரக்கமின்றி ஒடுக்கப்பட்டன. இச்சூழ்நிலையில் இந்துக்களைப் பாதுகாக்க கி.பி.1336-ஆம் ஆண்டு இந்து அரசாகிய விஜய நகர அரசு தோன்றியது.

## நாயக்கர்கள் காலம்

விஜயநகர அரசர்கள் தமிழகத்தை ஆட்சிபுரிந்தபோது நாயக்கர்கள் அவர்களுக்கு பல்வேறு நிலைகளில் உறுதுணையாயிருந்தனர். தலைக்கோட்டை, தோப்பூர் ஆகிய போர்களுக்குப் பின் விஜய நகர அரசு தனது வலிமையை இழக்கத் தொடங்கியது. இச்சூழ்நிலையில் விஜய நகர அரசர்களின் கீழ் பணிபுரிந்துவந்த நாயக்கர்கள் அவர்களது பிடியிலிருந்து விடுபட்டு தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கினர். இவர்கள் மதுரை, தஞ்சாவூர், செஞ்சி ஆகிய இடங்களை மையமாகக் கொண்டு தங்களது ஆதிக்கத்தைத் தமிழகத்தில் நிலைநாட்டினர்.

## மதுரை நாயக்கர்கள்

### விஸ்வநாத நாயக்கர் (கி.பி.1529 – கி.பி.1564)

'பாண்டிய நாட்டின் தலைவன்' தென்னக முடியின் தலைவன் என ராயரால் புகழ்பெற்ற விஸ்வதாத நாயக்கர், நாகம நாயக்கரின் மகன் ஆவார். கிருஷ்ணதேவராயர் தனது ஆட்சி காலத்தில் நாகம நாயக்கரை மகா மண்டேலஸ்வரராக நியமித்து தமிழ் நாட்டின் நிர்வாகத்தை அவரிடம் ஒப்படைத்திருந்தார். தந்தையின் துணையுடன் அரசியலில் புகுந்த விஸ்வநாத நாயக்கர் ஆளுநராக நியமிக்கப்பட்டார். ஆட்சிப்பொறுப்பேற்ற விஸ்வநாதநாயக்கர் நாட்டில் அமைதியை நிலைநாட்டி, பொருளாதார மேம்பாட்டிற்காகப் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

பொருளாதார மேம்பாட்டிற்காக நடவடிக்கைகளை மேற்கொண்ட விஸ்வநாத நாயக்கர் வேளாண்மையைப் புனரமைப்பு செய்தார். இதனால் காடுகள் அழிக்கப்பட்டு விளைநிலங்களாக மாற்றப்பட்டதோடு பாழடைந்து கிடந்த நிலங்களும் விவசாயத்திற்கு கொண்டு வரப்பட்டன. நீர்ப்பாசன வசதியைப் பெருக்க முன்னுரிமை அளிக்கப்பட்டது. நாட்டில் செழிப்பு ஏற்படவே அமைதி நிலவியது. அரசின் வருவாயும் பெருகியது.

### கொள்ளையர்களை ஒடுக்குதல்

இவரது ஆட்சிகாலத்தில் கொள்ளைக்காரர்கள் மக்களுக்கும், புனிதப் பயணிகளுக்கும் ஊறுவிளைவித்துக்கொண்டிருந்தனர். இவர்களின் கொட்டத்தை அடக்க எண்ணிய விஸ்வநாதர் மதுரை, திருச்சி பகுதிகளில் கோட்டைகளை எழுப்பி படைபாதுகாப்பை அதிகரித்தார். காவிரிக்கரையின் இருகரைகளிலும் காணப்பட்ட அடர்ந்த காடுகள் கள்ளர்களின் உறைவிடமாக விளங்கியது. இவர்களின் கொட்டத்தை அடக்க எண்ணிய விஸ்வநாதர் அந்த அடர்ந்த காடுகளை அழித்ததோடு சாலைகளை அமைத்து போக்குவரத்து வசதியைப் பெருக்கினர். இதனால் மக்களின் மனதிலிருந்து கள்ளர்பயம் அகன்றது. இவரது சீர்த்திருத்தங்களால் திருச்சி நகரம் படைப்பாதுகாப்புடன் தோற்றமளித்தது. மேலும்

கிராம மக்களின் மேம்பாட்டிற்காக பாசன, போக்குவரத்து வசதிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது.

**ஆலயவளர்ச்சி**

விஸ்வநாதரின் ஆட்சிகாலத்தில் ஆலய வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டப்பட்டது. இக்காலத்தில் கோயில்கள் பல செப்பனிடப்பட்டன. மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயம் இவர் காலத்தில் செப்பனிடப்பட்டது. அங்கு பொலிவுடன் காணப்படும் ஆயிரங்கால் மண்டபம் இவரது ஆட்சிகாலத்தில் எழுப்பப்பட்டதாகக் கருதப்படுகிறது. திருச்சி, ஸ்ரீரங்கம் ஆலயங்களும் இவர் காலத்தில் பழுது பார்க்கப்பட்டன. இவர் மூன்று லட்சம் பொன்னை செலவிட்டு திருவரங்கப் பெருமாள் ஆலயத்தைச் செப்பனிட்டதுடன் அதைச் சுற்றி தெருக்களை அமைத்து வீடுகளைக் கட்டி மக்களைக் குடியேற்றினார் என கோயிலொழுகு என்னும் நூல் குறிப்பிடுகிறது.

**பாண்டியரை வெல்லுதல்**

இவரது ஆட்சி காலத்தில் தென்பாண்டி நாட்டில் சிற்றரசர்களாய் ஆட்சிபுரிந்து வந்த பஞ்சபாண்டியர்கள் விஜய நகர அரசிற்கெதிராக கலகம் செய்தனர். இவர்களை தளவாய் அரியநாதரின் துணைகொண்டு அடக்கிய விஸ்வநாதர் கலகத்தைத் தடுக்கவும், பல்வேறு சீர்த்திருத்தங்களை அமுல்படுத்தவும் திட்டங்கள் பல தீட்டினார். திருச்சியில் மேற்கொண்டது போன்று நெல்லைப் பகுதியிலும் காடுகளை அழித்து சாலைப்போக்குவரத்தைப் பெருக்கினார். இவரது ஆட்சி காலத்தில் திருநெல்வேலி நகரை விரிவுபடுத்துவதற்கான அகன்ற சாலைகள் அமைக்கப்பட்டன. கிராம மக்களின் முன்னேற்றத்திற்காக நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி விவசாயத்தைப் பேணினார்.

**கம்பம் - கூடலூர் பகுதிகளை வெல்லுதல்**

விஜயநகர பேரரசுக்கு உட்பட்ட கம்பம், கூடலூர் பகுதிகளை உரிமை கொண்டாடிய சோழர்கள் இப்பகுதிகளைக் கைப்பற்றியதோடு திறை செலுத்த மறுத்தனர். எனவே திறைப்பணத்தைப் பெறும் நோக்குடன் கம்பம் கூடலூர் பகுதிகளைக் கைப்பற்றிட எண்ணிய விஸ்வநாதர் ஒருபடையை தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான ராமபத்ர நாயக்கர் தலைமையில் அனுப்பினார். இப்படை எதிரிகளை வென்று கம்பம், கூடலூர் பகுதிகளை மதுரையுடன் இணைத்தது.

**வேணாட்டைத் தாக்குதல்**

இந்து சமயத்தின் பாதுகாவலராக விளங்கிய விஸ்வநாதர் இராம இராச்சியத்தை வலுப்படுத்தி பிராமணர்களின் ஆதிக்கத்தை உறுதிப்படுத்த எண்ணினார். எனவே பிற சமய வளர்ச்சிக்கு எதிராகச் செயல்பட்டார். இச்சமயத்தில் வேணாட்டை ஆண்டுவந்த திருவடிகள் கிறிஸ்தவர்களுக்கு

அடைக்கலம் கொடுத்து பல்வேறு உதவிகளை வழங்கினார். இதனால் ஆத்திரமடைந்த விஸ்வநாதர் தனது படைத்தளபதிகளில் ஒருவரான வித்தலராயன் தலைமையில் படை ஒன்றை வேணாட்டிற்கு அனுப்பினார். போரில் கைப்பற்றப்பட்ட இப்பகுதி கி.பி.1564-ஆம் ஆண்டு வரை நாயக்கரின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது.

**நாட்டின் பரப்பளவு**

விஸ்வநாதர் ஆட்சிபுரிந்த மதுரைப்பகுதி மதுரை, திருச்சி, இராமநாதபுரம், திருநெல்வேலி, கோவை, சேலம் திருவிதாங்கூரின் ஒரு பகுதி ஆகியவற்றைக் கொண்டிருந்தது. இவரது ஆட்சி காலத்தில் நிர்வாகத்தில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. திறம்பட ஆட்சிபுரிவதற்கு வசதியாக நாட்டை பல்வேறு பாளையங்களாகப் பிரித்து அவற்றின் நிர்வாகப்பொறுப்பைப் பாளையக்காரர்களிடம் ஒப்படைத்தார். இவரால் அங்கீகரிக்கப்பட்ட பாளையக்காரர்கள் இவரது மேலாண்மையை ஏற்றதோடு போதிய படை, நிதி உதவிகளை அளித்து வந்தனர். விஸ்வநாயக்கர் ஆட்சி காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது. சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

**இறுதி காலம்**

விஜய நகர ஆட்சி தமிழகத்தில் சிறப்புற்று விளங்க காரணமாயிருந்தவர்களுள் முதன்மையானவர் விஸ்வநாதநாயக்கர் ஆவார். முப்பத்தி ஐந்து ஆண்டுகள் சீரும் சிறப்புமாகத் தமிழகத்தை ஆட்சிபுரிந்த விஸ்வநாத நாயக்கர் தனது அறுபத்தி ஒன்பதாம் வயதில் கி.பி.1564-ஆம் ஆண்டு இயற்கை எய்தினார். இவரது மரணத்தைப் பற்றிய செய்தியை வரலாறு திட்டவட்டமாகத் தெளிவுபடுத்தவில்லை. கி.பி.1564-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 26-ஆம் நாள் இவர் தனது மகன் கிருஷ்ணப்பநாயக்கரை வாரிசாக முடிசூட்டினார்.

**முதலாம் கிருஷ்ணப்ப நாயக்க (கி.பி.1564 – கி.பி.1572)**

விஸ்வநாத நாயக்கருக்குப்பின் அவரது மகன் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் மதுரை மாநிலத்தை ஆட்சிபுரிந்தார். இவர் கி.பி.1561-ஆம் ஆண்டு அரியணை ஏறினார். இவரது ஆட்சி பல்வேறு நிகழ்ச்சிகளால் முக்கியத்துவம் பெற்று விளங்கியது.

**தலைக்கோட்டைப் போரில் பங்கெடுத்தல்**

இவரது ஆட்சிக்காலத்தில் தான் விஜயநகர அரசின் வீழ்ச்சிக்கு காரணமாயிருந்த தலைக்கோட்டைப் போர் நிகழ்ந்தது. இப்போரில் முகம்மதியர்களை போரிடும் பொருட்டு கிருஷ்ணப்பநாயக்கர் தனது தளபதியான அரியநாதரை ஒரு படையுடன் அங்கு அனுப்பினார். போரில் முஸ்லீம்கள் வெற்றி பெறவே விஜய நகரம் வீழ்ந்தது. இத்தருணத்தில் நாட்டில் அமைதியின்மை தலைதூக்கியது. செஞ்சி, தஞ்சை நாயக்கர்கள் விஜய நகர அரசின் பிடியிலிருந்து விடுபட்டு தனி

அரசுகளை நிறுவினர். இருப்பினும் முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் விஜய நகர அரசுக்கு கப்பம் செலுத்தி வந்தார்.

**தும்பிச்சி நாயக்கர் கொலை செய்யப்படுதல்**

தலைக்கோட்டைப்போரில் பேரரசு தோல்வியடைந்ததால் ஏற்பட்ட தீய விளைவின் காரணமாக இதன் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த பாளையக்காரர்கள் கலகத்தில் இறங்கினர். இக்கலவரத்திற்குப் பரமக்குடியில் பளையக்காரராக விளங்கிய தும்பிச்சி நாயக்கர் தலைமை வகித்தார். இவர் மதுரையிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் அதிக செல்வாக்குப்பெற்று திகழ்ந்தார். தும்பிச்சி நாயக்கரின் செயலை வன்மையாகக் கண்டித்த கிருஷ்ணப்ப நாயக்கர் இவருக்குஎதிராக தீவிரமாகச் செயல்பட்டார். கலவரம் வன்மையாக ஒடுக்கப்பட்டது. இதற்குத் தலைமை வகுத்த தும்பிச்சி நாயக்கர் படுகொலை செய்யப்பட்டு அவரது நாடு கவரப்பட்டது.

**இலங்கை மீது படையெடுத்தல்**

தும்பிச்சி நாயக்கரின் மரணச் செய்தியைக் கேட்டு அவரது நண்பரான இலங்கை மன்னன் மதுரை நாயக்கருக்கெதிராக ஆர்த்தெழுந்தான். இதனால் ஆத்திரமடைந்த முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் நாற்பத்திரண்டு பகுதியை நோக்கிப்படையெடுத்தார். இப்படையெடுப்பை ஒரு சவாலாக ஏற்ற இலங்கை மன்னன் 40,000 வீரர்களைக் கொண்ட ஒரு படையுடன் தமிழ் படையைத் தோற்கடித்து அனைவரையும் கைதுசெய்யத் திட்டமிட்டான். புத்தளம் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் நாயக்கரின் படைத்தளபதியான சின்ன சேகவர் இலங்கை அரசனைத் தோற்கடித்தார். தோல்வியடைந்த இலங்கை மன்னன் விழுப்புண் ஏந்திமாண்டான். இவ்வெற்றிக்குப்பின் கிருஷ்ணப்பநாயக்கர் தனது மைத்துனர் விஜய கோபால நாயக்கர் என்பவரை கண்டியின் ஆளுநராக நியமித்தார். இப்படையெடுப்பு குறித்து எத்தகைய செய்தியையும் மகாவம்சம் குறிப்பிடவில்லை. எனவே இப்படையெடுப்பைப் பற்றி அறிஞர்களிடையே ஐயம் நிலவுகிறது.

**கலைத்தொண்டு**

கிருஷ்ணப்ப நாயக்கர் கலை ஆர்வம் மிக்கவர். இவரது காலத்தைச் சார்ந்த ‘திருப்பணி மலைச் செய்யுள்’ கிருஷ்ணப்பர் கலைக்கு ஆற்றிய தொண்டினைப் படம்பிடித்து காட்டுகிறது. திருநெல்வேலிக்கு அருகில் கடையம் கிருஷ்ணபுரத்தில் கட்டப்பட்டுள்ள திருவேங்கடநாதர் கோயில் இவரால் கட்டப்பட்டது ஆகும். இவ்வாலயத்தின் பராமரிப்பிற்காக இவர் பல கிராமங்களைத்தானமாக வழங்கினார். மேலும் திருநெல்வேலியின் ஒரு பகுதியான பாளைங்கோட்டைக்கு அருகில் காணப்படும் கிருஷ்ணபுரம் இவர் கலைக்கு ஆற்றிய தொண்டினைப் பறைசாற்றுகின்றது. மதுரை மீனாட்சி சொக்கநாதர் ஆலயத்திலும் திருப்பணிகள் பல இவரால் மேற்கொள்ளப்பட்டன. இவர் இங்குள்ள வெள்ளியம்பலம், வடக்குக் கோபுரம், திருமடைப்பள்ளி, வீரப்பர் மண்டபம் ஆகியவற்றைக் கட்டினார்.

மீனாட்சியம்மனுக்குப் பொற்கவசம் ஒன்றும் இவரால் அணிவிக்கப்பட்டது. ஒன்பது ஆண்டுகள் திறம்பட ஆட்சிபுரிந்த இவர் கி.பி.1572-ஆம் ஆண்டு இயற்கையெய்தினார்.

முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கருக்குப்பின் வீரப்பநாயக்கர் (கி.பி.1572 – கி.பி.1595), இரண்டாம் கிருஷ்ணப்பர் (கி.பி.1595 – கி.பி.1601), முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கர் (கி.பி.1601 – கி.பி.1609), முதலாம் முத்து வீரப்ப நாயக்கர் (கி.பி.1609 – கி.பி.1623) ஆகியோர் மதுரையை ஆட்சிபுரிந்து வந்தனர். முதலாம் முத்துவீரப்பர் வாரிசு இன்றி கி.பி.1623-ஆம் ஆண்டு இறக்கவே இவருக்குப்பின் முத்துக்கிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மகன் திருமலை நாயக்கர் மதுரையை ஆட்சிபுரிந்தார்.

**திருமலை நாயக்கர் (கி.பி.1623 – கி.பி.1659)**

மதுரையை ஆட்சிபுரிந்த நாயக்கர்களில் தனிச்சிறப்புபெற்று விளங்கியவர் திருமலை நாயக்கர் ஆவார். இவர் மதுரையை ஆட்சிபுரிந்த முத்து கிருஷ்ணப்ப நாயக்கரின் இரண்டாவது மகன் ஆவார். தனது சகோதரன் முத்து வீரப்பர் இறந்துபடவே அரியணையேறும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது. கி.பி.1584-ஆம் ஆண்டு ஒரு தைபூச நாளில் பிறந்த திருமலை நாயக்கரின் இயற்பெயர் திருமலை சவுரிநாயினு அய்யுலுகாரு என்பதாகும். கம்பீர தோற்றமுடைய இவரது உருவம் மதுரை மீனாட்சியம்மன் திருக்கோயிலிலும், திருப்பரங்குன்றம் முருகன் கோயிலிலும், திருமாலிருஞ்சோலை அழகர் கோயிலிலும், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலிலும் காணப்படுகின்றன.

**நாட்டின் பரப்பளவு**

நாயக்கர் வரலாற்றில் தனிச்சிறப்புப் பெற்று விளங்கிய திருமலை நாயக்கர் ஒரு பரந்த அரசை ஆட்சிபுரிந்து வந்தார். இவரது அரசில் திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம், கோவை, சேலம், சிவகங்கை, புதுக்கோட்டை, திருநெல்வேலி, திருச்சி, திருவிதாங்கூரின் ஒரு பகுதி ஆகியவை இடம் பெற்றிருந்தன.

**தலைநகரை மாற்றுதல்**

ஆட்சிப்பொறுப்பேற்ற திருமலை நாயக்கர் சிறிது காலம் திருச்சியைத் தலைநகராகக் கொண்டு நாட்டை ஆண்டுவந்தார். ஆனால் சிறிது காலத்திற்குள் விஜய நகர அரசின் பிடியிலிருந்து விடுபட்டு தனி அரசை ஏற்படுத்த திருமலை எண்ணினார். திருச்சி தலைநகராய் இருப்பதால் வேலூரில் ஆட்சி செலுத்திவந்த விஜய நகர அரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் தன்னை எளிதில் தாக்கக்கூடும் என எண்ணிய திருமலை தலைநகரை அங்கிருந்து மாற்ற எண்ணினார். மேலும் தனது அரசின் மையப்பகுதியில் மதுரை அமைந்திருந்ததால் நிர்வாக வசதியின் பொருட்டு தலைநகரை திருச்சியலிருந்து கி.பி.1634-ஆம் ஆண்டு மதுரைக்கு மாற்றினார். இம்மாற்றத்திற்குப்பின் மதுரை வரலாற்று முக்கியத்துவம் பெற்று சிறப்புற்று விளங்கியது. அவை குறிப்புகளும், பாதிரியார் கடிதங்களும் திருமலை தலைநகரை திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றிய செய்தியைக் குறிப்பிடுகின்றன.

**திருமலைநாயக்கரின் நோக்கம்**

விஜயநகரப் பேரரசின் மேலாதிக்கதிலிருந்து விடுபட்டு ஒரு சுதந்திர அரசை ஏற்படுத்துவதையே திருமலை நாயக்கர் விரும்பினார். தனது எண்ணம் ஈடேற தனது பரம்பரை பகைவரான சுல்தான்களோடு கூட்டுச் சேரவும் இவர் தயாராக இருந்தார். பேரரசுக்கு உதவிபுரிந்தவர்களை தனது எதிரிகளாகக் கருதிய திருமலை அவர்களுக்கு எதிராக பல போர்களைப்புரிந்தார். சமயத்தையோ, சாதி ஒருமைப்பாட்டையோ பார்க்காமல் தம் சுயநலம் ஒன்றையே நோக்கமாகக் கொண்டு செயல்பட்ட திருமலை தனது ஆசையை நிறைவேற்ற 30,000 பேர் கொண்ட ஒரு பெரும்படையைத் திரட்டியதோடு பாதுகாப்பு கருதி கோட்டைகளையும் கட்டி பல்வேறு போர்களில் ஈடுபட்டார்.

**மைசூர் போர்**

திருமலை நாயக்கர் முதன் முதலில் மைசூருடன் போர் புரிந்தார். விஜய நகரத்தின் வீழ்ச்சிக்குப்பின் வலிமைபெற்று விளங்கிய மைசூர் விஜயநகர அரசிற்கு போதிய உதவியையும் பாதுகாப்பையும் அளித்துவந்தது. இது விஜய நகர அரசிற்கு எதிராகச் செயல்பட்டு வந்த மதுரை நாயக்கர்களின் போக்கை வன்னைமயாக எதிர்த்ததோடு மதுரை மண்டலத்தின் காணப்பட்ட சில செழிப்பான பகுதிகளைக் கைப்பற்ற தக்கச் சமயத்தை எதிர்நோக்கியிருந்தது. இந்நோக்குடன் திருமலை நாயக்கர் காலத்தில் மைசூரை ஆண்டுவந்த சாமராஜ உடையார் தனது தளபதி ஹரிகரநந்தி ராஜா தலமையில் படை ஒன்றை மதுரைக்கு அனுப்பினார். இப்படை வேகமாக முன்னேறி திண்டுக்கல்லை முற்றுகையிட்டது. இச்சூழ்நிலையில் திருமலை நாயக்கர் பாளையக்காரர்களின் உதவியுடன் படை ஒன்றை இராமப்பய்யர் என்ற தளபதியின் தலைமையில் திண்டுக்கல்லுக்கு அனுப்பினார். திண்டுக்கல்லை அடைந்த இப்படை மைசூர் படையைச் சுற்றி வளைத்துக்கொண்டன. போரில் தோல்வியடைந்த மைசூர் படை புறமுதுகு காட்டி ஓடியது. நாயக்கரின் படை அவர்களை மைசூர் வரை துரத்திச் சென்றது.

**திருவிதாங்கூர் (வேணாட்டுப்படையெடுப்பு)**

மைசூர் போருக்குப்பின் திருமலைநாயக்கர் திருவிதாங்கூரின் ஒரு பகுதியான வேணாட்டின் மீது படையெடுத்தார். இது இவரது இரண்டாவது படையெடுப்பாகும். விஜய நகர அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்த வேண்டு தலைக்கோட்டைப் போருக்குபின் மதுரை நாயக்கர்களின் மேலாண்மையை ஏற்று கப்பம் செலுத்திவந்தது. ஆனால் வேணாட்டை உண்ணி கேரளவர்மன் ஆட்சிபுரிந்தபோது நாயக்கர்களின் மேலாண்மையை ஏற்க மறுத்ததோடு நாயக்கர்களின் மேலாண்மையை ஏற்க மறுத்ததோடு கப்பத்தொகையையும் கட்டவில்லை. இதனால் ஆத்திரமடைந்த திருமலைநாயக்கர் படையொன்றை வேணாட்டிற்கு (நாஞ்சில் நாடு) அனுப்பினார். இப்படைக்கு அவரது தளபதியான கிராமப்பைய்யர் தலைமை தாங்கினார். கணியான்குளம் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் நாயக்கர் படை

வேணாட்டுப்படையுடன் மோதியது. இப்போரில் வேணாட்டுப்படைத்தளபதியான இரவிக்குட்டி பிள்ளை மரணமடைந்தார். இவரது திடீர் மரணத்தால் படைநிலைதடுமாறியது. செய்வது அறியாது திகைத்த திருவடிகள் கி.பி.1634-ஆம் ஆண்டு சரண் அடைந்ததொடு நாயக்கர்களுக்கு கப்பம் கட்டுவதாகவும், உறுதியளித்தார். இந்த வெற்றிக்குப்பின் நாயக்கர்ப்படை மதுரை திரும்பியது. இப்போரைப்பற்றி ஜான்நியுகாப் பின் குறிப்பும், 1635-ஆம் ஆண்டு திருவாதி மன்னன் வெளியிட்ட கல்லெழுத்தும், இராமப்பையர் அம்மானையும் குறிப்பிடுகின்றன.

**இராமநாதபுரம் சேதுபதியை வெல்லுதல்**

இராமநாதபுரத்தின் காவலுக்காகச் சேதுபதிகள் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்கள் ஆடம்பர வாழ்க்கையிலும் சிற்றின்பத்திலும், மூழ்கி காணப்பட்டனர். நாளடைவில் திருமலை நாயக்கருக்கு கப்பம் செலுத்துவதை சேதுபதி நிறுத்திவிட்டதோடு அவரது ஆணைகளுக்கு எதிராகச் செயல்பட்டுவந்தார். சேதுபதிக்கு புத்தி புகட்ட எண்ணிய திருமலை நாயக்கர் தனது படைத்தளபதி இராமப்பையர் தலைமையிலும் துணைப்படைத்தளபதி அரங்கண்ணநாயக்கர் தலைமையிலும கி.பி.1637-ஆம் ஆண்டு படை ஒன்றை இராமநாதபுரத்திற்கு அனுப்பினார். போரில் தோல்வியடைந்த சேதுபதி இராமேஸ்வரம் பகுதியில் சென்று ஒளிந்துகொண்டார். இறுதியில் கைதியாகப் பிடிக்கப்பட்ட சேதுபதி திருமலை நாயக்கர் முன் நிறுத்தப்பட்டார். இராமநாதபுரம் மதுரை நாயக்கர் முன் நிறுத்தப்பட்டார். இராமநாதபுரம் மதுரை நாயக்கரின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. இராமப்பையர் அம்மானை என்னும் நாட்டுப்பாடல் நூலும், டெய்லர் பாதிரியாரின் கீழை நாட்டு வரலாற்றுக் கையெடுத்துப்பிரதியில் காணப்படும் செய்திகளும் திருமலை நாயக்கரின் இராமநாதபுரம் படையெடுப்பைப் பற்றி அறிய உதவும் முக்கிய சான்றுகளாக விளங்குகின்றன.

**விஜய நகர அரசுடன் போர் புரிதல்**

திருமலை நாயக்கர் மதுரையை ஆட்சிபுரிந்துவந்தபோது விஜயநகர பேரரசை மூன்றாம் வேங்கடர் ஆட்சிபுரிந்துவந்தார். இவர் செஞ்சி நாயக்கருடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியிருந்தார். இதை திருமலைநாயக்கரும், தஞ்சை நாயக்கரும் பொறாமைக் கண்கொண்டு நோக்கியதோடு, வேங்கடரை சிறைப்படுத்தி ஆட்சியிலிருந்து அகற்ற எண்ணினர். இதனால் ஆத்திரமடைந்த வேங்கடர் தனக்கு எதிராகச் சதிதிட்டம் தீட்டிய தஞ்சை, மதுரை நாயக்கர்களைத் தண்டிக்கும் நோக்குடன் படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டார். கி.பி.1637-ஆம் ஆண்டு நடைபெற்ற போர் உடன்படிக்கை ஒன்றின் மூலமாக முற்றுப்பெற்றது. ஆனால் சுதந்திரமாக நாட்டை ஆள எண்ணிய திருமலைநாயக்கர் பேரரசுக்கு கப்பம் கட்டவில்லை. இருப்பினும் வேங்கடர் மதுரை நாயக்கருக்கு எதிரான எத்தகையச் செயலிலும் ஈடுபடவில்லை.

மூன்றாம் வேங்கடருக்குப்பின் பேரரசை ஸ்ரீரங்கன் ஆட்சிபுரிந்தார். இவரது ஆட்சிகாலத்தில் நிலைமை மாறியது. கப்பம்கட்ட வற்புறுத்திய ஸ்ரீரங்கன் கி.பி.1645-ஆம் ஆண்டு மதுரைக்கு எதிராகப் படையெடுப்பு ஒன்றையும் மேற்கொண்டார். இத்தருணத்தில் திருமலை நாயக்கர் தனது நிலமையை உறுதிப்படுத்த தஞ்சை, செஞ்சி நாயக்கர்களுடன் இரகசியமாக ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு ஸ்ரீரங்கனின் படையை எதிர்க்க முற்பட்டார். இந்த ஒப்பந்தம் தஞ்சை நாயக்கர் மூலம் அம்பலமாகவே, ஆத்திரமடைந்த ஸ்ரீரங்கன் மதுரை மீது படையெடுத்தான். இச்சூழ்நிலையில் இருதலைக்கொள்ளி எறும்பு போல் திகைத்த மதுரை நாயக்கர் கோல்கொண்டா பகுதியை ஆண்டுவந்த சுல்தானின் உதவியை நாடி, அவரை ஸ்ரீரங்கனின் தலைநகரான வேலூரை முற்றுகையிடத் தூண்டினார். கோல்கொண்டா சுல்தானால் தலைநகர் தாக்கப்படவே அதைக்காக்க ஸ்ரீரங்கன் வேலூர் திரும்பவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

**சுல்தானின் உதவியும் திருமலையின் திண்டாட்டமும்**

கோல்கொண்டா சுல்தானின் தலையீட்டால் திருமலை நாயக்கர் பேரரசின் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொண்டார். ஆனால் சுல்தானின் தலையீடு தமிழக வரலாற்றில் மீண்டும் பல தீய விளைவுகளை ஏற்படுத்தியது. வேலூரைக் கைப்பற்றிய பின் முஸ்லீம்படை செஞ்சியை முற்றுகையிட்டது. செஞ்சியைக் காப்பாற்ற திண்டாடிய திருமலை பிஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார். உதவிக்கு வந்த பிஜப்பூர் படை திருமலைக்கு உதவுவதற்குப் பதிலாகக் கோல்கொண்டா சுல்தானுடன் ஒப்பந்தம் ஒன்றை செய்து கொண்டு கி.பி.1648-ஆம் ஆண்டு செஞ்சியைத்தாக்கி அங்கு குவிந்து காணப்பட்ட செல்வத்தை வலுக்கட்டாயமாக கவர்ந்தது. செஞ்சியை சூறையாடியபின் அப்படை தஞ்சை, மதுரை ஆகிய பகுதிகளுக்கு முன்னேறியது. போரிட்டு வெற்றிபெற இயலாத நிலையில் சுல்தான் திருப்தி அடையும் அளவிற்கு பொன்னையும் பொருளையும் கொடுத்து திருமலை தனது நாட்டை பாதுகாக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவ்வாறு வெளிநாட்டுக்கொள்கையில் திருமலை நாயக்கர் முஸ்லீம்களுடன் மேற்கொண்ட தவறான அணுகுமுறை தமிழகத்தின் அரசியலை வெகுவாகப் பாதித்தது.

**மூக்கறுப்புப் போர்**

தஞ்சையில் தஞ்சம் புகுந்த ஸ்ரீரங்கன் உடையார் கந்தருவ நரசராயன் உதவியுடன் வேலூரை மீட்க முயன்றார். இத்தருணத்தில் திருமலை பேரரசருக்கு எதிராக பிஜப்பூர் சுல்தானுக்கு உதவினார். இதனால் ஆத்திரமடைந்த உடையார் முஸ்லீம்படைகள் மதுரையை விட்டு அகன்றதும் தனது படையை மதுரைக்கு அனுப்பினான். வஞ்சம் தீர்க்கும் நோக்குடன் சென்ற இந்த படை மதுரையில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியதோடு மேலுதட்டையும் மூக்கையும் சேர்த்து அறுக்கும் கருவி ஒன்றின் துணைக்கொண்டு அகப்பட்ட ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரின் மூக்கையும், உதட்டையும் அரிந்தன. அரிந்த மூக்கின் எண்ணிக்கைக்கேற்ப

படைவீரர்கள் மைசூர் மன்னனால் பரிசளிக்கப்பட்டனர். வரலாறு இதை மூக்கறுப்புப் போர் என குறிப்பிடுகிறது.

வயோதிக நிலையில் சோர்வடைந்து நோய்வாய்ப்பட்டுக் கிடந்த திருமலை செய்வதறியாது திகைத்தார். எனினும் சேதுபதியின் துணையுடன் நாயக்கர்படை மதுரையைக் காப்பாற்றியது. கி.பி.1659-ஆம் ஆண்டு நடைபெற்ற இப்போரில் சேதுபதி ஆற்றிய விலையுயர்ந்த பரிசுக்களையும், 'திருமலை சேதுபதி' 'இராணி சொல் காத்தார்' ஆகிய பட்டங்களையும் அளித்து கௌரவித்ததோடு, தங்களுக்கு மட்டுமே உரிமையாய் இருந்த சிங்கமுகச்சிவிகையையும், திருப்புவனம், திருச்சுழியல், பள்ளி மடம் ஆகிய ஊர்களையும் தானமாக அளித்தார்.

அதன்பின் நாயக்கர்படை குமாரமுத்து, அரங்கண்ண நாயக்கர் தலைமையில் பாளையக்காரர்களின் துணையுடன் மைசூர்மீது படையெடுத்துச் சென்று உடையார் படையை மைசூரிலுள்ள நஞ்சங்கூடு வரைத் துரத்திச்சென்று எதிரில் கண் ஆண், பெண், குழந்தைகள் ஆகியோரின் மூக்குகளை அறுத்து வஞ்சம் தீர்த்துக் கொண்டது. மைசூர் மன்னனின் மூக்கும் அறுக்கப்பட்டதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

**திருமலையும் ஐரோப்பியரும்**

இவரது ஆட்சிகாலத்தில் ஐரோப்பியர்கள் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டனர். இவர்களுள் தூத்துக்குடி கடற்கரைப் பகுதியில் காணப்பட்ட டச்சுக்காரர்களும் போச்சுக்கீசியர்களும் தங்களுக்குள் போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். இதில் தலையிட்ட திருமலை நாயக்கர் போர்ச்சுக்கீசியர்களுக்கு ஆதரவாகச் செயல்பட்டதோடு டச்சுக்காரர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினார். இதனால் ஆத்திரமடைந்த டச்சுக்காரர்கள் அரசிற்கெதிராகச் செயல்பட்டதோடு திருச்செந்தூர் ஆலயத்தை தாக்கினார். மேலும் தூத்துக்குடியில் தங்கியிருந்த பரதவர்களைக் கொடுமையாகத் துன்புறுத்தினர். இதனால் கடற்கரைப்பகுதியில் அமைதியின்மை ஏற்பட்டது. இங்கு அமைதியை நிலைநாட்ட திருமலையால் இயலவில்லை. எனவே ஐரோப்பியர்கள் அங்கு போட்டி போட்டுக்கொண்டே இருந்தனர்.

**திருமலையும் கிறிஸ்தவ சமயம்**

சமயப் பொறையுணர்வு கொண்ட திருமலை நாயக்கர் கிறிஸ்தவர்களைக் கருணையுடன் நடத்தினார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுவதை அறிந்த திருமலைநாயக்கர் அதற்கெதிராகக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். கி.பி.1644-ஆம் ஆண்டு கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தலாகாது என்று ஆணை ஒன்றைப்பிறப்பித்தார். கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்ட நேரங்களில் திருமலை தலையீடு செய்து அவர்களைக் காத்தார். குறிப்பாகத் தமிழகத்தில் கிறிஸ்தவம் வேரூன்ற காரணமாயிருந்தவர்களில் திருமலையும் ஒருவராவர்.

**திருமலையின் சமயத்தொண்டு**

போர் வெற்றிகளால் மட்டுமன்றி கலைப்பணிகளாலும், பக்திப்படைப்புகளாலும் திருமலைத் தனக்கெனத் தனிச்சிறப்பான இடத்தைத் தமிழக வரலாற்றில் பெற்றுள்ளார். திருச்சியிலிருந்து மதுரைக்குத் தலைநகரை மாற்றிய திருமலை அங்கு பழுது பட்டுக் காணப்பட்ட ஆலயங்களைக் கண்டு மனவேதனை அடைந்தார். அவற்றைச் செப்பனிட்டு, சீர்படுத்தி அழகுபடுத்தும் முயற்சிகளை மேற்கொண்டார். ஆலயங்களில் காணப்பட்ட பூசாரிகள் போட்டி மனப்பான்மையுடன் நடந்துகொண்டு ஆலய நிர்வாகத்தில் அதிக அக்கறை காட்டவில்லை. எனவே ஆலய நிர்வாகத்தில் தலையீடு செய்து பூசாரிகள் பணிகளை வரையறை செய்தார். கோயிலில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அயலானூர், வரையப்பட்டி, நெடுமதுரை, கொம்படி முதலிய கிராமங்கள் தானமாக வழங்கப்பட்டன. மதுரையை விழா நகரமாக்கும் நோக்குடன் ஆண்டுதோறும் பெருவிழாக்களும், சிறுவிழாக்களும் நடத்தப்பட்டன. அவற்றுள் திருவிளையாடல் திருவிழாக்களும், தெப்பத் திருவிழாக்களும் முக்கியத்துவம் வாய்ந்தவைகளாகும்.

திருமலை நாயக்கர் மதுரை கோயில்களில் மட்டுமன்றி பிற ஆலயங்களிலும் திருப்பணிகளைச் செய்தார். மாலிக்காபூரின் படையெடுப்பின் போது மீனாட்சி அம்மன் சன்னதியில் கிளிகளை வைத்திருக்கும் இடத்திற்குத் தெற்கு வடக்காய் உள்ள சங்கீத மண்டபம் அல்லது சங்கிலி மண்டபம், நிர்மூலமார்க்கப்பட்டது. இது இவரது காலத்தில் புனரமைக்கப்பட்டது. இவரது ஆட்சி காலத்தில் மீனாட்சியம்மன், சொக்கநாதர் ஆகிய ஆலயங்களில் துவாரபாலர் உருவச்சிலையை செய்துவைத்தார். இங்கு பலிபீடங்களையும், கொடிக்கம்பங்களையும் அமைத்தார். மதுரை திருக்கோயிலைப் புதுப்பித்ததோடு திருப்பரங்குன்றம், அழகர் கோயில், திருவில்லிபுத்தூர், ஆண்டாள் கோயில், திருவரங்கம் பெரிய கோயில் ஆகியவற்றிலும் திருப்பணிகளை மேற்கொண்டார்.

திருமலை நாயக்கரால் கட்டப்பட்ட திருமலை நாயக்கர்மகால் தனிப்பெரும் சிறப்பு வாய்ந்தது. தாஜ்மகால் இந்தியாவிற்கு பெருமை அளிப்பது போன்று நாயக்கர் மகால் தமிழகத்திற்கு சிறப்பைக் கொடுத்துள்ளது. அற்புதமான வேலைப்பாடுகள் அமைந்த வளைவுகள், கூடங்கள், மிகப்பெரிய தூண்கள் இதற்குப் பொலிவூட்டுகின்றன. இது அடிமைகளின் உழைப்பைப் பெற்று வெளிநாட்டுக் கட்டிடக்கலையில் எழுந்தது. இவரது ஆட்சிகாலத்தில் மிகப்பெரிய தெப்பக்குளம் ஒன்று அமைக்கப்பட்டது. இது 1000 அடி நீளமும் 950 அடி அகலமும் கொண்டது. விமானத்தோடு கூடிய மையமண்டபமும் நான்கு மூலைகளிலும் அமைக்கப்பட்டுள்ள மண்டபங்களும், விமானங்களும் அதன் தனிச்சிறப்பு ஆகும். மேலும் தனது பிறந்த நாளாகிய தைப்பூசத்தன்று வண்டியூர்த் தெப்பக்குளத்தில் தெப்பத்திருவிழா நடத்துமாறு ஏற்பாடுகள் செய்தார்.

நாயக்கர் கட்டிய கட்டிடங்களுள் சிறப்பு வாய்ந்தது புதுமண்டபம் அல்லது வசந்த மண்டபமாகும். இதில் சிற்பவேலைப்பாடுகள் நிறைந்த தூண்கள் நிறைந்து

காணப்படுகின்றன. அம்மண்டபத்திற்கு எதிரில் இராஜகோபுரம் ஒன்று கட்டுவதற்குத் திட்டமிட்டார். ஆனால் அது முற்றுப்பெறாமல் முதல் தளத்துடன் நின்றுவிட்டது. மேலும் ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்கென சத்திரங்கள், மண்டபங்கள், விடுதிகள் ஆகியவையும் இவரால் கட்டப்பட்டன.

**விவசாயிகள் நலனைப் பேணுதல்**

திருமலை நாயக்கர் போர் நெறிகளில் அதிகமாக ஈடுபட்டிருந்தாலும் விவசாய மேம்பாட்டிற்கும் அதிக அக்கறை காட்டினார். விவசாயிகள் நலனுக்கென கண்மாய்கள் பல வெட்டப்பட்டன. ஏரிகள் பராமரிக்கப்பட்டதோடு அவை 'பாசி (மீன்) குத்தகைக்கும் விடப்பட்டன. இதனால் அரசுக்கு வருவாய் கிடைத்தது. இவரது ஆட்சிகாலத்தில் போக்குவரத்து வசதிக்காகவும், வணிகவளர்ச்சிக்காகவும் சாலைகள் பல அமைக்கப்பட்டன. அவற்றுள் ஊட்டத்தூர் முதல் கன்னியாகுமரி வரை அமைக்கப்பட்ட சாலை குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும். மக்கள் நலனில் இவர் அதிக அக்கறை காட்டினார் என்பதை பாதிரிகளின் கடிதங்கள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

**குடும்ப வாழ்க்கை**

நிர்வாகத்தில் அதிக அக்கறை காட்டியது போல் சிற்றின்பத்திலும் திருமலை அதிக அக்கறை கொண்டிருந்தார். இவரது அந்தபுரத்தில் இருநூறுக்கும் மேற்பட்ட மனைவியர்கள் இருந்தனர். இருப்பினும் இருவர் மட்டுமே பட்டத்து அரசிகளாக விளங்கினர். இவர் விடியற்காலையில் எழுந்திருக்கும் பழக்கம் உடையவர். முப்பது ஆண்டுகள் தமிழகத்தைச் சிறப்புடன் ஆட்சி புரிந்த இவர் தனது எழுபத்தி ஐந்தாவது வயதில் இவ்வுலக வாழ்வை நீத்தார்.

**முடிவுரை**

தென்னிந்திய வரலாற்றின் மிகச் சிக்கலான காலத்தில் மதுரையை ஆட்சிபுரிந்த இவர் தனது ஆற்றலையும், தந்திரத்தையும் பயன்படுத்தி பல வெற்றிகளைப் பெற்று பெரும்புகழ் எய்தினார். சமய வளர்ச்சிக்காகவும், கலை வளர்ச்சிக்காகவும் இவர் எழுப்பிய கோயில்கள், மண்டபங்கள், சிற்பங்கள் ஆகியவை இவரது புகழை இன்றும் பறைசாற்றிக்கொண்டிருக்கின்றன.

**சொக்கநாத நாயக்கர் (கி.பி.1659 – கி.பி. 1682)**

திருமலை நாயக்கருக்குப்பின் அவரது இரண்டாவது மகன் முத்துவீரப்ப நாயக்கர் அரியணையேறினார். இவர் நான்கு திங்களே நாட்டை ஆட்சிபுரிந்தார். இவருக்குப்பின் சொக்கநாதநாயக்கர் மதுரையை ஆட்சிபுரிந்தார். இவர் திருமலை நாயக்கரின் மகன் ஆவார். அரசியல் செயல்திறன், படை நுட்பம் ஆகியவை அற்றுவிளங்கிய இவரது ஆட்சிகாலத்தில் நாடு வீழ்ச்சிப்பாதையை நோக்கி விரைந்து கொண்டிருந்தது. இவரது ஆட்சிகாலத்தில் நாடு அன்னிய படையெடுப்பு, உள்நாட்டுக்கலகம், நிர்வாகச் சீர்கேடு ஆகியவற்றால் நிலை தடுமாறியது.

கி.பி.1659-இல் அரியணையேறிய இவர் கி.பி.1682-ஆம் ஆண்டுவரை நாட்டை ஆட்சிபுரிந்தார்.

**அரசிற்கெதிரான சதித்திட்டம்**

ஆட்சிப்பொறுப்பை ஏற்றபோது சொக்கநாத நாயக்கர் பதினாறு வயது சிறுவனாய் இருந்ததால் நிர்வாகப் பொறுப்பை அவரது தளவாயும், பிரதானியும், ராயசமும் கவனித்து வந்தனர். சர்வாதிகார ஆட்சி நடத்திய இவர்கள் தங்களது செல்வாக்கைப் பெருக்கியதோடு அரசிற்கு எதிராகச் செயல்படத் தொடங்கினர். இவரது ஆட்சிகாலத்தில் புதிதாக வதிக்கப்பட்ட வரிகளால் மக்கள் அல்லலுற்றனர். நிலமை கட்டிற்கு அடங்காமல் போகவே அவர்களை அரசன் பதவியிலிருந்து அகற்றினார். பதவி இழந்த இந்த மூவரும் அரசிற்கு எதிராகச் சதித்திட்டம் தீட்டினர். இச்சதியை அதிகாரிகளின் துணையுடன் முறியடித்த சொக்கநாதர் அவர்களுக்குத் தகுந்த தண்டனையையும் அளித்தார். ராயசம் கொலை செய்யப்பட்டார். பிரதானியின் கண்கள் பிடுங்கப்பட்டன. ஆனால் தளவாய் மட்டும் இரகசியமாகத் தப்பி தளவாய் சாகோசியுடனும் தஞ்சை அரசன் விஜயராகவனுடனும் இணைந்து ஒரு படையுடன் திருச்சியைத் தாக்கினான். இப்படையில் 12,000 போர் வீரர்களும் 7000 குதிரை வீரர்களும் காணப்பட்டனர்.

**திருச்சி நோக்கி விரைதல்**

இச்செய்தியைக் கேள்விப்பட்ட சொக்கநாதர் ஒரு பெரும் படையுடன் திருச்சி நோக்கி விரைந்தார். இவரது படையில் 50,000 போர் வீரர்கள் காணப்பட்டனர். சொக்கநாதரின் படையுடன் எதிர்த்து போர் புரிய இயலாத சாகோசியும், விஜயராகவனும் தஞ்சையை நோக்கிபின் வாங்கினர். இவர்களைப்பின் தொடர்ந்த நாயக்கர்படை தஞ்சையை வீழ்த்தியது. தஞ்சை நாயக்கர் சரண் அடைந்தார். தோல்வியடைந்த சாகோசி செஞ்சிக்கு ஓடினான். இவ்வாறு அன்னியர் தாக்குதலிருந்து நாடு காப்பாற்றப்பட்டது.

நாடு பஞ்சத்தில் சிக்குதல்

சொக்கநாதர் ஆட்சிப்பொறுப்பு ஏற்றபோது நாட்டைக் கொடிய பஞ்சம் தாக்கியது. பஞ்சத்தால் மக்கள் பெரும் அவதிக்குள்ளாயினர். பஞ்ச நிவாரணம் அரசால் அளிக்கப்பட்டும் மக்கள் அல்லலூற்றனர். ஆயிரக்கணக்கானோர் பஞ்சத்தால் மாண்டனர். இச்சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திய டச்சுக்காரர்கள் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு அளித்தும், விலை கொடுத்தும் ஏமாற்றி கப்பல்களில் ஏற்றி ஐரோப்பிய சந்தைகளில் அடிமைகளாக விற்றனர். இக்கொடிய பஞ்சம் நாட்டின் வளர்ச்சியைப் பெருமளவு பாதித்தது.

**வானாமியானின் படையெடுப்பு**

நாட்டைப் பஞ்சம் வாட்டியபோது பிஜப்பூர் தளபதி வானாமியான் தஞ்சை நாயக்கர் உதவியுடன் திருச்சிக்கோட்டையைத் தாக்கினான். கோட்டை வலிமைமிக்கதாய் காணப்பட்டதால் அதனைக் கைப்பற்ற அவனால் முடியவில்லை. எனவே திருச்சிக்கு அருகாமையில் காணப்பட்ட பகுதிகளை வானாமியானின் படைகள் சூறையாடியதோடு அப்பாவி மக்களையும் கொன்று குவித்தன. இக்கொடுமையிலிருந்து மக்களைப் பாதுகாக்க எண்ணிய சொக்கநாதர் வானாமியானுக்கு ஏராளம் செல்வத்தைக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

**சேதுபதியுடன் போர்புரிதல்**

வானாமியான் திருச்சியைத் தாக்கியபோது சொக்கநாதர் ரகுநாத சேதுபதியின் உதவியை நாடினார். ஆனால் அவர் உதவவில்லை. எனவே ஆத்திரம் அடைந்த சொக்கநாதர் சேதுபதியின் நாட்டின் மீதுபடையெடுத்தார். இப்படையெடுப்பு சொக்கநாதருக்கு படுதோல்வியைக் கொடுத்தது. இப்போருக்குப்பின் சொக்கநாதரின் நெருங்கிய பகைவனாக ரகுநாத சேதுபதி மாறினார்.

**மைசூருடன் போர்புரிதல்**

சொக்கநாதர் தனது ஆட்சி காலத்தில் இருமுறை மைசூருடன் போர்புரிந்தார். இவர் கி.பி.1667-இல் முதல் முறையாக மைசூரின் மீது படையெடுத்து படுதோல்வியடைந்தார். தோல்வியடைந்த இவர் ஈரோடு, தாராபுரம் ஆகிய பகுதிகளை இழக்க நேரிட்டது. கி.பி.1670-ஆம் ஆண்டு இவர் மேற்கொண்ட இரண்டாவது போரும் தோல்வியில் முடிவுற்றது. இதன் விளைவால் நாட்டின் எல்லைப் பகுதியில் சிலவற்றை மீண்டும் இழக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

**தஞ்சாவூரைக் கைப்பற்றுதல்**

சொக்கநாதர் புரிந்த போர்களில் மிக முக்கியமானது அவரது தஞ்சாவூர் போர் ஆகும். இப்போருக்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. அதில் ஒன்று அரசியல்காரணம், சொக்கநாதர் மதுரையை ஆட்சிபுரிந்து வந்த காலத்தில் தஞ்சாவூரை ஆண்டுவந்த விஜயராகவன் அவருக்கெதிராகச் செயல்பட்டுவந்தார். எனவே இரண்டு அரசுகளுக்கிடையேயும் கடுமையான பகைமை நிலவியது. மேலும் தஞ்சை இளவரசி ஒருத்தியைத் திருமணம் செய்ய சொக்கநாதர் தூதுவர் ஒருவரை அங்கு அனுப்பினார். அந்த தூதுவர் தஞ்சை நாயக்கரால் இழிவுபடுத்தப்பட்டார். இதனால் ஆத்திரமடைந்த சொக்கநாதர் தஞ்சாவூர் மீது படையெடுத்து அதை ஆண்டுவந்த விஜயராகவரை தோற்கடித்துக் கொன்றதோடு அவரது குடும்பத்தையும் நிர்மூலமாக்கினார். அதன்பின் சொக்கநாதர் தனது உறவினரான அழகிரி என்பவரை தஞ்சாவூரின் ஆளுநராக்கினார். சிறிது காலத்திற்குப்பின் மதுரை ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திர அரசை ஏற்படுத்த அழகிரி எண்ணினார். ஆனால் ராயசம் வெங்கண்ணா செய்த சதியின் காரணமாக தஞ்சாவூர் மராத்திய அரசனான வெங்கோஜியின் பிடியில் சிக்கியது.

### சொக்கநாதருக்கு ஏற்பட்ட சோதனைகள்

சொக்கநாதர் காலத்தில் ஏற்பட்ட தோல்விகளும், தொடர்ந்த துன்பங்களும் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தின. இதனால் பெரும்பாதிப்பிற்குள்ளான மக்கள் தங்களது பொறுமையை இழந்ததோடு மன்னைச் சிறையில் அடைத்துவிட்டு அவரது தம்பி முத்துலிங்க நாயக்கரை கி.பி. 1678-ஆம் ஆண்டு அரியணையில் அமர்த்தினர். இத்தருணத்தில் சொக்கநாதரின் நெருங்கிய நண்பரும், குதிரைத் தளபதியுமான ரஷ்டம்கான் தந்திரமாக மன்னனைக் காப்பாற்றி தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துவிட்டு நாட்டை நிர்வாகித்துவந்தான். சொக்கநாதர் பெயரளவில் மட்டும் மன்னராக இருந்துவந்தார். இந்த அவலநிலையிலிருந்து சொக்கநாதரை விடுவிக்க எண்ணிய அவரது தளவாய் கோவிந்தப்பையன் கிழவன் சேதுபதி சில நாயக்கர்களின் துணையுடன் ரஷ்டம்கானைக் கொன்றுவிட்டு மீண்டும் சொக்கநாதனை அரியணையில் அமர்த்தினார்.

### இறுதிகாலம்

சொக்கநாதரின் இறுதிகாலம் துன்பம் நிறைந்ததாயிருந்தது. இவர் மைசூர் தளபதி குமரய்யாவின் ஆலோசனைப்படி செஞ்சி மீது படையெடுத்து படுதோல்வியடைந்தார். இதனால் ஆத்திரமடைந்த செஞ்சி தளபதியாய் இருந்த அரசுமலை படையெடுப்பு ஒன்றை மேற்கொண்டு சொக்கநாதருக்குச் சொந்தமான திருச்சிக் கோட்டையை முற்றுகையிட்டான். இதனால் அதிர்ச்சியும், வேதனையும் அடைந்த சொக்கநாதர் மரணமடைந்தார். சொக்கநாதர் சிறந்த வீரராக இருந்தபோதிலும் விவேகக் குறைவின் காரணமாக அவர் செய்த செயல்களும், எடுத்த முடிவுகளும் தீயவிளைவுகளை ஏற்படுத்தின.

### மூன்றாம் முத்து வீரப்பநாயக்கர் (கி.பி.1682 – கி.பி.1689)

மூன்றாம் முத்து வீரப்பநாயக்கர், சொக்கநாதருக்கும் மங்கம்மாளுக்கும் மகனாய் பிறந்தார். இவரது இயற்பெயர் ரங்க கிருட்ண முத்து வீரப்பர் என்பதாகும். இவர் 1680-ஆம் ஆண்டு அரியணை ஏறினார். இவர் அரியணை ஏறியபோது நாட்டின் சிலபகுதிகள் மட்டுமே இவருக்குக் கிடைத்தன. எஞ்சியவை மைசூர் அரசன், தஞ்சை சாம்பாஜி மன்னன், இராமநாதபுரம், சேதுபதி ஆகியோர் ஆதிக்கம் செலுத்திவந்தனர். மேலும் மதுரை மீது ஆதிக்கம் செலுத்திட மைசூர் மன்னனும், மராட்டிய மன்னனும் முனைந்து கொண்டிருந்தனர். இந்நோக்குடன் மைசூர்ப்படை மதுரை மீது படையெடுத்த இந்நேரத்தில மராட்டியர்கள் மைசூரைத் தாக்கினர். எனவே மைசூரை காக்கும் நோக்குடன் அந்நாட்டுப்படைகள் பின் வாங்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன்பின் இராமநாதபுரம் சேதுபதி தஞ்சை அரசனுடன் மதுரையைக் கைப்பற்ற சதித்திட்டம் ஒன்றைத்தீட்டினான். இத்திட்டமும் முத்து வீரப்ப நாயக்கரால் முறியடிக்கப்பட்டது.

**மொகலாயரை எதிர்த்தல்**

மூன்றாம் முத்து வீரப்பநாயக்கன் மதுரையை ஆட்சிபுரிந்துவந்தபோது டெல்லியை ஔரங்கசீப் ஆட்சி புரிந்துவந்தார். இவர் தென்னிந்தியாவில் தன் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்று கொண்டிருந்தார். ஔரங்கசீப் தம்முடைய கால்செருப்பு ஒன்றைத் தென்பகுதிக்கு அனுப்பி இங்கு ஆட்சிபுரிந்து வந்த சிற்றரசர்களால் அதை வணங்கச் செய்தார். இச்செயலை வன்மையாகக் கண்டித்த முத்துவீரப்பர் ஔரங்கசீப்பின் படைத்தலைவனை நோக்கி உன் தலைவன் ஒரு செருப்பை மட்டும் அனுப்பியுள்ளாரே, காலில் அணிய இரண்டு செருப்புக்கள் வேண்டுமே என கேலியாகக் கூறினார். இதற்கு எதிராகச் செயல்பட்ட முஸ்லீம் படை துரத்தியடிக்கப்பட்டது. இச்செய்தியைக் கேட்ட ஔரங்கசீப் செருப்பு அனுப்பும் பழக்கத்தை நிறுத்திவிட்டார்.

**கிறிஸ்தவர்களுக்கு ஆதரவு**

இந்து சமய வளர்ச்சிக்குத் ஊக்கமளித்த முத்துவீரப்பன் கிறிஸ்தவ சமய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கவில்லை. இவரது ஆட்சிகாலத்தில் கிறிஸ்தவ சமயம் தமிழகத்தில் வெருன்றத்தொடங்கியது. கிறிஸ்தவ பாதிரியாரான ஜான்-டி-பிரிட்டோ மதுரைப்பகுதிகளில் கிறிஸ்தவ சமயத்தை பரப்புவதில் அதிக ஆர்வம் காட்டிவந்தார். எனவே ஏசு சபை தமிழகத்தில் சிறப்புற்று விளங்கியது. கிறிஸ்தவ சமய வளர்ச்சியை இந்து மதத்தைச் சார்ந்தவர்களில் ஒரு பிரிவினரும், அதிகாரிகளும் வன்மையாக எதிர்த்து வந்தனர். இவர்கள் கிறஸ்தவர்களுக்கு அடிக்கடி ஊறு விளைவித்தனர். இருப்பினும் அரசனின் கிறிஸ்தவ சமய ஆதரவு கொள்கை அவர்களின் செயல்களுக்குப் பெரும் தடையாக இருந்தன.

**சமயத்தொண்டு**

இந்து சமயத்தின் பால் அதிக ஈடுபாடு கொண்ட இவர் அதன் வளர்ச்சிக்காகப் பல கோயில்கள், கொத்தளங்கள், மண்டபங்கள், விடுதிகள் ஆகியவற்றை எழுப்பினார். இவரது ஆட்சி காலத்தில் பிராமணர்களின் செல்வாக்கு பெருகியது. அக்கிரகாரங்களின் எண்ணிக்கை இவரது காலத்தில் பெருகின. எனவே அரசியலிலும், சமயத்திலும், சமூகத்திலும் பிராமணர்களின் செல்வாக்குப் பெருகியது.

**நற்பண்புகள்**

முத்து வீரப்பர் அரசியல் அனுபவம் சற்று குறைந்தவராகக் காணப்பட்டாலும், நல்லொழுக்கமுடையவராக விளங்கினார். அந்தபுரத்தில் அக்கறை காட்டுவதை விட்டுவிட்டு மக்கள் துயர்துடைப்புப் பணிகளில் அதிகமாக ஈடுபட்டார். மாறுவேடத்தில் சென்று மக்களின் குறைகளை நேரில் கண்டறிந்தார். பொதுவாக நாயக்கர்களுக்கு ஏராளம் மனைவியர்கள் காணப்பட்டனர். ஆனால் முத்து வீரப்பன் ஒரே ஒரு மனைவியுடன் இன்பமாக குடும்ப வாழ்க்கை நடத்திவந்தார்.

### முத்துவீரப்பனின் இறப்பு

மக்கள் நலனில் அதிக அக்கறைகொண்டு விளங்கிய முத்து வீரப்பன் நீண்ட காலம் மக்களுக்குத் தொண்டு புரியும் வாய்ப்பு அளிக்கப்படவில்லை. திடீரெனத் தாக்கிய அம்மைநோய் அவரது உயிரைப் பறித்துக்கொண்டது. கி.பி.1700-ஆம் ஆண்டு டிசம்பர் 1-ஆம் நாள் ஏசுசபையைச் சார்ந்த பீட்டர் மார்ட்டின் தான் எழுதிய கடிதத்தில் அம்மை நோயால் கி.பி.1689-ஆம் ஆண்டு முத்துவீரப்பன் இறந்தான் எனக்குறிப்பிட்டுள்ளார்.

### விஜயரங்க சொக்கநாதர் (கி.பி.1689 – கி.பி.1732)

முத்து வீரப்பனின் மகன் விஜயரங்க சொக்கநாதர் ஆவார். இவர் தனது தந்தை இறந்த பிறகு பிறந்தார். எனவே இவரது ஆட்சி காலத்தை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம். இவர் சிறு குழந்தையாக இருந்தபோது நாட்டை இவரது பாட்டி மங்கம்மாள் பகர ஆளுநராக இருந்து கி.பி. 1689 முதல் கி.பி. 1706-ஆம் ஆண்டுவரை ஆட்சி புரிந்தார். அதன்பின் ஆட்சிப் பொறுப்பேற்ற சொக்கநாதர் கி.பி.1732-ஆம் ஆண்டு வரை நாட்டை ஆட்சிபுரிந்தார். மங்கம்மாவின் ஆட்சி காலத்தில் நாடு சிறப்புற்று விளங்கியது.

### இராணி மங்கம்மாள் (கி.பி.1689 – கி.பி.1706)

### மங்கம்மாள் ஆட்சி பொறுப்பேற்றல்

மதுரை நாயக்கர் காலத்தில் நாட்டை அரசர்கள் மட்டுமே ஆட்சிபுரிந்து வந்துள்ளனர். பெண்களுக்கு நிர்வாகத்தில் எவ்வித முன்னுரிமையும் அளிக்கப்படவில்லை. ஆனால் எதிர்பாராமல் ஏற்பட்ட சூழ்நிலையின் காரணமாக முத்து வீரப்பனுக்குப்பின் இராணி மங்கம்மாள் ஆட்சிப்பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. முத்து வீரப்பனுக்குப் பிறந்த விஜயரங்க சொக்கநாதன் குழந்தையாகக் காணப்பட்டதால் நாட்டை ஆள பகர ஆளுநர் தேவைப்பட்டது. எனவே சொக்கநாதரின் மனைவியும், முத்து வீரப்பனின் தாயும், விஜயரங்க சொக்கநாதரின் பாட்டியுமான இராணி மங்கம்மாள் அப்பொறுப்பை ஏற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இவர் கி.பி.1689 முதல் கி.பி.1706 வரை பகர ஆளுநராக இருந்து நாட்டை ஆட்சி புரிந்துவந்தான்.

### முகலாயருடன் நல்லுறவை ஏற்படுத்துதல்

மங்கம்மாள் மதுரையை ஆட்சிபுரிந்து வந்தபோது வட இந்தியாவின் முகலாயப்பேரரசரான ஔரங்கசீப் பேராதிக்கம் செலுத்தி வந்தார். தனது தளபதியான சுல்பிர்க்கானைத் தென்னிந்தியாவிற்கு கி.பி.1697-இல் ஒரு பெரும் படையுடன் அனுப்பினார். இப்படை பிஜப்பூர், கோல்கொண்டா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி விட்டு செஞ்சியிலும் தஞ்சையிலும் ஆட்சி புரிந்துவந்த மராட்டியர்களைத் தோற்கடித்துவிட்டு தெற்கு நோக்கி வேகமாக முன்னேறியது. இச்சூழ்நிலையில் மொகலாயர்களின் வலிமையையும் நாயக்கர்களின் பலவீனத்தையும் உணர்ந்த

மங்கம்மாள் போர் புரிவதை விட, சமாதான ஒப்பந்தம் செய்வதையே விரும்பினர். எனவே முகலாய மன்னனுக்கு அடிபணிந்து கப்பம் கொடுப்பதாக சம்மதித்தான். மேலும் முகலாயப்படைத்தளபதிக்கு விலை உயர்ந்த பொருட்களை அன்பளிப்பாக அளித்து அவனது அன்பையும் உதவியையும் பெற்றான். முகலாயரின் உதவியுடன் தனது நிலையை உறுதிப்படுத்திக்கொண்ட மங்கம்மாள் மராட்டியர்கள் கைப்பற்றிய பகுதிகளை திரும்பப் பெற்றுக்கொண்டான். மேலும் கி.பி.1702-ஆம் ஆண்டு கர்நாடக நவாப் தாதுக்கானின் துணையுடன் உடையார் பாளையக்காரன் கைப்பறிறய பகுதிகளையும் மீட்டுக்கொண்டார். இதனால் மைசூர் படையெடுப்பும் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.

### திருவிதாங்கூரைப் பணிய வைத்தல்

திருவிதாங்கூர் மதுரை நாயக்கர்களுக்கு திறை செலுத்தும் நாடாக இருந்துவந்தது. ஆனால் கி.பி.1684-இல் ஆட்சிப்பொறுப்பேற்ற திருவிதாங்கூர் அரசன் இரவிவர்மன் நாயக்கர்களுக்குத் திறை செலுத்துவதை நிறுத்திவிட்டான். திறையைச் செலுத்த கட்டாயப்படுத்துமாறு நாயக்கர் படைத்திருவிதாங்கூருக்கு அனுப்பப்பட்டது. இந்நிலையில் திருவிதாங்கூரை ஆண்டு வந்த இரவிவர்மன் தனது எதிரியான எட்டு வீட்டுப்பிள்ளைமார்களின் பிடியில் சிக்கி தவித்தும் கொண்டிருந்தார். நிலமையைத் திறமையாக சமாளித்த இரவிவர்மன் நாயக்கர்களின் படை உதவியைப் பெற்று பிள்ளைமார்களைத் தோற்கடித்தார். பின்னர் நாயக்கர் படையையே தோற்கடித்து துரத்தினார். இதனால் ஆத்திரமடைந்த மங்கம்மாள் தனது தளபதி நரசப்பையன் தலைமையில் படை ஒன்றை திருவிதாங்கூருக்கு அனுப்பினாள். இப்படை இரவிவர்மனைத் தோற்கடித்து திறை செலுத்துமாறு கட்டாயப்படுத்தியது.

### தஞ்சாவூரைத் தாக்குதல்

மங்கம்மாள் ஆட்சி காலத்தில் தஞ்சாவூர், மதுரை அரசுகளுக்கிடையே பகைமை வளர்ந்தது. தஞ்சையை ஆண்டுவந்த ஷாஜி (1684 – 1712) மதுரை நாயக்கருக்குச் சொந்தமான பல எல்லைப்புற பகுதிகளை கைப்பற்றினான். இதனால் ஆத்திரமடைந்த மங்கம்மாள் இழந்த பகுதிகளை மீட்கும் பொருட்டு தனது தளபதி நரசப்பையன் தலைமையில் படையொன்றை தஞ்சாவூருக்கு அனுப்பினாள். திடீரெனத்தாக்குதலை மேற்கொண்ட இப்படை தஞ்சையை முற்றுகையிட்டு நாட்டை சூறையாடின. நாட்டை காப்பாற்ற எண்ணிய ஷாஜி பெரும் பொருளைக் காணிக்கையாக தனது அமைச்சர் பாலோஜியின் மூலம் வழங்கி முற்றுகைக்கு முற்றுப்புள்ளி வைத்தான்.

### சேதுபதியுடன் மோதுதல்

மதுரையை ராணி மங்கம்மாள் ஆட்சிபுரிந்துவந்தபோது மறவர் நாட்டை கிழவன் சேதுபதி ஆட்சி புரிந்துவந்தான். இவன் நாயக்கர்களுக்கு திறை செலுத்தாததுடன் தன்னிச்சையாக ஆட்சி புரிந்துவந்தான். இவனை அடிபணிய வைக்க தனது தளபதி நரசப்பையனை மங்கம்மாள் ஒரு படையுடன் அனுப்பினாள்.

மதுரை நாயக்கர்களைப் பழிவாங்க தக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்த சேதுபதி கி.பி.1700-இல் தஞ்சாவூர் மதுரையைத் தாக்கியபோது, மதுரைக்கு எதிராக தஞ்சாவூருக்கு உதவிபுரிந்தான். சேதுபதியைத் தண்டிக்கும் நோக்குடன் மங்கம்மாள் தனது தளபதி நரசப்பையனை படையுடன் மறவர் நாட்டிற்கு அனுப்பினான். பழிவாங்கும் இப்போரில் இருதரப்பினரும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். இறுதியில் நாயக்கர் படை தோற்கடிக்கப்பட்டதோடு தளபதி நரசப்பையனும் கொலைசெய்யப்பட்டான். போரில் வெற்றி பெற்ற சேதுபதி முழு உரிமை பெற்ற மன்னனாக மாறினான். இப்போரில் அடைந்த தோல்வி மங்கம்மாளின் புகழை வெகுவாக பாதித்தது.

**கிறிஸ்தவர்களுக்கு ஆதரவளித்தல்**

இராணி மங்கம்மாள் மதுரையை ஆட்சிபுரிந்துவந்த காலத்தில் கிறிஸ்தவ சமயம் தமிழகத்தில் துளிர்விட்டு படர்ந்து கொண்டிருந்தது. இருப்பினும் சில இடங்களில் இச்சமயத்திற்கு கடும் எதிர்ப்பு காணப்பட்டது. குறிப்பாக இராமநாதபுரம் பகுதியில் கிறிஸ்தவ சமயத்திற்கு கடும் எதிர்ப்பு காணப்பட்டது. இங்கு கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதில் அதிக அக்கறை காட்டிவந்தவர் பாதிரியார் ஜாண்-டி-பிரிட்டோ என்பவராவார். இதன் வளர்ச்சியைக் கண்டு அஞ்சிய சேதுபதி ஜாண்-டி-பிரிட்டோ பாதிரியாரைக் கைது செய்ததோடு கிறிஸ்தவ கோயில்களையும் இடித்துதள்ள ஆணைபிறப்பித்தார். சித்திரவதை செய்யப்பட்ட பிரிட்டோ பாதிரியார் இறுதியில் கொலை செய்யப்பட்டார். இவரது உடம்பு பல துண்டுகளாக வெட்டப்பட்டு கழுகுகளுக்கு வீசப்பட்டன. இந்நிகழ்ச்சி இராமநாதபுரத்தில் கி.பி.1663-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. பிரிட்டோவைக் கொன்று கிறிஸ்தவ சமயத்தின் மீது தனக்கிருந்த கசப்புணர்ச்சியை சேதுபதி வெளிப்படுத்தினான். இதைப்போன்று தஞ்சை நாயக்கர்களும் கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராகச் செயல்பட்டதோடு அதன் வளர்ச்சிக்கு தடையாய் இருந்தனர். கிறிஸ்தவ மதகுருக்கள் பலர் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டனர். அதேபோன்று கிறிஸ்தவ சமயத்திற்கு எதிராக செயல்பட தஞ்சை நாயக்கர் மங்கம்மாளுக்குக் கடிதம் ஒன்றை எழுதினர். இக்கடிதத்தை உதாசீனப்படுத்திய மங்கம்மாள் அனைத்து சமயத்தின் கருத்துக்களையும் மதித்து வந்தாள். குறிப்பாக கிறிஸ்தவ சமய பாதிரிமார்களுக்கு பெரும் மதிப்பு கொடுத்த மங்கம்மாள் அவர்களின் சமய வளர்ச்சிக்குப் பேராதரவளித்தார். மங்கம்மாளின் இச்செயலை கிறிஸ்தவ பாதிரிமார்களின் கடிதங்கள் வெளிப்படுத்துகின்றன.

**இஸ்லாமியரை ஆதரித்தல்**

கிறிஸ்தவ சயமத்திற்கு மட்டுமல்லாமல் இஸ்லாமிய சமயத்திற்கும் மங்கம்மாள் அதிக ஆதரவளித்தார். முஸ்லீம் பள்ளிவாசல்களுக்கும், தர்க்காக்களுக்கும் மங்கம்மாள் கிராமங்களைத் தானமாக வழங்கினார். இச்செயலை கி.பி.1692-ஆம் ஆண்டைச் சார்ந்த செப்புச்சாசனமும், கி.பி.1701-ஆம் ஆண்டைச் சார்ந்த தெலுங்கு சாசனமும் பறைசாற்றுகின்றன. சமயப்பொறையின் காரணமாக இராணி மங்கம்மாளிடம் முஸ்லீம்கள் மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தனர்.

**இராணி மங்கம்மாளின் அறப்பணிகள்**

இராணி மங்கம்மாளின் அறப்பணிகள் அவளது பெயரையும், புகழையும் பன் மடங்கு உயர்த்தின. இவர் ஏராளம் அறப்பணிகளை மேற்கொண்டார். இவளது அறப்பணிகள் சமய சார்புடையதாக விளங்கின. மங்கம்மாள் தனது ஆட்சி காலத்தில் ஏராளம் நீர்நிலைகள், சாலைகள், நிகழ்தரும் மரங்கள், சத்திரங்கள், அன்னச்சாவடிகள், நீர்பந்தல்கள் ஆகியவற்றை அமைத்து ஒழுங்காகப் பேணிவந்தார்.

விவசாய மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளித்த இராணி அதன் வளர்ச்சிக்கென உய்யக்கொண்டான் வாய்க்காலைச் செப்பனிட்டார். இதை கி.பி.1687 மற்றும் கி.பி.1704-ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட சாசனங்கள் குறிப்பிடுகின்றன. மேலும் புனித பயணங்களை மேற்கொள்ளும் மக்களின் வசதிக்காகவும், வணிக மேம்பாட்டிற்காகவும், நெடுஞ்சாலைகள் பல அமைக்கப்பட்டன. இச்சாலை ஓரங்களில் பயணிகள் தங்கி ஓய்வு எடுப்பதற்கு வசதியாக நிகழ்தரும் மரங்களும், அன்னச்சாவடிகளும், சத்திரங்களும், தண்ணீர் பந்தல்களும் பராமரிக்கப்பட்டு வந்தன. சத்திரங்களுக்கு நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன. இவனது ஆட்சி காலத்தில் இந்து மதம் ஏற்றம் பெற்றது. வேதியர்கள் உயர்நிலைக்கு உந்தப்பட்டனர். வேதியர் குடியிருப்புக்கள் பெருகின. இந்து கோயில்களின் வளர்ச்சிக்கென அறப்பணிகள் பல மேற்கொள்ளப்பட்டன.

மங்கம்மாளின் ஆட்சி காலத்தில் பல வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த கட்டிடங்கள் கட்டப்பட்டன. தற்போது மதுரையில் காணப்படும் தமுக்கம் விடுதி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியாளர்களின் பழைய பணியகம், மத்தியசந்தை, மதுரைக் கல்லூரி, உயர்நிலைப்பள்ளிக்கட்டிடம், அரசுப்பெண்கள் பள்ளிக்கூடம் ஆகியவை இக்காலத்தைச் சார்ந்தவை என கருதப்படுகிறது.

**மதிப்பீடு**

சிக்கலான காலத்தில் நாட்டின் ஆட்சிப்பொறுப்பை ஏற்ற இராணி மங்கம்மாள் தனது முற்போக்கு கொள்கைகளாலும், நிர்வாகத்திறமையினாலும், நாட்டைப்பாதுகாத்து அதன் புகழை உயர்த்தினாள். இக்காலத்தில் பின்பற்றப்பட்ட சமயக் கொள்கைகளும், மேற்கொள்ளப்பட்ட அறப்பணிகளும், பின்பற்றப்பட்ட போர் நெறிகளும் அந்த அரசியின் சிறப்பை வெளிப்படுத்துகின்றன. இராணி மங்கம்மாளின் மீதுள் பற்றின் காரணமாக அன்னாரின் உருவம் ஓவிய வடிவில் மதுரைப் பொற்றாமரைக் குளத்தின் அருகில் காணப்படும் திருமண மண்டபத்தில் நினைவுச் சின்னமாக மிளிருகிறது.

**மங்கம்மாளுக்குப்பின் நாட்டின் நிலை**

இராணி மங்கம்மாளின் ஆட்சிக்குப்பின் விஜயரங்க சொக்கநாத நாயக்கன் கி.பி.1706-ஆம் ஆண்டு ஆட்சிப்பொறுப்பேற்றான். இவன் சமயத்துறையில் அதிக நாட்டம் கொண்டதால் நிர்வாகத்தில் அதிக அக்கறை செலுத்தவில்லை. சமய யாத்திரைகளில் அடிக்கடி ஈடுபட்டார். நாட்டின் வருவாயின் பெரும்பகுதி சமய

பணிகளுக்காகச் செலவிடப்பட்டன. இவர் நிர்வாகத்தில் அக்கறை காட்டாததால் நிர்வாகத்தை கவனித்து வந்தவர்கள் தன்னிச்சையாக செயல்பட்டதோடு மக்கள் மீது அதிக வரிகளை விதித்து கொடுமையான முறையின் அவற்றை வசூலித்தனர். இதனால் மக்கள் அரசிற்கெதிராக ஆத்திரம் கொண்டனர். நாடு அழிவுப்பாதையை நோக்கி சென்று கொண்டிருந்தது.

**மீனாட்சி**

கி.பி.1732-ல் விஜயரங்கன் மகப்பேறு இன்றி இறந்தான். எனவே திருமலை நாயக்கரின் தம்பி வழியில் தோன்றிய பாங்காருவின் புதல்வன் விஜயகுமாரனை மகவேற்பு செய்து கொண்டு விசயரங்கனின் மனைவி மீனாட்சி நாட்டை ஆட்சி பரிந்து வந்தாள். இவளது ஆட்சிகாலத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டது. ஆட்சிக்காக அரசியல் சூழ்ச்சிகள் பல மேற்கொள்ளப்பட்டன. அன்னியர் ஆதிக்கமும் பெருகியது. நிலைமை கட்டிற்கு அடங்காமல் போகவே அரசி சந்தா சாகிப்பின் துணையை நாடினான். உதவிக்குச் சென்ற சந்தாசாகிப்பு மீனாட்சியை சிறைப்படுத்தி கி.பி.1736-இல் மதுரையைக் கைப்பற்றினார். இதன் விளைவாக நவாபின் ஆட்சி மதுரை வரை விரிவாக்கம் செய்யப்பட்டது. அன்னியர் ஆதிக்கம் நாயக்கர்களின் ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

**செஞ்சி நாயக்கர்கள்**

**முன்னுரை**

சோழர்களின் ஆட்சி காலத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாக செஞ்சி விளங்கியது. கி.பி.13-ஆம் நூற்றாண்டு சோழ அரசின் வீழ்ச்சிக்குப்பின்னர் இப்பகுதி ஹொய்சாளர், காக்கத்தியர்கள், பாண்டியர்கள், விஜயநகரப்பேரரசு ஆகியவற்றின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. இவர்கள் ஆட்சி காலத்தில் இது ஒரு முக்கிய இராணுவமையமாகச் செயல்பட்டுவந்தது. விஜயநகர பேரரசை கிருஷ்ணதேவராயர் ஆட்சி புரிந்த பொழுது இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை ஒரு மாநிலத்தின் தலைநகரமாக்கி அதனை ஆட்சிபுரியும் பொறுப்பை கி.பி.1526-ஆம் ஆண்டு வையப்பநாயக்கர் என்பவரிடம் ஒப்படைத்தார். தொண்டை மண்டலத்தில் பாலாற்றிலிருந்து தெற்கே கொள்ளிடம் வரை பரந்து காணப்பட்ட அரசை இவர் செஞ்சியை தலைநகரமாகக் கொண்டு ஆட்சிபுரிந்தார். நாயக்கர்களால் ஆட்சி புரியப்பட்ட இப்பகுதி கி.பி.1526 முதல் கி.பி.1648 வரை இவர்கள் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்தது.

**சான்றுகள்**

செஞ்சி நாயக்கர்களின் வரலாற்றை அறிய போதிய சான்றுகள் இல்லாததால் இதன் முற்கால வரலாறு தெளிவற்றுக் காணப்படுகிறது. கி.பி.1464-இல் ஆண்டு துவக்கப்பட்ட செஞ்சி நாயக்கர் அரசு தென்னிந்தியாவில் நிலவிய அரசியல் சூழ்நிலையைத் தங்களுக்குச் சாதகமாக்கி படிப்படியாக முன்னேறி தமிழகத்தில் தனக்கென தனி இடத்தைப் பெற்று சிறப்புற்று விளங்கியது. இக்கால வரலாற்றை

அறிய மெக்கன்சி ஓலைச் சுவடிகளும், கிறிஸ்தவ பாதிரிமார்களின் குறிப்புகளும் ரெகுநாதாப்பயுதையம், சாகித்திய ரத்னா ஹாரம் முதலிய இலக்கியப் படைப்புகளும் பெரிதும் துணைபுரிகின்றன.

**அரசியல் வரலாறு**

**துப்பாக்கி கிருஷ்ணப்பர் (கி.பி.1490 – கி.பி.1520)**

வையப்பருக்குப்பின் துப்பாக்கி கிருஷ்ணப்பர் செஞ்சியை ஆட்சிபுரிந்தார். கிருஷ்ணதேவராயர் தென்னிந்தியாவின் மீது படையெடுத்த போது கிருஷ்ணப்பர் அவருக்குப் பெரிதும் உதவியாக இருந்தார். இவரது ஆட்சி காலத்தில் செஞ்சியை பாதுகாக்க தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இவர் செஞ்சியின் மூன்று மலைகளையும் சுற்றி பெரும் சுவரை எழுப்பினார். மேலும் உணவுப்பொருட்களைச் சேமித்து வைக்க வசதியாக தானியக்களஞ்சியங்களையும் இவர் கட்டினார். திருமண்டபங்கள் பலவம் இவரால் எழுப்பப்பட்டன. இந்து சமயத்தின் மீது அதிக பற்றுக்கொண்ட இவர் ஸ்ரீமுசனம், திருக்கோவிலூர் ஆகிய இடங்களில் ஆலயங்களைக் கட்டினார். ராஜகிரி கோட்டையின் முன்பக்க அமைப்பு இவரது ஆட்சி காலத்தில் கட்டப்பட்டது என கருதப்படுகிறது.

**இரண்டாம் கிருஷ்ணப்பர்**

தூப்பாக்கி கிருஷ்ணப்பருக்குப்பின் செஞ்சியை சூரப்ப நாயக்கர், முதலாம் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் ஆட்சி புரிந்தனர். செஞ்சியை ஆட்சி புரிந்த முதல் வலிமை மிக்க அரசர் இரண்டாம் கிருஷ்ணப்பர் ஆவார். இவரது ஆட்சி காலம் வரையிலும் செஞ்சியை ஆட்சி புரிநது வந்தவர்கள் விஜய நகர அரசர்களுக்குக் திறை செலுத்தி வந்தனர். ஆனால் இவர் செஞ்சியை சுதந்திர அரசாக மாற்ற முயன்று விஜய நகர பேரரசர் முதலாம் வெங்கடருக்கெதிராகக் கலகம் செய்தார். கலகம் ஒடுக்கப்பட்டு கிருஷ்ணப்பா சிறையில் அடைக்கப்பட்டார். தஞ்சை நாயக்கரின் தலையீட்டால் விடுதலையடைந்த இவர் சிறிது காலம் விஜய நகர மேலாண்மையை ஏற்று நடந்தார். ஆனால் கி.பி.1604-ஆம் ஆண்டு மீண்டும் பேரரசிற்குத் திறை செலுத்த மறுத்து தனது சுதந்திரத்தை நிலை நாட்ட முயன்றார். இவரது இம்முயற்சியும் தோல்வியடைந்தது. மீண்டும் சிறையில் அடைக்கப்பட்ட இவர் தஞ்சை, மதுரை நாயக்கர்களின் தலையீட்டால் விடுதலை செய்யப்பட்டார். விஜய நகரப்பேரரசின் மேலாண்மையை ஏற்ற இவர் பெருமளவு திறைப்பொருட்களைச் செலுத்துமாறு கட்டாயப்படுத்தப்பட்டார்.

இவரது வாழ்க்கை தோல்விமயமாக இருந்தது. கி.பி.1614-1616-ஆம் ஆண்டுகளில் பேரரசில் நடைபெற்ற வாரிசுரிமைப் போரில் பங்கெடுத்த இவர் ஜக்கதேவராயருடன் சேர்ந்து பேரரசரையும், ஆபத்து காலத்தில் தனக்குத் துணைபுரிந்த தஞ்சை நாயக்கரையும் எதிர்த்தார். வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தோப்பூர் போரில் பங்கெடுத்துப் படுதோல்வியடைந்தார். இறுதியில்

வெள்ளாற்றங்கரையில் நடைபெற்ற போரில் தஞ்சை நாயக்கர்களால் தோற்கடிக்கப்பட்டார்.

கிருஷ்ணப்பர் ஆட்சி காலத்தில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் செஞ்சியில் பெருகியது. குறிப்பாக இக்காலத்தில் டச்சுக்காரர்களின் செல்வாக்கு இங்கு பெருகியது. இவரது ஆட்சிகாலத்தில் பண்டகசாலை ஒன்றைக் கடலூரில் நிறுவுவதற்கு டச்சுக்காரர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டது. இதை பேரரசர் வேங்கடருடன் நெருங்கிய உறவை வைத்திருந்த போர்த்துக்கீசியர்கள் விரும்பவில்லை. இவர்களின் தூண்டுதலின் பேரில் கிருஷ்ணப்பர் டச்சுக்காரர்களுக்கு அளித்த உரிமையை ரத்து செய்யுமாறு பேரரசர் வேங்கடர் ஆணைப்பிறப்பித்தார். எனினும் கிருஷ்ணப்பர் டச்சுக்காரர்களுக்கு அளித்து வந்த ஆதரவைத் தொடர்ந்து அளித்ததோடு திருப்பாபுலியூரிலும், பழவேற்காட்டிலும் பண்டகசாலைகளை நிறுவுவதற்கு அனுமதியளித்தார்.

சமயப்பொறைமையைக் கடைப்பிடித்த கிருஷ்ணப்பர் தான் பின்பற்றிய வைணவ சமயத்திற்கு மட்டுமன்றி அனைத்து சமய வளர்ச்சிக்கும் ஆதரவு அளித்தார். இவரது ஆட்சிகாலத்தில் கிறிஸ்தவ சமயப்பரப்பாளர்கள் அரசியலில் எவ்வித ஈடுபாடும் காட்டாது தங்களது சமயத்தைப் பரப்புவதில் கண்ணும் கருத்துமாக இருந்துவந்தனர். கிறிஸ்தவர்களின் சமய, சமூகப்பணிகள் மன்னனைக் கவர்ந்தன. அனைத்து சமயத்தையும் ஒன்றுபோல் பாவித்த கிருஷ்ணப்பர் சைவர்களுக்கு திண்டிவனத்திலும் சமணர்களுக்கு சித்தனூரிலும், கிறிஸ்தவர்களுக்கு செஞ்சியிலும் பிற இடங்களிலும் ஆலயம் கட்டுவதற்கு அனுமதிவழங்கினார்.

**செஞ்சி அரசின் வீழ்ச்சி**

இரண்டாம் கிருஷ்ணப்பருக்குப்பின் செஞ்சியை ஆட்சிபுரிந்தவர்கள் திறமையற்றவர்கள். எனவே நாடு அதன் சிறப்பை இழக்கத் தொடங்கியது. இக்காலத்தில் விஜய நகர அரசர்களின் ஆதிக்கம் செஞ்சியில் பெருகியது. விஜய நகர அரசின் கடைசி அரசர் மூன்றாம் ஸ்ரீரங்கர் ஆவார். இவர் கி.பி.1642-ம் ஆண்டு அரியணையேறினார். இவர் தனது ஆட்சிகாலத்தில் நாயக்கர்கள் மீது ஆதிக்கத்தை நிலைநாட்ட எண்ணி படையொன்றை அனுப்பினர். இச்சூழ்நிலையில் நாயக்கர்கள் தக்காண சுல்தானின் உதவியை நாடினர். எனவே கி.பி.1646-ஆம் ஆண்டு கோல்கொண்டா படைகள் உதயகிரி மீதும், பிஜப்பூர், வேலூர் மீதும் படையெடுத்தன. வேலூரைக் கைப்பற்றிய முஸ்லீம்படைகள் கான்-இ-கானன் தலைமையில் செஞ்சியை முற்றுகையிட்டது. கி.பி.1649-ஆம் ஆண்டு பிஜப்பூர் படைகள் செஞ்சிக் கோட்டையைக் கைப்பற்றியது. அந்நகர் சூறையாடப்பட்டது. சுமார் இருபது கோடி ரூபாய் மதிப்புள்ள பொன்னையும், விலையுயர்ந்த பொருட்களையும் இப்படை கைப்பற்றியதோடு எதிர்த்து நின்ற மக்களையும் கொன்று குவித்தது. செஞ்சியை முற்றுகையிட்டபோது முஸ்லீம் படைகளால் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானமற்ற மக்கள் விரோதச் செயல்களை நேரில் கண்ட கிறிஸ்து சபையைச் சார்ந்த ஆண்ட்ரூ பிரையர் என்ற பாதிரியார் திறம்பட எடுத்தியம்பியுள்ளார். பிஜப்பூர் படையெடுப்பின்

விளைவால் செஞ்சியை ஆட்சிபுரிந்து வந்த நாயக்கர்களின் ஆட்சி நலிந்து தனது சுதந்திர அரசு நிலையை இழந்தது. பின்னர் இது முஸ்லீம் மாநிலமாகச் செயல்பட்டு வந்தது.

**செஞ்சி நாயக்கர் சிறப்புக்கள்**

செஞ்சியை ஆண்டுவந்த நாயக்கர்கள் தங்கள் தலைநகருக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். அதனைப் பாதுகாக்கும் நோக்குடன் கோட்டைகளையும் அரண்மனைகளையும் எழுப்பினர். மேலும் இந்து சமய வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டிய செஞ்சி நாயக்கர்கள் கோயில்களையும், மண்டபங்களையும் எழுப்பினர். குறிப்பாக அச்சுதராம பத்தர நாயக்கர் திருவண்ணாமலை, திண்டிவனம் ஆகிய இடங்களில் காணப்படும் ஆலயங்களைக் கட்டினார். இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்கள் நாயக்கர்களின் புகழை இன்றும் பறைசாற்றுகின்றன. செஞ்சி நாயக்கர்கள் அறிஞர்களையும், பிராமணர்களையும் ஆதரித்தனர். பிராமணர்களுக்கு நிலங்கள் தானமாக வழங்கப்பட்டன. செஞ்சி நாயக்கர்களின் சமயப்பொறைமை போற்றுதற்குரியது.

**தஞ்சாவூர் நாயக்கர்கள்**

தமிழகத்தை ஆட்சி புரிந்த முஸ்லீம்களுக்கு எதிராக படையெடுப்பை மேற்கொண்ட குமாரகம்பன் தான் கைப்பற்றிய பகுதிகளை நிர்வாக வசதிக்காக மதுரை, செஞ்சி, தஞ்சாவூர் ஆகிய பகுதிகளை மையமாகக் கொண்டு மூன்று மண்டலங்களாகப் பிரித்து அவற்றைத் தனது நம்பிக்கைக்குப் பாத்திரமான படைத்தளபதிகளிடம் ஒப்படைத்தான். இப்படைத்தளபதிகள் ‘நாயக்கர்கள்’ என அழைக்கப்பட்டனர். ஆளுநர்கள் போல் செயல்பட்ட இவர்கள் அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். விஜய நகர அரசு சிறப்புற்று விளங்கிய காலத்தில் இவர்கள் பேரரசிற்கு படை உதவியும் பொருள் உதவியும் அளித்து வந்தனர். பேரரசு அதன் வலிமையை இழக்கவே இந்நாயக்கர்கள் சுதந்திரமடைந்து தன்னிச்சையாகச் செயல்படத் தொடங்கினர். தஞ்சை நாயக்கர்களின் ஆடசி தமிழக வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. தஞ்சை நாயக்கர்கள் கி.பி.1532 முதல் கி.பி.1675-ம் ஆண்டுவரை சுமார் நூற்று ஐம்பது ஆண்டுகள் பழம்பெரும் வரலாறு கொண்ட தஞ்சாவூரை தலைநகராகக் கொண்டு தமிழகத்தின் ஒரு பகுதியை ஆட்சி புரிந்து வந்தனர்.

**அரசின் தோற்றம்**

தஞ்சாவூர் நாயக்கர் அரசின் தோற்றத்தைப்பற்றி அறிஞர்களிடையே மாறுபட்ட பல கருத்துக்கள் நிலவுகின்றன. இவர்கள் விஜயநகர அரசர்களின் உறவு வழிவந்தவர்கள் என ‘தஞ்சாவூர் ஆந்திர ராஜீலு சரிதமு’ குறிப்பிடுகிறது. மற்ற நாயக்கர்களை விட தஞ்சை நாயக்கர்கள் பேரரசுடன் நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். தஞ்சையில் நாயக்கர் ஆட்சியை நிறுவிய சேவப்ப நாயக்கர்

அச்சுதராயரின் மனைவி திருமாலம்பாளின் சகோதரி மூர்த்திமாம்பா என்பவளைத் திருமணம் செய்தார் என வடமொழி சான்றுகள் குறிப்பிடுகின்றன.

### அரசியல் வரலாறு

### செவ்வப்ப நாயக்கர்

தஞ்சையில் நாயக்கர் ஆட்சியை ஏற்படுத்தியவர் செவ்வப்ப நாயக்கர் ஆவார். இவர் தனது ஆட்சியை 1532-ஆம் ஆண்டு நிறுவி தொண்டை மண்டலத்தின் தென்பகுதியை உள்ளடக்கிய காவிரி டெல்டா பகுதி முழுவதையும் ஆட்சிபுரிந்துவந்தார் என அறிஞர்கள் கருதுகின்றனர். இவர் செவன்றுபதி சின்ன செல்வா, எனவும் அழைக்கப்பட்டனர். விஜயநகர பேரரசின் மேலாண்மையை முழுமையாக ஏற்றுக்கொண்ட இவர் தனது வாழ்க்கையின் இறுதிவரை அவ்வரசுக்கு உண்மையுடன் நடந்து கொண்டார். பேரரசு திருவிதாங்கூருக்கு எதிராக நடத்திய போரிலும், முஸ்லீம்களுக்கு எதிராகத் தலைக்கோட்டையில் நடத்திய போரிலும், இவர் தனதுப் படையை அளித்து உதவினார். நல்லாட்சி நடத்திய இவர் கி.பி.1580-ஆம் ஆண்டு இவ்வுலக வாழ்வை நீத்தார்.

### அச்சுதப்பர்

சேவப்ப நாயக்கருக்குப்பின் அவரது மகன் அச்சுதப்பர் கி.பி.1580-ஆம் ஆண்டு முதல் கி.பி.1600-ஆம் ஆண்டுவரை தஞ்சாவூரை ஆட்சிபுரிந்தார். இந்து சமயத்தில் அதிக அக்கறை கொண்ட இவர் அதன் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் கோபுரம் இவரால் கட்டி எழுப்பப்பட்டது. சமய சிறப்பு வாய்ந்த கும்பகோணத்தில் காணப்படும் மகாமகம் குளம் இவரது ஆட்சி காலத்தில் சீரிய முறையில் புதுப்பிக்கப்பட்டது. பிராமணர்கள் ஆதிக்கம் இக்காலத்தில் பெருகியது. ஏராளம் நிலங்கள் 'பிரம்மதானம்' குடியேற்றங்களாக்கப்பட்டன. சிற்றின்பத்தில் அதிக ஈடுபாடு கொண்ட இவர் அரசியலில் அவ்வளவு சிறப்புற்று விளங்கவில்லை. இவரது அந்தபுரத்தில் சுமார் 370 மனைவியர்கள் காணப்பட்டனர். இவர் இறந்தவுடன் அனைவரும் உடன்கட்டை ஏறினர் என கருதப்படுகிறது.

### ரகுநாத நாயக்கர்

தஞ்சை நாயக்கர்களுள் தலைசிறந்தவர் ரகுநாத நாயக்கர் ஆவார். அச்சுதப்பருக்குப்பின் ரகுநாதர் அரியணை ஏறினார். இவர் அச்சுதப்பனின் முறையான மகன் அல்ல. திறமை மிக்கவராகக் காணப்பட்டதால் தனது ஆசை நாயகிகளின் ஒருத்திக்குப் பிறந்த இவரை நாட்டின் அரசனாக்கினார். இதற்கு எதிராகச் செயல்பட்ட திறமையற்ற தனது முறையான மகனைச் சிறையிலடைத்தார். பின்னர் இவரை ரகுநாதர் கொலை செய்தார். ரகுநாதர் கி.பி.1600-ஆம் ஆண்டு முதல் கி.பி.1634-ஆம் ஆண்டு வரை நாட்டை ஆட்சிபுரிந்தார். இவரது ஆட்சி பல்வேறு நிகழ்ச்சிகளால் சிறப்புற்று விளங்கியது.

இவர் பேரரசோடு நல்லுறவுடன் விளங்கினார். பேரரசுக்கு இடுக்கண் ஏற்பட்டபோது அதற்கு உறுதுணையாக இருந்தார். கி.பி.1614-முதல் கி.பி.1616-ஆம் ஆண்டுவரை பேரரசில் ஏற்பட்ட உள்நாட்டுபோரில் யாச்சமரை ஆதரித்தார். தோப்பூர் போரில் பேரரசுக்கு ஆதரவாகப் போரில் ஈடுபட்டார். தான் அளித்த உதவியின் காரணமாக இவர் விஜயநகர அரசின் நன்மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றார்.

இவரது ஆட்சி காலத்தில் சொலாகர் என்பவர் கொள்ளிடம் பகுதியை ஆட்சி புரிந்துவந்தார். பேராசை கொண்ட இவர் செஞ்சி நாயக்கரின் துணையுடன் தஞ்சை நாயக்கரின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் ஊடுருவி இடைவிடாது தொல்லைகள் அளித்துக் கொண்டிருந்தார். எனவே ஆத்திரமடைந்த ரகுநாத நாயக்கர் ஒரு படையுடன் சென்று சொலாகரையும் அவருக்கு உதவிபுரிந்த செஞ்சி நாயக்கர் படையையும் தோற்கடித்து தனது நாட்டின் எல்லை வரை துரத்தியடித்தார்.

ரகுநாத நாயக்கர் யாழ்பாண அரசின் உள்நாட்டு விவகாரத்திலும் தலையீடு செய்தார். தனது தந்தையின் ஆட்சி காலத்தில் போர்த்துக்கீசியரால் தோற்கடிக்கப்பட்ட யாழ்பாண அரசர் தஞ்சாவூரில் தஞ்சம் புகுந்தார். இவருக்கு உதவிபுரிய எண்ணிய ரகுநாதர் தனது கடல் படையை யாழ்பாணத்திற்கு அனுப்பி போர்த்துக்கீசியர்களைத் தோற்கடித்து யாழ்பாண அரசரை அரியணையில் அமர்த்தினார். ஆனால் சிறிது காலத்திற்குள் போர்த்துக்கீசியர்கள் மீண்டும் யாழ்பாணத்தைக் கைப்பற்றினர்.

இவரது ஆட்சி காலத்தில் ஐரோப்பியர் ஆதிக்கம் தஞ்சாவூரில் பெருகியது. குறிப்பாக இக்காலத்தில் டச்சு, டென்மார்க், இங்கிலாந்து ஆகிய நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் தங்களது வணிகத்தைப் பெருக்குவதில் முனைப்புடன் காணப்பட்டனர். டென்மார்க் நாட்டைச் சேர்ந்த வணிகர்கள் தங்களது வணிகத்தைப் பெருக்கும் நோக்குடன் தரங்கம்பாடியில் கோட்டை ஒன்றை அரசின் அனுமதியுடன் அமைத்தனர். பிற நாட்டவர் வணிகமும் இங்கு சிறப்புற்று விளங்கியது.

இந்து சமய வளர்ச்சிக்கு ஆதரவாகச் செயல்பட்ட ரகுநாதர் பல்வேறு அறச் செயல்களில் ஈடுபட்டார். ரகுநாதன் சிறந்த போர் வீரன் மட்டுமல்லாமல் கலை, இசை, இலக்கியம் ஆகியவற்றிலும் சிறந்து விளங்கினார். இவர் பல காவியங்களைப் படைத்தார். அவற்றுள் பாரிஜாதபரணம், வால்மீகி சரித்திரம், ருக்மணிபரியை, யாக்[3] கானம், இராமாயணம் முதலிய தெலுங்கு இலக்கியங்களும், சங்கீத சுதா, பாரத சுதா ஆகிய வடமொழிப்படைப்புகளும் சிறப்பு வாய்ந்தவைகளாகும். கர்நாடக இசையை உருவாக்குவதிலும் இவர் பெரும் பங்கு வகித்தார். வீணை மீட்டுவதில் சிறப்புற்று விளங்கிய இவர் ஜெயந்த சேனா என்ற புதிய ராகத்தையும், இராமானந்தா என்ற தாளத்தையும் உருவாக்கினார். கலை, இலக்கியம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு அக்கறை காட்டிய இவர் புலவர்களையும் ஆதரித்தனர். இவரது ஆதரவைப் பெற்ற புலவர்களுள் கோவிந்த தீட்சதர், யக்ஞ நாராயண தீட்சதர், வெங்கடமகி இராஜ, சூடாமணி தீட்சதர், பாஸ்கர தீட்சதர், குமாரதாத்தாச் சாரியார், இராமபத்ராம்பா, மதுரவாணி ஆகியோர்

குறிப்பிடத்தக்கவர்கள். இவரது ஆட்சி காலத்தில் கும்பகோணம் ஆலயம் உள்பட பல ஆலயங்கள் அழகுபடுத்தப்பட்டன.

**விஜயராகவ நாயக்கர்**

ரகுநாத நாயக்கருக்குப்பின் அவரது மகன் விஜயராகவநாயக்கர் நாட்டை ஆட்சிபுரிந்தார். இவர் கி.பி.1633-ஆம் ஆண்டு முதல் கி.பி.1673-ஆம் ஆண்டு வரை ஆட்சி புரிந்தார். இவரது ஆட்சி காலத்தில் முஸலீம்களின் செல்வாக்கு தமிழகத்தில் பெருகியது.

விஜயராகவனின் ஆட்சி காலத்தில் விஜயநகரப் பேரரசை ஸ்ரீரங்க நாயக்கர் ஆட்சிபுரிந்து வந்தார். இவர் நாயக்கர்களைத் தனது நேரடிக்கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர எண்ணினார். இதனால் ஆத்திரமடைந்த செஞ்சி, மதுரை நாயக்கர்கள் தங்களது நிலையை உறுதிப்படுத்த பிஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களின் உதவியை நாடினர். இந்த இக்கட்டான சூழ்நிலையில் தஞ்சாவூர் பகுதியை ஆண்டுவந்த விஜயராகவ நாயக்கர் விஜய நகர பேரரசின் எண்ணத்தை ஆதரித்ததோடு அவருக்கு உதவியாக படையையும் அனுப்பி வைத்தார். இதனால் செஞ்சி, மதுரை நாயக்கர்கள் தஞ்சை நாயக்கர் மீது பகைமைகொண்டனர்.

இப்பகைமையின் காரணமாக தஞ்சாவூரைத் தாக்குமாறு மதுரை, செஞ்சி நாயக்கர்கள் கோல்கொண்டா சுல்தானை ஏவினர். கி.பி.1646-ஆம் ஆண்டு கோல்கொண்டா படைகள் தஞ்சாவூரைத் தாக்கின. முஸ்லீம்களின் தாக்குதலைத் தடுத்து நிறுத்த விஜயராகவ நாயக்கரால் முடியவில்லை. முஸ்லீம்களால் கைப்பற்றப்பட்ட தஞ்சாவூர் இரக்கமின்றி சூறையாடப்பட்டது. இப்படையெடுப்பைத் தொடர்ந்து பிஜப்பூர் சுல்தானும் கி.பி.1648-ஆம் ஆண்டு தஞ்சாவூரை முற்றுகையிட்டான். இத்தாக்குதலுக்கு ஈடு கொடுக்க இயலாத விஜயராகவ நாயக்கர் அருகாமையிலுள்ள காட்டுப்பகுதியில் சென்று ஒளிந்துக் கொண்டார். மன்னைப் பிடிப்பதற்காக முஸ்லீம் படைகள் காட்டிற்குள் ஊடுவின. இச்சூழ்நிலையில் செய்வதறியாது திகைத்த விஜயராகவ நாயக்கர் சுல்தானிடம் நிபந்தனையின்றி சரண் அடைந்தார். இதைப்போன்று கி.பி.1653-ஆம் ஆண்டு நிகழ்ந்த பிஜப்பூர் முற்றுகையின் போதும் தஞ்சை நாய்க்கர் மீண்டும் இழிவுபடுத்தப்பட்டார்.

தஞ்சை நாயக்கர்களும், மதுரை நாயக்கர்களும் நீண்ட காலமாக பகைமை உணர்வுடன் செயல்பட்டனர். இவர்களின் பகைமைக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. தஞ்சை நாயக்கர் மரபை ஏற்படுத்திய சேவப்பநாயக்கர் விஜயநகர பேரரசர் அச்சுதராயரின் மனைவியான வரதாம்பிகையின் தங்கையான மூர்த்திமங்காவைத் திருமணம் செய்து அவ்வரசுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். இத்திருமண உறவின் மூலம் தன்னை உயர்வாக எண்ணிய இவர் மதுரை நாயக்கர்களைத் தனக்கு சமமாகக் கருதவில்லை. மேலும் விஜய நகரஅரசுடன் நெருங்கிய உறவை வைத்திருந்த இவர் அவ்வரசுக்கு எதிராக மதுரை நாயக்கர்கள் செயல்படுவதை மிக வன்மையாக கண்டித்ததோடு அதற்கு எதிராகவும்

செயல்பட்டு வந்தார். எனவே இருநாட்டிற்கும் இடையே பகைமை வளர்ந்தது. மேலும் பாதுகாப்பின் பொருட்டு மதுரை நாயக்கர்கள் தங்கள் நாட்டின் வட பகுதியிலுள்ள திருச்சியை வலுப்படுத்த எண்ணி கோட்டை ஒன்றை கட்டினர். இதை தங்களைத் தாக்குவதற்கு வசதியாக மேற்கொள்ளப்பட்ட முன்னேற்பாடு என தஞ்சை நாயக்கர்கள் கருதினர். அத்துடன் கோட்டையைத் தாக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்தனர். இறுதியாக மதுரையை ஆட்சிபுரிந்துவந்த சொக்கநாத நாயக்கர் தஞ்சை இளவரசி ஒருத்தியைத் திருமணம் செய்ய விரும்பி தூதுவர் ஒருவரை அங்கு அனுப்பினார். பெண் கொடுக்க மறுத்த தஞ்சை நாயக்கர் தூதுவனை இழிவுபடுத்தி அனுப்பினார். இதனால் அவமதிப்பிற்குள்ளான மதுரை நாயக்கர் தஞ்சை நாயக்கரை பழவாங்க தக்க சமயத்தை எதிர்நோக்கியிருந்தார்.

மேற்குறிப்பிட்ட பகைமை உணர்வின் காரணமாக மதுரையை ஆடசிபுரிந்து வந்த சொக்கநாத நாயக்கர் தனது தளபதி வெங்கட் கிருஷ்ணப்ப நாயக்கர் என்பவரை ஒரு படையுடன் தஞ்சாவூரை ஆட்சி புரிந்து வந்த விஜயராகவ நாயக்கருக்கு எதிராக கி.பி.1673-ஆம் ஆண்டு அனுப்பினார். நடைபெற்ற போரில் விஜயராகவ நாயக்கர் கொலை செய்யப்பட்டார். இவர் இறந்தவுடன் முன்னேற்பாட்டின்படி அரச குடும்பத்தை சேர்ந்த அனைவரும் தற்கொலை செய்து கொண்டனர். தஞ்சை நாயக்க அரசு மதுரையுடன் இணைக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட தஞ்சாவூர் பகுதியை ஆட்சிபுரிய மதுரையை ஆட்சிபுரிந்துவந்த சொக்கநாத நாயக்கர் தனது சகோதரியின் மகன் அழகிரியை ஆளுநராக நியமித்தார். இத்துடன் தஞ்சை நாயக்கர்களின் வரலாறு முற்றுப்பெற்றது.

**நாயக்கர்களின் ஆட்சி முறை**

விஜயநகர பேரரசர்கள் தங்களது ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதிகளை ஆளும் வசதிக்காகப் பல மண்டலங்களாகப் பிரித்தனர். இம்மண்டலங்களை ஆளுநர்களின் துணைகொண்டு ஆண்டனர். அனைத்து அதிகாரங்களையும் கொண்டு அரசர்கள் போல் செயல்பட்டு வந்த இவர்கள் திருமலை நாயக்கர்கள் காலம் வரையிலும் விஜயநகர பேரரசுக்குட்பட்டு ஆட்சி புரிந்தனர். விஜயநகர ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட முதல் ஆளுநர் திருமலை நாயக்கர் ஆவார். இவரது காலத்திலிருந்து நாயக்கர்கள் மன்னராட்சி முறையை அமுல்படுத்தினர். இவர்கள் பாளையக்காரர்களின் துணையுடன் நாட்டை ஆண்டனர். நாயக்கர்களின் ஆட்சிமுறை ஒரு கூட்டு ஆட்சிமுறை ஆகும். தங்களது ஆதிக்கத்திற்கு உட்பட்ட பாளையக்காரர்களின் துணையுடன் செயல்படுத்தப்பட்ட கூட்டாட்சி முறை படைமானிய ஆட்சிமுறையை ஒத்து விளங்கியது. இவ்வாட்சி முறையில் சில சிறப்புப் பண்புகள் காணப்பட்டன.

**மன்னன்**

நாட்டை ஆண்ட மன்னன் 'நாயக்கர்' என அழைக்கப்பட்டார். நாயக்கர் என்றால் 'தலைவர்' என பொருள். இந்த நாயக்கர் ஆளுநர், பிரதேச தலைவர், ஒரு

பகுதியின் தலைவர் எனவும் அழைக்கப்பட்டார். நாயக்க அரசர்கள் அனைத்து அதிகாரங்களையும் பெற்று எதேச்சதிகார ஆட்சியாளர்கள் போல் செயல்பட்டுவந்தனர். இருப்பினும் அவர்களின் ஆட்சியின் கொடுங்கோல் தன்மையை தொன்றுதொட்டு பின்பற்றி வந்த மரபுவழி பழக்க வழக்கங்களும், சமூகப் பாரம்பரியங்களும் பெருமளவிற்குக் கட்டுப்படுத்தின. மேலும் மக்களால் மதிக்கப்பட்ட வேதங்களும், ஸ்மருதிகளும், தர்ம சாஸ்திரங்களும் எழுதப்பட்ட சட்டங்களை விட அதிக மதிப்பு பெற்று விளங்கியதால் நாட்டை ஆண்ட அரசர்கள் அவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வல்லாட்சியை கைவிட்டு நல்லாட்சி நடத்தினர்.

நாயக்கர்கள் நேர்வழி வாரிசுரிமை முறையைப் பின்பற்றினர் பொதுவாக தந்தைக்குப்பின் மூத்தமகன் அரியணை ஏறுகின்ற முறை நிலவியது. பெரும்பான்மை நாயக்க மன்னர்களும் ஏராளம் மனைவியரைக் கொண்டிருந்தனர். ஆனால் பட்டத்தரசியின் மகனுக்குத்தான் ஆட்சிபுரியும் உரிமை அளிக்கப்பட்டது. நாட்டை ஆண்ட மன்னன் வயதில் குறைந்தவனாக காணப்பட்டால் அவருக்கு பதில் பகர ஆளுநரை ஏற்படுத்துகின்ற முறை அக்காலத்தில் நடைமுறையிலிருந்தது. இதற்கு இராணி மங்கம்மாள் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். நாட்டை ஆட்சிபுரிய நேரடி வாரிசு இல்லையென்றால் அரச குடும்பத்தோடு நெருங்கிய தொடர்புடைய ஒருவரை மன்னராக மகவேற்று செய்யும் முறையும் நிலவியிருந்தது. இதற்கு விஜயகுமாரன் எடுத்துக்காட்டு ஆகும். மேலும் பெண்களை சமூகத்தில் ஒதுக்கிவைத்து எவ்வித உரிமையும் அளிக்கப்படாத காலத்தில் நாயக்கர் பெண்களுக்கு சம உரிமை அளித்து ஆட்சிப்பொறுப்பையும் அவர்களிடம் ஒப்படைத்தனர். நாயக்கர்களின் வரலாற்றில் மங்கம்மாள், மீனாட்சி ஆகியோரின் ஆட்சி குறிப்பிடத்தக்க ஒன்று ஆகும்.

நாட்டை ஆண்ட மன்னன் அனைத்து வசதிகளையும் கொண்ட அரண்மனையில் தங்கினான். இங்கு அனைத்து ஆடம்பர வசதிகளும் காணப்பட்டன. அரண்மனையிலுள்ள அந்தபுரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த அந்தபுரத்தில் மன்னனின் மனைவியர் வண்ணப்பொலிபுடன் விளங்கினர். திருமலை நாயக்கருக்கு இருநூறுக்கும் மேற்பட்ட மனைவியர்கள் காணப்பட்டனர். ஆனால் பட்டத்தரசிகளுக்கு மட்டுமே அரச மரியாதை அளிக்கப்பட்டது. நாட்டை ஆண்ட மன்னனுக்கு உயர் அதிகாரிகளைக் கொண்ட அவையும், பாளையக்காரர்களின் துணையும் கிடைத்தது. நிர்வாகத்தில் அதிக அக்கரை கொண்ட நாயக்க மன்னர்கள் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை மிக்கவர்களாக காணப்பட்டதால் இவர்களது திட்டங்கள் சமய சார்புடையவைகளாக காணப்பட்டன.

**அமைச்சர்கள்**

நிர்வாகத்தின் மன்னனுக்குத் துணைபுரியும் ஆலோசனை வழங்கவும், ஒரு குழு காணப்பட்டது. இக்குழுவிற்கு ஆலோசனைக் குழு என்று பெயர். இக்குழு மன்னனுக்கு தகுந்த ஆலோசனைகளை வழங்குவதையே நோக்காக கொண்டிருந்ததே தவிர அவனைக் கட்டுப்படுத்துவதை குறிக்கோளாகக் கொள்ளவில்லை. பொதுவாக இந்த குழுவில் ஐந்து அமைச்சர்கள் இருந்தனர். தளவாய், பிரதானி, ராயசம்,

அரசுக் கணக்கர், ஸ்தானாதிபதி ஆகியோர் இதில் அடங்குவர். இதில் தளவாய், பிரதானி, இராயசம் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

**தளவாய்**

மன்னனுக்கு அடுத்தபடியாக தளவாய் உயர்வாகக் கருதப்பட்டார். அமைச்சர் பதவியும், தளபதி பதவியும் இணைந்த பதவி தளவாய் பதவியாகும். இவர் அமைதி காலத்தில் நாட்டின் நிர்வாகப்பணியையும், போர்காலத்தில் படையின் தலைமைப் பொறுப்பையும் ஏற்று வந்தார். குறிப்பாக உள்நாட்டில் அமைதியை நிலைநாட்டும் பொறுப்பும், வெளிநாட்டுக் கொள்கையை உருவாக்கும் பொறுப்பும் இவரிடமே இருந்தது. விசுவ நாதர் காலத்தில் அரியநாதரும் திருமலை நாயக்கர் காலத்தில் இராமப்பய்யர், மங்கம்மாள் காலத்தில் நரசப்பய்யர் ஆகியோர் இப்பதவி வகித்து வந்தனர். இந்த பதவி வகுத்த பெரும்பான்மை தளவாய்களும் அந்தணர்களாக இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பிரதானி**

பிரதாணி அதிகாரிகள் வரிசையில் இரண்டாவது இடத்தைப்பெற்று விளங்கினார். நிதி அமைச்சராகப் பணிபுரிந்த இவர் அரசின் வரவு, செலவை கவனித்ததோடு வருவாய் துறையையும், உள்ளாட்சித்துறையையும் நிர்வகித்து வந்தார்.

**இராயசம்**

அரசின் பிரதம செயலராகப் பணிபுரிந்த இவர் நாட்டின் நிர்வாகத்தைக் கவனித்து வந்தார்.

**அரசுக் கணக்கர்**

அரசின் வரவு செலவு கணக்கை இவர் கவனித்துவந்தார். மிகவும் நேர்மையானவர்கள் இப்பதவியில் அமர்த்தப்பட்டனர்.

**ஸ்தானாதிபதி**

நாட்டின் வெளிநாட்டு விவகாரங்களைக் கவனித்தல், பிறநாடுகளுடன் அரசியல் தொடர்பு கொள்ளுதல், பாளையக்காரர்களுக்கும் மத்திய அரசுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்துவது ஆகியவை இவரது முக்கிய பணிகளாகும்.

பிற அலுவலர்கள்

மேற்குறிப்பிட்ட அமைச்சர் குழு உறுப்பினர்களைத் தவிர திருமந்திர ஓலை நாயகம், அடப்பக்காரன், முதுநிலைப் பணிமக்கள், இளநிலைப் பணிமக்கள் ஆகிய அலுவலர்களும் முக்கிய பணிகளை செய்து வந்தனர். அரசர் வாய்மொழியாகக் கூறும் ஆணைகளை எழுதி வைத்தல் 'திருமந்திர ஓலை நாயகத்தின்' பணியாகும்.

அரசின் கடமைகள்

இந்து சமய காவலர்களாக விளங்கிய நாயக்கர்கள் அதன் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். இந்து சமய வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டாக நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் ஆற்றிய தொண்டை நாயக்கர்கள் கருதினர். எனவே நாயக்கர்களின் நிர்வாகச் சீர்திருத்தங்கள் சமய. சார்புடையவைகளாகக் காணப்பட்டன. நாயக்கர்கள் தங்களது ஆட்சி காலத்தில் இந்து சமய வளர்ச்சிக்காக ஆலயங்கள் கட்டுதல், அவற்றிற்கு மானியங்கள் வழங்குதல், ஆலய நிர்வாகத்திற்கும் வழிபாட்டிற்கும் அந்தணர்களை நியமித்தல், அக்கிரகாரங்கள் அமைத்தல், சத்திரங்கள் அமைத்தல் ஆலயங்களை முறைப்படி பழுதுபார்த்தல் ஆகிய பணிகளில் முழு மூச்சுடன் செயல்பட்டனர். குறிப்பாக நாயக்க அரசர்கள் பிராமணர்களின் மேலாண்மையை ஏற்று வருணாஸ்ரமதர்ம நெறிகளை உறுதிப்படுத்துவதை தங்களது முக்கிய கடமைகளாகக் கருதினர். எனவே இக்காலத்தில் பிராமணர்களின் செல்வாக்கு தமிழகத்தில் பெருகியது.

நாயக்கர்கள் சமயப்பொறையை கடைப்பிடித்தனர். இவர்கள் இந்து சமய வளர்ச்சியில் அதிக அக்கறை காட்டினாலும் பிற சமய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கவில்லை. கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியருக்கும் இக்காலத்தில் பல சலுகைகள் வழங்கப்பட்டன. இக்காலத்தில் விழாக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டன. நவராத்திரி, சித்திரை போன்ற திருவிழாக்கள் ஆடம்பரமாகக் கொண்டாடப்பட்டன.

**வருவாய்த்துறை**

நாயக்கர்கள் ஆட்சி காலத்தில் நிலவரியே நாட்டின் முக்கிய வருவாயாக இருந்துவந்தது. நாயக்கர்கள் காலத்தில் வரிச்சுமை அதிகமாக இருந்தது. நிலவரியைத்தவிர சொத்துவரி, வணிகவரி, தொழில்வரி, கப்பத்தொகை, சாதி சமூக வரிகள், நீதிமன்றம் விதித்த அபராதத் தொகைகள் ஆகியவை அரசின் முக்கிய வருவாயாக இருந்தன. வருவாயின் பெரும்பகுதி போர் செலவிற்காகவும், ஆலயம் கட்டுதல், அரண்மனை பராமரிப்பு, ஆடம்பரச் செலவுகள், நன்கொடைகள், அறப்பணிகள், மக்கள் நல திட்டங்கள் ஆகியவற்றிற்குச் செலவு செய்யப்பட்டன.

**நிதி**

மன்னர்கள் நீதியின் ஊற்றாக விளங்கினர். தலைமை நீதிபதியாக விளங்கிய மன்னன் தர்ம நெறிச் சட்டங்களுக்கு உட்பட்டு நீதியை வழங்கினார். மன்னன் சில முக்கியமான வழக்குகளை மட்டும் விசாரித்து வந்தார். பொதுவாக வழக்குகளைத் தலைநகரில் காணப்பட்ட நீதிமன்றங்கள் விசாரித்து வந்தன. அதில் பல நீதிபதிகள் இருந்தனர். நீதித்துறையில் பிராமணர்கள் நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தனர். எனவே பிராமணர்களின் ஆதிக்கம் நீதித்துறையிலும் மேலோங்கி நின்றது. தல நிறுவனங்களும் நீதிப்பணியைச் செய்துவந்தன. இவற்றைத் தவிர கிராம நீதி மன்றங்கள், சாதி பிரமுகர்கள் அடங்கிய நீதி மன்றங்கள், ஆலய நீதி மன்றங்கள்

ஆகியவை காணப்பட்டன. கிராம நீதிமன்றங்கள் கிராமத்தில் எழும் வழக்குகளையும், சாதி நீதி மன்றங்கள் ஒரு குறிப்பிட்ட ஜாதிக்குள் தோன்றும் வழக்குகளையும், ஆலய நீதிமன்றங்கள் ஆலய நிர்வாகிகளிடையே எழும் பிரச்சினைகளையம் தீர்த்து வைத்தன.

தீர்ப்பு வழங்குவதற்கு முன் சாட்சிகளை விசாரிக்கின்ற பழக்கம் அக்காலத்தில் காணப்பட்டது. தெய்வீக சோதனை முறையும் அக்காலத்தில் கடைபிடிக்கப்பட்டன. குற்றவாளிகளுக்கு வழங்கப்படும் சில தண்டனைகள் நாகரீகத்திற்குப் புறம்பானவைகளாக காணப்பட்டன. கடுமையான தண்டனைகள் வழங்கப்பட்டன. மன்னனுக்கு எதிராகச் செயல்பட்டவர்களும், தேசத் துரோகிகளும் கொலை செய்யப்பட்டனர். மன்னனின் குடும்பத்தைச் சார்ந்தவர் அவருக்கு எதிராக செயல்பட்டால் அவரின் கண்கள் பிடுங்கப்பட்டன. கொடிய குற்றம் விளைவித்தவர் சித்திரவதைச் செய்யப்பட்டனர். சிலர் நாடு கடத்தப்பட்டனர். இவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டன. குற்றவாளிகளை அடைப்பதற்கு ஜெயில்கள் காணப்பட்டன. சிறைத்தண்டனை கொடுமைகயாக இருந்தது. போர் கைதிகள் இழிவாக நடத்தப்பட்டனர். பிரதானி நீதித்துறையின் செயல்முறைகளை கண்காணித்து வந்தார்.

**படை**

நாயக்கரின் ஆட்சியின் சிறப்பு அவர்களின் படையின் தன்மையைப் பொறுத்தும் காணப்பட்டது. நாட்டை ஆண்ட மன்னர்களின் நிலையான படையை வைத்திருந்தாலும் போர் காலங்களின் அவர்கள் பாளையக்காரர்களின் படையை முழுமையாக நம்பியிருந்தனர். நாயக்கர்களின் படையில் பாரம்பரீயப் படைப்பிரிவுகளான காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, ஆகியவை முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. கோட்டைகளைத் தகர்ப்பதற்கு பீரங்கிகள் பயன்படுத்தப்பட்டன. போர்க்கருவிகளாக ஈட்டி, வாள், துப்பாக்கி ஆகியவற்றைப் பயன்படுத்தினர். போருக்குத் தேவையான குதிரைகளை நாயக்கர் போர்த்துக்கீசியரிடமிருந்தும், அரேபியரிடமிருந்தும் பெற்றுக்கொண்டனர். கப்பல்படை அக்காலத்தில் காணப்படவில்லை. நாயக்கர்களின் படைபல குறைவிற்கு இது ஒரு முக்கிய காரணமாகும். போர்காலங்களில் படைவீரர்கள் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். வெற்றி பெறுவதற்கு அவர்கள் போர் நெறியை மீறியும் செயல்பட்டனர். கோட்டைகளை இடித்தல், நகரங்களைச் சூறையாடுதல், சித்திரவதை செய்தல் ஆகியவை நடைமுறையிலிருந்தன. சில போர்கள் பழிவாங்கும் உணர்வுடன் காணப்பட்டன. குறிப்பாக நாயக்கர்கள் தங்களது மைசூர் போரின் போது போர்வீரர்களின் உதட்டையும் மூக்கையும் சேர்த்து துண்டித்து நாகரீகமற்ற முறையில் நடந்ததாக வரலாறு குறிப்பிடுகிறது. அரசியல் சூழ்ச்சிகளும், தேச துரோகச் செயல்களும் அன்றாட பழக்கமாய் இருந்தன. போர் கைதிகள் சித்திரவதை செய்யப்பட்டனர். போரிலிருந்து நாட்டைப்பாதுகாக்க பரிசுகளும், வெகுமதிப் பொருட்களும் கொடுக்கின்ற பழக்கம் அக்காலத்தில் காணப்பட்டது.

மாநில நிர்வாகம்

நிர்வாகம் வசதிக்காக மைய பேரரசு பல மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இது ‘சீமை’ என அழைக்கப்பட்டது. இதை ஆட்சி புரிந்த உயர் அதிகாரிகள் ‘ஆளுநர்கள்’ எனப்பட்டனர். இவர்கள் தளவாயின் ஆணைகளுக்கு உட்பட்டு செயல்பட்டனர். நாயக்கர் ஆட்சி காலத்தில் திருச்சி, திருநெல்வேலி, சத்தியமங்கலம் ஆகிய பகுதிகளை ஆளுநர்கள் ஆட்சிபுரிந்துவந்தனர். ஆளுநர்களுக்குக் கீழ் பெரிய பாளைங்களும், பெரிய பாளையங்களுக்கு கீழ் சிறிய பரளையங்களும் செயல்பட்டுவந்தன. மைய அரசு வலிமை பெற்று விளங்கினாலும் அது மாநில நிர்வாகத்தில் தலையீடு செய்யவில்லை. நீதி வழங்குதல், நிதி வசூலித்தல், இராணுவத்தை பராமரித்தல் ஆகிய மிக முக்கிய அதிகாரங்கள் ஆளுநரிடத்தும் பாளையக்காரர்களிடத்தும் அரசு அளித்திருந்தது. ஆளுநர்கள் மைய அரசுக்கும் பாளையக்காரர்களுக்குமிடையே பாலமாக செயல்பட்டனர்.

## தஞ்சை மராத்தியர்கள்

தஞ்சாவூர் பகுதியை ஆட்சிபுரிய மதுரை நாயக்கர் சொக்கநாதன் ஆளுநராக நியமிக்கப்பட்ட அழகிரி மிககுறுகிய காலத்திற்குள் மதுரையின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திர மன்னராகச் செயல்படத் தொடங்கினார். இவரது அவையில் வெங்கண்ணா என்பவர் கணக்கராகப் பணிபுரிந்து வந்தார். அழகிரியின் ஆட்சியை வெறுத்த இவர் விஜயராகவ மரபை மீண்டும் புதுப்பிக்கத் திட்டமிட்டார். விஜயராகவனின் பேரன் செங்கமலதாஸ் என்பவன் செவிலித் தாயின் உதவியால் காப்பற்றப்பட்டு நாகப்பட்டணத்தில் வாழ்ந்து வருவதைக் கேள்விப்பட்டு அவனை தஞ்சை அரியணையில் அமர்த்த இரகசிய நடவடிக்கைகளை மேற்கொண்டு பிஜப்பூர் சுல்தானின் உதவியை நாடினார். உதவியளிப்பதாக வாக்குறுதியளித்த சுல்தான் ஒரு படையைத் தனது தளபதி வெங்கோஜி (எக்கோஜி)யின் தலைமையில் அனுப்பிவைத்தார். வெங்கோஜி மராட்டிய வீரர் சீவாஜியின் தந்தையான ஷாஜிக்கு மற்றொரு மனைவிக்குப் பிறந்தவர் ஆவார். வெங்கோஜி அழகிரியைத் தோற்கடித்து செங்கமலதாசை தஞ்சை அரியணையில் அமர்த்தினார்.

அரசியல் வரலாறு

வெங்கோஜி (கி.பி.1678 – கி.பி.1684)

வெங்கோஜியின் ஆட்சி கொடுங்கோல் தன்மையுடையதாக இருந்தது. இவன் சுமத்திய வரிக்கொடுமையால் மக்கள் பெரும் துன்பத்திற்குள்ளாயினர். எனவே வெங்கோஜியின் ஆட்சியை மக்கள் வெறுத்தனர். இச்சூழ்நிலையில் கி.பி.1676-ஆம் ஆண்டு சிவாஜி தென்னிந்தியாவின் மீது படையெடுத்து தனது தந்தை ஷாஜியின் கர்நாடக ஜாகிர் சொத்துக்களைப் பகிர்ந்துகொள்வது குறித்து வெங்கோஜியிடம் பேச்சு வார்த்தை நடத்தினார். ஆனால் இப்பேச்சுவார்த்தைச் சச்சரவில் முடிவுற்றது. இவ்வேளையில் தஞ்சையைக் கைப்பற்ற எண்ணிய மதுரை சொக்கநாதர் அப்பகுதி மீது தாக்குதலை மேற்கொண்டார். ஆனால் இவரது முயற்சி படுதோல்வியில்

முடிவுற்றது. தோல்வியடைந்த சொக்கநாதர் மதுரை திரும்பினார். இச்சூழ்நிலையில் கி.பி.1680ஆம் ஆண்டு மைசூர் படைகள் தமிழகத்தின் மீது படையெடுத்து மதுரை நாயக்கருக்குச் சொந்தமானத் திருச்சிக் கோட்டையைத் தாக்கின. மைசூர் படையெடுப்பால் தென் மாநில அரசுகளுக்கு ஆபத்து ஏற்படும் என அஞ்சிய வெங்கோஜியும், கிழவன் சேதுபதியும் சொக்கநாதனுக்கு ஆதரவளித்தனர். இதன் விளைவால் மைசூர் படை துரத்தியடிக்கப்பட்டது. மைசூர் படையைத் தோற்கடித்தபின் தஞ்சை, சேதுபதிபடைகள் மதுரை மீது படையெடுத்து சொக்கநாதரைத் தோற்கடித்தன.

ஷாஜி (கி.பி.1684-கி.பி.1712)

வெங்கோஜிக்குப்பின் அவனது மூத்த மகன் ஷாஜி தஞ்சையை ஆட்சிபுரிந்தான். இவரது ஆட்சிகாலத்தில் தென்னிந்தியாவில் அரசியல் கொந்தளிப்பு நிலவியது. சிவாஜியின் மறைவுக்குப்பின் தக்காணத்தில் படையெடுப்பை மேற்கொண்ட ஔரங்கசீப் தென்னிந்தியாவில் மராத்தியர்களின் ஆதிக்கத்தை அகற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். சிவாஜியின் மூத்த மகன் சாம்பாஜியும் அவனது குடும்பமும் கொலை செய்யப்பட்டனர். ஆனால் சிவாஜியின் மற்றொரு மகனான ராஜராம் செஞ்சிக்குத் தப்பியோடினான். எனவே செஞ்சியைக் கைப்பற்ற ஔரங்கசீப் தனது தளபதியான சுல்பிர்கானை அனுப்பினான். போரில் ஷாஜி தோற்கடிக்கப்பட்டான். ராஜராமிற்கு உதவியளிக்கக்கூடாது எனவும், தனக்கு இருபது லட்சம் ரூபாயும், ஆயிரம் குதிரைகளையும், ஆயிரம் வீரர்களையும் கொடுக்குமாறும் ஷாஜி கட்டாயப்படுத்தப்பட்டார். ஷாஜி இதை ஏற்றுக்கொண்டார்.

இந்து சயமத்தின்பால் அதிக அக்கரை கொண்ட ஷாஜி கிறிஸ்தவ சமயத்தினரைக் கொடுமைப்படுத்தினான். கிறிஸ்தவர்கள் தனிவரி கட்டுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். கிறிஸ்தவர்களை நாட்டை விட்டு வெளியேற ஆணை பிறப்பித்ததோடு மதுரையை ஆட்சி புரிந்து வந்த மங்கம்மாளுக்கும், பிற சிற்றரசர்களுக்கும் எதிரான இவனது செயல்பாட்டை அக்கால சான்றுகள் எடுத்தியம்புகின்றன.

இவனது ஆட்சி காலத்தில் கலை இலக்கியம் ஆகியவை வளர்ச்சியுற்றன. இராமபத்ர தீட்சதர், அப்பாகவி ஆகியோர் இவரால் ஆதரிக்கப்பட்டனர். சமய பொறை இன்மையும், தீய பண்பும் இவனது பெயர் மங்கக் காரணமாயிருந்தன.

முதலாம் சரபோஜி (கி.பி.1712 – கி.பி.1728)

ஷாஜிக்கு வாரிசு இல்லாமல் கி.பி.1712ஆம் ஆண்டு இறந்தன. அவனுக்குப்பின் அவனது சகோதரன் சரபோஜி நாட்டை ஆட்சி புரிந்தான். இவனது ஆட்சி காலத்தில் இராமநாதபுரத்தில் மறவர் நாட்டில் வாரிசுரிமை சிக்கல் ஏற்பட்டது. சேதுபதியின் மறைவுக்குப்பின்னர் இந்நாட்டில் எழுந்த அரசுரிமை சிக்கலின் விளைவால் நாடு ஐந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டு ஐந்து புதிய அரசுகள் தோன்றின. இந்த சிக்கலின் தலையீடு செய்த சரபோஜி பாம்பாற்றுக்கு

வடக்கேயுள்ள பகுதிகளைக் கைப்பற்றி தனது அரசை விரிவுபடுத்தினான். எனினும் இவனது ஆட்சி வரலாற்றில் முக்கியத்துவம் பெற்று விளங்கவில்லை.

துக்கோஜி (கி.பி.1728-கி.பி.1736)

முதலாம் சரபோஜி வாரிசு இன்றி இறக்கவே நாட்டில் அரியணைச் சிக்கல் எழுந்தது. இவ்வேளையில் காட்டுராஜா என்பவன் கிளர்ச்சி செய்து அரியணையைக் கைப்பற்றிக் கொண்டான். இவன் சரபோஜிக்கு முறை தவறி பிறந்த மகன் ஆவான் சில நாட்களுக்குள் இவன் தூக்கி எறியப்பட்டான். அதன்பின் சரபோஜியின் சகோதரனும், வெங்கோஜியின் மூன்றாவது மகனுமான துக்கோஜி கி.பி.1728ஆம் ஆண்டு அரியணை ஏறினான். இவரது ஆட்சி காலத்தில் மராத்திய அரசியலில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்தன. இவன் இராமநாதபுரத்திற்கு எதிராக போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டதன் விளைவாக தனது நாட்டின் வடபகுதி முழுவதையும் இழக்க நேரிட்டது. இவனது திறமையின்மையால் நாடு வீழ்ச்சிப்பாதையை நோக்கி சென்று கொண்டிருந்தது. கல்வி அறிவில் சிறந்து விளங்கிய இவன் ‘சங்கீத சாரம்’ என்ற நூலை இயற்றினான்.

பிரதாப் சிங் (கி.பி.1739-கி.பி.1763)

துக்கோஜிக்குப்பின் நாட்டில் அரியணைச் சிக்கல் எழுந்தது. இதில் துக்கோஜியின் முறையான வாரிசுகள் பாபாசாகிப், சயாஜி மற்றும் முறையற்ற பிள்ளை பிரதாப்சிங், சரபோஜிக்கு முறைகேடாகப் பிறந்த காட்டு ராஜா ஆகியோர் பங்கெடுத்தனர். இதில் பிரதாப்சிங் வெற்றிபெற்று நாட்டை ஆட்சிபுரிந்தான். இவரது ஆட்சிகாலத்தில் அரசியலில் குழப்பங்கள் மலிந்து காணப்பட்டன. ஆற்காடு நவாப், சந்தாசாகிப் ஆகியோரின் படையெடுப்பால் தஞ்சை நிலைதடுமாறியது. சந்தாசாகிப்பின் பிடியிலிருந்து விடுபட எண்ணிய பிரதாப்சிங் ஆங்கிலேயரின் உதவியை நாடினான். நடைபெற்ற போரில் சந்தாசாகிப் வஞ்சகமாக கொலை செய்யப்பட்டான்.

துல்ஜாஜி (கி.பி.1763-கி.பி.1797)

பிரதாப் சிங்க்கு பின் துல்ஜாஜி தஞ்சை அரசை ஆட்சி புரிந்தான். இக்காலத்தில் மைசூரை ஆட்சிபுரிந்துவந்த ஹைதர் அலியும், திப்புசுல்தானும் தஞ்சை அரசை அச்சுறுத்தி வந்தனர். அவர்களைத் திருப்திப்படுத்த ஏராளம் பொன்னையும் பொருளையும் துல்ஜாஜி அளிக்க வேண்டியிருந்தது.

துல்ஜாஜி தனது ஆட்சி காலத்தில் இராமநாதபுரத்தின் மீதும், தொண்டைமான் அரசின் மீதும் படையெடுத்தான். இவரது இராமநாதபுரம் படையெடுப்பு வெற்றியைக் கொடுத்தாலும், தொண்டைமான் அரசிற்கு எதிரான நடவடிக்கை தோல்வியை அளித்தது. இச்சூழ்நிலையில் ஏற்பட்ட மைசூர் சுல்தானின் அச்சுறுத்தலும், முகமது அலியின் தஞ்சைப் படையெடுப்பும் அரசை நிலைதடுமாறவைத்தன. நாட்டின் பெரும் செல்வம் இவர்களால் சூறையாடப்பட்டன. நிலைமையை சமாளிக்க துல்ஜாஜி ஆங்கிலேயரின் துணையை நாடினான்.

தஞ்சை மராட்டியர் ஆட்சியின் விளைவு – ஆட்சிமுறை

மராட்டியர்கள் கி.பி.1676-ஆம் ஆண்டு முதல் கி.பி.1856ஆம் ஆண்டுவரை தமிழகத்தின் மிகச் செழிப்பு மிக்க பகுதியான தஞ்சையை ஆட்சிபுரிந்துவந்தனர். கொடுங்கோல் தன்மை கொண்ட இவரது ஆட்சி காலத்தில் பெரும் இன்னல்களுக்குள்ளாயினர். இவர்கள் ஆடம்பர வாழ்க்கையிலும், சிற்றின்பத்திலும் மூழ்கிக் காணப்பட்டதால் நாட்டின் நிர்வாகத்தை உயர்மட்ட பிராமணர்கள் கவனித்துவந்தனர். எனவே மன்னனுக்கும் மக்களுக்கும் இடையேயான உறவு துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. அதிகாரிகளின் ஏதேச்சதிகாரப்போக்கும், நாட்டில் அடிக்கடி நடைபெற்ற போர்களும், ஆங்கிலேயரின் பொருளாதாரச் சுரண்டல் கொள்கையும் மக்களை நிலைதடுமாறவைத்தன.

மராட்டியர்கள் அன்னியராக இருப்பினும் தங்களது ஆட்சி முறையில் வியத்தகு மாற்றம் எதையும் இவர்கள் கொண்டுவரவில்லை. மாறாக தொன்று தொட்டு நிலவிவந்த நிர்வாகமுறை ஒருசில மாற்றங்களுடன் இக்காலத்தில் அமல்படுத்தப்பட்டு வந்தது. மைய அரசில் அரண்மனை புரோகிதம், அமைச்சர், படைத்தலைவரான தளவாய், வருவாய்த்துறை கண்காணிப்பாளரான திவான் முதலியோர் இருந்தனர். இந்த அரசு அதிகாரிகளின் அதிகாரங்களால் வரன்முறை செய்யப்பட்டிருந்தது.

கர்நாடகம், இராமநாதபுரம் ஆகிய பகுதிகளைப் போன்று தஞ்சையும் ‘சமஸ்தானம்’ என அழைக்கப்பட்டது. சமஸ்தானம் நிர்வாக வசதிக்காகப் பட்டுக்கோட்டை, மன்னார் குடி, கும்பகோணம், மாயாவரம், திருவடி என ஐந்து சுபாக்களாக பிரிக்கப்பட்டிருந்தன. மேலும் சுபாக்கள் சீமைகளாகவும், மாநிலங்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இக்காலத்தில் 5753 கிராமங்கள் காணப்பட்டதாக சான்றுகள் குறிப்பிடுகின்றன.

நிலவரி

அரசின் முக்கிய வருவாய் நிலவரியும், சுங்கவரியுமாகும். பொருட்களின் மதிப்பு பணம் செலுத்தும் தூரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரி விதிக்கப்பட்டன. கடற்கரைப்பகுதி ஐரோப்பியர்களின் ஆதிக்கத்தின் கீழ் காணப்பட்டதால் அரசர்கள் உள்நாட்டுப் பொருட்களான சாராயம், செங்கல், முத்துத் துறைமுகங்கள் ஆகியவற்றிலிருந்து சுங்க வரியைப் பிரித்தன. சுங்கம் வசூலிக்க அரசு குத்தகை முறையைப் பின்பற்றியது. நிலத்தில் நெல் பயிரிடப்பட்டதும் அரசு அதை மதிப்பீடு செய்தது. அறுவடையானதும் நெல்லை விற்க உழவர்கள் அனுமதிக்கப்பட்டனர். விலையின் பட்டியலை அரசு அலுவலர் பதிவேட்டில் குறித்துக் கொண்டனர். வாரச்சந்தைகளில் விலையை அறிய ஒற்றர்கள் பயன்படுத்தப்பட்டனர். குத்தகைக்காரர்களின் கருத்தையும் அதிகாரிகள் சேகரித்தனர். இவற்றின் அடிப்படையில் வரி நிர்ணயிக்கப்பட்டது.

நிலவருவாய் மதிப்பீடு காலத்திற்குக் காலம் மாறியதால் குடியானவர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய பங்கின் அளவும் அடிக்கடி மாறியது. குறிப்பாக

உழவர்கள் அரசுக்குச் செலுத்த வேண்டிய பங்கையும், தாங்கள் வைத்துக் கொள்ளவேண்டிய பங்கையும் அரசே நிர்ணயித்தது. குறிப்பாக தஞ்சை அரசை ஆட்சிபுரிந்த துக்கோஜி தனது ஆட்சி காலத்தில் பிராமணர்கள் தம்பங்காக 37½ விழுக்காடும், அமர்சிங் 40 விழுக்காடும் நிர்ணயித்தனர். மக்களிடமிருந்து வரியை வசூலிக்க அதிகாரிகள் கொடுமையான முறையைப் பின்பற்றினர். வரிக்கொடுமையால் மக்கள் அவதியுற்றனர். மக்களிடமிருந்து பிரிக்கப்பட்ட வரித் தொகைக்கான கணக்கை வைத்துக்கொள்ளும் பழக்கம் அக்காலத்தில் காணப்படவில்லை. எனவே கீழ் மட்டம் முதல் மேல்மட்டம் வரை இலஞ்சமும் ஊழலும் மலிந்து காணப்பட்டது.

அரசு தனது வருவாயின் பெரும் பகுதியைப் படைச் செலவிற்காகவும், திறை செலுத்துவதற்காகவும் பயன்படுத்தியது. போரின் தன்மை, தேவைக்கேற்ப மக்களிடமிருந்து மித மிஞ்சிய தொகை வலுக்கட்டாயமாக வசூலிக்கப்படவில்லை. எனவே அவர்கள் தங்களின் தேவைகளுக்காக கொள்ளையடிப்பதில் தங்களை ஈடுபத்திக்கொண்டனர்.

நீதி

அநீதியும், பஞ்சமும், ஊழலும் தஞ்சை நாயக்கர்கள் காலத்தில் மலிந்து காணப்பட்டன. எனவே அராஜகம் தலைதூக்கியது. நிலைமையைச் சீர்படுத்தி சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட எண்ணிய சுவார்ட்ஸ் என்ற கிறிஸ்தவ பாதிரியார் தனது தீவிர முயற்சியால் நீதிமன்றம் ஒன்றை அமைப்பதில் வெற்றிக்கண்டார். இந்நீதிமன்றத்தில் ஐந்து நீதிபதிகள் காணப்பட்டனர். இவர்களுள் பெரும்பாலோர் பிராமணபண்டிதர்கள். இந்நீதிமன்றம் அமர்சிங் ஆட்சி காலத்தில் தோற்றுவிக்கப்பட்டது எனது குறிப்பிடத்தக்கது. இந்நீதிமன்றம் தினமும் கூடி சாத்திரங்களின் அடிப்படையில் வழக்குகளை விசாரித்தன. வழக்குகளின் முடிவுகள் திறந்த மன்றத்தில் படித்துக்காட்டப்பட்டன. இந்நீதி மன்றத்தின் செயல்முறைகளை ஓலைச் சுவடிகள் மூலமாக நாம் தெரிந்து கொள்ளலாம். இக்காலத்தில் மாவட்டங்களிலும் நீதிமன்றங்கள் செயல்பட்டுவந்தன. இந்நீதிமன்றத்தின் செயல்முறைகளை ஒவ்வொரு மாதமும் அரசருக்குத் தெரிவித்துவந்தனர். இந்நீதிமன்றமும் அரசரின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. நீதிமன்றத்தின் தீர்ப்புக்களை மாற்றுகின்ற அதிகாரம் அரசனுக்கு இருந்தது. எனவே மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் அடிக்கடி மாற்றி அமைக்கப்பட்டன. நீதி வழங்குவதில் பணம் ஜாதி ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டன. பொதுவாக அக்கால நீதிமன்றங்கள் லஞ்ச ஊழலில் மிதந்து காணப்பட்டன.

கிராம நிர்வாகம்

தஞ்சை மராத்தியர்கள் ஆட்சி காலத்தில் கிராமங்கள் தன்னிறைவு பெற்று சுயேச்சையாக விளங்கின. இங்கு தொன்றுதொட்டு நிலவி வந்த நிர்வாகம் காணப்பட்டது. ஒவ்வொரு கிராமத்திலும் கிராம சபை ஒன்று காணப்பட்டது. இதில் கிராமத் தலைவரும் அவருக்குத் துணையாக அலுவலர்களும் காணப்பட்டனர்.

கிராம சபையில் காணப்பட்டவர்கள் பெரும்பாலும் உயர்குடியைச் சேர்ந்த முதியவர்கள் ஆவார்கள். கிராமத்தலைவரின் அன்றாட நிர்வாகத்தில் கணக்கரும், காவல்காரர்கள் செய்துவந்தனர். கிராம அலுவலர்களின் ஊதியத்தையும் இச்சபையே அளித்துவந்தது. பொதுவாக கிராமத்தலைவர் கிராமத்திற்கும் அரசுக்குமிடையே இணைப்பை ஏற்படுத்தும் பாலமாக செயல்பட்டு வந்தார். சில முக்கிய பிரச்சினைகளைக் கிராமத்தலைவர்கள் தங்களுக்குள்ளே கலந்து ஆலோசித்து முடிவெடுத்தனர். குறிப்பாக பயிரிடும் காலத்தில் குளத்தில் உள்ள நீரைத் தங்களது தேவைக்கு ஏற்றவாறு அரசின் தலையீடு இன்றி பங்கீடு செய்து கொண்டன. அக்கால கிராமங்களின் செயல்பாட்டைத் தெரிந்து கொள்ள சான்றுகள் பெரிதும் துணைபுரிகின்றன. அக்கால நகரங்களில் அந்தணர்களின் செல்வாக்கு மேலோங்கி நின்றது. இவர்கள் நிர்வாகத்தின் அனைத்து துறைகளிலும் தங்களது ஆதிக்கத்தைச் செலுத்திவந்தனர்.

**கலை, இலக்கியம்**

மராத்தியர்கள் ஆட்சி காலத்தில் கலை, இலக்கியம் ஆகியவையும் வளர்ச்சியடைந்தன. இக்கால அரசர்களின் ஆட்சி காலத்தில் சமஸ்கிருத, மராட்டிய மொழிகளை ஆதரித்தனர். கல்வி கேள்விகளில், சிறந்து விளங்கிய ஷாஜி, துக்கோஜி, சரபோஜி போன்ற அரசர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு பேராதரவளித்தனர். பல இலக்கிய மேதைகளும், அறிஞர்களும் அயல்நாடுகளிலிருந்து வரவழைக்கப்பட்டனர். இதன் விளைவால் வடமொழியில் உரை நூற்களும், காப்பியங்களும், நாடகநூற்களும் உருவாக்கப்பட்டன. தற்கால பதஞ்சலி என்று அழைக்கப்பட்ட இராமபத்திரதீச்சிதரும், பாஸ்கர தீச்சிதரும் இக்காலத்தில் வாழ்ந்த சிறந்த புலவர்களாவார்கள். இக்காலத்தில் வாழ்ந்த அலூரிகுப்பண்ணா ஒரு சிறந்த புலவர் ஆவார். இவர் ஆந்திர காளிதாசர் என அழைக்கப்பட்டனர்.

இக்கால அரசர்கள் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் போதிய ஆதரவளிக்கவில்லை. ஆல் அக்கால மடங்கள் தமிழ் மொழியைப் பேணின. அக்காலத்தில் வாழ்ந்த தமிழ் புலவர்களுள் திருவாரூர் வைத்திய நாததேசிகர், வேதாரண்யம், தாயுமானவர், சுவாமிநாத தேசிகர், சீர்காழி அருணாசலக்கவிராயர் ஆகியோர் குறிப்பிடத்தக்க தமிழ் புலவர்களாவார்கள். இவர்கள் தலபுராணங்களையும், பக்திப்பாடல்களுக்கு உரை நூற்களையும் படைத்தன.

**பாளையங்களின் செயல்முறைகள்**

விஜயநகரப் பேரரசை கிருஷ்ண நாயக்கர் ஆட்சி புரிந்தபோது தனது ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த தமிழ் மாநிலங்களை நிர்வகிக்க அரியநாதரை ஆளுநராக நியமித்தார். இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளாட்சிப் பிரிவுகளுக்கு ‘பாளையங்கள்’ என்று பெயர். இடைவிடாத முஸ்லீம்களின் படையெடுப்பும், சமூக, சமய, அரசியல் அடிப்படையில் உள்நாட்டில் தோன்றிய கலகங்களும் பாளையங்கள் தோன்ற வழிவகுத்தனர். போர் காலத்திலும், அமைதிக்காலத்திலும் நிலையான

ஆட்சியை அளிக்கக் கூடியதாக பாளையங்கள் செயல்பட்டதால் இந்த ஆட்சி முறைக்கு அரசு அதிக முக்கியத்துவம் அளித்தது.

தமிழகத்தில் அமுல்படுத்தப்பட்ட பாளயப்பட்டு முறை காக்கதீய நாட்டை ஆண்ட இரண்டாம் பிரதாபருத்திரன் கடைப்பிடித்து வந்த பாளையப்பகுப்பு நெறிகளையும், ஆட்சி முறைகளையும் அடிப்படையாகக் கொண்டு தோற்றுவிக்கப்பட்டவைகளாகும். இம்முறை இடைக்கால ஐரோப்பாவில் நிலவிய நிலமானிய முறையோடு ஒப்பிடப்பட்டுள்ளது. தமிழகத்தில் நிலவிய அரசியல், பொருளாதாரம், இராணுவம் ஆகிய துறைகளைச் சீரமைப்பது இம்முறையின் முக்கிய நோக்கம் ஆகும்.

நாயக்கர்களின் பேரரசு திருநெல்வேலி, மதுரை, திருச்சி, இராமநாதபுரம், கோயம்புத்தூர், சேலம், ஆகிய தற்கால மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியது. இப்பேரரசு நிர்வாக வசதிக்காக எழுபத்தி இரண்டு பாளையங்களாகப் பிரிக்கப்பட்டு பாளயக்காரர்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. இப்பாளையங்களுள் பாஞ்சாலங்குறிச்சி, சிவகிரி, எட்டயபுரம் ஆகியவை வரலாற்றுச் சிறப்புற்று விளங்கின.

பாளையங்கள் அவைகள் காணப்பட்ட இடத்தின் தன்மையைப் பொறுத்து கன்னட, தெலுங்கு, தமிழ் பாளையங்கள் என மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. அக்காலத்தில் நிலவிய பாளையங்கள் அனைத்தும் பரப்பளவில் ஒன்றுபோல் காணப்படவில்லை. அவைகள் தன்மையிலும் அளவிலும் மாறுபட்டு காணப்பட்டன. இப்பாளையங்களை நிர்வகித்த பாளையக்காரர்கள் அதிக வலிமை பெற்று விளங்கினர். இராணுவம், காவல்துறை ஆகியவற்றைப் பாதுகாப்பு கருதி பராமரித்து வந்த இவர்கள் நிதி நிர்வாகத்தைத் தங்களது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தனர். பாளையங்களில் காணப்பட்ட விவசாய நிலங்களை இவர்கள் பள்ளர்களின் துணைகொண்டு பயிரிட்டனர். இவர்களுக்கு ஊதியமாக தானியம் வழங்கப்பட்டது. அக்காலத்தில் காணப்பட்ட பாளையங்களில் சில மலைப்பகுதிகளிலும் காட்டுப்பகுதிகளிலும் காணப்பட்டன.

**பாளைய நிர்வாகம்**

பாளையங்களின் நிர்வாகத்தை நடத்திவந்த பாளையக்காரர்கள் நிலையான ஒரு இராணுவத்தை வைத்திருந்தனர். நிலவரி, சுங்கவரி ஆகியவற்றை வசூலித்துவந்த இவர்கள் பாளையங்களின் சட்டம் ஒழுங்கு ஆகியவற்றை நிலைநாட்டினர். ஒழுங்கை நிலை நாட்டுவதற்கான இராணுவம், நீதியை நிலை நாட்டுவதற்கான நீதிமன்றம் ஆகியவை பாளையக்காரர்களின் அதிகார வரம்பிற்குள் உட்பட்டிருந்தது. நிர்வாகத்தில் பாளையக்காரர்களுக்கு தளவாய் இராணுவ அதிகாரி ஆகியோர் உறுதுணையாக இருந்தனர். ஆடம்பர வாழ்க்கை நடத்திய இவர்கள் குதிரை, யானை, ஒட்டகம், பல்லக்கு ஆகியவற்றில் பயணம் செய்தனர்.

**வருவாய்**

பாளையக்காரர்கள் நிதி நிர்வாகத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். நிலத்திலிருந்து கிடைத்த நிலவரி, பாளையக்காரர்களின் சொந்த உடைமைகளிலிருந்து கிடைத்த வருவாய், சுங்கவரி, காவல் கடன் ஆகியவை அரசின் முக்கிய வருவாய் ஆகும். நிலவரி வசூலிப்பதற்கு வசதியாக நிலம் அதன் தன்மையைப் பொறுத்து நன்செய் எனவும், புன்செய் எனவும் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டு அதன் தன்மையைப் பொறுத்து வரிகள் விதிக்கப்பட்டன. அதைப்போன்று நஞ்செய்நிலமும் அதன் செழிப்பை பொறுத்து Kirsul, Sheval, Pottal, and Veppal என நான்கு வகைகளாகப் பிரிக்கப்பட்டு அதன் தன்மைகளுக்கேற்ப வரிகள் விதிக்கப்பட்டன. குறிப்பாக செழிப்பு அதிகமாகக் காணப்பட்ட நிலங்களுக்கு அதிக வரியும், செழிப்புக் குறைவான பகுதிகளுக்குக் குறைந்த வரியும் விதிக்கப்பட்டன. அதிகாரிகள் வரியை வசூலித்து பாளையக்காரர்களிடம் ஒப்படைத்தனர். மொத்த வருவாயில் மூன்றில் ஒரு பங்கு பாளையக்காரர்களின் சொந்த செலவிற்கெனவும் ஒதுக்கப்பட்டன. பாளையக்காரர்கள் தங்களது வருவாயின் ஒரு பகுதியை நாட்டின் நலனுக்கென செலவு செய்தன. இதற்கு பொதுச் செலவு என்று பெயர் பாளையக்காரர்களின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்த படை தேவைப்படும்போது மன்னனுக்கு அளிக்கப்பட்டு வந்தது. நாட்டை ஆண்ட மன்னன் போர்களில் வெற்றிபெற பாளையக்காரர்கள் அளித்த படை பேருதவியாய் இருந்தது.

**காவல் முறை**

பாளையக்காரர்களின் நிர்வாகத்தில் இடம் பெற்றுள்ள ஒரு சிறப்பு அம்சம் 'காவல் முறை' ஆகும். ஒவ்வொரு பாளையத்தின் கீழும் பல்வேறு கிராமங்கள் காணப்பட்டன. இக்கிராமங்களின் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றை பாதுகாக்க அமுல்படுத்தப்பட்ட முறைக்கு 'காவல் முறை' என்று பெயர். காவல்காரர்கள் நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டனர். அவர்கள் அரசு காவல்காரர்கள், நாடு காவலர்கள், தேசக்காவல்காரர்கள், தலம் காவல்காரர்கள் எனப்பட்டனர். இவற்றுள் அரசு காவல்காரர்கள் அரசு உடைமைகளையும், நாடு காவல்காரர்கள் மாவட்டத்தையும், தேசக் காவலர்கள் பிராந்தியப் பகுதிகளையும் தலம் காவல்காரர்கள் கிராமத்தையும் பாதுகாத்துவந்தனர். காவல்காரர்கள் மிகவும் பொறுப்புடன் செயல்பட்டனர். ஒரு திருட்டு நடைபெற்றால் அத்திருட்டு எங்கு நடைபெற்றதோ அவ்விடத்தைக் காவல் புரிந்தவர்கள் அதற்கு பொறுப்பாவார்கள். அக்காவலர்களால் திருட்டு பொருட்களைத் திரும்பப் பெற முடியவில்லையென்றால் அதற்கான தொகையை அவர்களே உரியவர்களுக்கு வழங்க வேண்டுமென்ற முறை நிலவியிருந்தது. திருட்டு பொருட்களைத் திரும்பக் கைப்பற்றிய காவல்காரர்கள் வெகுமதிகள் அளித்து ஊக்குவிக்கப்பட்டனர். கன்வர்களைப் பிடிப்பதற்கு அக்காலத்தில் நிலவிலிருந்தது. இதனால் களவுத் தொழில் புரிந்துவந்த கள்ளர்களும், மறவர்களும் அதிக அளவில் காவலர்களாக நியமிக்கப்பட்டனர்.

சிறப்புற்று விளங்கிய இந்த காவல் முறை முஸ்லீம்களின் படையெடுப்பின் விளைவால் அதன் முக்கியத்துவத்தை இழந்தது. காவல்முறை அகற்றப்பட்டதால் ஏராளம் காவல்காரர்கள் வேலைகளை இழந்தனர். எனவே இம்முறையை மீண்டும் அமுல்படுத்த அவர்கள் அரசிடம் முறையிட்டனர். இதன் விளைவால் காவல்முறை மீண்டும் பாளையங்களின் கொண்டுவரப்பட்டது.

**படை**

பாளையக்காரர்கள் ஒரு நிலையான படையை வைத்திருந்தனர். இப்படை மன்னனுக்கு நாட்டை பாதுகாக்கவும், பாளையங்களில் காணப்பட்ட காவல்காரர்களைப் பாதுகாக்கவும் பயன்படுத்தப்பட்டது. பாளையக்காரர்களின் படையில் மூன்று பிரிவைச் சார்ந்த படைவீரர்கள் காணப்பட்டனர். அவர்கள் அமரும் படை கட்டைபிடி படை, கூலிப்படை எனப்பட்டனர். இவர்களுள் அமரும் படை வீரர்கள் பரம்பரை பரம்பரையாகத் தெரிவுசெய்யப்பட்டனர். இப்படைவீரர்கள் சர்தாரின் ஆணைக்குட்பட்டு செயல்பட்டனர். கட்டைபிடி படைவீரர்கள் கையில் ஒரு தடியுடன் காவல் புரிந்து வந்தனர். கூலிப்படைவீரர்கள் தேவைப்படும்போது மட்டும் பயன்படுத்தப்பட்டனர். படை வீரர்களுக்குப் போதி பயிற்சி அளிக்கப்பட்டது. இவர்கள் அம்பு, வில், உப்புக்கட்டைகள், கேடயம், வாள், நாட்டு பீரங்கிகள் ஆகியவற்றை ஆயுதங்களாக பயன்படுத்தினர். வலை தடி என்ற ஆயுதத்தை பாளையக்காரர்களும், காவல்காரர்களும் பொதுவாக பயன்படுத்தினர். பாதுகாப்பிற்காக பாளையக்காரர்கள் மண்கோட்டைகளைக் கட்டினர். நாட்டில் நிலவிய உள்நாட்டு நிலமையை உடனுக்குடன் அறியவும், அன்னியநாட்டுப் படைகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கவும் திறமைமிக்க ஒற்றர் படை ஒன்று செயல்பட்டுவந்தது.

ஒற்றர்களாக பிராமணர்கள் அதிகமாக ஈடுபடுத்தப்பட்டனர். இவர்கள் மக்களிடையே தங்கு தடையின்றி சுற்றித்திரிந்து செய்திகளைச் சேகரித்து காகிதம் அல்லது பனைஓலையில் எழுதி அரசுக்குத் தெரியப்படுத்தினர். பாளையக்காரர்கள் ஆட்சியில் பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டாலும் அமைதியற்ற அக்காலத்தில் மக்களைப் பாதுகாத்து அமைதியை நிலை நாட்டியதில் பாளையக்காரர்கள் சமூகத்திற்கு ஆற்றிய தொண்டினை எவரும் மறுக்க இயலாது.

**தல ஆட்சி (கிராமநிர்வாகம்)**

பண்டைத்தமிழகத்தில் சிறப்புற்று விளங்கிய ஊர், மகாசபை, நகரம் ஆகியவற்றின் சுயாட்சிமுறை விஜய நகரப்படையெடுப்பின் விளைவால் தமிழ் மண்ணைவிட்டு மறைந்தது. இதற்குப் பதிலாக ஆயன்கர்முறை அறிமுகப்படுத்தப்பட்டது. நாயக்கர் ஆட்சி காலத்தில் நிர்வாக வசதிக்காக நாடு, மாநிலங்களாகவும், மாநிலங்கள், பாளையங்களாகவும், பாளையங்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டு ஒழுங்காக நிர்வகிக்கப்பட்டு வந்ததாகக் கல்வெட்டு சான்றுகள் குறிப்பிடுகின்றன. பலகிராமங்களைக் கொண்ட பகுதி ‘மாகாணம்’ ‘சீமை’

என்ற பெயர்களால் அறியப்பட்டு வந்தன. அக்காலத்தில் கிராமங்கள் மங்கலம், சமுத்தரம், குடி, ஊர், புரம், குலம், குற்ச்சி, பட்டி என பல பெயர்கள் அறியப்பட்டு வந்தன. கிராமங்களில் காவல் நீதிநிர்வாகம் ஆகியவற்றை கர்ணம், மணியக்காரன், தலையாரி முதலிய ‘கிராம அதிகாரிகள் நிர்வகித்து வந்தனர். கர்ணம் கிராமத்தின் வரிக் கணக்கு, நிலக் கணக்கு ஆகியவற்றைப் பராமரித்து வந்ததோடு கிராமத்தின் எல்கை, நிலப்பரப்பு, தோட்டங்கள், தோப்புகள், இறையிலி நிலங்கள் காடு, இடுகாடு, சுடுகாடு, குளம், கிணறு, வாய்க்கால் முதலியவற்றையும் பராமரித்து வந்தார். கிராம மக்களிடமிருந்து வரியை வசூலிக்கும் பொறுப்பு மாணியக்காரரிடம் இருந்தது. கிராமங்களில் வசூலிக்கப்பட்ட வரித்தொகை அரசு சாவடிகளில் செலுத்தப்பட்டன. பின்னர் அவை மாகாணத் தலைவர் மூலம் நாட்டுக் கருவூலத்திற்கு அனுப்பப்பட்டது. விளைச்சலில் பாதியை நிலவரியாக அரசு பெற்று வந்தது. என பாதிரியார்களின் கடிதங்கள் குறிப்பிடுகின்றன. நிலவரி பணமாகவும், பொருளாகவும் பெற்றுக்கொள்ளப்பட்டன. இவ்வரிக் கொடுமையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். வருவாயின் பெரும்பகுதி படைக்காகவும், சமய பணிகளுக்காகவும், பொது நலப் பணிகளுக்காகவும் அரசு ஊழியர்களின் சம்பளத்திற்காகவும் செலவிடப்பட்டன. கிராமத்தைப் பாதுகாக்கின்ற பொறுப்பு தலையாரியிடம் இருந்தது. இவர் மக்களைக் கொள்ளைக்காரர்களிடமிருந்தும் அன்னியப் படையெடுப்பிலிருந்தும் பாதுகாத்தார்.

**சமுதாய நிலை**

கி.பி.14-ஆம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து நடைபெற்ற அன்னியப் படையெடுப்புகளாலும், உள்நாட்டு பூசலாலும் தமிழக வரலாற்றில் விஜய நகர பேரரசுக் காலம் தொட்டே சமுதாய வாழ்வில் வியத்தகு மாற்றங்கள் நிகழ்ந்தன. இக்காலத்தில் ஏற்பட்ட சாதி, உட்சாதிப் பெருக்கமும் அதனால் ஏற்பட்ட பூசல்களும் சமுதாயத்தை பலவீனப்படுத்தின. சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு சமுதாயத்தினரிடையே ஏற்பட்ட பூசல்களை மன்னன் மிக அக்கறையுடன் தீர்த்து வைத்தாக பட்டயங்கள் குறிப்பிடுகின்றன. பொதுவாக நாயக்கர் கால சமூக வாழ்க்கையை பற்றி அறியபோதிய சான்றுகள் இல்லாமையால் அக்கால சமுதாய அமைப்பு பற்றி தெளிவாக அறிய முடியவில்லை. இருப்பினும் பிறப்பிலும், வளர்ப்பிலும், இறப்பிலும் நாயக்கர்கள் வைதீக இந்துக்களாக விளங்கியதால் பழங்கால ஜாதிமுறைக்கு அவர்கள் அதிக ஊக்கமளித்திருக்க கூடும் என நாம் கருதுகிறோம். இக்காலத்தில் சமூக மாற்றத்திற்கு ஏற்றவாறு புது சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் அவை நடைமுறையிலிருக்கும் சட்டங்களுக்கு எதிராக ஒருபோதும் செயல்படுத்தப்படவில்லை.

**பிராமணர்கள்**

விஜயநகர அரசர்களைப் போன்று நாயக்கர்களும் வர்ணாஸ்ரம் தர்மத்தை நிலைநாட்டுவதை தங்களது கடமையாகக் கொண்டு செயல்பட்டதால் சமூகத்தில் பிராமணர்களின் ஆதிக்கம் பெருகியது. சமூகத்தில் உயர்வாகக் கருதப்பட்ட

இவர்கள் பல சிறப்பு சலுகைகளையும், உரிமைகளையும் அனுபவித்து வந்தனர். பிராமணர்களுக்கு பிரம்மதான நிலங்களை வழங்குவதை மன்னன் தர்மமாக கருதினான். இக்காலத்தில் பிராமணர்களின் குடியேற்றம் பெருகியதால் அக்கிர காரங்களின் எண்ணிக்கையும் பெருகிக் கொண்டே சென்றது. மன்னனின் ஆதரவைப் பெற்ற இவர்கள் அரசியல் உயர் பதவிகளை வகித்து வந்தனர். பொதுவாக தளவாய், பிரதானி, ராயசம், புரோகிதர், ஆலய நிர்வாகம் போன்ற முக்கியமான பதவிகளை வகித்தவர்கள் பிராமணர்களாகவே இருந்தனர். தங்களது குலத்தொழிலாகிய வேதம் ஓதுதல், யாகம் செய்தல், ஆலய வழிபாடு நடத்துதல் ஆகியவற்றைப் பிராமணர்களே செய்து வந்தனர். சமூகத்தில் உயர்நிலையில் காணப்பட்ட பிராமணர்கள் பிற ஜாதியினரை இழிவாக நடத்தியதால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டு விரிசல்கள் ஏற்பட்டன. இது சமூகத்தில் தீய விளைவுகளை ஏற்படுத்தியது.

கைக்கோலர்

நாயக்கர் ஆட்சி காலத்தில் கைக்கோலர் என்ற பிரிவினர் சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தனர். இவர்களுக்கு சமூகத்தில் குறிப்பிடத்தக்க அந்தஸ்து காணப்பட்டது. ஆடை நெய்தல் இவர்களது முக்கியமான தொழில், ஆடம்பர வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்த அரச குடும்பத்தினருக்கும், உயர்குடி மக்களுக்கும் பல்வேறு வேலைப்பாடுகளைக் கொண்ட கவர்ச்சிமிக்க ஆடைகளைச் செய்வதை இவர்கள் தங்கள் தொழிலாகக் கொண்டனர். சமூகத்தினரால் மதிக்கப்பட்ட இவர்கள் முதலிகள் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றதோடு பல்லக்கில் செல்வதற்கும், தமக்கு முன்புசங்கு ஊதப்பெறவும் உரிமைகளைப் பெற்றிருந்தனர். நாளடைவில் இத்தொழில் அதிக முக்கியத்துவம் பெற்று விளங்கவே இவர்கள் பல இடங்களில் புதிதாக குடியமர்த்தப்பட்டனர். குறிப்பாக திருவண்ணாமலையில் இரு தெருக்கள் இவர்களுக்கென ஒதுக்கப்பட்டன. வரி விலக்குப் பெற்றிருந்த இவர்கள் சங்கு, தண்டு, ஆனை, சாமரம் ஆகிய விருதுகளையும் பெற்றிருந்தனர். இவர்களுக்கு சிறப்பு சலுகைகளும், விருதுகளும் அளிக்கப்பட்டு வந்தன. இதை அக்காலக் கல்வெட்டுகள் தெரிவுபடுத்துகின்றன.

**கம்மாளர்**

சமூகத்தில் காணப்பட்ட கம்மாளர்களை மக்கள் பெரிதும் மதித்தனர். இச்சாதியினரிடையே கொல்லன், பொற்கொல்லன், செம்புக்கொல்லன், தச்சன், சிலை செய்வோர் ஆகிய ஐந்து பிரிவுகள் காணப்பட்டன. இவர்கள் பஞ்சலர்கள் எனவும் அழைக்கப்பட்டனர். இப்பிரிவினருக்குத் தொன்று தொட்டே அளிக்கப்பட்ட மதிப்பு இக்காலத்திலும் அளிக்கப்பட்டது. குறிப்பாக பொற்கொல்லர்களும், சிற்பிகளும் அரசர்களின் பேராதரவு பெற்று வந்தனர்.

**சத்திரியர்கள்**

நாட்டை ஆண்ட அரச மரபினரும் போர் வீரர்களும் தங்களை சத்திரியக் குலத்தோடு தொடர்வுபடுத்தி கூறினர். குறிப்பாக அரசர்கள் தங்களது சூரிய, சந்திர குலத்துடன் தொடர்புபடுத்தி தங்களது பெருமையை பறைசாற்றினர். சத்திரியர்களிடையே உயர்ந்தவர். தாழ்ந்தவர் ஏற்றத்தாழ்வு காணப்பட்டது. குறிப்பாக தங்களைப் பற்றி உயர்வாக எண்ணிய தஞ்சை நாயக்கர்கள் மதுரை நாயக்கர்களை கீழ் குலத்தவர் என குறை கூறி வந்தனர். இந்த எண்ணம் இவர்களிடையே கொள்வினை, கொடுப்பினைக்குத் தடையாக இருந்தது. குறிப்பாக சத்திரியர்கள் நாட்டையும், நாட்டு மக்களையும் காப்பவராதலால் சமூகம் இவர்களை மதித்தது.

**வைசியர்கள்**

சமுதாயத்தில் மேலோங்கி நின்றவர்கள் வைசியர்கள் எனப்பட்டனர். இவர்கள் வணிகத்தையும் அதோடு தொடர்புடைய தொழில்களையும் செய்து வந்தனர். வணிகர்களில் பல பிரிவினர்கள் காணப்பட்டனர். குதிரை வணிகத்தை மேற்கொண்டவர்கள் குதிரைச் செட்டிகள் எனப்பட்டனர். பொதுவாக நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டு வணிகம் ஆகியவை இவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது. இவர்கள் நகரங்களில் தனி தெருக்களில் தங்கினர். செல்வச்செருக்கின் காரணமாக இவர்கள் ஆடம்பர வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர்.

**சூத்திரர்**

மேற்குறிப்பிட்ட சாதியினரைத் தவிர எஞ்சியவர்கள் சூத்திரர்கள் எனப்பட்டனர். உரிமைகளும், சலுகைகளும் குறைவாகப் பெற்ற இவர்கள் தீண்டாதவர்களாக கருதப்பட்டனர். இவர்கள் இந்துக்களாக இருப்பினும் ஆலயத்திற்குள் செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. இந்த சாதிக்குள்ளேயே வலங்கை, இடங்கை பிரிவினர் காணப்பட்டனர். சூத்திரர் பிரிவில் உட்பட்ட சில பிரிவினர் மிக தாழ்வாக நடத்தப்பட்டனர். குறிப்பாக பறையர் என்ற பிரிவைச் சார்ந்தவர்கள் தாழ்வாகக் கருதப்பட்டதோடு அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்டன. இவர்கள் சேரிகளில் வாழ்ந்தனர். உயர் சாதியினரால் ஒடுக்கப்பட்ட இம்மக்கள் தங்களது உரிமைகளுக்காக அவ்வப்போது கலகம் செய்தனர். இவர்கள் அரசர்களாலும், உயர்குடியினராலும் வன்மையாக ஒடுக்கப்பட்டனர். இருப்பினும் போராட்டத்தின் விளைவாகக் பறையர்கள் பல சலுகைகளை அரசிடமிருந்து பெற்றனர். இதை அக்கால கல்வெட்டுகள் புலப்படுத்துகின்றன. குறிப்பாக இப்பிரிவைச் சார்ந்தவர்கள் தங்களுக்கே உரியதான பல்வேறு தொழில்களைச் செய்து கிராமங்களிலும் புறநகர் பகுதிகளிலும் வாழ்ந்துவந்தனர்.

**திருமண முறை**

நாயக்கர் காலத்தில் திருமணச் சடங்குகளுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. பெரும்பாலும் திருமணங்கள் சாதி அமைப்புக்களைச்

சார்ந்திருந்தன. அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களும் திருமண உறவை ஏற்படுத்தியபோது குலம், கோத்திரம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளித்தனர் தஞ்சை நாயக்கர்கள் விஜயநகர அரசுடன் திருமண உறவை ஏற்படுத்திக்கொண்டதால் அவர்கள் தங்களை உயர்குலத்தவர் என எண்ணிக் கொண்டனர். இவர்கள் மதுரை நாயக்கர்களை சூத்திரர்கள் என குறை கூறியதுடன் அவர்களுடன் எவ்வித திருமண உறவையும் ஏற்படுத்திக் கொள்ளவில்லை. எடுத்துக்காட்டாக சொக்கநாதர் விஜயராகவனின் மகளைத் திருமணம் செய்ய முயன்றபோது அவன் சாதியில் குறைந்தவன் என்ற காரணத்தால் அவனுக்கு பெண் கொடுக்க மறுத்தனர். இதனால் ஆத்திரமடைந்த விஜயராகவன் போரில் ஈடுபட்டு தன் உயிரையே இழக்க நேரிட்டது. இதேபோன்று விஜயரங்க சொக்கநாதன் இலங்கை இளவரசியை மணக்க வேண்டுமென்ற ஆசையும் சாதி பெயரால் நிராசையானது.

நாயக்கர்கள் ஆட்சிகாலத்தில் கலப்புத் திருமணங்களுக்கும், சாதிகலப்புகளுக்கும் தடை விதிக்கப்பட்டன. அக்கால சமுதாயத்தில் வரதட்சணை கொடுப்பதும், வாங்குவதும் நடைமுறையிலிருந்தன. குழந்தை திருமண முறையும் பழக்கத்திலிருந்தது. வரதட்சணையாக சொத்தும், நகைகளும் அளிக்கப்பட்டன. ஆனால் விஜயநகர ஆட்சியின் காலத்தில் பிராமணர்களிடையே வரதட்சணை வாங்கும் பழக்கம் காணப்படவில்லை என கல்வெட்டுகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். வரதட்சணை வாங்குவதை அவர்கள் கொடியகுற்றமாகக் கருதினர்.

ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை பொதுவாக நிலவினாலும் உயர்குடியினர் பல பெண்களைத் திருமணம் செய்யும் உரிமைகளையும், பழக்கத்தையும் கொண்டிருந்தனர். குறிப்பாக நாட்டை ஆண்ட அரசர்கள் ஏராளம் அரசியர்களை மனைவியராகக் கொண்டிருந்தனர். எடுத்துக்காட்டாக மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர் 200 மனைவியர்களையும், இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி 47 மனைவியர்களையும் கொண்டிருந்தனர். என பாதிரிமார்களின் கடிதங்கள் குறிப்பிடுகின்றன. மதுரை நாயக்கர்களில் ஒரு மனைவியுடன் வாழ்க்கை நடத்திய ஒரே மன்னர் ரங்ககிருட்ணர் ஆவார்.

**சதி**

நாயக்கர் காலத்தில் ஆண்களுக்கு சமமாக பெண்கள் மதிக்கப்படவில்லை. அவர்களின் நிலை பரிதாபகரமாயிருந்தது. கணவன் இறந்தவுடன் மனைவியர் உடன்கட்டையேறுமாறு கட்டாயப்படுத்தப்பட்டனர். கிழவன் சேதுபதி இறந்த போது அவனது 47 மனைவியர்களும் உடன்கட்டை ஏறினர். ஒரு முஸ்லீம் பயணி தனது குறிப்பில் கி.பி.1628-ஆம் ஆண்டு 200 மனைவியர் தமது கணவனுடன் உடன்கட்டையேறி உயிரை மாய்த்துக் கொண்டதாக குறிப்பிட்டுள்ளார். அச்சுதப்பர் இறந்தபோது அவரது 370 மனைவியரும் உடன்கட்டை ஏறினர். இப்பழக்கம் இதர உயர்குடி மக்களிடையேயும் குடி கொண்டிருந்தது. பொதுவாக இப்பழக்கத்தை சமூகம் அங்கீகரித்தது. இறந்தவரை அடக்கம் பண்ணுவதற்கு முன் பல்வேறு

ஆடம்பர சடங்குகள் நடத்தப்பட்டன. இறந்தவர்களை சுட்டெரிக்கும் பழக்கம் அக்காலத்தில் நிலவியது. சில பிரிவினர் பிணத்தை புதைக்கின்ற பழக்கத்தையும் கொண்டிருந்தனர்.

**தேவரடியார்கள்**

நாயக்கர் காலத்தில் ஆலயங்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. இந்த ஆலயங்களில் பணிபுரிய தேவரடியார்கள் நியமிக்கப்பட்டனர். இவர்கள் தேவதாசிகள் எனவும் அழைக்கப்பட்டனர். இவர்கள் ஆலய வழிபாட்டின் போதும், திருவிழா காலங்களிலும் ஆடிப்பாடி மக்களை மகிழவைத்தனர். திருவாரூர் ஆலயத்தில் நடைபெற்ற விழாவின்போது தேவரடியார்கள் நடனமாடிச் சென்றதை இமானுவேல்-டி-வைகா என்பவர் தனது குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். தேவரடியார்களுக்குப் பாதங்களில் குலக்குறிசூடு போடும் பழக்கம் நிலவிலிருந்தது. தேவரடியார்கள் சமூகத்தில் நன் மதிப்பை பெற்றிருந்தனர். இவர்களை அரசர்களும், செல்வந்தர்களும் ஆதரித்தர். இவர்களுக்கு விருதுகளும், நிலங்களும் வழங்கப்பட்டன. தேவரடியார்களுக்கு வழங்கப்பட்ட விருதுகளில் மிக முக்கியமானது 'நாலு திக்கும் வென்ற மாணிக்கம்' என்பதாகும். இந்த விருது திருமெய்யம் தாலுகாவில் ராங்கியம் என்பதாகும். இந்த விருது திருமெய்யம் தாலுகாவில் ராங்கியம் என்ற ஊரைச் சார்ந்த உமையம்மை என்ற தேவரடியாருக்கு வழங்கப்பட்டதாகச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. இவர்கள் பலருடனும் நெருக்கமாக பழகியதுடன் விபச்சாரத்திலும் ஈடுபட்டு வந்தனர். விபச்சார வாழ்க்கையை சமூகம் அங்கீகரித்தது. இவர்கள் சேரிப்பரத்தையர்களுடன் கூட்டாக சேர்ந்து விபச்சாரத்தில் ஈடுபட்டனர். கோயிலை ஒட்டி வாழ்ந்த பரத்தையர்கள் தங்களை விபச்சாரத்தில் முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர். சமூகத்தில் உயர்நிலையில் காணப்பட்ட பலரும் தேவதாசிகளுடன் உறவு கொள்வதைப் பெருமையாக கருதினர். காளமேகம் என்பவர் தான் பெற்ற இன்பத்துள் தேவதாசியிடம் பெற்ற இன்பமே தலையானது என குறிப்பிட்டுள்ளார். இவர்களின் குணாதிசயங்கள் நொண்டி நாடகங்கள், விரலிவிடு தூதுகள், பள்ளுகள் ஆகியவற்றில் சிறப்பாக சித்தரிக்கப்பட்டுள்ளன. தாசிகளோடு மன்னர்களும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். மதுரை வீரன் கடத்திச் சென்ற பெண்மணி தாசி இனத்தைச் சேர்ந்தவள் என கூறப்படுகிறது. நாயக்கர்கள் ஆட்சி காலத்தில் தாசிகள் நாட்டின் எல்லா பகுதிகளிலும் காணப்பட்டனர். அவற்றுள் மதுரை, தஞ்சை, காளையர்கோயில், திருச்சி, இராமநாதபுரம், இராமேஸ்வரம், கும்பகோணம், திருவாரூர், திருவெற்றியூர் ஆகிய இடங்களில் காணப்பட்ட ஆலயங்களைச் சுற்றிலும் இவர்கள் அதிக அளவில் காணப்பட்டனர். தேவதாசிகளில் சிலர் திருமணம் புரிந்து குடும்ப வாழ்க்கையை மேற்கொண்டதாகவும் செய்திகள் குறிப்பிடுகின்றன.

**உணவு**

சமுதாயத்தில் காணப்பட்ட பல்வேறு பிரிவினர் வெவ்வேறு உணவுகளை அருந்தினர். புலால் உணவையும், காய்கறி உணவையும் மக்கள் விரும்பி

உண்டனர். பொதுவாக பிராமணர்கள் காய்கறி, நெல், அரிசி, சர்க்கரை, பால், பால்பொருட்கள் ஆகியவற்றை உணவாக உண்டனர். தாழ்த்தப்பட்டவர்கள் புலால், மீன், முட்டை, அரிசி போன்ற உணவினை உண்டனர். மன்னனுக்கு உணவு அளிப்பதற்கு முன் சோதனை செய்யப்பட்டது. அக்கால கல்வெட்டுகளில் மக்கள் உண்ட சோறு, தோசை, அதிரசம் ஆகியவற்றின் பெயர்கள் காணப்படுகின்றன. உணவு தயாரிப்பதற்கு மக்கள் நல்லெண்ணெய், தேங்காயெண்ணெய் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். மது அருந்தும் பழக்கமும், வெற்றிலை போடும் பழக்கமும் மக்களிடையே காணப்பட்டது. மது சமூகத்தில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தது. செல்வந்தர்கள் இறக்குமதி செய்யப்பட்ட வெளிநாட்டு மதுவையும், ஏழைகள் உள்நாட்டு மதுவையும் உண்டனர்.

**ஆடை, அணிகலன்கள்**

ஆடை, அணிகலன்கள் ஆகியவற்றை அனைத்து பிரிவினரும், விரும்பி அணிந்தனர். பொதுவாக ஆண்களும் பெண்களும் மேலாடை, இடையாடை ஆகியவற்றை அணிந்தனர். நாட்டை ஆண்ட மன்னர்கள் இடையில் வேட்டியை உடுத்தினர். இடுப்பில் கச்சை கட்டும் பழக்கம் ஆண்களிடையே காணப்பட்டது. அரசர் மரபைச் சேர்ந்த பெண்களும், உயர்குடி செல்வந்தர்களும் பட்டாடையை விரும்பி அணிந்தனர். இதற்கென ஆடை நெய்வதில் சிறந்து விளங்கிய சௌராஷ்டிரர்கள் வரவழைக்கப்பட்டு அவர்கள் தமிழகத்தில் அணிந்த போது ஏழைகள் கதர் ஆடையை விரும்பி அணிந்தனர்.

அணிகலன்கள் அணிவதில் ஆண்களும், பெண்களும் அதிக ஆர்வம் காட்டினர். பொதுவாக இவர்கள் கழுத்தணி, காலணி, கைவளை, கால்வளை மூக்குத்தி, கம்மல் ஆகிய அணிகலன்களை விரும்பி அணிந்தனர். மக்கள் பயன்படுத்திய ஆடை அணிகலன்களை அக்காலத்தில் செலுக்கப்பட்ட சிற்பங்களின் வாயிலாக நாம் கண்டு கொள்ளலாம்.

பூக்களையும் நறுமணப்பொருட்களையும் பயன்படுத்துவதில் பெண்கள் நாட்டம் கொண்டனர். சந்தனம், கற்பூரம், கஸ்தூரி, புனுகு ஆகியவற்றை உடம்பில் பூசிக்கொண்டனர். அகிற்புகை கொண்டு கூந்தலை உலர்த்தினர். குறிப்பாக தேவதாசிகள் ஆடவர்களைக் கவரவேண்டும் என்பதற்காக தங்களை ஆடை, அணிகலன்கள், பூக்கள், வாசனைத் திரவியங்கள் ஆகியவற்றால் சிங்காரித்துக் கொண்டனர். அக்காலத்தில் அரசர்களும் செல்வந்தர்களும் ஆடம்பர வாழ்க்கைக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர்.

**பொழுதுபோக்கு**

மக்கள் பொழுதுபோக்கிற்காகவும் தங்களது நேரத்தைச் செலவிட்டனர். பல்வேறு விளையாட்டுக்களிலும் திருவிழாக்களிலும் இவர்க்ள பங்கெடுத்தனர். இவர்கள் மல்யுத்தம், வேட்டையாடுதல், குதிரைப்பந்தயம், பகடையாடுதல், தாவுதல் ஆகிய நிகழ்ச்சிகளைக் கண்டு கழித்ததோடு, ஆலயங்களிலும், திருவிழாக்களிலும்,

திருமணச்சடங்குகளிலும் நடைபெற்ற இசை, நாட்டியம் ஆகியவற்றிலும் பங்கெடுத்தனர். இவைகள் மக்களுக்கு மகிழ்ச்சியூட்டின.

**திருவிழாக்கள்**

நாயக்கர்கள் காலத்தில் விழாக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. அக்கால ஆலயங்கள் திருவிழாக்களின் உறைவிடமாகத் திகழ்ந்தது. சித்திரைத் திருவிழா, புட்டுத்திருவிழா. தெப்பத்திருவிழா ஆகியவை மதுரையில் சிறப்புற்று விளங்கின. திருவிளையாடல் புராண நிகழ்ச்சிகள் ஒவ்வொரு மாதமும் மதுரையில் நடைபெற்றன. குறிப்பாக அடிக்கடி விழாக்களை நடத்தி மதுரையை விழாக்களின் நகரமாக மாற்றிய பெருமை நாயக்கர்களைச்சாரும். மதுரையைத் தவிர தஞ்சை, கும்பகோணம், திருவாரூர், சிதம்பரம் ஆகிய ஆலயங்களிலும் விழாக்கள் நடத்தப்பட்டன. பெரிய விழாக்களைத் தவிர பல சிறிய விழாக்களும் ஆலயங்களில் நடத்தப்பட்டன. அவற்றுள் பௌர்ணமி விழா, புது நிலவு பஞ்சபாவங்கள், சிவராத்திரி, மகரசஸ்கிராந்தி, ஏகாதஸி, துவாதசி, ஸ்ரீயெயந்தி ஆகியவை குறிப்பிடத்தக்கவைகள் ஆகும். தமிழ் மக்களின் சமூகத்தோடு ஒன்றறக்கலந்த தீபாவளித் திருவிழா நாயக்கர்கள் காலத்தில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. விழாக்காலங்களின் தேவதாசிகள் ஆடிப்பாடி மக்களை மகிழ்வித்தனர். நகரங்களைப் போன்று நாட்டுப்புறங்களிலும் தெய்வங்களுக்கும், தேவதைகளுக்கும் விழாக்கள் நடத்தப்பட்டன. தீய சக்திகளிலிருந்து மக்களை பாதுகாக்கும் நோக்குடன் இவ்விழாக்கள் நடத்தப்பட்டன. பொதுவாக ஒவ்வொரு கிராமத்திற்கும், இதைத் தவிர தனித்தனி தெய்வங்கள் காணப்பட்டன. வீரர்களையும், தலைவர்களையும் தெய்வங்களாக வழிபடும் பழக்கம் அக்காலத்திலும் நிலவியிருந்தது. பேய், பிசாசுகளை மக்கள் நம்பினர். அவைகள் மக்களைத் துன்புறுத்தாமலிருக்க பலவிதமான வழிபாடுகள் நடத்தப்பட்டன. சமயச் சடங்குகளை பொதுவாக பிராமணர்கள் நடத்தினர்.

**புது குடியேற்றங்கள்**

நாயக்கர்கள் ஆட்சிகாலத்தில் பல புது இனத்தவர்கள் தமிழகத்தில் குடியேறினர். இக்காலத்தில் இந்து சமய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. ஆலய வழிபாட்டு வளர்ச்சியின் காரணமாக தமிழகத்தின் வடபகுதியில் காணப்பட்ட ஏராளம் பிராமணர்கள் தமிழகத்திற்கு வரவழைக்கப்பட்டனர். இவர்கள் அரசியலிலும் சமயத்திலும் ஆதிக்கம் செலுத்தினர். இவர்கள் தங்குவதற்கு அக்கிரகாரங்கள் ஒதுக்கப்பட்டன. அக்கிரகாரங்களின் எண்ணிக்கை பிராமணர்களின் வருகையைப் பொறுத்து பெருகிக் கொண்டே சென்றது.

இக்காலத்தில் முஸ்லீம்கள் அடிக்கடி தமிழகத்தை தாக்கினர். ஆதிக்கம் பெற்று விளங்கிய முஸ்லீம்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் தங்கி வணிகத்தில் ஈடுபட்டுவந்தனர். சமூகத்தில் இவர்களின் கலப்பு கலாச்சாரம் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தியது.

மேலும் இக்காலத்தில் கம்மவர், கவரா, உப்பிலி, சேணியர், கம்பளத்தார், ஒட்டர், சக்கிலியர், தொம்பர் ஆகிய தெலுங்கு மொழி பேசிய பல்வகை இனத்தவர்கள் நாயக்கமன்னர்களால் குடி அமர்த்தப்பட்டனர். பட்டு ஆடை நெய்வதில் சிறந்துவிளங்கிய சௌராஷ்டிரர்களும் தமிழகத்தில் குடியேற அனுமதிக்கப்பட்டனர்.

நாயக்கர்கள் காலத்தில் கிறிஸ்தவ சமயம் தமிழகத்தில் வேரூன்றத் தொடங்கியது. போர்ச்சுக்கல், ஸ்பெயின், பிரெஞ்சு, இங்கிலாந்து ஆகிய நாடுகளிலிருந்து ஏராளம் கிறிஸ்தவ பாதிரியார்கள் கிறிஸ்து சமயத்தைப் பரப்பும் நோக்குடன் தமிழகத்தில் வந்து குடியேறினர். நாயக்கர் காலத்தில் ஏற்பட்ட குடியேற்றங்களின் விளைவால் சமூகத்திலும், சமயத்திலும், கல்வித்துறையிலும் வியத்தகு மாற்றங்கள் ஏற்பட்டன.

**சமயப் பொறைமை**

நாயக்க அரசர்கள் சமய வளர்ச்சிக்கு தடையாக இருக்கவில்லை. மதுரை நாயக்கர் வீரப்பர் ஏசு சபையைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கு தங்களது சமயத்தைப் பரப்புவதற்கான உரிமையை அளித்ததோடு அவர்களுக்குத் தகுந்த பாதுகாப்பும் அளித்தார். கிறிஸ்தவா பாதிரிமார்கள் பல ஆலயங்களைக் கட்டியதோடு இந்துக்களை கிறிஸ்தவ சமயத்திற்குமாற்றினர். கிறிஸ்தவ சமய வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்களில் திருமலை நாயக்கர், மங்கம்மாள் போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இடையூறு நேர்ந்த காலத்தில் கிறிஸ்தவர்களுக்கு இவர்கள் உறுதுணையாய் இருந்தனர். தஞ்சை நாயக்கர்களும் ஐரோப்பிய கிறிஸ்தவப் பாதிரியார்களுக்கு ஆதரவு அளித்ததோடு, ஆலயம் கட்டுவதற்கு நிலங்களையும் தானமாக அளித்தனர். கிறிஸ்தவர்களைப் போன்று முஸ்லீம்களும் சமயப் பொறைமையுடன் நடத்தப்பட்டனர். குறிப்பாக மங்கம்மாள் ஆட்சி காலத்தில் பள்ளிகட்டுவதற்கு முஸ்லீம்களுக்கு நிலம் தானமாக வழங்கப்பட்டது. இருப்பினும் சமயப் பொறையின்மையும் அங்காங்கே நிகழ்ந்தன. குறிப்பாக கிறிஸ்தவர்களுக்கு எதிராகச் செயல்பட்ட கிழவன் சேதுபதி கிறிஸ்தவ ஆலயங்களை நிர்மூலமாக்கியதோடு கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பி வந்த ஜான்பிரிட்டோ என்ற பாதிரியாரைக் கொலை செய்தான். அவரது உடம்பு துண்டுகளாக வெட்டப்பட்டு கழுகுகளுக்கு வீசப்பட்டது. இந்த கொடிய செலய் இராமநாதபுரத்தில் கி.பி.1663-ஆம் ஆண்டு நிகழ்ந்தது. மேலும் திருச்சியில் பாதிரிகள் சிறையிலடைக்கப்பட்டனர். இவற்றை பீட்டர் என்ற பாதிரியின் கடிதங்கள் குறிப்பிடுகின்றன. இக்காலத்தில் இந்து சமயத்தின் பிரிவுகளான சைவருக்கும், வைணவருக்கும் இடையே சமயப்பூசல்கள் எழுந்தன. இப்பூசல்களைத் தீர்ப்பதற்காக நாயக்க அரசர்கள் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொண்டனர். நாட்டில் சமயச் சண்டைகளும், சமய வீரோதப் போக்குகளும் ஆங்காங்கே நடைபெற்றாலும் பொதுவாக சமயங்களிடையே அமைதி நிலவியது.

**கல்வி நிலை**

நாயக்கர்கள் தங்கள் ஆட்சிகாலத்தில் கல்வி வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கவில்லை. எனவே தனியார்களும், சாதி அமைப்புக்களும், தொழிற் குழுக்களும் தங்களின் தேவைக்கேற்ற கல்வியை மாணவர்களுக்குப் பயிற்றுவித்துவந்தன.

கிராமங்களில் தொன்றுதொட்டு நிலவிவந்த திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இக்காலத்திலும் செயல்பட்டு வந்தன. இப்பள்ளிக் கூடங்களில் கிராமத்திலுள்ள முதியவர் மாணவர்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்பித்து வந்தார். மாணவர்களே ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்கும் முறை நிலவியிருந்தது. இவ்வூதியம் பணமாகவோ, பொருளாகவோ அளிக்கப்பட்டது. சில மாணவர்கள் ஆசிரியரின் வீடுகளில் தங்கி அவர்களுக்குப் பணிவிடை செய்து கல்விகற்று வந்தனர். தரையில் மணல் பரப்பி அதில் எழுதினர். பாடங்களை மாணவர்கள் மனப்பாடம் செய்தனர். அதிக பாடங்கள் மனப்பாடம் செய்பவன் சிறந்த மாணவனாகக் கருதப்பட்டான். இம்முறைப்படி உயர்குடியைச் சார்ந்த ஒரு சிலருக்கே கல்வி கற்கும் வாய்ப்பு கிட்டியது.

அக்காலத்தில் மதுரை கல்வி வளர்ச்சியின் மையமாக விளங்கியது. பொதுவாக சமய சார்புடைய கல்விக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. வேத பாடசாலைகளில் வேதங்களும், சாத்திரங்களும் அந்தணர்களின் குழந்தைகளுக்கு பயிற்றுவிக்கப்பட்டு வந்தன. இப்பாடசாலைகள் தனி நபர்களால் நடத்தப்பட்டுவந்தன. அக்காலத்தில் அந்தண குழந்தைகளுக்குப் பயிற்றுவிக்கப்பட்ட கல்வி முறை பிற பிரிவைச் சார்ந்த மாணவர்களுக்கு அளிக்கப்பட்ட கல்வி முறையிலிருந்து மாறுபட்டிருந்தது. பாடங்கள் சமஸ்கிருத மொழியில் பயிற்றுவிக்கப்பட்டன.

நாயக்கர்கள் காலத்தில் அந்தணர்களின் உயர்கல்வியில் அரசு அதிக அக்கறைகாட்டியது. ராபர்ட்-டி-நோபிலி என்ற கிறிஸ்தவ பாதிரியார் கி.பி.1610-ஆம் ஆண்டு தான் எழுதிய கடிதம் ஒன்றின் மதுரையில் செயல்பட்டு வந்த சமஸ்கிருத கல்வி கூடத்தைப் பற்றி குறிப்பிட்டுள்ளார். இங்குள்ள பள்ளிக்கூடத்தில் 10,000க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்வேறு ஆசிரியர்களிடம் உயர்கல்வி பயின்று வந்தனர் என குறிப்பிட்டுள்ளார். இங்கு கல்வி பயின்ற மாணவர்களுக்கு சமயம், கலை, அரசியல் ஆகியவை பயிற்றுவிக்கப்பட்டன. இப்பாடசாலையில் கல்விகற்ற மாணவர்களுக்கு உணவு, உடை ஆகியவை அளிப்பதற்கும், கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு ஊதியம் கொடுப்பதற்கும் அரசு நிலங்களைத் தானமாக வழங்கியதோடு, பொருளுதவியையும் அளித்து வந்தது. இக்கல்விக்கூடத்தில் கல்வி பயில்வதற்கு பிராமணர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. பொதுவாக பிராமணர்கள் சமயக் கல்வியை விரும்பி கற்றனர். இது ஒரு சமஸ்கிருத கல்விக் கூடமாக விளங்கியது. சமயப் பணிபுரிந்துவந்த ஆலயங்களும், மடங்களும் இக்காலத்தில் கல்வி மையமங்களாகவும் செயல்பட்டு வந்தன.

ஐரோப்பியரின் வருகைக்குபின் தமிழ்நாட்டில் கல்வித்துறையில் வியத்தகு மாற்றங்கள் நிகழ்ந்தன. இச்சமயப் பரப்பாளர்கள் தங்களது சமயத்தைப் பரப்பும் நோக்கோடு நாடெங்கிலும் பள்ளிக் கூடங்களை நிறுவினர். முதன் முதலில் இயேசு கழகத் தொண்டர்கள் தமிழ்நாட்டில் பாடசாலைகளை நிறுவினர். மதுரையில் பெர்னாண்டஸ் என்ற பாதிரியார் இந்து மாணவர்களுக்குத் தொடக்கப்பள்ளி ஒன்றை நிறுவினர். கிறிஸ்தவர் சமயத்தைத் தழுவிய அந்தணர் ஒருவர் இப்பாடசாலையின் ஆசிரியராகப் பணிபுரிந்தார். சமய நூற்களை அச்சிட்டு வழங்குவதற்கு வசதியாக முதன் முதலில் கி.பி.1877-ஆம் ஆண்டு அச்சு இயந்திரம் ஒன்று புன்னைக் காயலில் நிறுவப்பட்டது. இதைத் தொடர்ந்து தரங்கம் பாடியிலும் அச்சு இயந்திரம் அறிமுகம் செய்யப்பட்டது. ஐரோப்பியரால் நிறுவப்பட்ட கல்வி நிறுவனங்கள் சாதாரண மக்களுக்கு கல்வி புகட்டுவதையே நோக்கமாக கொண்டிருந்தன. இந்நிறுவனங்களின் வளர்ச்சியால் தொன்றுதொட்டு நிலவிவந்த குருகுலமுறை நலியத்தொடங்கியது.

## கலை வளர்ச்சி

கி.பி.17, 18-ம் நூற்றாண்டுகளில் மதுரை, தஞ்சை, செஞ்சி ஆகிய இடங்களைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த நாயக்கர்கள் கலைவளர்ச்சியில் அதில் அக்கரை காட்டினார். இக்காலத்தில் கட்டப்பட்ட ஆலயங்களும், மண்டபங்களும் ஓவியங்களும் நாயக்கர்கள் கலை வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டினைப் பறை சாற்றுகின்றன. நாயக்கர்கள் தங்களது ஆட்சிகாலத்தில் சில ஆலயங்களைக் காட்டினர். பல ஆலயங்களை புனரமைத்தனர். மேலும் முன்னால் கட்டப்பட்ட ஆலயங்களில் மண்டபங்களையும், கோபுரங்களையும் புதிதாக அமைத்து அவற்றைச் சிற்பங்களாலும், ஓவியங்களாலும் அழகு செய்தனர். இவை தமிழ் நாட்டில் பேரூர், தாரமங்கலம், மதுரை, அழகர்கோயில், கிருஷ்ணபுரம், தாடிக்கொம்பு, திருநெல்வேலி, ஸ்ரீவைகுண்டம், நான்குநேரி, திருக்குறுங்குடி, தென்காசி, கும்பகோணம், திருவாம்புரி, திருவரங்கம், குடத்தை, செங்கம், பட்டீஸ்வரம் ஆகிய இடங்களில் அதிகமாகக் காணப்படுகின்றன. திராவிட பாணியைப் பின்னணியாகக் கொண்டு விளங்குகின்ற இக்கால கலையில் இஸ்லாமியக் கலை நுட்பங்கள் ஊடுருவி பொலிவுற்று மிளிர்கின்றன.

### மதுரை மீனாட்சி அம்மன் கோயில்

மதுரை மீனாட்சி அம்மன் கோயில் தமிழகத்தின் கட்டிடக்கலை வளர்ச்சிக்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இக்கோயில் 847 அடி நீளமுள்ள, 729 அடி அகலமும் உடையது. இக்கோயில் தன்னுள் இரண்டு கோயில்களைக் கொண்டுள்ளது. இங்கு காணப்படும் புது மண்டபங்கள், துண்கள் தாங்கிய வளைவுச் சுவர்கள், உயரமான மேடை போன்ற அமைப்புக்கள், பிரமிக்கத்தக்க கோபுரங்கள், ஆலயத்தைச் சுற்றிலும் காணப்படும் பிரமாண்ட சுற்றுச்சுவர்கள், கண்ணைக் கவரும் சமய சார்புடையசிற்பங்கள் ஆகியவை நாயக்கர்கள் கலைக்கு ஆற்றிய தொண்டினை இன்றும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன. இந்த ஆலயத்தில் ஏராளம் வனப்புமிக்க

சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் காளியின் நடனமாடும் சிற்பமும், நாட்டியமாடும் விநாயகரது உருவமும், எட்டு கைகளையுடைய அக்கினி வீரப்பத்திரரின் சிலையும், பத்து கைகளையும் அவற்றில் ஆயுதங்களையும் ஏந்தி நிற்கும் அகோர வீரபத்திரரின் தோற்றமும், கல்யாண சுந்தரர், உமையவன், நான்முகன், திருமால் ஆகியோர் சிற்பங்களும், பக்தர்களைப் பக்தி பரவசத்தில் ஆழ்த்துகின்றன. இக்கோயிலில் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த ஆயிரங்கால் மண்டபம் காணப்படுகிறது. இது நாயக்க மன்னனின் அமைச்சரான அரிய நாதர் முயற்சியால் கட்டப்பட்டது என கருதப்படுகிறது. இம்மண்டபத்தில் காணப்படும் தூண்களில் அரசன், அரசியர் சிற்பங்களும், கையில் விளக்கேந்திய பாவையர் சிற்பங்களும், புராணக் கதைகளை விளக்கேந்திய பாவையர் சிற்பங்களும், புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்களும் காணப்படுகின்றன. நாயக்கர் காலத்தில் எழுப்பப்பட்ட கலைக் கூடங்களுள் கோயில் மண்டபங்களே பொலிவுற்று சாட்சியளிக்கின்றன.

நாயக்கர் கால ஓவியங்கள் சிறப்புமிக்கவை. மதுரை மீனாட்சி ஆலயத்தில் பொலிவுடன் காட்சிதரும் சுந்தரேசப் பெருமானின் திருமணக் காட்சியும், மீனாட்சி அம்மன் எட்டுத்திசைக் காவலருடன் போரிடும் காட்சியும், பெற்றாமரைக் குளத்தின் அருகில் உள்ள கல்யாண மண்டபத்தில் காணப்படும். இராணிமங்கம்மாள், சொக்கநாத நாயக்கர் ஆகியோரின் வடிவங்களும், சிவபெருமானின் அறுபத்து நான்கு திருவிளையாடல் காட்சிகளும் காண்போர் மனதைக் கவரும் வண்ணம் ஓவியமாகத்தீட்டப்பட்டுள்ளன. அக்கால மக்களின் உடை, கூந்தல் ஒப்பனை, அணிகலன்கள் ஆகியவற்றை இந்த ஓவியங்கள் புலப்படுத்துகின்றன.

**கோவை பெருமாள் ஆலய மண்டபம்**

கோவை மாவட்டத்தில் பேரூர்பட்டி என்னுமிடத்தில் காணப்படும் பெருமாள் ஆலய மண்டபத்திற்கு அடுத்தாற்போல் அமைந்துள்ள வனப்புமிக்க கனகசபை மண்டபம் நாயக்கர் காலத்தைச் சேர்ந்தது ஆகும். இக்கனக சபை மண்டபத்தில் இருபத்தெட்டுத் தூண்கள் வரிசையாக அமைக்கப்பட்டுள்ளன. இந்த மண்டபத்தின் முகப்பில் அமைந்துள்ள இரண்டு தூண்களில் யானைகள் தங்களது துதிக்கையை உயர்த்தி நிற்பது போன்ற சிற்பங்கள் காணப்படுகின்றன. வேறு சில தூண்களில் யானையை அழித்த மூர்த்தி, அக்கினி வீரபத்திரர் ஆகியோரின் சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் வீரப்பத்தரரின் சிற்பம் முறுக்கிய மீசையையும், வலுவான தசைகளையும் உடையதாய் காணப்படுகிறது. மேலும் இங்கு காணப்படும் நடனம் புரியும் விநாயகம் சிற்பமும், அமர்த்த நிலையிலுள்ள ஆறுமுகனின் சிற்பமும் மண்டபத்திற்கு அழகைக் கொடுக்கின்றன. இங்கு பதினாறு திருக்கைகளுடன் நாட்டியமாடும் நிலையிலுள்ள காளியின் உருவம் காண்போரைக் கவர்கின்றது. இம்மண்டபத்தில் காணப்படும் பிச்சாடரின் சிற்பம் நடந்து செல்லும் நிலையில் உள்ளது. இச்சிற்பம் நிர்வாண நிலையில் காணப்பட்டாலும் அதன் உடம்பு ஏராளம் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட சிற்பங்களைத் தவிர வேறுபல சிறு சிற்பங்களும் இம்மண்டபத்தில் காணப்படுகின்றன.

**சேலம் தாரமங்கலம் கைலாச நாதர் கோயில் மண்டபம்**

சேலம் மாவட்டத்தில் தாரமங்கலம் என்னுமிடத்திலுள்ள கைலாசநாதர் ஆலயத்திலுள்ள மண்டபத்தில் காணப்படும் தூண்களும் அதில் காணப்படும் சிற்பங்களும் நாயக்கர்கள் கலைக்கு ஆற்றிய தொண்டினைப் பறைசாற்றுகின்றன. இம்மண்டபத்தில் காணப்படும். சிற்பங்களில் விநாயகர், பிச்சைத்தேவர், மோகினி, கண்ணன், ஊர்த்துவதாண்டவர், கங்காதரர், இராமன், வாலி, சுக்ரீவன் போன்றோரின் சிற்பங்கள் முக்கியமானவைகளாகும். இவ்வாலயத்தின் உட்சுவரில் காணப்படும் பல்வேறு வடிவமைப்பினையுடைய சிற்பங்கள் காண்போரை பக்திபரவசத்தில் ஆழ்த்துகின்றன.

**திண்டுக்கல் திருமால் கோயில்**

திண்டுக்கல்லுக்கு அருகாமையிலுள்ள தாடிக்கொம்பு என்னும் சிற்றூரில் அமைந்துள்ள திருமால் கோயிலில் நாயக்கர் காலத்தைச் சேர்ந்த ஏராளம் சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் முக்கியமானவை திரிவிக்கிரமர், சக்கரத்தாழ்வார், காமக்கடவுள், கருடவாகனர் ஆகியோரது சிற்பங்களாகும். இச்சிற்பங்கள் அணிகலன்களாலும், ஆடைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பது போன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மதுரை அழகர்கோயில் மண்டபம்**

மதுரைக்கு அண்மையில் அமைந்துள்ள அழகர் ஆலய மண்டபத்தூண்களில் ஏராளம் சமயசார்புடைய சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நிலமகளைத் தம் மடிமீது தாங்கி நிற்கும் ஏனப்பெருமாள் சிற்பமும், இரணியனது குடலினைப் பிடுங்கும் நரசிம்மரின் சிற்பமும், ஓங்கி உலகளந்த உத்தமனின் சிற்பமும், குதிரை வீரர்களின் உருவங்களும், இளவரசன் ஒருவனைத் தன் தோள் மீது தூக்கிச் செல்லும் மலைநாட்டு மங்கையின் சிற்பமும் வனப்புடன் உயிரோவியங்களாகத் திகழ்கின்றன.

**திருநெல்வேலி கிருஷ்ண புரத்துக்கோயில்**

திருநெல்வேலிக்கு ஆறுகல் தொலைவிலுள்ள கிருஷ்ணபுரத்துக்கோயிலில் கட்டப்பட்டுள்ள அரங்கமண்டபம் அழகுமிக்க நாயக்கர் காலச் சிற்பங்களைக் கொண்டது. இம்மண்டபத்தூண் ஒன்றில் வேட்டுவ வீரன் மங்கை ஒருத்தியைத் தன் தோள் மீது சுமந்து செல்லும் காட்சி சிறப்புற அமைக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்திற்கு அடுத்துள்ள வெவ்வேறு தூண்களில் வீரபத்திரர் போர்புரியும் காட்சியும், பூச்செண்டினையும், மாதுளம் பழத்தினையும் கொண்டுள்ள அழகுமிக்க நங்கையின் வடிவமும், அருச்சுனனுக்கும், கர்ணனுக்கும் நடைபெற்ற போரும், தர்மன், வீமன் ஆகியோரின் உருவங்களும், அழகிய சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக இந்த மண்டபத்திலுள்ள சிற்பங்கள் ஆடை, அணிகலன்கள், அலங்காரங்கள் ஆகியவற்றைக் கொண்டு விளங்குகின்றன.

### நெல்லையப்பர் கோயில் சிற்பங்கள்

நெல்லையப்பர் கோயிலில் பல தூண்கள் காணப்படுகின்றன. அவற்றில் மக்களைக் கவர்கின்ற தன்மையுடைய பல சிற்பங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் வாளினையும், ஊதுகொம்பினையும் கைகளில் கொண்ட வீரன் ஒருவனது சிற்பமும், முறுக்கேறிய தசைகள், தொங்கிய மீசை, தாடி ஆகியவற்றைக் கொண்ட வீரபத்திரர் சிற்பமும், அருச்சுனன், கர்ணன் ஆகியோரின் போரைப்பற்றிய சிற்பமும், மாரனும் அவன் கிழத்தியும் நடத்திய காதல் லீலைகளைச் சித்தரிக்கும் சிற்பங்களும் காண்பவர் நெஞ்சைக் கவர்வனவாக உள்ளன.

### திருவைகுண்ட திருமால் கோயில்

திருவைகுண்டத்திலுள்ள திருமால் கோயிலிலும் மிக அழகுமிக்க நாயக்கர் காலச் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோவில் மண்டபத் தூண்களில் வாயிற்காவலர்கள், கொடிப்பெண், இராமன், சீதை, அனுமன், விளக்கேந்திய அழகு நங்கை, வீரபத்திரர் முதலிய சிற்பங்கள் எழிலுறத் திகழ்கின்றன. மேலும் திரிவிக்கிரமம், யானைக்கு வீடுபேறு அளிக்கும் திருமால், நடனமாதர், குறவன், குறத்தியர், வேடர் முதலியோரின் சிற்பங்களும் ஆலய தூண்களில் சிறிய அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

### தென்காசி சிவன் கோயில் மண்டபம்

நெல்லை மாவட்டத்தில் தென்காசியிலுள்ள சிவன் கோயிலிலுள்ள மண்டபத்திலும் பல அழகிய சிற்பங்கள் காணப்படுகின்றன. இவற்றுள் காளி, வீரபத்திரர், வேணுகோபாலர், தேவதாசிகள் ஆகியோரின் சிற்பங்கள் சிறப்புற காட்சியளிக்கின்றன. இம்மண்டபத்திலுள்ள ஊர்த்துவ தாண்டவர் சிற்பமும் அதைச் சுற்றி அமைந்துள்ள திருவாசியும், சிங்கமுக அமைப்பும் காண்பவர் மனதைக் கவர்ந்திழுக்கின்றன. மேலும் இங்கு காணப்படும் காளியின் கோர உருவம் காண்பவர்களைப் பிரமிக்க வைக்கின்றது. இம்மண்டபத்தில் காணப்படும் இரு தேவதாசிகளின் சிற்பங்கள் கவர்ச்சியுடன் மிளிர்கின்றன. இவர்களின் முடிச்சுப் போட்டு தொங்கவிடப்பட்டுள்ள கூந்தல், நீண்ட கூர்மையான மூக்கு, நீண்ட கண்கள், பருத்துத்திரண்ட மார்பகங்கள், வரிவரியான வயிற்றுச்சதை மடிப்புகள், ஒடுங்கிய இடை ஆகியவை அழகுக்கு அழகுவூட்டுகின்றன.

### திருக்குறுங்குடி திருமால் கோயில் மண்டபம்

திருக்குறுங்குடியிலுள்ள திருமால் ஆலயத்திலுள்ள மண்டபத்திலும் இக்காலத்தைச் சார்ந்த வனப்புமிக்க சிற்பங்கள் பல காணப்படுகின்றன. இங்கு காணப்படும் சிற்பங்களுள் கையில் மலையினை ஏந்தி நிற்கும் திரௌபதியின் சிற்பமும், அர்ச்சுனன், கர்ணன், மன்மதன் ஆகியோரின் அழகு சிற்பங்களும், கரம் கூப்பிய நிலையிலுள்ள கருடன், அனுமான், வீமன் ஆகியோரின் சிற்பங்களும், இரணியனுடன் போர்புரியும் நாயக்க அரசர்களின் போர் காட்சியைச் சித்தரிக்கும் காட்சிகளும், மங்கை ஒருத்தியைச் சுமந்து செல்லும் குதிரை வீரன் ஒருவனை

சித்தரிக்கும் சிற்பமும், ஆடவன் ஒருவனைச் சுமந்து செல்லும் பரத்தையின் சிற்பமும், வேடப் பெண் குழந்தையை சுமந்து செல்வதாக அமைந்துள்ள சிற்பமும் கண்கொள்ளா காட்சியாகக் காணப்படுகின்றன.

**பிற ஆலய சிற்பங்கள்**

மேற்குறிப்பிட்ட ஆலய மண்டபங்கள், சிற்பங்களைத் தவிர நான்குநேரி, களக்காடு, திருக்குறுங்குடி, திருச்சி, கும்பகோணம், திருப்பெருந்துறை, தஞ்சை, குடுமியான் மலை, சுசீந்திரம், கன்னியாகுமரி முதலிய ஆலயங்களிலும் நாயக்கர் காலத்தைச் சேர்ந்த வனப்பு மிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. இந்த ஆலயங்களில் காணப்படும் சிற்பங்களில் பெரும்பாலானவை சமய சார்புடையவை. சில நாயக்கமன்னர்களைக் குறிப்பவை.

**செப்புத் திருமேனிகள்**

நாயக்கர் காலத்தில் கல்லால் செய்யப்பட்ட சிற்பங்களைத் தவிர உலோகத்தாலும் சிற்பங்களைச் செய்தனர். இதற்கு அவர்கள் செம்பு உலோகத்தை அதிகமாகப் பயன்படுத்தினர். இச்செப்பு திருமேனிகள் தமிழ்நாட்டில் மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தஞ்சாவூர் முதலிய மாவட்டங்களிலுள்ள கோயில்களில் காணக்கிடக்கின்றன. இவைகள் கற்சிலைகளைப்போன்று அவ்வளவு வனப்புடையதாக விளங்கவில்லை.

**ஓவியங்கள்**

தமிழகத்தில் நாயக்க அரசர்கள் காலத்து ஓவியங்கள் விஜயநகரத்து முறையில் அமைந்திருந்தன. இக்காலத்து ஓவியங்கள் திருப்பருத்திக்குன்றம், திருவாரூர். செங்கம், தஞ்சை, திருவலஞ்சுழி, மதுரை, சிதம்பரம், குற்றாலம், கும்பகோணம் முதலிய இடங்களிலுள்ள கோயில்களில் காணப்படுகின்றன. இக்கால ஓவியங்கள் பெரும்பாலும் சமயச் சார்புடையவைகள். நாயக்கர் கால ஓவியங்கள் புராணக்கதைகளை சித்தரிப்பது மட்டுமன்றி தெய்வங்கள், தேவதாசிகள், மிருகங்கள் ஆகியவற்றின் ஓவியங்களும் அழகுற தீட்டப்பட்டுள்ளன.

பொதுவாக நாயக்கர் கால ஓவியங்களில் பச்சை, சிவப்பு, மஞ்சள், கறுப்பு முதலிய நிறங்கள் அதிகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் சிற்பங்களிலுள்ளவை போன்று அணிகலன்கள், அலங்கார வேலைப்பாடுகள் மிகுந்து காணப்படுகின்றன. இக்கால ஓவியங்களின் பெரும்பான்மையும் ஒருபுறம் நோக்கியோ அல்லது முன்னோக்கியவாறோ தீட்டப்பட்டுள்ளன. இவற்றின் உடலமைப்பு, உடலுறுப்புகளின் அமைப்பு போன்றவை இயற்கையான வளைவு, நெளிவுடன் காணப்படவில்லை. சில ஆலயங்களிலுள்ள ஓவியங்கள் பல்வேறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இத்தகைய ஓவியங்கள் நாற்புறமும் சதுரவடிவான சட்டங்களுக்குள் இருப்பவை போன்று அமைக்கப்பட்டிருக்கின்றன. இச்சட்டங்கள் சிலவற்றின் சங்கிலித் தொடர், வட்டம், பூ வேலைப்பாடு முதலிய ஒப்பனைகள் காணப்படுகின்றன.

## கட்டிடக்கலை

நாய்ககர்கள் தமிழகத்தை ஆட்சிபுரிந்த பொழுது முஸ்லீம்களின் செல்வாக்கு தமிழ் சமுதாயத்தில் வேரூன்றியிருந்தது. எனவே நாயக்கர்கள் கட்டிடங்களிலும், அரண்மனைகளிலும் இஸ்லாமியக் கலையின் நுட்பங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. குறிப்பாக நாயக்கர்கள் கட்டிடக்கலையின் இந்து இஸ்லாமிய கலப்பு காணப்பட்டது. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு மதுரையில் அமைந்துள்ள திருமலை நாயக்கர் அரண்மனையாகும். காண்போரைப் பிரமிக்க வைக்கும் பிரமாண்ட தோற்றமுடைய இந்த அரண்மனை சுண்ணாம்பினால் கட்டப்பட்டது. சுண்ணாம்பினால் கட்டிடம் கட்டும் இப்புதிய முறையை நாயக்கர்கள் முழுமையாகப் பின்பற்றினர். இந்த அரண்மனை 160 அடி நீளமும் 100 அடி அகலமும் கொண்டது. சுற்றுச்சுவர்களில் நடைபாதைகள் அமைக்கப்பட்டுள்ளன. நாற்பதடி உயரமுள்ள கற்றூண்கள் வளைவுகளைத் தாங்கி நிற்கின்றன. இத்தூண்கள் பெருங்கலையழகு கொண்ட இலை வடிவுடைய கற்பாறைகளால் இணைக்கப்பட்டிருகின்றன. அறுபதடி உயரம் கொண்ட கூரையையும் தூண் முகப்புகளையும் இத்தூண்கள் கொண்டுள்ளன. அந்தபுரங்கள் வண்ணபொலிவுடன் விளங்கின.

அரண்மனையைத் தவிர நாயக்கமன்னர்கள் ஆலயங்கள் மண்டபங்கள், கோட்டைகள், ராயகோபுரங்கள் ஆகியவற்றையும் கட்டியுள்ளனர். அவற்றுள் மதுரை மீனாட்சியம்மன் ஆலயம் கிருஷ்ணாபுரம் ஆலயம், திருவண்ணாமலை ஆலயம், திண்டிவனம், விஷ்ணு ஆலயம், செஞ்சி ராஜகிரி மலையடிவாரத்தில் உள்ள வெங்கடரமண சாமி ஆலயம் மற்றும் ஸ்ரீரங்கம், இராமேஸ்வரம் கோயிலுள்ள சுற்றுச்சுவர்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும்.

ஆலயங்களின் வளர்ச்சிக்கு அதிக அக்கறை காட்டியது போன்று இசை, ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளின் வளர்ச்சிக்கும் நாயக்கர்கள் அதிக முக்கியத்துவம் அளித்தனர். அழகு கலைகளில் ஆர்வம் காட்டினர். விழாக்காலங்களில் இசைஞர்களுக்கும், கலைஞர்களுக்கும் முன்னுரிமையளிக்கப்பட்டது. நாட்டியமும் இசையும் இடம் பெறாத திருவிழாக்கள், கோயில் அரண்மனை விழாக்கள், அரைகுறை விழாக்களாக கருதப்பட்டன. குறிப்பாக நாயக்கர்கள் கலை, கட்டிடக்கலை, சிற்பம், ஓவியம், நாட்டியம், நடனம், இசை ஆகிய அனைத்து கலைகளுக்கும் போதிய ஆதரவை அளித்தனர்.

## இலக்கிய வளர்ச்சி

நாயக்கர்கள் தங்களது ஆட்சிகாலத்தில் இலக்கிய வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளித்தனர். இக்காலத்தில் தெலுங்கு இலக்கியம் அரச ஆதரவைப் பெற்று வளர்ச்சியுற்றாலும் ஆங்காங்கே தமிழ்ப்புலவர்கள் குறுநிலத்தலைவர்களின் ஆதரவில் இலக்கியங்களைப் படைத்து தமிழ் மொழியை வளப்படுத்தினர். இக்காலத்தில் இயற்றப்பட்ட பெரும்பான்மை இலக்கியங்களும் சமயச் சார்புடையனவாக விளங்கின. குறிப்பாக இக்கால இலக்கியங்கள் வைணவ, சைவ,

சமண சமயத் தத்துவங்களை விளக்கும் நோக்குடனும், வழிபாட்டு இடங்களைப் புகழும் பாடல்களைக் கொண்டதாகவும் விளங்கின.

**குமரகுருபரர்**

பதினேழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் வாழ்ந்த தமிழ்புலவர்களுள் குமரகுருபரர் ஒருவர் ஆவார். திருமலை நாயக்கர் காலத்தைச் சேர்ந்த இவர் கந்தர் கலிவெண்பா, மீனாட்சி அம்மை குறம், மீனாட்சி அம்மை இரட்டை மணிமாலை, மதுரை கலம்பகம், காசி கலம்பகம், முத்து குமாரசாமி பிள்ளைத் தமிழ் முதலிய நூற்களை இயற்றினார். குறிப்பாக திருமலை நாயக்க மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க திருக்குறள் கருத்துக்களை மையமாகக் கொண்டு நீதி நெறி விளக்கம் என்ற நூலை இவர் பாடினார். இது 102 வெண்பாக்களால் ஆனது. அளவு கடந்த கற்பனை வருணனைகளை அமைப்பதில் இவர் வல்லவர்.

**பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்**

இக்காலத்தில் வாழ்ந்த மற்றொரு புலவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார் ஆவார். இவர் திருமலை நாயக்கர் காலத்தைச் சார்ந்தவர். அரசுப்பணிபுரிந்த இவர் ஒரு சிறந்த இலக்கியவாதியாகவும் திகழ்ந்தார். இவர் அழகர் அந்தாதி, திருப்பரங்குன்றத்து கலம்பகம், திருவரங்கத்து அந்நாதி என்ற அஷ்ட பிரபந்தங்களை இயற்றினார்.

**சுப்ரதீபக் கவிராயர்**

சுப்ரதீபக் கவிராயர் நாயக்கர் கரலத்தில் வாழ்ந்த ஒரு கவிஞர் ஆவார். இவர் கூளப்ப நாயக்கர் காதல், விறலிவிடுதூது போன்ற பிரபந்தங்களைப் பாடியுள்ளார்.

**தாயுமானவர்**

கி.பி.1705க்கும் கி.பி.1742க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த தாயுமானவர் வடமொழி. தமிழ் ஆகிய இரு மொழிகளையும் நக்கு கற்றுத் தேர்ந்த சிறந்த அறிஞராவார். சொக்கநாதனிடம் அமைச்சராகப் பணிபுரிந்தார். உலக சிற்றின்பங்களை வெறுத்து இந்து சமயத்தின்பால் அதிக அக்கறை கொண்டு துறவியானார். பல பாடல்களைப்பாடிய இவர் சமாதி நிலையில் இருந்து காலம கழித்தால் இவருடைய பாடல்கள் மிக உயர்ந்த நிலையில் நின்று பாடப்பட்டவை. சைவ, சித்தாந்தம், அத்வைதம், உபநிடம் ஆகியவற்றின் கருப்பொருட்களை மையமாக வைத்து பக்திச் சுவைமிக்க பல தமிழ்ப்பாடல்களைப் பாடினார். காதலை கருப்பொருளாகக் கொண்டு மிகச் சிறந்த கருத்துக்களை அழகுறப்பாடியுள்ளார். ‘ஆகாரபுவனம்’, ‘ஆனந்தக்களிப்பு’, ‘பைங்கிளிக் கண்ணி’ ஆகியவை இப்பிரிவைச் சார்ந்தவைகள் ஆகும். இந்நூற்களில் இலக்கிய மணம் கமழ்கின்றன.

**இரட்டைப் புலவர்கள்**

இளஞ்சூரியன், முது சூரியன் ஆகியோர் இரட்டைப் புலவர்கள் ஆவார்கள். இவர்களுள் ஒருவர் குருடர், மற்றவர் முடவர், முடவரால் நடக்க முடியாது. ஆனால் வழிகாட்ட முடிந்தது. குருடர் வழிகாண முடியாது. ஆனால் முடவர் காட்டிய வழியில் நடந்து செல்ல முடிந்தது. குருடரின் தோளில் முடவர் அமர்ந்து செல்வது வழக்கம். இருவரும் சேர்ந்து ஒரு கூட்டு வாழ்க்கை நடத்தினர். இருவருக்கும் அமைந்திருந்த புலமைச் சிறப்பு அந்தக் குறையான வாழ்க்கைக்கு ஒளி தந்தது. பிறப்பாலும், உடற்குறையாலும் ஏற்பட்ட உறவை, இருவருடைய புலமைத்திறமும் உறுதிப்படுத்தின. நான்கு அடிகள் கொண்ட வெண்பாவில் ஒருவர் முன் இரண்டு அடிபாட மற்றவர் உணர்ச்சியுடன் அதே கற்பனையாற்றாலுடனும் பின் இரண்டு அடிபாடி முடித்து வந்தனர். இவர்கள் சொற்சுவையும், பொருட்சுவையும் நிரம்ப பல தனிப்பாடல்களைப் பாடியுள்ளனர். இவற்றுள் நகைச் சுவைப் பாடல்களும், என்ன நகையாடும் பாடல்களும் தனிச்சிறப்பு வாய்ந்தவைகளாகும். கலம்பகம் என்னும் நூல் வகையைப்பாடுவதில் இவர்கள் புகழ்பெற்றவர்கள். இவர்கள் திருவாமாத்தூர் கலம்பகம், தில்லை கலம்பகம் ஆகியவற்றைப் பாடினர். உலாவகையில் இவர்கள் பாடிய ஏகாம்பரநாதருலா தனிச்சிறப்பு வாய்ந்தது ஆகும்.

**வில்லிபுத்தூரார்**

இவர் பாரதத்தைத் தமிழில் நாலாயிரத்து முந்நூறு விருத்தப்பாவால் இயற்றினார். இவரது பாரதம் இலக்கிய உலகில் தனி இடத்தைப் பெற்றுள்ளது. பாடல்கள் நல்ல ஒட்டம் உள்ள நடையில் அமைந்துள்ளன. போர் நிகழ்ச்சிகளை விளக்குவதில் தன்னிகரற்றவர். பாரதக்கதையில் காணப்படுகின்ற சிறப்பு மிக்க நிகழ்ச்சிகளைச் சுருக்கமான முறையில் அழகு தமிழில் பாடியுள்ளார். இசை நயம்மிக்க சந்தப் பாடல்களைப் பாடுவதில் அவர் வல்லவர். இவரது பாடல்களில் வடமொழிச் சொற்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

தொல்காப்பியத் தேவர்

தொல்காப்பியத்தேவர் ஒரு கலம்பகம் நூலைப் பாடியுள்ளார். இது திருப்பாதிரிப்புலியூர் என்னும் இடத்திலுள்ள தெய்வத்தைப் பற்றி பாடியது ஆகும். தமிழ்மொழியில் காணப்படும் சுவை மிகுந்த இலக்கியங்களில் இதுவும் ஒன்று ஆகும். குறிப்பாக இரட்டைப்புலவர்கள் இந்நூலைப் புகழ்ந்துள்ளனர்.

**காளமேகம்**

எண்ணியவுடன் கவிபாடும் திறன்மிக்க பல புலவர்கள் தமிழகத்தில் காணப்பட்டனர். அவர்களுள் ஒருவர் காளமேகம் ஆவார். இவர் பதினைந்தாம் நூற்றாண்டைச் சார்ந்தவர். இவர் எதிர்பாராமல் பெருமழை பெய்து திகைக்க வைப்பது போல் பல நிகழ்ச்சிகளில் பல பாடல்கள் பாடி மக்களை வியப்பூட்டிய காரணத்தால் காளமேகம் என்ற பெயர் பெற்றார். இவரது பாடல்கள் கேட்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கக்கூடியவை. சிலேடைப் பாடல்களையும்

இவர் பாடியுள்ளார். இவரது பாடல்களில் சில பிறரைப் பழித்து பாடியதாகும். பழைய இலக்கிய மரபை ஓட்டியும் இவர் நூற்களை இயற்றியுள்ளார். அவற்றுள் திருவானைக் காவுலா, சித்திரமடல் ஆகியவை அழியா புகழ் பெற்றவை. சில நிகழ்ச்சிகளையும், தெய்வங்களையும் அவர் நகைச்சுவையோடு எள்ளி நகையாடியுள்ளார்.

**அதிவீரராமர் முதலானோர்**

இவர் ஒரு ஆட்சியாளர். பாண்டிய மரபைச் சார்ந்த அதிவீரராம பாண்டியர் பதினாறாம் நூற்றாண்டில் தென்காசியின் சில பகுதிகளை ஆட்சிபுரிந்து வந்தார். தமிழ்ப்புலமை மிக்கவர். இவர் பாடிய பாடல்கள் அவருக்கு பெரும் புகழைக்கொடுத்தன. இவர் சில புராணங்களையும் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய காசிகாண்டம் 2525 செய்யுள்களைக் கொண்டது. இது காசியின் பெருமையைக் கூறுகிறது. இவரால் இயற்றப்பட்ட நைடரதம் அறிஞர்களால் பெரிதும் போற்றப்படுகிறது. இது நிஷத நாட்டை ஆண்ட நளன் என்னும் அரசனுடைய வாழ்க்கையை விளக்குகிறது. நீதிநூலைப் பாடுவதில் இவர் வல்லவர். இவர் இயற்றிய வெற்றிவெற்கை அல்லது நறுத்தொகை மக்களால் பெரிதும் போற்றப்பட்ட ஒன்று ஆகும்.

**பரஞ்சோதி**

இக்காலத்தில் வாழ்ந்த ஒரு சிறந்த புலவர் பரஞ்சோதி ஆவார். இவர் இயற்றிய திருவிளையாடல் பெரிதும் போற்றப்பட்டுவருகிறது. இவர் பாடிய விருத்தப்பாக்கள் இனிமையும், தெளிவும் உடையனவாக உள்ளன. இந்நூல் 3360 பாடல்களைக் கொண்டது. கவர்ச்சி மிக்க வருணனைகள் பல இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

**ராபர்ட்-டி-நோபிலி**

கி.பி.1592-ஆம் ஆண்டு இயேசு சபையினரின் சங்கம் மதுரையில் முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. ராபர்ட்-டி-நோபிலி இச்சங்கத்தைச் சார்ந்த ஒரு தலைவர் ஆவார். இவர் கி.பி.1606-ஆம் ஆண்டு இத்தாலியிலிருந்து மதுரை வந்தார். இந்துக்களை கிறிஸ்தவச் சமயத்திற்கு மாற்றுவதில் தீவிரமாக ஈடுபட்டார். இந்துக்களைக் கவரும் நோக்கோடு சந்நியாசி போன்ற உடை அணிந்து, திருநீறுபூசி, பூணூல் அணிந்து ஒரு இந்து பிராமணர்போல் தோற்றமளித்தார். எனவே இவர் “ரோம பிராமணன்” என அழைக்கப்பட்டார். தமிழ் அறிஞராக இவர் விளங்கினார். தமிழ் நூற்களை எழுதுவதிலும், ஆங்கில நூற்களைத் தமிழ் மொழியில் மொழி பெயர்ப்பதிலும் இவர் தீவிரமாக ஈடுபட்டார். தமிழ் மொழியில் இவர் ஞானோபதேசம், மந்திரமாலை, ஞானதீபிகை, போன்ற பதினெட்டு நூற்களை இயற்றியுள்ளார். எளிய நடையில் எழுதப்பட்ட இந்நூற்கள் சாதாரண மக்களாலும் எளிதில் புரிந்து கொள்ளும் தன்மையுடையது. சமயத் தொண்டோடு தமிழ்த்தொண்டும் ஆற்றிய இவர் கி.பி.1656-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16-ஆம் நாள் மைலாப்பூரில் காலமானார்.

**வீரமா முனிவர்**

மேனாட்டு அறிஞர்களில் மிகவும் போற்றத்தக்கவர் வீரமாமுனிவர் ஆவார். இவரது முழுப்பெயர் கான்ஸ்ட்ன்டியஸ் ஜோசப் பெஸ்கி என்பதாகும். இயேசு சங்கத்தைச் சார்ந்த இவர் 1707-ஆம் ஆண்டு இந்தியாவந்தார். இத்தாலி, ஹீப்ரு, லத்தீன், கிரேக்கம், ஸ்பானியம், பிரெஞ்சு, பாரசீக மொழிகளில் தேர்ச்சி பெற்று விளங்கிய இவர் இந்தியா வந்த பின்னர் இந்நாட்டு மொழிகளான உருது, தெலுங்கு சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார். தமிழ் மொழியில் இவர் காட்டிய ஆர்வத்தால் 'வீரமா முனிவர்' என அன்புடன் அழைக்கப்பட்டார். இவர் இயற்றிய தேம்பாவணி கவிதை உருவில் வரைந்த நீண்ட காவியம் ஆகும். இந்நூல் இவருக்கு அழியாப்புகழைக் கொடுத்தது. மேலும் இவர் பரமார்த்த குருகதை என்ற உரைநடை நூலையும் சதுரகராதியையும் வெளியிட்டார். தமிழ் எழுத்துச் சீர்திருத்தமும் இவரால் மேற்கொள்ளப்பட்டது. இவர் கிறிஸ்தவ சமயப் போதகர்களுக்காக வேத விளக்கம், வேதியர் ஒழுக்கம் என்ற நூற்களையும் இயற்றினார். தமிழ் இலக்கிய உலகில் அவரைப் போன்ற முதன்மையான, அறிவுள்ள, விதவிதமாக, ஏராளமான நூற்களை இயற்றிய மற்றொருவரை காண்பதரிது.

மேற்குறிப்பிட்ட புலவர்களைத் தவிர வேறு சிலரும்கூட தங்களது படைப்புக்கள் மூலம் தமிழ் மொழிக்குத் தொண்டாற்றியுள்ளனர். அவர்களுள் வேதாந்த தேசிகர், 'ஆனந்த ராகவ நாடகம்' என்னும் நூலை எழுதிய ராஜசூடாமணி தீட்சிதர், திருவையாறு மகாத்மியம் என்ற நூலைத் தமிழில் மொழி பெயர்த்த கோவிந்த தீட்சிதர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவராவார். மேலும் தஞ்சை நாயக்க மன்னரான விஜய ராகவ நாயக்கர் தனது தந்தை ரகுநாதரின் சாதனைகளை 'ரகுநாத பியூதயம்' என்ற நூலில் எடுத்தியம்பியுள்ளார். இது ஒரு தெலுங்கு இலக்கியம் ஆகும். இவ்வாறு நாயக்கர்கள் ஆட்சி காலத்தில் பல்வேறு இலக்கியங்கள் தமிழ் மொழியில் இயற்றப்பட்டன. இவை தமிழ் இலக்கிய வளர்ச்சியை எடுத்தியம்புகின்றன.

**பொருளாதார நிலை**

நாயக்கர் கால பொருளாதார நிலையை அக்காலத்தில் நிலவிய விவசாயம், தொழில், உள்நாட்டு, வெளிநாட்டு வளர்ச்சி ஆகியவை நிர்ணயித்தன. இக்காலத்தில் தொழில், வணிகம் ஆகியவை நலிவுற்று காணப்பட்டாலும் விவசாய வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. தொன்று தொட்டு நிலவி வந்த விவசாயம் இக்காலத்திலும் நடைமுறையிலிருந்தது. நாயக்கர் ஆட்சி காலத்தில் அடிக்கடி நிகழ்ந்த போர்களும், கிளர்ச்சிகளும், பஞ்சமும், விவசாய வளர்ச்சியை வெகுவாகப் பாதித்தன.

## விவசாயம்

நாயக்கர் கால பொருளாதார நிலையை நிர்ணயிப்பதில் விவசாயம் பெரும் பங்கு வகித்தது. அக்கால மக்கள் விவசாயத்திற்கு பருவ மழையை முழுமையாக நம்பியிருந்தனர். பொதுவாக தென்மேற்கு, தென் கிழக்கு, வடமேற்கு ஆகிய பருவ மழைகள் நாட்டிற்குச் செழிப்பைக் கொடுத்தன. செழிப்புமிக்க இடங்களில் நெல்லும், நீர்வளம் குன்றிய பகுதிகளில் தினை, பயிறு வகைகள் ஆகியவையும் பயிரிடப்பட்டு வந்தன. பருமழை எப்பொழுதும் ஒன்றுபோல் இருக்கவில்லை. சில காலங்களில் பருவ மழை மக்களை பெரிதும் ஏமாற்றத்திற்குள்ளாக்கியது. இதனால் நாட்டில் கொடிய பஞ்சங்கள் ஏற்பட்டன.

பருவமழை நாட்டிற்குச் செழிப்பைக் கொடுத்தாலும் சில வேளைகளில் மக்களைப் பெரும் துயரத்திற்குள்ளாக்கியது. மழைக்காலத்தில் திடீரென ஆறுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கம், கடற்கரைப் பகுதிகளில் ஏற்பட்ட புயலும் பயிர்களுக்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்தின. வங்காள விரிகுடா பகுதியில் அடிக்கடி ஏற்பட்ட காற்றழுத்தம் தமிழகத்தில் பெரும் நாசத்தை ஏற்படுத்தின. இக்கொடுங்காற்று பயிர்களை மட்டுமின்றி கடற்கரை மாவட்டங்களில் வாழ்ந்த மக்களின் குடிசைகளையும் பெரும் நாசத்திற்குள்ளாக்கியது.

வெள்ளப்பெருக்கிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் நோக்கோடு ஆறுகளின் குறுக்காக அணைகளைக் கட்டி, நீரைத்தேக்கி கால்வாய்கள் மூலமாக கொண்டுவரப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. தமிழகத்தின் செழிப்பிற்கு காரணமாயிருந்த காவிரியாறு அதன் பொருளாதாரத்தை நிர்ணயிப்பதில் பெரும் பங்கு வகித்தது. மழை குறைவான பகுதிகளிலும், ஆற்று நீரைப் பயன்படுத்த இயலாத இடங்களிலும், கிணறுகளும், குளங்களும், விவசாயத்திற்குப் பயன்படுத்தப்பட்டன. இவை கிராம அமைப்புக்களால் ஒழுங்காகப் பராமரிக்கப்பட்டு வந்தன. சில இடங்களில் இயற்கையாகக் கிடைத்த ஊற்று நீரை மக்கள் விவசாயத்திற்குப் பயன்படுத்தினர்.

## பஞ்சம்

நாயக்கர்களின் ஆட்சி காலத்தில் கொடிய பஞ்சம் தமிழகத்தை ஆட்டிப்படைத்தது. கி.பி.1622-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் இயேசு சங்கத்தைச் சார்ந்த கிறிஸ்தவ பாதிரியார் ஒருவரின் கடிதம் மதுரையை நிலை தடுமாறவைத்த பஞ்சத்தைப்பற்றி குறிப்பிட்டுள்ளது. இப்பஞ்சத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் இறந்ததாகவும், அவர்களின் சடலங்கள் புதைப்பாரற்று நதிகளின் கரைகளில் குவித்து போடப்பட்டிருந்ததாகவும், மழைக்காலத்தில் இச்சடலங்களை ஆற்றுநீர் அடித்துச் சென்றதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பஞ்ச காலங்களில் உணவு தானியங்களுக்கு மக்கள் பெரும் அவதியுற்றனர். குறிப்பாக 1709-ஆம் ஆண்டு ஏற்பட்ட பஞ்சத்தால் உணவு தானியங்களின் விலை விஷம் போல் ஏறியது. இக்கொடிய பஞ்சத்திற்கு முன் எட்டு மரைக்கால் அரிசியை

ஒரு பணத்திற்கு வாங்கிய மக்கள் இப்பஞ்ச காலத்தில் ஒரு மரைக்கால் அரிசிக்கு நான்கு பணம் கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

**வரிகள்**

கி.பி.1529-ஆம் ஆண்டு மதுரையில் நேரடி ஆட்சியை விஸ்வநாதர் தொடங்கினார். இவரும் இவரது வாரிசுகளும் விஜயநகரப் பேரரசர்கள் பின்பற்றி வந்த வரி விதிப்பு முறையைப் பின்பற்றினர். கிராமத்தின் வருவாயை மணிக்காரன் அல்லது அம்பலகாரன் வசூல் செய்தான். இவ்வருவாய் மாகாணத்தலைவர் மூலம் அரசு கருவூலத்தில் சேர்க்கப்பட்டது. நாயக்கர் ஆட்சி காலத்தில் பல்வேறு வரிகள் மக்கள் மீது சுமத்தப்பட்டன. அவற்றுள் நிலவரி, சொத்துவரி, வணிகவரி, தொழில்வரி, கைத்தொழில்வரி, சமுதாய இனவரிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவைகளாகும். வரி விதிப்பிற்கு வசதியாக நிலங்கள் நன்செய், புன்செய் என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. நிலத்தின் தன்மை, விளச்சலின் அளவு, விவசாயச் செலவு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரிகள் விதிக்கப்பட்டன என சான்றுகள் குறிப்பிடுகின்றன. அதைப்போன்று வீடுகள் கூரைவீடு, மாடிவீடு, சிறுவாசல்வீடு, பெருவாசல் வீடு என பிரிக்கப்பட்டு அவற்றின் தன்மையைப் பொறுத்து வரிகள் விதிக்கப்பட்டன. மேலும் ஆடு, மாடு, பசு, எருது ஆகியவற்றிற்கும் வரிகள் விதிக்கப்பட்டன.

மேற்குறிப்பிட்ட வரிகளைத் தவிர படைச்செலவிற்கென தனிவரி பிரிக்கப்பட்டது. இது படைக் கொடை எனப்பட்டது. மக்கள் விலல் வரி, சூல வரி ஆகிய வரிகளைக் செலுத்தியதாகச் சான்றுகள் குறிப்பிடுகின்றன. சமுதாயத்தில் காணப்பட்ட வலங்கை, இடங்கைப் பிரிவினரும் தங்களது உரிமைகளைப் பாதுகாக்க வரி செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஆலய விழாக்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்த மக்கள் இவ்விழாக்களுக்கென்று தனி வரிகளைச் செலுத்தினர். இது பிடாரிவரி எனப்பட்டது. மேலும் திருமணக்காலங்களில் மணவீட்டார் அரசுக்கு வரி செலுத்த வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இவற்றைத் தவிர தொன்று தொட்டு மக்கள் செலுத்தி வந்த பாசனவரி, படகுவரி, தலையாரிக்கம், நாட்டுக் கணக்கு வரி, இராயசவர்த்தனை, அவசர வர்த்தனை, அதிகாரவர்த்தனை, நிருபசம்பளம், அமுக்கு நீர்ப்பாட்டம், பாடி காவல், கலப்பைவரி, முதலிய வரிகளும் தொடர்ந்து நிலவில் இருந்தன. இவ்வரிகளைத் தவிர காடுகள், நீதிமன்றங்கள் முத்துக்குளித்தல், ஆகியவற்றின் மூலம் அரசுக்கு வருவாய் வந்தது. மேலும் அயல்நாட்டவரும், பாளையக்காரர்களும் அரசுக்கு வரி செலுத்தி வந்தனர். விளைச்சலில் பாதி வரியாகச் செலுத்தப்பட்டு வந்தது. இவ்வரி பணமாகவோ, பண்டமாகவோ செலுத்தப்பட்டது. பொதுவாக நன்செய் வரி பண்டமாகவும், புன்செய் பணமாகவும் செலுத்தப்பட்டு வந்தன. இக்காலத்தில் வரிக்கொடுமை மக்களை வாட்டியது. சில வேளைகளில் வரி கொடுக்க இயலாது. மக்கள் திண்டாடினர். மக்கள் முறையீட்டின் பேரில் அரசன் வரிச்சலுகை அளித்ததாகவும் சான்றுகள் குறிப்பிடுகின்றன.

**தொழில்வரி**

நாயக்கர்கள் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கவில்லை. எனினும் தொன்றுதொட்டு நிலவிவந்த தொழில்களை சமுதாயத்தின் வெவ்வேறு பிரிவுகளில் காணப்பட்ட மக்கள் செய்து வந்தனர். குறிப்பாக இங்கு காணப்பட்ட சாலியன், கருமான், தச்சன் கம்மாளன், குயவன், மயிர்வினைஞன், வண்ணான் செம்படவன் முதலியோர் தாங்கள் செய்து வந்த தொழிலுக்கு அரசுக்கு வரி செலுத்தினர். மேலும் பட்டயங்கள் பரத்தையர் செலுத்திய வரிகளையும், உப்புகள் ஆகியவற்றின் மீது சுமத்தப்பட்ட வரிகளையும் குறிப்பிட்டுள்ளன. அக்காலத்தில் மக்களது அன்றாட தேவைகளுக்கான பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் பல காணப்பட்டன. அவைகளிலிருந்தும் அரசு வரியை வசூல் செய்தது. அவற்றுள் தறிக்கடமை, செக்குக்கடமை, அரிசிக்காணம், பொன்வரி, செம்பொன் வரி, மேய்ச்சல்வரி, பட்டாடை நூலாயம், மரக்கலவரி, உலைவரி முதலியனக் குறிப்பிடத்தக்கவைகளாகும். மேலும் இக்காலத்தில் தொழில் வரியும் நிலவியிருந்தது. குறிப்பாக நீதிபதிகள், கிராமத்தலைவர், உயர் அரச அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து இவ்வரி வசூலிக்கப்பட்டது.

**வணிக வரி**

நாயக்கர்கள் காலத்தில் வணிகமும் வளர்ச்சியுற்றிருந்தது. இக்காலத்தில் உள்நாட்டு வணிகமும், அயல்நாட்டு வணிகமும், சிறப்புற்று விளங்கின. வெளிநாட்டு வணிகம் பெரும்பாலும் ஐரோப்பிய வணிகர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களை வாங்கி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதிலும், அயல்நாட்டுப் பண்டங்களை உள்நாடுகளில் விற்பனை செய்வதிலும் இவர்கள் முனைப்புடன் காணப்பட்டனர். அரசிடமிருந்து பல்வேறு சலுகைகளைப் பெற்றிருந்தமையால் இவர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. எனவே அரசு உள்நாட்டுப் பண்டங்களிலிருந்தும் அங்காடிகளிலிருந்தும் வணிக வரியை வசூலித்து வந்தது. நாட்டின் முக்கிய இடங்களில் ஏராளம் சந்தைகள் (அங்காடிகள்) காணப்பட்டன. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் இங்கு விற்பனைக்குக் கொண்டுவரப்பட்டன. அங்காடிகளில் சுற்றித்திரிந்து பொருட்களை விற்கும் சிறு வணிகரும், நிலையாக இருந்து விற்பனை செய்யும் பெருவணிகர்களும் காணப்பட்டனர். இவர்களிடமிருந்து அரசு வணிக வரியை வசூல் செய்தது. சமூகத்தில் வணிகர்கள் அதிக செல்வாக்குப் பெற்று திகழ்ந்தனர். எனவே இவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கப்பட்டது. அக்காலத்தில் கள்ளர் தொல்லை அதிகமாகக் காணப்பட்டதால் வணிகர்கள் இடம் விட்டு இடம் செல்லும் போது கூட்டம் கூட்டமாகச் சென்றனர். பொருட்களைக் கொண்டு செல்ல நாட்டு வண்டிகளைப் பயன்படுத்தினர் போக்குவரத்திற்கென அக்காலத்தில் ஏராளம் ரோடுகள் காணப்பட்டன. இந்த ரோடுகள் முக்கிய நகரங்களோடும் அங்காடிகளோடும் இணைக்கப்பட்டிருந்தன. இச்சாலைகளில் கொண்டு செல்லும் பொருட்கள் மீது அரசு சுங்கவரியை வசூல் செய்தது. இதற்கென தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தனர்.

அடிக்கடி நிகழ்ந்த போர்களும், பஞ்சங்களும் வணிக வளர்ச்சிக்குப் பெரும் தடையாக இருந்தன.

**செலவீனங்கள்**

அரசின் வருவாய்க்கு ஏற்ப செலவுகளும் காணப்பட்டன. அரசின் செலவீனத்தில்குறிப்பிடத்தக்கது திறை ஆகும். விக்கோ என்ற பாதிரியார் கி.பி.1611-ஆம் ஆண்டு தான் எழுதிய கடிதத்தில் தஞ்சை நாயக்கர்கள் ஆறு முதல் பத்து மில்லியன் பிராங்குகளை விஜயநகரப் பேரரசுக்குத் திறையாகச் செலுத்தி வந்தனர் எனக் குறிப்பிட்டுள்ளார். இதைத் தவிர படையைப் பராமரிப்பதற்கு ஒரு கணிசமான தொகைச் செலவு செய்யப்பட்டது. எஞ்சிய தொகை அரசு நிர்வாகத்திற்காகவும், மக்கள் நலத்திட்டங்களுக்காகவும் செலவு செய்யப்பட்டன. பொதுவாக அரண்மனைகள், ஆலயங்கள், அரசு கட்டிடங்கள் போன்றவற்றைக் கட்டுவதற்கும் நீர்ப்பாசன வசதியைப் பெருக்குவதற்கும், மருத்துவ வசதியை பெருக்குவதற்கும், அங்காடிகளை அமைப்பதற்கும் ரோடுகள் அமைப்பதற்கும், காடுகள் அழிப்பதற்கும், தண்ணீர்ப் பந்தல் அமைப்பதற்கும், சிற்பங்கள் அமைப்பதற்கும் அரசு தனது வருவாயின் ஒரு பகுதியைச் செலவு செய்தது. அக்காலத்தில் நிலவிய கொடிய பஞ்சங்களும், அடிக்கடி நிகழ்ந்த புரட்சிகளும், படையெடுப்புக்களும் நாட்டின் பொருளாதாரத்தைப் பெருமளவு பாதித்தது. இருப்பினும் விவசாய வசதிகளைப் பெருக்கி வருவாயைப் பெருக்குவதில் அரசு அக்கரை காட்டியது.

## தமிழ்நாடும் மைசூர் போர்களும்

**மைசூர் மன்னர்கள்**

**தமிழ்நாடு ஆக்கிரமிப்பு**

16-ஆம் நூற்றாண்டின் இறுதியில் மைசூர் விஜயநகரப் பேரரசின் பிடிக்குள் இருந்தது. ராஜா உடையார் (1578-1617) விஜய நகரப் பேரரசர் இரண்டாவது வெங்கடாவின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டிருந்தார். 17-ஆம் நூற்றாண்டில் மைசூர் மன்னர்கள் தங்களது சுதந்திரத்தை நிலை நாட்டத் தலைப்பட்டனர். சாமராஜ உடையார் (1617-1637), கந்திராவ ராஜா I (1638-1659), தோதா தேவ ராஜா (1659-1672) ஆகியோர் தங்களது தன்னாட்சியை நிலைப்படுத்திக் கொண்டனர். தோதா தேவ ராஜா மதுரை, தஞ்சாவூர், செஞ்சி நாயக்கர்களின் கூட்டுப் படையெடுப்பைத் தோற்கடித்தார். இவருக்குப் பின் வந்த சிக்கதேவ ராயா (1672-1704) தனது ஆட்சியைத் தெற்கே பழநி வரைக்கும், கிழக்கே சேலம் வரையும் விரிவுபடுத்தினார், பழநியும் சேலமும் மைசூரின் பகுதிகளாயின.

**அமைச்சர் அபகரிப்பு**

18-ஆம் நூற்றாண்டில் மைசூர் மன்னர்களின் திறமையின்மையால் அமைச்சர்கள் அதிகாரத்தை அபகரித்துக் கொண்டனர். சிக்கதேவராயாவுக்குப் பின் வந்த கந்திராவா (மூக்கரசு, 1704-1713) ஒரு செவிட்டு ஊமை! தோடகிருஷ்ண ராஜா

(1713-1731) அரச பதவிக்கு அருகதையற்றவர். சாம ராஜாVII (1731-1734)வின் கீழ் பணிபுரிந்த தளவாய் தேவராஜாவும், நிதி அமைச்சர் நஞ்சராஜாவும் சதி செய்து மன்னரைக் கைது செய்து அதிகாரத்தைக் கைப்பற்றினர். ஐந்து வயதேயான சிக்ககிருஷ்ண ராஜாவை (1734-1766) அரியாசனத்தில் அமர்த்தி இவர்கள் ஆட்சி நடத்தினர். சில ஆண்டுகளில் நஞ்சராஜா இறந்தபின் இவருடைய பெயரைக் கொண்ட (நஞ்சராஜா) தேவராஜாவின் இளைய சகோதரர் அதிகாரத்தைத் தன் கையில் எடுத்துக்கொண்டார். இக்குழம்பிய குட்டையில் மீன் பிடித்த ஐதர் அலி மைசூர் அரசியலில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தினார். ஐதர் அலி நஞ்ச ராஜாவைக் கைது செய்து கொன்றுவிட்டார் (1770). அதன்பின் ஐதர் அலியும், அவரது மகன் திப்பு சுல்தானும் மைசூரின் முடிசூடா மன்னர்களாயினர். ஐதர் அலியின் எழுச்சி மைசூர் போர்களைத் தவிர்க்க முடியாததாக்கி விட்டது.

**முக்கோணப்போராட்டம்**

18-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தென்னிந்தியாவில் எங்கு போர் நடைபெற்றாலும் அதன் தாக்கம் தமிழ்நாட்டைப் பாதித்தது. பாதிப்பு குறைவாக இருந்தாலும் அதைக் குறைத்து மதிப்பிடமுடியாது. மைசூர் போர்கள் ஐதர் அலி திப்பு சுல்தான், ஐதராபாத் நிஜாம், மராத்தியர் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட முத்தரப்பு ஆதிக்கப் போராட்டமாகும். இம்முக்கோணப் போராட்டத்தில் ஆற்காடு நவாபும், ஆகிங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் பங்கேற்க வேண்டியது காலத்தின் கட்டாயமாயிற்று.

**மைசூர் போர்கள்**

**முதல் மைசூர் போர், 1767 – 1769**

காரணம் : முதல் மைசூர் போருக்காண காரணங்கள் பல. முதலாவதாக ஐதர் அலியின் அசாதார எழுச்சி ஆங்கிலேயருக்கும் மராத்தியருக்கும் அச்சுறுத்தலாக இருந்தது. இரண்டாவதாக, ஐதர் அலிக்கும் பிரெஞ்சுக்காரருக்குமிடையே இருந்த தொடர்பு ஆற்காட்டு நவாப் முகமது அலிக்குச் சவாலாக இருந்தது. மூன்றாவதாக, எதிரியின் நண்பன் எதிரி என்பதற்கேற்ப பிரெஞ்சுக்காரர்கள் நண்பரான ஐதர் அலி நவாப் முகமது அலியை ஆதரித்த ஆங்கிலேயருக்கு எதிரியானார்.

நான்காவதாக, ஐதராபாத் நிஜாம் மதில் மேல் பூனையாக இருந்தமையால் ஆங்கிலேயர் அவருடன் ஒரு உடன்படிக்கை செய்து கெண்டனர் (1766). அதன்படி நிஜாமுக்கும் ஐதர் அலிக்குமிடையே மோதல் ஏற்பட்டால் ஆங்கிலேயர் நிஜாமுக்கு ஆதரவாக இருப்பர். இந்த உடன்படிக்கை ஐதர் அலிக்கும் ஆங்கிலேயருக்குமிடையே இருந்த அவநம்பிக்கையையும் விரோதத்தையும் அதிகரித்தது. ஐந்தாவதாக, ஆற்காட்டு நவாபு முகமது அலியுடன் இருந்த நிலத் தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான தருணத்தை எதிர்பார்த்திருந்தார் ஐதர் அலி. ஆறாவதாக, ஐதராபாத் நிஜாம் ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை மீறி ஐதர்

அலியுடன் சேர்ந்து கொண்டதும், அவ்விருவரும் சேர்ந்து கர்நாடகத்தின் மீது படையெடுத்ததும் முதல் மைசூர் போருக்கு உடனடிக் காரணமாயிற்று.

**போரின் போக்கு**

**கர்நாடகப் படையெடுப்பு**

ஐதர் அலியும் கட்சி மாறிய நிஜாம் முகமது அலியும் கர்நாடகத்தின் மீது படையெடுத்தனர் (1767). இப்படையெடுப்பை எதிர்பார்த்த ஆற்காடு நவாபும், ஆங்கிலேயரும் அச்சவாலை எதிர்கொள்ளத் தயாராக இருந்தனர். ஆங்கிலப் படைத்தளபதிகளான மித்தும், உட்டும் ஐதர் அலி-நிஜாம் கூட்டுப்படையை முறையே வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள சங்கமாவிலும், திருவண்ணாமலையிலும் தோற்கடித்தனர். ஆங்கிலப் படையால் கொங்கு நாட்டுப்பகுதிகளை அழிக்க முடிந்ததேயன்றி அபகரிக்க முடியவில்லை. சென்னையை நோக்கி விரைந்த ஐதர் அலியின் மகன் திப்புசுல்தான் இப்பின்னடைவை அறிந்து பின்வாங்கிவிட்டார். ஆம்பூரைக் கைப்பற்றும் ஐதரின் முயற்சியும் தோல்வி அடைந்தது. வங்காளத்திலிருந்து வந்த ஒரு ஆங்கிலப்படைப்பிரிவு நிஜாமின் நிலப்பகுதியின் மீது படையெடுத்தது. அதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த நிஜாம் மீண்டும் கட்சிமாறி ஆங்கிலேயர் பக்கம் வந்தார். முன்னமேயே ஆங்கிலேயருடன் செய்து கொண்ட உடன்படிக்கையைப் பின்பற்ற உடன்பட்டார்.

தோல்வி கண்டு துவண்டு போகாத ஐதர் அலி 1768 நவம்பர் மாதம் கோடை இடியெனப் படையெடுத்துச் சென்று சேலத்துக்கு வடகிழக்கே உள்ள பரமஹால் என்றழைக்கப்பட்ட 12 மஹால்களைக் கைப்பற்றினார். மேலும் பல இடங்களை ஆக்கிரமித்த பின்னர் கரூரைப் பிடித்தார். ஆங்கிலத்தளபதி நிக்சனைத் தோற்கடித்த ஈரோட்டைக் கையகப்படுத்தினார் (1769). கரூர் சூறையாடப்பட்டது. பசலுல்லாகான் தலைமையில் ஐதரின் மற்றொரு படைப்பிரிவு மதுரை மற்றும் திருநெல்வேலி நோக்கி விரைந்தது. ஐதர் அலி தஞ்சாவூர் மீது படையெடுத்தபின் கடலூருக்குச் சென்றார்.

**அமைதி உடன்படிக்கை**

ஐதர் அலியின் சூறாவளிப்படையெடுப்புகளால் ஆங்கிலேயர் அதிர்ந்து போயினர். கெஞ்சினால் மிஞ்சும், மிஞ்சினால் கெஞ்சும் ஆங்கிலேயர் ஐதர் அலியுடன் சமரசப்பேச்சுக்கும் சமாதானத்துக்கும் வர சம்மதித்தனர். அதற்கென தளபதி புரூக் என்பவரை ஐதர் அலியிடம் தூது அனுப்பினர். நவாப் முகமது அலியுடன் பேசவிரும்பாத ஐதர் அலி சென்னை சென்று ஆங்கிலேயரிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் விளைவாக இருசாராருக்குமிடையே அமைதி உடன்பாடு ஏற்பட்டது (1769 ஏப்ரல்).

**உடன்படிக்கை விதிகள்**

ஐதர் அலியின் கை மேலோங்கி இருந்தமையால் அவரே அமைதி உடன்படிக்கையின் விதிகளைத் தீர்மானித்தார். அதன்படி 1) இருசாராரும் கைப்பற்றிய இடங்களைத்திருப்பிக்கொடுக்க வேண்டும். 2) விதிவிலக்காக ஐதர் அலி

கைப்பற்றிய கரூரை அவரே தக்கவைத்துக்கொள்ளலாம். 3) தற்காப்புப்போரின்போது ஒருவருக்கொருவர் பரபரம் உதவி செய்து கொள்ளல். இந்த விதியின்படி ஐதர் மராத்தியருடன் போரிட நேர்ந்தால் ஆங்கிலேயர் அவரை ஆதரிக்க வேண்டும் என்பதை உறுதி செய்து கொண்டார்.

ஐதர் அலி ஆங்கிலேயருடன் செய்து கொண்ட அமைதி உடன்படிக்கை அவரது நியாய உணர்வுக்கும், பெருந்தன்மைக்கும், ராஜதந்திரத்துக்குமான எடுத்துக்காட்டாகக் கருதப்படுகிறது. பெருக்கத்து வேண்டும் பணிதல் (குறள், 963) என்ற உயர் நெறிக்கேற்ப நடந்து கொண்டார் ஐதர் அலி. ஆங்கிலேயர் ஐதர் அலியுடன் தோல்வி அடைந்தது. அவர்களது ராணுவ வலிமையைப் பெரிதும் பாதித்துவிட்டது. சுயநலத்துக்காக திறமையற்ற ஆற்காடு நவாபைத்தொடர்ந்து ஆதரித்தமைக்காக ஆங்கிலேயர் கொடுத்த விலையே இத்தோல்வியாகும்.

**தோல்விக்காரன காரணங்கள்**

ஆங்கிலேயர் ஐதர் அலியுடன் தோல்வியடைந்ததற்கான காரணங்கள் : 1) ஆங்கிலேயரிடம் விரைந்து செல்லக்கூடிய குதிரைப்படை இல்லை. 2) தளபதிகள் மித்தும், உட்டும் ஒருங்கிணைந்து செயல்படவில்லை. 3) சென்னை கவுன்சிலின் குறுக்கீடு, 4) சென்னை அரசாங்கத்தின் குறுகிய கண்ணோட்டம், நிலையான கொள்கை இன்மை, 5) ஆங்கிலேயர் நவாப் முகமது அலியுடன் வைத்துக்கொண்ட சந்தர்ப்பவாத கூடாநட்பு, 6. ஐதர் அலியின் வலிமைமிக்க விரைந்து செல்லக்கூடிய குதிரைப்படை மற்றும் அவருடைய தெளிவான திட்டம், இராணுவ உத்தி, மதிநுட்பம்.

**இரண்டாம் மைசூர் போர், 1780-1784 காரணம்**

முதல் மைசூர் போர் 1769-ஆம் ஆண்டு ஐதர் அலிக்கும் ஆங்கிலேயருக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட ‘அமைதி உடன்படிக்கை’ யின்படி முடிவுக்கு வந்தாலும் அந்த உடன்பாடே அடுத்த போருக்கான விதைகளைத் தாங்கிக் கொண்டிருந்தது. இரண்டாம் மைசூர் போருக்கான காரணங்களைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம். 1) ஐதர் அலி ஆங்கிலேயருடன் உடன்பாட்டுக்கு வந்தாலும் அவர்களின் நேர்மை, நாணயத்தின்மீது அவருக்கு நம்பிக்கை இல்லை. உடன்படிக்கை செய்து கொண்ட அடுத்த ஆண்டே (1770) மைசூர் மராத்தியரால் தாக்கப்பட்ட போது ஆங்கிலேயர் அவருக்கு உதவவில்லை ஐதரின் இந்த அவநம்பிக்கையே இரண்டாம் மைசூர் போருக்கான அடிப்படைக்காரணம் 2) 1770-இல் சென்னை ஆளுநராகப் பொறுப்பேற்ற சர் ஜான் லிண்ட்சே நவாப் முகமது அலியின் ஆலோசனைப்படி ஐதரின் நண்பரான ஐதராபாத் நிஜாமுக்கு எதிராக மராத்தியருடன் உடன்பாட்டுக்கு வந்தது வெந்த புண்ணில் வேல் பாய்ச்சியதைப் போல் ஆயிற்று. 3) ஐதர் பாண்டிச்சேரி ஆளுநர் பெல்லிகோம்பே மூலமாக பிரான்சுடன் தொடர்பு கொண்டு உடன்பாட்டுக்கு வந்தது ஆங்கிலேயரை ஆத்திரமடையச் செய்தது. 4) ஐதர் அலி அவருக்குச் சொந்தமான நிலப்பகுதிகள் வழியாக ஆங்கிலப்படைகள் செல்லக்கூடாது என்று தடை செய்தது எரிகின்ற நெருப்பில் எண்ணெய் ஊற்றியதைப்போல் ஆயிற்று. 5) ஐதர் அலி மாஹி வழியாக ஐரோப்பாவிலிருந்து போர்த்தளவாடங்கள் பெற்றது

ஆங்கிலேயர் விரோத நடவடிக்கையாகக் கருதப்பட்டது. 6) ஐதர் அலி தரங்கம்பாடியிலிருந்த ஜெர்மன் சமயப் பரப்பூழியர் சுவாட்சுடன் நெருங்கிய தொடர்பு கொண்டது ஆங்கிலேயருக்குப் பிடிக்கவில்லை. 7) சென்னை அரசாங்கம் தூதுவர் கிரே மூலம் அனுப்பிய அன்பளிப்பை ஐதர் ஏற்க மறுத்துவிட்டார். 8) யாவற்றுக்கும் மேலாக ஐதர் அலி ஆங்கிலேயருக்கு எதிராக நிசாமுடனும், மராத்தியரோடும் முத்தரப்பு கூட்டு சேர்ந்தது (1780) இரண்டாம் மைசூர் போருக்கான உடனடிக் காரணமாயிற்று.

**போரின் போக்கு**

**தமிழ்நாட்டுப் படையெடுப்பு**

ஐதர் அலியின் அசாதாரண அரச தந்திரத்தால் தமிழ்நாட்டில் ஆங்கிலேயரைத் தனிமைப்படுத்திவிட்டார். அவர் நிஜாம் மற்றும் மராத்தியரின் உதவியோடு கர்நாடகத்தின் மீது படையெடுத்தார். ஐதர் தரைவழியாகவும், பிரெஞ்சுப் படை கடல் வழியாகவும் இருமுனைத் தாக்குதலைத் துவக்கினர். ஆங்கிலேயர் மீது இருந்த ஆத்திரத்தால் ஐதர் அலி தமிழ்நாட்டின் மீது சூறாவரி போல் சுழன்றடித்தும் பேரழிவை ஏற்படுத்தினார். ஐதரின் படை திறமைமிக்க பிரெஞ்சுத் தளபதிகளால் வழி நடத்தப்பட்டது. படைப்பிரிவுகள் கட்டுப்பாட்டுடன் அமைக்கப்பட்டிருந்தன. உளவுத் துறை ஐதரின் நிதி அமைச்சர் பூர்ணய்யாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

ஐதரின் கூட்டுப்படையை எதிர்கொள்வதற்காக ஆங்கிலத் தளபதி சர் ஹெக்டர் மன்றோ காஞ்சிபுரத்துக்கு அணிவகுத்துச் சென்றார். ஐதர் அவரை போலிலூர் என்ற இடத்தில் தோற்கடித்துக் காயப்படுத்தினார். மன்றோ சென்னைக்குத் திரும்பிவிட்டார். ஐதர் அலி ஆற்காட்டைக் கைப்பற்றினார் (1780 நவம்பர்) தோல்வியை சந்தித்த ஆங்கிலேயர் அவசர உதவி கோரி கல்கத்தா அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

**மறைமுகத்தாக்குதல்**

ஆங்கிலேயரின் வேண்டுகோளுக்கிணங்க ஆளுநர் ஜெனரல் வாரன் ஹேடிங், சர் ஐயர்கூட் என்ற திறமையும் அனுபவமுமிக்க தளபதியை அனுப்பிவைத்தார். விரைந்துவந்த கூட் வந்தவாசி உள்ளிட்ட பல இடங்களை மீட்ட பின்னர் பாண்டிச்சேரி நோக்கி விரைந்தார். ஐதர் அலி ஆங்கிலேயருடன் நேரடிப் போரைத் தவிர்த்து அவர்களுக்குப் பொருட்கள் செல்வதைத் தடுத்து நிறுத்தினர். தஞ்சாவூரைச் சூரையாடினர். ஐதரைத் துரத்திச் சென்ற கூட்டத்தை சிதம்பரத்தில் தோல்விகண்டார். ஆனால் ஐதரைப் போர்ட்நோவோவில் தோற்கடித்தார் (1781 ஜீலை). ஐதர் பலத்த இழப்போடு தப்பிச் சென்றார்.

**வெற்றிமுகம்**

1781-ஆகஸ்டு மாதம் போலிலூரில் நடைபெற்ற சண்டை வெற்றிதோல்வியின்றி முடிந்தது. ஐதர் வேலூரை முற்றுகையிட்டார். சோலிங்கநல்லூர் சண்டையில் கூட்

படையைத் தோற்கடித்தார். ஆங்கிலேயர் தளபதி மன்றோவின் தலைமையில் நாகப்பட்டினத்தைக் கைப்பற்றினார் (1781 நவம்பர்). எனினும் தளபதி பிரெத்வெயிட் கும்பகோணத்தில் திப்பு சுல்தானிடம் தோல்வி அடைந்தார். அவரைத் திப்பு கைது செய்தார்.

**தொடர் வெற்றி**

1782 ஏப்ரல் மாதம் பிரெஞ்சு தளபதி புஸி கடலூர் வந்தடைந்தார். தளபதி சப்ரென் ஆங்கிலேயரை ஐந்து முறை சோழமண்டலக் கடல் பகுதியில் எதிர் கொண்டார் (1782 பிப்ரவரி, ஏப்ரல், ஜீலை, செப்டம்பர், 1783 ஜீன்). ஐதர் அலி பிரெஞ்சுத் துணையுடன் கடலூரைக் கைப்பற்றினார். சென்னை கடுமையான பஞ்சத்தின் பிடியில் சிக்கியிருந்தது (1782 அக்டோபர்). ஐதரின் உதவிக்கு வந்த திப்புவை ஆங்கிலேயர் தெற்கு மலபாரில் உள்ள பொன்னேரியில் தோற்கடித்தனர். 1782 நவம்பர் துவக்கத்தில் ஆற்காட்டுக்கு மேற்கே முகாமிட்டிருந்த ஐதர் அலி புற்று நோயால் இறந்தார். அவரது இறப்பு இரகசியமாகக் காக்கப்பட்டது.

**மங்களூர் உடன்படிக்கை**

1783 ஆம் ஆண்டு பம்பாயிலிருந்து வந்த ஆங்கிலத் தளபதி மாத்யூ மங்களூரைக் கைப்பற்றினார். பெட்னூர் சரணடைந்தது (1783 பிப்ரவரி) பிரெஞ்சு தளபதி புஸி கடலூர் வந்தடைந்தார் (ஏப்ரல்). அவரை எதிர்க்கொள்ள ஆங்கிலத் தளபதி டுவர்ட் கடலூர் விரைந்தார். இம்மோதல்களில் இருதரப்பினருக்கும் வெற்றி தோல்வியின்றி இழுபறியில் இருந்தது. இதற்கிடையே இங்கிலாந்துக்கும் பிரான்சுக்குமிடையே செய்து கொள்ளப்பட்ட பாரி அமைதி உடன்படிக்கையால் இந்தியாவில் ஆங்கில பிரெஞ்சுப்போராட்டம் முடிவுக்கு வந்தது. பாண்டிச்சேரி பிரெஞ்சுக்காரரிடம் ஒப்படைக்கப்பட்டது. திப்பு கர்நாடகத்தைக் கைவிட்டு அவரது கவனத்தை மேற்கு மங்களூர் உடன்படிக்கையின்படி இரண்டம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது. இப்போரை மூன்றரை ஆண்டுகால பயனற்ற பொருளற்ற போர் என்று குறிப்பிட்டுள்ளார் பென்டெரல் மூன்.

**விளைவு : மங்களூர் உடன்படிக்கை**

மங்களூர் உடன்படிக்கையின் விளைவுகளாவன : 1. மங்களூர் உடன்படிக்கையால் நான்காண்டுகள் நடைபெற்ற இரண்டாம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது. 2. அவரவர் கைப்பற்றிய இடங்களையும், கைதிகளையும் திரும்ப ஒப்படைத்து விட வேண்டும். இதன் மூலம் இருசாராரும் போர் துவங்குவதற்கு முன்பிருந்த நிலைக்கே திரும்பினர். ஆங்கிலேயர்கள் கைப்பற்றிய கோயமத்தூர், கரூர், தாராபுரம் போன்ற பகுதிகளைத் திருப்பிக்கொடுக்க வேண்டியதாயிற்று. 3. பிரான் திப்புவின் உதவியோடு தென்னிந்தியாவை வெற்றி கொள்ளும் வாய்ப்பை இழந்தது. 4. அதேபோன்று ஆங்கிலேயரும் கர்நாடகத்தைத் தங்கள் வசம் கொண்டுவர முடியாமல் போயிற்று 5. திப்பு மேற்குக் கடற்கரைப் பகுதியில் சில வெற்றிகளைப் பெற்றாலும் அவரது படைபலம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. 6.

திப்புவுக்கு ஆங்கிலேயர் மீதிருந்த கோபமும், வெறுப்பும், காழ்ப்புணர்ச்சியும் பன்மடங்கு அதிகரித்தது. அதுவே அடுத்த போருக்கான அடிப்படை ஆயிற்று.

**மூன்றாம் மைசூர் போர், 1790 – 1792**

**காரணம்**

இரண்டாம் மைசூர் போர் முடிந்த ஆறாண்டுகளில் மூன்றாம் மைசூர் போர் துவக்கப்பட்டது. அதற்கான காரணங்கள் வருமாறு. 1. அரைகுறையாக செய்து கொள்ளப்பட்ட மங்களூர் உடன்படிக்கை குறிப்பாக ஆங்கிலேயருக்குத் திருப்தி அளிக்கவில்லை. 2. 1785ஆம் ஆண்டு கவர்னர் ஜெனரலாகவும், தலைமைத் தளபதியாகவும் பொறுப்பேற்ற காரன்வாலி பிரபு மங்களூர் உடன்படிக்கையை மதிக்காமல் திப்பு சுல்தானின் ஆட்சிக்கு முடிவுகட்டத் தீர்மானித்தார். 3. மங்களூர் உடன்படிக்கைக்குப்பின் திப்புவின் நடவடிக்கைகள் அவரது அகந்தையின் வெளிப்பாடாக இருந்தன. அவர் சுல்தான் பட்டத்தைச் சூட்டிக்கொண்டார். திப்பு தன்னை தேவதூதன் என்று கூறிக்கொண்டு மலபாரில் கட்டாய மதமாற்றத்தில் தீவிரமாக ஈடுபட்டார். இந்துக்களை அவமதித்தார். கோயில்களை இடித்துத்தள்ளினார். சமயப் பொறையின்மையும், இறுமாப்பும், தான்தோன்றித்தனமும் திப்புவின் கண்களை மறைத்து கருத்தைக் குருடாக்கிவிட்டன. எனவே, அவரது நடவடிக்கைகள் நிதானமின்றி இருந்தன. 4. ஆங்கிலேயரை வலுச்சண்டைக்கு இழுத்து அவர்களை இந்தியாவைவிட்டே துரத்தத் திட்டமிட்டார் திப்பு. அதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். இது சம்பந்தமாக கான் டாண்டிநோபிளுக்கும், பாரீசுக்கும் தூது அனுப்பினார். 5. முன்னமேயே மைசூருடன் இணைக்கப்பட்ட துங்கபத்ராவுக்கும் கிருஷ்ணாவுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதிகளை மேலும் விரிவுபடுத்த முனைப்புடன் செயல்பட்டார். 6. திப்புவின் திட்டங்களையும், நடவடிக்கைகளையும் கூர்ந்து கவனித்து வந்த கவர்னர் ஜெனரல் காரன்வாலி தேவையான தடுப்பு ஏற்பாடுகளைச் செய்தார். இக்காரணங்களின் கூட்டு விளைவே மூன்றாம் மைசூர் போராகும்.

**போரின் போக்கு**

கவர்னர் ஜெனரல் காரன்வாலி நிசாம் அலியுடன் புதிய ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் திப்பு சுல்தானை ஆத்திரமடையச் செய்தார். ஆத்திரத்தில் நிதானமிழந்த ஐதர் திருவனந்தபுரத்தைத் தாக்கினார். திருவனந்தபுரத் தாக்குதல் ஆங்கிலேயருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட போர் என்று அறிவித்த காரன்வாலி போருக்குத் தயாராகுமாறு சென்னை அரசாங்கத்துக்குக் கட்டளையிட்டார்.

**முதல் கட்டப் போர்**

1790 மே மாதம் திப்புவுக்கும் ஆங்கிலேயருக்குமிடையே முதல் கட்டப்போர் துவங்கியது. ஆங்கிலேயர் நிசாம் மராத்தியரிடையே முத்தரப்பு கூட்டணி அமைத்தார் காரன்வாலி. தளபதி மெடோ கோயமுத்தூர், திண்டுக்கல் மற்றும் பாலக்காட்டைக் கைப்பற்றினார். தளபதி மாக்வெல் தலைமையில் சென்னை –

வங்காளப்படைப்பிரிவுகள் ஒருங்கிணைக்கப்பட்டன. எனினும் திப்பு சுல்தானின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை அவர் கர்நாடகத்தைக் கொள்ளையடித்துச் சூறையாடினார் திருவண்ணாமலையைக் கைப்பற்றினார்.

**இரண்டாம் கட்டப்போர்**

திப்பு ஆங்கிலேயருக்கிடையேயான இரண்டாம் கட்டப்போர் 1791-ஆம் அண்டு துவங்கியது. இப்போரை சென்னைக்கு வந்த கவர்னர் ஜெனரல் காரன்வாலிசே தலைமையேற்று நடத்தினார். அவர் வேலூருக்கு அணிவகுத்துச் சென்று பின்னர் பெங்களுரைக் கைப்பற்றினார். செரிங்கப்பட்டினம் (ஸ்ரீரங்கப்பட்டினம்) செல்லும் வழியில் அவரை எதிர்த்த திப்புவைத் தோற்கடித்தார். காரன்வாலி பாராமஹால் கோட்டைகளைப் பணியவைத்தார்.

**மூன்றாம் கட்டப்போர்**

இருசாரருக்குமிடையேயான மூன்றாம் கட்டப்போர் 1792-ல் துவங்கிற்று. இம்முறை காரன்வாலி கூட்டணிப் படையுடன் சென்று செரிங்கப்பட்டினத்தை முற்றுகையிட்டார். அபர்குரோம்பே இக்கூட்டுப்படையினருக்குத் தேவையான பொருட்களோடும், பண்டங்களோடும் வந்து சேர்ந்தார். திப்பு வேறு வழியின்றி காரன்வாலி விதித்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டார். காரன்வாலி பிரபு முன்னின்று நடத்திய மூன்றாம் மைசூர் போர் முடிவுக்குவந்தது.

**ஸ்ரீரங்கப்பட்டனம் உடன்படிக்கை, 1792**

ஸ்ரீரங்கப்பட்டனத்தை இழக்க விரும்பாத திப்பு சுல்தான் ஒருதலைப்பட்சமான உடன்படிக்கைக்கு உடன்பட்டார். இந்த ஒப்பந்தத்தின்படி 1. திப்பு தனது ஆள்நிலப்பகுதியில் பாதியை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிட வேண்டும். 2. மூன்று கோடி ரூபாயை இழப்பீட்டுத்தொகையாகச் செலுத்த வேண்டும். 3. இத்தொகை முழுவதுமாக செலுத்தப்படும்வரை திப்புவின் இரணடு மகன்களையும் பணயக் கைதிகளாக ஒப்படைக்க வேண்டும். 4. முத்தரப்பு அணிக்கூட்டாளியான நிசாமுக்கு கடப்பா உள்ளிட்ட மேற்கு மைசூர்ப்பகுதியையும், இழப்பீட்டுத் தொகையில் பாதியையும் கொடுக்க வேண்டும். 5. மற்றொரு கூட்டாளியான மராத்தியருக்கு மைசூரின் வடமேற்குப்பகுதிகள் கொடுக்கப்பட வேண்டும். 6. கூர்க் அரசர் ஆங்கிலக் கம்பெனிக்குக் கப்பம் கட்ட வேண்டும்.

**விளைவுகள்**

இந்த ஒப்பந்தத்தின் விளைவாக ஆங்கிலேயருக்குத் தமிழ் நாட்டில் கோயமுத்தூர், திண்டுக்கல், தர்மபுரி முதலிய மாவட்டங்கள் கிடைத்தன. அதாவது திண்டுக்கல்லும் பாரமகால் பகுதியும் ஆங்கிலேயர் வசமாயிற்று. அதாவது ஆங்கிலேயர் மங்களுர் உடன்படிக்கையால் ஒப்படைத்த கொங்கு நாட்டுப்பகுதிகளை மீண்டும் கைவரப்பெற்றனர். இதன் மூலம் இப்பகுதிகள் வழியாக மைசூர் கர்நாடகத்தின் மீது படையெடுக்க முடியாது. அதேபோன்று மைசூர் ஆட்சியாளர் கூர்க் மூலம் மேற்குப்பகுதிக்குள் நுழைய முடியாது. அதாவது மைசூரின்

படையெடுப்புப் பாதைகள் அனைத்தும் அடைக்கப்பட்டுவிட்டன. இனி மைசூர் மேற்குக் கடற்கரை மூலம் கடல் தொடர்பும் கொள்ள முடியாது. ஸ்ரீரெங்கப்பட்டின உடன்படிக்கையை வெற்றிகரமாக நிறைவேற்றித் தென்னிந்தியாவில் அதிகாரச் சமநிலையை ஏற்படுத்திய கவர்னர் ஜெனரல் வாரன் ஹேடிங், மார்குவி பட்டம் கொடுத்து கவுரவிக்கப்பட்டார். இந்திய ஆட்சியாளர்களிடையே ஆங்கிலேயரின் அந்தஸ்து பன்மடங்கு உயர்ந்தது. 1794இல் திப்பு சுல்தான் இழப்பீட்டுத் தொகையைச் செலுத்தி தனது இரு மகன்களையும் மீட்டுக்கொண்டார்.

**நான்காம் மைசூர் போர், 1799**

**காரணம்**

கவர்னர் ஜெனரல் காரன்வாலி திப்பு சுல்தானைத் தனிமைப்படுத்தி, அதிகாரப் பல்லைப்பிடுங்கி, பலவீனப்படுத்திவிட்டதால் மைசூர் புலி அடங்கிவிடும் என்று எதிர்பார்த்தார். ஆனால் அடிபட்ட புலி மீண்டும் எழுந்து ஆங்கிலேயரை அழித்துவிடத் தீர்மானித்தது. அவமதிக்கப்பட்ட திப்புவுக்கு ஆங்கிலேயர் மீதிருந்த வெறுப்பும், கோபமும் அதிகரிக்கவே செய்தது. தன் வசமிருந்த மங்களூரை மையமாகக் கொண்டு பிரான் போன்ற ஐரோப்பிய நாடுகளுடன் தொடர்பு கொண்டார் திப்பு. குறிப்பாக நெப்போலியனுடன் தொடர்பு கொண்டு அவரிடமிருந்து நட்புக்கடிதமும் பெற்றார். சில பிரெஞ்சு அதிகாரிகளையும் வரவேற்று உபசரித்தார். திப்பு ஆப்கானிஸ்தான் அதிபர் சமான்ஷாவை அணுகி இந்தியா மீது படையெடுக்குமாறு கேட்டுக்கொண்டார். ஆங்கிலேயருக்கு எதிராக பரிசியா, அரேபியா, மொரீஷியஸ் போன்ற நாடுகளின் அதிபர்களுக்குக் கடிதங்கள் எழுதினார். யாவற்றுக்கும் மேலாக இந்தியத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பிரிட்டிஷ் எதிர்ப்புக்கூட்டமைப்பை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். ஆங்கிலேயர் மீதிருந்த வெறுப்பு மிகுதியால் அவர்களை ‘மனிதகுலத்தின் கொடுங்கோலர்கள்’ என்று வர்ணித்தார். திப்புவின் வேண்டுகோளுக்கு இணங்க பிரான்சும் ‘நூறு தொண்டர்களை’ அனுப்பிவைத்தது. திப்புவின் போர் முயற்சியை முறியடிக்க ஆங்கிலேயர் முடிவு செய்தனர்.

புதிதாக கவர்னர் ஜெனரல் பொறுப்பேற்ற வெல்லெஸ்லி திப்புவின் நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனித்து தக்க முன்னேற்பாடுகளை மேற்கொண்டார். நிஜாமுடன் ஒரு துணை உடன்படிக்கை செய்து கொண்டார். 1790-இல் செய்து கொள்ளப்பட்ட முத்தரப்புக் கூட்டணியைப் புதுப்பித்தார். அதன்பின் ஆங்கிலேயருடன் உடன்பாட்டுக்கு வருமாறு திப்பு சுல்தானுக்குக் கடிதங்கள் எழுதினார் வெல்லெஸ்லி. அக்கடிதங்களுக்குப் பலனேதுமின்மையால் வெல்லெஸ்லி நேரடியாக சென்னைக்கே வந்தார். வெல்லெஸ்லியின் சென்னை வருகையால் நான்காம் மைசூர் போர் தவிர்க்க முடியாததாவிட்டது.

**போரின் போக்கு**

ஆங்கிலேயர் நன்கு திட்டமிட்டு மைசூர் தாக்குதலைத் துவக்கினர். மைசூர் இருமுனைத் தாக்குதலுக்கு உட்படுத்தப்பட்டது. தளபதி ஹாரி தலைமையில் சென்னைப்படை கிழக்கிலிருந்து படையெடுத்தது. பம்பாயிலிருந்து வந்த ஒரு படைப்பிரிவு மேற்கிலிருந்து தாக்கியது. கவர்னர் ஜெனரலின் சகோதரர் ஆர்தர் வெல்லெஸ்லி பிரதான படையை முன்னின்று நடத்தினார். இவர்களோடு நிசாம் படையும் பங்கேற்றது. திப்பு கூர்க் எல்லையிலிருந்து பின்வாங்கிவந்தார்.

ஆர்தர் வெல்லெஸ்லி நிசாம் படை உதவியுடன் திப்புவை மைசூரின் மாலவல்லி என்ற இடத்தில் தோற்கடித்தார். ஹாரிசின் சென்னைப்படை காவேரியைக் கடந்து சென்று தலைநகர் ஸ்ரீரங்கப்பட்டனத்தை முற்றுகையிட்டது. திப்பு வேறுவழியின்றி சமரசத்துக்கு வந்தார். ஆங்கிலேயர் இரண்டு நிபந்தனைகளை விதித்தனர். 1. திப்புவுக்குச் சொந்தமான நிலத்தில் பாதியை ஒப்படைக்க வேண்டும். 2. தண்டத்தொகையாக இரண்டு கோடி ரூபாய் கொடுக்க வேண்டும். இந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதைவிட போரிட்டு மடிவதே மேல் என்று எண்ணிய திப்பு போரைத் தொடர்ந்தார். ஸ்ரீரெங்கப்பட்டினம் கடும் தாக்குதலுக்குள்ளாயிற்று. படுகாயமடைந்த திப்புவை ஒரு படைவீரன் சுட்டுக்கொன்றான். பிணக்குவியலில் காணப்பட்ட திப்புவின் உடலை அணிந்திருந்த மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்ட போர் வாள் பட்டையைத் திருடிவிட்டனர் என்றும் கூறப்படுகிறது. ஸ்ரீரங்கப்பட்டினம் கைப்பற்றப்பட்டது. இரண்டு மாத நான்காம் மைசூர் போர் முடிவுக்கு வந்தது.

**விளைவுகள்**

திப்புவின் வீழ்ச்சிக்குப்பின் மைசூர் வெல்லெஸ்லியின் காலடியில் கிடந்ததாகக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர். காலடியில் கிடந்த மைசூரை ஆங்கிலேயரும் அவரது கூட்டாளிகளும் பங்கிட்டுக் கொண்டனர். நான்காம் மைசூர் போரின் விளைவுகள் பல 1. ஆங்கிலேயர் வடக்கு-தெற்கு கன்னட மாவட்டங்கள், மலபார் மாவட்ட வைநாடு, கோயம்புத்தூர், தாராபுரம் உள்ளிட்ட கொங்கு நாடு, செரிங்கப்பட்டனம், மைசூரின் வசமிருந்த கொங்கு நாட்டை கையகப்படுத்திக்கொண்டதன் மூலம் ஆங்கிலேயர் தமிழ்நாட்டின் முக்கிய பகுதியைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தனர். 2. நிசாமுக்கு மைசூருக்கு வடகிழக்கில் அநந்தபூர், சித்தூர், சித்தல்் மாவட்டங்களில் சில பகுதிகள் கொடுக்கப்பட்டன. 3. மூன்றாம் கிருஷ்ணராஜா உடையார் என்ற ஐந்து வயது சிறுவன் அரியணையில் அமர்த்தப்பட்டான். இதன் மூலம் பரம்பரை முடியாட்சி மீட்கப்பட்டது. முன்னாள் அமைச்சர் பூர்ணய்யா மீண்டும் திவான் பொறுப்பேற்றார். அவரே குழந்தை மன்னருக்குக் காப்பாளராக இருந்தார். 4. மைசூர் கர்நாடக மாநிலத்தின் தலைநகராகி, 1610-இல் இழந்த தரவரிசை அந்தஸ்தைப்பெற்றது. 5. தளபதி பாரி மைசூரின் துணைக்காப்பாளராக நியமிக்கப்பட்டார். 6) மைசூருடன் ஆங்கிலேயர் ஒரு துணை உடன்படிக்கை செய்து கொண்டனர். அதன்படி மைசூர் ஆங்கிலக் கம்பெனியின் சார்பு மாநிலமாக்கப்பட்டது. மேலும் நெருக்கடி நேரத்தில்

கம்பெனி மைசூரின் முழு நிர்வாகத்தையும் தன் பொறுப்பில் எடுத்துக்கொள்ளும். 7) திப்புவின் குடும்பத்தினர் வேலூரில் தங்க வைக்கப்பட்டனர். 8) திப்புவை வீழ்த்தி, மைசூரின் 'இந்து' முடியரசை மீட்டு, மைசூரைப் பிரித்து மறுசீரமைத்தமையால் ஆர்தர் வெல்லெஸ்லி உண்மையான கதாநாயகர் ஆனார். பிரிட்டிஷ் அரசாங்கம் அவருக்கு மார்குய என்ற பட்டத்தை வழங்கிப் பெருமை சேர்த்தது.

சுருங்கக்கூறின், ஆங்கிலேயர் தென்னிந்திய கடற்பகுதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்து, பிரெஞ்சு ஆதிக்கத்தை அழித்து பிரிட்டிஷ் பேரரசின் பாதுகாப்பை உறுதி செய்தனர். இந்த ஏற்பாட்டின் விளைவாக பிரிட்டிசார் தென்னிந்தியாவில் போட்டிக்கு இடமில்லா எதிர்ப்பாரற்ற ஆட்சியாளர் ஆயினர் எனக் குறிப்பிட்டுள்ளார் வரலாற்றாசிரியர் ஜான் கே. சீரங்கப்பட்டினத்தாக்குதல் அட்டிலாவைத் தலைகுனிய வைத்திருக்கும் எனவும் குறிப்பிட்டுள்ளார். அவர் (ஹீணர் தலைவன் அட்டிலா ரோமாபுரியைக் காட்டுமிராண்டித்தனமாகத் தாக்கியவர்.)

## தமிழ் இலக்கிய வளர்ச்சி

## (18, 19-ம் நூற்றாண்டுகள்)

கி.பி.18, 19ம் நூற்றாண்டுகளில் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் வியத்தகு மாற்றங்கள் நிகழ்ந்தன. இதற்கு காரணம் ஐரோப்பிய அறிஞர்கள் ஆவார்கள். இவர்கள் சமயத் தொண்டாற்றியதோடு தமிழ் மொழி வளர்ச்சிக்கும் பாடுபட்டனர். இக்காலத்தில் தமிழகத்திற்கு வருகை புரிந்த இத்தாலி, போர்ச்சுக்கல், டென்மார்க்கு, ஸ்காட்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து ஆகிய நாட்டைச் சேர்ந்த சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட அயல்நாட்டு அறிஞர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்கு இடைவிடாது தொண்டு புரிந்தனர்.

### பார்த்லோமியோ டயஸ் சீகன்பால்க்

வீரமாமுனிவருக்கடுத்தப்படி தமிழ் வானில் ஒளிவீசியவர் பார்த்லோமியோ டயஸ் சீகன்பால்க் ஆவார். ஜெர்மனிய லுத்தரன் திருச்சபை போதகரான இவர் ஜெர்மனியில் புல்ஸ்னிடஸ் என்னுமிடத்தில் பிறந்தார். இந்தியாவிற்கு வந்த புரோட்டஸ்டேன்ட் சமயப் போதகர்களுள் இவரும் ஒருவர். இவர் கி.பி.1706-ஆம் ஆண்டு தரங்கம்பாடி வந்த இவர் தம் சமயக் கொள்கைகளை மக்களிடையேப் பரப்பினார். தமிழ் மொழியின்பால் ஆழ்ந்த பற்று கொண்ட இவர் தனது நான்கு ஆண்டுகால ஆராய்ச்சியின் பயனாக சுமார் 40,000 சொற்களைக் கொண்ட அகர வரிசை அகராதியை எழுதினார். கிறிஸ்தவ விவிலிய நூலான பழைய ஏற்பாட்டை தமிழ் மொழியில் மொழி பெயர்பதற்கான முயற்சியிலும் இவர் பாடுபட்டார். கி.பி. 1718ம் ஆண்டு இவர் திடீரென மறைந்ததால் இவரது இம்முயற்சி முற்றுப்பெறவில்லை.

### சுவாட்ஸ்

தரங்கம்பாடிக்கு வந்த ஜெர்மன் நாட்டைச் சார்ந்த கிறிஸ்தவ பாதிரியார்களுள் சுவாட்ஸ்-ம் ஒருவராவார். தரங்கம்பாடி, சென்னை, திருச்சி, தஞ்சை ஆகிய

இடங்களில் இவர் தொண்டாற்றினார். தமிழில் புலமைப்பெற்று விளங்கிய இவர் பல இசைப்பாடல்களை இயற்றினார். தஞ்சை மராத்திய மன்னன் இரண்டாம் சரபோஜியின் ஆசிரியராக இவர் பணிபுரிந்தார். சரபோஜி சேக்ஸ்பியரின் நாடகங்களை மனப்பாடம் செய்ய சுவாட்ஸ் பெரிதும் உதவிபுரிந்தார். இன்று தஞ்சையில் சிறந்து விளங்கும் சரஸ்வதி மஹால் நூல்நிலையம் சுவாட்ஸ்-ன் ஆலோசனையின் பேரில் சரபோஜி நிறுவினார் என சான்றுகள் குறிப்பிடுகின்றன.

பிரான்ஸிஸ் வைட் எல்லில்

நிர்வாகத்துறை ஊழியராக பணிபுரிந்து தமிழ் தொண்டாற்றிய ஆங்கிலேய அறிஞர் பிரான்ஸிஸ் வைட் எல்லிஸ் என்பவராவார். இவர் கி.பி.1796ஆம் ஆண்டு சென்னை வந்தார். வடமொழியையும், திராவிட மொழியையும் இவர் கற்றுத் தேர்ந்தார். தமிழில் புலமை பெற்றுவிளங்கிய இவர் தமிழ் உரைநடை நூல் ஒன்றையும், திருக்குறள் பற்றிய உரையையும் எழுதினார். இவை தமிழுக்கு இவர் ஆற்றிய அரிய தொண்டாக கருதப்படுகிறது.

**இராபர்ட் கால்ட்வெல்**

19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகத்தின் தென்பகுதிக்கு கிறிஸ்தவ சமயப்பணிபுரிய வந்த ஆங்கிலேய தமிழ் அறிஞர் இராபர்ட் கால்டுவெல் என்பவராவார். இவர் தென்னிந்திய மொழிகளின் தன்மைகளையும், சிறப்புகளையும் ஆராய்ந்து 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்னும் நூலை தமிழ் மொழியில் இயற்றினார். ஒப்பற்ற சிறப்பு வாய்ந்த இந்நூல் தமிழ் மொழியின் சிறப்பை உலகறியச் செய்தது. இவரது நூலை மையமாகக் கொண்டு ஒப்பிலக்கண ஆராய்ச்சி இன்றும் தமிழகத்தில் காணப்படும் பல்வேறு பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தின் தென் மாவட்டங்களில் ஒன்றாகிய திருநெல்வேலியோடு நெருங்கிய தொடர்பு கொண்டு விளங்கிய இவர் 'திருநெல்வேலியின் வரலாறு' என்னும் நூலையும் எழுதினார். இவற்றைத்தவிர ஏராளம் தமிழ் நூற்களை பிறமொழிகளில் மொழிபெயர்த்தார். இவரது தமிழ் தொண்டைத் தமிழகம் இன்றும் நினைவு கூறுகிறது.

**ஜி.யு.போப்**

தமிழ் மொழிக்கு தொண்டாற்றிய ஆங்கிலேய அறிஞர்களுள் ஒருவர் ஜி.யு.போப் ஆவார். தமிழ் மொழியில் சிறந்த பற்று கொண்டு அதைக் கற்றுத்தேர்ந்த போப் தன்னை ஒரு 'தமிழ் மாணவன்' என பெருமிதத்தோடுக் கூறினார். சங்க இலக்கியங்களுள் ஒன்றாகிய நாலடியாரையும், சைவ சமய நூலாகிய திருவாசகத்தையும் இவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து தமிழ் மொழி இலக்கியங்களின் பெருமையை உலகறியச் செய்தார். மேலும் மொழியியல், ஒலியியல் ஆராய்ச்சியையும் இவர் மேற்கொண்டார்.

கிறிஸ்தவ சமயத்தைப் பரப்பும் நோக்கோடு தமிழகம்வந்து தமிழ் மொழியைக்கற்று தமிழ் தொண்டாற்றிய ஆங்கிலேய தமிழ் அறிஞர்களைத்தவிர,

அச்சமயத்தைத் தழுவிய தமிழ் அறிஞர்களும் தமிழ் தொண்டாற்றியுள்ளனர். அவர்களுள் வேதநாயக சாஸ்திரி, வேதநாயகம்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, ஆபிரகாம் பண்டிதர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவார்கள்.

**வேத நாயக சாஸ்திரி**

தமிழ் மொழிக்குத் தொண்டாற்றிய தமிழ் நாட்டைச் சார்ந்த கிறிஸ்தவர்களுள் ஒருவர் வேதநாயக சாஸ்திரி ஆவார். இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் 1774ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7ம் நாள் பிறந்தார். இசையுடன் கூடிய தமிழ் பக்திப்பாடல்களை இவர் இயற்றினார். இவர் பாடிய பாடல்களுக்கு கிறிஸ்தவ மக்களிடையே பெரும் வரவேற்பு இன்றும் காணப்படுகிறது.

வேத நாயகம் பிள்ளை

வேதநாயக சாஸ்திரியைப் போன்றுதமிழ் தொண்டு புரிந்த மற்றோர் அறிஞர் வேதநாயகம் பிள்ளை ஆவார். இவர் சீர்காழி, மாயவரம் ஆகிய இடங்களில் மாவட்ட நீதிபதியாக பணியாற்றியுள்ளார். புதினங்கள் எழுதுவதில் இவர் வல்லவர். இவர் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் சிறப்பு வாய்ந்ததாகும். இது தமிழ் மொழியின் முதல் புதினம் என்று கருதப்படுகிறது. பல இசைப்பாக்களையும், கவிதைகளையும் இவர் படைத்தார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது ‘சர்வ சமய சமரஸக் கீர்த்தனை’ தொகுப்பு ஆகும்.

**கிருஷ்ணபிள்ளை**

தமிழ் தொண்டாற்றியவர்கள் வரிசையில் அடுத்து இடம் பெறுபவர் கிருஷ்ணபிள்ளை ஆவார். ‘இரட்சண்ய யாத்திரிகம்’ என்ற கவிதையை இவர் இயற்றினார். இந்நூல் ஆங்கில மொழியின் ஜாண் பனியன் எழுதிய பில்கிரிம் ப்ராகிரஸ் Pilgrim Progress என்ற நூலைத் தழுவியது ஆகும்.

ஆபிரகாம் பண்டிதர்

தஞ்சாவூரைச் சேர்ந்த ஆபிரகாம் பண்டிதரும் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றியுள்ளார். இவர் இசைப் பேரிலக்கணம் என புகழப்படும் ‘கருணாமிர்த சாகரம்’ என்னும் நூலை இயற்றினார்.

**அச்சு இயந்திரம் (அறிமுகமாதல்)**

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு அச்சு இயந்திரம் ஆற்றிய தொண்டினை எவரும் மறுக்க இயலாது. இவ்வச்சு இயந்திரத்தை தமிழகத்திற்கு அறிமுகம் செய்தவர்கள் கிறிஸ்தவச் சமயப் பரப்பாளர்கள் ஆவார்கள். கி.பி.1677ஆம் ஆண்டு முதல் முதலில் போர்த்துக்கீசியர்கள் தூத்துக்குடிக்கு அருகில் உள்ள புன்னக்காயலில் அச்சு இயந்திரம் ஒன்றை நிறுவினார். இதைத் தொடர்ந்து தரங்கம்பாடியில் சீகன் பால்கு என்ற ஜெர்மானிய போதகர் அச்சு இந்திரம் ஒன்றை அமைத்தார். புன்னக்காயலிலுள்ள அச்சு இயந்திரத்தைப் பயன்படுத்தி முதல் நூலை ஹென்றிக்

ஹென்றீக்கஸ் என்பவர் வெளியிட்டார். பிற மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட பல தமிழ் நூற்களும் குறைந்த செலவில் இங்கு அச்சிடப்பட்டன. இதன் விளைவால் இலக்கியங்களின் பலன் அனேகம் மக்களுக்கு குறுகிய காலத்திற்கும்முன் கிடைக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. குறிப்பாக அச்சு இயந்திரம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது எனலாம்.

## தமிழ்நாட்டில் ஐரோப்பியர்

### சாந்தோம் குடியிருப்பு

கள்ளிக்கோட்டையில் காலூன்றிய போர்ச்சுக்கீசியர், கோவாவைத் தங்களது தலைமையகமாகக் கொண்டு, 1522-ஆம் ஆண்டு தமிழ்நாட்டின் வடமேற்குப் பகுதியில் செல்வச் செழிப்போடிருந்த மைலாப்பூரில் உள்ள சாந்தோமில் தங்களது குடியிருப்பை அமைத்தனர். சாந்தோம் போர்ச்சுக்கீசியர்கள் வர்த்தகத்துக்கும், மதப் பிரச்சாரத்துக்குமான முக்கிய மையமாக இருந்தது.

### வர்த்தக விரிவாக்கம்

தமிழ்நாட்டுக்கு வந்த போர்ச்சுக்கீசியர் வர்த்தக விரிவாக்கத்தில் ஊக்கத்துடன் செயல்பட்டனர். அவர்கள் செஞ்சியில் ஒரு வர்த்தகக் குடியிருப்பை ஏற்படுத்தினர். போர்ட்டோநோவோவைத் துறைமுக நகராக மாற்றினார். தஞ்சை செவப்ப நாயக்கரின் ஆட்சிக்காலத்தில் போர்ச்சுக்கீசியர் நாகப்பட்டினத்தில் குடியேறி அதை ஒரு வர்த்தக நகரமாக விரிவுபடுத்தினர். நாகை, சீனா, மலாக்கா போன்ற நாடுகளுடன் வர்த்தகத்தொடர்பு கொண்டிருந்தனர்.

### மதமாற்றம்

### இரட்டைக்குறிக்கோள்கள்

வர்த்தக விரிவாக்கமும், சமயப் பிரச்சாரமும் போர்ச்சுக்கீசியரின் இரட்டைக்குறிக்கோள்களாகும். அவர்கள் வர்த்தகப் பெருக்கத்தைவிட மதமாற்றத்தில் அதிக அக்கறை காட்டினர். அவர்கள் சாந்தோமில் குடியேறியவுடன் அங்கு ஒரு தேவாலயத்தைக் கட்டினர். அதுவே அவர்களது சமயப் பிரச்சாரக் கேத்திரமாயிற்று. மேற்குக் கடற்கரைப்பகுதிகளில் சமயப் பிரச்சாரத்தை மேற்கொண்டு அங்கிருந்த மீனவர்களை மதமாற்றம் செய்தனர். சோழ மண்டலமும், தூத்துக்குடியும் போர்ச்சுக்கீசியரின் மதமாற்ற வட்டத்துக்குள் வந்தன.

### தூத்துக்குடி பரவர்கள்

தூத்துக்குடிப் பரவர்கள் விஜய நகரப் பேரரசின் விசுவாசிகள் எனினும், அப்பேரரசு அவர்களுக்குப் போதிய சமுதாயப் பாதுகாப்பு அளிக்கவில்லை. மேலும், அவர்கள் நாயக்கர்களின் கொடுமைகளுக்கு இலக்காயினர். அதனால் வெறுப்படைந்த பரவர்கள் போர்ச்சுக்கீசியரின் உதவியை நாடினர். மதமாற்றத்தில் பேரார்வமிக்க போர்ச்சுக்கீசியர் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு 1583-ஆம் ஆண்டு பரவர்களுடன் தங்கி, அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்று,

அவர்களுடைய சம்மதத்துடன் மதமாற்றம் செய்தனர். ஒரே நாளில் நூற்றுக்கணக்கானோருக்கு தீச்சை செய்து வைக்கப்பட்டது.

விஜய நகரப் பேரரசின் அலட்சியம் போக்கும், நாயக்கர்களின் கொடுங்கோன்மையும் பரவர்களின் மதமாற்றத்துக்குக் காரணம் என்ற கூறுகிறார் கே. ராஜய்யன். மதமாற்றத்தின் காரணமாக தூத்துக்குடி சி.எ. சீனிவாசாச்சாரி, மதமாற்றத்தின் காரணமாக பல்லாயிரக்கணக்கான பிற்படுத்தப்பட்ட, தீண்டத்தகாதோர் என்று புறக்கணிக்கப்பட்ட, பல்வேறு சமூகக் கொடுமைகளுக்கு உள்ளான குடும்பங்கள் புதுவாழ்வு பெற்றனர். அவர்களுக்கு சமூக அங்கீகாரமும், அடையாளமும் கிடைத்தது.

**புனித தாமஸ்**

புனித தாமஸ் போர்ச்சுக்கீசியரின் முதல் சமயப் பிரச்சாரகராகக் கருதப்படுகிறார். ரோமன் கத்தோலிக்கரான இவர் கி.பி.52-இல் பால தீனத்திலிருந்து கேரளாவில் உள்ள கொடுங்காலூருக்கு வந்ததாகவும், அங்கு அவர் 20 ஆண்டுகள் சமயத்தொண்டு செய்து வந்ததாகவும், அவர் இந்துக்களை மதமாற்றம் செய்தார் என்று ஆத்திரமடைந்த சனாதன சமயவாதிகள் தாமசைக் கொலை செய்ய முயன்றதாகவும், அக்கொலை முயற்சியிலிரந்து தப்பிய அவர் மைலாப்பூர் மலைமுகட்டுக்கு வந்து அங்கு ஒரு தேவாலயத்தைக் கட்டினார் என்பதும வழக்காறு.

கி.பி.72-ஆம் ஆண்டு புனித தாமஸ் ஒரு கல் மீது அமர்ந்து பிரார்த்தனையில் ஆழ்ந்திருந்த போது சமய வெறியர்களால் குத்திக்கொல்லப்பட்டார். அவரது உடல் அவரால் கட்டப்பட்டதாகக் கருதப்படும் தேவாலயத்துக்குள்ளேயே ஒரு கல்லறையில் நல்லடக்கம் செய்யப்பட்டது. பின்னர் இத்தேவாலயம் ஆங்கிலேயர்களால் கோதிக் கட்டிடக்கலை பாணியில் புதுப்பிக்கப்பட்டது. இன்றும் இந்தத் தேவாலயம் புனிதமான யாத்ரீகத் தலமாகக் கருதப்படுகிறது.

**டச்சுக்காரர்கள்**

**ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனி**

டச்சுக்காரர்கள் போர்ச்சுக்கீசியரிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவர்கள். இவர்கள் சமய நோக்கம் எதுவுமின்றி வர்த்தக விரிவாக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்தினர். இவர்களது நான்கு வர்த்தகக் கப்பல்கள் 1595ஆம் ஆண்டு மலபார் கடற்கரையை வந்தடைந்தன. அங்கிருந்து அவர்கள் கிழக்குக் கடற்கரைக்கு வந்தனர். 1602-ல் பல டச்சுவர்த்தக நிறுவனங்கள் ஒருங்கிணைந்து வலிமையான ஐக்கியகிழக்கிந்திய கம்பெனியை உருவாக்கினர். டச்சு அரசாங்கமும் அம்முயற்சிக்கு முழு ஆதரவை அளித்தது.

**வர்த்தகக் குடியிருப்புகள்**

ஐக்கிய கிழக்கிந்திய கம்பெனியின் சார்பாக இந்தியாவுக்கு வந்த டச்சுக்காரர்கள் 1605-ஆம் ஆண்டு கிழக்குக் கடற்கரையில் மசூலிப்பட்டினத்தில்

மையம் கொண்டனர். கோல்கொண்டாவை ஒரு துறைமுக நகரமாக்கினர். அதன் பின்னர் அவர்கள் படிப்படியாக தமிழக சோழ மண்டலத்தில் தங்களது வர்த்தகக் குடியிருப்புகளை ஏற்படுத்தினர்.

**வர்த்தகத் தலைநகர்**

1608-ஆம் ஆண்டு டச்சு வர்த்தகர்கள் செஞ்சி கிருஷ்ணப்ப நாயக்கரின் அனுமதியோடு தேவனாம்பட்டினத்தில் தங்களது குடியிருப்பை அமைத்தனர். இதுவே பின்னர் ஆங்கிலேயரின் புனித டேவிட் கோட்டை ஆகப் பெயர் மாற்றம் பெற்றது. அடுத்த இரண்டு ஆண்டுகளில் டச்சுக்காரர்கள் உள்ளூர் நாயக்கரிடமிருந்து புலிக்கோட்டையைப் பெற்றுக்கொண்டு அதைத்தங்களது அரண்காப்பு மையமாக மாற்றிக்கொண்டனர். அதன்பின் அவர்கள் போர்ச்சுக்கீசியரிடமிருந்து தரங்கம்பாடியையும், தூத்துக்குடியையும், நாகப்பட்டினத்தையும் கைப்பற்றிக் கொண்டனர். இவற்றுள் நாகப்பட்டினம் டச்சுக்காரர்களின் வர்த்தக தலைநகரமாகத் திகழ்ந்தது. இவர்களது குடியிருப்புகள் அனைத்தும் அரண்காப்புகளால் வலிமைப்படுத்தப்பட்டன.

**வர்த்தக வல்லுநர்கள்**

டச்சுக்காரர்கள் வர்த்தக வல்லுநர்கள் மட்டுமல்லாது திறமையான நிதி நிபுணர்களாகவும் இருந்தனர். சங்க காலத் தமிழகர்களைப்போன்று திரைகடலோடி திரவியம் சேர்ந்து பெரும் பொருள் ஈட்டினர். சேர்த்த செல்வத்தை வர்த்தக விரிவாக்கத்துக்கே செலவிட்டனர். வர்த்தகத்தில் நாட்டம் கொண்ட டச்சுக்காராகள் மதமாற்றத்தைத் தவிர்த்தனர். தமிழக ஆட்சியாளர்களின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை. டச்சு வர்த்தகர்களுக்குக் கிடைத்த தாய்நாட்டு ஆதரவும், தேசிய குணமும், தெளிவான குறிக்கோளும், தீர்க்கமான முறைகளும் இவர்களது வெற்றிக்குக் காரணம் என்று கருதுகிறார். பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர்.

டச்சுக்காரர்கள் மதமாற்றத்தில் அக்கறை கொள்ளாவிட்டாலும், அடிமை வியாபாரத்தில் ஆர்வம் காட்டியதால் அவர்களுக்கு மக்கள் செல்வாக்கு குறையலாயிற்று. மேலும் அவர்களால் ஆங்கிலேயரின் வர்த்தகச் சவாலை சமாளிக்க முடியவில்லை. எனவே, டச்சுக்காரர்கள் தமிழ்நாட்டைவிட்டு வெளியேற வேண்டியதாயிற்று.

**டேனியர்**

**வரவேற்பு**

1616-ஆம் ஆண்டு டென்மார்க் கிழக்கிந்திய கம்பெனி மன்னர் நான்காவது கிறிஸ்டியனது பேராதவுடன் துவக்கப்பட்டது. நான்காண்டுகளுக்குப் பிறகு 1620-இல் மன்னர் கிரேப் தலைமையில் சில வணிகர்களைத் தஞ்சாவூருக்கு அனுப்பினார். தஞ்சாவூருக்கு வந்த வர்த்தகர்கள் தஞ்சை ரகுநாத நாயக்கருடன் பேச்சுவார்த்தை நடத்தி அவருடைய ஆதரவோடு தரங்கம்பாடியில் தங்களது வர்த்தகக் குடியிருப்பை

அமைத்துக் கொண்டனர். ரகுநாத நாயக்கர் டேனியர்களின் குடியேற்றத்தை விரும்பி வரவேற்றதாகக் குறிப்பிடுகிறார் பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர்.

**திறமைமிக்க வர்த்தகர்கள்**

டேனியர்கள் திறமைமிக்க வர்த்தகர்கள். அவர்கள் தேயிலையை பெரிய அளவில் இறக்குமதி செய்து. அதில் பெரும்பகுதியை பிரிட்டனுக்கு ஏற்றுமதி செய்து அதிகலாபத்திற்கு விற்றனர். அதேபோன்று, டச்சுக் கம்பெனி தமிழகப் பொருள்களை மலாய்தீவுக் கூட்டத்துக்குக் கொண்டு சென்று விற்பனை செய்தனர். திரும்பும் போது வாசைன திரவியங்களைக் கொண்டு வந்து வியாபாரம் செய்தனர்.

**தரங்கம்பாடி**

டேனியர் தரங்கம்பாடியைப் பெரிதும் நேசித்தனர். தரங்கம்பாடி என்றால் இசை பாடும் அலைகளைக் கொண்ட இடம் என்று பொருள். அவர்கள் தரங்கம்பாடியை டேனி போர்க் என்று அழைத்தனர். இந்தக் கவிதை பாடும் கடலோரக் கரையில் டேனிய தளபதி ஒவே ஜேடே ஒரு கோட்டையைக் கட்டினார். துவக்கத்தில் அக்கோட்டையை ஆளுநரும், அவரது அதிகாரிகளும் பயன்படுத்தினர். அவர்களுக்கென குடியிருப்பும் கட்டப்பட்டது.

1620-ஆம் ஆண்டு டேனியர்கள் தரங்கம்பாடிக்கு வந்த போது அங்கிருந்த ஒரு அழகான சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய மாசிலாமணிநாதர் ஆலயம் இருப்பதைக் கண்டு அதிசயித்தனர். அக்கோயில் கி.பி.1305-ல் மாறவர்ம சுந்தர பாண்டிய மன்னரால் கட்டப்பட்டதாகக் கருதப்படுகிறது. அந்தக் கோயிலுக்கு எந்த இடையூறுமின்றி டேனியர்கள் ஒரு சியோன் தேவாலயத்தைக் கட்டினர். பின்னர் அங்கு ஆளுநர் அரண்மனையும், நுழைவாயிலும் கட்டப்பட்டன. குடியிருப்பைச் சுற்றி ஐரோப்பிய பாணியில் உயரமான மதில் சுவர் எழுப்பப்பட்டது. சுருங்கக்கூறின், தரங்கம்பாடி ஒரு எழில் கொஞ்சும் பண்பாட்டுப் பட்டினமாகத் திகழ்ந்தது.

1729-ஆம் ஆண்டு டென்மார்க் கிழக்கிந்திய கம்பெனி புதுப்பிக்கப்பட்டு ஆசியக் கம்பெனி என்ற பெயரில் மேலும் 40 ஆண்டு காலம் ஏகபோக வர்த்தக உரிமை பெற்றது. எனினும் அக்கம்பெனியால் எதிர்பார்த்த வர்த்தக வெற்றியைப்பெறமுடியவில்லை. பிரிட்டனால் தோற்கடிக்கப்பட்ட டென்மார்க் தனது இந்திய வர்த்தகக் கேந்திரங்கள் அனைத்தையும் பிரிட்டனுக்கு விற்றுவிட்டது.

**தரங்கம்பாடி லூதரன் மிஷன்**

***சீகன்பால்க், 1682-1719***

**சமயப்பரப்பூழியர்**

பார்த்தலோமியோ சீகன்பால்க் ஒரு ஜெர்மனியர். இவர் ஜெர்மனி சாக்சனியில் உள்ள புல்நீட் என்ற சிற்றூரில் 1683 ஜீன் 24ஆம் தேதி ஒரு ஏழை வைதீகக் கிறஸ்தவக் குடும்பத்தில் பிறந்தார். இவர் இளமைப் பருவத்திலேயே வயதுக்கு மீறிய அறிவாற்றலைக் கொண்டிருந்தார். இசையில் நாட்டமுடையவராகக்

காணப்பட்டார். ஹாலே பல்கலைக்கழகத்தில் சீகன்பால்க் லூதரிச சித்தாந்தத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்றார். இவரது அறிவாற்றலையும் சேவை மனப்பான்மையையும் பற்றிக் கேள்வியுற்ற டென்மார்க் மன்னர் நான்காம் பிரெடெரிக் இவரை சமயப் பரப்பூழியராகத் தேர்வு செய்து தரங்கம்பாடிக்கு அனுப்பினார். அதுமட்டுமல்ல. சீகன்பால்க் மீது வைத்திருந்த மரியாதையின் காரணமாக மன்னரே துறைமுகத்துக்கு நேரில் வந்து வழியனுப்பினார். சீகன்பால்க்தான் இந்தியாவுக்கு வந்த லூதர் அமைப்பைச் சேர்ந்த முதல் மறுப்பியக்க சமயப்பரப்பூழியர் ஆவார்.

**கல்விப்பணி**

தரங்கம்பாடிக்கு வந்த சீகன்பால்க் செய்த முதல் காரியம் அங்கிருந்த தாழ்த்தப்பட்ட, புறக்கணிக்கப்பட்ட, தீண்டத்தகாதோர் என்று ஒதுக்கப்பட்ட மக்களில் ஒருவராக அவர்களுடன் தங்கியதுதான். அடுத்து அவர்களது முன்னேற்றத்துக்காக சீகன்பால்க் மேற்கொண்ட முயற்சிகள். கல்வியின் மூலமாகத்தான் மக்களை முன்னேற்ற முடியும் என்பதை நன்கறிந்த அவர் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கான ஒரு பயிற்சிப் பள்ளியை தோற்றுவித்தார். மக்களின் மொழியை நன்கு கற்றுக்கொண்ட சீகன்பால்க் தமிழை இப்பள்ளியின் பயிற்சி மொழியாக்கினார்.

பெண்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்த சீகன்பால்க் பெண்களுக்கென பிரத்யேகமாக ஒரு பள்ளியை நிறுவினார். சாதி, சமய, நிற வேறுபாடின்றி அப்பள்ளியில் பெண்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அந்தப் பள்ளியை நிர்வாகிக்கும் பொறுப்பை ஒரு விதவையர் குழுவிடம் ஒப்படைத்தார்.

**சமுதாயப்பணி**

தரங்கம்பாடி மக்களிடையே பன்னெடுங்காலமாக நிலவி வந்த சாதி வேறுபாடுகளைப் போக்கும் சமுதாயப் பணியில் சீகன்பால்க் முனைப்புடன் ஈடுபட்டார். சமுதாயத்தில் ஒரு பிரிவினரை ஒதுக்கி வைத்து, அவர்களுக்குக் கல்வி அளிக்காமல் புறக்கணித்து, தீண்டத்தகாதவர்களாக்கிய பிரமணர்களைக் கடுமையாகக் கண்டித்தார். அதனால் ஆத்திரமடைந்த சில அடிப்படைவாதிகள் சீகன் பால்கைக் கொலை செய்ய சதி செய்தனர். அதைப் பொருட்படுத்தாமல் சீகன்பால்க் 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' எனக் கருதி சமூக சேவையில் ஆர்வத்துடன் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். மக்கள் இவரது பணியால் பெரிதும் கவரப்பட்டனர்.

**சமயப்பணி**

சீகன்பால்க்கின் சமயச் செய்திகள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக பல சமயத் தொண்டர்களுக்குத் தமிழிலேயே பயிற்சி அளித்தார். 1718 அக்டோபர் 11-ஆம் தேதி புதிய ஜெரூசலேம் தேவாலயத்தை நிறுவி அதை மக்களுக்கு அர்ப்பணித்தார். அந்த தேவாலயத்தில் மக்கள் தங்கள் கலாச்சாரத்துக்கேற்ப தமிழில் வழிபட வழிவகுத்தார். ஆலயத்தில் தமிழில் வழிபாடு. அதுமட்டுமல்ல, பல்வேறு சமயங்களைச் சேர்ந்த தலைவர்களை அழைத்து சர்வ சமய உரையாடலுக்கு ஏற்பாடுசெய்தார். சமயங்களை சமமாகக் கருதினார். இவர்

எழுதிய ‘தென்னிந்தியக் கடவுள்களின் குடிவழிப்பட்டியல்’ இவரது சிறந்த படைப்பாகும்.

### தமிழ்ப்பணி

சீகன்பால்க் மக்கள் மொழியான தமிழில் பேசவும், எழுதவும், கற்றுக்கொண்டார். தமிழ்ப்பேச்சு மொழியையும், இலக்கிய மொழியையும் தனித்தனியே பயின்றார். தமிழிலேயே சமய விளக்கப் பேருரைகளாற்றினார். உலக நீதி, கொன்றை வேந்தன், நீதிவெண்பா ஆகிய தமிழ் நீதி நூல்களை மொழி பெயர்த்து உலகறியச் செய்தார். ஐரோப்பியரின் உபயோகத்திற்காக தமிழ் அகராதியையும், தமிழ் சொற்களஞ்சியத்தையும் தயாரித்தார். புதிய ஏற்பாட்டை தமிழில் மொழி பெயர்த்தார். சீகன்பால்க் ஒரு நடமாடும் நூலகமாகத் திகழ்ந்தார்.

### பதிப்பகப்பணி

சீகன்பால்க் புத்தகப் பதிப்பகத்தின் முன்னோடி, ஆசியாவிலேயே முதல் முறையாக அச்சுக் கூடத்தை நிறுவிய பெருமை இவருடையது. இதற்கான அச்சு இயந்திரம், காகிதம், மை போன்றவை ஜெர்மனியிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இதில் சிறப்பு என்னவென்றால் அச்சுக் கோப்புக்கான தமிழ் அச்சுக்களை ஜெர்மனியிலேயே தயாரித்துக் கொண்டு வந்ததாகும். இது அக்காலகட்டத்தில் எவராலும் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத அரிய சாதனையாகும். தரங்கம்பாடியிலிருந்த பலர் இம்முயற்சியைப் பைத்தியக்காரத் தனமானது எனக் கருதினர். இது உண்மையிலேயே ஒரு பைத்தியக்கார சாதனைதான். இந்த அச்சகத்தில் தமிழ் நீதி நூல்கள், மொழி பெயர்ப்புகள், நாள்காட்டிகள், துதிப்பாடல்கள், புதிய ஏற்பாடு போன்றவை அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. சுருங்கக் கூறின், சீகன்பால்க் எழுத்தாளராகவும், பதிப்பாளராகவும், வெளியீட்டாளராகவும் விளங்கினார்.

### இறுதி நாட்கள்

சீகன்பால்க் இறுதிவரை ஓயாது உழைத்தார். கடைசி காலத்தில்கூட தமிழில் ஜெர்மானியப் புலமையை நிலையாகக் கொடுக்க வேண்டும் என்பதற்கான அடிப்படையை அமைப்பதில் கவனம் செலுத்தினார். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டைத் தமிழில் மொழி பெயர்ப்பதில் நேரத்தைச் செலவிட்டார். இந்நூல் பின்னர் சென்னையிலும், ஐரோப்பாவிலும் வெளியிடப்பட்டது. சீகன்பால்க் தரங்கம்பாடியில் உயிர் நீத்தார். தமிழர்களுக்காக, தமிழுக்காகத் தன் வாழ்நாளைச் செலவிட்ட சீகன்பால்க் தமிழ் மண்ணிலேயே மடிந்தார்.

### ஆங்கிலேயர்

### தமிழ்நாடு தளம்

1600-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் தேதி துவக்கப்பட்ட ஆங்கில கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவில் ஐரோப்பியப் போட்டிக் கம்பெனிகளின்

கடுமையான எதிாப்பை எதிர்க்கொள்ள வேண்டியிருந்தது. இப்போட்டிகளைக் சமாளிக்க ஆங்கிலேயர் கொங்கணத்தையும், மலபார் கடற்கரை மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதிகளைத் தேர்ந்தெடுத்தனர். இவற்றுள் இவர்களின் தேவைகளுக்கான வாய்ப்பையும், வசதியையும் தமிழ்நாடு தந்தது.

**பிரான்சிஸ்டே**

தமிழ்நாடு அப்போது விஜய நகரப் பேரரசின் பகுதியாக இருந்தது. பிரான்சிடே என்ற ஆங்கிலேயர் பூந்தமல்லி நாயக் தமரில்லா வெங்கடப்பாவிடமிருந்து 1639ஆம் ஆண்டு 22 ஆம் தேதி மதரா பட்டினத்தில் ஒரு குடியிருப்பையும், கோட்டையையும் கட்டிக் கொள்வதற்கான அனுமதியைப் பெற்றார். இந்த அனுமதியை விஜய நகரப் பேரரசர் இரண்டாவது வெங்கடா உறுதி செய்தார்.

**சென்னைப்பட்டனம்**

பேரரசர் வெங்கடாவின் தந்தையின் பெயர் சென்னா. எனவே, அவர் தனது தந்தையின் நினைவாக் அந்த இடத்துக்கு சென்னப்பட்டனம் என்று பெயரிட்டார். சென்னப்பட்டனத்தை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? அங்கிருந்து தேவையான துணியை குறைந்த விலைக்குப் பெறலாம் என்று கூறுகிறார். சி.எ. சீனிவாசாச்சாரி. பிரான்சிஸ்டே சாந்தோமிலிருந்த தன் காதலியை அடிக்கடி சந்திக்கலாம் என்ற நோக்கத்தோடு சென்னைபட்டினத்தைத் தேர்ந்தெடுத்ததாகக் கருதுகிறார். இந்தியாவில் பிரிட்டிசாரின் சமூக வாழக்கையைப் பற்றி எழுதியுள்ள டெனி கின்கெய்டு வர்த்தகக் கப்பல்களை நிறுத்த வசதியான இடம் என்பது மற்றொரு காரணம். சென்னைப்பட்டினம் என்ற மீனவர் குப்பம்தான் பின்னர் புனித ஜார்ஜ் கோட்டையாக உருமாற்றம் பெற்றது.

**புனித ஜார்ஜ் கோட்டை**

பிரான்சிஸ்டே திட்டமிட்டபடி சென்னைப்பட்டினத்தில் ஒரு குடியிருப்பும் கோட்டையும், துறைமுகமும் கட்டப்பட்டன. 1641 ஏப்ரல் 23ஆம் நாள் கட்டி முடிக்கப்பட்ட கோட்டைக்கு இங்கிலாந்து புரவலர் புனிதர் ஜார்ஜின் பெயர் சூட்டப்பட்டது. இக்கோட்டை துவக்கத்தில் ஆங்கிலேயரின் வர்த்தகக் கேந்திரமாகத் திகழ்ந்தது. விரைவில் இந்த இடத்தைச் சுற்றி, ‘ஜார்ஜ் டவுன்’ உருப்பெற்று, சென்னை நகரமாயிற்று 1653ஆம் ஆண்டு புனித ஜார்ஜ் கோட்டை தனி மாநிலமாக்கப்பட்டது. ஆரான் பேக்கர் அதன் முதல் ஆளுநராக நியமிக்கப்பட்டார். பின்னர் 1654-ல் சோழ மண்டலத்தின் தலைமையகமாயிற்று. அதுவே ஆங்கிலேயர் இந்தியாவில் பெற்ற முதல் உரிமையாளர் உடைமை ஆகும். அடுத்த ஆறு ஆண்டுகளில் சென்னை ஆங்கிலேயரின் கிழக்கிந்திய நாடுகளின் பிரதான வர்த்தகக் கேந்திரமாயிற்று. 1670-ல் சென்னையின் மக்கள் தொகை 40,000 ஆக இருந்தது.

புனித டேவிட் கோட்டை

1681ஆம் ஆண்டு ஆங்கிலேயர் கடலூரிலும், போர்ட்டோநோவோவிலும் தங்களது குடியிருப்புகளை ஏற்படுத்தினர். சென்னை ஆளுநர் ‘சென்னை அதிபர் மற்றும் ஆளுநர்’ என்று அழைக்கப்பட்டார். விரைவிலேயே சென்னை நகராட்சி ஆயிற்று. நகராட்சியை மேயரும், 12 ஆல்டர்மென்களும் நிர்வகித்தனர். 1690 ஆம் ஆண்டு சென்னை புனித ஜார்ஜ் கோட்டையின் ஆளுநராயிருந்த தாமஸ்யேல் செஞ்சி மராத்திய ஆட்சியாளர் ராஜாராமுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தி புனித டேவிட் கோட்டையைப் பெற்றுக் கொண்டனர். கோட்டையையும், கடலூரையும் பராமரிப்பதற்கான மானியமும் ஆங்கிலேயருக்குக் கிடைத்தன. புனித டேவிட் கோட்டை பாண்டிச்சேரிக்கு அருகாமையில் அமைந்திருந்ததால் ஒரு வளமையான ஆங்கிலக் குடியிருப்பாக வளர்ந்தது. வர்த்தக வளர்ச்சியோடு ஆங்கிலேயரின் அரசியல் ஆசைகளும் வளரலாயின.

**பிரெஞ்சுக்காரர்கள்**

**பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனி**

பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் தங்களது அரசியல் செல்வாக்கை நிலைநாட்ட வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தோடு வந்தனர். பிரான்சின் மன்னர் பதினான்காம் லூயின் நிதி அமைச்சர் கால்பர்ட்டின் முயற்சியால் 1664ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரெஞ்சு கிழக்கிந்தியக் கம்பெனிக்கு கீழை நாடுகளுடன் 50 ஆண்டுகளுக்குத் தடையற்ற வணிப ஏகபோக உரிமையும், நிலத்தை ஆக்கிரமித்த கையகப்படுத்திக் கொள்வதற்கான சிறப்புரிமையும் வழங்கப்பட்டது. இந்த இரட்டை உரிமைகள் பிரெஞ்சுக்காரர்கள் இந்தியாவில் ஒரு அதிகார ஆதிக்கசக்தியாக உருவெடுக்கக் காரணமாக இருந்தது.

**பாண்டிச்சேரி**

பாண்டிச்சேரி சோழ மண்டலக் கடற்கரையில் அமைந்துள்ள ஒரு புராதன ஊர். கி.பி. முதல் நூற்றாண்டில் பெரிபிளஸ் எழுதிய நூலில் இவ்வூர் இடம் பெற்றுள்ளது. பாண்டிச்சேரிக்கு அருகாமையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட ரோமானிய வர்த்தக மையம் பாண்டிச்சேரியின் வர்த்தகத் தொன்மைக்கு வலிமை சேர்ப்பதாக உள்ளது. பண்டைக் காலத்தில் இவ்வூர் புதுவை என்று அழைக்கப்பட்டது. 11, 12 ஆம் நூற்றாண்டுகளில் ஒட்டக்கூத்தரும், கம்பரும் இந்த ஊரைப் புதுவை என்றே குறிப்பிட்டுள்ளனர்.

பிரான்சின் நிதி அமைச்சர் கால்பர்ட் 1667 ஆம் ஆண்டு பிரான்சிஸ் காரன் என்பவரை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். இவர் டச்சுக்கிழக்கிந்தியக் கம்பெனியில் பணியாற்றிய அனுபவம் பெற்றவர். காரன் சூரத்திலும் மசூலிப்பட்டினத்திலும் தொழில்பேட்டைகளை அமைத்தார். அவரது சென்னை சாந்தோமைக் கைப்பற்றும் முயற்சியை டச்சுக்காரர்கள் முறியடித்துவிட்டனர். கரோனுக்குப் பின் பிரெஞ்சு நிர்வாகப் பொறுப்பேற்ற பிரான்சி மார்ட்டின் பீஜப்பூர் சுல்தான் ஷெர்கான் லோடியிடமிருந்து பெற்ற நிலத்தில் பாண்டிச்சேரி நகரை

உருவாக்கினார். அந்நகரே பிரெஞ்சுக்காராக்ளின் இந்தியத் தலைநகராகத் திகழ்ந்தது.

**சாதனையாளர்**

**பிரான்சிஸ் மார்ட்டின்**

பிரான்சி மார்ட்டின் தாய் நாட்டுப் பற்று மிக்கவர். வர்த்தக விரிவாக்கத்தை விட ஆதிக்கப் பெருக்கத்தில் அதிக அக்கறை கொண்டவர். அரசியல் ராஜதந்திரி, சோழ மண்டலத்தில் சிவாஜிக்கும் ஷெர்கானுக்குமிடையே மோதல் ஏற்பட்டபோது மார்ட்டின் நடுநிலை வகித்தார். மார்ட்டின் நிலையாக விட்டுச் சென்ற நன்கொடை அவர் பண்டைய புதுவையை நவீன பாண்டிச்சேரி நகரமாக மாற்றியதுதான். அங்கு ஒரு அழகான புனித லூயி கோட்டையைக் கட்டினார். பாண்டிச்சேரி நேர்ப்பாதைகளைக் கொண்ட நன்கு திட்டமிடப்பட்ட நவீன நகரமாக உருமாற்றம் பெற்றது. வர்த்தக லாபத்தைக் கொண்டே இந்த நகரை நிர்மாணித்தார். தாய் நாட்டு ஆதரவு இல்லாத போதிலும், பல நெருக்கடிகளுக்கிடையே பாண்டிச்சேரியை செல்வச்செழிப்பான பிரெஞ்சுத் தலைமையகமாக மாற்றிய பெருமை மார்ட்டினையே சேரும். பிரெஞ்சு நாட்டுக்காகக் கிட்டத்தட்ட நாற்பதாண்டுகள் உழைத்த பிரான்சி மார்ட்டின் 1706 ஆம் ஆண்டு உயிர் நீத்தார். இவரது சாதனையை இவருக்குப் பின் டூப்ளே முன் கொண்டு சென்றார்.

**தமிழ்நாட்டில் ஆதிக்கப்போட்டி : கர்நாடகப்போர்கள், 1746 – 1760**

**சென்னையில் ஆங்கிலேயர்**

**சோழமண்டலம்**

சோழ மண்டலம் இந்தியத் தீபகற்பத்தின் தென் கிழக்குக் கடற்கரைப் பகுதி. இது சோழ மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த நிலப்பகுதியாகும். இச்சோழ மண்டலம் கோரமண்டல் ஆகிப் பின்னர் கர்நாடகம் என்றாயிற்று. வளமிக்க சோழமண்டலம் காவேரி, பாலாறு, பெண்ணாறு போன்ற ஆறுகளால் உருவாக்கப்பட்ட வண்டல் சார்ந்த சமவெளிப் பகுதியாகும். இப்பகுதி புலிக்கோட்டை, சென்னை, சாந்தோம், பாண்டிச்சேரி, காரைக்கால், கடலூர், தரங்கம்பாடி, நாகூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய துறைமுகப் பட்டினங்களை உள்ளடங்கியது. சீனப் பொருட்கள் ‘கோரமண்டல் பொருள்கள்’ என்று அறியப்பட்டன. நான்கு பிரிட்டிஷ் ராயல் கடற்படைக் கப்பல்களுக்கு எச்.எம்.எ. கோரமண்டல் என்று பெயரிடப்பட்டது.

1530 ஆம் ஆண்டின் இடைப்பகுதியில் சோழ மண்டலம் மூன்று முக்கிய பொர்ச்சுக்கீசியக் குடியேற்றப் பகுதிகளான நாகப்பட்டினம், சாந்தோம், புலிக்கோட்டை ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. பின்னர் 17, 18 ஆம் நூற்றாண்டுகளில் சோழ மண்டலம் ஐரோப்பிய வர்த்தகப் போட்டிக் களமாயிற்று. ஆங்கிலேயர் புனித ஜார்ஜ் கோட்டையிலும், டச்சுக்காரர்கள் புலிக்கோட்டை – சாந்தோமிலும், பிரெஞ்சுக்காரர்கள் பாண்டிச்சேரியிலும், டச்சுக்காரர்கள் தரங்கம்பாடியிலும் மையம் கொண்டு

வர்த்தகப்போட்டியிலும் ஈடுபட்டனர். பிரிட்டிஷாரும், பிரெஞ்சுக்காரரும் இப்போட்டியின் இறுதிச்சுற்றுக்குத் தயாராயினர். இதன் விளைவே கர்நாடகப்போர்கள்.

**பாண்டிச்சேரியில் பிரெஞ்சுக்காரர்**

பிரெஞ்சுக்கிழக்கிந்தியக் கம்பெனியும், பிரான்சி கரான் மற்றும் பிரான்சி மார்ட்டின் ஆகியோர் எவ்வாறு பாண்டிச்சேரியைத் தங்களது தலைமையகமாகக் கொண்டனர் என்பதைக் குறிப்பிட்டோம். பிரான்சிஸ் இறந்த பின்னர் பாண்டிச்சேரியின் நிர்வாகத்தில் தேக்கநிலை ஏற்பட்டது. இத்தேக்கநிலை லெனார் ஆளுநர் பொறுப்பேற்ற பின்னர் நீங்கியதோடு, நிர்வாகமும் புத்துணர்ச்சி பெற்றது. பாண்டிச்சேரிப் பகுதியும் விரிவடைந்தது. இதன் விளைவாகப் பாண்டிச்சேரியின் வருவாய் உயர்ந்தது. லெனாரைத் தொடர்ந்து வந்த டூமா ஆட்சிக்காலத்தில் தரங்கம்பாடிக்குப் பக்கத்தில் உள்ள காரைக்க்கால் கையகப்படுத்தப்பட்டது. டூமாசுக்குப்பின் வந்த டூப்ளே பாண்டிச்சேரியை பலமிக்க பகுதியாக்கிக் கர்நாடக ஆட்சியாளர் மற்றும் ஆங்கிலேயரின் கவனத்தைக் கவர்ந்தார். இவர் கர்நாடகப் போர்களில் முக்கியப் பங்கேற்றார்.

**கர்நாடகத்தில் நவாபுகள்**

**தனித்தக்காணம்**

**அசப் ஜா**

அவுரங்கசீப்புக்குப் பின் முகலாயப் பேரரசு வாரிசுரிமை மற்றும் உள்நாட்டுப்போர்களால் சிதறுண்டு போயிற்று. அப்போது நிசாம்-உல்-முல்க்காக இருந்த அசப் ஜா 1724ஆம் ஆண்டு டெல்லியை விட்டு வெளியேறி தெற்கே தக்காணத்துக்கு வந்தார். இவர் தக்காணப் பகுதிகளை ஒருங்கிணைத்துத் தனித் தக்காணமாக்கினார். ஐதராபாத் மாநிலத்தைத் தோற்றுவித்தார். அசப் ஜா தக்காணத்தை சுதந்திர பரம்பரைப் பகுதியாக்கி கால் நூற்றாண்டு காலத்துக்குமேல் முடிசூடா மன்னராகத் திகழ்ந்தார். வட இந்தியா குழப்பக் குட்டையில் மூழ்கிக் கொண்டிருந்த போது அசப் ஜா தென்னிந்தியாவை அமைதிப் பூங்காவாக மாற்றினார். தக்காண சுபேதார் அசப் ஜாவின் கட்டளைக்குக் கீழ்ப்பணிந்தே பிற ஆட்சியாளர்கள் நடந்து கொண்டனர். அவர்களில் ஒருவர் ஆற்காட்டு நவாப் ஆவார். ஆற்காட்டு நவாபும் சுயேட்சையாக ஆட்சி செய்தாலும் ஐதராபாத்தைத் தலைமையகமாகக் கொண்டு கோலோச்சிய அசப் ஜாவின் தக்காணத்தலைமைக்குக் கட்டுப்பட்டே இருந்தார். அதாவது கர்நாடகம் ஐதரபாத் நிசாமின் மேலாதிக்கத்தின் கீழ் செயல்பட்டது.

**கர்நாடக நவாபுகள்**

**தாவுத்கான்**

அவுரங்கசீப் கர்நாடகத்தின் மீது படையெடுத்து வந்த போது அவரது வலக்கர தளபதியாக இருந்தவர் சுல்பிகர்கான். அவர் தாவுத்கான் என்பவரைக்

கர்நாடகப் பகுதியை நிர்வகிப்பதற்காக நியமித்தார். அப்போது கர்நாடகம் கிருஷ்ணாவிலிருந்து தஞ்சாவூர் வரை பரவி இருந்தது. தாவுத்கான் ஆற்காட்டைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்தார். தக்காண அதிபரான அசப் ஜாவும் தாவுத்கானை ஆர்க்காட்டு நவாபாக அங்கீகரித்தார்.

**நெவாயத்துகள் : சதத்துல்லாகான், 1710 – 1732**

தாவுத்கானுக்குப் பின் ஆற்காட்டு நவாபாக வந்தவர் சதத்துல்லாகான். இவர்தான் ஆற்காட்டு நவாப்ஜத் தோற்றுவித்தவர். ஆற்காட்டை அவரது பரம்பரை சொத்தாக்க கருதினார். சதத்துல்லாகானின் சந்ததியினர் நெவாயத்துகள் என்று அழைக்கப்பட்டனர். நெவாயத்துகள் தமிழ்நாட்டில் அவர்களுடைய ஆட்சிப் பிடிப்பையும், அதிகாரத்தையும், ஆதிக்கத்தையும் விரிவுபடுத்தி உறுதி செய்தனர். சதத்துல்லாவின் தலைமையில் கர்நாடக நவாப் தமிழ்நாட்டில் ஆழமாகக் காலூன்றியது.

**தோஸ்த் அலி, 1732 – 1740**

**விரிவாக்கவாதி**

சதத்துல்லாவின் வாரிசான தோஸ்த் அலி ஒரு விரிவாக்கவாதி. அதாவது அவரது நாட்டின் ஆட்சிப் பரப்பினை விரிவாக்க வேண்டும் என்ற கொள்கையைக் கடைப்பிடித்தார். அக்கொள்கையின்படி அண்டைப் பகுதிகளை ஆக்கிரமித்தார். மதுரையை ஆற்காட்டோடு இணைத்தார். பின்னர் தஞ்சாவூரும் இவரது கட்டுப்பாட்டுக்குள் வந்தது. வடமேற்குப் பகுதியில் கோயமுத்தூர், சேலம் மற்றும் திண்டுக்கல் இவரது ஆட்சியின் கீழக்கொண்டுவரப்பட்டன. சுருங்கக் கூறின், தோஸ்த் அலி ஒரு ஆதிக்கவாதி என்பதை வெளிப்படுத்தினார்.

**மராட்டியர் படையெடுப்பு, 1740**

**மராத்தியருக்கு அழைப்பு**

தோஸ்த் அலியின் ஆதிக்கப் போக்கைக் கண்டு பிற தமிழ் நாட்டு ஆட்சியாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். மதுரை பங்காரு, தஞ்சை சயாஜி, புதுக்கோட்டை மன்னர், ஐதராபாத் நிசாம், தக்காண நிசாம்-உல்-முல்க் ஆகியோர் ஒன்று சேர்ந்து ஆற்காட்டு நவாபை எதிர்ப்பதற்குப் பதில் மராத்தியருக்கு அழைப்பு விடுத்தனர். அந்த அழைப்பின் பேரில் 1740 ஆம் ஆண்டு மராட்டியர் தமிழ் நாட்டின் மீது படையெடுத்தனர். இத்தாக்குதலின் போது தோஸ்த் அலியும், அவரது மகன் ஹாகன் அலியும் கொல்லப்பட்டனர். நெவாயத்துகளின் படை நிர்மூலமாக்கப்பட்டது.

மராத்தியரின் தாக்குதலைப் பற்றி அறிந்த ஆற்காட்டு தளபதிகளான சப்தர் அலியும், சந்தா சாகெபும் முறையே தஞ்சாவூரிலிருந்தும், திருச்சியிலிருந்தும் ஆற்காட்டு நோக்கி விரைந்தனர். இவ்விருவரும் வேலூரில் சந்தித்து பிரெஞ்சுக்காரரின் உதவியை நாடினர். இவர்களது வேண்டுகோளுக்கு அவர்கள செவிசாய்க்கவில்லை. எனவே சப்தர் அலி ஆற்காடு செல்ல, சந்தா சாகிப் திருச்சி

திரும்பினார். ஆற்காடு வந்த சப்தர் அலி மராத்தியரோடு பேரம் பேசி, பிணயப் பணம் கொடுத்து ஆற்காட்டை மராத்தியரிடமிருந்து மீட்டார். அதுமட்டுமல்ல, சப்தர் அலி தன்னை ஆற்காட்டு நவாபாகப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

**திருச்சி ஆக்கிரமிப்பு**

ஆற்காட்டை விட்டு வெளியேறிய மராத்தியர் திருவண்ணாமலை சென்று அந்த கோயில் நகரை கொள்ளையடித்தனர். பின்னர் மராத்தியக் குதிரைப் படையினர் திருச்சியை முற்றுகையிட்டனர். திருச்சியிலிருந்த சந்தாசாகிப் சரணடைந்தார். மராத்தியர் சந்தா சாகிப்பையும், அவரது மகன் அமித் அலியையும் கைது செய்து சாதாராவுக்கு அனுப்பி விட்டனர். திருச்சி மராத்தியர் வசமாயிற்று.

மதுரை கைப்பற்றப்படல்

திருச்சியைப் கைப்பற்றிய மராத்தியப் படை தஞ்சாவூர் சென்றது. மராத்தியரின் படையெடுப்பைப் பற்றி அறிந்த பிரதாப் சிங் கலக்கமுற்றார். பிரதாப் சிங் துலாஜியின் காமக்கிழத்தின் மகள் தஞ்சை ஆட்சியைத் தவறான முறையில் கைப்பற்றிக் கொண்டவர். பதவிப் பேரரசை கொண்டவர். எனவே, பிரதாப் சிங் மராத்தியருக்கும் பெரும் பொருள் கொடுத்துத் தனது பதவியைத் தக்கவைத்துக்கொண்டார். சந்தர்ப்பவாத அரசியல் பிரதாப் சிங்குக்குக் கைகொடுத்தது. பின்னர் மராத்தியப் படைப்பிரிவு சுப்பாஜிராவின் தலைமையில் தெற்கு நோக்கிச் சென்று மதுரையில் தங்களது ஆதிக்கத்தை நிலைநாட்டினர்.

**வாலாஜாக்கள்**

**அன்வாருதீன், 1743-1749**

**சாதக சூழ்நிலை**

அன்வாருதீன் தகாத வழியில் ஆற்காட்டு நவாப் பதவியைப் பற்றித்துக் கொண்டவர். அவரது பதவிப்பற்றைத் தணித்துக் கொள்வதற்கான சூழ்நிலை ஆற்காட்டில் நிலவியது. தோஸ்த் அலி மராத்தியரால் கொலை செய்யப்பட்ட பின்னர் அவரது மகன் சப்தர் அலி நவாப் ஆனார். ஆனால் அவரும் இரண்டு ஆண்டுகளுக்குள் கொல்லப்பட்டார். தன்னை நவாப்பாக சுய பிரகடனம் செய்து கொண்ட முர்ச்சாவை ஆற்காட்டுப்படை ஆதரிக்கவில்லை. எனவே அவர் உயிருக்கு அஞ்சி பெண்ணுடையில் வேலூருக்குத் தப்பிச் சென்றார்.

**பதவிப்பறிப்பு**

சென்னையில் ஆங்கிலேயரின் பராமரிப்பில் இருந்த சப்தர் அலியின் மகன் சிறுவன் இரண்டாவது சதத்துல்லா நவாபாக அமர்த்தப்பட்டான். அதை விரும்பாத ஐதராபாத் நிசாம் 1743-இல் கர்நாடகத்தின் மீது படையெடுத்து வந்து அன்வருதீனை இரண்டாவது சதத்துல்லாவின் பாதுகாப்பாளராக நியமித்தார். விரைவிலேயே 10 வயதான ஆற்காடு இளவரசன் அன்வாருதீனின் முன்னிலையில் குத்திக்கொல்லப்பட்டான். அன்வாருதீன் நவாப் பதவியைப் பறித்துக் கொண்டார்.

இவர் வாலாஜா குலத்தைச் சேர்ந்தவர். எனவே, அன்வாருதீனின் வாரிசுகள் வாலாஜாக்கள் என்று அழைக்கப்பட்டனர். புதிய பரம்பரையைத் துவக்கிய அன்வாருதீன்கான் ஆட்சிக்காலத்தில் தான் முதல் கர்நாடகப் போர் நடைபெற்றது.

**கர்நாடகப்போர்கள், 1746 – 1760**

**முதல் கர்நாடகப்போர், 1746 – 1748**

**காரணம்**

18ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் ஐரோப்பாவுக்குச் சளி பிடித்தால், இந்தியாவிலிருந்த ஐரோப்பிய ஆட்சியாளர்கள் தும்மும் நிலை இருந்தது. 1740-இல் ஐரோப்பாவில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே துவங்கிய ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் இந்தியாவில் எதிரொலித்தது. தமிழ்நாட்டில் பாண்டிச்சேரியில் பிரெஞ்சு கிழக்கிந்திய கம்பெனியின் ஆளுநராயிருந்த டூப்ளே இந்தியாவில் ஒரு பிரெஞ்சுக் காலனியை உருவாக்க விரும்பினார். அதற்கான ஏற்பாடுகளை முனைப்போடு மேற்கொண்டார். ஐரோப்பாவில் துவக்கப்பட்ட ஆஸ்திரி வாரிசுரிமைப்போர் டூப்ளே தனது விருப்பதை நிறைவேற்றிக் கொள்வதற்கான கிடைத்தற்கரிய வாய்ப்பாக அமைந்தது. சுருங்கக் கூறின், டூப்ளேயின் காலணி ஆதிக்க ஆசையே முதல் கர்நாடகப் போரின் மூலகாரணம்.

**போரின் போக்கு : சென்னை கைப்பற்றப்படல், 1746**

ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப்போர் துவங்கியவுடன் பாண்டிச்சேரியிலிருந்த பிரெஞ்சுக் கம்பெனியும், சென்னையிலிருந்த பிரிட்டிஷ் கம்பெனியும் போருக்குத் தயாராயின. டூப்ளே ஆற்காட்டு நவாபின் ஆதரவை நாடினார். ஆனால் ஆற்காட்டு நவாப் அவரது பகுதியில் பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் போரிடுவதை விரும்பவில்லை எனினும் டூப்ளே நாகப்பட்டினத்துக்கு அருகே பெய்டன் தலைமையிலான ஆங்கிலப்படையை எதிர்க்கொண்டார். அதன்பின் சோழ மண்டலக் கரையை அடைந்த டூப்ளே மொரீசிய தீவுகளின் ஆளுநராக இருந்த பிரெஞ்சு தளபதி லா போர்டோனேயின் உதவியோடு சென்னையைக் கைப்பறினார்.

**சென்னையை என்ன செய்வது?**

சென்னையைச் கைப்பற்றியவுடன் அதை என்ன செய்வது என்பது பற்றி இருபெரும் பிரெஞ்சு மேதைகளான டூப்ளேவுக்கும் போர்டோனேக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சென்னையைக் கையகப்படுத்தி கொள்ளலாம் என்றார் டூப்ளே. ஆனால் போர்டோனே மீட்புப்பணத்தைப் பெற்றுக் கொண்டு சென்னையை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்துவிடலாம் என்றார். அதன்படி ஒரு ஒப்பந்தம் செய்து கொண்டு சோழ மண்டலக் கடற்கரையை விட்டுப்புறப்பட்டார் போர்டோனே. இரு திறமைசாலிகள் ஒத்துப் போக முடியாது என்பதற்கு இவ்விருவரும் முன்னுதாரணங்களாகும். மொரீசிய ஆளுநர் சென்றபின் டூப்ளே ஒப்பந்தத்தை மீறி சென்னையைச் சூறையாடினார். சென்னையிலிருந்து ஆங்கிலேயரின்

வர்த்தகத்தையும், வர்த்தகர்களையம் சென்னையிலிருந்து பாண்டிச்சேரிக்கு கொண்டு செல்ல முயன்றார். சென்னையைக் கைப்பற்றுவதால் யாருக்கு என்ன லாபம் என்பதே இவ்விரு பெரும் பிரான்சின் மைந்தர்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டுக்குக் காரணம் என்று கருதுகிறார். பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர்

**சாந்தோம் சண்டை, 1746**

பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் ஆற்காட்டில் மோதுவதை நவாப் அன்வாருதீன் விரும்பவில்லை என்பதைக் குறிப்பிட்டோம். அதன்பின்னர் டூப்ளே ஆற்காட்டு நவாபின் சார்பாகப் போரிடுவதாகக் கூறியதை நவாப் கடுமையாகக் கண்டித்தார். எனினும் டூப்ளே தன்னிச்சையாகச் செயல்பட்டார். சென்னை சரணடைந்தது. ஆற்காட்டு நவாபு மாபஸ்கான் தலைமையில் ஒரு படையை அனுப்பி சென்னையை முற்றுகையிட்டார். நவாபின் படையை லா டோர் தலைமையிலான பிரெஞ்சுப் படை சாந்தோமுக்கு விரட்டியது. பாண்டிச்சேரியிலிருந்து பராடே தலைமையில் வந்த மீட்புப் படை அடையார் ஆற்றைக் கடந்து சென்று, துப்பாக்கிச் சூடு நடத்தி சென்னையை மீட்டது. எனவே பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையேயான இம்மோதல் சாந்தோம் அல்லது அடையாறு சண்டை எனப்படுகிறது. சென்னை முற்றுகை பிரெஞ்சுப்புரட்சியின் போது நிகழ்ந்த பாஸ்டையில் முற்றுகையை நினைவுபடுத்துவதாக இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார். டூப்ளேயின் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ள கர்னல் மல்லேசன். சாந்தோம் சண்டையின் உண்மையான முக்கியத்துவம் பிரெஞ்சுப்படை பலமும் படை உத்தியும்தான் என்று கருதுகிறார். டூப்ளேயையும் கிளைவையும் ஒப்பிட்டு எழுதியுள்ள எச். டோட்வெல்.

**பாண்டிச்சேரி முற்றுகை, 1748**

சென்னையைக் கைப்பறிய டூப்ளே ஆங்கிலேயர் வசமிருந்த புனித டேவிட்ட கோட்டையையும் கையகப்படுத்த மூன்று முறை முயற்சி செய்தார் முடியவில்லை. இதற்கிடையே 1748-இல் அட்மிரல் பாஸ்காவான் புனித டேவிட் கோட்டை வழியாகச் சென்று பாண்டிச்சேரியை முற்றுகையிட்டார். ஆனால் டூப்ளே அசாதாரண திறமையுடன் பாண்டிச்சேரியை அம்முற்றுகையிலிருந்து பாதுகாத்தார். அவ்வெற்றிக்குப் பின் அவரது மனைவியும் பக்கபலமாக இருந்தார். பாஸ்காவான் பாண்டிச்சேரியிலிருந்து பின் வாங்கினார். மீண்டும் அவர் முற்றுகையிடும் முன் ஐரோப்பாவில் ஆஸ்திரிய வாரிசுரிமைப் போர் முடிவுக்கு வந்தது.

**போரின் விளைவு**

1748ஆம் ஆண்டு பிரிட்டனும் பிரான்சும் செய்து கொண்ட அய்-லா-சபேல் உடன்பாட்டின்படி முதல் கர்நாடகப் போர் முடிவுக்கு வந்தது. சென்னை மீண்டும் ஆங்கிலேயரிடம் ஒப்படைக்கப்பட்டது. இப்போர் டூப்ளேக்குப் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. ஐரோப்பிய கப்பல் படை வலிமை வெளிப்பட்டது. அதேபோன்று ஆற்காடு நவாபின் படை பலவீனமும் அம்பலமானது. ஆங்கிலக்கம்பெனி நவாபுக்கு

குத்தகைப் பணம் கொடுப்பதை நிறுத்திவிட்டது. இப்போா் தமிழகத்தில் நிலவிய தெளிவற்ற நிலையை அடிக்கோடிட்டுக் காட்டியது. போர் முடிந்தாலும் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் இடையேயான போட்டியும் பகைமையும் வளரவே செய்தன. முதல் கா்நாடகப்போா் அடுத்த போருக்கான ஒத்திகையாக இருந்தது எனலாம்.

**இரண்டாம் கா்நாடகப்போா் 1749-1754**

**காரணம்**

**ஐதராபாத் நிசாம் வாரிசுரிமைப்போா்**

ஐதராபாத்திலும், ஆற்காட்டிலும் ஒரே சமயத்தில் ஏற்பட்ட வாரிசுரிமைப்போட்டி பிரெஞ்சுக் கம்பெனியும் பிரிட்டிஷ் கம்பெனியும் உள்நாட்டு விவகாரத்தில் நேரடியாகத் தலையிடுவதற்கான வாய்ப்பை வலிய வந்து கொடுத்தது. ஐதராபாத் நிசாமுக்குப் பல பிள்ளைகள் நிசாம்-உல்-முல்க் 1748 ஆம் ஆண்டு இறந்தார். அவரது இரண்டாவது மகன் நாசிா் ஜங், அவரது மகள் வழிப்பேரன் முசாபா் ஜங். மகன் நாசீா் ஜங்குக்கும், பேரன் முசாபா் ஜங்குக்குமிடையே வாரிசுரிமைப்போட்டி ஏற்பட்டது. நாசீா் ஜங் ஆங்கிலேயரின் ஆதரவைக் கோர, முசாபா், ஜங் டூப்ளேயின் உதவியை நாடினாா். தங்களைத் தேடி வாய்ப்பை ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் நன்கு பயன்படுத்திக்கொண்டனா்.

**ஆற்காட்டு வாரிசுரிமைப்பிரச்சனை**

ஆற்காட்டு நவாப் அன்வாருதீன் எதிா்பாராத பிரச்சனையை எதிா்கொள்ள வேண்டியதாயிற்று. மராத்தியரால் கைது செய்யப்பட்டு சதாராவுக்குக் கொண்டு செல்லப்பட்ட சந்தாசாகிபை 1748-இல் அவரது மகன் ராஜா சாகிப் டூப்ளேயின் உதவியோடு தந்தையை சதாரா சிறையிலிருந்து மீட்டாா். சிறையிலிருந்து விடுதலை பெற்று திரும்பிய சந்தா சாகிப் அன்வாருதீனுக்கு பதில் ஆற்காடு நவாபாக வேண்டுமென்று உரிமை கோரினாா். அதன் காரணமாக அன்வாருதீனுக்கும் சந்தாசாகிபுக்குமிடையே வாரிசுரிமைப் போட்டி உருவாயிற்று. இப்போட்டியின் போது சந்தா சாகிப் டூப்ளேயின் உதவியை நாட அன்வாருதீன் ஆங்கிலேயரின் ஆதரவைக் கேட்டாா். தங்களைத் தேடி வந்த வாய்ப்பை இரு எதிரிகளும் பயன்படுத்திக்கொண்டனா். எனவே, ஐதராபாத் மற்றும் ஆற்காடு வாரிசுரிமைப்போட்டிகள் இரண்டாவது கா்நாடகப் போருக்குக் காரணமாயிற்று.

**போரின் போக்கு**

**ஆம்பூா் போா், 1749**

ஆற்காட்டு நவாபாக வேண்டும் என்ற ஆசையால் உந்தப்பட்ட சந்தா சாகெப் ஐதராபாத் நிசாமாக விரும்பிய முசாபா் ஜங்குடன் சோ்ந்து கொண்டு அன்வாருதீனுக்கு எதிராகச் சதி செய்தாா். இவா்கள் இருவரும் பிரெஞ்சுக்காரரின் உதவியுடன் வடஆற்காடு மாவட்டத்தில் உள்ள ஆம்பூரில் அன்வருதீனைத்

தோற்கடித்தனர். நவாப் போர்க்களத்தில் உயிர் துறந்தார். வெற்றியாளர்களான சந்தா சாகெப் ஆற்காடு நவாபாகவும், முசாபர் ஜங் ஐதராபாத் நிசாமாகவும் பிரகடனப்படுத்திக்கொண்டனர். இவ்விருவரும் டூப்ளேயைச் சந்தித்து பெருமைப்படுத்தி, நிலப்பகுதிகளையும் தாராளமாகக் கொடுத்தனர்.

**திருச்சியில் முகமது அலி**

பெருகி வந்த பிரெஞ்சுக்காரரின் செல்வாக்கைக் கண்டுபொறாமை கொண்ட ஆங்கிலேயர் ஆற்காட்டு விவகாரத்தில் தலையிட்டனர் போரின் போது அன்வாருதீன் இறந்த பின் அவரது மகன் முகமது அலி திருச்சிக்குத் தப்பிச் சென்றுவிட்டார். அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்ட சந்தோம் முகமது அலிக்குச் சொந்தமானது என்று கூறி அதைக் கைப்பற்றினர். ஆங்கிலேயர் இந்த இக்கட்டான கட்டத்தில் ஆற்காடு நவாபை உறுதியாக ஆதரித்து அவர் பக்கம் நின்றனர். அதுமட்டுமல்ல, அவர்கள் டூப்ளேயின் எதிரிகளையும் பிரெஞ்சுக்காரருக்கு எதிராகத் திருப்பினர். இதை அறிந்த டூப்ளே ஒரு படைப்பிரிவைத் திருச்சிக்கு அனுப்பினார்.

**நாசீர் ஜங்கின் நடவடிக்கை, 1750**

**முசாபர் ஜங் சரண்**

தக்காண ஆளுநரும், ஐதராபாத் நிசாமுமான நாசிர் ஜங்தன் படையுடன் பாண்டிச்சேரிக்கு அருகாமையில் உள்ள வண்டலூர் வந்தடைந்தார். அவருடன் ஆங்கிலப்படையும் சேர்ந்து கொண்டது. நாசிர் ஜங்கின் போட்டியாளரும், டூப்ளேயின் ஆதரவாளருமான முசாபர் ஜங் சரணடைந்தார். அவரைக் கைது செய்த பின்னர் நாசிர் ஜங் ஆற்காட்டை அடைந்தார்.

**நவாப் சந்தா சாகெப்**

டூப்ளே நாசிர் ஜங்குடன் நேரடியாக சேராமல் பிரெஞ்சு தளபதி புஸ்ஸியின் தலைமையில் செஞ்சியைக் கைப்பற்றிக்கொண்டார். செஞ்சியை மீட்கச் சென்ற நாசீர் ஜங் கொல்லப்பட்டார். இதனால் பிரெஞ்சுக்காரரின் கை மேலோங்கியது. கைத செய்யப்பட்டிருந்த முசாபர் ஜங் விடுவிக்கப்பட்டார். விடுவிக்கப்பட்ட முசாபர் ஜங் பாண்டிச்சேரி சென்று, டூப்ளேவைச் சந்தித்து, நிலக் கொடையால் நன்றி செலுத்தினார். அதற்குப் பரிசாக டூப்ளே முசாபர் ஜங்கை ஐதராபாத் நிசாமாக அறிவித்தார். புதிய நிஜாமின் வேண்டுகோளுக்கு இணங்க பிரெஞ்சு தளபதி புஸ்ஸி வழிக்காப்பாளராக ஐதராபாத் வரை சென்றார் சந்தா சாகெப் ஆற்காடு நவாப் ஆனார்.

**திருச்சி முற்றுகை, 1751-1754**

**ஆங்கிலப்படை**

திருச்சிக்குத் தப்பிச் சென்ற முகமது அலியைக் கைது செய்வதற்காக பிரெஞ்சு தளபதி லா ஆற்காடு நவாப் சந்தா சாகெபின் படையுடன் திருச்சியை முற்றுகையிட்டார். தளபதி புஸ்ஸி நிசாமுக்குப் பக்கபலமாக ஐதராபாத்தில் இருந்தார். சந்தா சாகெப்-பிரெஞ்சுக் கூட்டணிக்கு எதிராக புனித டேவிட்

கோட்டையின் ஆங்கில ஆளுநர் தாமஸ் சாண்டர் தஞ்சாவூர், மைசூர் மன்னர்கள் மற்றும் கூட்டிஜ ஆட்சி செய்த சாந்தாஜி கோர்படே ஆகியோரின் ஆதரவைப்பெற்றார். யாவற்றுக்கும் மேலாக திறமைமிக்க தளபதி மேஜர் லாரன்ஸ் ஆங்கிலப்படைக்குத் தலைமை ஏற்றார். மேஜர் லாரன்சின் கீழ் பணிபுரிந்தார் திறமையும் துடிப்புமிக்க இளைஞர் ராபர்ட் கிளைவ்

**கிளைவின் கருத்து**

திருச்சி முற்றுகையை முறியடிக்க ராபர்ட் கிளைவ் தளபதி சாண்டர்சிடம் ஒரு யோசனையைக் கூறினார். அதாவது ஆற்காட்டை முற்றுகையிட்டால் திருச்சி முற்றுகை தளர்த்தப்படும் என்பதே அந்த யோசனை. கிளைவின் கருத்தால் பெரிதும் கவரப்பட்ட தளபதி மேஜர் சாண்டர் ஆற்காட்டை முற்றுகையிடும் பொறுப்பைக் கிளைவிடம் ஒப்படைத்தார். கிளைவ் ஆற்காட்டை முற்றுகையிட்டார். அவர் எதிர்பார்த்தபடியே திருச்சியை முற்றுகையிட்டிருந்த சந்தா சாகெப்-பிரெஞ்சுப் படையின் கவனம் சிதறி ஆற்காட்டைக் காப்பாற்றுவதில் திரும்பியது. ஆங்கிலப் படை எளிதில் திருச்சி முற்றுகையை முறியடித்தது. பிரெஞ்சுத் தளபதி ஜாக்குவஸ்லாவின் முற்றுகை முயற்சி தோல்வியில் முடிந்தது. ஆற்காட்டு நவாப் கைது செய்யப்பட்டு முகமது அலியின் ஆலோசனையின்படி கொல்லப்பட்டார். டூப்ளேயின் திட்டம் அடிபட்டுப் போயிற்று. இதற்கிடையே கிளைவ் காவேரிப்பாக்கத்தில் வெற்றி பெற்று சென்னையைக் காப்பாற்றினார். சென்னையைக் காப்பாற்றியதோடு கூவலாங்கையும், செங்கல்பட்டையும் கைப்பற்றினார்.

**விளைவு**

ஆற்காட்டு நவாப் சந்தா சாகெப்-பிரெஞ்சு ஆளுநர் டூப்ளே ஆகியோருக்குச் சாதகமாகத் துவங்கிய இரண்டாவது கர்நாடகப்போர் ஆங்கிலேயருக்குச் சாதகமாக முடிந்தது. ஆங்கிலேயரின் செல்வாக்கு பன்மடங்கு உயர்ந்தது. அதன் விளைவாக அவர்கள் சுதேச மன்னர்களின் ஆதரவைப் பெறுவது எளிதாயிற்று. ஆற்காட்டு நவாப் முகமது அலி ஆங்கிலேயருக்கு நன்றிக் கடன்பட்டு நிரந்தர ஆதரவாளரானார். சுருங்கக்கூறின், பிரெஞ்சுத் தோல்வியின் மீது ஆங்கிலேயர் தங்களது வெற்றிக் கொடியை உயர்த்திப் பிடித்தனர். மதிப்பிழந்த டூப்ளேயின் பதவி பறிக்கப்பட்டு, அவருக்குப் பதில் கோதேகு பாண்டிச்சேரி ஆளுநராக நியமிக்கப்பட்டார். அவர் ஆங்கிலேயருடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்தார். புதிய ஆளுநர் டூப்ளேயின் ஆதிக்கக் கொள்கையை நிராகரித்தார். முகமது அலி ஆற்காடு நவாபாக ஏற்றுக்கொள்ளப்பட்டார். பிரெஞ்சுக்காரரும் ஆங்கிலேயரும் தங்கள் வசமிருந்த இடங்களைத் தக்க வைத்துள்கொண்டனர். இருசாராருமே சுதேச ஆட்சியாளரின் உள் விவகாரங்களில் தலையிடுவதில்லை என்று ஒப்புக்கொண்டனர். இரண்டாவது கர்நாடகப் போர் தமிழ் நாட்டில் ஆங்கில ஆதிக்க எழுச்சியின் அடையாளமாக அமைந்தது.

## மூன்றாவது கர்நாடகப்போர், 1757-1763

### காரணம்

முதல் கர்நாடகப்போர் ஐரோப்பாவில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்குமிடையே நடைபெற்ற ஆஸ்திரிய வாரிசுரிமைப்போரின் எதிரொளியாகும். இரண்டாவது கர்நாடகப்போர் ஐதராபாத் நிசாம் மற்றும் ஆற்காடு நவாப் ஆகியோரது வாரிசுரிமைப்போட்டிகளின் விளைவாக நிகழ்த்தப்பட்டது. மூன்றாவது கர்நாடகப்போர் மீண்டும் ஐரோப்பாவில் பிரிட்டனுக்கும் பிரான்சுக்கும் துவங்கிய ஏழாண்டுப்போரின் விளைவாகும். ஆறு மாத காலமே ஆளுநர் பதவியிலிருந்த கோதேகுக்குப் பதில் லேரிட் புதிய ஆளுநராக அனுப்பப்பட்டார். அதோடு தாமஸ் ஆர்தர் என்ற லாலி பிரெஞ்சு அரசாங்கத்தின் 'அரசுப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார். இவர் இரண்டு முக்கிய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கான அதிகாரத்தைப் பெற்றிருந்தார். 1) பாண்டிச்சேரி நிர்வாகத்தைச் சீரமைத்தல், 2) ஆங்கிலேயரை இந்தியாவைவிட்டு வெளியேற்றம், 1758இல் பாண்டிச்சேரி வந்தடைந்த லாலி அவருக்கு அளிக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்ற முற்பட்டார். எனவே, பிரெஞ்சுக்காரரின் ஆதிக்க ஆசையே மூன்றாவது கர்நாடகப்போருக்கான முக்கிய காரணமாகும்.

லாலியின் அதிரடி நடவடிக்கைகள், 1748

### சூறாவளி சுற்றுப்பயணம்

லாலியிடம் வீரமும் நேர்மையும் இருந்த அளவுக்கு விவேகமில்லை. முன்கோபக்காரர். யாருடைய ஆலோசனையையும் ஏற்காதவர். யதேச்சாதிகாரத்தால் எதையும் சாதிக்க முடியும் என்று நம்பினார். பாண்டிச்சேரியின் 'அரசுப் பிரதிநிதியாக' ஆட்சிப்பொறுப்பேற்ற உடனேயே அதிரடி நடடிவக்கைகளை மேற்கொண்டார். முதல் நடவடிக்கையாக ஆங்கிலேயர் வசமிருந்த புனித டேவிட் கோட்டையைக் கைப்பற்றினார். அதன்பின் தஞ்சாவூருக்கு விரைந்து சென்று கடன் பாக்கியை வசூலிக்கும் முயற்சியைத் தீவிரப்படுத்தினார். நாகூரைக் கைப்பற்றிச் சூறையாடினார். திருவள்ளூர் சென்ற லாலி அங்கு கொள்ளையிட எதுவுமின்மையால் அங்கிருந்த கோயில் பூசாரிகள் ஆளுபேரைத் தூக்கிலிட்டார். இவரது மூர்க்கத்தனத்தால் மக்கள் வீட்டைவிட்டு வெளியேறினர். இச்சூறாவளி சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு லாலி பாண்டிச்சேரி திரும்பினார்.

### சென்னை முற்றுகை

பாண்டிச்சேரி திரும்பிய லாலி சென்னை முற்றுகையில் தீவிரமாக இருந்தார். பிரெஞ்சு தளபதி புஸ்ஸியை ஐதராபாத்திலிருந்து புறப்பட்டு வருமாறு பணித்தார். பாண்டிச்சேரிக்கும் சென்னைக்கும் இடையேயுள்ள பல இடங்களைக் கைப்பற்றிய பின்னர் லாலி 1758 டிசம்பர் 14-ஆம் தேதி சென்னையை முற்றுகையிட்டார். அடுத்த ஆண்டு துவக்கத்தில் பீரங்கித் தாக்குதலைத் துவக்கினார். ஆனால் சென்னை ஆளுநர் ஜார்ஜ் பிகாட் சென்னையைப் பலமாகப் பாதுகாத்தார். அவருக்கு உதவியாக திருச்சியிலிருந்து ஒரு படைப் பிரிவும், செங்கல்பட்டிலிருந்து மற்றொரு

படைப்பிரிவும் சென்னைக்கு வந்து சேர்ந்தன. இவற்றோடு ஆங்கிலக்கடற்படையும் சேர்ந்து கொண்டது. லாலி வேறு வழியின்றி சென்னை முற்றுகையை விலக்கிக் கொண்டார். இம்முற்றுப்பெறா முற்றுகை லாலியின் பெருமையை வெகுவாகக் குறைத்துவிட்டது.

**வந்தவாசிப்போர், 1760**

**தென்னிந்தியாவுக்கு வெளியே**

மூன்றாவது கர்நாடகப்போர் தென்னிந்தியாவுக்கு வெளியேயும் பரவியிருந்தது. ஆங்கிலப்படை வங்காளத்தில் பிரெஞ்சுக் குடியிருப்பு சந்திரநாகூரைக் கைப்பற்றியது. வங்காளத்திலிருந்த தளபதி போர்டேயின் தலைமையில் விசாகப்பட்டினம் வந்து பிரெஞ்சுப்படையை ராஜமுந்திரியில் தோற்கடித்தது. அடுத்த ஆண்டே போர்டே மசூலிப்பட்டினத்தைக் கைப்பற்றி குண்டூரைத் தவிர பிற வடசர்க்கார் பகுதிகளை கஞ்சம், விசாகப்பட்டினம், கோதாவரி, கிருஷ்ணாயும் ஒரு உடன்படிக்கையின் மூலம் பெற்றுக்கொண்டார்.

**வந்தவாசிப்போர்**

இதற்கிடையே பிரெஞ்சுப்படை ஆங்கிலப்படையைக் காஞ்சீபுரத்தில் தோற்கடித்தது. எனினும் பிரெஞ்சுக்காரர் இந்த வெற்றியைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர். அதற்குக் காரணம் நிதி நெருக்கடியும் படை வீரர்களின் கிளர்ச்சியுமாகும். பிரெஞ்சு தளபதி தே ஆக் தோல்வியடைந்து, காயமுற்று, சோழமண்டலக் கடற்கரையை விட்டு வெளியேறினர். அதே சமயம் அயர்குட் ஒரு வலுவான ஆங்கிலப்படையுடன் வந்து சேர்ந்தார். ஆங்கிலப்படையும், பிரெஞ்சுப்படையும் வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வந்தவாசியில் சந்தித்துப்போரிட்டன. இப்போரில் லாலி தோற்கடிக்கப்பட்டார். புஸ்ஸி கைது செய்யப்பட்டார். வந்தவாசித் தோல்வி தமிழ்நாட்டில் பிரெஞ்சுக்காரரின் தலைவிதியை நிர்ணயித்தது எனலாம்.

**பாண்டிச்சேரி வீழ்ச்சி, 1761**

பாண்டிச்சேரியின் ‘இரும்பு மனிதன்’ என்று கருதப்பட்ட லாலி தோல்விக்கு மேல் தோல்வியை சந்திக்க வேண்டியதாயிற்று மைசூர் ஐதர் அலியுடன் செய்து கொண்ட உடன்படிக்கையும் அவருக்குக் கை கொடுக்கவில்லை. அயர்கூட்டின் தலைமையில் வந்த ஆங்கிலப் படை பாண்டிச்சேரிக்குப் பக்கத்தில் உள்ள வில்லியனூரைக் கைப்பற்றியது. பின்னர் பாண்டிச்சேரி முற்றுகையிடப்பட்டது. வளமோடு இருந்த பாண்டிச்சேரி வறுமையின் பிடியில் சிக்கி வீழ்ந்தது. அதைத்தொடர்ந்து செஞ்சியும், மாகியும் வீழ்ந்தன. அப்போது ஐரோப்பாவில் பிரிட்டனும் பிரான்சும் செய்து கொண்ட பாரி உடன்படிக்கை மூன்றாவது கர்நாடகப்போரை முடிவுக்கு கொண்டு வந்தது.

**விளைவு**

பாரி உடன்படிக்கையின் விளைவாக 1) டூப்ளேயின் ஆக்கிரமிப்புக்கு முன்பு இருந்த நிலப்பகுதிகளை பிரெஞ்சுக்காரர்களுக்கு திரும்பிக் கொடுக்கப்பட்டன. 2) பிரெஞ்சக்காரர்கள் தங்கள் நடவடிக்கைகளை வர்த்தகத்தோடு மட்டும் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. 3) ஆங்கிலேயர் வடசர்க்கார் பகுதிகளைத் தக்க வைத்துக்கொண்டனர். 4) முகமது அலியின் ஆற்காடு நவாப் பதவி உறுதி செய்யப்பட்டது. 5) தமிழ்நாட்டில் பிரெஞ்சு ஆதிக்கம் முடிவுக்கு வந்தது. மலையைப் பிடிக்க முயன்றவர்களுக்கு மலை எலிகள் கிடைத்தது. 6) மதிப்பிழந்து தாய்நாடு திரும்பிய லாலி பாஸ்டில் சிறையில் அடைக்கப்பட்டு பாரீசில் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

**பிரெஞ்சுத் தோல்விக்கான காரணங்கள்**

**கம்பெனி**

பிரெஞ்சுக்கிழக்கிந்திய கம்பெனி ஒரு வர்த்தக நிறுவனமாயினும் மைய அரசாங்கத்தின் துறையைப்போல் செயல்பட்டது. அதனால் சுயேட்சையாகவும் தன்முனைப்போடும் செயல்பட முடியவில்லை. மேலும் தாய்நாட்டு அரசம், பங்குதாரர்களும், அதிகாரிகளும், மக்களும் கம்பெனியின் நடவடிக்கைகளில் போதிய அக்கறை காட்டவில்லை.

**நோக்கம்**

பிரெஞ்சுக் கம்பெனியின் நோக்கம் வர்த்தக உருவாக்கத்தோடு மட்டுமல்லாது நிலத்தைக் கையகப்படுத்தி பிரெஞ்சுப் பேரரசின் பகுதியாக்க வேண்டும் என்பதாகும். இந்த இரட்டை நோக்கு கம்பெனியின் போக்கைத் திசைமாறச் செய்துவிட்டது. கிடைத்த மானியத்தையும், வருவாயையும் தவறான வெளிநாட்டுக் கொள்கையால் விரயமாக்கிவிட்டனர்.

**நிதிநிலை**

பிரெஞ்சுக் கம்பெனியின் நிதிநிலை அடிப்படை துவக்கத்திலிருந்தே பலவீனமாக இருந்தது. இந்தப் பலவீனம் ஆங்கில-பிரெஞ்சுப் போரின் போதே தெளிவாகத் தெரிந்தது. ஆதிக்க ஆசைக்கேற்ப வருவாய் பெருகவில்லை. மார்ட்டின், லெனோர், டூமா ஆகியோரது தலைமையின்கீழ் வர்த்தகம் இலாபகரமாக இருந்தாலும் பின்னர் வருவாய் வெகுவாகக் குறைந்துவிட்டது. டூப்ளே வர்த்தகத்தைவிட அரசியல் அதிகாரப்பெருக்கத்தில் அதிக அக்கறை காட்டினார். லாலியும் நிதி நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறார். கம்பெனிக்கு மைய அரசின் நிதி ஆதரவும் கிடைக்கவில்லை.

**கடற்படை**

பிரெஞ்சுக் கம்பெனியின் வெற்றி தோல்வியை பிரெஞ்சுக் கடற்படையே தீர்மானித்தது. லா போர்டோனேயின் கடற்படை உதவியோடுதான் டூப்ளேயால்

சென்னையைக் கைப்பற்ற முடிந்தது. அதேபோன்று பெய்டன் பெங்காலுக்குச் சென்றுவிட்டதால் டூப்ளேயால் புனித டேவிட் கோட்டையைக் கையகப்படுத்த முடியவில்லை. பிரெஞ்சுக்காரரின் சென்னை முற்றுகை ஆங்கிலக்கப்பல்படை வந்ததால் விலக்கிக் கொள்ளப்பட்டது. டிஆக்சோழ மண்டலக் கடற்கரையை விட்டுச் சென்றது பிரெஞ்சுக் கடல் வலிமையை மேலும் பலவீனமடையச் செய்தது. வந்தவாசிப்போர் தமிழ்நாட்டை பாரீசிலிருந்து கொண்டு ஆட்சி செய்ய முடியாது என்பதைத் தெளிபடுத்தியது. சுருங்கக்கூறின், பிரெஞ்சுத் தோல்வி அதன் கடல்படைத் தோல்வியேயாகும்.

**இராணுவம்**

உள்நாட்டு வெற்றிக்கு தரைப்படையின் வலிமை இன்றியமையாதது. பிரெஞ்சு இராணுவத்தின் உட்கட்டமைப்பும், ஒருங்கிணைப்பும், கூட்டு முயற்சியும் தேவைக்கேற்ப பலப்படுத்தப்படவில்லை. தரைப்படை வலிமையின்மையால்தான் பிரெஞ்சுக்காரர் வந்தவாசிப்போரில் தோல்வியைத் தழுவ வேண்டியதாயிற்று.

**தலைமை**

பிரெஞ்சுக் கம்பெனிக்கு நிர்வாகத் தலைமை அமைந்ததைப் போன்று இராணுவத் தலைமை கிடைக்கவில்லை. எடுத்துக்காட்டாக, பிரெஞ்சுப்படை கர்நாடகத்தில் போராடிக்கொண்டிருக்கையில் புஸ்ஸி ஐதராபாத்தில் காலம் கடத்திக் கொண்டிருந்தார். அவர் பாண்டிச்சேரிக்குத் திரும்பிய பின்னர் அவரும் லாலியும் ஒத்துப்போக முடியவில்லை. பிரெஞ்சுத் தலைவர்களிடையே ஏற்பட்ட முரண்பாடுகளும், தகராறுகளும் இவர்களது தலைமைத் திறமையை வெகுவாப் பாதித்துவிட்டது. பிரிட்டிஷ் இந்திய வரலாற்று ஆசிரியர் ராபர்ட் குறிப்பிட்டுள்ளதைப் போன்று பிரெஞ்சுக் கம்பெனி காலம் கனிவதற்கு முன்பே கர்நாடகச் செங்கோலைப் பிடித்துவிட்டது. வர்த்தகக் கம்பெனியும் போர் முனைப்பார்வைத் தலைமையும் பொருந்தா சேர்க்கை என்பதைப் பிரெஞ்சுத் தோல்வி அடிக்கோடிட்டுக் காட்டியது.

**ஆங்கிலேயரின் வெற்றிக்கான காரணங்கள்**

பிரெஞ்சுக் கம்பெனியின் தோல்விக்கான காரணங்கள் அனைத்தும் பிரிட்டிஷ் கம்பெனியின் வெற்றிக்கான வாய்ப்புகளாக இருந்தன.

**கம்பெனி**

பிரிட்டிஷ் கம்பெனி துவக்கத்திலிருந்தே தனியார் வர்த்தக நிறுவனமாகவே செயல்பட்டது. இலாபகரமான வர்த்தகமே அதன் கறிக்கோளாக இருந்தது. அதற்கு பிரிட்டிஷ் அரசாங்கமும், பங்குதாரர்களும், நிர்வாகமும், மக்களும் தொடர்ந்து ஆதரித்தனர். இந்தியக் கம்பெனி வர்த்தக சுதந்திரம் பெற்றிருந்தது. இக்கம்பெனி போட்டிக் கம்பெனிகளை விடச் சிறப்பாகச் செயல்பட்டது. அரசியல் இராணுவ முன்னீடுபாடுகளுக்கிடையே கம்பெனி வர்த்தக விரிவாக்கத்தை விட்டுவிடவில்லை. ஆரியக் கூத்தாடினாலும் ஆங்கிலக் கம்பெனி காரியத்தில் குறியாக இருந்தனர்.

**நோக்கம்**

பிரிட்டிஷ் கம்பெனி துவக்கத்திலிருந்தே அதன் நோக்கத்தில் தெளிவாக இருந்தது. வா்த்தக வெற்றியே அதன் இலக்கு, இலாபமே அதன் குறிக்கோள். வா்த்தக வெற்றி கம்பெனியின் ஆதிக்கப் பெருக்கத்துக்குத் துணையாகவே இருந்தது. ஆதிக்க ஆசையும் வா்த்தக விரிவாக்கமும் ஒரே நோ்கோட்டில் இருந்தன. கம்பெனியின் நோக்கத்தெளிவு அதன் வெற்றிக்கான காரணம்.

**நிதிநிலை**

ஆங்கிலக் கம்பெனிக்கு நிதி நெருக்கடி ஏற்பட்டதில்லை. தேவைப்பட்டால் பிரிட்டிஷ் அரசாங்கம் கம்பெனிக்கு உதவத் தயாராக இருந்தது. கம்பெனியும் பிரிட்டிஷ் கருவூலத்துக்கு உதவக்கூடிய நிலையில் இருந்தது. ஆங்கிலேயா் வங்காளத்தைப் பெற்றது கம்பெனியின் நிதி நிலையைப் பன்மடங்கு பெருக்கிப் பலப்படுத்தியது. ஆங்கிலக் குடியிருப்பும், வா்த்தகமும் அதன் போட்டிக் கம்பெனிகளைவிட மிகச் சிறப்பாகவே இருந்தன.

**கடற்படை**

பிரிட்டிஷ் கடற்படை உலகத்தரம் வாய்ந்தது. ஆங்கிலேயரின் தொடா் வெற்றிக்கு அதன் கப்பல் படையே அடிப்படைக் காரணமாகும். ஆங்கிலேயா் போா்ச்சுக்கீசியரையும், டச்சுக்காரா்களையும், பிரெஞ்சுக்காரரையும் புறம் காண்பதற்கு அவா்களது கடலாதிக்கமே துணையாக இருந்தது. ராபா்ட் கிளைவ் கடற்படையின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்தமையால்தான் அவரால் அசாதாரண வெற்றிபெற் முடிந்தது. கடற்படை பலத்தால் லண்டனில் இருந்து கொண்டே தமிழ் நாட்டை ஆட்சி செய்ய முடியும் என்பதை ஆங்கிலேயா் நிரூபித்துக்காட்டினா்.

**இராணுவம்**

கடற்படையைப் போன்றே ஆங்கில இராணுவமும் பலமும், திறமையும், கட்டுப்பாடும் மிக்கது. ஆங்கிலேயரின் வா்த்தகப் போட்டிக்கும் அரசியல் ஆட்சி நிா்வாகத்துக்கும் இராணுவம் பக்கபலமாக இருந்தது. வந்தவாசிப்போரில் ஆங்கிலேயா் வெற்றி பெற்றதற்குத் தரைப்படையே முதற்காரணமாகும். கடற்படையும், இராணுவமும் ஆங்கிலேயா் வெற்றி நாணயத்தின் இரு பக்கங்களாகும்.

**தலைமை**

ஆங்கிலேயரின் தலைமைத் திறமையே அவா்களுடைய தொடா் வெற்றிக்கு தலையாய காரணமாகும். பிரிட்டிஷ் கம்பெனியும், கடற்படையும், இராணுவமும், திறமையான தலைவா்களைக் கொண்டிருந்தன. மேஜா் டின்ஜா் லாரன்சும், ராபா்ட் கிளைவும் தலைமை முனைப்பில் நிகரற்றவா்கள், தலை சிறந்தவா்கள். குறிப்பாகப்போா்க்காலங்களில் முப்பிரிவுத் தலைவா்களும் - கம்பெனி, கடற்படை, இராணுவம் - ஒருங்கிணைந்து செயல்பட்டனா். பிரெஞ்சுக்காரா்களைப் போலன்றி

ஆங்கிலத் தலைவர்களிடையே முரண்பாடுகளும், தகராறுகளும் ஏற்படவில்லை.

## ஆங்கிலேயரும் ஆர்க்காட்டு நவாபுகளும்

### ஐதராபாத் நிஜாம்

நிஜாம் என்ற சொல் நிஜாம்-உல்-முல்க் என்பதன் சுருக்கமாகும். நிஜாம் என்றா ஆள்நிலப்பகுதியின் நிர்வாகி என்று பொருள். முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் இறந்த பின் ஐதராபாத்தின் ஆளுநராக இரந்த அசப்ஜா முகலாயப் பேரரசின் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டார். 1719லிருந்து ஐதராபாத்திலிருந்து தக்காணத்தை ஆட்சி செய்த அசப்ஜா குலத்தைச் சேர்ந்தவர்கள் நிஜாம்கள் என்று அழைக்கப்பட்டனர். இவர்களது ஆட்சி நிலப்பரப்பு சமகால முகலாயர்களுடைய நிலப்பரப்பைவிட அதிகமாக இருந்தது. நிஜாம்கள் உலகிலேயே பெரிய செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர். இவர்களது மேலாதிக்கத்தின் கீழ் ஆட்சி செய்தவர்கள் நவாபுகள் ஆவர்.

### ஆர்க்காட்டு நவாபுகள்

ஆர்க்காட்டைத் தலைமையகமாகக் கொண்டு ஆட்சி செய்த நவாபுகள் ஆர்க்காட்டு நவாபுகள் ஆவர். ஐதராபாத் நிஜாம் முகலாயப் பேரரசின் பிரதிநிதியாகப் பெயரளவில் இருந்ததைப் போன்றே ஆர்க்காட்டு நவாபுகள் நிஜாமின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டிருந்தனர். ஆங்கிலேயர் தமிழ் நாட்டில் காலூன்றிய போது ஆர்க்காட்டு நவாபுகள் கர்நாடகத்தை ஆட்சி செய்து கொண்டிருந்தனர். எனவே, இவர்கள் கர்நாடக நவாபுகள் என்றும் அறியப்பட்டனர்.

அன்றைய கர்நாடகம் கிருஷ்ணாவிலிருந்து கன்னியாகுமரி வரை விரிவடைந்திருந்தது. சென்னை, தஞ்சை, மதுரை, திருநெல்வேலி ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய கர்நாடகம் கிழக்குத் தொடர்ச்சி மலையிலிருந்து சோழ மண்டலக்கடற்கரை வரையிலும், மேற்குத்தொடர்ச்சி மலையிலிருந்து பாலக்காடு மற்றும் பிடார் வரையிலும் விரிந்து பரந்திருந்தது.

### நெவாயத்து நவாபுகள்

முதல் ஆர்க்காட்டு நவாப் சுல்பிகர் அலிகான், இவர் முகலாயப்பேரரசர் அவுரங்கசீப்பால் 1692 ஆம் ஆண்டு நவாபாக நியமிக்கப்பட்டார். மராத்தியரை வெற்றிகண்டமைக்காக முகலாயப் பேரரசர் அலிக்குக் கொடுத்த பரிசே ஆர்க்காட்டு ஆகும். சுல்பிகர் அலி கான் செஞ்சியிலிருந்து ஆட்சி செய்தார். இவருக்குப் பின் வந்த நவாப் சதத்துல்லாகான். இவர் தலைநகரை செஞ்சியிலிருந்து ஆர்க்காட்டுக்கு மாற்றினார். எனவே, ஆர்க்காட்டைத் தலைநகரமாகக்கொண்டு ஆட்சியைத் துவக்கிய முதல் நவாப் சதத்துல்லாகான் ஆவார். மேலும் இவர் நெவாயத் குலத்தைச் சேர்ந்தவராதலால் இவரும் இவருக்குப்பின் வந்தோரும் நெவாயத்துகள் என்ற அழைக்கப்பட்டனர். நெவாயத் பரம்பரையைத் தோற்றுவித்தவர் சதத்துல்லாகான் என்று குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் கே. ராஜய்யன்.

சதத்துல்லாகானின் வாரிசான தோஸ்து அலி (1732-1740) அண்டைப் பகுதிகளை ஆக்கிரமிப்பதில் ஆர்வம் காட்டினார். இவரது இணைப்புக்கொள்கை விளைவாக மதுரை இவரது ஆட்சிப் பகுதியோடு இணைக்கப்பட்டது. இவரது மகன் சப்தர் அலி, மருகமன் சந்தாசாகெப், தோஸ்து அலியைத் தொடர்ந்து சப்தர் அலியும், இரண்டாம் சதத்துல்லாகானும் நவாபானார்கள். நெவாயத் நவாபுகளின் ஆட்சிக்காலத்தில் இவர்களது செல்வாக்கை மதுரை மற்றும் தஞ்சை வரை விரிவுபடுத்தினார்.

**வாலாஜா நவாபுகள்**

இரண்டாம் சதத்துல்லா சிறுவனாக இருந்தமையால் ஐதராபாத் நிஜாம் அவரது தளபதி அன்வருதீனை நவாபின் பாதுகாப்பாளராக நியமித்தார். பேராசையின் பிறப்பிடமான அன்வருதீன் சிறுவன் நவாபைக் கொன்று விட்டு ஆட்சியயைக் கைப்பற்றிக்கொண்டார். இக்கொலையைக் கண்டுகொள்ளாத நிஜாம் வாலாஜா குலத்தைச் சேர்ந்த அன்வருதீனை ஆர்க்காட்டு நவாபாக நியமித்தார். எனவே அன்வருதீனும் அவரது வாரிசுகளும் வாலாஜாக்கள் என்று அழைக்கப்பட்டனர். சூழச்சிக் கொலையால் கைப்பற்றப்பட்ட ஆட்சி மாற்றத்தால் வாலாஜாக்களுக்கும் புறம் தள்ளப்பட்ட நெவாயத்துக்களுக்குமிடையே அதிகாரப் போட்டி தொடர்ந்தது. இப்பரம்பரைப்போட்டி ஆங்கிலேயரின் தலையீட்டுக்கு நல்ல களத்தை உருவாக்கிக் கொடுத்தது.

**அன்வருதீன்கான் 1743-1749**

தகாத முறையில் ஆட்சியைக் கைப்பற்றிய அன்வருதீன் ஒரு ஆதிக்கவாதி அவரது ஆதிக்கத்தைத் தமிழ்நாடு முழுவதுக்கும் விரிவுபடுத்த விரும்பினார். அதன் மூலம் வாலாஜாக்களின் செல்வாக்கையும், விரிவாக்கத்தையும் நிலைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். முதல் காரியமாக அவரது ஆதிக்கத்தை மதுரை மீது செலுத்தினார். அவருக்கு எதிராக எழுந்த பாளையக்காரர்களின் எதிர்ப்பை முறியடித்தார். தஞ்சாவூரின் பகுதிகளை ஆக்கிரமித்தார். திருச்சிக்கு இவர் வணங்கிய புனித சயித் ஹத்ரத்நாதர் வாவியின் பெயரில் நாதன்நகர் என்று பெயர் சூட்டினார். திருச்சி கோட்டையைப் பலப்படுத்தினார். மஸ்ஜித்-இ-முகமது என்ற பள்ளி வாசலைக் கட்டினார். இவரது ஆட்சிக்காலத்தில்தான் பிரெஞ்சுக்காரர் சென்னையைக் கைப்பற்றினர். சாந்தோம் சண்டை நடைபெற்றது. பாண்டிச்சேரி முற்றுகையிடப்பட்டது. முதலாவது கர்நாடகப்போர் நிகழ்ந்தது. இறுதியில் அன்வருதீன் வடஆர்க்காடு ஆம்பூர்ப்போரில் கொல்லப்பட்டார்.

**முகமது அலி, 1749 – 1795**

ஆமபூர்ப்போரின் போது திருச்சிக்குத் தப்பிச் சென்ற முகமது அலி, அவரது தந்தை அன்வருதீன் இறந்த பின் எட்டாவது நவாபாக ஆட்சிப் பொறுப்பேற்றார். தந்தையைப் போன்றே இவரும் ஆதிக்கப்பிரியர். முகமது அலி வாலாஜா ஐதராபாத் நிஜாமின் கட்டுப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொண்டு சுதந்திர ஆர்க்காட்டு நவாப்

ஆனார். முகமது அலி ஆதிக்க விரிவாக்கத்துக்கும், ஆடம்பரச் செலவுகளுக்கும் ஆங்கிலேயரைப் பயன்படுத்திக் கொள்ளத்தீர்மானித்தார். அதேபோன்று முகமது அலியின் திறமையின்மையையும், பேராசையையும், ஊதாரித்தனத்தையும் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர். ஆங்கிலேயர் இந்த பரஸ்பரப்போட்டியின் இறுதியில் ஆங்கிலேயர் வெற்றி பெற்றனர்.

முகமது அலியின் ஆட்சிக் காலம் இரண்டாவது கர்நாடகப்போருடன் துவங்கியது. தஞ்சை-ஆர்க்காடு-ஐதராபாத் நிஜாம் வாரிசுரிமைப் பிரச்சனைகள், நாசிர் ஜங்கின் நடவடிக்கைகள், திருச்சி முற்றுகை போன்ற முக்கிய நிகழ்வுகள் இவரது ஆட்சிக்காலத்தில் நடைபெற்றன. அத்துமீறிய போர்ச்செலவு மற்றும் அரண்மனை ஆடம்பரச் செலவுகள் இவரது கடன் சுமையை பன்மடங்கு அதிகரித்தது. கடன் பட்டார் நெஞ்சம் போல் கொஞ்சம் கூடக் கலங்காமல் கடனுக்கு மேல் கடன் வாங்கி கர்நாடகத்தை ஆங்கிலேயரிடம் அடகு வைத்தார் முகமது அலி.

முகமது அலியைத் தொடர்ந்து அவரது மகன் உம்தத்-உல்-உமாரா ஆர்க்காட்டு நவாபானார். இவர் முகமது அலியின் இரண்டாவது மகன். கடனிலேயே பிறந்து கடனிலேயே வாழ்ந்த இவரது இயலாமையைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலேயர் ஆர்க்காட்டு நவாபின் வாரிசைத் தீர்மானிக்கும் பொறுப்பை ஏற்று அதன் மூலம் ஆர்க்காட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தையும் பெற்றனர். 19-ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் கவர்னர்-ஜெனரல் டல்ஹௌசியின் வாரிசிலிக் கொள்கையின்படி நவாப் பதவி நீக்கப்பட்டது. உமாரா பெயரளவுக்கு நவாபாக நீடித்தார். நடைமுறையில் ஆர்க்காடு ஆங்கிலேயர் வசம் வந்தது. “பிரிட்டிஷார் கர்நாடகத்தை அபரித்துக் கொண்டது அவர்களுக்கு உதவி செய்து உறவாடி நில அபகரிப்பு செய்யும் கொள்கையின் இயல்பான உச்சகட்டமாகும் என்று குறிப்பிட்டுள்ளார். கே. ராஜய்யன், கர்நாடகத்தைக் கைவசப்படுத்திக் கொண்டதன் மூலம் தமிழ்நாட்டின் பெரும் பகுதியை ஆங்கிலேயர் தங்களது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டுவந்தனர். பின்னர் விக்டோரியா மகாராணியின் அறிவிப்புக்குப் பிறகு ஆர்க்காட்டு நவாபுகள் அரசாங்க ஓய்வூதியச் சலுகைகளுடன் பாரம்பரியப் பெருமையுடன் வாழ்ந்துவந்தனர். இந்நிலை இந்தியா சுதந்திரம் பெற்ற பின்னரும் நீடிக்கிறது.

**நவாபுகளின் நிர்வாகம்**

**நவாபுகள்**

அவுரங்கசீப்பின் மறைவுக்குப்பின் முகலாயப் பேரரசின் தக்காணம் பிரதிநிதியாக இருந்தவர் ஐதராபாத் நிஜாம் ஆவார். அவருடைய மேலாதிக்கத்தின் கீழ் இயங்கியவர்கள் ஆர்க்காட்டு நவாபுகள். இவர்கள் நெவாயத் நவாபுகள், வாலாஜா நவாபுகள் என்ற இரு குலங்களைச் சார்ந்தவர்கள். நெவாயத் நவாபுகள் 1710 இருந்து 1743 வரையிலும், வாலாஜா நவாபுகள் 1743 இருந்து 1801 வரையிலும் தமிழ் நாட்டை ஆட்சி செய்தனர். அதாவது தமிழ்நாடு முகலாய முஸ்லீம்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

**நவாபி**

நவாபுகளின் ஆள்நிலப் பகுதி நெல்லூர், செங்கல்பட்டு, ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களைக் கொண்ட ஆர்க்காடு சுபா என்றும், திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்கள் உள்ளிட்ட திருச்சி சுபா என்று இரு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவை கர்நாடக, தஞ்சை, ராமநாதபுரம், சிவகங்கை சமஸ்தானங்கள் என்றும் அறியப்பட்டன. இவர்களின் கீழ் செயல்பட்ட பாளையக்காரர்கள் தனிக்காட்டு ராஜாக்களாக நடைமுறை சுதந்திரத்தோடு குறுநில மன்னர்களைப் போன்று ஆட்சி செய்து வந்தனர். தமிழ்நாட்டின் மேற்குப்பகுதியான கொங்கு நாடு மைசூர் வசம் இருந்தது. எனவே, நாட்டின் பெரும் பகுதி நவாபுகளின் ஆட்சியின் பிடிக்குள் இருந்தது.

**நவாபி அரசாங்கம்**

**மத்திய அரசாங்கம்**

18-ஆம் நூற்றாண்டு இந்தியாவில் மத்திய அரசாங்கம் என்று எதுவுமில்லை. முகலாயப் பேரரசு வாரிசு நாடுகள் (Successor States-அவத், வங்காளம், ஐதராபாத்), சுதந்திர நாடுகள் (Independent States-மைசூர், ராஜபுட்டானா), புதிய நாடுகள் (New States-மராத்தியர், சீக்கியர், ஜாட்டுகள்) என்று முப்பெறும் பகுதிகளாகப்பிரிந்துவிட்டன. முகலாயப் பேரரசு பெயரளவில் மத்திய அரசாங்கமாக இருந்தது. அது ஒரு நிழல் அரசாங்கம் மட்டுமே ஆகும்.

**மாகாண அரசாங்கம்**

கொள்கை அளவில் தமிழ்நாடு நிஜாமின் மேலாதிக்கத்துக்கு உட்பட்டிருந்தாலும், நடைமுறையில் ஆர்க்காட்டு நவாபின் கீழ் ஒரு மாகாணமாக செயல்பட்டது. மாகாணம் பல சமஸ்தானங்களாகவும், பாளையங்களாகவும், கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பாளையமும் சில கிராமங்களின் தொகுப்பாகும்.

**மாவட்ட நிர்வாகம்**

நவாபுகளின் நிர்வாகத்தின் கீழ் தமிழ்நாடு பல உட்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தன. இவை பல்வேறு பெயர்களில் அறியப்பட்டன. இவை நவாப் மற்றும் மறவர்நிலப் பகுதியில் தாலூக்காக்கள் என்றும், தஞ்சாவூரில் சுபாக்கள் என்றும், புதுக்கோட்டையில் வலநாடுகள் என்றும், கள்ளர் நிலப்பகுதியில் நாடுகள் என்றும் அழைக்கப்பட்டன. இந்த உட்பிரிவுகள் இன்றைய மாவட்டங்களுக்கு இணையானவை. மாவட்டத் தலைமை நிர்வாகி தாலுகாதார், கிலேதார், சுபேதார் போன்ற பெயர்களால் அறியப்பட்டனர். பாளையங்கள் நாட்டார் என்ற முதியோர் குழுவால் நிர்வகிக்கப்பட்டது.

கிராமங்கள் நவாப் நிர்வாகக் கூர்முனைக் கோபுரத்தின் அடித்தளமாக இருந்தன. நிர்வாகத்தின் நாடி நரம்புகள் கிராமங்கள் ஒவ்வொரு கிராமமும் பல

வார்டுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. மூத்தோர் அவையான பஞ்சாயத்து கிராமத்தை நிர்வகித்தது. பஞ்சாயத்துத் தலைவர் மக்காடம் என்று அழைக்கப்பட்டார். வழக்கமாக இவர் கிராமப் பஞ்சாயத்தால் நியமிக்கப்பட்டார். விதிவிலக்காக சில கிராமங்களில் இவர் பாரம்பரிய வாரிசாக இப்பதவியில் இருப்பதுண்டு.

பட்டேல் என்ற அதிகாரி கிராமப் பஞ்சாயத்தை அமைக்கவும், பஞ்சாயத்தைக் கூட்டவும் பொறுப்பாக இருந்தார். இவரே நிலவரி வசூலிப்பாராகவும், தல நீதிபதியாகவும் செயல்பட்டார். இவருக்கு உதவியாக இருந்தவர் கர்ணம் அல்லது பட்வாரி. இவர்தான் கிராமத்துக் கணக்குப் பிள்ளை. இவர் கிராமத்தைப் பற்றிய அனைத்து தகவல்களையும் கொண்ட பதிவேட்டைப் பராமரித்தார். நிலவரி நிர்வாகத்தின் அச்சாணி கர்ணம் தான். இவர் மூலம் தான் கிராமத்தார் அவர்களது நில உரிமைகள் பற்றியும், அரசாங்க உத்தரவுகள் குறித்தும் அறிந்து கொண்டனர்.

கிராமக் காவல்காரர்கள் கிராமப் பாதுகாப்புக்குப் பொறுப்பானவர்கள். சட்டம் ஒழுங்கு இவர்களால் பராமரிக்கப்பட்டது. இவர்கள் இராக்காவல் செய்ததோடு கிராமத்துக்கு அயலார் வந்து செல்வதையும், சந்தேகத்துக்கு உரியவர்களின் நடவடிக்கைகளைக் கவனித்துப் பட்டேலுக்குத் தெரிவித்தனர். திருட்டு விசாரணையின் போது உதவினர். திருட்டுப்போன பொருட்கள் மீட்கப்பட்டு உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

கிராமத்துப் பெரியவர்கள் முறை மன்றக் காவலர்களாக, அறங்கூறத்து அவையோராகச் செயல்பட்டனர். இவர்கள் கிராம சம்மந்தமான அனைத்து வழக்குகளையும், குறிப்பாக நில உரிமைகள் பற்றிய வழக்குகளை, மரத்தடியில் அமர்ந்து கேட்டு நன்கு விசாரித்து, விவாதித்துத் தீர்ப்பு வழங்கினர். “இங்கிலாந்தில் இருந்ததைப் போன்றே தமிழ்நாட்டிலும் அறங்கூறத்தார் முறை பரவலாக நடைமுறையில் இருந்தது எனக் குறிப்பிட்டுள்ளார் பேராசிரியர் கே. ராஜய்யன்.

18-ஆம் நூற்றாண்டுத் தமிழகத்தில் நிலவிய நிலையற்ற அரசியல் குழப்பத்திலிருந்து விடுபட்டு நிலையாக செயல்பட்ட அமைப்புகள் உள்ளாட்சி நிறுவனங்களே ஆகும். இந்தப் பாரம்பரிய புல்லிதழ் மக்களாட்சி அமைப்புகள் நவாபுகளின் நிர்வாகத்தின் முதுகெலும்பாகத் திகழ்ந்தன. இவை தமிழர்களின் பரம்பரைச் சொத்து கிராமத் தன்னாட்சி தமிழ்நாட்டின் மரபுரிமைச் செல்வமாகும். 19-ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் தமிழ் நாட்டுக் கிராமப் பஞ்சாயத்து முறையைப் போற்றிப் பாதுகாத்தனர்.

**நிதி நிர்வாகம்**

**பொது வருவாய்**

ஒரு ஆட்சியின் பெருமையும், சிறுமையும் நிதி நிர்வாகத்தைப் பொறுத்தே உள்ளது. ஆட்சியின் நிலைத்தன்மை பொது வருவாயைச் சார்ந்துள்ளது. ஆர்க்காட்டு நவாபுகளின் பொது வருவாய் பெரிதும் நில வருவாயை நம்பியே இருந்தது. நில வருவாய் விவசாய மகசூல் வரி, தரிசு நிலப் பயன்பாட்டு வரி,

கிராம வரி, கரும்பு, வாழை, வெற்றிலைப் பயிர்களுக்கான சிறப்பு வரி, மேய்ச்சல் வரி, வீட்டு வரி போன்றவற்றை உள்ளடக்கியது. இவையன்றி உப்பு, மீன் போன்ற பொருட்களின் பரிமாற்றத்தின் போது விதிக்கப்பட்ட தீர்வை வரி, மதுபான வரி, லேவா தேவிக்காரர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட கட்டணம், கட்டாய நன்கொடைகள், அன்பளிப்புகள், இதர சில்லரை வசூல்கள் ஆகியவை பிற பொது வருவாய்க் கூறுகளாகும்.

**வரி வசூல்**

நில வரி உடைமை உரிமையைப் பொறுத்துத் தீர்மானிக்கப்பட்டது. நில வரி மதிப்பீடு இடத்துக்கு இடம், காலத்துக்குக் காலம் மாறுபட்டது. பொருளாதார, அரசியல் காரணங்களை மனதில் கொண்டு இவ்வரியும் இவ்வரிக்கான சலுகைகளும் முடிவு செய்யப்பட்டன. பொதுவாக வரிகள் நேரடியாகவோ அல்லது குத்தகைதாரர் மூலமாகவோ வசூலிக்கப்பட்டன. அமல்தார் வசூலித்த வரிப் பணத்தை நேரடியாகக் கருவூலத்தில் கட்டிவிடுவார். மாறாக, குத்தகைதாரர் வசூலித்த வரிப் பணத்தில் குறிப்பிட்ட தொகையைக் கருவூலத்தில் செலுத்திவிட்டு எஞ்சிய தொகையைத் தன் செலவுக்கு வைத்துக்கொண்டார். வரி செலுத்தியது போக விவசாயிகளுக்கு மீதமிருந்தது மிகக் குறைவாகவே இருந்தது.

நவாபுகளின் கடன் சுமைகளுக்கேற்ப வரிகளும் கட்டுப்பாடின்றி வசூலிக்கப்பட்டன. ஊழல் மலிந்திருந்ததால் அமுல்தாரர்களும், குத்தகைதாரர்களும் நவாபுகளின் பலவீனத்தைப் புரிந்து கொண்டு அவரவர் பேராசைக்கேற்ப வரிகளை முறையோ, கட்டுப்பாடேயின்றி வசூலித்தனர். இவர்கள் நவாபின் பெயரால் ஏழை விவசாயிகளை ஏமாற்றி, வஞ்சித்து, மோசம் செய்தனர். வரி வசூல் ஊழலின் ஊற்றாயிற்று.

வரிகள் நியாயமாக இருந்தால் மக்கள் மனக்கசப்பின்றிக் கொடுத்தனர். இவை கட்டுப்பாட்டின்றி, மனம் போன போக்கில், யதேச்சாதிகாரமாக வசூலிக்கப்பட்ட போது பொது மக்களும் விவசாயிகளும் எதிர்த்தனர். இந்த எதிர்ப்பு கள்ளக் கணக்கு, வரி ஏய்ப்பு, வரி கொடாமை மூலம் வெளிப்பட்டது. இதை அநியாயமாக வரி வசூலிப்போருக்கும், வரி ஏய்ப்போர்களுக்கும் இடையேயான போராட்டம் எனக் கூறியுள்ளார். பேராசிரியர் கே. ராஜய்யன், நவாபுகள் ஆங்கிலேயரின் துணையுடன் அதீத நிலத் தீர்வை வசூலிக்க முற்பட்ட போது பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர். அதாவது, கட்டாய வரி வசூல் கிளர்ச்சிக்கு வழி வகுத்தது.

**பொதுச் செலவு**

சிறு சிறு துளிகளாக மக்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட வரிகள் பெருவெள்ளப் பொதுச் செலவாகக் கணக்கிடப்பட்டது. ஆட்சியாளர்கள் கோட்டை கொத்தளங்கள் கட்டுவதிலும், ராணுவத்தைப் பெருக்கிப் பலப்படுத்துவதிலும், ஆடம்பரச் செலவுகள் செய்வதிலும் செலவிட்டனர். கோயில்களையும், பிராமணர் குடியிருப்புகளையும், சத்திரங்களையும் பராமரிப்பதற்காகப் பெரும் பொருள் செலவிடப்பட்டது. பல்வேறு

வகையிலும் மக்களைக் கசக்கிப் பிழிந்து வசூலிக்கப்பட்ட வரிகள் மக்களின் கல்வி வளர்ச்சிக்கோ, பொது சுகாதாரத்துக்கோ அல்லது நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கவோ முன்னுரிமை கொடுத்து செலவிடப்படவில்லை. ஆர்க்காட்டு நவாபுகளுக்கும், தஞ்சை மன்னர்களுக்கும், பளையக்காரர்களுக்கும் பொதுப் பணத்தைச் செலவு செய்யத் தெரிந்த அளவுக்கு ஆக்கப்பூர்வமான புதிய வழிகள் மூலம் பொது வருவாயைப் பெருக்கத் தெரியவில்லை. எனவே, நவாபுகள் கட்டாய வரி வசூலோடு கட்டுக்கடங்கா கடன்களை வாங்கி மக்களையும் கொடுமைப்படுத்தித் தாங்களும் கெட்டனர். குழம்பிய குட்டையில் மீன் பிடித்த ஆங்கிலேயர் படிப்படியாக அதிகாரத்தை நவாபுகளிடமிருந்தும், அரசர்களிடமிருந்தும், பாளையக்காரர்களிடமிருந்தும் பற்றிக் கொண்டனர்.

**நீதி நிர்வாகம்**

நவாபுகளின் ஆட்சிக்காலத்தில் ஆட்சியாளர்களும், நீதிபதிகளும் கூறுவதே நீதியாக இருந்தது. சட்டவியல் வளர்ச்சி அடையாத நிலையில் சட்டத்துக்குட்பட்ட ஆட்சியோ, சட்டத்தின் ஆட்சியோ அல்லது சட்டத்துக்கு முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடோ சட்டக் காவலர்கள் அறியாதவை. எனவே, நீதி நிர்வாகம் சமுதாய அமைப்புக்கேற்ப நடைபெற்றது.

குவாசிகள் முஸ்லீம்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளை விசாரித்து அவர்கள் வழக்கப்படித் தீர்ப்புக் கூறினார். அமுல்தாரர்கள் இந்துக்கள் சம்மந்தப்பட்ட வழக்குகளை சாஸ்திர சம்பிரதாயப்படி விசாரணை செய்து தீர்ப்பு கூறினார். சில சமயங்களில் பண்டிதர்களின் உதவியோடு வழக்குகள் விசாரிக்கப்பட்டன. அவசியமாயின் மொழி பெயர்ப்பாளர்கள் அனுமதிக்கப்பட்டனர். நவாபுகளின் ஆட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளில் பௌஜ்தார்கள் நீதி வழங்கினர். நவாபுகள் மேல் முறையீடுகளை விசாரித்து இறுதித் தீர்ப்பளித்தனர்.

நீதி நிர்வாகம் செல்வமும், செல்வாக்கும், சாதிச் சலுகைகளைப் பெற்றோருக்கும் சாதகமாக இருந்தது. உயர்குடி மக்களும், அமுல்தாரர்களின் உறவினர்களும், அதிகாரிகளும், ஜாகிர்தாரர்களும், குத்தகைத்தாரர்களும், கடன் கொடுத்தோரும், நீதி நிர்வாகத்தின் பலன்களைப் பெற்றனர். பெரும்பான்மையான வழக்குகள் 'பழிவாங்கும்' வழக்குகளாகவே இருந்தன. சட்டப்பயிற்சி பெறாத நீதிபதிகளின் கையில் சமூக நீதி சிக்கித் தவித்தது. வழக்கத்துக்கு மாறாக, நடுநிலையோடு தீர்ப்பு வழங்கப்பட்டால் நீதிபதிகள் பாதிக்கப்பட்டோரின் சீற்றத்துக்கு உள்ளாயினர். சாதிவாரி சமுதாயத்தில் சமனற்ற நீதியே நடைமுறையில் இருந்தது. சுருங்கக்கூறின், நீதி நிர்வாகம் ஆட்சியாளர்களுக்கும், அதிகாரிகளுக்கும், சலுகை வகுப்பாருக்கும் சாதகமாக இருந்தது எனலாம்.

**சமுதாயத் தாக்கம்**

நவாபுகளின் ஆட்சிக் காலத்தில் பாரம்பரிய சமனற்ற படிமுறை சாதி அமைப்புமுறை நீடித்தது. முஸ்லீம்களின் பழக்கவழக்கங்கள் தனித்தமையுடன்

பின்பற்றப்பட்டன. அனைத்துத் துறைகளிலும் குறிப்பாக அரசாங்கத் துறைகளில், உருதுச் சொற்கள் செல்வாக்கு பெற்றன. உருது மொழியால் தமிழின் தொன்மையோ அல்லது தன்மையோ பாதிக்கப்படவில்லை. தமிழ்நாடு பல மொழிகள் பேசுவோரின் பாண்டகசாலை போன்று இருந்தது.

ஆர்க்காட்டு நவாபுகளில் முகமது அலிக்கு சிறப்பிடம் உண்டு. அவர் கழுத்தளவுக்குக் கடன் கடலில் மூழ்கியிருந்த போதும் கலைக்காகவும், கலாச்சாரத்துக்காகவும் செய்த பணிகள் பல. அவர் ஒரு சர்வ சமயச் சார்பாளர். அவரது நீண்ட ஆட்சியின் போது மதவேறுபாடின்றி அனைத்து சமயங்களையும் ஆதரித்தார். திருவல்லிக்கேணியில் பெரிய மசூதியைக் கட்டிய முகமது அலி, திருச்சி ஸ்ரீரங்கம் கோயிலுக்குத் தாராளமாக நன்கொடைகள் அளித்தார். தாமஸ் வில்லிங்கின் புகழ்பெற்ற ஏசுவின் இறுதி இரவு உணவு பற்றி ஓவியத்தை புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள புனித மேரி தேவாலயத்துக்கு அன்பளிப்பாக அளித்தவர் முகமது அலி. மைலாப்பூர் கபாலீஸ்வரர் கோயில், காஞ்சி வரதராஜபெருமாள் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில் போன்ற தமிழ்நாட்டு இந்து ஆலயங்கள் முகமது அலியின் ஆதரவைப் பெற்றிருந்தன. இவர் பல கோயில்களுக்கு யானைகளைப் பாகர்களுடன் நன்கொடையாக வழங்கியது குறிப்பிடத்தக்கது.

## பாளையக்காரர் கிளர்ச்சி

### பாளையப்பட்டு முறை

தமிழ்நாடு விஜய நகரப் பேரரசின் பகுதியா இருந்த போது இராணுவ ஆளுநர்களின் கீழ் பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஆளுநர்கள் அமரநாயக்கர்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்கள் ஆட்சி செய்த பகுதிகள் அமரநாயக்கததானங்கள் என்று பெயர் பெற்றனர். விசுவநாத நாயக்கர் ஆட்சிக்காலத்தில் அவரது தளவாய் அரியநாத முதலியாரால் உருவாக்கப்பட்ட 72 பாளையங்கள் மதுரை நாயக்கர்கள் காலத்துக்குப் பின்னரும் நீடித்தன. செஞ்சி நாயக்கர்களும் இந்த பாளையப்பட்டு முறையையே பின்பற்றினர். இத்தகைய நிலப்பாகுபாட்டு முறை தமிழ் நாட்டுக்குப் புதிது, பாளையக்காரர்களும் புதியவர். துவக்கத்தில் பெரும்பான்மையான பாளையக்காரர்கள் ஆந்திராவிலிருந்து வந்த இராணுவத் தலைவர்களாக இருந்தனர். 16-ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் விஜயநகரப் பேரரசு பலவீனப்பட்ட போது இப்பாளையக்காரர்கள் சுதந்திரமாகச் செயல்படலாயினர். இவர்கள் தங்களது சுதந்திரத்தில் ஆர்க்காட்டு நவாபுகளும் ஆங்கிலேயரும் தலையிட்டதை விரும்பவில்லை. எதிர்த்தனர். அதன் விளைவே பாளையக்காரர் கிளர்ச்சி.

### பாளையம்

ஆந்திர நாயக்கர்கள் ஆட்சி செய்வதற்கு வசதியாகத் தமிழ் நாடு பல பாளையங்களாகப் பிரிக்கப்பட்டது. பாலமு என்று தெலுங்கிலும், பாளையம் என்று

தமிழிலும் கையாளப்படும் இச்சொல் துவக்கத்தில் இராணுவ முகாமைக் குறித்தது. பின்னர் மாவட்டத்துக்கு இணையான இப்பாளையங்கள் ஆள்நிலப் பகுதியைக் குறிப்பதாயிற்று. பாளையங்கள் நன்கு பாதுகாக்கப்பட்ட நிர்வாக மையங்களாகத் திகழ்ந்தன. இவை புதிய அரசியல் அமைப்புகளாக உருப்பெற்றன. ராமநாதபுரம், சிவகங்கை, உடையார்பளையம், அரியலூர், பாஞ்சாலம்குறிச்சி ஆகியவை வலிமைமிக்க முக்கிய பாளையங்களாகும். பொதுவாக இவற்றைத் தெலுங்கு பாளையங்கள், தமிழ் பாளையங்கள் என்று பிரிப்பதுண்டு. நெல்கட்டும்செவல், சிவகிரி, சாத்தூர், அழகாபுரி போன்ற மேற்குப் பாளையங்களை தமிழ் பேசும் பாளையக்காரர்கள் ஆட்சி செய்தனர். மாறாக, எட்டயபுரம், பாஞ்சாலங்குறிச்சி, கடல்குடி போன்ற கிழக்குப்பாளையங்கள் தெலுங்கு பேசும் பாளையக்காரர்களின் ஆட்சியின் கீழ் இருந்தன.

**பாளையக்காரர்**

பாளையத்தின் சொந்தக்காரத் தலைவர் பாளையக்காரர் என்று அழைக்கப்பட்டார். இவர்கள் பாளையங்கள்மீது பரம்பரை உரிமை பெற்றிருந்தனர். கோட்டைகளைக் கட்டிக் கொண்டு பாதுகாப்புடன் இருந்தனர். எடுத்துக்காட்டாக மதுரையை ஆட்சி செய்த விசுவநாத நாயக்கர் மதுரையை மறுசீரமைத்த போது மீனாட்சி அம்மன் கோயில் உள்ளிட்ட நகரைச் சுற்றி அகழிகளுடன் கூடிய இரட்டைச் சுவர்களுடன் கோட்டையைக் கட்டினர். கோட்டையைச் சுற்றி பாளையக்காரர்களின் அலுவலகங்களுக்காக 72 இரட்டை அடுக்குக் கட்டடங்களையும் கட்டினார். 1841இல் பிரிட்டிஷ் கலெக்டர் பிளாக் பெர்ன் மதுரை நகரை விரிவுபடுத்துவதற்காக இக்கோட்டை அரண்களை அகற்றிவிட்டார்.

பாளையக்காரர்கள் நாயக்கரின் பிரதிநிதிகளாக செயல்பட்டனர். அவர்கள் தங்களது நடவடிக்கைகளுக்கு நாயக்களுக்குப் பொறுப்பானவர்கள். பாளையக்காரர்களின் பிரதான பணி வரி வசூலித்தல் ஆகும். வசூலித்த வரித்தொகையில் மூன்றில் ஒரு பங்கை நாயக்கருக்கு திறையாகச் செலுத்திவிட்டு எஞ்சிய பங்கைக் கொண்டு பாதுகாவல் படையைப் பராமரித்து சொந்த செலவுக்கும் வைத்துக்கொள்ள வேண்டும். பாளையத்தை நிர்வகித்தல், மக்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், சட்டம் ஒழுங்கை நிலைநாட்டல், நீதி வழங்கல், நாயக்கருக்குத் தேவைப்படும்போது படை வீரர்களை அனுப்புதல் போன்றவை பாளையக்காரர்களின் பிற பொறுப்புகளாகும்.

**பாளையக்காரர் ஆட்சி முறை**

ஒவ்வொரு பாளையமும் கிராமங்களின் தொகுப்பாகும். பாளையத்தின் அதிபரான பாளையக்காரர் தனக்கு உதவி செய்ய அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நியமித்துக் கொண்டார். அமைச்சர்கள் சேனாதிபதிகளாகவும் இருந்தனர். தளவாய் சேனாதிபதிகளுக்குத் தலைவர். பாளையக்காரர் தளவாய் மூலமாக நாயக்கருடன் தொடர்பு கொண்டார். நடைமுறையில் ஒவ்வொரு பாளையக்காரரும் தர்பாரில் அமர்ந்து காட்சியளித்து ஒரு மன்னரைப் போன்று

தன்னிச்சையாக படாடோபமாக நடந்து கொண்டார். பாளையக்காரர் ஆட்சி முறை ஒரு வகையான இராணுவ முடியாட்சி என்று கூறலாம்.

**நிலமானிய முறை**

பாளையக்காரர் ஆட்சி நிலமானிய முறையை மையமாகக் கொண்டு சுழன்றது. விளை நிலம் தான் வருவாயின் ஊற்று. வாழ்க்கையின் ஆதாரம். அரசாங்கத்தின் உயிர் மூச்சு. எனவே, பாளையக்காரர் வளமிக்க நிலத்தைத் தன் சொந்த உபயோகத்துக்கு வைத்துக் கொண்டு எஞ்சியவற்றைப் பிற பிரமுகர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். பிரமுகர் குத்தகைதாரர்கள் இருவேறு கடமைகளைச் செய்ய வேண்டும். 1) அரசாங்கத்துக்கு நிலவரி செலுத்த வேண்டும். 2) நெருக்கடி நேரத்தில் நாயக்கருக்கு இராணுவ உதவி செய்ய வேண்டும். எனவே, ஒவ்வொரு விவசாயியும் ஒரு போர் வீரராகவும் இருக்க வேண்டும்.

பாளையக்காரர் நிலத்துக்குச் சொந்தக்காரர் ஆயினும் உழவர்களே விளைச்சலுக்குக் காரணமாக இருந்தனர். பயிர் சாகுபடி இவர்களின் உழைப்பைப் பொறுத்தே இருந்தது. உழவர்கள்தான் நிலத்தை உழுது, விதைத்து, பயிரை வளர்த்துப்பாதுகாத்து, சாகுபடி செய்து விளைச்சாலை ஒப்படைப்பவர்கள். எனினும் இவர்கள் வசிப்பதற்குத் தேவையான குறைந்தபட்ச விளைபொருளை ஊதியமாகக் கொடுத்து விட்டு மீதியைப் பாளையக்காரர் பெற்றுக் கொள்வார். குடும்பத் தேவைகளுக்கு உழவர்கள் பாளையக்காரரிடமிருந்து பணமாகவோ அல்லது பொருளாகவோ கடன் பெற்று, வாங்கிய கடனைக் கொடுக்க முடியாமல் கொத்தடிமைகளாக வாழ்க்கையின் விளிம்பிலேயே இருந்தனர். சுருங்கக்கூறின், உழவர்கள் கடனில் பிறந்து, கடனில் வசித்து, கடனைத் தன் வாரிசுகளுக்கு விட்டுச்சென்றனர்.

**நிறை குறை**

விளைநிலம் விளைச்சலைப் பொறுத்து கரிசல், செம்மண், பொட்டல் களிமண் பூமி என்று வகைப்படுத்தப்பட்டது. பொதுவாக விளைச்சலில் பாதிபாளையக்காரரின் பங்காக இருந்தது. இப்பங்கு பொதுச் செலவு என்ற அழைக்கப்பட்டது. அதாவது பொதுக் காரியங்களுக்காகப் பெறப்பட்ட பங்காகக் கருதப்பட்டது. சரியான விளைச்சல் மதிப்பீட்டு முறையும், முறையான ‘மாமூல்’ அளவும் இல்லாமையால் பாளையக்காரர் தன் தேவைக்கேற்ப தன் பங்கை யதேச்சையாகத் தீர்மானித்துக் கொண்டார். இதனால் விவசாயிகளும், உழவர்களும் பல்வேறு முறைகேடுகளுக்குப் பலியாயினர். இச்சுரண்டலிலிருந்து தப்பிக்க அவர்கள் விளைச்சலைப் பற்றிய தவறான தகவல்களைத் தந்தனர். பொய்க் கணக்கைக் கொடுத்தனர். இதனால் வரி ஏய்ப்பு வழக்கமாகிவிட்டது. இது ஏமாற்றுவோருக்கும் ஏமாற்றப்படுவோருக்குமான போட்டியாக இருந்தது. இதைக் கொடுமையாக வரி வசூலிப்போருக்கும் வரி ஏய்ப்போருக்குமிடையேயான போராட்டம் என்று வர்ணிக்கிறார் பேராசிரியர் கே. ராஜய்யன்.

**ஊர்க்காவல் முறை**

ஊர்க்காவல் முறை தமிழ் நாட்டின் பாரம்பரிய உள்ளூர் பாதுகாப்பு முறையாகும். காவல்காரர்கள் ஊர்ப் பாதுகாப்புக்குப் பொறுப்பாக இரந்தனர். எனினும், தமிழ்நாடு விஜய நகரப் பேரரசின் நேரடி ஆட்சியின் கீழ் இருந்தவரை ஊர்க்காவல் முறை பின்பற்றப்படவில்லை. பினர் நாயக்கர்கள் சுதந்திரமாகச் செயல்படத் துவங்கிய போது இப்பாரம்பரியப் பாதுகாவல் முறை புதுப்பிக்கப்பட்டு பின்பற்றப்பட்டது. காவல்களுக்கான ஊதியம் பணமாகவோ பொருளாகவோ கொடுக்கப்பட்டது. ஊர்க்காவல் முறை தலக்காவல் என்ற பெயரில் செயல்பட்டது. இக்காவல் முறையின் காரணமாக கிராம மக்கள் அச்சமின்றி இருந்தனர். பயிர்கள் பாதுகாக்கப்பட்டன. கிராமங்கள் திருடர்களின் தாக்குதலினின்றும் விடுவிக்கப்பட்டன.

**தற்காப்புப் படை**

பாளையக்காரர்கள் தங்களது பாதுகாப்புக்காகவும், பகட்டு வாழ்க்கைக்கும், சமூக அந்தஸ்துக்காகவும் சொந்த தற்காப்புப் படையை வைத்திருந்தனர். பாளையக்காரர் எங்கு சென்றாலும் இப்படையின் ஒரு பிரிவினர் அவருடன் செல்வர், தற்காப்புப்படையில் மூன்று பிரிவினர் இருந்தனர். 1) **அமரும் பணியாளர்கள்.** இவர்கள் பாளையக்காரர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்கள். கூப்பிட்ட குரலுக்கு ஓடி வருபவர்கள். இவர்களுக்கு நிலம் மானியமாக வழங்கப்பட்டது.

2) **கட்டுப்படி பணியாளர்கள்.** இவர்கள் பாளையக்காரர்களுக்குப் போர்த் தளவாடங்களைத் தயாரித்துக்கொடுப்பவர்கள். இவர்களுக்கும் நிலம் மானியமாகக் கொடுக்கப்பட்டது.

3) **கைக்கூலிகள்.** இவர்கள் அவசரத்துக்குப் பயன்படக்கூடியவர்கள். ஆயுதம் ஏந்தி போரிடக் கூடியவர்கள். இவர்கள் கூலிக்கு மாரடிப்பவர்கள். இவர்களுக்கு வேலை பாதுகாப்பு இன்மையால், வேலையின்றி இருக்கும்போது கொலை, கொள்ளை, திருட்டு போன்ற நடடிவக்கைகளில் ஈடுபட்டனர்.

**போர்முறை**

பாளையக்காரர்கள் பெயரளவுக்கு நாயக்கருக்குக் கட்டுப்பட்டவர்களேயன்றி நடைமுறையில் இவர்கள் சுதந்திரமாகச் செயல்பட்டனர். இவர்களது சொல்லே சட்டமாக இருந்தது. பரளைந்ககாரர்கள் அரண்களோடு கூடிய கோட்டைகளைக் கட்டிக் கொண்டு எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொண்டனர். பெரும் தாக்குதல்களையும் கோட்டைக்குள் இருந்து கொண்டே எதிர்கொண்டனர். கோட்டைகளைத் தாண்டிச் சென்று இவர்களை வெல்வது கடினம்.

பாளையக்காரர்கள் பல்வேறு போர்க் கருவிகளைப் பயன்படுத்தினர். நாட்டுத் துப்பாக்கிகளும், வேல் கம்பு. ஈட்டிகளும் இவர்களது பிரதான ஆயுதங்கள். இவற்றோடு பீரங்கி, கைத்துப்பாக்கி, பொர் வாள், குத்து வாள், கேடயம், கூர்ங்கோல், வில்-அம்பு, கவண், ஈட்டி, உந்துவாணம், தாக்கித் திரும்பும் வாள்தடி போன்ற ஆயுதங்களையும் கையாண்டனர்.

பாளையக்காரர்கள் பொதுவாக எதிரிகளை நேரடியாகவோ அல்லது மறைந்திருந்து தாக்கும் போர் உத்திகளைப் பின்பற்றினர். அடர்ந்த காடுகளைப் பதுங்கிடங்களாகக் கொண்டு எதிரிகள் மீது எதிர்பாரா நேரத்தில் பாய்ந்து தாக்கிப் பேரழிவை ஏற்படுத்துவர். எதிரியின் குதிரைப் படையை இவர்களது கூர்ங்கோல் வீரர்கள் சுற்றி வளைத்துத் திழுர்த் தாக்குதல் நடத்திச் செயலிழக்கச் செய்வர். இவர்களுக்குத் துணையாகப் பீரங்கிப் படையினரும், துப்பாக்கி ஏந்திகளும் போரில் கலந்து கொள்வர். படைப் பிரிவினர் அனைவரும் கூட்டுத் தாக்குதல் நடத்தி எதிரிகளின் படைகளைத் திக்குமுக்காடச் செய்வர்.

**தனிக்காட்டு ராஜாக்கள்**

கிட்டதட்ட ஒரு நூற்றாண்டு காலத்துக்கு மேல் (1650 – 1760) பாளையக்காரர்கள் தமிழ் நாட்டில் தனிக்காட்டு ராஜாக்களாகச் செயல்பட்டு வந்தனர். பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றி இவர்களது தனித்தன்மையும், சுதந்திரத்தையும், செல்வத்தையும், செல்வாக்கையும் பெருக்கிக் கொண்டனர். இவர்கள் பயத்தாலும், நயத்தாலும், வீரதீர பராக்கிரமச் செயல்களாலும் பாளைய மக்களின் ஆதரவைப்பெற்றிருந்தனர். நாயக்கர் ஆட்சி பலவீனமாக இருக்கும் போது பாளையக்காரர்கள் அரசாங்க கிராமங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். உள்ளாட்சி நிர்வாகிகளைப் பயமுறுத்திப் பணியவைத்து அவர்களிடமிருந்து மாமூல்களைப் பெற்றுக்கொண்டனர். அரசாங்கத்துக்கு இராணுவ உதவி செய்து அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றனர். அரசாங்க ஆதரவுடன் பாளையங்களை விரிவுபடுத்தினர். படையைப் பெருக்கிக் கொண்டனர். கிராமங்களை இராணுவ முகாம்களாக உருமாற்றம் செய்தனர். அரசாங்கம் நெருக்கடியில் இருக்கும்போது எதிர்க்கவும் செய்தனர்.

**குறிப்பிடத்தக்க பாளையக்காரர்கள்**

தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான பாளையக்காரர்கள் இருந்தனர். மதுரை நாட்டில் மட்டும் 72 பாளையங்கள் இருந்தன. விஜய நகர ஆட்சியின் போது மட்டும் 200க்கும் மேற்பட்ட பாளையக்காரர்கள் இருந்தனர். மதுரை நாயக்கர்கள் காலத்தில் மதுரை, திருச்சி, தஞ்சை, செஞ்சி ஆகிய பகுதிகளில் பாளையக்காரர்கள் இருந்தனர். பின்னர் இவர்கள் தமிழ் நாட்டின் நான்கு திக்குகளிலும் தங்களது ஆட்சியை அமைத்துக் கொண்டனர். கொங்கு நாட்டில் மட்டும் 10 பலமிக்க கவுண்டர் பாளையக்காரர்கள் இருந்தனர். தென்னிந்தியாவிலேயே கொங்கு நாட்டில் தான் அதிக எண்ணிக்கையில் பாளையங்கள் இருந்தன. நெல்கட்டும்செவல் (மதுரை), பாஞ்சாலங்குறிச்சி, எட்டயபுரம் (மதுரை – திருநெல்வேலி) சிங்கம்பட்டி (திருநெல்வேலி) கன்னிவாடி, விருப்பாடி (மதுரை – திண்டுக்கல்), காளகஸ்தி (சந்திரகிரி), மதுராந்தகம் (சந்திரகிரி – வேலூர்) பாளையக்காரர்கள் குறிப்பிடத்தக்கவர்கள்.

**ஆர்க்காட்டு நவாபுகளின் கீழ் பாளையக்காரர்கள்**

1736-ஆம் ஆண்டு மதுரை நாயக்கர் ஆட்சி வீழ்ச்சி அடைந்த பின்னர் பாளையங்கள் குழப்பக் காடுகளாயின. 1690களில் மதுரை நாயக்கர் நாடு ஆர்க்காடு நவாபுகளின் ஆட்சியின் கீழ்க் கொண்டுவரப்பட்டது. நாயக்கர்களுக்குப் பதில் நவாபுகள் பாளையக்காரர்களின் மேலதிகாரிகளாயினர். பாளையக்காரர்கள் நவாபுகளுக்குக் கப்பம் கட்டும் கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டனர். இந்த ஆட்சி மாற்றத்தைப் பாளையக்காரர்கள் விரும்பவில்லை. வேறு வழியின்றி ஏற்றுக் கொண்டனர். 1750களில் ஆர்க்காட்டு நவாபுகள் ஆங்கிலேயரின் ஆதிக்கக் கட்டுப்பாட்டின்கீழ் வந்தபோது அவர்கள் பாளையக்காரர்களின் புது மேலாண்மைக்கு ஒரு மேல்நிலக்கழாராயினர். ஆங்கிலேயர் வரி வசூலைத் தீவிரப்படுத்திய போது அவர்களுக்கும் பாளையக்காரர்களுக்குமிடையே மோதல்கள் ஏற்பட்டன. இந்த மோதல்கள் கிளர்ச்சிகளாக மாறின.

**போராளி பூலித்தேவன், 1715-1767**

**புலித்தேவன் என்ற பூலித்தேவன்**

1715 செப்டம்பர் முதல் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் சங்கரன் கோயிலுக்கு அருகாமையில் உள்ள ஆவுடையார்புரம் என்ற கிராமத்தில் சித்திரபுத்திர தேவருக்கும், சிவஞான ாநச்சியாருக்கும் மகனாகப் திறனும், சுயமரியாதையும், சுதந்திர உயர்வம் இயல்பாகவே அமைந்திருந்தன. வீரமிக்க பூலித்தேவன் புலியைக் கொன்றதால் இவருக்குப் புலித்தேவன் என்ற பெயர் வந்ததாகக் கூறுவர். இவருக்கு இயற்பெயரைவிட காரணப் பெயரான புலித்தேவன் என்ற பெயரே மக்கள் மனதில் நிலைத்துவிட்டது. அதுவே மரபுவழிப்பட்டப்பெயராகவும் பயன்படுத்தப்பட்டது.

**நெல்கட்டான் செவல்**

பூலித்தேவன் பிறந்த ஆவுடையார்புரத்து மக்கள் மதுரை நாயக்க மன்னர்களுக்கு நெல்லைக் கப்பமாகக் கட்டி வந்தமையால் அந்த ஊர் நெல்கட்டும் செவல் என்று அழைக்கப்பட்டது. பூலித்தேவன் நெல்கட்டும் செவல் பாளையக்காரர் பொறுப்பேற்ற பிறகும் தம் மக்கள் கப்பக்காணிக்கை செலுத்துவதை விரும்பவில்லை. எனவே, ஆர்க்காட்டு நவாபு முகமது அலி ஆங்கிலேயரின் துணை கொண்டு நிலவரி வசூலைத் தீவிரப்படுத்திய போது பூலித்தேவன் வரி செலுத்த மறுத்தார். இவர் நெல்லைக் கப்பமாகக் கட்ட மறுத்தமையால் நெல்கட்டும் செவல் நெல்கட்டான் செவல் ஆயிற்று. இப்பெயர் மாற்றம் பூலித்தேவனின் போராட்ட உணர்வின் சின்னமாகத் திகழ்ந்தது.

**முதல் மோதல், 1755**

ஆற்காட்டு நவாபு முகமது அலி மதுரையை கர்நாடகத்துடன் இணைத்துக் கொண்ட பிறகு ஆங்கிலக் கம்பெனியின் ஆதரவொடு ஆதிக்கம் செலுத்த முற்பட்டபோது தென்கோடி தமிழ்நாட்டுப் பாளையக்காரர்கள் அம்முயற்சியை

எதிர்த்தனர். அந்த எதிர்ப்பை ஒருமுகப்படுத்தி வடிவம் கொடுத்தார் பூலித்தேவன். வினை வலியும் தன் வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கிச் செயல் (குறள் 471) என்ற குறள் நெறியை நன்கறிந்த பூலித்தேவன் எண்ணித் துணிந்து நவாப்-ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்தார். அவர் ஒத்த மனப்பான்மையுடைய பிற பாளையக்காரர்களின் துணை கொண்டு சவாலை எதிர்க்கொள்ளத் தீர்மானித்தார். மேற்குப்புறப் பாளையக்காரர்களைக் கொண்ட ‘மேற்குக் கூட்டமைப்பை உருவாக்கினார். ஆர்க்காட்டு நவாபின் மகன் மாபஸ்கான் தலைமையிலான படையை பூலித்தேவனின் கூட்டணி தோற்கடித்தது. பூலித்தேவனின் முதல் மோதல் வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆங்கிலேயரின் ஆதரவோடு தோற்றுவிக்கப்பட்ட நவாபின் ஆதிக்க முயற்சியை முறியடிக்க முடியும் என்பதை நிரூபித்தார் பூலித்தேவன்.

**முற்றுகை முறியடிப்பு, 1755**

மாபஸ்கான் பூலித்தேவனின் கூட்டணிப் படையிடம் தோல்வியடைந்த பின் ஆர்க்காடு நவாபு ஆங்கிலேயரின் உதவியை நாடினார். நவாபின் பலவீனத்தைப் பயன்படுத்திக் கொண்ட ஆங்கிலக் கம்பெனி திருச்சிக்கும் கன்னியாகுமரிக்கும் இடைப்பட்ட பாளையங்களைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் நோக்குடன் ஹெரான் தலைமையில் ஒரு படையை அனுப்பியது. அப்படை பல பாளையங்களைப் பணிய வைத்துவிட்டுத் திரும்பும் வழியில் ஹெரான் நவாபின் மேலாதிக்கத்துக்குப் பணிய மறுத்த பூலித்தேவனுக்குப் பாடம் கற்பிக்க முடிவு செய்தார். நெல்கட்டான் செவல் முற்றுகையிடப்பட்டது. இந்த முற்றுகையைப் பற்றி முன்கூட்டியே ஒற்றர் மூலம் அறிந்திருந்த பூலித்தேவன் தக்க முன்னேற்பாட்டுடன் ஹெரானின் தாக்குதலை எதிர்க்கொண்டார். ஆங்கிலப் படைக்குத் தேவையான பொருட்கள் கிடைக்காமல் செய்தார். நெல்கட்டான்செவல் முற்றுகை முறியடிக்கப்பட்டது. ஹெரான் புறமுதுகிட்டுப் பின்வாங்கினார். ஆங்கிலப்படை பூலித்தேவனிடம் தோற்றது. பூலித்தேவனின் அர்ப்பணிப்புப் படை, தீர்க்கமான தலைமை, ராஜதந்திரம் இவ்வெற்றிக்குக் கைகொடுத்தன.

**களக்காடு முற்றுகை, 1755**

பூலித்தேவனிடம் தோல்விகண்ட மாபஸ்கான் மீண்டும் தன் அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் நோக்கத்தோடு மீண்டும் பாளையப்படையுடன் மோதும் முயற்சியில் ஈடுபட்டார். மாபஸ்கான் திட்டத்தை முன்கூட்டியே அறிந்த பூலித்தேவன் ஆர்க்காடு நவாபின் பணியிலிருந்த திறமைமிக்க முடேமியா, மியான், நபிகான் போன்றோரைத் தன் பக்கம் இழுத்துக் கொண்டார். அதுமட்டுமல்ல, திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்டவர்மாவிடம் பேச்சுவார்த்தை நடத்தி 4000 போர் வீரர்களை வரவழைத்தார் பூலித்தேவன். வழக்கம்போல மறவர் படை அவருக்குத் துணை நின்றது.

பூலித்தேவனின் கூட்டணிப் படை மாபஸ்கானின் குதிரைப் படையை இடைநிறுத்தி நிலைகுலையச் செய்தது. மாபஸ்கான் வசமிருந்த களக்காடு

கோட்டையை முற்றுகையிட்டார். அந்நிலையில் திருவிதாங்கூரில் வெடித்த கிளர்ச்சியை அடக்குவதற்காக தன் வீரர்களை விலக்கிக் கொண்டார் மார்த்தாண்டவர்மா. எனினும் மாபஸ்கான் களக்காடு கோட்டையைத் திரும்பப் பெற முடியாமல் தடுத்துவிட்டார் பூலித்தேவன். களக்காடு முற்றுகை பூலித்தேவரின் பெருமையை மேலும் உயர்த்தியது.

**மீண்டும் முற்றுகை, 1755**

மாபஸ்கான் களக்காட்டை பூலித்தேவரிடமிருந்து மீட்கத் தீர்மானித்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க ஆர்க்காடு நவாபும் ஆங்கிலேயரின் ராணுவ உதவியைப் பெற்றுத்தந்தார்.இம்முறை தேவையான உணவுப்பொருள்களையும், கூடுதல் படையுடனும் மாபஸ்கான் படைமீது திடீர்த தாக்குதலை நடத்தினார். பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன. இத்திடீர்த் தாக்குதல் நவாபுக்கும் ஆங்கிலேயருக்கும் அதிர்ச்சியைக் கொடுத்தது. மாபஸ்கான் கள்காட்டை முற்றுகையிட்டுக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டு திருநெல்வேலி முகாமுக்குத் திரும்பினார்.

**செவலுக்குச் சவால், 1755-1756**

பூலித்தேவனின் கோட்டையான நெல்கட்டான் செவலைக் கைப்பற்றிவிட்டால் பூலித்தேவனைப் பணிய வைத்துவிடலாம் என்று எண்ணிய மாபஸ்கான் மீண்டும் அதை முற்றுகையிட்டார். பூலித்தேவன் கூடுதல் படையினருடன் நெல்கட்டான்செவல் கோட்டையைப் பலப்படுத்தியிருந்தமையால் மாபஸ்கானின் முயற்சி இம்முறையும் வெற்றிபெறவில்லை. அந்த ஆத்திரத்தில் நவாபின் நிலங்களை சூறையாடிய கள்ளர் படையினரை மூர்க்காகத் சிதறடித்தார் மாபஸ்கான். இதனால் பூலித்தேவனின் படைபலம் பெரிதும் பாதிக்கப்பட்டது.

**ஸ்ரீவில்லிபுத்தூர் முற்றுகை, 1756**

பாளையக்காரர்கள் மதுரை அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்றும், ஆர்க்காட்டு நவாபுகள் மதுரையை ஆக்கிரமித்தவர்கள் என்றும் கருதிய பூலித்தேவன் மதுரையை மீட்க முடிவு செய்தார். மேலும் பல மேற்குப் பக்கம் பாளையக்காரர்களைத் தன் கூட்டமைப்பில் சோத்துக் கொண்டார். கிழக்கத்திய பாளையக்காரர்கள் நவாபின் அடக்கு முறைக்கு அஞ்சி பூலித்தேவனுடன் சேரத் தயங்கினாலும் நட்டம் பாளையக்காரர்கள், கா்நாடக நவாபு ஆங்கிலேயக் கூட்டாதிக்கத்துக்கு எதிராக ஒத்துழைக்க ஒப்புதல் அளித்தனர். அதேபோன்று மதுரைப் பாளையக்காரர்களும் பூலித்தேவனுக்கு நேசக்கரம் நீட்டினர். தொடர் வெற்றிகளால் பெரிதும் ஊக்குவிக்கப்பட்ட பூலித்தேவன் விரிவுபடுத்தப்பட்ட பாளையக்காரர் கூட்டமைப்புக்குத் தலைமைப் பொறுப்பேற்றார்.

பூலித்தேவன் ஸ்ரீவில்லிபுத்தூர் வழியாகச் சென்று மதுரையை நவாபிடமிருந்து கைப்பற்றத் திட்டமிட்டார். அத்திட்டத்தின்படி அவர் கூட்டமைப்புப்படையினருடன் ஸ்ரீவில்லிபுத்தூரை அடைந்து அக்கோயில் நகரக் கோட்டையை அப்துல் ரகீமின்

பிடியினின்றும் கைப்பற்றினார். எந்த இடத்திலும் எதிரிப்படையுடன் மோதாமல் மறைந்திருந்து தாக்கிய அவர்களை ஆச்சர்யத்தில் வீழ்த்தினார் பூலித்தேவன். நவாபின் வீரர்கள் நிலைகுலைந்தனர். பலர் கோட்டைக்குள் சரணடைந்தனர். மேலும் பலர் தப்பிச் சென்றனர். இவ்வீரமிகு வெற்றி பூலித்தேவனின் புகழைப் பன்மடங்கு பெருக்கிற்று. மதில்மேல் பூனைகளாக இருந்த பாளையக்காரர்களும் பூலித்தேவனும் பக்கம் சேர முன்வந்தனர். சுருங்கக்கூறின், ஸ்ரீவில்லிபுத்தூர் வெற்றி பூலித்தேவனின் தலைமைக்குக் கிடைத்த மணிமகுடமாகும்.

**ஆங்கிலேயரின் எதிர்த்திட்டம்**

பூலித்தேவனின் மின்னல்வேக முன்னேற்றத்தைக் கண்ட ஆர்க்காட்டு நவாபும், ஆங்கிலேயரும் கலக்கமுற்றனர். இலட்சிய வெளியோடு, திட்டமிட்டு முன்னேறும் பூலித்தேவனைத் தடுத்து நிறுத்த முடிவு செய்தனர். அதற்கேற்ப இராணுவ உத்திகளை வகுத்தனர். இம்முறை இராணுவத் தாக்குதல் பொறுப்பை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். மாபஸ்கானின் திமையின்மையை உறுதி செய்த கொண்ட அங்கிலேயர் பல்திறன்மிக்க கான்சாகிபை தளபதியாக நியமித்து பாளையக்காரர்களுக்கு எதிராக அனுப்பினர். கான்சாகிபு திருநெல்வேலி சென்று முகாமிட்டு பாளையக்காரர் எதிர்ப்பை எதிர்க்கொள்ளத் திட்டமிட்டார். இதன் மூலம் ஆங்கிலேயர் பாளையக்காரர்கள் சம்மந்தமாக நேரடியாகத் தலையிட்டனர். அதாவது கான்சாகிபைக் கருவியாகக் கொண்டு, தென் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டி, வரி வசூலை நேரடியாக மேற்கொள்ளத் திட்டமிட்டனர் ஆங்கிலேயர்.

**திருநெல்வேலி தாக்குதல், 1756**

மதுரையைக் கைப்பற்றுவது உறுதியாகவிட்ட நிலையில் கூட்டமைப்புப் படைத் தலைவர்கள் சிலர் நவாபின் இராணுவ முகாமான திருநெல்வேலியைக் கைப்பற்றிவிட்டல் மதுரையை மீட்பது எளிது என்ற மாற்றுத் திட்டத்தை முன்வைத்தனர். தெற்கே திருநெல்வேலியையும், மேற்கே மதுரையையும் கைப்பற்றிய பின்னர் நவாபையும் ஆங்கிலேயரையும் ஒருசேர விரட்டுவது எளிதாகிவிடும் என்று அவர்கள் வாதிட்டனர். கூட்டமைப்புத் தலைவர்களின் கருத்துக்கு மதிப்பளித்த பூலித்தேவன் திருநெல்வேலியைக் கைப்பற்றும் நோக்குடன் கூட்டுப்படையை வழிநடத்திச் சென்றார்.

பூலித்தேவனின் தடீர் போர்த்திட்ட மாற்றத்தை அறிந்த கான்சாகிபு கிழக்குப் பகுதிப் பாளையக்காரர்களுள் சிலரை தன்பக்கம் சேர்த்துக் கொண்டு திருநெல்வேலியில் தன் நிலையைப் பலப்படுத்திக் கொண்டார். இந்நிலையில் பூலித்தேவனின் படை திருநெல்வேலியைத் தாக்கியது. 1756 மார்ச் 21 ஆம் தேதி துவங்கிய திருநெல்வேலி போரில் பூலித்தேவனின் கூட்டுப்படைக்கு பின்னடைவு ஏற்பட்டது. கூட்டுப்படையினர் பிரிந்து பின்வாங்கத் துவங்கினர். பேரழிவை சந்திக்க விரும்பாத பூலித்தேவன் தன் படை வீரர்களுடன் நெல்கட்டான் செவலுக்குத் திரும்பினார்.

**திருநெல்வேலியைக் கைப்பற்றுதல், 1756**

திருநெல்வேலித் தாக்குதல் தோல்வியிலிருந்து நெல்கட்டான் செவலுக்குத் திரும்பிய பூலித்தேவன் புதிய போர்க் கொள்கையை வகுத்தார். அதன்படி நவாப் ஆங்கிலேயருடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டு அவர்களுக்குச் சொந்தமான பகுதிகளைத் தாக்கிச் சீரழிப்பது. இந்த இருமுனைக் கொள்கையின்படி மதுரையில் புதிதாக நியமிக்கப்பட்டிருந்த தீர்த்தாரப்ப முதலியுடன் கப்பம் கட்டத் தயாராக இருப்பதாகப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டே நவாபின் நிலங்களைச் சூறையாட கள்ளர்களை அனுமதித்தார் பூலித்தேவன். பின்வாங்கிப் போன பாளையக்காரர்களை ஊக்கப்படுத்தி மீண்டும் கூட்டமைப்பைப் புதுப்பித்தார். கிழக்குப் பகுதிப் பாளையக்காரர்கள் சிலர் அனுப்பிய படைவீரர்களையும் சேர்த்துக் கொண்டு காட்டு வழியாகச் சென்று திருநெல்வேலி மீது திடீர்த் தாக்குதல் நடத்தினார் பூலித்தேவன். அதிர்ச்சிக்குள்ளான எதிரிப் படையினர் செயலிழந்தனர். திருநெல்வேலி கைப்பற்றப்பட்டது.

**பாளையங்கோட்டை முற்றுகை, 1756**

திருநெல்வேலியைக் கைப்பற்றி வலுவான நிலையில் இருந்த பூலித்தேவனின் கவனத்தைத் திசை திருப்பும் பொருட்டு ஆங்கிலப் படைத் தளபதி கான்சாகிபு பாளையங்கோட்டைக்கு விரைந்து சென்று கோட்டையைக் கைப்பற்றினார். இதை அறிந்த பூலித்தேவன் பாளையங்கோட்டைக்கு விரைந்து சென்று கோட்டையைச் சுற்றி வளைத்துக்கொண்டார். கோட்டைக்குள்ளிருந்த எதிரிப் படையினருக்கு உணவுப்பொருட்கள் செல்வதைத் தடுத்து நிறுத்தினார். பின்னா அவரது படைவீரர்கள் கோட்டையின் மீது ஏற முற்பட்டபோது ஆங்கிலப்படையின் பீரங்கித் தாக்குதலுக்கு இலக்காயினர். வேறுவழியின்றி பூலித்தேவன் பாளையங்கோட்டையிலிருந்து பின்வாங்க நேரிட்டது கைக்கெட்டிய பாயைங்கோட்டை வாய்க்கெட்டாமல் போயிற்று.

**மீண்டும் திருநெல்வேலி முற்றுகை, 1757**

பாளையங்கோட்டையிலிருந்து தப்பி காட்டுக்குள் சென்ற பூலித்தேவன் மதுரையை மீட்கும் இலட்சியத்தோடு செயல்பட்டார். திருநெல்வேலியில் எஞ்சியிருந்த மைசூர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இராணுவ உதவியை நாடினார். மாபஸ்கானையும் அவரது ஊழல் அதிகாரிகளையும் பொருளாசை காட்டித் தன்பக்கம் இழுத்துக் கொண்டார். மீண்டும் பாளையக்காரர் கூட்டமைப்பைப் புதுப்பித்தார். திருநெல்வேலியைக் கைப்பற்றிய பின்னர் மதுரையை மீட்டக வேண்டும் என்ற திட்டப்படி திருநெல்வேலி மீது படையெடுத்தார் பூலித்தேவன். இதற்கிடையே கான்சாகிபு களக்காடு, பாப்பான்குளம், ஆழ்வார்க்குறிச்சி, பிரமதேசம், தரன்குறிச்சி ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி பூலித்தேவனின் கூட்டமைப்புப் படை பலத்தைப் பலவீனப்படுத்தினார். எனவே, பூலித்தேவன் திருநெல்வேலியைக் கைப்பற்றும் முயற்சியைக் கைவிட்டுத் திரும்பினார்.

இறுதிப்போராட்டம், 1757-1761

பூலித்தேவனைப் புறங்காண்பது எளிதல்ல என்பதைப் புரிந்து கொண்ட கான்சாகிபு அவரை சூழ்ச்சித்திறனால் வீழ்த்த முடிவு செய்தார். பல பாளையக்காரர்களை கூட்டமைப்பிலிருந்து பிரித்தார். சபலமனமுடைய மாபஸ்கானை விலைக்கு வாங்கினார். திருவிதாங்கூர் மன்னரின் இராணுவ உதவியைப் பெற்றார். இத்தகைய நடடிவக்கைகள் மூலம் பூலித்தேவனை தனிமைப்படுத்தினார் கான்சாகிபு. அதன் பின்னர் கான்காசிபு பூலித்தேவனின் பலமிக்க வாசுதேவநல்லூர் கோட்டையை முற்றுகையிட்டு ஒருமாத கால போராட்டத்துக்குப்பின் கைப்பற்றினார்.

சாத்தூர் கோட்டைக்குள் முகாமிட்டிருந்த பூலித்தேவனைத் தன் சூழ்ச்சித்திறனால் கோட்டையை விட்டு வெளியேறச் செய்தார் கான்சாகிபு. கோட்டையை விட்டு வெளியேறிய பூலித்தேவன் எதிரியின் இராணுவ முகாம்களைத் தாக்கி பேரழிவை ஏற்படுத்தினார். ஊத்துமலைக் கோட்டையைக் கைப்பற்றினார். இவற்றால் ஊக்குவிக்கப்பட்ட பூலித்தேவன் பாளையம்கோட்டையையும், திருநெல்வேலியையும் கைப்பற்றும் முயற்சியில் ஈடுபட்டார். ஆனால் பூலித்தேவனின் இறுதி முயற்சியை முறியடித்தார் கான்சாகிபு. 1761-இல் நெல்கட்டான் செவல் கோட்டையைக் கைப்பற்றினார். காட்டுக்குள் தப்பிச் சென்ற பூலித்தேவனின் மறைவு இன்றுவரை அவிழ்க்கப்படாத வரலாற்று முடிச்சாகவே உள்ளது. இதுபற்றி வரலாற்று ஆதாரமற்ற பல கதைகள் கற்பிக்கப்பட்டுள்ளன.

## தமிழ்நாட்டில் தென்னிந்தியக் கிளர்ச்சி, 1800 – 1810

### முதல் கட்ட முயற்சி

ஆர்க்காடு நவாபு முகமது அலி ஆங்கிலக் கிழக்கிந்திய கம்பெனியின் ஆதரவோடு மதுரை மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் தனது அதிகார ஆதிக்கத்தை விரிவுபடுத்த முற்பட்ட போது பாளையக்காரர்கள் கிளர்ச்சி செய்தனர் நெல்கட்டும்செவலை நெல்கட்டான் செவலாக்கிய பூலித்தேவன் (1715-1767) மேற்குப் பாளையக்காரர்களை ஊக்குவித்து, ஒருங்கிணைத்து, போராட்டக் கூட்டமைப்புக் குடையின் கீழக் கொண்டு வந்த நவாப்-ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து உயிர்த்தியாகம் செய்தார். 18-ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் பாளைய சுதந்திரத்துக்காகப் போராடிய முதல் தமிழ்ப் போராளி பூலித்தேவன் ஆவார்.

பூலித்தேவனுக்குப் பின் பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மன் (1760 – 1799) கிழக்குப் பாளையக்காரர்களை உற்சாகப்படுத்தி, ஒன்று சேர்த்து ஆங்கில ஆதிக்க எதிர்ப்புக் கூட்டணி அமைத்துப் போராடியதால் தூக்கிலிடப்பட்டார். பூலித்தேவனும், கட்டபொம்மனும் நவாப்-ஆங்கில ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளர்ந்தெழுந்த முதல் போராட்டக்காரர்கள் ஆவர். இவர்களது கிளர்ச்சிகளை இந்திய விடுதலைப்போராட்டத்தின் முதல் கட்ட கன்னி முயற்சி எனலாம்.

**அடுத்தகட்ட முயற்சி**

வீரபாண்டிய கட்டபொம்மன் தூக்கிலிடப்பட்ட பின்னா் அவரது வலக்கரப்போராளியான ஊமைத்துரை ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான போராட்டத்தை முன்கொண்டு சென்றார். திருநெல்வேலியில் மூட்டப்பட்ட பாளைய சுதந்திரப் போராட்ட நெருப்பு காட்டுத்தீ போன்று மதுரைக்கும், சிவகங்கைக்கும் பரவியது. சிவகங்கை மருது சகோதரா்களான வெள்ளை மருதுவும், சின்ன மருதுவும் ஊமைத்துரையைத் தங்களுடன் இணைத்துக் கொண்டு ஆங்கில எதிா்ப்புக் கிளா்ச்சியை தென்னிந்திய அளவுக்கு விரிவுபடுத்தினா். தமிழ்நாட்டைக் களமாகக் கொண்டு அவா்கள் ஆங்கில எதிா்ப்புக் கிளா்ச்சியை அகல் விரிவாக்கினா். காளையாா்கோயிலை மையமாகக் கொண்டு இப்போராளிகள் மருது பாண்டியா்களின் தலைமையில் ராமநாதபுரம், திண்டுக்கல், மலபாா்-கோயமுத்தூா் பிராந்தியக் கூட்டமைப்புகளை உருவாக்கி, அவைகளை ஒன்று சோ்த்து தென்னிந்திய கூட்டிணைப்பாக விரிவுபடுத்தி. தெளிவான குறிக்கோளுடன், திட்டமிட்டு ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிரான பரவலான வன்முறைக் கிளா்ச்சியைத் துவக்கினா்.

1799லிருந்து 1801 வரை நீடித்த இக்கிளா்ச்சியைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ச்சி செய்த பேராசிரியா் கே. ராஜய்யன் இப்போராட்டம் இந்திய ஆட்சியாளா்கள் பிரிட்டிஷ ஏகாதிபத்தியத்துக்கு அடிபணிவதற்கு எதிரானது என்றும், பிரிட்டிஷ் மேலாதிக்கத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக மேற்கொள்ளப்பட்ட தீா்மானமான பரவலான வன்முறைக் கிளா்ச்சி என்றும் குறிப்பிட்டுள்ளாா். தென்னிந்திய கிளா்ச்சியே முதல் இந்திய விடுதலைப் போராட்டம் என்று ஆவண ஆதாரங்களுடன் நிலைநாட்டியுள்ளாா்.

**கிளா்ச்சிக்கான காரணங்கள்**

**அரசியல் காரணங்கள்**

பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே துவக்கப்பட்டதே தென்னிந்தியக் கிளா்ச்சியாகும். முகலாயப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் தென்னிந்தியா சூழப்பத்துக்கும், கொந்தளிப்புக்கு உள்ளாயிற்று. எனினும், அரசா்களும், பாளையக்காரா்களும் கிராமக் குடியாட்சி முறையும் அரசியல் கட்டுக்கோப்பும் குலையாது சமநிலையைப் பாதுகாத்தனா். அந்த அமைப்பு முறை ஆங்கிலேயரின் ஆக்கிரமிப்புக் கொள்கைக்கு இலக்கான போது எதிா்ப்பு ஏற்பட்டது. ஆற்காட்டு நவாப் சந்தா சாகேப், தஞ்சாவூா் பிரதாப்சிங், மதுரை கான்சாகிப் ஆகியோா் கம்பெனி ஆதிக்கத்துக்கு அடிபணிந்தனா். மைசூா் மன்னா்களான ஹைதா் அலியும், திப்பு சுல்தானும் அவ்வாதிக்கத்தை எதிா்த்து மடிந்தனா். கம்பெனியோடு உடன்படிக்கை செய்து கொண்ட மன்னா்கள் ஆங்கிலேய நிா்வாகத்தின் கருவியாக இருந்து கொண்டு மக்களைச் சுரண்டினா், கொடுமைப்படுத்தினா். அரசா்கள் கம்பெனிக்கு அடங்கி மக்களை அடக்கியமையால் மக்களிடையே மனக்கசப்பு வளரலாயிற்று.

அரசா்களை அடக்கியது போன்று கம்பெனியால் பாளையக்காரா்களை அடிபணிய வைக்க முடியவில்லை. கா்நாடகத்திலும், மலபாரிலும், தமிழகத்திலும்

கம்பெனி பல்வேறு உத்திகளைக் கையாண்டு பலவீனப்படுத்திற்று. எனினும், உறுதியான பாளையக்காரர்கள் ஒன்று சேர்ந்து கம்பெனி ஆட்சியை எதிர்க்கத் துணிந்தனர். கிராமங்களின் கேடயமாக இருந்த அவர்கள் தங்களது பாரம்பரிய உரிமைகளும் சலுகைகளும் பறிபோவதைக் கொஞ்சமும் விரும்பவில்லை. வழிவழியாக இரந்து வந்த கிராமப்பணிகளைக் கம்பெனி நிர்வாகம் மேற்கொண்டதால் கிராமக் குடியாட்சி முறை நிலை குலைந்தது. கிராம மக்கள் பாளையங்களிலும் பணியாற்ற முடியவில்லை. கிராம நிர்வாகத்திலும் பங்கேற்க இயலவில்லை. பரம்பரைப் பழக்கவழக்கங்களைப் புனிதமாகக் கருதிய கிராம மக்கள் கம்பெனி கொண்டு வந்த மாற்றங்களால் ஏமாற்றமடைந்தனர். அரசியல், உரிமைப் பறிப்பையும், சுயாட்சி இழப்பையும் மக்கள் தலைவர்கள் எதிர்த்தனர். பிரான்சிலிருந்து மைசூருக்கு வந்த புரட்சியாளர்கள் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று ஆங்கிலேயருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தார்கள். இவற்றின் கூட்டு விளைவாகத் தென்னிந்தியாவில் கிளர்ச்சி ஏற்படுவதற்கான அரசியல் சூழ்நிலை உருவாயிற்று.

**பொருளாதாரக் காரணங்கள்**

அரசியல் அடக்குமுறையைப் போன்றே பொருளாதாரச் சுரண்டலும் தென்னிந்தியக் கிளர்ச்சிக்குக் காரணமாயிற்று. மக்கள் நலனைப் பேணுவதைவிடக் கம்பெனி தனது வருவாயைப் பெருக்குவதிலேயே குறியாக இருந்தது. வரிகளை வரம்பின்றி உயர்த்தியது. உதாரணமாக, திண்டுக்கல்லில் திப்புசுல்தான் வசூலித்ததற்கு மேலாக இருபத்தி ஐந்து விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூலிக்கப்பட்டது. கன்னடப்பகுதி, சூன்டா, சேலம் கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் தொண்ணூறு விழுக்காட்டுக்கு அதிகமாக வரி வசூல் செய்யப்பட்டது. தன்னிச்சைப்படி உயர்த்தப்பட்ட வரிகளால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். அதுமட்டுமல்ல, அவர்கள் அனுபவித்த வந்த பல சலுகைகள் பறிக்கப்பட்டன. விவசாய நிலங்களுக்கு விதிக்கப்பட்ட தீர்வை மிகவும் அதிகமாக இருந்தது. பல நேரங்களில் விளைச்சலைவிடத் தீர்வையே அதிகமாக இருந்தது. இவற்றை எதிர்த்தோர் நிலங்களிலிருந்து வெளியேற்றப்பட்டனர். பலர் வரியைக் கட்ட முடியாது தங்களது நிலங்களை விற்றுவிட்டுக் கிராமங்களை

விட்டே வெளியேறினர்.

வரிகள் கடுமையாகவும், கொடுமையாகவும் வசூலிக்கப்பட்டன. இடைத்தரகர்களும் வருவாய்த்துறை ஊழியர்களும் மக்களைக் கசக்கிப் பிழிந்து வரி வசூலித்தனர். நிலத் தீர்வையை நிர்ணயிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் விசாரணைகளும் மக்களிடையே அச்சத்தை அதிகரிக்கவே செய்தன. அரசர்கள் கம்பெனிக்குச் செலுத்த வேண்டிய தொகையையும் மக்களிடமிருந்தே வசூலித்தனர். அவ்வசூலுக்காக நியமிக்கப்பட்டவர்கள் கொடுத்த நிர்பந்தங்களும் மக்களைத் துன்புறுத்தின. அரசர்கள் ஆங்கிலேயரிடமிருந்து அதிக வட்டிக்குக் கடன்கள் வாங்கினர். தங்களுக்குச் சேர வேண்டிய நில வரியை வசூலித்து கடனுக்குப் பதில்

செலுத்தும் பொறுப்பைக் காரியக்காரர்களிடம் ஒப்படைத்தனர். அவர்கள் கம்பெனி ஊழியர்களுக்கு மேலாகத் தங்களைக் கருதிக் கொண்டு மக்களிடமிருந்து நிலுவைகளை ஈவிரக்கமின்றி வசூலித்தனர்.

அடிக்கடி கம்பெனி மேற்கொண்ட போர்களாலும், இராணுவ நடவடிக்கையாலும் வர்த்தகமும் தொழிலும் பெரிதும் பாதிக்கப்பட்டன. கம்பெனியின் கப்பல்களின் பேட்டிக்கு முன் நாட்டுப் படகுகளால் ஈடுகொடுக்க முடியவில்லை. கம்பெனியின் வர்த்தகப் பேட்டி, கம்பெனி ஊழியர்களின் சொந்த வியாபாரம், இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் ஆகியவை தென்னிந்தியாவின் கிராமக் குடிசைக் கைத்தொழில்களை நசித்துவிட்டன. அதனால் பல்லாயிரக்கணக்கான கைவினைஞர்கள் வேலை இழந்தனர். 1798-இல் ஏற்பட்ட கடுமையான பஞ்சத்தைப் பயன்படுத்திக் கொண்டு கம்பெனிக் காரியக்காரர்களும் நிர்வாகிகளும் உணவுப் பொருட்களைப் பதுக்கி வைத்துக் கொண்டு, அவைகளின் விலையை பன்மடங்கு உயர்த்தி விற்றுக் கொள்ளை இலாபம் பெற்றனர். இவற்றால் மனம் நொந்துபோன மக்கள் தங்களுடைய வெறுப்பை வெளிப்படுத்துவதற்கான தக்க தருணத்தை எதிர்பார்த்திருந்தனர்.

**மருதுபாண்டியன் கூறிய காரணம்**

சிவகங்கை மருது பாண்டியன் தென்னிந்தியாவின் தாழ்ச்சிக்குரிய காரணத்தை அறிவுப்பூர்வாக ஆய்ந்தறிந்து கூறினார். அவரின் ஆய்வின்படி அரசர்களின் அரசியல் சாதுர்யமற்ற கொள்கை, குழு கோஷ்டி மனப்பான்மை, ஆங்கிலேயரின் வஞ்சகத்தன்மை, மக்களின் ஒரு பகுதியினரின் அந்நிய அதிகாரத்துக்கு அடிபணியும் வழக்கமான போக்கு ஆகியவையே தென்னிந்தியரின் அரசியல் பலவீனத்துக்கான காரணங்களாகும். அரசர்கள் ஆங்கிலேயருடன் உடன்படிக்கை செய்து கொண்டு தன்மானக் குறைவான தாழ்ந்த நிலையை அடைந்ததை அவர் வன்மையாகக் கண்டித்தார். தென்னிந்தியர்களிடையே உள்ள ஒற்றுமையின்மையை ஆங்கிலேயர் களுக்கிடையே இருந்த ஒற்றுமையோடு ஒப்பிட்டுக் காட்டினார். ஹைதராபாத்தில் நாஸிர் ஜங்கும், முஸபர் ஜங்கம், கர்நாடகத்தில் சந்தா சாகிப்பும், முகமது அலியும், தஞ்சாவூரில் பிரதாப் சிங்கும், சரபோஜியும், பரஸ்பர பொறாமையால் மோதிக் கொண்டதைக் கோடிட்டுக் காட்டினார். மருதுபாண்டியர். ஆங்கிலேயரின் ஆணைகளைச் சிரமேற்கொண்டு நிறைவேற்றி அவர்களின் ஆட்சியை உரமிட்டு வளர்த்த மக்களின் ஒரு பிரிவினரின் போக்கு கண்டு அவர் கவலையுற்றார். தற்கொலைக்கொப்பான அந்நிலை நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரின் ஆதிக்கத்தின் கீழ் வந்துவிடும் என்று அவர் எச்சரித்தார். தமிழ் நாட்டுக்கு ஒரு வால்டேர், ஒரு ரூஸோ, ஒரு மண்டேகு இல்லாத குறையைத் தீர்த்து வைத்தவர் மருது பாண்டியர் என்றால் மிகையாகாது.

**பிராந்தியக் கூட்டமைப்புகள்**

ஆங்கிலேயக் கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியின் விளைவாக தென்னிந்தியாவில் அரசியல் அடக்குமுறை, பொருளாதாரச் சுரண்டல்,

நிர்வாகக்கெடுபிடி போன்றவை அதிகரிக்கலாயிற்று. மக்கள் சொல்லொணா இன்னல்களுக்கு ஆட்பட்டனர். எதிர்ப்புணர்ச்சியே கிளர்ச்சிக்கு ஆணிவேர். ஆனால் வடிவமற்ற எதிர்ப்புணர்ச்சி வீண் முயற்சியாகும். விழலுக்கிறைத்த நீராகும். எனவே, மக்களின் எதிர்ப்புணர்ச்சிக்குப் பாதிக்கப்பட்ட பாளையக்காரர்களும் மக்கள் தலைவர்களும் உரிய வடிவம் கொடுத்தனர். அவ்வடிவம் முதலில் பிராந்தியக் கூட்டமைப்புகளாக உருவெடுத்தது. 1795லிருந்து 1799 வரை இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல், மலபார் - கோயமுத்தூர் ஆகிய நான்கு பிராந்திய கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டன.

**இராமநாதபுரம் கூட்டமைப்பு**

இக்கூட்டமைப்பின் கர்த்தா சிவகங்கை வெள்ளை மருதுபாண்டியன் ஆவார். இவரது இளவல் சின்னமருது. மருது சகோதரர்கள் சிவகங்கை மன்னரான முத்து வடுகநாதத் தேவரிடம் சாதாரண ஊழியர்களாகத் தங்களது பணியைத் துவக்கினர். தங்களது பயன் கருதாப் பணியாலும், நேர்மைத் திறத்தாலும், எஜமான் பக்தி விசுவாசத்தாலும், கடுமையான உழைப்பாலும் உயர்ந்து அமைச்சர்களாயினர். அரசரின் மறைவுக்குப் பிறகு அரச குடும்பத்தைக் காத்த பெருமை இவர்களுக்குண்டு. சிவகங்கைக்கு அடுக்கடுக்காக வந்த சோதனைகளைச் சமாளித்தனர்.

ஆங்கிலேய ஆட்சியை அகற்றப் பிற பாளையக்காரர்களோடு கூட்டு சேர வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்தவர் மருதுபாண்டியன். மக்கள் ஒன்று சேர்ந்து அந்நிய ஆட்சிக்கெதிராகப் போரிட வேண்டுமென்றார் அவர். பக்கத்துப் பாளையங்களுக்கு உளவாளிகளை அனுப்பித் தன்முயற்சிக்கு ஆதரவு தேடினார் மருதுபாண்டியன். இராமநாதபுரத்தின் பிரமுகர்களான மேலப்பன், சிங்கம் செட்டி, முத்து கருப்பதேவர் ஆகியோர் மருதுபர்ணடியனின் முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்தனர். தஞ்சாவூர் ஞானமுத்துவும் சிவகிரி மாப்பிள்ளை வன்னியனும் மதுரைக் கள்ளர்களும் மருது பாண்டியன் அமைத்த இராமநாதபுரம் கூட்டமைப்புக்கு ஆதரவளித்தனர். மருது பாண்டியனது தலைமையில் இக்கூட்டமைப்பு செயல்பட்டது.

**திருநெல்வேலி கூட்டமைப்பு**

மருது பாண்டியனால் ஊக்குவிக்கப்பட்டு நாகலாபுரம், மன்னர்கோட்டை, போவாலி, கோலார்பட்டி, சென்னால்குடி பாளையக்காரர்கள் சேர்ந்து உருவாக்கியதுதான் திருநெல்வேலிக் கூட்டமைப்பு. இக்கூட்டமைப்பில் சேர்ந்து அதற்கு புதுப்பொலிவையும் வலிவையும் கொடுத்தார் பஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரரான வீரபாண்டிய கட்டபொம்மன், மருதுபாண்டியனால் கவரப்பட்டு, அவரோடு நெருங்கிய தொடர்பு கொண்டு, அவரையே முன்மாதிரியாகக் கொண்டு செயல்பட்டார் கட்டபொம்மன். அவர் சாப்டூர், ஏழாயிரம்பண்ணை, காடல்குடி, குளத்தூர் பாளையக்காரர்களையும் கூட்டு சேர்த்துக் கொண்டு திருநெல்வேலிக் கூட்டமைப்பைப் பலப்படுத்தினார். செவத்தையா, வீரபாண்டிய நாயக்கர், வீரபத்திரபிள்ளை ஆகியோரை அனுப்பி மதுரைக் கள்ளர்களின் ஆதரவையும் பெற்றார். அந்த பாஞ்சாலங்குறிச்சிப் பாளையக்காரர். திருநெல்வேலி கூட்டமைப்புக்

அவரே தலைமையேற்றார். ஆனால் தென்னிந்தியக் கிளர்ச்சியில் பங்கேற்கும் பேறு அவருக்குக் கிட்டவில்லை. கிளர்ச்சி துவங்குவதற்கு ஓராண்டுக்கு முன்னரே கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டார்.

**திண்டுக்கல் கூட்டமைப்பு**

திண்டுக்கல் கூட்டமைப்பை உருவாக்கியவர் கோபால நாயக்கர் ஆவார். விருப்பாட்சிப்பாளையக்காரரான கோபால நாயக்கர் சிறந்த ராஜதந்திரி. போர்க்களங்கள் பல கண்டவர். திறமையான அமைப்பாளர். அந்நிய அடக்குமுறை ஆதிக்கத்திடமிருந்து விடுபட எண்ணியோருக்கு அவரது தலைமை கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்தது. திண்டுக்கல், மணப்பாறை, கள்ளர்நாடு, கோயமுத்தூர், சேலம் ஆகிய இடங்களுக்குத் தனது தூதுவர்களை அனுப்பி ஆதரவு தேடினார். கோபால நாயக்கர். மணப்பாரை லட்சுமி நாயக்கர், டில்லி யாதுல் நாயக்கர் ஆகியோரோடு நெருங்கிய அரசியல் தொடர்பு கொண்டிருந்தார் அவர். யாதுல் நாயக்கர் மூலம் மங்களம் பாளையக்காரரின் ஆதரவைப் பெற்றார் கோபால நாயக்கர். பிற பாளையக்காரர்களும் கோபால நாயக்கரின் முயற்சிக்கு ஊக்கமளித்தனர். இராமநாதபுரம், திருநெல்வேலி, திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் கேந்திரமாகக் கள்ளர்நாடு திகழ்ந்தது.

**மலபார்-கோயமுத்தூர் கூட்டமைப்பு**

இந்த அமைப்பு ஏற்படுவதற்குக் காரணமாக இருந்தவர் கேரளவர்மா ஆவார். மக்கள் செல்வாக்கு மிகப் பெற்றவர் இவர். பிற கூட்டமைப்புகள் உருவாகிக் கொண்டிருக்கையில் கம்பெனிப் படையோடு கடுமையாகப் போராடிக் கொண்டிருந்தவர் கேரளவர்மா. விவசாயிகளின் பக்கபலம் அவருக்கு எப்போதும் இருந்தது. கேரளவர்மா பிற பாளையக்காரர்களுக்கு அனுப்பிய ஓலைச் சுவடி கடிதங்கள் நல்ல பலனளித்தன. அவர்களின் ஆதரவு கிடைத்தது. வைநாடு, கோட்டயாட்டு, குரும்பரநாடு, பரப்பநாடு ஆகியவற்றின் தலைவர்களும், இருவி நாட்டு நம்பூதிரிகளும், சமோரின் குடும்பத்தினரும், மலபார் மாப்பிள்ளைகளும் கேரள வர்மாவை ஆதரித்தனர். ஆங்கிலேயர்களின் நோக்கும் போக்கும் பிடிக்காத கோயமுத்தூர் கவுண்டர்களும் மலபார் கிளர்ச்சிக்காரர்களோடு சேர்ந்து கொண்டனர். மலபார், திண்டுக்கல் கூட்டமைப்புகள் கூடும் மையமாக விளங்கியது கோயமுத்தூர்.

**தென்னிந்திய கூட்டமைப்பு**

பிராந்தியக் கூட்டமைப்புகள் காலத்தின் கட்டாயத்தால் தன்னிச்சையாகத் தோன்றியவையாகும். இவ்வமைப்புகளின் இணைப்புப் பாலமாக விளங்கியவர் மருதுபாண்டியன். நான்கு கூட்டமைப்புகளுக்கும் பொதுவான குறிக்கோள் இருந்தது. இவை தென்னிந்தியாவின் பரந்த நிலப்பகுதியில் செயல்பட்டன. அதைத் தங்களது செல்வாக்கின் கீழ் வைத்திருந்தன. திண்டுக்கல் மலபார் கூட்டமைப்புகள் மைசூர் திப்பு சுல்தானுடன் உடன்பாடு கொண்டிருந்தன. ஆனால் 1799-இல் திப்பு சுல்தான் வீழ்ச்சிக்குப் பின்னர் பிராந்திய கூட்டமைப்புகள் பலமிழந்தன. கேரளவர்மா

கிளர்ச்சிப் பாதையினின்றும் விலகிக் கொண்டதால் மலபார் கோயமுத்தூர் கூட்டமைப்பு வலுவிழந்தது. கட்டபொம்மன் கொல்லப்பட்டதால் திருநெல்வேலி கூட்டமைப்பு முன்னரேயே பலமிழந்திருந்தது.

அத்தகைய நெருக்கடியான நேரத்தில் மருது பாண்டியன் முனைப்புடன் முன்வந்த சீர்குலைந்து போய்க் கொண்டிருந்த கூட்டமைப்பு முறையைக் காப்பாற்றினார். காப்பாற்றியது மட்டுமல்ல, அதை இன்னும் விரிவுபடுத்தித் தென்னிந்திய கூட்டிணைப்பாக மாற்றினார். கன்னட-மராத்தியப் பகுதித் தலைவரான தூண்டாஜி வாக்கோடு கூட்டுச் சேர்ந்து அக்கூட்டிணைப்பை உருவாக்கினார் மருதுபாண்டியன். வேலூர் கோட்டையில் சிறைபட்டிருந்த திப்பு சுல்தானின் மூத்த மகன் பட்டே ஹைதர் மைசூர் கிளர்ச்சிக்காரர்களுடன் இரகசியத் தொடர்பு கொண்டு அவர்களைத் தென்னிந்தியக் கூட்டிணைப்பில் சேருமாறு ஊக்கப்படுத்தினார். மலபார், மீண்டும், பெல் நாட்டு மக்களும் இப்புதிய முயற்சிக்கு ஆதரவளித்தனர். கேரளவர்மா மீண்டும் மலபார் கிளர்ச்சிக்காரர்களின் தலைவரானார். மருது பாண்டியனும், தூண்டாஜி வாக்கும் தென்னிந்திய கூட்டிணைப்பின் முன்னணித் தலைவர்களாகத் திகழ்ந்தனர். கோபால நாயக்கர், கான்-இ-ஜஹான், கேரள வர்மா, கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் இரண்டாம் வரிசைத் தலைவர்களாக இருந்தனர். மக்களின் பக்கபலத்தோடு தென்னிந்தியக் கூட்டிணைப்பு ஆங்கிலேய ஆதிக்கத்துக்கெதிராகத் திட்டமிட்டு செயல்படத் துவங்கியது.

கிளர்ச்சியின் போக்கு

**கிளர்ச்சித்திட்டம்**

ஆங்கிலேயரது ஆட்சியை அகற்றி, நாட்டை அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுவிப்பதே தென்னிந்தியக் கூட்டிணைப்பின் குறிக்கோளாகும். இக்குறிக்கோளை நிறைவேற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டும் பொருட்டு கூட்டிணைப்புத் தலைவர்கள் விருப்பாட்சியில் கூடி சதியாலோசனை செய்தனர். விரிவான ஆலோசனைக்குப் பின்னர் அவர்கள் மூன்று முக்கிய முடிவுகளை மேற்கொண்டனர். 1) ஒரே சமயத்தில் பல பகுதிகளில் கிளர்ச்சியைத் துவக்குவது. 2) கிளர்ச்சிக்காரர்கள் ஒற்றுமையாக இருந்து போராடுவது. 3) ஆங்கிலேயப் படையோடு நேரடியாக மோதாமல், மறைந்திருந்து தாக்கும் ‘கொரில்லா முறை’யைப் பின்பற்றல். மருது பாண்டியன் மதுரைப் பகுதியிலும், கோபால நாயக்கர் திண்டுக்கல், திருச்சி பகுதியிலும், கான்-இ-ஜஹான் கோயமுத்தூர்-சேலம் பகுதியிலும், கேரளவர்மா மலபார் பகுதியிலும், கிருஷ்ணப்ப நாயக்கர் மேற்கு மைசூர் பகுதியிலும், தூண்டாஜி வாக் கன்னட நாட்டின் வடக்குப் பகுதியிலும் கிளர்ச்சிக்குப் பொறுப்பேற்பது என்று முடிவாயிற்று. கோபால நாயக்கர் தலைமையில் கூடிய இக்கூட்டத்தில் 1800 ஜீன் மாதம் 3 ஆம் தேதி கோயம்புத்தூரைத் தாக்கிக் கைப்பற்றுவதென்றும், இங்கு லெப்டினென்ட் கர்னல் கே. மக்காஸ்லிடர் தலைமையில் உள்ள குதிரைப் படையை அழித்து விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. தெளிவான திட்டம் திட்டப்பட்டு விட்டது. கிளர்ச்சிக்கான தேதியும் குறிப்பிடப்பட்டு விட்டது.

### கிளர்ச்சித் துவக்கம்

விருப்பாட்சி சதித் திட்டத்தைப் பற்றி ஏதும் அறியாத கம்பெனிப்படை கிருஷ்ணப்ப நாயக்கரின் கேந்திர மையமான பெல்லம் என்ற இடத்தைக் கைப்பற்ற முயன்றது. பொறுமை இழந்த தூண்டாஜி வாக் தனது படையினரை பெல்லத்துக்கு அனுப்பினா். அதோடு நிற்கவில்லை. அவரே கிளா்ச்சியைத் துவக்கிவிட்டாா். அவரோடு அவரது சகாக்களும் கிளா்ச்சியில் ஈடுபட்டனா். கிளா்ச்சி திட்டமிட்டதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே துவக்கப்பட்டு விட்டது. மே மாதத் துவக்கத்தில் கிளா்ச்சிக்காரா்கள் கோயமுத்தூரை நெருங்கினா். நாசிங்கராவின் தலைமையில் கோயமுத்தூா் வாசிகள் கிளா்ச்சிக்காரா்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனா்.

அதையறிந்த கோயமுத்தூா் தாசில்தாா் இராணுவத்தை உஷாா் படுத்தினாா். கிளா்ச்சிக்காரா்கள் கோயமுத்தூரைத் தாக்குமுன்பே தாக்கப்பட்டு தோற்கடிக்கப்பட்டனா். கிளா்ச்சி துவங்கும் முன்னரே முறியடிக்கப்பட்டுவிட்டது. கிளா்ச்சித் தலைவா்களில் பலா் கொல்லப்பட்டனா். பலா் சிறையில் அடைக்கப்பட்டனா். எஞ்சியோா் தப்பிச் சென்றனா்.

### தீரா்களின் வீர மரணம்

திட்டமிட்டதற்கு முன்னதாகவே கிளா்ச்சியில் இறங்கிய தூண்டாஜி வாக்கும் திம்ம நாயக்கரும் மைசூா் பகுதிகளில் பல வெற்றிகளைப் பெற்றனா். ஆனால் ராமன் நாயரால் காட்டிக்கொடுக்கப்பட்ட திம்ம நாயக்கா் பிடிபட்டுக் கொல்லப்பட்டாா். கொனகல் என்ற இடத்தில் கா்னல் வெல்லெஸ்லியிடம் தோல்வியுற்று வீரமரணமடைந்தாா். தூண்டாஜி வாக் மலபாரில் கேரளவா்மா, கிராமவாசிகள், மாப்பிள்ளைகள் ஆகியோரது துணை கொண்டு ஆங்கிலேயரை ஆட்டிப் படைத்தாா். எனினும் அவரது நெருங்கிய நண்பா்களான ஏமன் நாயா், சட்டு நாயா் ஆகியோரால் காட்டிக்கொடுக்கப்பட்டதால் கேரளவா்மாவின் முயற்சி தோல்வியுற்றது. பல கிளா்ச்சிக்காரா்கள் பலியாயினா். தப்பிச் சென்ற கேரளவா்மா கிளா்ச்சிக்காரராகவே இருந்து 1805 நவம்பா் 30 ஆம் நாள் கொல்லப்பட்டாா்.

### பஞ்சாயலங்குறிச்சிப் போா்கள்

200 கிளா்ச்சிக்காரா்கள் திருச்செந்தூா் செல்லும் பக்தா்கள் போன்று வேடமிட்டுச் சென்று பாளையங்கோட்டையில் சிறைப்பட்டிருந்த செவத்தையா, ஊமைத்துரை உள்ளிட்ட பலரை விடுவித்தனா். அவா்கள் மலைநாடு மலை வழியாகப் பாஞ்சாலங்குறிச்சியை அடைந்தனா். பாஞ்சாலங்குறிச்சிக்கோட்டை புதிதாகக் கட்டப்பட்டது. மருது பாண்டியன் அனுப்பிய 30,000 கிளா்ச்சிக்காரா்கள் அவா்களுடன் சோ்ந்து கொண்டனா். மறவா்களும், பரவா்களும், நாடாா்களும், தொட்டியான்களும் அவா்களுக்குக்க கைக்கொடுத்தனா். ஊமைத்துரையின் தலைமையில் கிளா்ச்சிக்காரா்கள் செயல்பட்டனா். பாஞ்சாலங்குறிச்சிக்கும் ஸ்ரீவைகுண்டம் ஆழ்வாா் திருநகரிக்கும் இடைப்பட்ட பகுதிகளை அவா்கள் ஆங்கிலேயரிடமிருந்து கைப்பற்றினா். வலிமைமிக்க கோமேரிக் கோட்டை

கிளர்ச்சிக்காரர்கள் கைவசமாயிற்று. மேலப்பன் பல இடங்களை மீட்டார். சிவகங்கையிலிருந்து வந்த கிளர்ச்சிக்காரர்கள் நெட்டூரில் கம்பெனிப் படையைச் சிதறடித்தனர். எனினும் காலின் மெக்காலேயும் கர்னர் அக்னுவும் பாஞ்சாலங்குறிச்சிக் கோட்டையை முற்றுகையிட்டனர். இரண்டாவது பாஞ்சாலங்குறிச்சிப் போரில் அக்கோட்டை வீழ்ந்தது. 1050 கிளர்ச்சிக்காரர்கள் உயிரிழந்தனர். பலர் பிடிபட்டுக் கொல்லப்பட்டனர். எஞ்சிய கிளர்ச்சிக்காரர்கள் சிவகங்கைக்கும், இராமநாதபுரத்துக்கும் தப்பிச் சென்றனர். காயமுற்ற ஊமைத்துரை, கிராமத்துக் கிழவி ஒருத்தியால் காப்பாற்றப்பட்டு, மருது பாண்டியனின் ஆதரவுடனும் அரவணைப்புடனும் சிறுவயலில் தங்கினார்.

**காளையார் கோவில் கிளர்ச்சி**

பாஞ்சாலங்குறிச்சியின் வீழ்ச்சிக்குப் பின்னர் சிவகங்கை காளையார்கோவில் காடு கிளர்ச்சி மையமாயிற்று. திருப்பத்தூர், நட்டம், திரும்வேலூர், மேலூர், வெரப்பூர் ஆகிய இடங்களில் கம்பெனிப்படை கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. பொம்ம நாயக்கர் வெரப்பூரிலிருந்து கம்பெனிப் படையினரை விரட்டினார். ஊமைத்துரை பழைய நாட்டை விடுவித்தார். கள்ளர்கள் மதுரையின் மேற்குப் பகுதியை விடுவித்தனர். காளையார் கோவில் கிளர்ச்சிக்காரர்கள் வசமாயிற்று.

**தஞ்சையில் கிளர்ச்சி**

கிளர்ச்சி இராமநாதபுரத்திலிருந்து தஞ்சாவூருக்குப் பரவியது. செவத்த தம்பியின் தலைமையில் தஞ்சை மக்கள் கிளர்ந்தெழுந்தனர். புதுக்கோட்டை சுபா விடுவிக்கப்பட்டது. அறந்தாங்கியிலும், அரியக்குடியிலும் பாசறைகள் அமைக்கப்பட்டன. மாங்குடி கைப்பற்றப்பட்டது. கிளர்ச்சிக்காரர்கள் நாகூர் கடற்கரை வழியாகச் சென்று சீர்காழி, உடையார்பாளையம், அரியலூர் ஆகிய இடங்களில் நிலை கொண்டனர். அப்பகுதிகளிலிருந்து வருவாய்த்துறை ஊழியர்கள் விரட்டப்பட்டனர். கும்பகோணம் ஆட்சித் தலைவர் ஹாரி உயிருக்குப் பயந்து தப்பிச் சென்றார். கூட்டிணைப்புப் படையினர் கொள்ளிடத்தைக் கடந்து அதன் வடகரையைக் கைப்பற்றினர்.

**திருச்சிப் பிரகடனம்**

தென்னிந்தியக் கூட்டிணைப்புப் படையினர் வெற்றிவாகை சூடிக்கொண்டிருந்த சமயத்தில் தான் மருது பாண்டியன் தனது வரலாற்று முக்கியத்துவம் மிக்க திருச்சிப்பிரகடனத்தை வெளியிட்டார். அப்பிரகடனம் திருச்சிக் கோட்டை நுழைவாய்ச் சுவற்றிலும், ஸ்ரீரங்கம் பெரிய கோவில் சுவற்றிலும் ஒட்டப்பட்டிருந்தது. சாதி, சமய, இன வேறுபாடின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மக்களுக்கும், அறைகூவல் விடுத்தது. அந்தப் பிரகடனம். அது மக்களுக்குத் தன்னம்பிக்கையை அளித்தது. அவர்களின் ஆதரவைக் கோரியது. தேசிய உணர்வைப் பிரதிபலித்தது அகில இந்தியக்கண்ணோட்டத்தில் அமைந்திருந்தது. அதில் எண்ணங்களும், விபரங்களும் இழையோடியிருந்தன. மன்னனின் மைந்தர்களிடையே

காழ்ப்புணர்ச்சியும், பரஸ்பரப்பொறாமையும், விரோத மனப்பான்மையும் நீடித்தால் இந்தியா முழுவதும் ஆங்கிலேயரது ஆட்சிக்கு எளிதில் இரையாகிவிடும் என்று அந்தப் பிரகடனம் எச்சரித்தது. கம்பெனியுடன் கூட்டு சேர்ந்தமைக்காக முகமது அலியையும், கர்நாடக நவாபையும் அது கண்டித்தது. பொது மக்களின் அலட்சிய மனப்பான்மையைக் கண்டித்தது. ஆங்கிலேயரின் வஞ்சகத்தையும் ஆணவத்தையும் சாடியது. திருச்சிப் பிரகடனம் அன்றைய யதார்த்த நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டிற்று. மருது பாண்டியரின் அரசியல் தீர்க்கதரிசனத்தின் சின்னமே திருச்சிப் பிரகடனமாகும்.

**கிளர்ச்சியின் வீழ்ச்சி**

கிளர்ச்சியை முறியடிக்க லெப்டினெண்ட் கர்னர் அக்னியூ ஒரு மும்முனைத் தாக்குதல் திட்டத்தை வகுத்தார். இதன்படி, தென்கிழக்கே திருநெல்வேலியிலிருந்தும், வடமேற்கே திண்டுக்கல்லிலிருந்தும், வடகிழக்கே தஞ்சாவூரிலிருந்தும் கிளர்ச்சிக் கேந்திரங்களைத் தாக்கத் திட்டமிடப்பட்டது. 1801 மே 28 அன்று அக்னு நாகலாபுரம் சென்று பின்னா பரமக்குடியைக் கைப்பற்றினார். அதன்பின் திருப்பத்தூர் அவர் வசமாயிற்று. இதற்கிடையே தஞ்சாவூரில் அறந்தாங்கி, அடியார்குடி ஆகிய இடங்களில் நடந்த போர்களில் கிளர்ச்சிக்காரர்கள் தோற்கடிக்கப்பட்டனர். அக்னுவோடு கர்னல் இன்ஸ்ஸீம் சேர்ந்து கொண்டார். அவர்களது கூட்டுப்படை ஒக்கூர் வழியாகச் சென்று மருது பாண்டியனின் கிளர்ச்சி மையமான சிறுவயலை அடைந்தனர். கிளர்ச்சிக்காரர்கள் காளையார் கோவில் காட்டுக்குள் சென்றுவிட்டதால் சிறுவயல் எளிதில் வீழ்ந்தது. தொண்டி குடாக்கடலில் கிளர்ச்சிக்காரர்களின் கடற்படை அழிக்கப்பட்டது.

புதுக்கோட்டை, எட்டையாபுரத்திலிருந்து வந்த படைகளோடு கம்பெனிப்படையும் சேர்ந்து காளையார்கோயிலை வளைத்துக் கொண்டனர். கோவில் கடுந்தாக்குதலுக்கு இலக்காயிற்று. கிளர்ச்சிக்காரர்களில் பலர் உயிரிழந்தனர். மருதுபாண்டியனும் பிறரும் பல திக்குகளிலும் சிதறிச் சென்றனர். காளையார்கோவில் வீழ்ச்சியால் கிளர்ச்சியின் முதுகெலும்பு முறிந்தது எனலாம். சிதறிச் சென்ற கிளர்ச்சிக்காரர்கள் தளவாய் பிள்ளையின் தலைமையில் ஒன்று சேர்ந்தனர். களநாடு மறவர்கள் ராமத்தேவரின் தலைமையில் அவர்களோடு சேர்ந்து கொண்டனர். ஆனால் அவர்கள் அனைவரும் ஆட்சித் தலைவர் லூஷுங்டனால் தோற்கடிக்கப்பட்டனர். ஊமைத்துரை கர்னல் இன்ஸால் தோற்கடிக்கப்பட்டார். விருப்பாட்சி வீழ்ந்தது. மேஜர் டெலிடன் பிரான்மலையைக் கைப்பற்றினார். மலைகுலைந்தாலும் நிலைகுலையாத ஊமைத்துரை கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்கி திண்டுக்கல் பள்ளத்தாக்கை அடைந்தார். வத்தலக்குண்டில் நடந்த உக்கிரமான போரில் ஊமைத்துரையும், அவரோடு அறுபத்தைந்து கிளர்ச்சிக்காரர்களும் விழுப்புண் பட்டு வீரமரணமடைந்தனர். தப்பிய கிளர்ச்சித் தலைவர்களும் பிறரும் கம்பெனியால் கொடூரமாகத் தண்டிக்கப்பட்டனர்.

**வீழ்ச்சிக்கான காரணங்கள்**

தென்னிந்தியக் கிளர்ச்சியின் வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் இருந்தன. அவை 1) கிளர்ச்சித்திட்டம் செவ்வனே தீட்டப்பட்டாலும், அது திட்டமிட்டபடி செயல்படுத்தப்படவில்லை. தூண்டாஜிவாக் இரண்டு மாதங்களுக்கு முன்னரே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். 2. கிளர்ச்சி பல இடங்களில் ஒரே நேரத்தில் துவக்கப்படவில்லை. பல பகுதிகள் கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபடவில்லை. 3. பல சமயங்களில் கொரில்லா போர் முறையைப் பின்பற்றாமல் நேரடி மோதலில் ஈடுபட்டனர். 4. தூண்டாஜிவாக்கின் அகால மரணத்தால் பல மராத்தியத் தலைவர்களின் ஆதரவைக் கிளர்ச்சிக்காரர்கள் பெற முடியாது போயிற்று. 5. புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாங்கூர், மைசூர் மன்னர்கள், ஹைதராபாத் நிஜாம், பூனாவின் பேஷ்வா ஆகியோர் கம்பெனியின் ஆதரவாளர்களாக இருந்தனர். 6. ஏமன் நாயர், சட்டு நாயர், ராமன் நாயர் போன்ற கருங்காலிகள் கிளர்ச்சித் தலைவர்களைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். 7. கிளர்ச்சித் தலைவர்களிடம் போதிய போர்த்தளவாடங்கள் இல்லை. அவர்களது போர் உத்திகளும் சிறப்பாயில்லை. 8. போராட்டத் தலைவர்களிடம் ஒற்றுமை இருந்தாலும், கிளர்ச்சிக்காரர்களிடையே ஒற்றுமை இல்லை. 9. பொதுமக்களின் ஆதரவு பூரணமாகக் கிடைக்கவில்லை. 10. யாவற்றுக்கும் மேலாக கம்பெனியின் வலிமைமிக்க இராணுவம், நன்கு பயிற்சி பெற்ற திறமைமிக்கத் தளபதிகள், சிறப்பான போர் உத்திகள், ஆதார வசதிகள், கட்டுப்பாடான வீரர்கள், வலிமையான கடற்படை, தென்னிந்திய அரசர்களின் ஆதரவு ஆகியவை கிளர்ச்சியை வீழ்ச்சியடையச் செய்ய உதவின.

**வரலாற்றுச் சிறப்பு**

தென்னிந்தியக் கிளர்ச்சி ஆங்கிலேய ஆட்சிக்கெதிராகப் பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே மேற்கொள்ளப்பட்ட போராட்டமாகும். அது அந்நிய ஆட்சியை அகற்றுவதென்ற திடமான தீர்க்கமான, தீவிரமான உறுதிமிக்க எதிர்ப்பு முயற்சி. பின்வரும் போராட்டங்களுக்கு முன்மாதிரியாக அமைந்த நிகழ்ச்சிஅ து. அக்கிளர்ச்சியில் பிராந்தியத் தலைவர்களோடு பொதுமக்களும் பங்கு கொண்டனர். இராமநாதபுரம் மறவர்கள், மலபார் குறிச்சியர்கள், இந்துக்கள், முஸ்லீம்கள், தமிழர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள், கன்னடியர்கள், மராத்தியர்கள் ஆகியோர் இப்போராட்டத்தில் பங்கேற்றனர். கிளர்ச்சிக்காரர்கள் பெரிதும் காடுகளில் இருந்து கொண்டு ‘கொரில்லா’ போரிட்டனர். பிராந்தியக் கூட்டமைப்புகளும் தென்னிந்திய கூட்டிணைப்பும் இக்கிளர்ச்சியின் சிறப்புக் கூறுகளாகும். தென்னிந்தியக் கிளர்ச்சியில் சிவகங்கை மருது சகோதரர்கள், பாஞ்சாலங்குறிச்சி ஊமைத்துரை, திண்டுக்கல் கோபால நாயக்கர், கொங்கு நாட்டுக் கான்-இ-ஜஹான், மலபார் கேரள வர்மா, கர்நாடக தூண்டாஜிவாக், மைசூர் கிருஷ்ணப்ப நாயக்கர் ஆகியோர் முழு மூச்சுடன் ஈடுபட்டனர். கிளர்ச்சித் தலைவர்கள் ஆதரவற்ற ஆங்கிலேயக் குடும்பத்தினருக்குக் கருணை காட்டினர். வீழ்ந்தோரிடம் மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டனர். கிளர்ச்சிக்குப் பின் கம்பெனி பல சீர்திருத்தங்களை மேற்கொண்டது. தென்னிந்தியாவில் சுதேசி ஆட்சிக்குப் பதில் கம்பெனி ஆட்சி நிலைநாட்டப்பட்டது.

புதிதாக சென்னை ராஜதானி உருவாக்கப்பட்டது. அது கம்பெனியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது.

**வேலூர்க் கிளர்ச்சி, 1806**

**அறிமுகம்**

**வேலூர்**

வேலூர் வரலாற்றுச் சிறப்புமிக்க நகரம். இவ்வூர் சங்க காலத்தில் ஒளிர்நதிருந்தது. வேலூர் வேல்களின் ஊர் (வேல் + ஊர்), சங்க கால மக்கள் வழிபட்ட முருகனின் ஆயுதம் வேல். எனவே, முருகனின் ஊர் வேலூர் என்று கூறுவோரும் உண்டு. பண்டைக் காலத்திலிருந்து வேலூர் போர்க்களமாகப் பயன்பட்டுள்ளது. இவ்வூரில் எப்போதும் வேல்கள் குவிக்கப்பட்டிருந்தமையால் வேலூர் என்று அழைக்கப்பட்டதாகவும் கூறுவர். வேல் என்று அழைக்கப்பட்ட அரிய கூழாங்கற்கள் இங்கு நிறையக் காணப்பட்டதால் வேலூர் என்று அறியப்பட்டதாகவும் கருதுவர். சுருங்கக்கூறின், போர் மரபும் திராவிடக் கலாச்சாரமும் கைகோர்த்துச் செல்லும் நகரம் வேலூர் ஆகும்.

**வேலூர்க்கோட்டை**

வேலூர்க்கோட்டை 1606 லிருந்து 1672 வரை விஜய நகரப்பேரரசின் தலைநகரமாகத் திகழ்ந்தது. சின்ன பொம்பி நாயக் வேலூர்க் கோட்டையைக் கட்டியதாகக் கருதப்படுகிறது. கட்டுமானக் கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறப்படும் இக்கோட்டையில் பல மதில் காப்பான்களும், கோட்டையைச் சுற்றி அகலமாக அகழிகளும் இருந்தன. அகழிகளில் முதலைகள் விடப்பட்டிருந்தன. மிகுந்த பலமும் பாதுகாப்புமிக்க வேலூர்க்கோட்டையிலிருந்துதான் விஜய நகரப் பேரரசர்கள் ஒருகால கட்டத்தில் ஆட்சி புரிந்தனர். பின்னர் வேலூர்க்கோட்டை முறையே பீஜப்பூர் சுல்தான்கள், மராத்தியர், கர்நாடக நவாபுகள், ஆங்கிலேயர் ஆகியோருக்குச் சொந்தமாயிற்று. மைசூர் போர்களின் போது வேலூர் மாவட்டத்தில் ஆங்கிலேயருக்கும் பிரெஞ்சுக்காரர்களுக்குமிடையே ஆம்பூர் (1751), வந்தவாசி (1760)ப் போர்கள் நடைபெற்றன. அப்போது திப்பு சுல்தான் தன் குடும்பத்தினருடன் வேலூர்க்கோட்டைக்கு வந்து தங்குவதுண்டு. அவர் தங்கிய இடம் ‘திப்பு மகால்’ என்று அழைக்கப்படுகிறது.

வேலூர்க் கோட்டை 1768 இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் கட்டுப்பாட்டின்கீழ் வந்தது. 1806 வேலூர்க் கிளர்ச்சியின் போது இக்கோட்டையை 69வது படை வகுப்பணியின் ஒரு ஒரு பிரிவும், 19வது படை வகுப்பணியின் மற்றொரு பிரிவும் பாதுகாத்தனர். மொத்தம் 1500 சிப்பாய்களும், 370 ஆங்கிலப் படை வீரர்களும் இப்பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். வேலூர்க்கோட்டை தென்னிந்தியாவின் ராணுவக் கட்டமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கியது.

**சென்னை ராணுவம்**

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியின் ராணுவப் பிரிவு கம்பெனியின் வர்த்தக நலன்களையும், விரிவாக்கத்தையும் காப்பாற்றுவதற்காக உருவாக்கப்பட்டது. ராணுவத்தின் பிரதான பிரிவில் ஆங்கிலப்படை வீரர்களும், துணைப் பிரிவில் தமிழ் நாட்டு சிப்பாய்களும் இருந்தனர். சிப்பாய்கள் பயிற்சி பெறாத பாதுகாப்பாளர்கள். இவர்களுள் சிலர் மட்டுமே ஆயுதம் ஏந்தியவர்கள். 1746இல் பிரெஞ்சுப் படை சென்னையைத் தாக்கிக் கைப்பற்றிய பின்னர் ஆங்கிலேயர் இராணுவப்பிரிவைப் பயன்படுத்துவதில் தீவிர கவனம் செலுத்தினர். தமிழ்நாட்டில் பாரம்பரியம் போர்க்கலையில் திறமையுடையோர் பலர் சிப்பாய்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களுக்குத் தக்க பயிற்சி அளிக்கப்பட்டது. மதுரை முத்து நாயக்கர் போன்ற நிலச்சுவான்தார்கள் சிப்பாய்களுக்கு அதிகாரிகளாக இருந்தனர். இவர்களைக் கொண்டே வந்தவாசிப் போர் (1760) நிகழ்த்தப்பட்டது. ராபர்ட் கிளைவ் வங்காளம் சென்றபோது இவர்களுள் பலரை உடன் கொண்டு சென்றார். அவர் பிளாசிப்போரில் (1757) வெற்றி பெற தமிழ்நாட்டு சிப்பாய்கள் பெரிதும் காரணமாக இருந்தார்கள்.

வேலூர்க் கிளர்ச்சியின் போது கோட்டைக் காவல் படை பெரும்பாலும் தென்னிந்திய கிளர்ச்சிக்குப்பின் திருநெல்வேலியில் திரட்டப்பட்ட வீரர்களைக் கொண்டிருந்தது. இவர்கள் பெரும்பாலோர் தென்னிந்திய கிளர்ச்சி ஒடுக்கப்பட்டதால் பாதிக்கப்பட்டவர்கள். போராட்ட உணர்வு கொண்டோர் இப்படை வீரர்கள் வேலூர் கோட்டையில் இருந்த போது அங்கிருந்த திப்பு சுல்தானின் முன்னாள் ஆதரவுப்படை வீரர்களுடன் சேர்ந்து ஆங்கிலேயருக்கு எதிரான சதியில் ஈடுபட்டனர். இதன் மூலம் ஆங்கிலேயர் வேலூர்க் கோட்டைக்குள் ட்ரோஜன் குதிரையை நுழைய விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார் கே.ராஜய்யன்.

வேலூருக்கு வந்த சிப்பாய்களும், குடியேறிய தென்னிந்திய கிளர்ச்சிக்காரர்களும் மைசூரிலிருந்து வந்த சிப்பாய்களும் மற்றும் முன்னாள் போராட்டக்காரர்களும் சேர்ந்து வேலூர்க் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்புவின் மகன் பட்டேஜதருடன் சேர்ந்து ஆங்கில ஆதிக்கத்துக்கு எதிராக சதி செய்தனர். இவர்கள் ஆங்கிலேயர் கொண்டு வந்த புதிய ராணுவ கட்டுப்பாட்டு முறைகளைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு ஆங்கில ஆட்சியை அகற்றுவதற்கான திட்டத்தைத் தீட்டினர்.

**ராணுவக் கட்டுப்பாடுகள்**

சிப்பாய்கள் மிடுக்குடனும், துடிப்புடனும், ஒரே சீராகக் காணப்படுவதற்காகவும் சென்னை தளபதித் தலைவர் சர் ஜான் கிரடோக் சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் பிரபுவின் சம்மதத்தோடு சில நவீன மாற்றங்களைச் செய்தார். இவை ராணுவக் கட்டுப்பாடுகளாகக் கருதப்பட்டன. அவையாவன 1) சிப்பாய்கள் ஐரோப்பியப் படை வீரர்களைப் போன்று தலைப்பாகையை அணிய வேண்டும். 2) பணியில் இருக்கும்போது அவர்கள் சாதி, மதச் சின்னங்களாக நெற்றியில் திருநீறு அல்லது நாமம் போட்டுக்கொள்வதோ, காதணிகளை அணிவதோ கூடாது. 3)

முகத்தை நன்கு மழித்துக் கொள்ள வேண்டும். 4) மீசையை ஒரே சீராக நறுக்கி முறுக்கி விட வேண்டும். 5) ஒரே மாதிரியான காலுறையைப் பயன்படுத்த வேண்டும். 6) ஒரே வடிவிலான சின்னத்தைக் கொண்ட கழுத்துப்பட்டையை அணிய வேண்டும்.

**கிளர்ச்சிக்கான காரணங்கள்**

வேலூர்க் கிளர்ச்சிக்கான காரணங்களைப் பற்றி வரலாற்றாளர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்படவில்லை. ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பட்ட காரணங்கள் கூறப்படுகின்றன. எனவே, வேலூர்க் கிளர்ச்சி வெடித்ததற்கான பின்வரும் விளக்கங்களைக் கூறலாம்.

1) தென்னிந்திய கிளர்ச்சி தோற்கடிக்கப்பட்டபின் பல கிளர்ச்சிக்காரர்கள் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். எஞ்சித் தப்பிய பலர் கம்பெனி ராணுவத்தில் சேர்ந்தனர். பலர் வேலூரிலும், வேலூரைச் சுற்றியும் குடியேறினர். அவர்கள் அவ்வப்போது சந்தித்து ரகசியமாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொண்டு, மீண்டும் ஒரு கிளர்ச்சி செய்து ஆங்கிலேயர் ஆட்சியை அகற்ற முடிவு செய்தனர். கே. ராஜய்யன் இந்தக் காரணத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

2) மைசூர் முடியாட்சியை மீட்க வேண்டும் என்று திப்பு சுல்தானின் வாரிசுகள் முடிவு செய்து சதித்திட்டம் தீட்டினர். திப்பு இறந்த பின் அவரது 12 மகன்களும், 6 மகள்களும் வேலூர் சிறையில் வைக்கப்பட்டிருந்தனர். அவர்களுக்குப் பல சிறப்புச் சலுகைகள் அளிக்கப்பட்டிருந்தன. அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு திப்புவின் மூத்த மகன் பட்டே ஐதர் பிறரது துணையுடன் கிளர்ச்சி செய்யத் திட்டமிட்டார். அவரது ஆதரவுடன் கிட்டத்தட்ட 3000 கன்னடக் கிளர்ச்சிக்காரர்கள் வேலூரைச் சுற்றிக் குடியேறினர். முஸ்லீம் முடியாட்சியை மீட்பதே வேலூர்க் கிளர்ச்சியின் முக்கிய நோக்கமாக இருந்தது என்பதை வலியுறுத்தினர் கம்பெனி படைத்தளபதி ஜே.எப்.சிரடோக்.

3. சமகால மக்கள், அவர்களது பழக்கவழக்கங்களைப் பற்றி நன்கு அறிந்த சர்.தாமஸ் மன்றோ ‘குல்லாய் பற்றிய மனக்குறை’ தான் வேலூர்க் கிளர்ச்சிக்கான ஒரே காரணம் என்று கூறினர். துணைத் தளபதி அக்னியூ வடிவமைத்து அறிமுகப்படுத்தியதால் இக்குல்லாய் ‘அக்னியூ குல்லாய்’ என்று அழைக்கப்பட்டது. சிப்பாய்கள் இக்குல்லாயை அணிவதை அவமரியாதையாகக் கருதினார். அக்குல்லாயை அணிந்த சிப்பாய்கள் மக்களின் கேலிக்கும், கிண்டலுக்கும் உள்ளாயினர். இதனால் சிப்பாய்களிடையே மாறா மனக்கசப்பு ஏற்பட்டது. இம்மனக்கசப்பின் வெளிப்பாடே வேலூர்க் கிளர்ச்சி.

4. ஆங்கிலேயரது ஆக்கிரமிப்புக் கொள்கையால் தன்னுடைய சுதந்திரத்தை இழந்த ஐதராபாத் நிஜாம் மீண்டும் தனது ஆட்சி நிலையை நாட்ட நாட்டம் கொண்டிருந்தார். ஐதராபாத், சிக்தாகோல் மக்களும் நிஜாமுக்கு ஆதரவாகப் போராடத்தயாராக இருந்தனர். வேலூரிலிருந்த கிளர்ச்சிக்காரர்கள் ஐதராபாத் கிளர்ச்சிக்காரர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர். வேலூர்க் கிளர்ச்சி

துவக்கப்பட்டவுடன் ஐதராபாத் நிஜாம் அச்சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு கிளர்ச்சி செய்து ஆட்சியை மீட்க முன்வந்தார்.

5) கம்பெனிப் படையில் சிப்பாய்களுக்கு ராணுவக் கட்டுப்பாடுகள், விதிமுறைகள், புதிய பழக்கவழக்கங்கள் ஆகிய அனைத்தும் புதுமையாயிருந்தன. அவற்றுக்கேற்பத் தங்களை மாற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. அதுமட்டுமல்ல, அவர்கள் ஆங்கிலப்படைவீரர்களுக்கு சமமாக நடத்தப்படவில்லை. இருசாராருக்குமிடையே ஊதிய மற்றும் சலுகை வேறுபாடுகள் அதிகமாக இருந்தன. சிப்பாய்கள் குடும்பத்தினருடன் வசிக்க ஆங்கில அதிகாரிகளின் அனுமதி பெற வேண்டியிருந்தது. மேலும் சிப்பாய்கள் ஆங்கில அதிகாரிகளுக்கு குற்றேவல் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டனர். 'கருப்பு கமாண்டர்கள்' என்ற உயர் பதவிகள் சிப்பாய்களுக்கு மறுக்கப்பட்டன. இவற்றால் ஏமாற்றமும், ஆத்திரமும் அடைந்த சிப்பாய்கள் கிளர்ச்சி செய்யத் துடித்துக்கொண்டிருந்தனர்.

6) யாவற்றுக்கும் மேலாக 1805-1806 ஆண்டு ஆங்கிலக் கம்பெனி அறிமுகப்படுத்திய 'ராணுவக் கட்டுப்பாடுகள்' கிளர்ச்சிக்காரர்களுக்குத் தேவையான வாய்ப்பைக் கொடுத்தன. இச்சீர்திருத்தங்கள் பழைமைப் பழக்கவழக்கங்களில் ஊறிப்போன சிப்பாய்களுக்கு ஆத்திரமூட்டக்கூடிய கால் விலங்குகளாகக் காட்சியளித்தன. குறிப்பாக சாதிச் சின்னங்களை அகற்ற வேண்டும் என்பதால் இந்த சிப்பாய்களும், தாடிவைத்துக்கொள்ளக்கூடாது என்பதால் முஸ்லீம்களும், பிற கட்டுப்பாடுகளால் அனைத்து சிப்பாய்களும் அதிருப்தி அடைந்திருந்தனர். அவர்களுக்குக் கிளர்ச்சிக் களம் தயாராக இருந்தது.

**கிளர்ச்சியின் போக்கு**

**கிளர்ச்சிப் பிரச்சாரம்**

வேலூர் கிளர்ச்சி வெடிப்பதற்கு சில மாதங்களுக்கு முன் மைசூரிலிருந்து வந்த பக்கிரிகள் நகரின் தெருக்களிலும், கடை வீதிகளிலும் சுதந்திரமாகச் சுற்றித்திரிந்தனர். இவர்கள் மராத்தியப்படைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தவர்கள். இப்பக்கிரிகள் ஆங்கிலேயருக்கு எதிராகப் பிரச்சாரம் செய்தனர். எதிர்ப்பு முழக்கங்களை எழுப்பினர். பக்கிரிகள் பிரச்சாரத்தின் மூலமாக மக்களைத் தூண்டிவிட்டனர். இவர்கள் உள் உளவாளிகளாகச் செயல்பட்டனர்.

**பொம்மலாட்டப்பிரச்சாரம்**

திப்பு சுல்தானோடு நெருங்கிப் பழகிய அப்துல்லாகான், பீர்சாடா போன்றோரின் தலைமையில் வேலூரில் பொம்மலாட்ட நிகழ்ச்சிகளை நடத்தினர். இந்நிகழ்ச்சிகளில் பொம்மலாட்டக்காரர்கள் ஆங்கிலேயரை வசைப்பாடல்கள் மூலம் தாக்கினர். விரைவிலேயே அவர்களுடைய ஆட்சி அழியப் போகிறது. என்று ஆரூடம் கூறினர். முஸ்லீம்களைக் கிறித்துவ மதத்துக்கு மாற்றப் போவதாகப் பிரச்சாரம் செய்தனர். பொம்மலாட்டக்காரர்களின் பிரச்சாரத்தால் முஸ்லீம்கள் ஆத்திரமடைந்தனர்.

## பொதுமக்களின் பரிகாசம்

1806 ஜீன் 9ஆம் தேதியிலிருந்து 14வது படைப்பிரிவின் 40 சிப்பாய்கள் எவ்வித எதிர்ப்புமின்றி ‘அக்னியூ குல்லாய்’களை அணிந்து கொண்டு படை அணிவகுப்பில் கலந்து கொண்டனர். இதைப் பார்த்த பொது மக்களில் பலர் அவர்களைக் கேலி செய்தனர். அசிங்கமான வார்த்தைகளால் திட்டினர். எள்ளி நகைத்து ஏளனம் செய்தனர். பொது மக்களின் இந்த ஏளனத்தைக் கேட்டு கூனிக்குறுகியப் போன பல சிப்பாய்கள் தலைப்பாகையைக் கழற்றி எறிந்தனர். இதைக் கண்ட அதிகாரிகள் கேலி செய்த கும்பலைக் கலைத்தனர்.

## சவுக்கடி தண்டனை

மாயா குப்தா லண்டனில் உள்ள இந்திய அலுவலக நூலகத்தில் வேலூர் கிளர்ச்சி பற்றிய ஆவணங்களை ஆய்வு செய்து சில அரிய தகவல்களைத் திரட்டினார். அவரது கூற்றுப்படி 1806 மே 6ஆம் தேதி நான்காவது ரெஜிமெண்டின் இரண்டாவது படைப்பிரிவைச் சேர்ந்த 29 சிப்பாய்கள் புதிய குல்லாய்களை அணிய மறுத்துவிட்டனர். அதற்கு பதில் அவர்கள் நெற்றியைச் சுற்றி கைக்குட்டையைக் கட்டிக் கொண்டு அதிகாரிகள் உத்தரவுக்குக் கீழ்ப்பணிய மறுத்துவிட்டனர். கீழ்ப்பணியாதது மட்டுமல்லாது அவர்கள் ஆங்கில அதிகாரிகள் ‘நாய்கள்’ என்று திட்டினர். கீழ்ப்பணிய மறுத்த சிப்பாய்கள் படைதுறை முறை மன்றத்தைக் கொண்டு விசாரணை செய்யப்பட்டனர். விசாரணையின் போது மன்னிப்பு கேட்டோர் தண்டனையிலிருந்து தப்பினர். கடைசி வரை மன்னிப்பு கேட்க மறுத்துவிட்ட ஒரு இந்துவும் ஒரு முஸ்லீமும் தலா 900 சவுக்கடி தண்டனை பெற்றனர். இச்செய்தி அறிந்த சிப்பாய்கள் மேலும் ஆத்திரமடைந்தனர். இந்நிகழ்ச்சி நடைபெற்ற அடுத்த மாதமே வேலூருக்கு அருகே வாலாஜாவில் தலைப்பாகை எதிர்ப்புப் போராட்டம் எழுந்தது.

## தெளிவான திட்டம்

வேலூர் சிறையில் இருந்த திப்பு சுல்தானின் மைந்தர்களின் வழிகாட்டுதலின் பேரில் கிளர்ச்சிக்காரர்களும், சிப்பாய்களும் கிளர்ச்சி பற்றித் திட்டமிட்டனர். இத்திட்டமிடப்பட்ட சதியின் போது ஆட்சி எதிர்ப்பாளர்களை ஒன்று சேர்ப்பது என்றும், மைசூர், ஆர்க்காடு, ஐதராபாத் போன்ற பகுதிகளில் மன்னராட்சியை மீட்பது என்றும் பலதரப்பு மக்களிடமிருந்தும் ஆதரவு கோருவது என்றும், 1806 ஜீலை 13ஆம் தேதி அதிகாலை வேலூர் கோட்டையைக் கைப்பற்றுவது என்றும் அதைத் தொடர்ந்து மைசூரிலும், ஐதராபாத்திலும் கிளர்ச்சியை விரிவுபடுத்துவது என்றும் திட்டமிட்டனர்.

## திட்டத்துக்கு ஆதரவு

கிளர்ச்சித் திட்டத்துக்கு பள்ளிகொண்டா மக்களும், வாலாஜாபாத்திலும், சித்தூரில் இருந்த சிப்பாய்களும் ஆதரவளித்தனர். பொது எதிரியான ஆங்கிலேயரை எதிர்த்துக்கிளர்ச்சி செய்வது பற்றி வேலூரில் இருந்த கிளர்ச்சிக்காரர்கள் ஆர்க்காட்டு மக்களோடு ஒரு உடன்பாட்டுக்கு வந்தனர். கிளர்ச்சி துவங்கப்பட்டவுடன்

மைசூரிலிருந்து போராளிகள் வேலூருக்கு வந்து சேர்வதென்று முடிவுசெய்யப்பட்டது. கர்நாடகம், ஆந்திரா, தமிழ்நாடு போராட்டக்காரர்களையும், சிப்பாய்களையும் ஒருங்கிணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. இரகசிய கூட்டங்கள் நடைபெற்றன. ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பதற்கான சூளுரைகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. கம்பெனியின் ஆதரவாளரான ஆர்க்காடு நவாபுக்கு கிளர்ச்சித்திட்டம் தெரிந்திருந்தும் அவர் ஆங்கில அதிகாரிகளுக்குத் தெரிவிக்கவில்லை. அதேபோன்று சிப்பாய்களின் ஆத்திரத்தை நேரில் கண்டறிந்த தளபதி தலைவர் ஜான் கிரேடோக் புதிய ராணுவ உத்தரவுகளை உடனடியாக விலக்கிக் கொள்ளுமாறு சென்னை ஆளுநர் பெண்டிங்கைக் கேட்டுக்கொண்டார். ஆனால் ஆளுநர் அப்பரிந்துரைக்கு செவிசாய்க்கவில்லை. கம்பெனியின் அலட்சியப் போக்கு கிளர்ச்சிக்காரர்களுக்கான ஆதரவு மேலும் அதிகரிக்க உதவியது.

**திட்டமிடாத் தாக்குதல்**

1806 ஜீலை மாதம் 13ஆம் தேதி வேலூர்க் கோட்டைக்குள் இருந்த துணைப்படை சிப்பாய்கள் கிளர்ச்சி செய்து, வேலூரைக் கைப்பற்றி, கருவூலத்தைச் சூறையாடி, ஆங்கிலப்படையை வீழ்த்தி, திப்புவின் மகன் பட்டே ஐதரை மைசூர் மன்னராக அறிவித்து, ஐதராபாத் நிஜாமின் ஆட்சியை மீட்பதென்றும் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் இத்திட்டத்துக்கு மாறாக ஜீலை 9ஆம் தேதியன்று கணிசமான குதிரைப் படை வீரர்கள் தங்களது பணியாளர்களுடன் வேலூர் வீதிகளில் காணப்பட்டனர். பொறுமை இழந்த ஒரு ‘குடிகார ஜமீன்தார்’ ஜீலை 10ஆம் தேதியே கிளர்ச்சியைத் துவக்கிவிட்டார். இத்திட்டமிடாத் தாக்குதல் வேலூர்க் கிளர்ச்சியின் போக்கையே மாற்றிவிட்டது.

**கோட்டை கைப்பற்றப்படல்**

இத்திட்டமிடாத் திடீர்க் கிளர்ச்சியின் போது வேலூர்க் கோட்டைக்குள்ளிருந்த கிளர்ச்சிக்கார துணைப்படை சிப்பாய்கள் கோட்டையைக் கைப்பற்றி, அங்கிருந்த ஆங்கில அதிகாரிகளையும், ஆங்கிலப்படை வீரர்களையும் சரமாரியாகச் சுட்டுக் கொன்றனர். அதன்பின் ஆங்கிலேயர் குடியிருப்புப் பகுதியை நோக்கிச் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் தளபதி கர்னல் பென்கோர்ட் கொல்லப்பட்டார். அவரன்றி ராணுவ அதிகாரிகளான மைக்காரகம், மேஜர் ஆம்ஸ்ட்ராங்கும் சுட்டுக்கொல்லப்பட்டனர். இவர்களன்றி ராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த ஆங்கில நோயாளிகளும் சுட்டுக் கொல்லப்பட்டனர். சம்பளம் பட்டுவாடா செய்யும் அலுவலகம் சூறையாடப்பட்டது. கோட்டையின் பிரதான நுழைவாயிலில் இருந்த பல ஆங்கிலப்படை வீரர்களைக் கொன்று குவித்தனர். வெடிமருந்தும் கிடங்கு காவலரும் சுட்டுக்கொல்லப்பட்டார். அங்கிருந்த போர்த்தளவாடங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட கோட்டையில் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் தேசியக் கொடி இறக்கப்பட்டு அதற்குப் பதில் சிகப்புப் பின்னணியில் பச்சைக் கோடுகள் போடப்பட்டு, மத்தியில் சூரியன் வடிவம்

பொறிக்கப்பட்ட திப்பு சுல்தானது கொடி ஏற்றப்பட்டது. திப்புவின் மகன் பட்டே ஐதர் மைசூர் மன்னர் என்று அறிவிக்கப்பட்டார்.

**கிளர்ச்சி ஒடுக்கப்படல்**

கிளர்ச்சி பற்றிய தகவல் அறிந்த கர்னல் கில்லெஸ்பி வலிமைமிக்க மீட்புப் படையுடன் ஆர்க்காட்டிலிருந்து வேலூருக்கு விரைந்துவந்தனர். அவருடன் சென்னையிலிருந்து வந்த குதிரைப் படையும் சேர்ந்து கொண்டது. கில்லெஸ்பியின் தலைமையிலான மீட்புப் படை எதிர்த்தாக்குதல் நடத்தி கோட்டைக்குள் நுழைந்தார். அங்கு 69 படைப்பிரிவைச் சேர்ந்த படையினரும், சில இராணுவ துணை மருத்துவர்களும் கோட்டையைப் பாதுகாக்கும் முயற்சியில் போராடிக் கொண்டிருந்தனர். அவர்களைக் காப்பாற்றியபின் மீட்புப்படை கோட்டைக்குள் இருந்த கிளர்ச்சி சிப்பாய்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அரண்மனைக்குள் அடைக்கலம் தேடிச் சென்ற சிப்பாய்கள் இழுத்துவரப்பட்டு, சுவற்றோடு சுவராக நிறுத்தப்பட்டு சுட்டுக்கொல்லப்பட்டனர். இத்தாக்குதலில் நூற்றுக்கு மேற்பட்ட ஆங்கிலேயர் உயிரிழந்தனர், 350 லிருந்து 800 சிப்பாய்கள் கொல்லப்பட்டனர். அதே எண்ணிக்கையில் சிப்பாய்கள் படுகாயம் அடைந்தனர். 500க்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். ஆங்கிலேயர் அடக்குமுறையால் வஞ்சம் தீர்த்துக் கொண்டனர். வன்முறைக் கிளர்ச்சி வன்முறையால் வீழ்த்தப்பட்டது.

**தோல்விக்கான காரணங்கள்**

வேலூர்க் கிளர்ச்சியின் தோல்விக்கான காரணங்கள் பல. அவற்றுள் முக்கியமானவை வருமாறு. 1) கிளர்ச்சிக்கான பொதுக்குறிக்கோள் எதுவுமில்லை. இழந்த முடியாட்சியை மீட்பதைத் தவிர வேறு இலட்சியம் இல்லை. 2) கிளர்ச்சி தொலைநோக்குடன் தீர்க்கமாகக் கணிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு, வழிநடத்தப்படவில்லை. 3) கிளர்ச்சிக்காரர்களுக்குத் தலைமை தாங்க மருது பாண்டியன் போன்ற மாவீரன் ராஜதந்திரி கிடைக்கவில்லை. சிறைபட்டிருந்த பட்டே ஐதரால் தக்க தலைமையைக் கொடுக்க முடியவில்லை. சிறைப்பட்டிருந்த பட்டே ஐதரால் தக்க தலைமையைக் கொடுக்க முடியவில்லை. 4) கிளர்ச்சி குறிப்பிட்ட தேதிக்கு முன்னதாகவே துவக்கப்பட்டுவிட்டது. வேலூர்க் கோட்டை கைப்பற்றப்பட்ட பின்னர் கிளர்ச்சி திசை மாறிச் சென்றுவிட்டது. சிப்பாய்களின் கவனம் பொருட்களைச் சூறையாடுவதில் சென்றுவிட்டது. இக்கொள்ளையில் ஊர் மக்கள் சிலரும் பங்கேற்றனர். 5) கிளர்ச்சிக்கு மக்கள் செல்வாக்கில்லை. அக்னு குல்லாய் அணிந்த சிப்பாய்களைக் கேலி செய்த கூட்டத்தைத் தவிர மக்கள் இக்கிளர்ச்சியில் பங்கேற்கவில்லை. அதேபோன்று, பல சிப்பாய்களும் இக்கலகத்தில் கலந்து கொள்ளவில்லை. 6) யாவற்றுக்கும் மேலாக கில்லெஸ்பியின் கொடூரத் தாக்குதலை கிளர்ச்சிக்கார சிப்பாய்களால் சமாளிக்க முடியவில்லை. சிப்பாய்கள் துப்பாக்கிகளைத் தாறுமாறாகப் பயன்படுத்தியதால் அவர்களிடமிருந்த வெடிமருந்தும்,

படைத்தளவாடமும் தீர்ந்து போயின. கில்லெஸ்பிக்கு வலுவிழந்த போராளிகளை வெற்றி கொள்வது எளிதாயிற்று. தோல்வியுற்ற சிப்பாய்கள் சரணடைந்தனர்.

**கிளர்ச்சியின் தன்மை**

வேலூர்க் கிளர்ச்சியின் தன்மை பற்றிப் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. 1) சென்னை ஆளுநராக இருந்த வில்லியம் பெண்டிங் விசாரணை நடத்தியபின் தலைக்கு குல்லாய் அணிவதற்கு எதிராக இந்து சமயத்திலோ அல்லது இஸ்லாமிய சமயத்திலோ எவ்வித ஆதாரமும் இல்லை என்ற முடிவுக்கு வந்தார். 2) ஹார்கோர்ட், கில்லெஸ்பி, கென்னடி ஆகியோரைக் கொண்ட மூவர் ஆய்வுக்குழு வேலூரில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் மைந்தர்களும், அவர்களது ஆதரவாளர்களும்தான் கிளர்ச்சியைத் தூண்டிவிட்டார்கள் என்று கூறியது. 3) மேஜர் ஜெனரல் பேட்டர் தலைமையிலான சிறப்பு விசாரணைக் குழு புதிதாகப் புகுத்தப்பட்ட ராணுவச் சீர்திருத்தங்களும் திப்பு குடும்பத்தாரின் செல்வாக்குமே ஆங்கிலேயருக்கு எதிரான சதியைத் தோற்றுவித்தது என்ற முடிவுக்கு வந்தது. 5) முகலாய ஆட்சியை மீட்பதே வேலூர்க் கிளர்ச்சிக்கான உந்து சக்தியாக இருந்ததாகக் கூறினார் கே.எப். கிரடோக். மதமாற்ற பயத்தால் தான் சிப்பாய்கள் கிளர்ச்சி செய்ததாகக் கருத்து தெரிவித்தார். சர். தாமஸ்மன்றோ. இந்து – முஸ்லீம்களின் மத உணர்ச்சி புண்பட்டதால் தான் சிப்பாய்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள் என்பது வில்லியம் பெண்டிங் பிரவின் கணிப்பு. 6) பல்வேறு கருத்துக்களையும் பரிசீலனை செய்த இயக்குநர்கள் மன்றம் புதிய இராணுவக் கட்டுப்பாடுகளால் சிப்பாய்கள் அதிருப்தி அடைந்தனர். அதை வேலூர் சிறையில் இருந்த திப்பு சுல்தானின் புதல்வர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்ற முடிவுக்கு வந்தது.

**விளைவுகள்**

வேலூர்க் கிளர்ச்சியின் விளைவாகப் பல உடனடி மாற்றங்கள் செய்யப்பட்டன. 1) சென்னை ஆளுநர் வில்லியம் பெண்டிங் பிரபுவும், சென்னை தளபதி சர்.ஜான்கீட்டோக்கும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர். 2) புதிதாகப் புகுத்தப்பட்ட ‘இராணுவக் கட்டுப்பாடுகள்’ விலக்கிக் கொள்ளப்பட்டன. 3) வேலூர் கோட்டையில் சிறை வைக்கப்பட்டிருந்த திப்பு சுல்தானின் குடும்பத்தினர் வங்காளத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். 4) புதிதாக சென்னை ஆளுநர் பொறுப்பேற்ற சர் ஜார்ஜ் பார்லோ மக்களின் சாதி-சமய உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயல்பட்டார். சமயப்பரப்பாளர்களின் நடவடிக்கைகளை நெறிப்படுத்தினார். 5) கம்பெனி அதிகாரிகள் மத சம்மந்தமான நடவடிக்கைகளில் அக்கறை காட்டுவது கணிசமாகக் குறைந்தது. 6) கிளர்ச்சி தோற்றாலும் இதன் பாதிப்பு தென்னகத்தின் பல பகுதிகளில் பிரதிபலித்தது. ஐதராபாத், பெங்களூர், வாலாஜாபாத், காரைக்கால் போன்ற இடங்களில் கலகங்கள் தோன்றி உடனடியாக அடக்கப்பட்டன. கம்பெனி ராணுவத்தில் சிப்பாய்களின் எண்ணிக்கையைக் குறைத்து ஆங்கிலப்போர் வீரர்களின் எண்ணிக்கையை அதிகரித்து ராணுவ அமைப்பை மறுசீரமைத்தனர். இதன் மூலம் கம்பெனியின் கட்டுப்பாடு அதிகரிக்கப்பட்டு வலுவாக்கப்பட்டது. கிளர்ச்சியின் போது

கோட்டையைக் காப்பாற்றப்போராடிய 69வது ரெஜிமெண்டாருக்கு நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டது.

**மதிப்பீடு**

வேலூர்க் கிளர்ச்சி ஒரு நாள் நிகழ்ச்சி. வேலூர்க் கோட்டைக்குள் 1806 ஜீலை 10 ஆம் தேதி நள்ளிரவுக்குப்பின் துவக்கப்பட்ட இக்கிளர்ச்சி மறுநாள் நண்பகலுக்குள் முறியடிக்கப்பட்டது. முதல் முறையாக ஆவணப்படுத்தப்பட்ட ஆங்கிலேயருக்கு எதிரான நிகழ்ச்சி வேலூர்க் கிளர்ச்சிதான் என்பது குறிப்பிடத்தக்கது. வேலூர்க் கிளர்ச்சி கம்பெனி ஆட்சிக்கு எதிரான சிப்பாய்க் கலகமே என்கிறார். பேராசிரியர் ஜோசப்திவியன். இந்தக் கிளர்ச்சி 1857 கிளர்ச்சிக்கான ஒத்திகை என்று எழுதியுள்ளார் வி.டி. சவார்க்கர். தென்னிந்தியக் கிளர்ச்சியால் ஊக்குவிக்கப்பட்ட கிளர்ச்சிக்காரர்கள் மேற்கொண்ட இறுதி விடுதலைப் போராட்ட முயற்சியே வேலூர்க் கிளர்ச்சி என்பது கே. ராஜய்யனின் வாதம். வேலூர் நிகழ்ச்சி தேசியம் சார்ந்த எழுச்சி என்று கருதுகிறார். மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேராசிரியர் கே.ஏ. மணிக்குமார். வட இந்திய வரலாற்றாளர்கள் வேலூர்க் கிளர்ச்சியை வெறும் சிப்பாய்க் கலகம் என்று கருதி ஒதுக்கிவிட்டதாக வருத்தம் தெரிவித்துள்ளார் ஏ.ஆர் வெங்கடாசலபதி.

மக்கள் பங்கேற்காத வேலூர்க் கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் எனக் கருதுவது பொருந்தாக் கூற்றாகும். பூலித்தேவன், வீரபாண்டிய கட்டபொம்மன், ஊமைத்துரை, மருதுபாண்டியர்கள் துவக்கிய ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சிகளின் இயல்பான வளர்ச்சியே வேலூர்க் கிளர்ச்சியாகும். இக்கிளர்ச்சி பல வகையிலும் 1857 கிளர்ச்சிக்கான முன்னோடியாகும். வேலூர்க் கிளர்ச்சியை சாதாரண சிப்பாய்க் கலகம், விளைவுகளற்ற வீழ்ச்சி, கோப்பையில் எழுந்த கொந்தளிப்பு எனக் கூறுவது அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து மதிப்பிடுவதாகும்.

**முதல் விடுதலைப்போராட்டமா?**

தமிழ் நாட்டு வேலூர்க் கிளர்ச்சியை வட நாட்டுக் கிளர்ச்சியோடு ஒப்பிட்டுப் பார்ப்பது வழக்கமாகிவிட்டது. அதற்குக் காரணம் இரு கிளர்ச்சிகளையும் சிப்பாய்கள் முன்னின்று நடத்தியதேயாகும். காரல் மார்க்ஸ் நியூயார்க் டிரிபூன் பத்திரிகையில் முதன் முறையாக 1857 கிளர்ச்சியை முதல் இந்திய விடுதலைப்போராட்டம் என்று குறிப்பிட்டார். பின்னர் 1909இல் வி.டி. சவார்க்கர், இந்திய விடுதலைப் போராட்ட வரலாறு என்ற நூலை மராத்திமொழியில் எழுதினார். அவருக்குப் பின் கே. ராஜய்யன் தென்னிந்திய கிளர்ச்சியை முதல் விடுதலைப்போராட்டம் என்று வாதிட்டார். வேலூர்க் கிளர்ச்சியை முதல் விடுதலைப் போராட்டம் என்று கருதுவோரும் உண்டு. பஞ்சாபியர் முதல் சீக்கியப்போரை முதல் விடுதலைப்போர் என்று வாதிட்டனர்.

1857 கிளர்ச்சியை முதல் விடுதலைப்போர் என்று குறிப்பிடுவதை எதிர்த்து சில தென்னிந்திய வரலாற்றாளர்கள் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தனர். 2007இல்

இந்திய அரசு 1857 கிளர்ச்சியின் 150வது நினைவு விழாவைக் கொண்டாடியது. 2006-இல் மத்திய அரசு வேலூர் கிளர்ச்சியின் நினைவு அஞ்சல் முத்திரையை வெளியிட்ட போது தமிழ் நாட்டு அரசாங்கம் வேலூர் கிளர்ச்சிதான் முதல் விடுதலைப்போராட்டம் என்பது அங்கீகரிக்கப்பட்டதாக அறிவித்தது. தேசிய உணர்வின்றி, மக்களின் பிரதான பங்கின்றி மேற்கொள்ளப்பட்ட 1806 வேலூர்க் கிளர்ச்சியையும், 1857 கிளர்ச்சியையும் முதல் இந்திய விடுதலைப்போராட்டம் என்று வர்ணிப்பது வரலாற்றுத் திரிபு ஆகும்.

## தமிழ் நாட்டில் கம்பெனியின் ஆட்சி, 1750 – 1850

### கம்பெனியின் வளர்ச்சி

1600 டிசம்பர் 31ஆம் தேதி பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி துவக்கப்பட்டது. அதன் பின் பிரான்சி டே சென்னை மீனர் குப்பத்தை வாங்கி (1639) அங்கு பின்னர் புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டதிலிருந்து (1641) ஆங்கிலேயர் தமிழ்நாட்டில் நிலை கெண்டனர். 17-ஆம் நூற்றாண்டில் காலூன்றிய ஆங்கிலேயர் 18-ஆம் நூற்றாண்டில் தங்கள் ஆதிக்கத்தைத் தமிழ் நாட்டில் விரிவுபடுத்தி, 19-ஆம் நூற்றாண்டுத் துவக்கத்தில் தமிழ் நாட்டுக்குச் சொந்தக்காரர்கள் ஆகிவிட்டனர். தமிழ்நாட்டு ஆட்சியாளர்களிடையே நிலவிய உட்பகையும், போட்டி பொறாமையும், பேராசையும் ஆங்கிலேயர் தமிழ் நாட்டை அபகரித்துக் கொள்வதற்கான வாய்ப்பைக் கொடுத்தது. வாய்ப்பை பயன்படுத்திக் கொண்ட ஆங்கில வர்த்தகக் கம்பெனி தமிழ் நாட்டின் ஆட்சி அமைப்பாயிற்று.

### நகர் மன்றம்

18ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் கம்பெனி சென்னை, கல்கத்தா, பம்பாய் ராஜதானிகளை ஏற்படுத்தியபோது, இவை நகர் மன்றங்களால் நிர்வகிக்கப்பட்டன. ஆங்கில வர்த்தகர்களை உறுப்பினர்களாகக் கொண்ட இம்மன்றங்கள் சுதந்திரமாகச் செயல்பட்டன. மன்ற உறுப்பினர்கள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி கட்டுப்பாடற்ற ஊழலில் ஈடுபட்டதால் இம்மன்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டு, பின்னர் கலைக்கப்பட்டன.

### சென்னை ராஜதானி

சென்னை ராஜதானி புனித ஜார்ஜ் கோட்டை என்றும் அழைக்கப்பட்டது. அன்றைய சென்னை ராஜதானி கிட்டத்தட்ட இன்றைய தென்னிந்தியாவை உள்ளடக்கி இருந்தது. அது தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் பேசிய கலப்பட மாநிலமாக, பலவகை மலர்களைக் கொண்ட பூங்கொத்தாகக் திகழ்ந்தது. இந்த ஒருங்கிணைந்த ராஜதானி ஆங்கில ஆளுநரால் ஆட்சி செய்யப்பட்டது. வில்லியம் பெண்டிங் பிரபு சென்னையின் ஆளுநர் பொறுப்பேற்றார்.

**மாநில நிர்வாகம்**

**ஆளுநர்**

ஆளுநர் சென்னை ராஜதானியின் ஆட்சித்தலைவர். இவர் ராஜதானி சம்மந்தப்பட்ட அனைத்து அதிகாரங்களையும் பெற்றிருந்தார். எனவே, இவர் சுதந்திரமாகவும், தன்னிச்சையாகவும் செயல்பட்டார். ஆளுநருக்கு ஆலோசனை கூற ஒரு அவை இருந்தது. இந்த அமைப்பு ஆளுநர் அவை என்று அழைக்கப்பட்டது. துவக்கத்தில் இந்த அவையில் ஆங்கிலேயர் மட்டுமே உறுப்பினர்களாக இருந்தனர். இதன் மூலம் சட்டமியற்றும் அதிகாரமும், சட்டத்தைச் செயல்படுத்தும் அதிகாரமும் ஆளுநரிடம் குவிக்கப்பட்டிருந்தது. 1773-இல் பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்ட ஒழுங்குமுறை சட்டத்தின் மூலம் மாநில ஆளுநர் வங்காளத்திலிருந்து செயல்பட்ட ஆளுநர் அதிபரின் அதிகாரக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டார். 1833-இல் கொண்டு வரப்பட்ட பட்டயச் சட்டம் ஆளுநரின் சட்டமியற்றும் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டது. பின்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டங்கள் (1861, 1909, 1919, 1935) படிப்படியாக ஆளுநரின் அதிகாரங்களை சட்டமன்றத்திடம் ஒப்படைத்தன. ஆளுநர் அவை தனிப்பெரும் அதிகாரத்தைக் கொண்ட சட்டமன்றமாயிற்று. அதுவரை ஆளுநரும் அவரது அவையினரும் மாநில நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டனர்.

**தலைமைச் செயலகம்**

**துவக்கம்**

புனித ஜார்ஜ் கோட்டையைத் தலைமையகமாகக் கொண்டு சென்னை ராஜதானி உருவாக்கப்பட்டது. அதன் தலைமைச் செயலகம் புனித ஜார்ஜ் கோட்டையில் 1670-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. முதலில் பொதுத்துறை துவக்கப்பட்டது. சென்னை ராஜதானியின் தலைமைச் செயலகம் என்று அழைக்கப்பட்ட இத்துறை அரசாங்கத்தின் அனைத்து விவகாரங்களையும் கவனித்துக் கொண்டது. போர்கள் மற்றும் கூட்டமைப்புகள் மூலம் கம்பெனியின் நிலப்பரப்பு வெகுவாக விரிவடைந்தவுடன் புதிய துறைகள் உருவாக்கப்பட்டன. 1752-இல் ராணுவத்துறையும், 1774-இல் வருவாய்த்துறையும் துவக்கப்பட்டன. வருவாய் துறை ஆரம்பிக்கப்பட்டபின் இரு செயலர் முறை நடைமுறைக்கு வந்தது. ஒரு செயலர் அரசியல், ராணுவ மற்றும் செயலக விவகாரங்களையும், மற்றொருவர் பொது மற்றும் வருவாய்த் துறைகளைக் கவனித்துக் கொண்டார்.

**நான்கு மாற்றங்கள்**

1786-ஆம் ஆண்டு தலைமைச் செயலகம் சீரமைக்கப்பட்டு நான்கு மன்றங்கள் உருவாக்கப்பட்டன. 1) வருவாய் மன்றம், 2) வர்த்தக மன்றம், 3) ராணுவ மன்றம், 4) மருத்துவ மற்றும் வணிகக் கடற்கடை, இம்மன்றங்களுக்கு உதவி செய்யத் துணைமன்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. 1769-இல் அரசாங்க இரகசியங்களைக் காப்பாற்ற இரகசிய துறை உருவாக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து 1798-இல்

நீதித்துறை துவக்கப்பட்டது. 1800-இல் தலைமைச் செயலகத்தில் மாபெரும் மாற்றம் செய்யப்பட்டது. ஒரு தலைமைச் செயலர் பதவியும், 3) செயலர்கள் பதவியும் புதிதாக உருவாக்கப்பட்டன. இவற்றோடு அரசியல்துறை அமைக்கப்பட்டது.

**புதிய துறைகள்**

1811க்கும் 1818க்கும் இடைப்பட்ட காலத்தில் 5 புதிய துறைகள் சேர்க்கப்பட்டன. 1) நிதி (1811), 2) வர்த்தகம் (1815), 3) சட்டம் (1815), 4) வெளிவிவகாரம் (1816), 5) கோயில்கள் (1831)இல் துறைகளை மாற்றாமல் தலைமைச் செயலகம் மாற்றி அமைக்கப்பட்டது. 1838-1853க்குள் 3 புதிய துறைகள் உருவாக்கப்பட்டன. 1) கடல் வாணிபம் (1838), 2) பொதுப்பணி (1843), 3) ரயில்வே (1853) நிர்வாக வசதி கருதி 1855இல் தலைமைச் செயலகம் மறுசீரமைக்கப்பட்டது. இந்த திருத்தி அமைக்கப்பட்ட தலைமைச் செயலகம் 1855 லிருந்து 1857-இல் கம்பெனி ஆட்சிக்குப்பதில் பிரிட்டிஷ் ஆட்சி நடைமுறைக்கு வந்தவரை நீடித்தது.

**மாவட்ட நிர்வாகம் : ஆட்சியர்**

சென்னை ராஜதானி பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒரு ஆட்சியர் பொறுப்பாக்கப்பட்டார். மாவட்ட ஆட்சியர் பதவி பிரிட்டிஷார் விட்டுச் சென்ற நிலையான நன்கொடைகளில் ஒன்றாகும். 1773-இல் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி நிலவரி நிர்வாகத்தை நேரடியாக மேற்கொள்வது என்ற வரலாற்று முக்கியத்தும் வாய்ந்த முடிவை எடுத்தது. நிலவரியை வசூலிக்க மாவட்ட ஆட்சியரை நியமித்தது. காலப்போக்கில் இவர்கள் பிரிட்டிஷ் ஆட்சியின் அவதார புருஷர்களாகிவிட்டனர். ஆட்சியர் மாவட்ட நிர்வாகத்தின் அச்சாணி போன்றவர், இவரைச் சுற்றியே மாவட்ட நிர்வாகம் சுழன்றது. இவரன்றி மாவட்டத்தில் எதுவும் அசையாது, நகராது என்ற நிலை ஏற்பட்டது. அதற்குக் காரணம் மாவட்ட ஆட்சியரின் நிலவரி வசூலிக்கும் அதிகாரத்தோடு மாவட்டத்தின் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்கான அதிகாரமும், நிதி வழங்கும் அதிகாரமும் சேர்ந்து கொண்டதாகும். இதன் மூலம் மாவட்டத்தில் செயல்பட்ட பிற அதிகாரிகளும் இவருக்குப் பொறுப்பானார்கள். அதனால்தான் மாவட்ட ஆட்சியர் ‘மாவட்டத்தின் தந்தை தாய்’ என்றும் ‘அரசாங்கத்தின் அவதாரம்’ என்றும் வர்ணிக்கப்பட்டார். ஜி.டபிள்யு. டீவன் மேலும் ஒருபடி சென்று மாவட்ட ஆட்சியரை ‘சர்வவியாமி’ என்றே குறிப்பிட்டார்.

**கிராம நிர்வாகம்**

சங்ககால முடியாட்சியின் கீழ் ஊர் மன்றங்கள் சிறப்பாகச் செயல்பட்டன. கிராமத்து விவேகிகள் ஊரவர்களைத் தேர்ந்தெடுத்தனர். இம்மன்றங்கள் அரசியல், நிர்வாக, நீதிப்பொறுப்புகளைக் குறைவின்றி நிறைவெற்றினர். சங்ககால கிராமநிர்வாக முறைக்குக் களப்பிரர் காலத்தில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. பல்லவர்களது ஆட்சிக்காலத்தில் பாரம்பரிய கிராம நிறுவனங்கள் புதுப்பிக்கப்பட்டு

பலப்படுத்தப்பட்டன. ஊர் மன்றம் புதுப்பொலிவு பெற்றது. சோழர்கள் காலம் புல்லிதழ் ஜனநாயகத்தின் பொற்காலமாகும். வாரியங்கள் அமைப்பும், குடவோலை முறையும் சோழர் கால கிராம நிர்வாகத்தின் ஆணி வேர்களாக இருந்தன. இப்பாரம்பரிய கிராம நிர்வாக முறை விஜய நகர் ஆட்சிக்காலத்தில் புறக்கனிக்கப்பட்டு சீரழிந்தது.

தமிழ்நாடு ஆங்கிலக் கம்பெனியின் ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டபோது கிராம நிர்வாகத்தின் நிலை மிகவும் மோசமாக இருந்தது. தமிழ்நாடு குழப்பக் காடாகக்காட்சி அளித்தது. நாயக்கர்களும், நவாபுகளும், மராத்தியரும் தமிழ்நாட்டை, குறிப்பாக கிராமங்களை, போட்டி போட்டுக்கொண்டு சுரண்டிக் கொண்டிருந்தனர். கிராமப்புற சர்வாதிகாரிகளான பாளையக்காரர்கள் கிராம மக்களை, குறிப்பாக விவசாயிகளை வரிச்சுமையால் சொல்லொணா துன்பங்களுக்குள்ளாயினர். கிராமப் பஞ்சாயத்துக்கள் இருக்கும் இடம் தெரியாமல் இருந்தன.

### ஆங்கிலேயரின் அரிய சாதனை

### மூன்று தீமைகள்

1775லிருந்து ஆங்கிலேயர் தமிழ்நாட்டின் மூன்று தீமைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுத்தனர். 1) தலத்தலைவர்களின் கீழ்ப்பணியாமை, 2) முறையாகத் தொகுக்கப்பட்ட சட்டங்கள், நீதிமன்றங்களோ இல்லாமை. 3) நிலவரி மதிப்பீடு மற்றும் நிலவரி முறை பற்றிய நிலையற்ற தன்மை. 1794-இல் சென்னை ஆளுநராக இருந்த ஹோபார்ட் பிரபு பாளையக்காரர்களுக்குப் பதில் மாவட்ட ஆட்சியர்களை நியமித்தார். இப்புதிய அரசாங்க அதிகாரிகள் காட்டு தர்பார் நடத்திக்கொண்டிருந்த தலத்தலைவர்களை அடங்கி, அவிழ்க்கப்படாமலிருந்த மர்ம முடிச்சுகளை அவிழ்த்து, பாரம்பரிய உள்ளாட்சி நிறுவனங்களை மீட்டு, புதுப்பித்து, சீர்திருத்தி நடைமுறைக்குக் கொண்டு வரமுடியும் என்பதைக் கண்டுபிடித்தனர்.

### மீட்பு முயற்சி

தமிழ்நாட்டின் பாரம்பரிய பஞ்சாயத்து முறையை மீட்கும் பணியில் லியோனல் பிளே, கர்னர் அலக்சாண்டர் ரீட், ஜான் ஹாஹ்சன், சர் தாமஸ் மன்றோ போன்றோர் முழு மூச்சுடன் ஈடுபட்டனர். கம்பெனி ஜாகீர்களின் ஆட்சியராக இருந்த லியோனல் பிளே (1794-1798) அவரது ஆட்சிக்குட்பட்ட கிராமங்களைப் பற்றிய விவரங்களை அறிந்தார். கிராம ஆட்சி முறையை, குறிப்பாகக் கிராமக் கணக்கு முறையைப் புதுப்பித்து அதன் திறமையை அதிகரித்தார். அதேபோன்று, பாரமகாலின் ஆட்சியராக இருந்த கர்னல் அலெக்சாந்தர் ரீட் ஒவ்வொரு விவசாயியும் அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு யதார்த்த நிலையை அறிந்து அதற்கேற்ப கிராம நிர்வாகத்தை மாற்றி அமைத்தார். ஆங்கிலக் கம்பெனி திண்டுக்கல்லையும், பாரமகாலையும் பெற்ற பின்னர் தான் தமிழ்நாட்டில் திறமையான நிர்வாகம் துவங்குகிறது எனக் குறிப்பிட்டுள்ளார் ஏ.பி. கீத்.

வருவாய் மன்ற பிரதான உறுப்பினராக இருந்த ஜான் ஹாக்சன் தஞ்சாவூரில் கிராம நிர்வாக முறை திறமையாக செயல்பட்டு வருவதைக் கண்டறிந்தார். அங்கு மிராசுதாரர்களும், கிராமத் தலையாரிகளும் அதிகாரத்தை முறைகேடாகப் பயன்படுத்தினாலும் கிராமக் கூட்டுப்பொறுப்போடு கிராம நிர்வாகம் செயல்பட்டு வருவதை அறிந்து மேலதிகாரிகளுக்குத் தெரிவித்தனர். யாவற்றுக்கும் மேலாக சென்னை ஆளுநராக இருந்த சர் தாமஸ் மன்றோ பாரம்பரிய கிராமப் பஞ்சாயத்து முறைக்கு உயிருட்டினார்.

**நீதிமன்ற நிர்வாகம்**

**சென்னை**

பிரான்சிஸ் டே சென்னப்பட்டினத்தில் வாங்கிய நிலத்தில் புனித ஜார்ஜ் கோட்டை கட்டப்பட்டது (1640). கோட்டைக்கு உள்ளே ஆங்கிலேயர் வசித்த பகுதி வெள்ளை நகர் என்றும், கோட்டைக்கு வெளியே உள்ளூர்வாசிகள் வசித்த இடம் கருப்பு நகர் என்றும் அழைக்கப்பட்டது. இந்த இரு நகர்களும் சேர்ந்த பகுதிதான் சென்னை. அப்போது சென்னை தான் முதல் ராஜதானி நகர் ஆகும். கம்பெனியின் முகவர் சென்னையின் ஆட்சித் தலைவராக இருந்தார்.

**சத்திர நீதிமன்றம்**

1600 டிசம்பர் 31-ஆம் தேதி இங்கிலாந்தின் எலிசபெத் ராணி வழங்கிய அரசு பட்டயம் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்கு குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரத்தை அளித்தது. சென்னையின் ஆட்சித்தலைவராக இருந்த கம்பெனி முகவர் உள்ளூர் பாரம்பரிய நீதிமுறையில் தலையிட விரும்பவில்லை. எனவே அவர் கருப்பு நகரின் தலைவரிடம் நீதி வழங்கும் பொறுப்பைக் கொடுத்தார். இவர் நீதி நிர்வாகத்தை வழக்கப்படி நடத்தி வந்தார். இது சத்திர நீதமன்றமுறை என்று அழைக்கப்பட்டது. இது தமிழ் நாட்டின் கிராமப்பஞ்சாயத்துக்குக் கொடுக்கப்பட்ட மாற்றுப்பெயர் எனக் கருதலாம். கண்ணப்பா என்பவர் 1644லிருந்து 1648 வரை சத்திர நீதிமன்ற நீதிபதியாக இருந்தார் என்று கூறப்படுகிறது.

சத்திர நீதிமன்றத்துக்கு வந்த வழக்குளின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருந்தன. முகவர் அல்லது உள்ளூர் தலைவர் இந்த மன்றத்துக்கு தலைமை தாங்கினார். 1644-ஆம் ஆண்டு பிராட்போர்டு என்ற கவால்படை வீரர் கருப்பு நகரைச் சேர்ந்த ஒருவரைக் கொன்றுவிட்டார். கம்பெனி முகவர் இந்த கொலைவழக்கைத் தான் விசாரிக்காமல் கருப்பு நகர் தலைவரிடம் விட்டுவிட்டார். அவர் இக்கொலை தற்செயலாக நடந்தது என்று கூறி வழக்கைத் தள்ளுபடி செய்துவிட்டார். முகவருக்கும், கருப்பு நகர் தலைவருக்கும் சட்ட கல்வித் தகுதி இன்மையால் பல சட்டச்சிக்கல்கள் ஏற்பட்டன. சிக்கலான வழக்குகள் இங்கிலாந்தில் இருந்த மேலதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. இதனால் வழக்கு விசாரணைக்கு அசாதாரண காலதாமதம் ஆயிற்று. எனவே, சத்திர நீதிமன்றம் திருப்திகரமாக செயல்படவில்லை.

**கப்பல்துறை நீதிமன்றம்**

1683 ஆகஸ்டு 9ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட பட்டயப்படி குற்றம் சாரா சட்டத்தில் பயிற்சி பெற்ற ஒருவரையும், இரண்டு அனுபவமிக்க வணிகர்களையும் கொண்ட கப்பல்துறை நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் வணிகக் குற்றங்கள், எல்லை மீறல், காயமேற்படுத்தல், தவறிழைத்தல் பற்றி வழக்குகளை விசாரித்து. இம்மன்றம் பற்றி மேலும் இரு பட்டயங்கள் பிறப்பிக்கப்பட்டன (1686 ஏப்ரல் 12, ஜீலை 10). 1687-இல் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்ட குற்றம்சாரா சட்டத்தில் பயிற்சியும், அனுபவமுமிக்க சர் ஜான் பிக் இந்த நீதிமன்றத்தின் முதல் நீதிபதி-வழக்கறிஞராக நியமிக்கப்பட்டார். இந்த நீதிமன்றம் குற்றம்சாரா, குற்றம் சார்ந்த, வணிகம் சம்மபந்தப்பட்ட அனைத்து வழக்குகளையும் விசாரித்தது. குற்ற வழக்குகளை வழக்குகளை விசாரிக்கும் போது மட்டும் நடுவர்களை கலந்து கொண்டது. இந்த நீதிமன்றம் அமைக்கப்பட்டபின் சென்னை ஆளுநருக்கு இருந்த நீதித்துறை அதிகாரம் நீக்கப்பட்டது. அதன் விளைவாக, நிர்வாகத் துறையும் சட்டத்துறையும் தனித்தனி துறைகளாயின. இதன் மூலம் சென்னை ராஜதானி பிற ராஜதானிகளுக்கும் முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

1692-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கம்பெனி ஜான் டோல்பென் என்ற சட்ட நிபுணரை சென்னை கப்பல் துறை நீதிமன்றத்தின் நீதிபதி – வழக்கறிஞராக நியமித்தது. ஆனால் அவர் 1694-இல் ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்காகி பதவி நீக்கம் செய்யப்பட்டார். அவருக்குப் பதில் வில்லியம் பிரேசர் என்பவர் இங்கிலாந்திலிருந்து அனுப்பப்பட்டார். அவருக்குப் பின் ஒரு வணிகர் வந்தார். அவர் பதவி விலகியதால் நீதிமன்ற பதிவாளர் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டார். 1704-இல் அவரும் இங்கிலாந்துக்குச் சென்று விட்டதால் கப்பல்துறை நீதிமன்றம் சரியாக செயல்படவில்லை.

**மேயர் நீதிமன்றம்**

1686-ஆம் ஆண்டு சென்னை அரசாங்கம் சென்னை மக்கள் மீது வீட்டு வரி விதித்தது. ஆனால் சென்னைவாசிகள் அந்த வரியைக் கட்ட மறுத்துவிட்டனர். இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக ஆங்கிலேயரையும் இந்தியரையும் உள்ளடக்கிய ஒரு அமைப்பை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி 1686 செப்டம்பர் 29ஆம் தேதி இங்கிலாந்தில் இருந்ததைப் போன்று சென்னையில் ஒரு மாநகராட்சி துவக்கப்பட்டது. அம்மன்றத் தலைவர். இவர் ஆங்கிலேயராக இருக்க வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. முதல் சென்னை மாநகராட்சியில் 3 ஆங்கிலேயர், 3 இந்துக்கள், 3 யூதர்கள், ஆர்மீனியர்கள், 2 போர்ச்சுக்கீசியர்கள், 1 பிரெஞ்சுக்காரர் இடம் பெற்றிருந்தார்.

சென்னை மாநகராட்சி உறுப்பினர்களோடு 3 மூத்த நகராட்சிப் பிரதிநிதிகளைக் கொண்ட பதிவேட்டு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. இதுவே மேயர் நீதிமன்றம் என்று அழைக்கப்பட்டது. இந்த நீதிமன்றம் குற்றம்சாரா, குற்றம் சார்ந்த வழக்குகளை விசாரித்தது. மேயர் நீதிமன்றம் அபராதம், சிறை தண்டனை, கசையடி

போன்ற தண்டனைகளைக் கொடுக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தது. இம்மன்றத்தீர்ப்புக்கு எதிரான மேல் முறையீடுகளை கப்பல்துறை நீதிமன்றம் விசாரித்தது. மேயருக்கும் நகராட்சி உறுப்பினர்களுக்கும் சட்ட ஆலோசனை கூற நீதிமன்றப் பதிவேட்டாளர் நியமிக்கப்பட்டார். சர் தாமஸ் டேன்ஜ் முதல் பதிவேட்டாளராகப் பொறுப்பேற்றார். 1712இல் மேயர் நீதிமன்றம் சுதேசிகளுக்கு மரண தண்டனை வழங்கும் அதிகாரத்தைப் பெற்றது.

**சென்னை உயர்நீதிமன்றம்**

1801 செப்டம்பர் 4ஆம் தேதி சென்னை உச்ச நீதிமன்றம் உருவாக்கப்பட்டது. 1861 ஆகஸ்டு 6ஆம் தேதி பிறப்பிக்கப்பட்ட இந்திய உயர்நீதிமன்ற சட்டத்தின்படி சென்னை உச்ச நீதிமன்றம், உயர்நீதிமன்றமாக மாற்றப்பட்டது. 1862 ஜீன் 26ஆம் தேதி விக்டோரியா ராணியால் பிறப்பிக்கப்பட்ட ஆணையால் சென்னை உயர்நீதிமன்றம் துவக்கப்பட்டு 1862 ஆகஸ்டு 15 ஆம் தேதி முறையாகத் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு சரியாக 85 ஆண்டுகளுக்குப்பின் இந்தியா விடுதலை அடைந்தது.

**மாவட்ட நீதிமன்றங்கள்**

1802 ஆம் ஆண்டு கவனர்-ஜெனரல் பிறப்பித்த உத்திரவின்படி மாவட்ட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. இம்மாவட்ட நீதிமன்றங்கள் சென்னை உயர்நிதீமன்றத்தின் நீதி-நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டன. மாவட்ட நீதிமன்றங்கள் வருவாய் சம்மந்தப்பட்ட வழக்குகளை விரைந்து விசாரிக்க பயன்படுத்தப்பட்டன. அரசாங்கம்-நிலச்சுவான்தாரர்கள்-விவசாயிகள் ஆகியோருக்கிடையேயான வழக்குகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குவதில் சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது. அதற்கேற்ப மாவட்ட நீதிநிர்வாகத்தில் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்ட நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரிப்பதற்காக மாநில மேல்முறையீட்டு மன்றம் உருவாக்கப்பட்டது. ஆனால் இம்மன்றம் 1843இல் நீக்கப்பட்டது.

**கிராம நீதிமன்றங்கள்**

**மன்றோ கமிஷன், 1812**

நீதி நிர்வாகத்தில் காணப்பட்ட குறைபாடுகளைக் களைவதற்காக 1812ஆம் ஆண்டு தாமஸ் மன்றோவின் தலைமையின் கீழ் ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. அக்குழு நீதித்துறையின் செயல்பாட்டை மதிப்பீடு செய்து அதன் அறிக்கையைஅரசாங்கத்துக்து அளித்தது. 1816இல் மன்றோ சென்னை ஆளுனரானபின் அவர் பின்வரும் பரிந்துரைத்த சீர்திருத்தங்களை செயல்படுத்தினார். 1) இந்தியர்களுக்கு எதிரான வழக்குகளை விசாரிக்க மாவட்ட முன்சீப்கள் நியமிக்கப்பட்டனர். 2) மாஜிஸ்ட்ரேட் அலுவலகம் மாவட்ட ஆட்சியருக்கு மாற்றப்பட்டது. 3) மாவட்ட நீதிபதிகள் குற்ற வழக்குகளை விசாரிக்கும் அதிகாரம்

பெற்றனர். 4) யாவற்றுக்கும் மேலாக வழக்குகளை விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரம் கிராம முன்சீப்களுக்கு வழங்கப்பட்டது.

தாமஸ் மன்றோவின் பரிந்துரைகளின்படி, 1816ஆம் ஆண்டு கிராம நீதிநிர்வாக முறை மாற்றி அமைக்கப்பட்டது. பஞ்சாயத்துக்கள் கிராம முன்சீப் மன்றங்கள் என்று அழைக்கப்பட்டன. கிராமத் தலைவர் கிராம முன்சீப் ஆனார். இவர் குறிப்பிட்ட மதிப்புடைய வழக்குகளை விசாரித்தார். கட்சிக்காரர்களின் ஒப்புதலோடு இவர் அதிக மதிப்புடைய சொத்து சம்மந்தமான வழக்குகளையும் விசாரித்தார். யாவற்றுக்கும் மேலாக கிராம முன்சீப் வழக்குகளை விசாரிக்க ஐவர் கொண்ட கிராமப்பஞ்சாயத்தைக் கூட்டுவதற்கு வழி வகுக்கப்பட்டது. இதன் மூலம் தமிழ் நாட்டின் பாரம்பரிய பஞ்சாயத்து நீதி முறையும் நவீன நீதிமன்ற முறையும் முன்கவனத்தோடு இணைக்கப்பட்டன. பாரம்பரிய நீதி முறைக்கு மதிப்பும் முக்கியத்துவம் கொடுத்து நீதித்துறையை மாற்றி அமைத்தார் மன்றோ என்று புகழாரம் சூட்டுகிறார் கே. ராஜய்யன்.

**காவல்துறை நிர்வாகம்**

சென்னை, ராஜதானியில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டவும், நீதித்துறை திறமையுடன் செயல்படவும் முறையாக அமைக்கப்பட்ட காவல்துறை இன்றியமையாதது. தமிழ்நாட்டில் பரம்பரையாக கிராமங்களில் தலையாரிகளும், நகரங்களில் கொத்வால்களும் காவல் பொறுப்பை மேற்கொண்டிருந்தனர். இப்பாரம்பரிய முறையில் தக்க மாற்றங்களைச் செய்வது பற்றி பரிசீலிப்பதற்காக அமைக்கப்பட்ட மன்றோ கமிஷனின் (1816) பரிந்துரையின்படி சட்டம் ஒழுங்கை நிலைநாட்டும் பொறுப்பு மாவட்ட மாஜிஸ்ட்ரேட்டுகளிடம், தாசில்தார்கள், கிராமத்தலையாரிகள் ஆகியோரிடையே கொடுக்கப்பட்டது. இவர்களுக்கு உதவி செய்ய பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். எனினும், இவர்களிடம் வரி வசூலுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நீதி நிர்வாகத்தைப் புறக்கணித்துவிட்டனர். காவல்துறை சீர்திருத்தங்களால் எதிர்பார்த்த பலன் கிடைக்கவில்லை. காவல்துறை அடக்கு முறைக்கும், திறமையின்மைக்கும், ஊழலுக்கும் அவப்பெயர் பெற்றது. குற்றங்கள் கட்டுப்பாடின்றி அதிகரித்தன. திருட்டுக் கும்பல் மக்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக இருந்தது. எனவே, ஆங்கிலக் கம்பெனி திருட்டைத் தடுப்பதற்கான முயற்சியை மேற்கொண்டது (1856).

சென்னை ஆளுநர் ஹாரி பிரபு பின்வரும் பாதுகாவல் சீர்திருத்தங்களைச் செய்தார். 1) பாதுகாவலர் படை ஒரு தலைமையின் கீழ் கொண்டுவர வேண்டும். 2) பாதுகாவலர்களிடையே ஒரே மாதிரியான கட்டுப்பாட்டு முறை இருக்க வேண்டும். 3) பொது அமைதியை ஏற்படுத்தி, பொது மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டும். 4) குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டு தண்டிக்கப்படுதல் வேண்டும். 5) மக்களின் உணர்வு, குற்றவாளிகளின் நடமாட்டம், ராஜதானியின் பாதுகாப்பு நிலைபற்றிய திட்பநுட்பமான தகவல்களை சேகரித்தல். 6)

காவல் நிலையங்களை ஒருங்கிணைத்துக் கண்காணித்தல், பாதுகாவலர்களின் கடமைகளும், பொறுப்புகளும் வரையறுக்கப்படல்.

ஹாரிசின் சீர்திருத்தங்களை இயக்குநர்கள் மன்றம் ஏற்றுக்கொண்டது. டபிள்யு. ராபின்சன் காவல்துறை கமிஷனராக நியமிக்கப்பட்டார். சென்னை ககாவல்படை கமிஷனர் கண்காணிப்பாளர்கள், ஆய்வாளர்கள் தலைமைக் காவலர்கள், காவலர்கள் ஆகியோர் அடங்கிய முறையானபடி முறை அமைப்பாயிற்று. கிராமக் காவல்முறைக்கு கிராமக் காவல் ஆய்வாளர் பொறுப்பாக்கப்பட்டார். காவலர் கட்டுப்பாட்டுக்கும், பயிற்சிக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இச்சீர்திருத்தங்களின் மூலம் தமிழ்நாட்டு காவல் துறை நிர்வாகத்துக்குப் புதிய அமைப்பும், நோக்கும், போக்கும் கிடைத்தன. திறமையான காவல் படைக்கான பலமிக்க அடிப்படை அமைக்கப்பட்டது.

**சிறைச்சாலை நிர்வாகம்**

ஒழுங்கான, முறையான, திறமையான சிறைச்சாலை நிர்வாகம் இன்மையால் கைதிகள் மனிதாபிமானமற்ற முறையில் நடத்தப்பட்டனர். விசாரணையின்றி சத்திரங்களிலும், கோயில்களிலும், பராமரிப்பற்ற கட்டடங்களிலும் சரியான உணவு, கட்டுமான, காற்றோட்ட வசதிகளின்றி விலங்குகள் போன்று அடைத்து வைக்கப்பட்டனர். சிறைச்சாலை நிர்வாகம் காவல்துறை சீரமைப்பின் பகுதியாகக் கருதப்பட்டு சிறைச்சாலை அமைப்பில் அடிப்படை மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. சிறைச்சாலைகளைப் போதிய அடிப்படை வசதிகளோடு கட்டுதல், கைதிகளை முறையாக விசாரணை செய்து தண்டித்தபின் சிறையில் அடைத்தல், அவர்களுக்குத் தேவையான மருத்துவ வசதி செய்து கொடுத்தல். குற்றவாளிகளின் நடத்தை மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பற்றிய விரிவான விதிகள் வகுக்கப்பட்டன. இருப்பினும் பல குறைபாடுகள் இருக்கவே செய்தன.

தமிழ்நாட்டைக் கைப்பற்றிய ஆங்கிலக் கம்பெனி நாட்டு நிர்வாகத்தை மாற்றி அமைப்பதில் முனைப்புடன் செயல்பட்டது. முதல் முறையாக நெல்லிக்காய் மூட்டையை அவித்து விட்டதைப் போன்று இருந்த தமிழ்நாட்டை ஒரு ஆட்சிக்குடையின்கீழ்க் கொண்டுவந்தது கம்பெனி. தமிழ்நாட்டை மாவட்டங்களாகப் பிரித்து, அவற்றை மாவட்ட ஆட்சியரின் நிர்வாகத்துக்கு உட்படுத்தி, சென்னை ருாஜதானிக்குத் அதளிவான உருவமும், வடிவமும் கொடுக்கப்பட்டது. தமிழ்நாட்டின் மாநில, மாவட்ட, கிராம நிர்வாக முறை மறுசீரமைக்கப்பட்டது. நீதி, காவல், சிறைச்சாலைத் துறைகள் நவீனமயமாக்கப்பட்டன. தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குக் கம்பெனி ஆட்சிக்கு அப்பாற்பட்டு செயல்பட்ட ஆங்கில மனிதாபிமானிகளின் பங்களிப்பு பாராட்டுக்குரியது.

## பொருளாதாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு

### விவசாயம் : ரயத்துவாரி முறை

### பாரம்பரிய முறை

தொன்றுதொட்டு விவசாயம் தமிழ்நாட்டுப் பொருளாதாரத்தின் ஆதார வளமாகவும், நில வருவாய் அரசாங்கத்தில் முதுகெலும்பாகவும் இருந்துவந்தது. விளைநிலம் சமுதாயத்தின் பொது சொத்தாகக் கருதப்பட்டது. தனிநபர் எவரும் பிறரது ஒப்புதலின்றி நிலத்தை வாங்கவோ அல்லது விற்கவோ முடியாது. இதற்கு விதிவிலக்காக தஞ்சை மாவட்டத்தில் ஏகபோகம் என்று அழைக்கப்பட்ட கிராம மிராசிமுறை நடைமுறையில் இருந்தது. இந்த முறையின் கீழ் மிராசுதாரர் குறிப்பிட்ட தொகையை அரசாங்கத்துக்கு நில வரியாகக் கொடுப்பார். அதற்கு பதில் அரசாங்கம் கிராமங்களின் உள் விவகாரங்களில் தலையிடாது. மலபார் மாவட்டத்திலும், கொச்சின் பகுதியிலும் தனியுடைமை பெற நெடுங்காலமாக வழக்கத்தில் இருந்தது.

### ஜமீன்தாரி முறை

தமிழ்நாட்டு நிர்வாகம் ஆங்கிலக் கம்பெனிக்கு மாறியபின் ஆங்கிலேயர் நடைமுறையில் இருந்த விவசாய-நிலவரி முறைகளையே பின்பற்றினர். நிலவரி வசூல் செய்வதற்காக நியமிக்கப்பட்ட இடைத்தரகர்கள் விவசாயிகளை மனிதாபிமானமின்றி சகட்டுமேனியாகச் சுரண்டியதால் கவர்னர்-ஜெனரல் காரன்வாலி பிரபு 1786ஆம் ஆண்டு ஒரு வருவாய் மன்றத்தை அறிமுகப்படுத்தினார். அவர் வங்காளத்தில் அறிமுகப்படுத்திய ஜமீன்தாரி முறை வெற்றிகரமாக செயல்பட்டதால் அதே முறையைத் தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

### வட்ட ஓட்டைக்குள் சதுரக்கட்டை

1798ஆம் ஆண்டு கவர்னர்-ஜெனரல் வெல்லெஸ்லி பிரபு வங்காள ஜமீன்தாரி முறையை தமிழ் நாட்டில் பின்பற்ற வேண்டும் என்று கட்டளையிட்டார். அதன்படி வங்காள நிலையானத் தீர்வுத் திட்டம் தமிழ்நாட்டில் திண்டுக்கல், பாரமகால் பகுதிகளிலும், ‘வடக்கு சர்க்கார்’களிலும் அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின்படி ஜமீன்தார்கள் நிலச் சொந்தக்காரர்களாக அங்கீகரிக்கப்பட்டனர். அவர்கள் விவசாயிகளிடமிருந்து குத்தகைத் தொகையை வசூலித்து, அதில் ஒரு பகுதியை அவர்கள் கம்பெனிக்கு செலுத்த வேண்டும். நிலத்தை விற்கவோ, வாங்கவோ, அடமானம் வைக்கவோ ஜாமீன்தாரர்கள் அதிகாரம் பெற்றிருந்தனர். வேறுவிதமாகக் கூறுவதாயின் ஜமீன்தாரர்கள் புதிய பாளையக்காரர்களாயினர். புதிதாகப் புகுத்தப்பட்ட ஜமீன்தாரி முறை வட்ட ஓட்டைக்குள் சதுரக் கட்டையை நுழைத்தது போலாயிற்று. இந்த முறை தமிழ்நாட்டில் படுதோல்வி அடைந்தது.

## கிராமத்தீர்வு முறை

தமிழ்நாட்டில் ஜமீன்தாரி முறை தோல்வி அடைந்ததால் கிராமத் தீர்வு முறை ஆங்கிலக்கம்பெனி அறிமுகப்படுத்தியது. இத்திட்டம் 1804 முதல் 1814 வரை திருநெல்வேலி, கோயமுத்தூர், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு ஆகிய மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இந்த ஏற்பாட்டின் கீழ் நிலம் பிரதான விவசாயிகளுக்குக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. அவர்கள் உழவர்களுக்கு மறுகுத்தகைக்கு விட்டு விவசாயம் செய்தனர். இப்புதிய பரிசோதனையும் வெற்றி பெறவில்லை. தமிழ் மண்ணில் வேற்றுத் திணைச் செடிகள் வளரவில்லை. எனவே, தமிழ் மண்ணுக்கேற்ற செடியை உருவாக்கினார் சர் தாமஸ் மன்றோ.

## ரயத்வாரி முறை

தாமஸ்மன்றோ தமிழ்நாட்டின் ஆளுநராக (1820 – 1827) இருந்த போது கம்பெனியின் ஜாமீன்தாரி முறையையும், கிராமத் தீர்வு முறையையும் நிராகரித்துவிட்டு தமிழ்நாட்டின் தேவைக்கேற்ப ரயத்வாரி முறையை (ரயத் = உழவர், வாரி = முறை) அறிமுகப்படுத்தினர். மன்றோ முறையின் சிறப்புக் கூறுகளாவன 1) நிலத்தை உழுபவரே நிலத்துக்குச் சொந்தக்காரர். 'நிலம் உழுபவருக்கே சொந்தம்' என்ற புது புரட்சிகரமான விதி வகுக்கப்பட்டது. அதாவது, உழவரே விவசாயி. 2) விவசாயிக்கு அவரது நிலத்தை விற்கவோ அல்லது வாங்கவோ அதிகாரம் வழங்கப்பட்டது. 3) விவசாயி அவரது திறமைக்கும், தேவைக்கும் ஏற்ப எவ்வளவு நிலத்தை வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். அதாவது, விவசாயியின் நிலத்துக்கு உச்சவரம்பு இல்லை. 4) நிலத்தீர்வை, இடைத்தரகர் இல்லாமல், விவசாயியுடன் நேரடியாக நிர்ணயிக்கப்பட்ட 5) நிலத்தீர்வை 20-30 ஆண்டுகளுக்கு ஒரு முறை மறுபரிசீலினை செய்யப்படும். 6) நிலவரித் தீர்வை சிறுகுறு விவசாயிகளுடன் முடிவு செய்யப்பட்டது. நிலச்சுவான்தார்கள் புறக்கணிக்கப்பட்டனர். 'ரயத்வாரி முறை'யை 'உழவர் உடைமை முறை' எனக் கூறலாம்.

## செயல்திட்டம்

ரயத்வாரி முறை அல்லது உழவர் உடைமை முறையை செயல்படுத்துவதற்கு முன்பு அறிவுப்பூர்வமான, நிறை முழுமையான செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது. இத்திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன. 1) நில அளவீடு. சென்னை ராஜதானி முழுவதும் பூகோள ரீதியாக அளவீடு செய்யப்பட்டது. குறிப்பாக ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள மொத்த நிலப்பரப்பு, அதன் எல்லை, அந்த எல்லைக்குட்பட்ட விளை நிலம், தரிசு நிலம், அரசு நிலம், நிலச் சொந்தக்காரர், பாசன நீர் வசதி போன்ற தகவல்கள் திரட்டப்பட்டு அளவீடு செய்யப்பட்டது. 2) பதிவேடுகள் கிராமத்தைப் பற்றித் திரட்டப்பட்ட தகவல்கள் பிரத்யேகப் பதிவேடுகளில் பதிவு செய்யப்பட்டன. நிலத்தின் எண், நிலத்தின் எல்லை, உடைமையுரிமைக்காலம், நிலத்தின் சொந்தக்காரர், நில மதிப்பு போன்ற

விவரங்கள் இப்பதிவேடுகளில் குறிக்கப்பட்டன. இப்பதிவேடுகள் மாவட்டக் கச்சேரிகளில் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளார் கே. ராஜய்யன். 3) நிலப்பட்டா நில அளவீடு முடிக்கப்பட்டு, பதிவேடுகள் தயாரானபின் உழவர்-விவசாயிகளுக்கு நிலப்பட்டா வழங்கப்பட்டது. இப்பட்டாவில் உழவர் நிலம் பற்றிய தகவல்கள் அனைத்தும் தரப்பட்டன. நிலப்பட்டா நிலத்தீர்வு முறையைத் தெளிவுபடுத்தி, எளிமையாக்கிவிட்டது. 4) நிலத்தீர்வை நிலத்தீர்வை நிலத்தன்மை, உற்பத்தித்திறன், நில உரிமை நிர்ணயிக்கப்பட்ட நிலவரி போன்ற விவரங்களை சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவாக குறிப்பிட்டது. உழவர் நிர்ணயிக்கப்பட்ட தீர்வைக்கு அதிகமாக செலுத்த வேண்டிய அவசியமில்லை. அதிகாரிகளும் அவர்களிடமிருந்து அதிக வரியை வசூலிக்க முடியாது. இதன் மூலம் நிலத்தீர்வை எவரும் தவறாகப் புரிந்து கொள்ள முடியாதபடி மிகவும் தெளிவாக்கப்பட்டது. 5) வரைபடங்கள். திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மாவட்ட, தாலுகா, கிராம வாரியான வரைபடங்கள் தயாரிக்கப்பட்டன. இந்த வரைபடங்கள் நிலங்களைப் பார்த்தறிந்து கொள்ளப்பயன்பட்டன. 6) நில அளவைத் துறை : மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தனியாக நில அளவைத் துறை உருவாக்கப்பட்டது. இத்துறையின் திறமையான செயல்பாட்டுக்குத் தேவையான அதிகாரிகளும், அலுவர்களும் நியமிக்கப்பட்டனர். சுருங்கக்கூறின், தற்காலத் தமிழ் நாட்டில் முதல் முறையான நில அளவை-தீர்வை அமைப்பு நன்கு சிந்தித்து, திட்டமிடப்பட்டு முறைப்படுத்தப்பட்டது.

**விளைவுகள்**

**நல்விளைவுகள்**

ரயத்துவாரி அல்லது உழவர் உடைமை முறையால் பல நல்ல விளைவுகள் ஏற்பட்டன. 1) உழவர்கள் நிலச் சொந்தக்காரர்களாயினர். 'உழுபவருக்கே நிலம்' என்ற உயரிய கோட்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டது. இதுவரை கொத்தடிமைகளாக இருந்த விவசாய உழைப்பாளிகள் நிலத்துக்கு உரிமை உடையவர்களானார்கள். 2) உழவர்-விவசாயிகள் இடைத்தரகர்களின் மனிதாபிமானமற்ற சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்டனர். அரசாங்கப் பாதுகாப்பு இருந்ததால் விவசாயிகள் அச்சமின்றி சுதந்திரமாக செயல்படுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது. 3) இடைத்தரகர்கள் நீக்கப்பட்டதால் அரசாங்கத்துக்கும் விவசாயிகளுக்குமிடையே நேரடித் தொடர்பு ஏற்பட்டது. இதனால் விவசாயிகளின் மதிப்பு உயர்ந்தது. சமூக அந்தஸ்து பெற்றனர். 4) ரயத்துவாரி முறை மூலம் சொத்துரிமை ஒரு சிலரது கைகளில் குவிந்து விடாமல் பரவலாக்கப்பட்டது. 5) விவசாயிகள் தங்கள் நிலத்தில் சீர்திருத்தங்களை மேற்கொள்ளவும், உற்பத்தியைப் பெருக்கவும், ஏற்ற இறக்கமின்றி நிலத்தீர்வையைப் பணமாகக் கட்டுவதற்கும் வழி ஏற்பட்டது. 6) அரசாங்க அதிகாரிகள் கிராமங்களுக்குச் சென்று வந்ததால் நிலத்தைப் பற்றியும், நில உடைமையாளர்கள் பற்றியும், கிராமப் பழக்கவழக்கங்கள் பற்றியும் நேரடியாக அறிந்து கொள்ள முடிந்தது.

## தீயவிளைவுகள்

ரயத்துவாரி முறை உழவர்-விவசாயிகளுக்கு சுவர்க்கத்தின் கதவைத் திறந்துவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் மலையை எதிர்பார்த்தவர்களுக்கு மலை எலிதான் கிடைத்தது. நடைமுறையில் ரயத்துவாரி முறையால் ஏற்பட்ட தீய விளைவுகள் வருமாறு 1) புரட்சிகரமான இத்திட்டம் மன்றோ எதிர்பார்த்தபடி நிறைவேற்றப்படவில்லை. செயலாக்கக் குறைபாடுகள் ரயத்துவாரி திட்டத்தின் நோக்கத்தை பலவீனப்படுத்திவிட்டது. 2) துவக்கத்தில் நிலத் தீர்வை அதிகமாக இருந்ததால் விவசாயிகள் நிலவரியை செலுத்துவதில் சிரமம் இருந்தது. பின்னர் நிலத்தீர்வை குறைக்கப்பட்டாலும் விவசாயிகள் கடன் வாங்க வேண்டியிருந்தது. மேலும், விவசாயிகளுக்குத் தேவையான விதைகள், சாகுபடிச் செலவு, குடும்பச் செலவு போன்றவற்றுக்கு அரசாங்கம் கடன் வசதி செய்து தரவில்லை. 3) விவசாயிகள் நிலத்தை விற்கும் உரிமை பெற்றிருந்ததால் நெருக்கடி நேரத்தில் நிலத்தை அடகு வைக்கவோ அல்லது விற்கவோ செய்தனர். 4) நிலம் குத்தகைக்கும், மறு குத்தகைக்கும் விடப்பட்டதால் நிலமற்ற விவசாயிகளின் எண்ணிக்கை அதிகரித்தது. 5) விவசாயிகளின் கடன் தேவைகளை நன்கு பயன்படுத்திக்கொண்ட இடைத்தரகர்களும், ஜமீன்தாரர்களும் விவசாயிகளைக் கடனாளியாக்கி, கடனைத் திருப்பிக் கட்ட முடியாத நிலையில நிலத்தை அபகரித்துக் கொண்டனர். 6) யாவற்றுக்கும் மேலாக, அரசாங்க அதிகாரிகள் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தி, நிலத் தீர்வையில் முறைகேடுகள் செய்து, வரி வசூலிக்க மிருகத்தனமான முறைகளைக் கையாண்டனர். கிராமக் கர்ணம், தாசில்தார் போன்ற அரசாங்க அதிகாரிகள் ஊழலின் ஊற்றுக்கண்களாயினர். இவற்றோடு சேர்ந்து பஞ்சமும், தொற்று நோய்களும் விவசாயிகளின் நிலையை மோசமாக்கிவிட்டன.

## மதிப்பீடு

நிலச் சீர்திருத்தம் சம்மந்தமாக பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி அறிமுகப்படுத்திய ஜமீன்தாரி, மகல்வாரி, ரயத்துவாரி ஆகிய மூன்று முறைகளில் தாமஸ் மன்றோ தமிழ் நாட்டில் செயல்படுத்திய ரயத்துவாரி முறையே சிறந்தது என்பதில் இருவேறு கருத்துகள் இல்லை. தொலைநோக்கோடு மேற்கொள்ளப்பட்ட புரட்சிகரமான விவசாயத் திட்டம் இது. ரயத்துவாரி முறை 'மன்றோ முறை', 'சென்னை முறை' என்றெல்லாம் பாராட்டப்பட்டது. மன்றோ, 'ரயத்துவாரி முறையின் தந்தை' என்று போற்றப்பட்டார். எனினும், மன்றோவுக்குப் பின் மன்றோவைப் போன்றவர்கள் தமிழ்நாட்டில் தோன்றாததால் புரட்சிகரமான திட்டம் பரிதாபகரமான நிலைக்குத் தள்ளப்பட்டது. செயலாக்கக் குறைபாடும், அதிகாரிகளின் ஊழலும், ஜமீன்தாரர்களின் பரம்பரைப் பேராசையும் ரயத்துவாரித் திட்டத்துக்கு அவப்பெயரை வாங்கிக் கொடுத்தது. இருப்பினும் தாமஸ் மன்றோ ஜமீன்தாரி முறைக்கு எதிரான ரயத்துவாரி முறையின் பிரதிநிதியாக நிலைத்து நிற்பதாகக் குறிப்பிட்டுள்ளார். பேராசிரியர் ஆர். சத்தியநாதய்யர். ரயத்துவாரி நிலத் தீர்வை முறை

அரசாங்கத்துக்கு திருப்தியளிப்பதாகவும், உழவர்களுக்கு நன்மை பயப்பதாகவும் இருந்ததாகக் கூறுகிறார் கே. ராஜய்யன்.

### கம்பெனியின் கல்விப்புரட்சி

**நவீனமயமாதல்**

அறிவையும், அறிவியலையும் அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படுவதே தற்கால சமுதாயமாகும். அறிவு சார்ந்த கல்வியே தற்கால சமுதாயத்தின் திறவுகோல். இத்தகைய நவீன கல்வியே மனிதனிடம் மறைந்துகிடக்கும் ஆற்றலை வெளிக்கொண்டுவருதல். சமூக மாற்றத்தை ஏற்படுத்துவது. பொருளாதார உற்பத்தித் திறனைப் பெருக்குவது, சமனற்ற சம்பிரதாயப் பிற்போக்குக் கல்வி முறைக்கு மாற்று வழியைக் கண்டுபிடிப்பது. தடையற்ற அறிவு விரிவாக்கம், முற்போக்கு மனப்பான்மை, வாழ்க்கை உயர்வுக்குத் தேவையான திறமைகள், சமுதாயப்பொறுப்பு, தாராள சிந்தனை, சமயம் சாரா நடுநிலைப்போக்கு, பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் திறன் போன்றவை தற்காலமாதலின் அல்லது நவீனமாதலின அடையாளங்கள் ஆகும். பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி பாரம்பரிய கல்வி முறையில் அடிப்படை மாற்றங்களைச் செய்து தமிழ் நாட்டில் கல்விப்புரட்சியைச் செய்தது.

**தமிழ்நாட்டுக் கல்வி முறை**

தமிழ் நாட்டில் சங்க காலக் கல்விமுறை சமுதாய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட சமயம் சாராக் கல்வி முறையாகும். 'உற்றுழி உதவியும், உறுபொருள் கொடுத்தும்' அனைத்துப் பிரிவினரும் சமச்சீர் கல்வி பெறுவதற்கு ஊக்குவிக்கப்பட்டனர். இப்பகுத்தறிவு சார்ந்த கல்வி முறை களப்பிரர் காலத்தில் சமயச் சூறாவளியில் அடித்துச் செல்லப்பட்டது. பல்லவர் ஆட்சிக்காலத்தில் தமிழ் மொழிக் கல்வி மீட்கப்பட்டாலும், பாலியும், பிராகிருதமும், சமஸ்கிருதமும் மேலோங்கி அதன் சமுதாயப் பொதுமையை தலைதூக்க முடியாமல் செய்துவிட்டது. சோழர்களின் ஆட்சிக்காலத்தில் போர்களுக்கும், கோயில்கள் கட்டுவதற்கும், வணிக விரிவாக்கத்துக்கும் கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் வாழ்க்கைக் கல்விக்குக் கொடுக்கப்படவில்லை. சமஸ்கிருதத்தின் செல்வாக்கு அதிகரித்தது. வேதங்களுக்கும், தர்ம சாஸ்திரங்களுக்கும், புராணங்களுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. முகமதியர் படையெடுப்புக்குப் பின் தமிழ்நாட்டை ஆட்சி செய்த நாயக்கர்கள், நவாபுகள், மராத்தியர் காலங்களில் சமச்சீரற்றக் கல்வி முறையே நீடித்தது. ஆங்கிலேயர் வருகைக்குப் பின்னர் தமிழ்நாட்டுக் கல்வி முறை நவீனமயமாதலை நோக்கிப் பயணிக்கத்துவங்கியது.

**ஆங்கில ஆதரவாளர்கள்**

பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவுடன் வர்த்தகம் செய்வதற்காக உருவாக்கப்பட்ட அமைப்பாகும். அக்கம்பெனி துவக்கத்தில் வர்த்தக விரிவாக்கத்தில் மட்டுமே கவனம் செலுத்திப் பின்னர் மக்களை ஆட்சி செய்யும்

நிர்வாக இயந்திரமாக உருமாற்றமடைந்தது. இதற்கிடையே வாரன் ஹேஸ்டிங், வில்லியம் ஜோன்ஸ், தாமஸ் மன்றோ போன்றோர் மக்களுக்கு முறையான, தரமான வாழ்க்கைக்குத் தேவையான கல்வி முறையை உருவாக்குவதில் முனைப்புடன் ஈடுபட்டனர். இவர்களுள் சென்னை ஆளுநராக இருந்த (1820-1827) தாமஸ் மன்றோ தமிழ் நாட்டு மக்களுக்கு ஆற்றிய கல்வித்தொண்டு பாராட்டுக்குரியது. நினைவு கூறத்தக்கது.

**அரசாங்க ஆதரவு**

**பட்டயம், 1813**

19-ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் வெளியிட்ட ஒரு பட்டயத்தை (The Charter of the East India Company, 1813) வெளியிட்டது. 1813 பட்டயச் சட்டம் ஒரு வரலாற்று முக்கியத்துவமிக்க அடிப்படை ஆவணமாகும். அந்த ஆவணத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் பின்வரும் முடிவுகளை அறிவித்தது. 1) பிரிட்டிஷ் அரசாங்கம் இந்திய மக்களின் கல்விக்காக ஆண்டுதோறும் ஒரு இலட்சம் ரூபாயை ஒதுக்க வேண்டும். 2) இத்தொகையைக் கம்பெனியின் நில வருவாய் உபரிப் பணத்திலிருந்து செலவிட வேண்டும். 3) அரசாங்கம் செலவிடும் பணம் இந்திய இலக்கியங்களை மீட்கவும், கல்வி அறிவைப் பெருக்கவும் பயன்படுத்தப்பட வேண்டும். 4) கம்பெனியின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் மக்கள் அனைவருக்கும் அறிவியல் அறிவை அறிமுகப்படுத்த வேண்டும். 5) கல்வி அறிவுள்ள சுதேசிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். 6) 1813 பட்டயம் 20 ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசீலிக்கப்பட்டு புதுப்பிக்கப்பட வேண்டும். சுருங்கக் கூறின், இப்பட்டயம் கல்வி வளர்ச்சிக்கான அரசாங்கப் பொறுப்பு, மானியத்தொகை, கல்வியின் நோக்கம், கல்வித்திட்டம் போன்றவற்றை சந்தேகத்துக்கு இடமின்றித் தெளிவுபடுத்தியது. 1813 பட்டயத்தின் அடிப்படையில் தமிழ் நாட்டுக் கல்வி முறை வகுக்கப்பட்டு, பின்பற்றப்பட்டது. இப்பட்டயத்தின் அடிப்படையிலேயே தாமஸ்மன்றோ தனது கல்விக்கொள்கையை வகுத்தார். மன்றோவின் பரிந்துரைப்படி 1822-இல் பொதுக்கல்வி போர்டு (Board of Public Instruction) உருவாக்கப்பட்டது. தாய் மொழிக் கல்விப் பள்ளிகள் துவக்கப்பட்டன. 1827-இல் சென்னையில் மருத்துவப்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது.

**புதிய பரிசோதனை, 1833**

1833-ஆம் ஆண்டு பட்டயச் சட்டம் (1813) புதுப்பிக்கப்பட்டது. அதன்பின் பல அமெரிக்க, ஜெர்மானிய சமயப்பரப்பூழியர்களும், சங்கங்களும் இந்தியாவுக்கு வந்தனர். இக்காலகட்டத்தில் அலெக்சாண்டர் டப் என்ற ஒரு சமயப் பராப்பாளர் ஒரு கருத்தைக் கூறினார். அதாவது, அனைவருக்கும் கிறித்துவக் கல்வி அளிப்பது இயலாத காரியம். எனவே, மேல்தட்டு மக்களுக்கு மேலைநாட்டுக் கல்வியைக் கொடுத்தால் அவர்கள் மூலம் கல்வியின் பயன் கீழ்த்தட்டு மக்களைச் சென்றடையும். இது கீழ்நோக்கிப் பரவும் கோட்பாடு என்று அழைக்கப்பட்டது. இப்புதிய

கோட்பாட்டின்படி திருநெல்வேலியில் மட்டும் 107 பள்ளிகள் துவக்கப்பட்டன. இவற்றில், 2,882 மாணவர்கள் சேர்ந்தனர். இங்கிலாந்தின் சமயப்பரப்பு சங்கம் சார்பாக கௌ என்பவர் சென்னையில் பள்ளிகளைத் துவங்கினார். அதேபோன்று ஆன்டர்சனும் பிரைட்வுட்டும் சென்னையில் துவங்கிய பள்ளியே பின்னர் சென்னை கிறித்துவக் கல்லூரியாக விரிவடைந்தது. சேலம், கோவை, கடப்பா, பெல்லாரி போன்ற நகர்களிலும் இதுபோன்ற பள்ளிகள் துவக்கப்பட்டன. இப்பள்ளிகள் அனைத்தும் அரசாங்க ஆதரவின்றி துவக்கப்பட்டவையாகும். 1830க்கும் 1875க்கும் இடைப்பட்ட காலத்தை சமயப் பரப்புப் பள்ளி காலம் என்று அழைக்கலாம் என்று கூறுகிறார். கல்வி ஆராய்ச்சியாளர் பத்மா ராமச்சந்திரன்.

**மெக்காலே தீர்வு, 1835**

**மூன்று கருத்துக்கள்**

கம்பெனி கல்வி வளர்ச்சிக்காக ஒதுக்கும் தொகையை எவ்வாறு செலவு செய்வது என்பது பற்றி அதிகாரிகள் மற்றும் கல்வி ஆர்வலர்களுக்கிடையே ஒருமித்த கருத்து உருவாகவில்லை. அவர்களிடையே மூன்று வேறுபட்ட கருத்துக்கள் நிலவின. 1) சமஸ்கிருதம், அராபிய, பாரசீய மொழிகளில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். 2) மேற்கத்திய அறிவியல் கல்வியை ஆங்கில வழி கற்பிக்க வேண்டும். 3) நவீன கல்வியைத் தாய்மொழி மூலம் கற்பிக்க வேண்டும். இந்த சர்ச்சைக்குத் தீர்வு காண்பதற்காக தாமஸ் பாபிங்டன் மெக்காலே கேட்டுக் கொள்ளப்பட்டார்.

**மெக்காலே தீர்வு**

மெக்காலே கவர்னர் ஜெனரல் அவையில் சட்ட உறுப்பினராகவும், பொதுக் கல்விக் குழுவின் தலைவராகவும் இருந்தார். அக்கால அறிவு மேதைகளில் அவர் ஒருவராகத் திகழ்ந்தார். மெக்காலேயின் வரலாற்றுச் சிறப்புமிக்க கல்விக் குறிப்பில் (Macaulay's Minute, 1835) கல்விப்பயிற்சி மொழி பற்றிய சர்ச்சைக்கு ஒரு தீர்வைக் கொடுத்தார். மேற்கத்திய அறிவியல் கல்வியைக் கொடுப்பதற்கேற்ப இந்திய மொழி எதுவும் வளர்ச்சியடையவில்லை என்பதால் நவீன கல்வியை ஆங்கில வழி சொல்வதே சிறந்தது என்பதே மெக்காலேயின் தீர்வாகும்.

**முக்கிய முடிவு**

மெக்காலேயின் பரிந்துரையை ஏற்றுக்கொண்ட கவர்னர் ஜெனரல் பெண்டிங் பிரபு பின்வரும் முக்கிய முடிவை அறிவித்தார். 1) தாய் மொழியில் கற்பிக்கும் கல்விக்கூடங்கள் வழக்கம்போல் செயல்படலாம். 2) பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நோக்கம் மக்களுக்கு அறிவியல் மற்றும் இலக்கியக் கல்வியை ஆங்கிலத்தின் மூலம் கொடுப்பதேயாகும். 3) அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் கல்வி நிதி ஆங்கிலக் கல்விக்கு மட்டுமே செலவிடப்பட வேண்டும். சென்னையில் 1835இல் மருத்துவக் கல்லூரியும், 1841ஆம் ஆண்டு 67 மாணவர்களுடன் மாநிலக் கல்லூரியும் துவக்கப்பட்டன.

தாம்சான் திட்டம், 1848

**பெண் கல்வி**

ஜேம்ஸ் தாம்சான் வடமேற்கு மாகாணங்களின் துணை ஆளுநராக 10 ஆண்டுகள் பணியாற்றியவர். கல்வி நிபுணர். இவர் தயாரித்த கல்வித் திட்டத்தில் பெண் கல்விக்குப் பிரதான இடத்தைக் கொடுத்தார். இந்தியரின் திறமைகளை வெகுவாக ஊக்குவிப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்ற இலக்கோடு கவர்னர்-ஜெனரலாகப் பொறுப்பேற்ற டல்ஹெளசி பிரபு தாம்சான் கல்வித்திட்டத்துக்கு முழு ஆதரவையும் அளித்தார். அதுமட்டுமல்ல. கவர்னர்-ஜெனரால் அவையின் உறுப்பினரும், கல்விக் குழுவின் தலைவருமான பெத்யூன் பெண் கல்விக்கு சிறப்பிடம் கொடுத்து விரிவுபடுத்துவதில் ஊக்கத்துடன் செயல்பட்டார். பெண்களைப் படிக்க வைத்தால் திருமணமானவுடன் விதவைகளாகி விடுவர் என்ற மூட நம்பிக்கையுடைய வங்காளத்தில் பெத்யூன் ஒரு பெண்கள் பள்ளியைத் துவக்கினார். இப்புரட்சிகரமான முயற்சியை முன்மாதிரியாகக் கொண்டு சென்னை ஆளுநராக இருந்த தாமஸ் மன்றோ பெண்கல்விக்கு சாதகமான கல்விக் கொள்கையை வகுத்தார். இக்கொள்கை சமுதாயத் தீமைகளிலிருந்து பெண்களை விடுவிக்க பெண் கல்வி இன்றியமையாதது என்ற மன்றோவின் லட்சியத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. மன்றோவின் பெண் கல்விக்கொள்கை, தற்காலத்தமிழ் நாட்டு கல்வி வளர்ச்சி வரலாற்றில் முற்போக்கு நடவடிக்கையாகும்.

**தொழில்கல்வி**

தாம்சான் கல்வித் திட்டத்தின் மற்றொரு முக்கியக்கூறு தொழில் கல்வி ஆகும். இந்தியாவில் பாதைகளும், பாலங்களும், ஆறுகளும் பிற உள்கட்டுமான வசதிகளும் பெருக வேண்டுமாயின் சிவில் பொறியாளர்களும் பிற கீழ்நிலை தொழில்நுட்ப அலுவலர்களும் ஆயிரக்கணக்கில் தேவைப்படுவர் என்பதை நன்கறிந்த தாம்சான் ரூர்கியில் ஒரு சிவில் பொறியியல் கல்லூரியைத் துவக்கினார். அவரது இம்முயற்சிக்கும் கவர்னர் ஜெனரல் டல்ஹெளசி பிரபு முழு ஆதரவையும் நல்கினார். தாம்சானின் தொழில்நுட்பக் கல்வித் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு மேஜர் மெயிட்லாந்து சென்னையில் ஒரு தொழில்நுட்பப் பள்ளியைத் துவக்கினார். அப்பள்ளி மாபெரும் வெற்றியடைந்தது. சென்னைத் தொழில்நுட்பப் பள்ளியை முன்மாதிரியாகக் கொண்டு டல்ஹெளசி பிரபு வங்காளத்தில் பல தொழில்நுட்பப் பள்ளிகளைத் துவக்கத்திட்டமிட்டார்.

**ஸ்டான்லியின் கல்விக்குறிப்பு, 1850**

**துவக்கக்கல்வி**

அரசாங்கத் திட்டங்களால் அடித்தட்டு மக்களுக்கு கல்வியின் பயன் சென்றடையவில்லை என்பது தெரியவந்தது. எனவே, அவர்களுக்குத் துவக்கக் கல்வியும் வாழ்க்கைக்குத் தேவையான தொழில் கல்வியும் கொடுக்க வேண்டியதன் அவசியத்தை அரசாங்கம் உணர்ந்தது. துவக்கப்பள்ளிகளின் எண்ணிக்கையை

அதிகரிக்கவும், தொழில் கல்வி நிறுவனங்களைத் துவக்குவதற்குமான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. எனினும், கம்பெனி அதிகாரிகள் துவக்கப்பள்ளிகளுக்குத் தொடர்ந்து முன்னுரிமை அளிக்காமல் உயர்நிலைக் கல்வியை ஊக்குவித்தனர். அதன் விளைவாக துவக்கக் கல்வி துவண்டு போயிற்று.

இக்குறையைக் களைவதற்காக 1850-ஆம் ஆண்டு டான்லி பிரபு ஒரு கல்விக்குறிப்பைத் தயார் செய்தார். இக்குறிப்பில் கம்பெனியின் அரசாங்கமே துவக்கக் கல்விக்கான பொறுப்பை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டது. இதற்கான செலவை சரிக்கட்ட அரசாங்கம் தல வரிகளை விதிக்கலாம் என்ற ஆலோசனை கூறப்பட்டது. அதன்பின் துவக்கக் கல்வி வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. 1882-இல் அமைக்கப்பட்ட இந்தியக் கல்விக்குழு துவக்கக் கல்விக்கான பொறுப்பை உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தது குறிப்பிடத்தக்கது.

**உட்டின் கல்வித்திட்டம், 1854**

**சிறப்பு அம்சங்கள்**

சர் சார்லஸ் உட் கட்டுப்பாட்டுக்குழுவின் தலைவராக இருந்தார். கவர்னர் ஜெனரல் டல்ஹௌசி பிரபுவின் வேண்டுகோளுக்கு இணங்கி சார்லஸ் உட் ஒரு அகல் விரிவான கல்வித்திட்டத்தைத் தயாரித்தார் (Wood's Despatch, 1854). உட் திட்டத்தின் சிறப்புக் கூறுகளாவன : 1) தாய்மொழி வழி கற்பிக்கும் கல்விக் கூடங்கள் தொடர்ந்து செயல்படலாம். அவை வாழ்க்கைக்குப் பயன்படக் கூடியவாறு செயல்படவேண்டும். 2) அரசாங்க ஆதரவு பெறும் கல்வி நிறுவனங்களில் அறிவியல்கள், ஐரோப்பிய இலக்கியம், கலைப்பாடங்கள் கற்பிக்கப்படுதல் வேண்டும். 3) இக்கல்வித் திட்டத்தை நிறைவேற்ற ஒவ்வொரு ராஜதானியிலும் ஒரு பொதுக்கல்வித்துறை துவக்கப்பட வேண்டும். 4) கல்விக்காக ஒதுக்கப்படும் தொகை துவக்கக் கல்விக்காக செலவிடப்பட வேண்டும். 5) கல்வியின் பயன் அடித்தட்டு மக்களை சென்றடைய வேண்டும் என்பதற்காக தனியார் பள்ளிகளுக்கும் கல்விமானியம் வழங்க வேண்டும். 6) அதேபோன்று, சமயச் சார்பற்ற கல்வி அளிக்கும் பள்ளிகளுக்கும் மானியம் வழங்கலாம். 7) ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சி அளிக்க வேண்டும். 8) தரமான பாடப்புத்தகங்கள் வெளியிடப்பட வேண்டும். 9) பெண் கல்வி வளர்ச்சிக்கு அரசாங்கம் 'வெளிப்படையான இதயபூர்வமான' ஆதரவை அளிக்கும். 10) லண்டன் பல்கலைக்கழகத்தை முன் மாதிரியாகக் கொண்டு சென்னை, கல்கத்தா, பம்பாய் ஆகிய நகரங்களில் தலா ஒரு பல்கலைக்கழகம் துவக்கப்பட வேண்டும்.

பொதுக்கல்வித்துறை

உட்டின் கல்வித்திட்டத்தின் கீழ் சென்னையில் ஒரு பொதுக் கல்வித்துறை துவக்கப்பட்டது. இத்துறைக்கு ஒரு முறையான நிர்வாகத் தலைமை இயக்குநர் நியமிக்கப்பட்டார். இவருக்கு உதவியாக பல ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவர்கள் பள்ளிகளுக்குச் சென்று, அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பதைக் கண்டறிந்து கல்வித்துறை இயக்குநருக்கு ஆண்டு அறிக்கை அளித்தனர். 1856-இல் சென்னை சைதாப்பேட்டையில் அரசு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி துவக்கப்பட்டது.

1857-ஆம் ஆண்டு செப்டம்பர் 5ஆம் தேதி சென்னை பல்கலைக்கழகம் துவக்கப்பட்டது. இதோடு கல்லூரிகள் இணைக்கப்பட்டன. ஆரம்பத்தில் சென்னை பல்கலைக்கழகம் கல்லூரிகளுக்குத் தேர்வு நடத்திப்பட்டம் வழங்கும் அமைப்பாக மட்டுமே இருந்தது. பட்டப்படிப்புக்கான பாடங்கள் கல்லூரிகளில் மட்டுமே கற்பிக்கப்பட்டன. சென்னைப் பல்கலைக்கழகம் லண்டன் பல்கலைக்கழகத்தை முன்மாதிரியாகக் கொண்டு துவக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. சி.டபிள்யு. தாமோதரம் பிள்ளையும், கரோல். வி.விஸ்வநாத பிள்ளையும் இப்பல்கலைக்கழகத்தின் முதல் பட்டதாரிகள் ஆவர். சர்.எ. சுப்ரமணிய ஐயர் இப்பல்கலைக்கழகத்தின் முதல் துணைவேந்தர்.

**கல்விச் சீர்திருத்தம்**

**தாமஸ் மன்றோ**

தாமஸ்மன்றோ, தமிழ்நாட்டில் கல்விச்சீர்திருத்தம் செய்வதற்கு முன்னாள் சென்னை ராஜதானியில் நடைமுறையில் இரந்த கல்விமுறை பற்றிய ஒரு ஆய்வை மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியாளர்களைக் கொண்டு திரட்டப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட ஆய்வறிக்கை பின்வரும் கல்வி நிலைப்பாட்டைக் காட்டியது. 1) தமிழ்நாட்டின் பல மாவட்டங்களில் பள்ளிகள் செயல்பட்டுக்கொண்டிருந்தன. 2) இப்பள்ளிகளின் பயனைப் பிராமணர்களும், பிற உயர் சாதி மக்கள் மட்டுமே பெற்றுவந்தனர். 3) தாழ்த்தப்பட்ட மக்களும், பிற பிற்படுத்தப்பட்டோருக்கும் கல்வி மறுக்கப்பட்டது. 4) அரசாங்கத்துக்கும் கல்வி வளர்ச்சிக்கும் தொடர்பில்லாமல் இருந்தது. 5) அளிக்கப்பட்ட கல்வியும் ஒரு சீராக இல்லை. 6) 12,850,941 மக்கள் தொகை கொண்ட சென்னை ராஜதானியில் 12,498 பள்ளிகள் மட்டுமே இருந்தனர். தமிழ்நாட்டில் முதல் முறையாக அறிவியல் ரீதியாக மேற்கொள்ளப்பட்ட கல்வி ஆய்வு இதுவேயாகும்.

**மன்றோவின் கல்விக் கொள்கை**

சென்னை, ராஜதானியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு அறிக்கையின் அடிப்படையில் தாமஸ்மன்றோ ஒரு குறிப்பைத் தயார் செய்தார் (Minute of 10 March, 1826) அக்குறிப்பில் மன்றோ மூன்று முக்கிய பரிந்துரைகளைக் கூறினார். 1) ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் இரண்டு பள்ளிகளைத் துவக்க வேண்டும். 2) அதேபோன்று ஒவ்வொரு தாலூக்காவிலும் ஒரு பள்ளியை ஆரம்பிக்க வேண்டும். 3) இப்பள்ளிகளின் வளர்ச்சிக்காக அரசாங்கம் ஆண்டுதோறும் ரூ.50,000 நிதி ஒதுக்க வேண்டும். இப்படி நிதி ஒதுக்குவதன் மூலம் மக்களுக்குக் கல்வி அளிக்க வேண்டியதன் பொறுப்பை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்தினார் மன்றோ.

மன்றோவின் கல்வித்திட்டத்தை கம்பெனி ஏற்றுக்கொண்டது. ஆனால் அத்திட்டத்தை முனைப்புடன் செயல்படுத்துவதற்கு முன்பே தாமஸ் மன்றோ அகாலமரணமடைந்தார். மன்றோவுக்குப் பின் அவரது திட்டத்தை முன்னின்று நடத்தக்கூடியவர்கள் இன்மையால் கல்வி முற்போக்கு முயற்சி முடங்கிப்போயிற்று. கல்விக்காக ஒதுக்கப்பட்ட பணம் சரியாகச் செலவிடப்படவில்லை. துவக்கப்பட்ட பள்ளிகள் நலிவுற்றன எனினும், தாமஸ்மன்றோ வகுத்துக்கொடுத்த கல்விக்கொள்கை பின்வந்தோருக்கு முன்மாதிரியாக அமைந்தது.

## இந்திய விடுதலைப்போராட்டத்தில் தமிழ்நாட்டின் பங்கேற்பு, 1885-1947

### வரலாற்று நிகழ்ச்சி

இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்ச்சியாகும். மேற்கத்தியப் பண்பாட்டின் தாக்கம், இந்திய சமுதாய, சமய மறுமலர்ச்சி, ஆங்கில அதிகாரவர்க்கத்தின் ஆதிக்கப்போக்கு, அந்நிய அரசாங்கத்தின் சுரண்டல் கொள்கை ஆகியவற்றின் விளைவாக இந்தியரிடையே தேசிய உணர்ச்சி உருவாயிற்று. சென்னை, வங்காளம், பம்பாய் ராஜதானிகளில் துவக்கப்பட்ட அரசியல் சார்ந்த அமைப்புகள் இந்திய தேசியத்தின் ஊற்றுக் கண்களாயின. இப்போக்கின் இயல்பான விளைவே இந்திய தேசிய காங்கிரசின் தோற்றமாகும். காங்கிரஸ் துவக்கப்பட்ட பின்னர் இந்திய விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு புதிய திருப்பம் ஏற்பட்டது. இப்போராட்டத்தின் துவக்க காலத்தில் தமிழ் நாட்டின் பங்கேற்பு பெருமைக்குரியதாக இருந்தது.

### பெருமைக்குரிய பங்கு

இந்திய விடுதலைப்போராட்டத்தில் தமிழ் நாட்டின் பங்கு பெருமைக்குரிய ஒன்றாகும். விஜய நகர, மதுரை சுல்தானிய, மராத்திய மேலாதிக்கங்களை அந்நிய ஆதிக்கமாகக் கருதாத தமிழ்நாடு ஆங்கிலேய ஆட்சிக்கெதிரான போராட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே தென்னிந்தியக் கிளர்ச்சி (1800-1801)க்குத் தோற்றுவாயாக இருந்தது. தமிழ்நாடு, வேலூர்க் கிளர்ச்சி (1806)யில் தமிழ் நாட்டுப் படைவீரர்கள் துணிவுடன் போராடினார்கள். ஆயினும் அவ்விரு துவக்கால ஆங்கிலேய ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் முறியடிக்கப்பட்டன. அதன் பின்னர் ஆங்கிலக் கல்வி பெற்ற தமிழ்நாட்டுத் தலைவர்கள் உரிமை உணர்வும், விடுதலை வேட்கையும் பெற்று அரசியல் சார்ந்த அமைப்புகளை ஏற்படுத்தினர். சென்னை சுதேசி சங்கமும், சென்னை மகாஜன சபையும் அத்தகைய அமைப்புகளேயாகும். 1884 டிசம்பர் மாதம் சென்னை அடையாற்றில் பிரம்மஞான சபையின் ஆண்டுக்கூட்டத்துக்குப் பின் திவான் இரகுநாதராவ் இல்லத்தில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பிரதிநிதிகள் கூடி இந்தியாவுக்குப் பொதுவான ஒரு அமைப்பை ஏற்படுத்தவும், அதன் மாநிலக் கிளைகளைத் துவக்கவும், அடுத்த ஆண்டு இறுதியில் தேசிய மாநாட்டைக் கல்கத்தாவில் கூட்டவும் தீர்மானித்தனர். ஆனால் அத்தீர்மானம் செயல்வடிவம் பெறுவதற்கு முன்னரே பம்பாயில் இந்திய தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்டுவிட்டது.

**தமிழ்நாடும் துவக்க கால காங்கிரசும்**

**முதல் மாநாட்டில் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள்**

ஆலன் ஆக்டேவியன் ஹியூமின் சோர்வற்ற முயற்சியின் விளைவாக இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாடு 1885 டிசம்பர் 28ஆம் தேதி பம்பாயில் கூடியது. அக்கூட்டத்தில் கலந்து கொண்ட 72 பிரதிநிதிகளில் சென்னை மாநிலத்திலிருந்து சென்றவர்கள் 21 பேர். அவர்களுள் தமிழ்நாட்டுப் பகுதியிலிருந்து சென்ற பிரதிநிதிகள் 16 பேர். எஸ்.சுப்பிரமணிய அய்யர், வி. அனந்தாச்சாரியார், எம். வீரராகவாச்சாரியார், பி.ரெங்கைய நாயுடு, எம்.ஏ.சுவாமிநாத ஐய்யர், எஸ. வெங்கடசுப்பராய பந்தலு, பி.கேசவப்பிள்ளை, சி.சிங்காரவேலு முதலியார், ரங்காச்சாரி, எஸ.வி.அத்ல்யீ, சபாபதி முதலியார், பால்பீட்டர் பிள்ளை, சாமிநாத ஐய்யர், நரசிம்மலுநாயுடு, வெங்கட சுப்பராயலு, கேசவப்பிள்ளை ஆகியோர் தமிழ்நாட்டுப் பிரதிநிதிகள் ஆவர். அவர்கள் அனைவரும் சென்னை மகாஜன சங்கத்தின் சார்பாகச் சென்றவர்கள் ஆவர். இவர்களன்றி சென்னை டிரேஷியன் சங்கத்தின் தலைவர் டி.எஸ். ஒயிட், சென்னை கலெக்டர் ஆர்.ரகுநாத ஐய்யர், ஆர்க்காடு பேராசிரியர் கே. சுந்தரராமன், திருவள்ளூர் டி.என். ஐய்யர் ஆகியோர் பார்வையாளர்களாகச் சென்றிருந்தனர். முதல் காங்கிரஸ் மாநாட்டுத் தலைவராக டி.டபிள்யு.சி.பானர்ஜியின் பெயரை வழிமொழிந்து, மாநாட்டின் முதல் தீர்மானத்தை முன்மொழிந்த பெருமை தமிழ் நாட்டுப்பிரதிநிதியான எஸ்.சுப்பிரமணிய ஐய்யருக்கே கிடைத்தது. இந்திய விடுதலைப்போராட்டத்தில் புதிய சகாப்தத்தைத் துவக்கிய இந்திய தேசிய காங்கிரசின் முதல் மாநாட்டிலேயே தமிழ் நாட்டிலிருந்து சென்ற பிரதிநிதிகள் சிறப்பிடம் பெற்றனர்.

**சென்னையில் மூன்றாவது மாநாடு**

1886 டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் இரண்டாவது மாநாட்டில் சென்னையிலிருந்து 47 பிரதிநிதிகள் சென்று கலந்து கொண்டனர். அவர்களுள் ஜி.சுப்பிரமணிய ஐய்யர், எஸ். சுப்பிரமணிய ஐய்யர், எஸ்.ஏ. சுவாமிநாத ஐய்யர், கேசவப்பிள்ளை, பி.ரெங்கைய நாயுடு, பி.அனந்தாச்சாரி ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

காங்கிரசின் மூன்றாவது மாநாடு 1887 டிசம்பரில் சென்னை நகரில், தற்போது ஆயிரம் விளக்கு என்றழைக்கப்படும் பகுதியில் மக்கீ தோட்டம் என்னுமிடத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. பக்ருதீன் தியாப்ஜியின் தலைமையில் கூடிய அம்மாநாடு முதன் முறையாகத் திறந்த வெளித் திடலில் பிரத்யேகமாக அமைக்கப்பட்ட அலங்காரப்பந்தலில் தனது நடவடிக்கைகளை மேற்கொண்டது. அதில் சென்னை மாநிலத்தின் சார்பாக 362 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சென்னை பட்டதாரிகள் சங்கம், சென்னை மகாஜன சபை, திருவல்லிக்கேணி இலக்கிய சங்கம், தென்னிந்திய வர்த்தகக் கம்பெனி, சென்னை மெட்டல் கம்பெனி, அஞ்சுமான் முப்தஸ்இலம், புரசைவாக்கம் இந்து நிதி, சாணார் முன்னேற்ற சங்கம் ஆகிய பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இம்மாநாட்டில் பங்கேற்றனர்.

சென்னை மாநாட்டின் ஒரு சிறப்பு அம்சம் அதன் செலவின் பெரும்பகுதி பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்பட்டதாகும். மாநாடு வரவேற்புக் குழுச்செயலரும் இந்து பத்திரிகை நிர்வாகியுமான மு.விஜயராகவாச்சாரியார் தமிழில் எழுதிய ‘காங்கிரஸ் வினாவிடை’ என்ற சிறு நூல் மலிவு விற்பனையில் விற்பனை செய்யப்பட்டு, அதனால் கிடைத்த நிதியம் மாநாட்டுச் செலவுக்குப் பயன்படுத்தப்பட்டது. ராஜா சர்.டி.மாதவராவ் வரவேற்புக் குழுத்தலைவராகப் பணியாற்றி மாநாட்டை வெற்றிகரமாக நடத்திக்கொடுத்தார். ராவ்சாகிப் மூக்கணாச்சாரி தமிழில் பேசி அனைவரது பாராட்டையும் பெற்றார். அப்போது சென்னை கவர்னராயிருந்த கன்னிமாரா பிரபு சென்னை மாநாட்டில் கலந்து கொண்ட பிரதிநிதிகள் அனைவருக்கும் சிறப்பு விருந்தளித்துச் சிறப்பித்தார்.

துவக்ககால காங்கிரசோடு தமிழ்நாடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தது. 1887க்குப் பின்னர் 1894, 1898, 1923, 1927 ஆகிய ஆண்டுகளில் காங்கிரஸ் மாநாடு சென்னை நகரில் நடைபெற்றது. 1920 கௌகாத்தி காங்கிரஸ் மாநாட்டில் தலைவர் சி.பி.விஜயராகவாச்சாரியும், 1926 கௌகாத்தி காங்கிரஸ் மாநாட்டுத் தலைவர் எ.சீனிவாச ஐய்யங்காரும் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களே. துவக்க கால தமிழ் நாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும் ஆங்கிலக்கல்வி பெற்ற செல்வமும் செல்வாக்குமிக்க அரசாங்க விசுவாசிகளாகவே இருந்தனர். விக்டோரியா மகாராணியின் மறைவின் போதும் அவர்களது அரசு விசுவாசம் தெளிவாக வெளிப்பட்டது. இந்துவும் சுதேசமித்திரனும் தமிழ் நாட்டு மக்களின் கருத்துக்களைப் பிரதிபலித்தன. அவை அவ்வப்போது அரசாங்கத்தின் நோக்கையும் போக்கையும் கண்டிக்காவிட்டாலும் குறை கூறவே செய்தன. இந்நூற்றாண்டின் துவக்கத்தில் நிகழ்ந்த வங்கப் பிரிவினையும் (1905), ஜப்பான் ரஷ்யாவைத் தோற்கடித்த நிகழ்ச்சியும் (1904-1905) தமிழ் நாட்டின் அரசியல் விழிப்புணர்ச்சிக்குப் புதிய பரிமாணத்தைத் தந்தன.

**தமிழ்நாட்டு மிதவாதிகள்**

கோபால கிருஷ்ண கோகலேயைப் பின்பற்றியவர்கள் காங்கிரஸ் மிதவாதிகள் என்றழைக்கப்பட்டனர். கோகலேயின் வலக்கரமாகத் திகழ்ந்த தமிழ் நாட்டைச் சேர்ந்த வி.எஸ்.சீனிவாச சாஸ்திரி மிதவாதிகளுக்கெல்லாம் மிதவாதியாக விளங்கினார். அவரை போன்றே பி.எஸ். சிவகாமி ஐய்யரும், வி. கிருஷ்ணசாமி ஐய்யரும், டி.ஆர். வெங்கட்ராமசாஸ்திரியும், ‘இந்தியன் ரெவ்யூ’ பத்திரிக்கை ஆசிரியரான ஜி.ஏ.நடேசனும் தமிழ் நாட்டின் தலைசிறந்த மிதவாதிகளாவர். அவர்கள் அனைவரும் பிராமண மத்திய தர வகுப்பைச் சார்ந்தவர்களாகவே இருந்தனர். பெரும்பாலும் வக்கீல் தொழிலை மேற்கொண்டிருந்தனர். தமிழ்நாட்டு மிதவாதிகள் அரசாங்க ஆதரவாளர்கள். மார்லி-மிண்டோ சீர்திருத்தத்தின் (1909) விளைவாக ஏற்படுத்தப்பட்ட சென்னை சட்டமன்றத்தில் மிதவாதிகள் இடம் பெற்றனர். வி.கிருஷ்ணசாமி ஐய்யரும், பி.எ. சிவகாமி ஐய்யரும் 1914க்கு முன் சென்னை மாநில கவர்னர் ஆட்சிக்குழுவில் இடம் பெற்ற முக்கிய மிதவாதத்தலைவர்களாகவர்.

1917 ஆகஸ்டு 20-ஆம் தேதி வெளியிடப்பட்ட மாண்டேகுவின் அறிக்கையைத் தமிழ்நாட்டு மிதவாதிகள் ஆர்வத்துடன் ஆதரித்தனர். அதேபோன்று இரட்டை ஆட்சியையும் ஏற்றுக்கொண்டனர். சீனிவாச சாஸ்திரி போன்ற மிதவாதத் தலைவர்கள் ரௌலட் சட்டத்தை எதிர்த்து சத்தியாகிரகத்தினின்றும் ஒதுங்கியே நின்றனர். ஒதுங்கி நின்றதோடு மட்டுமன்றி அந்நேரடி நடவடிக்கையைக் கண்டிக்கவும் செய்தனர். அதனால் காந்தி தனது ரௌலட் சத்தியாகிரகத்துக்குத் தமிழ்நாட்டு தீவிரவாதிகளின் ஆதரவை நாட வேண்டியதாயிற்று என்கிறார் டேவிட் அர்னால்டு.

**தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள்**

பாலகங்காதர திலகரைப் பின்பற்றியவர்கள் தீவிரவாதிகள் என்றழைக்கப்பட்டனர். சேலம் விஜயராகவாச்சாரியைத் தமிழ் நாட்டுத் தீவிரவாதத்தின் தந்தை எனக் கூறலாம். அவரது பாசறையில் பயிற்சி பெற்றவர்தான் சி. ராஜகோபாலாச்சாரி. சேலத்தைத் தென்னாட்டின் பூனா எனக் கருதிக் கொண்டு திலகர் அடிபற்றித் தமிழ் நாட்டுத் தீவிரவாதிகள் செயல்பட்டனர். சென்னையில் டி.எம்.நாயர், எஸ். கஸ்தூரிரங்க ஐய்யங்கார், ஏ. ராமசாமி ஐய்யங்கார், டி.ரெங்காச்சாரி ஆகியோர் செல்வாக்கு மிக்கத் தீவிரவாதிகளாகத் திகழ்ந்தனர்.

வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த தேசிய இயக்கத்தால் பெரிதும் கவரப்பட்ட வ.உ.சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடியில் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை 1906 நவம்பரில் துவக்கினார். 1907 ஆம் ஆண்டில் நடைபெற்ற சூரத் காங்கிரசுக்கு நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்நாட்டுத் தீவிரவாதிகளைத் திரட்டி வருமாறு வ.உ.சிதம்பரம் பிள்ளைக்கு அரவிந்த்கோஷ் கொடுத்த தந்தியைச் சிரமேற்கொண்டு தமிழ் நாட்டுத் திலகரான அவர் சென்னை சென்று சுப்பிரமணிய பாரதியாருடனும், மண்டையம் சீனிவாசாச்சாரியுடனும் கலந்து பேசித் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகளை சூரத் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். சுரேந்திரநாத் எத்திராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி, பாரதியார், வ.உ.சிதம்பரம் பிள்ளை, சீனிவாசராகவாச்சாரி, சக்கரைச் செட்டியார் ஆகிய தமிழ் நாட்டுத் தீவிரவாதப் பிரதிநிதிகள் திலகரைச் சூழ்ந்து கொண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தனர். ‘தமக்கு எத்தனை அடிபட்டபோதும் திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாது நின்ற இந்த சென்னை பிரதிநிதிகளின் தீரத்தன்மையை எண்ணும் போது உடல் புல்லரித்து மிகுந்த மகிழ்ச்சி உண்டாக்கியது’ என்று அந்த அனுபவத்தைப் பற்றி எழுதியுள்ளார் பாரதியார்.

1908 பிப்ரவரி மாதம் கோரல் தொழிற்சாலை வேலை நிறுத்தத்தில் வ.உ.சிதம்பரம் பிள்ளை சம்பந்தப்பட்டதும், மார்ச் மாதம் தடை உத்தரவை மீறி அவரும் சுப்பிரமணிய சிவாவும் பொதுக் கூட்டத்தில் பேசியதும் அவர்கள் இருவரும் கைது செய்யப்படக் காரணமாயின. அவர்கள் கைதானதை அடுத்து தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் வன்முறைக் கலவரங்கள் ஏற்பட்டுத் துப்பாக்கிச் சூட்டில் முடிந்தது. 1911 ஜீன் 11ஆம் தேதி வாஞ்சிநாதன் திருநெல்வேலி மாவட்டத் துணைக் கலெக்டரை மணியாச்சி ரயில் சந்திப்பு

நிலையத்தில் சுட்டுக்கொன்றார். வன்முறை நிகழ்ச்சிகளை ஒடுக்க அரசாங்கம் மேற்கொண்ட அடக்குமுறையின் விளைவாகத் தமிழ்நாட்டுத் தீவிரவாதிகள் மறைமுகமாகச் செயல்படத் துவங்கினர். அவர்களில் சி.சுப்பிரமணிய பாரதியும், வ.வே.சுப்பிரமணிய ஐய்யரும், நீலகண்ட பிரம்மச்சாரியும், சுதேசி பத்மநாப ஐய்யரும், சுப்பிரமணிய சிவாவும் குறிப்பிடத்தக்கவர்கள்.

தமிழ்நாட்டு ‘தேசிய போராளிகள்’

மிதவாதிகள், தீவிரவாதிகள் ஆகியோரின் சட்டரீதியான நடவடிக்கைகளைக் பிரிட்டிஷ் அரசாங்கம் முறியடித்த போது தீவிரவாதிகளில் சிலர் பயங்கரவாதிகளாயினர். மிதவாதிகளிடமிருந்து தீவிரவாதிகள் தோன்றியது போன்று தீவிரவாதிகளிடமிருந்து பயங்கரவாதிகள் உருவாயினர். இவர்களில் சிலர் 1905-ல் இலண்டனில் ‘ஹோம் ரூல் லீக்’ என்ற அமைப்பையும், 1906-இல் ‘இந்தியா விடுதி’ என்ற முகாமையும் அமைத்தனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த வ.வே.சுப்பிரமணிய ஐயரும், திருச்சி டாக்டர் டி.எ.எ.ராஜனும், எம்.பி.டி.ஆச்சாரியாவும் இப்பயங்கரவாதப் பாசறையில் பயிற்சி பெற்றோர் ஆவர். வெள்ளை அதிகாரிகளைக் கொன்று அந்நிய ஆட்சியாளர்களிடையே பயத்தை ஏற்படுத்தி தக்க தருணத்தில் வன்முறைக் கிளர்ச்சி செய்து, இந்தியாவை விடுவிப்பது இவர்களது குறிக்கோளாகும்.

**வ.வே.சு.ஐயர்**

பாரிஸ்டர் படிப்புக்காக இலண்டன் சென்ற வ.வே.சு.ஐயர் பயங்கரவாதியானார். ‘இந்தியா விடுதி’யில் தங்கியிருந்த இவர் பிற பயங்கரவாதிகளுடன் சேர்த்து இந்திய விடுதலைக்காக பிரிட்டிஷ் அரசை எதிர்த்து ஆயுதப் புரட்சியை ஏற்படுத்தத் திட்டமிட்டார். 1908-இல் இவர்களோடு ‘இந்தியா விடுதி’யில் தங்கியிருந்த மதன்லால் திங்கரா என்ற இந்திய பயங்கரவாதி கர்ஸான் வாலி என்ற பிரிட்டிஷ் அதிகாரியைச் சுட்டுக்கொன்றதையடுத்து இந்தியா விடுதி பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தீவிர கண்காணிப்புக்குள்ளாகியது. பயங்கரவாதிகள் தங்களது பாசறையை இலண்டனிலிருந்து பாரிசுக்கு மாற்றினார்.

வ.வே.சு.ஐயர் வீரசவார்க்கரின் ‘1857 முதலாவது இந்திய சுதந்திரப்போராட்டம்’ என்ற நூலை மராத்தியிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அரசாங்கத் தடையை மீறி, உலகின் பல பகுதிகளுக்கும் அனுப்பினார். “தியாகப் பலிக்கு ஆயத்தமாகுங்கள், பாரத மாதா அழைக்கின்றார், 1857 திரும்புகிறது” என்ற துண்டுப் பிரசுரங்களுடன் புத்தகங்கள் தாங்கிய பெட்டி ஒன்றைப் பாண்டிச்சேரிக்கு அனுப்பினார். ஐயர் ரஷ்யாவுக்குச் சென்று வெடிகுண்டு தயாரிக்கும் முறையைக் கற்றுக்கொண்டு புதுவைக்கு வந்தார்.

புதுவையில் தஞ்சையில் புகுந்த ஐயர் ‘தர்மாலயம்’ என்ற அமைப்பை ஏற்படுத்தி பயங்கரவாதப் புரட்சியாளர்களுக்குக் குத்துச்சண்டை, மல்யுத்தம், கத்திச்சண்டை, துப்பாக்கிச் சுடல் ஆகியவற்றில் பயிற்சி அளித்துவந்தார்.

புதுவையில் புகலிடம் பெற்றிருந்த மற்றொரு தமிழ்நாட்டுப் பயங்கரவாதியான நீலகண்ட பிரம்மச்சாரியைப் பார்க்கச் சென்ற இளைஞர் வாஞ்சிநாதனுக்குப் 'பிரௌனிங்' கைத்துப்பாக்கியால் சுடுவதற்குப் பயிற்சி அளித்தார் வ.வே.சு.ஐயர்.

**வாஞ்சிநாதன்**

செங்கோட்டை இரகுபதி ஐயரின் மகனான வாஞ்சிநாதன் திருவிதாங்கூரிலுள்ள புனலூரில் அரசாங்கக் காட்டிலாகாவில் பணிபுரிந்துவந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா போன்ற தூய்மையான தேசியவாதிகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளால் வெள்ளை அதிகாரிகளுக்கெதிராக வெறுப்பையும், வஞ்சத்தையும் வளர்த்துக் கொண்டார் வாஞ்சிநாதன். அரசாங்க அடக்குமுறைக்குக் காரணமான நெல்லை மாவட்ட கலெக்டர் ராபர்ட் வில்லியம் ஆஷ் என்ற அதிகாரியைக் கொல்லத் திட்டமிட்டார். புதுவையிலிருந்த நீலகண்ட பிரம்மச்சாரியை சந்தித்தார். வ.வே.சு.ஐயரிடம் துப்பாக்கிச் சுட பயிற்சி பெற்றார். 1911, ஜீன் 17ஆம் தேதி கொடைக்கானலுக்குச் செல்வதற்காக நெல்லையிலிருந்து புகை வண்டியில் தன் மனைவியுடன் புறப்பட்டுச் சென்று கொண்டிருந்த ஆஷை மணியாட்சி புகைவண்டி நிலையத்தில் 'பிரௌனிங்' கைத்துப்பாக்கியால் சுட்டுக்கொன்றுவிட்டு தன்னையும் சுட்டுக் கொண்டு உயிர்த்தியாகம் செய்தார் வாஞ்சிநாதன்.

**நீலகண்ட பிரம்மச்சாரி**

நீலகண்ட பிரம்மச்சாரி ஆஷ் கொலை வழக்கில் குற்றவாளியாகக் கருதப்பட்டு ஏழாண்டு கால சிறைத்தண்டனை பெற்றார். இவர் புதுவையில் தஞ்சம் புகுந்திருந்த போது 1910 ஏப்ரல் 10ஆம் தேதி 'பாரத சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அந்நிய அதிகாரிகளைக் கொன்று இந்தியாவுக்கு சுயராஜ்யம் பெறுவதே அதன் நோக்கமாகும். இச்சங்க உறுப்பினர்கள் காளி சிலைக்கு முன் நின்று கொண்டு தலைவரின் ஆணைக்குக் கட்டுப்பட்டு எதையும் தியாகம் செய்யத்தயாராயிருப்பதாக ஆள்காட்டி விரலை அறுத்து இரத்தத்தில் தோய்த்துக் கையொப்பமிட்டனர். இரகசிய சதி வேலைகளில் ஈடுபட்டனர். சங்கேத மொழியில் கடிதங்களை எழுதிக் கொண்டனர்.

நீலகண்ட பிரம்மச்சாரியின் தலைமையில் இயங்கிவந்த பயங்கரவாத புரட்சிப்படை ஐரோப்பிய நாடுகளிலிருந்து ஆலோசனைகளையும், ஆயுத உதவியையும், பொருளுதவியையும் பெற்றுவந்தது. புதுவையில் 'சூரியோதம்' என்ற பத்திரிக்கையை நடத்தி வந்தார். வாஞ்சிநாதன் ஆஷை சுட்டுக்கொல்வதற்கு முன்பு புதுவை வந்து நீலகண்ட பிரம்மச்சாரியை சந்தித்தார். நீலகண்ட பிரம்மச்சாரி மீது சாட்டப்பட்ட ஆஷ் கொலைக்குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கூறி இவருக்கு ஏழாண்டு கால சிறைத்தண்டனை வழங்கப்பட்டது.

இவர் இரண்டாண்டு காலம் சிறையில் இருந்த பின்னர் 1914-இல் பெல்லாரி சிறையிலிருந்து தப்பியோடிவிட்டார். எனினும் இரண்டே நாட்களில் தர்மாவரம் புகை வண்டி நிலையத்தில் பிடிபட்டார். சிறையிலிருந்து தப்பியோடிய குற்றத்துக்காக

இவருக்கு மேலும் ஆறுமாத கால சிறை தண்டனை விதிக்கப்பட்டது. சிறை மீண்ட நீலகண்ட பிரம்மச்சாரி கம்யூனிஸ்டாக மாறினார். வங்கப்போராட்டத்தில் ஈடுபட்டு 1922-ல் பத்தாண்டு கால சிறைதண்டனை பெற்றார். வ.வே.சு.ஐயர் சேரன்மாதேவியில் 'பரத்துவாஜ் ஆசிரமம்' ஒன்றை நிறுவியதைப் போன்று நீலகண்ட பிரம்மச்சாரியும் கர்நாடகத்திலுள்ள நந்திமலையில் ஆசிரமம் ஒன்றை அமைத்து அமைதியாக வாழ்ந்து தனது 88வது வயதில் உயிர் நீத்தார்.

**மாடசாமி**

ஒட்டப்பிடாரத்தில் பிறந்த மாடசாமி வ.உ.சியின் வலக்கரமாக இருந்து சட்டப்பூர்வமாக நடத்தப்பட்ட சுதேசிக் கிளர்ச்சியில் பங்கேற்றார். பின்னர் வாஞ்சிநாதன் சார்ந்திருந்த பயங்கரவாதப் படையில் சேர்ந்தார். ஆஷ் கொலைக்குப் பிறகு தலைமறைவாகிவிட்டார். இவரைக் கைது செய்ய பகீரதப் பிரயத்தனம் செய்யப்பட்டது. அவரது வீட்டிலிருந்த பொருள்களும் அவருக்குச் சொந்தமான நிலங்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஒட்டப்பிடாரம் மாடசாமி பாண்டிச்சேரி, சிங்கப்பூர் வழியாக ஜெர்மனிக்குச் சென்றுவிட்டதாகக் கருதப்படுகிறது.

**ஆச்சாரியா**

எம்.பி.டி.ஆச்சாரியா சென்னை திருவல்லிக்கேணியில் வாழ்ந்துவந்த மைசூரைச் சேர்ந்த மண்டயம் குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது முழுப் பெயர் மண்டயம் பிரதிவாதி டி.எஸ்.எஸ்.ராஜன் ஆகியோரோடு தங்கி பயங்கரவாதப் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார். இவர் தூத்துக்குடி குருநாத ஐயர், டாக்டர் செண்பகராமன் ஆகியோருடன் சேர்ந்து பெர்லின் முகாமிலிருந்த புரட்சியாளரிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தார். பட்டதாரியான ஆச்சாரியா பெர்லின் முகாமில் இருந்து கொண்டு பயங்கரவாத ஆயுதப் புரட்சிவழி அந்நிய ஆதிக்கத்திலிருந்த இந்தியாவை விடுவிக்க முயன்றார்.

**குருநாத ஐயர்**

தூத்துக்குடி குருநாத ஐயர் போலீஸ் இலாகாவில் தலைமைக் காவலராக பணியாற்றியவர். வ.உ.சி. நடத்திய சுதேசி இயக்கத்தில் பங்கேற்பதற்காக வேலையைத் துறந்தார். வ.உ.சி. கைதானதையொட்டி நெல்லை நகரில் நடைபெற்ற கலவரத்தில் ஈடுபட்டு, அரசாங்கக் கட்டிடங்களுக்குத் தீ வைத்ததாக குருநாத ஐயர் கைது செய்யப்பட்டார் வழக்கு நடந்தது. சிறை தண்டனை வழங்கப்பட்டது. சிறை மீண்ட இவர் பெர்லின் சென்று அங்கு தங்கியிருந்த பயங்கரவாதப் புரட்சியாளர்களுடன் சேர்ந்து கொண்டு இந்திய விடுதலைக் கிளர்ச்சிக்குப் பாடுபட்டதாகக் கருதப்படுகிறது.

**டாக்டர் செண்பகராமன்**

நாஞ்சில் நாட்டைச் சேர்ந்த டாக்டர் செண்பகராமன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்தார். பிரிட்டனுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்ய சில

அமைப்புகளை ஏற்படுத்தினார். 'புரோ இந்தியா' என்ற பெயரில் பத்திரிக்கை நடத்தினார். ஆங்கிலம் தவிர பிற மொழிகளிலும் பத்திரிக்கை நடத்தியவர். பெர்லின் முகாமில் இருந்தவர்களில் மிகுந்த செல்வாக்குப் பெற்றவர். ஜெர்மன் அதிபரான கெய்சரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். லெனினை சந்தித்து அவரது ஆதரவைப் பெற்றவர். முதல் உலகப்போரின் போது ஜெர்மனியின் துணை கொண்டு பிரிட்டிஷ் ஆட்சியை இந்தியாவிலிருந்து அகற்ற முற்பட்டவர். 'எம்டன்' என்ற நீர்மூழ்கிக் கப்பல் மூலம் சென்னை உயர்நீதிமன்றக் கட்டிடத்தைக் குறிவைத்து குண்டு வீசியவர். இந்தியப் புரட்சியாளர்கள் ஆப்கானிஸ்தான் தலைநகரான காபூலில் 'தற்காலிக இந்தியக் குடியரசு' ஒன்றை நிறுவியபோது அதன் அமைச்சரவையில் அயல்நாட்டு அமைச்சராக நியமிக்கப்பட்டார். ஆயுத ஆக்கிரமிப்பால் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட அந்நிய ஆட்சியை ஆயுத ஆக்கிரமிப்பால் அகற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் இந்திய விடுதலைக்காக தன்னை அர்ப்பணித்துக்கொண்டவர். 'எம்டன் செண்பகராமன்' தமிழ்நாட்டுப் பயங்கரவாதிகளின் வன்முறை ஆயுதப்புரட்சி மூலம் இந்தியாவுக்கு விடுதலை பெற்றுத்தர வேண்டும் என்ற கனவு நனவாகவில்லை. எனினும் இந்திய விடுதலைப்போராட்டத்தில் தேசிய பயங்கரப்புரட்சியாளர்களின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

**பாரதியார்**

1904-ஆம் ஆண்டு பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிக்கையின் துணை ஆசிரியர் பொறுப்பேற்றதிலிருந்து அவருடைய பத்திரிக்கை வாழ்க்கையோடு அரசியல் வாழ்க்கையும் துவங்கியது எனலாம். வங்கப் பிரிவினையை எதிர்த்து வங்கத்தைப் பாராட்டி அவர் எழுதிய முதல் கவிதையை அப்பத்திரிக்கையில் வெளியிட்டார். வாரணாசி காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு சென்னை திரும்பும் முன்னர் கல்கத்தா சென்று சுவாமி விவேகானந்தரின் பிரதம சிஷ்யையான சகோதரி நிவேதிதையை சந்தித்தார். வங்கப்பிரிவினை எதிர்ப்பிலே பிறந்த சுதேசி இயக்கத்தை ஆர்வத்தோடு வரவேற்றார் பாரதியார். பக்கிம் சந்திரரின் 'வந்தே மாதரம்' பாடலைத் தமிழில் மொழி பெயர்த்து 'சக்ரவர்த்தினி' மாத இதழில் வெளியிட்டார். தாயே 'வந்தே மாதரம்' என்ற பாடலையும் புனைந்தார். ஜி.சுப்பிரமணிய ஐயர் சுதேசி இயக்க வளர்ச்சிக்கென நிதி திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்ட போது அவரது நடவடிக்கையை ஆதரித்தும் பாராட்டியும் 'இந்தியா' பத்திரிகையில் எழுதினார். வ.உ.சி. வாங்கிய கப்பல்களை பாரத தேவி பெற்றெடுத்த இரண்டு தவப் புதல்வர்கள் என்று வர்ணித்தார்.

தமிழ்நாட்டுத் தீவிரவாதிகளின் பிரதிநிதியாகத் திகழ்ந்தவர் பாரதியார். அவரது இந்தியா பத்திரிக்கை தீவிரவாதக் கட்சியினரின் போர் முரசாக ஒலித்தது. 1906 டிசம்பர் மாதம் நடைபெற்ற கல்கத்தா காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார் பாரதியார். அக்கூட்டத்தில் தலைவராக டெட் என்ற ஆங்கிலேயரை

நியமிக்க வேண்டும் என்ற மிதவாதிகள் மேற்கொண்ட முயற்சியை ‘மூடத்தனம்’ என்று கண்டித்தார். அதே போன்று தீவிரவாதிகள் வெளிநாட்டுப் பொருள்களைப் புறக்கணிக்க வேண்டும் என்று கல்கத்தா காங்கிரசில் கொண்டு வந்த தீர்மானத்தை எதிர்த்த மிதவாதிகளையும் சாடினார். தென்னகத்துக்கு வருகை தந்த வங்கத்து தீவிரவாதிகளின் தலைவரான பிபின் சந்திரபாலரை பாரதியார் ஆந்திராவுக்குச் சென்று சந்தித்து சென்னைக்கு அழைத்துவந்தார். லாலா லஜபதிராய் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டபோது ஆங்கிலேய அரசாங்கத்தைக் கண்டித்தும், ராயின் தியாகத்தைப் பாராட்டியும், லஜபதிராய் துதி, லஜபதிராய் பிரவாபம் என்ற கவிதைகளைப் புனைந்தார். மிதவாதிகளைக் கேலி செய்தும், தீவிரவாதிகளைப் புகழ்ந்தும் பல பாடல்களை இயற்றினார் பாரதியார். சூரத் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய பாரதியார் அங்கு மிதவாதிகளுக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே ஏற்பட்ட அமளி பற்றி விரிவாக எழுதினார். “எங்கள் காங்கிரஸ் யாத்திரை” என்ற நூலை வெளியிட்டார். ‘புதிய கட்சியினரின் கோட்பாடுகள்’ என்ற திலகரின் ஆங்கிலச் சொற்பொழிவைத் தமிழில் மொழி பெயர்த்தார்.

தேசிய தீவிரவாதிகள் கட்சியின் தென்னகச் செயலாளரான வ.உ.சி. தீவிரப்பிரச்சாரத்திலும் போராட்டத்திலும் ஈடுபட்டிருந்த போது அவரின் அழைப்பின் பேரில் நெல்லை கலெக்டர் விஞ்ச்சை சந்தித்ததை ‘தேசபக்தனுக்கு ஆங்கிலேயன் சொன்னது’ ஆங்கிலேயனுக்கு தேசபக்தன் சொன்னது’ என்ற தலைப்பில் பாடினார். வ.உ.சி. சிவா ஆகியோரைக் கைது செய்து சிறையில் அடைத்துப் பின்னர் அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்ட போது பாரதியார், நெல்லையிலேயே தங்கியிருந்து பல நாட்கள் நீதிமன்றத்திற்கே சென்று வழக்கு விசாரணையைக் கவனித்து வந்ததோடில்லாமல் வ.உ.சி., சிவா ஆகியோருக்குச் சார்பாக சாட்சி சொல்லவும் தயாராகி இருந்தார். வழக்கு முடிந்தபின் வ.உ.சி.க்கு நாற்பதாண்டும், சிவாவுக்குப் பத்தாண்டும் சிறை தண்டனை விதிக்கப்பட்ட போது நீதிபதி பின்ஹேயின் தீர்ப்பை எதிர்த்தார் பாரதியார். அதற்காக ‘இந்தியா’ பத்திரிக்கை ஆசிரியரைக் கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அப்பத்திரிக்கையின் ஆசிரியர் எம்.ஸ்ரீனிவாசன் கைது செய்யப்பட்டு ஐந்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார். சிறை செல்வதைத் தவிர்க்க விரும்பிய பாரதியார் புதுச்சேரியில் தஞ்சம் புகுந்தார்.

தனது 27வது வயதில் புதுவை புகுந்த பாரதியார் சிதம்பரனாரும், சிவாவும் சிறையில் கொடுமைப்படுத்தப்பட்டதை அறிந்து குமுறினார். பதறினார், பாடினார். இந்தியாவிற்கு பிரிட்டிஷார் வழங்கிய மார்லி-மிண்டோ சீர்திருத்தத்தை கேலி செய்தார். வாஞ்சிநாதன் ஆஷைக் கொலை செய்த செய்தி கேட்டு அதிர்ச்சியுற்றார். அதை ஒரு ‘துரதிஷ்டமான சம்பவம், எதிர்பாராத விபத்து’ என்று வர்ணித்தார். ஆஷ் கொலையை வன்மையாகக் கண்டித்து எழுதினார் பாரதியார். அவருக்கு அரசியல் கொலையிலும், ஆயுதப் புரட்சியிலும் நம்பிக்கையில்லை. புதுவை வாசம் பாரதியாரை தேசியக்கவிஞராகவும், இலக்கியப்படைப்பாளியாகவும், உரைநடை, கட்டுரையாளராகவும் தத்துவ ஞானியாகவும், மனிதாபிமான முனிவராகவும் மாற்றியது.

புதுவைப் புகலிட வாழ்க்கையில் சலிப்புற்று தனது மனைவி மக்களோடு தமிழ்நாடு திரும்பிய பாரதியார் கைது செய்யப்பட்டு கடலூர் சிறையில் அடைக்கப்பட்டார். நோய்வாய்ப் பட்ட பாரதியார் சில வாரங்களில் நிபந்தனையின்பேரில் விடுவிக்கப்பட்டார். 1919 மார்ச் மாதம் ரௌலட் சட்டம் எதிர்ப்பு பற்றித் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் பேச சென்னை வந்த காந்தியடிகளை சந்தித்துப் பேசினார் பாரதியார். மிதவாதியான பாரதியார் தீவிரவாதியாக மாறி பயங்கரப் புரட்சி வழியைத் தவிர்த்து அகிம்சாவாதியானார். “தன் வாழ்நாளில் ஒருபோதும் பயங்கரவாதச் செயல்களுக்கு இடமளிக்கக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டிருந்தார்” என்று கூறுகிறார். வி.வெங்கட்ராமன். அவரது தேசபக்திப் பாடல்கள் மக்களிடையே நாட்டு விடுதலையுணர்ச்சிப் பெருக்கை ஏற்படுத்தின.

**வ.உ.சிதம்பரம்**

வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த சுதேசிய இயக்கம் தமிழ்நாட்டுக்கு அளித்த தவப்புதல்வன் வ.உ.சிதம்பரம் பிள்ளை. கோவில்பட்டி தாலுக்காவிலுள்ள ஒட்டப்பிடாரம் என்ற சிற்றூரில் பிறந்த வ.உ.சி., வீரபாண்டிய கட்டபொம்மனிடம் தலைமை அமைச்சராகப் பணியாற்றிய தானாபதிப் பிள்ளையின் குடும்ப வழித்தோன்றல் ஆவார். தூத்துக்குடியில் வழக்கறிஞராக இருந்த அவர் இராமகிருஷ்ணானந்தர், அபேதானந்தர், பிரமானந்தர் ஆகிய வங்கத் துறவிகளோடு தொடர்பு கொண்டு சுதேசி இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். கடல்வழி வந்த வெள்ளை வியாபாரியை கடல் வழியே அனுப்ப வேண்டும் என்ற எண்ணத்தோடு 1882-ஆம் ஆண்டு இந்தியக் கம்பெனிகள் சட்டப்படி 1906 அக்டோபர் 16ஆம் தேதி ‘சுதேசி ஸ்டீம் நேவிகேசன் கம்பெனி’ பதிவு செய்யப்பட்டது. ‘காலியா’, ‘லாவோ’ என்ற பெயருடைய இரண்டு கப்பல்களும், சாக்கு மூட்டைகளை ஏற்றுவதற்கு வசதியாக இரண்டு இயந்திர படகுகளும் வாங்கப்பட்டன. ஆங்கிலேய வியாபாரிகள், அரசாங்கம் ஏற்படுத்திய கடுமையான, கொடுமையான இடர்ப்பாடுகளுக்கிடையே கப்பல்களை ஓட்டினார் வ.உ.சி.

சுதேசி கப்பல் கம்பெனியை நிறுவியதோடு நில்லாமல் சுதேசி இயக்கத்தை பல தொழில் துறைகளுக்கும் விரிவுபடுத்தினார் கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. தூத்துக்குடியில் தருமலங்க நெசவுச் சாலை, தேசிய பண்டக சாலை ஆகியவற்றைத் தோற்றுவித்தார். சென்னை நகரில் ‘சென்னை விவசாய-கைத்தொழில் சங்கம் லிமிடெட்’ ஒன்றை நிறுவினார். தனது சுதேசப் பணிக்கு மக்களிடையே ஆதரவைத் திரட்ட வி.சர்க்கரைச் செட்டியார் தலைமையில் சென்னை நகரில் சுதேசி பிரச்சார சபையையும் அமைத்தார்.

1906-ஆம் ஆண்டு இறுதியில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் வ.உ.சி., ராஜாஜி, கஸ்தூரிரங்க ஐயங்கார், வெ. ராமலிங்கம்பிள்ளை, எஸ். சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டனர்.

1907 சூரத் காங்கிரசுக்குத் தீவிரவாதிகளை அதிக அளவில் அழைத்து வருமாறு அரவிந்தர் வ.உ.சிக்குக் கொடுத்த தந்தியை சிரமேற்கொண்டு தமிழ்நாட்டுத் திலகரான அவர் சென்னை சென்று பாரதியாருடனும், மண்டையம் சீனவாசாச்சாரியுடனும் கலந்து பேசித் தமிழ் நாட்டுப்பிரதிநிதிகளை சூரத் மாநாட்டுக்கு அழைத்துச் சென்றார். சூரத் மாநாட்டுப் பந்தலில் ஏற்பட்ட ரகளையின்போது வ.உ.சி., துரைசாமி ஐயர், சுதேந்திரநாத் எத்திராஜ், திருவல்லிக்கேணி கிருஷ்ணமாச்சாரி, பாரதியார், சீனிவாசராகவாச்சாரி, சக்கரைச் செட்டியார் ஆகிய தமிழ்நாட்டுத் தீவிரவாதப் பிரதிநிதிகள் திலகரைச் சூழ்ந்து கொண்டு அவருக்குப் பாதுகாப்பளித்தனர். 'தமக்கு எத்தனை அடிபட்டபோதும் திலகரைக் காக்க வேண்டுமென்று அசையாது நின்ற இந்த சென்னை பிரதிநிதிகளின் தீரத்தன்மையை எண்ணும்போது உடல் புல்லரித்து மிகுந்த மிகழ்ச்சி உண்டாக்கியது' என்று அந்த அனுபவத்தைப் பற்றி எழுதியுள்ளார் பாரதியார். சூரத் மாநாட்டுப் பந்தலிலேயே தேசியத் தீவிரவாதிகள் தனிக் கட்சியைத் துவக்கி அக்கட்சிக்கு வங்காளத்துக்கு அரவிந்தரும், மகாராஷ்டிரத்துக்குத் திலகரும், சென்னை மாகாணத்துக்கு வ.உ.சி.யும் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சூரத்திலிருந்து திரும்பிய வ.உ.சி., பிபின் சந்திரபாலர் விடுதலையான நாளை விமரிசையாகக் கொண்டாடத் திட்டமிட்டார். அதன்படி நெல்லை நகரில் வியத்தகு ஊர்வலத்தை நடத்தினார். வ.உ.சி. மாவட்ட மாஜிட்ரேட் கோர்ட் எதிரில், தாமிரபரணி ஆற்றங்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும் எழுச்சிப் பேருரையாற்றினர். வந்தே மாதரம் கோஷம் விண்ணைப் பிளந்தது. அழைப்பின் பேரில் நெல்லைக்கலெக்டர் விஞ்சை சந்தித்தார். வ.உ.சியுடன் சிவாவும், பத்மநாப ஐயங்காரும் உடனிருந்தனர். பின்னர் இம்மூவரும் கைது செய்யப்பட்டனர். ராஜதுரோகக் குற்றம் சாட்டப்பட்டு வ.உ.சிக்கு 40 ஆண்டுகள் சிறைதண்டனை விதிக்கப்பட்டது. மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். இந்தியப் பத்திரிகைகள் கண்டனக் குரல் எழுப்பின. வ.உ.சி.யின் மேல்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டன. எனினும் லண்டன் பிரிவு கவுன்சிலில் வ.உ.சிக்கு அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை கடுங்காவல் தண்டனையாக மாற்றியது.

வ.உ.சி. கோயமுத்தூர் சிறையில் அடைக்கப்பட்டார். அங்கு அவர் அரக்கத்தனமான கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டார். பின்னர் அவர் கேரள மாநிலத்திலுள்ள கண்ணனூர் மத்திய சிறைக்கு மாற்றப்பட்டார். அங்கும் அவர் மலச்சட்டி தூக்கினார். கல்லுடைத்தார், செக்கிழுத்தார். ஆஷ் கொலை செய்யப்பட்டதைத் தனக்குக் கிடைத்த 'நற்செய்தி'யாகக் கருதினார். வ.உ.சி. 1912 டிசம்பர் இறுதியில் விடுதலை செய்யப்பட்டுவிட்டார். வ.உ.சி. எனினும் அவரது சுதேசிக் கப்பல் கம்பெனியைக் காப்பாற்ற முடியவில்லை. அது கவிழ்ந்துவிட்டது. அதோடு 'தமிழ்நாட்டு அரசியலிலே வ.உ.சி. சகாப்தம் முடிந்தது எனலாம். எனக் கருதுகிறார் ம.பொ.சி.

**சென்னை ஜனசங்கம்**

திலகரின் விருப்பத்துக்கேற்ப தமிழ்நாட்டு சுதேசித் தலைவர்கள் 1908 ஜனவரி 11ஆம் தேதி சென்னை திருவல்லிக்கேணி கங்கை கொண்டான் மண்டபத்தில் சென்னை ஜனசங்கம் என்ற அமைப்பைத் துவக்கினர். இந்த அமைப்பைத் துவக்கப் பாரதி பெரிதும் காரணமாக இருந்தார். வ.உ.சி. இச்சங்கத்தின் தலைவராகவும், மண்டயம் எஸ்.சீனிவாசாச்சாரி, சி.எஸ்.ஆரியா, கே. வெங்கட்ரமணராவ் ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பல மாணவர்கள் இச்சங்கத்தில் உறுப்பினர்களாக சேர்ந்தனர். சென்னை ஜனசங்கத்தின் நோக்கங்கள் : 1) சுதேசிப் பொருட்களைப் புறக்கணித்தல், 2) தேசியக் கல்வியைப் பரப்புதல், 3) பள்ளிகளில் இளைஞர்களுக்கு உடற்பயிற்சி அளித்தல், 4) இளைஞர்களிடையே விழிப்புணர்வை உருவாக்கல், 5) சுதேசி இயக்கக் கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்தல், 6) சங்க உறுப்பினர்களை அதிகரித்தல், சென்னை ஜனசங்கம் 1912 வரை செயல்பட்டு தமிழ்நாட்டு சுதேசி இயக்கத்தை முன்கொண்டு சென்றது.

**சுப்பிரமணிய சிவா**

வ.உ.சியும் சிவாவும் தமிழ்நாட்டு சுதேசி இயக்கத்தின் இரட்டையர்களாகத் திகழ்ந்தார்கள். வ.உ.சியைப் போன்றே சிவாவும் இராமகிருஷ்ண – விவேகானந்தா வேதாந்த இயக்கத்தில் ஈடுபட்டு, அதன் வழி சுதேசி இயக்கத்துக்கு ஈர்க்கப்பட்டவர் ‘சுதந்திரானந்தா’ என்ற புனைப் பெயரை சூட்டிக் கொண்டவர் சிவா. மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த வத்தலக்குண்டு வாசியான இளைஞர் சிவா, தூத்துக்குடி வந்து வ.உ.சி.யுடன் இணைந்து செயல்படலானார். சுதேசி இயக்கப் பிரச்சாரத்தில் இவ்விருவரும் தீவிரமாகப் பங்கு கொண்டனர். பிபின் சந்திரபாலர் விடுதலை நாளை தடையை மீறி தாமிரபரணி பொதுக்கூட்டத்தில் பேசியதற்காக வ.உ.சியுடன் சிவாவும் கைது செய்யப்பட்டு, விசாரிக்கப்பட்டு, பத்தாண்டுகள் சிறை தண்டனை பெற்றார். திருச்சி சிறையில் அடைக்கப்பட்ட சிவா பல கொடுமைகளுக்குள்ளானதோடு தொழுநோயால் பாதிக்கப்பட்டார். எனவே அவர் சேலத்தில் தொழுநோய் கண்ட கிரிமினல் குற்றவாளிகள் அடைக்கப்பட்டிருந்த சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டார்.

சிறையிலிருந்து விடுதலையான சிவா தருமபுரி மாவட்டத்திலுள்ள பாப்பாரப்பட்டியில் ‘பாரதி ஆசிரமம்’ என்ற பெயரால் தேசபக்தர்களின் பாசறை ஒன்றை நிறுவி, இளடம் தேசாபிமானிகளுக்கு நாட்டு விடுதலைப் போருக்கான பயிற்சி அளித்தார். பாரதியாரின் தேசியப் பாடல்களைப் பாடிச் செல்வதற்கென பாரத ஆசிரியப்பாடல் குழுவை அமைத்தார். சிவாஜி, தேசிங்குராஜன் ஆகிய மாவீரர்களின் வரலாற்றை நாடகங்களாக்கினார். ஏகாதிபத்திய எதிர்ப்புணர்ச்சியைத் தூண்டும் வகையில் நாடக உரையாடல்களை எழுதினார். பாடியும், பேசியும், நடித்தும் மக்களிடையே விடுதலை உணர்வை ஊட்டி வந்தார் சிவா. அரசுக்கெதிராக செயல்பட்டார் என சிவா மீது நான்கு முறை (1908, 1921, 1922, 1924) குற்றம் சாட்டி வழக்கு தொடுத்து தண்டித்தது அரசாங்கம். ‘தேச சேவையிலும் சரி,

சிறைபட்டு இன்னலுற்ற தியாகத்திலேயும் சரி, சிவாவுக்கு இணையாக மற்றொரு தேசபக்தரைச் சொல்ல முடியாது' என்று புகழாரம் சூடியுள்ளார் ம.பொ.சி.

**சுயாட்சி இயக்கம்**

1907-ல் ஏற்பட்ட சூரத் பிளவுக்குப் பின்னர் காங்கிரஸ் தீவிரவாதிகள் அரசாங்கத்தால் கடுமையாக ஒடுக்கப்பட்டனர். மிதவாதிகள் வலுவிழந்து போயினர். தேசிய இயக்கத்தை வழிநடத்தக்கூடிய தலைவர் இல்லாத நேரத்தில் அன்னிபெசண்ட் அம்மையார் அக்கடமையை நிறைவேற்றினார். இந்தியா சுயாட்சி பெற வேண்டுமாயின் மிதவாதிகளும், தீவிரவாதிகளும் மீண்டும் ஒன்று சேர வேண்டும் என்று விரும்பினார். அவ்விருப்பம் நிறைவேறவில்லை. அதனால் அவர் ஒரு புதிய அரசியல் அமைப்பான சுயாட்சி சங்கத்தை உருவாக்கினார்.

1911 செப்டம்பர் 3ஆம் தேதி சென்னை கோகலே மண்டபத்தில் சுயாட்சி சங்கம் துவக்கப்பட்டது. அன்னிபெசண்ட், சி.பி.ராமசாமி ஐய்யர், ஜி.எஸ்.அருண்டேல், பி.பி.வாடியா, எஸ். சுப்பிரமணிய ஐய்யர், என். சுப்புராவ், பி. பட்டாபி சீத்தாராமைய்யா, எ.ரெங்கநாத முதலியார், மாஜேரி ராமய்யர் ஆகியோர் சுயாட்சி இயக்கத்தின் பிரதான தலைவர்களாவர். சுயாட்சி சங்கத்தின் தலைவராக அன்னிபெசண்ட், ஜி.எஸ். அருண்டேல் அமைப்புச் செயலாளராகவும், சி.பி.ராமசாமி ஐய்யர் பொதுச் செயலாளராகவும், பி.பி.வாடியா பொருளாளராகவும் பொறுப்பேற்றனர். பிரிட்டிஷ் பேரரசுக்குள் இந்தியா சுயாட்சி பெற வேண்டுமென்பதே சுயாட்சி சங்கத்தின் குறிக்கோளாகும். அடையாற்றில் சுயாட்சி சங்கம் அமைக்கப்பட்டு செயல்பட ஆரம்பித்ததன் விளைவாக சென்னை மாநிலம் இந்திய தேசிய நீரோட்டத்தில் முழுவதுமாகக் கலந்தது.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் சுயாட்சி சங்கத்தின் கிளைகள் துவக்கப்பட்டன. கோயம்புத்தூரில் இருந்த 10 பிரம்மஞான சபை விடுதிகளும் சுயாட்சி இயக்க மையங்களாகச் செயல்பட்டன. சென்னை சட்டமன்ற உறுப்பினரான தஞ்சை வி.கே.ராமானுஜாசாரி தமிழ் நாட்டில் சுதேசி இயக்கத் தலைவரானார். 1917 மே 9-இல் கடலூரில் வி.பி.மாதவராவ் தலைமையில் மாநில சுயாட்சி மாநாடு நடைபெற்றது. பல மாவட்ட மாநாடுகள் நடத்தப்பட்டன. பிரசுரங்கள் மூலம் சுயாட்சிப் பிரச்சாரம் செய்யப்பட்டது. 1917 மே மாதத்துக்குள் 10,000 உறுப்பினர்கள் சேர்ந்தனர். காங்கிரஸ் மிதவாதிகளும் சுயாட்சி சங்கத்தை ஆதரிக்கத் துவங்கினார்.

சுயாட்சி இயக்கம் ராஜபாளையத்தில் அரசியல் சலசலப்பை ஏற்படுத்தியது. ஐ.பி. அரங்கசாமி ராஜா, பி.எஸ். சின்ன வெங்கடராஜா, பி.எஸ். குமாரசாமி ராஜா, பி.எஸ். சுப்பராஜா ஆகியோரது முயற்சியால் சுயாட்சி சங்கம் இவ்வூரில் துவக்கப்பட்டது. சுயாட்சி இயக்கத்தின் குறிக்கோளைப் பற்றிப் பிரச்சாரம் செய்வதற்கென பி.எஸ். குமாரசாமி ராஜா, 'மீனாட்சி சகாய விவேகா வித்யால'யத்தை ஏற்படுத்தினார். அன்னிபெசண்ட் அம்மையாரின்

வேண்டுகோளுக்கிணங்க அரசியல் சட்டதிருத்தத்துக்கு ஆதரவாகக் கையெழுத்து சேகரிப்பதற்கென பிரம்ம ஞான மாநாடு ஒன்று ராஜபாளையத்தில் நடத்தப்பட்டது. அன்னிபெசண்ட் கைது செய்யப்பட்ட போது பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கெதிராக முதல் அரசியல் ஊர்வலம் இங்கு நடத்தப்பட்டது. கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் அம்மையார் ஆற்றிய உரையைத் தமிழாக்கம் செய்து பொதுக்கூட்டத்தில் படிக்கப்பட்டது. அரசியல் கூட்டங்கள் நடத்தப்பட்டன. கே.ஜி.சிவசாமி ஐயர் இந்நகருக்கு வருகைத்தந்து காங்கிரஸ் இயக்கத்துக்கு ஆதரவாகப் பல கூட்டங்களில் பேசினார்.

சுயாட்சி இயக்கத்தால் கவரப்பட்ட தமிழ்நாடு மாணவர்கள் 1916 ஜீலை 24ஆம் தேதி புகை வண்டிகளில் ஐரோப்பியர்களுக்கென இடஒதுக்கீடு செய்யப்பட்டதை எதிர்த்து எக்மோர் ரயில் நிலையத்திற்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். சென்னை கோட்டை ரயில் நிலையத்துக்கு முன் மாணவர்களுக்கும் ஐரோப்பியர்களுக்குமிடையே கைகலப்பு ஏற்பட்டது. சுயாட்சி இயக்கத்தின் தீவிரப் போக்கு கண்டு கவலைகொண்ட சென்னை கவர்னர் பெண்ட்லாண்ட் பிரபு அதைத் ஒடுக்க முனைந்தார். மாணவர்கள் அரசியல் கூட்டங்களில் கலந்து கொள்ளக் கூடாதெனத் தடை விதிக்கப்பட்டது. இயக்கப்பத்திரிக்கைகளுக்குப் பாதுகாப்புப் பணம் கட்டவேண்டுமென அன்னிபெசண்ட் கட்டாயப்படுத்தப்பட்டார். அரசாங்கத்தின் அப்போக்கை எதிர்த்து தஞ்சாவூர், ஈரோடு, கடலூர், தெனாலி, திருப்பூர் ஆகிய இடங்களில் கண்டனக் கூட்டங்கள் போடப்பட்டன. சென்னை நகரிலிருந்த இந்திய வியாபாரிகள் சங்கம் பத்திரிக்கைக் கட்டுப்பாட்டைக் கடுமையாகக் கண்டித்தது. சென்னை அரசாங்கத்துக்கெதிராக வழக்குத் தொடர்ந்து அன்னிபெசண்டே நேரில் ஆஜராகி வாதாடினார். வழக்கு தோற்றாலும் சுயாட்சி இயக்கம் செல்வாக்கு பெற்றது.

1917 ஜீன் 12ஆம் நாள் பெண்ட்லண்டு பிரபு அன்னிபெசண்ட் அம்மையாரை அழைத்து சென்னை மாநிலத்தின் நிலைமையை விளக்கிக் கூறி, இங்கிலாந்துக்குத் திரும்பிப் போய்விடுமாறு கேட்டுக்கொண்டார். அதற்கு அன்னிபெசண்ட் மறுத்துவிட்டார். எனவே ஜீன் 15ம் தேதி அன்னபெசண்ட், பி.பி.வாடியா, ஜி.எஸ். அருண்டேல் ஆகியோர் உதகமண்டலத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். ‘போராட்டவாதிகளையெல்லாம் விஞ்சி நிற்கும் போராட்டவாதி’ என்று காந்தியால் வர்ணிக்கப்பட்ட அன்னிபெசண்ட் காவலில் வைக்கப்பட்டதைக் கண்டித்து காங்கிரஸ் மிதவாதியும் ஓய்வுபெற்ற நீதிபதியுமான எஸ்.சுப்பிரமணிய அய்யர் ‘சர்’ பட்டத்தைத் துறந்தார். சுயாட்சி சங்கத் தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டதை எதிர்த்து மனித உரிமைகளைக் காப்பதன் அவசியம் பற்றிப் பிரகடனம் வெளியிட்ட அமெரிக்க குடியரசுத் தலைவர் உட்ரோ வில்சனுக்கு நீண்ட கடிதமொன்றை எழுதினார். அம்மையார் சிறைப்பட்டதால் சுயாட்சி சங்கத்தின் கௌரவத் தலைவர் பொறுப்பையும் ஏற்றார்.

வெஸ்லி கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றி வந்த திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் வேலையைத் துறந்துவிட்டு அரசியல் பிரவேசம் செய்தார். அன்னிபெசண்டும் சகாக்களும் விடுதலையடைந்த போது அவர்களுக்கு வழிநெடுகிலும் ரயில் நிலையங்களில் வரவேற்பளிக்க சுயாட்சி இயக்கத்தினர் ஏற்பாடு செய்தனர். சேலத்தில் சுயாட்சி சங்கத்தின் சார்பாக சி.ராஜகோபாலாச்சாரி பெருந்திரளான மக்களுடன் வந்து வரவேற்பளித்தார். அதுவே அவரது அரசியல் பிரவேசமாக அமைந்தது. இந்திய தேசிய காங்கிரஸ் பிளவுபட்டு முடங்கிக் கிடந்த சமயத்தில் அன்னிபெசண்ட் துவக்கிய சுயாட்சி இயக்கம் தேசியப் போராட்டத்தை தீரத்துடன் வழிநடத்தியது. அவரது சாதனைகளைப் பாராட்டி அவரைப் பெருமைப்படுத்தும் பொருட்டு 1917 டிசம்பரில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரசின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1917 ஆகஸ்டு 20 மாண்டேகு பிரகடனம் அன்னிபெசண்ட் அம்மையாரின் சுயாட்சி சங்கத்துக்குக் கிடைத்த பரிசு எனலாம். எனினும் அன்னிபெசண்ட் பிராமணர்களையே பெரிதும் சார்ந்திருந்தாலும், மக்களின் செல்வாக்கைப் பெற்றிருந்த நீதிக்கட்சியை விரோதித்துக் கொண்டதாலும், அரசாங்கத்தைப் பகைத்துக் கொண்டதாலும் சுயாட்சி இயக்கம் தமிழ் நாட்டில் தோல்வியுற்றது.

**ரௌலட் அறப்போராட்டம், 1919**

காந்தி துவக்கிய ரௌலட் சத்தியாகிரகத்தில் தமிழ் நாட்டுக்குத் தனிச் சிறப்புண்டு. அச்சத்தியாகிரகம் துவக்கப்பட்டதே தமிழ் நாட்டில்தான். 1919 பிப்ரவரி மாதம் இந்திய சட்டமன்றத்தில் ரௌலட் மசோதாக்கள் விவாதிக்கப்பட்டபோது வி.சீனிவாசாச்சாரி அம்மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டால் இந்தியா கொந்தளிப்புக்கு உள்ளாகும் என்று அரசாங்கத்தை எச்சரித்தார். ரௌலட் மசோதாக்கள் சட்டமாக்கப்பட்டால் அதை எதிர்த்து சத்தியாகிரகம் செய்யப் போவதாக அறிவித்தார் காந்தி. சி.ராஜகோபாலாச்சாரியின் ஆலோசனையின் பேரில் கஸ்தூரிரங்க ஐய்யங்கார் காந்தியைத் தமிழ்நாட்டுக்கு வருகை தருமாறு கேட்டுக்கொண்டார். அந்த அழைப்பை ஏற்று தமிழ்நாட்டுக்கு வந்த காந்தி (1919 மார்ச் 17) கஸ்தூரி ரங்க ஐய்யங்கார் வீட்டில் தங்கினார். அங்குதான் ரௌலட் சட்ட எதிர்ப்புத் திட்டம் உருவாக்கப்பட்டது (மார்ச் 21, 22). அதன் விளைவாக சத்தியாக்கிரக சபை அமைக்கப்பட்டது. காந்தி அச்சபையின் தலைவராகவும், சி.விஜயராகவாச்சாரி, டாக்டர் எம்.சி.நஞ்சுண்டராவ், டி.பிரகாசம் ஆகியோர் துணைத் தலைவர்களாகவும், சி.ராஜகோபாலாச்சாரி, எ.க.தூரிரங்க ஐய்யங்கார், ஜி.அரிகரவோத்தம் ராவ், சேலம் டி.ஆதிநாராயண செட்டியார் ஆகியோர் செயலாளர்களாகவும் பொறுப்பேற்றனர். சென்னை மாநிலத்தில் 120 பேர் சத்தியாகிரக சபதத்தில் கையொப்பமிட்டனர். சி.ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, வ.உ.சிதம்பரம் பிள்ளை, திரு.வி.கல்யாண சுந்தர முதலியார் ஆகியோர் அச்சபதத்தில் கையொப்பம் இட்டவர்களுள் முக்கியமானவர்கள். அவர்களோடு எஸ்.சீனிவாச ஐய்யங்கார், டி.வி.வெங்கட்ராமய்யர், டி.ராகவாச்சாரி, பி.டி.வாடியா, ஈ.வே.ராமசாமி நாயக்கர், டாக்டர் பி.வரதராஜீலு நாயுடு,

சுப்பிரமணிய சிவா, பாரதியார் போன்றோரும் காந்தியின் போராட்டத்துக்கு ஆதரவளித்தனர்.

காந்தி தமிழ்நாட்டில் தங்கியிருந்த போதுதான் ரௌலட் சட்டம் நிறைவேற்றப்பட்டது. தீவிர ஆலோசனைக்குப் பிறகு சென்னையிலிருந்து காந்தி தனது செயல் திட்டத்தை அறிவித்தார். 1919 மார்ச் 30 தேதியன்று இந்தியா முழுவதும் அர்த்தால் நடைபெற வேண்டும் என்று முதலில் அறிவிக்கப்பட்டது. பின்னர் கஸ்தூரிரங்க ஐய்யங்கார், ராஜகோபாலாச்சாரி, விஜயராகவாச்சாரியார் ஆகியோரைக் கலந்தாலோசித்து அர்த்தால் தேதியைத் தள்ளிப் போட்டார் காந்தி பின்னர் தஞ்சாவூர், திருச்சி, மதுரை, தூத்துக்குடி ஆகிய நகரங்களுக்குச் சுற்றுப் பயணம் சென்று ரௌலட் சட்ட எதிர்ப்புப் பிரச்சாரம் செய்த பின்னர் சென்னையிலிருந்து பம்பாய் சென்றார் காந்தி(1919 மார்ச் 28).

1919 ஏப்ரல் 6ஆம் தேதி தமிழ் நாட்டில் ரௌலட் சட்ட எதிர்ப்பு நாள் துக்க தினமாகக் கொண்டாடப்பட்டது. பல பகுதிகளில் கண்டன ஊர்வலங்கள் நடைபெற்றன. சென்னை நகரின் பல பேட்டைகளிலிருந்து புறப்பட்ட ஊர்வலங்கள் எல்லாம் திருவல்லிக்கேணி கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டன. ராஜகோபாலாச்சாரி, கஸ்தூரிரங்க ஐய்யங்கார், சத்தியமூர்த்தி, ஜார்ஜ் ஜோசப் ஆகியோர் அக்கூட்டத்தில் உரையாற்றினர். கடற்கரையில தொழிலாளர்களுக்கென தனியாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்தில் திரு.வி.கல்யாண சுந்தர முதலியார், பி.பி.வாடியா, சிதம்பரம், எ. தண்டபாணிப்பிள்ளை ஆகியோர் பேசினர். சத்தியாக்கிரகம் அமைதியான முறையில் நடைபெறுவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

குஜராத்தியர் மிகுந்த சென்னை சௌகார் பேட்டையில் ராம்ஜி கல்யாண்ஜியின் தூண்டுதலின் பேரில் முழு அர்த்தால் செய்யப்பட்டது. முஸ்லீம் வர்த்தகர்களும் இச்சத்தியாக்கிரகத்தில் ஒத்துழைத்தனர். நகரில் ட்ராம் கார்கள் ஓடவில்லை. நூற்பாலைத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர். பத்திரிக்கை பதிவு சட்டத்தை மீறி சென்னை நகரில் ‘சத்தியாக்கிரகி’ என்ற பத்திரிக்கை வெளியிடப்பட்டது. அரசாங்கத்தால் தடை செய்யப்பட்ட நூல்களான காந்தியின் ‘சர்வோதயம்’, ‘இந்திய சுயராஜ்யம்’ ஆகியவையும் வீர சவார்க்கரின் ‘எரிமலை’ என்ற நூலையும் தமிழ்நாட்டுச் சத்தியாகிரகிகள் விற்பனை செய்தனர். ரௌலட் சத்தியாக்கிரகம் தமிழ் நாட்டின் புறநகர்ப்பகுதிகளுக்கும் பரவியது. எனினும் மாநகரங்களில் மட்டுமே ரௌலட் சத்தியாக்கிரகம் ஆர்வத்தோடு நடத்தப்பட்டது. அதுவும் ஏப்ரல் 6க்குப் பின் மறைந்துவிட்டது என்கிறார் டேவிட் அர்னால்டு. பம்பாயிலும், அகமதாபாத்திலும் இருந்த அளவுக்கு இந்த சட்ட எதிர்ப்புப் போராட்டம் சென்னை மாநிலத்தில் தீவிரமடையவில்லை என்பதில் காந்தி ஏமாற்றமுற்றார். தமிழ்நாட்டைவிட ஆந்திரப் பகுதியில் இப்போராட்டம் வேகமாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது என்பது எ. கோபாலகிருஷ்ணனின் கணிப்பு. எனினும் காந்தியின் முதல் அகில இந்திய சத்தியாகிரகப் போராட்டம் தமிழ்நாட்டில்

துவக்கப்பட்டு அமைதியாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது என்பது பெருமைப்படத்தக்கதாகும்.

கிலாபத் இயக்கம், 1919-1920

காந்தியின் முழு ஒத்துழைப்போடு இந்திய முஸ்லீம்கள் துவக்கிய கிலாபத் இயக்கத்தில் தமிழ்நாடு ஆர்வத்தோடு கலந்து கொண்டது. ரௌலட் சத்தியாகிரகத்தில் முழுமூச்சுடன் ஈடுபட்டுத் தனது செல்வாக்கைப் பலப்படுத்திக் கொண்டிருந்த சி.ராஜகோபாலாச்சாரி கிலாபத் இயக்கத்தை ஆதரித்து அதன் மூலம் தமிழ்நாட்டு முஸ்லீம்களின் ஆதரவையும் பெற்றார். 1919 ஆகஸ்டில் கூடிய சென்னை மாநில காங்கிரஸ் மாநாட்டில் அலி சகோதரர்களை விடுதலை செய்யக்கோரும் தீர்மானத்தைக் கொண்டுவந்தார். அவ்வாண்டு அக்கேடாபர் 17ஆம் தேதி அனுசரிக்கப்பட்ட கிலாபத் தினத்துக்கு தமிழ்நாட்டு இந்துக்களின் ஆதரவையும் திரட்டித்தந்தார். கிலாபத் கூட்டங்களிலும் கலந்து கொண்ட ராஜகோபாலாச்சாரி யாகூப் ஹாசனை ஆதரித்துப் பேசினார். காங்கிரசோடு ஒத்துழைக்குமாறு யாகூப் ஹாசனையும் அவரது ஆதரவாளர்களையும் ஊக்குவித்தார் அவர். 1920 மே மாதத்தில் ராஜகோபாலாச்சாரியின் ஆதரவோடு யாகூப் ஹாசன் சென்னை மாநில கிலாபத் இயக்கத்தைத் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தார். தமிழ் நாட்டில் வடஆற்காடு தவிர பிற மாவட்டங்களிளெல்லாம் கிலாபத் கமிட்டிகள் இந்துக்களின் ஆதரவோடு செயல்பட்டன. உதாரணமாக, திருச்சி கிலாபத் கிமிட்டிக்கு ராஜகோபாலாச்சாரியின் நண்பர்களான டி.எஸ்.எஸ். சுவாமிநாத சாஸ்திரியும் பக்கபலமாக இருந்தனர்.

1920 ஏப்ரல் 20ஆம் தேதி சென்னை நகரில் மௌலானா சவுகத் அலியின் தலைமையில் கிலாபத் மாநாடு நடைபெற்றது. அதில் சென்னை மாநிலத்திலிருந்து மட்டும் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். ராஜகோபாலாச்சாரி, கஸ்தூரிரங்க ஐய்யங்கார், பிரகாசம் ஆகியோர் அம்மாநாட்டில் கலந்து கொண்டு பேசினர். மற்றொரு கிலாபத் மாநாடு அலி சகோதரர்களின் தலைமையில் ஈரோட்டில் நடைபெற்றது. 1920 ஆகஸ்டு மாதம் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த காந்தி கிலாபத் இயக்கத்தை ஆதரித்துப் பிரச்சாரம் செய்தார். ‘மகாத்மா காந்திக்கு ஜே‘ என்பதற்குப் பதில் ‘முகமது அலி சவுக்கத் அலிக்கு ஜே‘ என்று கோஷமிடுமாறு மக்களைக் கேட்டுக்கொண்டார். இவற்றால் தமிழ்நாட்டில் கிலாபத் இயக்கம் புதுபலம் பெற்றது. வடஆற்காடு மாவட்டத்திலுள்ள வாணியம்பாடி கிலாபத் இயக்கத்தின் உயிர்நாடியாகத் திகழ்ந்தது. அங்கிருந்த முஸ்லீம்கள் கிலாபத் பொதுக்குழு ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் கிலாபத் பற்றிய பல பிரசுரங்களை வெளியிட்டனர். தமிழ்நாட்டில் நீதிக்கட்சியினரும் சுயாட்சி அங்கத்தினரும், லிபரல் கட்சியினரும் கிலாபத் இயக்கத்தை ஆதரிக்கவில்லை.

## நீதிக்கட்சியும் இரட்டை ஆட்சியும்

தமிழ் நாட்டில் 1892லேயே ஆதிதிராவிடர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் டாக்டர் டி.எம்.நாயர், தியாகராஜ செட்டியார், கேசவப் பிள்ளை, நடேச முதலியார் போன்றோர் பிராமணர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து, பிராமணர் அல்லாதோரின் உரிமைகளைக் கோரிப்பெற முயற்சித்தனர். சென்னையில் ஒரு திராவிடர் அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. 1916-இல் தென்னிந்தியர் நல உரிமைச் சங்கம் உருவாக்கப்பட்டது. அதுவே பின்னர் நீதிக்கட்சி என்ற பெயருடன் செயல்பட்டது.

## நீதிக்கட்சி ஆட்சி

நீதிக்கட்சி இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்காமல் பிராமணர் அல்லாதார் நலன் காக்கும் இயக்கத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது. அதற்குக் காரணம் இந்தியாவுக்கு சுதந்திரம் கிடைத்தால் ஆட்சி ஆங்கிலேயரிடமிருந்த பிராமணர்களுக்கு மாறுமேயன்றி முழு மக்களாட்சியாகாது என்று அக்கட்சி கருதியதேயாகும். மாண்டேகு-செம்ஸ்போர் சீர்திருத்தம் கொண்டு வந்த இரட்டை ஆட்சி முறையை காங்கிரஸ் நிராகரித்தது. ஆனால் நீதிக்கட்சி அதை வரவேற்று பிரிட்டிஷ் ஆட்சிக்கு ஆதரவு அளித்தது.

1920-ல் நடைபெற்ற தேர்தலில் பிராமணர் பிடியிலிருந்த ஹோம்ரூல் லீக்கைத் தோற்கடித்து வலிமையான பெரும்பான்மை பலத்தைப் பெற்றது நீதிக்கட்சி. காங்கிரஸ் தேர்தலைப் புறக்கணித்தது. 1920லிருந்து 1937 வரை நீதிக்கட்சி ஆட்சிப்பொறுப்பில் இருந்தது. சுப்பராயலு ரெட்டியார் தலைமையில் அமைச்சரவை பதவி ஏற்றது. அதன்பின் நடைபெற்ற தேர்தலில் நீதிக்கட்சி சுயராஜ்யக் கட்சியை வென்று பனகல் அரசரின் தலைமையில் ஆட்சி அமைத்தது. உட்கட்சிப் பூசலால் 1926இல் நடந்த சுப்பராயன் சுயராஜ்யக் கட்சி ஆதரவுடன் ஆட்சிப்பொறுப்பேற்றார். 1927 முதல் நீதிக்கட்சி மாநில சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பியது. 1930இல் நடைபெற்ற தேர்தலில் பிற கட்சிகள் பங்கேற்காததால், நீதிக்கட்சி எளிதில் வெற்றி பெற்று, முனுசாமி நாயுடு தலைமையில் ஆட்சியில் அமர்ந்தது. இந்தியா சட்டமறுப்பு இயக்கத்தை, சந்தித்துக் கொண்டிருந்த போது பொப்பிலி அரசர் முதலமைச்சரானார். 1935 இந்திய அரசியல் சட்டம் கொண்டுவந்த மாநில சுயாட்சித் திட்டத்தின்படி நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் நீதிக்கட்சியைத் தோற்கடித்து சி.ராஜகோபாலாச்சாரியார் தலைமையில் ஆட்சியைக் கைப்பற்றியது.

## ஒத்துழையாமை இயக்கம், 1920-1922

தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் சி. ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் ஆர்வத்துடன் நடத்தப்பட்டது. சென்னை பச்சையப்பன் கல்லூாயீல் படித்துக்கொண்டிருந்த அவரது மகன் ரா.இராமசாமியையும் மாநிலக் கல்லூாயீல் படித்துக் கொண்டிருந்த மற்றொரு மகன் ரா. கிருஷ்ணசாமியையும் அக்கல்லூரியிலிருந்து வெளியேறச் செய்து, அவர்களை கதர்த் தொண்டில்

ஈடுபடுவதற்காக சேலத்துக்கு அனுப்பி வைத்தார் அவர். ‘பாரிஸ்டர்’ பட்டம் பெற்றிருந்த வழக்கறிஞர் ஜார்ஜ் ஜோசப் தனது தொழிலைத் துறந்து ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்தார். எ. சீனிவாச ஐய்யங்கார் தனது அட்வகேட் ஜெனரல் பதவியையும், ‘சி.ஐ.ஈ’ என்ற படத்தையும் துறந்தார். வ.உ.சிதம்பரம் பிள்ளை ஒத்துழையாமை இயக்கத்தை ஆதரிக்காவிட்டாலும் கூட தனது வக்கீல் தொழிலைத் துறந்து இலக்கிய பணியில் ஈடுபட்டார். சென்னை என்.எஸ். வரதாச்சாரி, எஸ். ராமநாதன் ஆகிய இளம் வழக்கறிஞர்கள் நீதிமன்றம் செல்வதை நிறுத்திவிட்டனர். முஸ்லீம்களில் சிலர் தாங்கள் வகித்த மாஜிஸ்ரேட் உத்தியோகங்களை உதறித்தள்ளினார்.

1920 இறுதியில் நடக்கவிருந்த மாநில சட்டமன்றப் புறக்கணிப்புப் பிரச்சாரத்தில் தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் தீவிரமாக ஈடுபட்டனர். தேர்தலில் போட்டியிட வேண்டாமென்று வேட்பாளர்களையும், மீறிப் போட்டியிடுவோருக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று வாக்காளர்களையும் அவர்கள் வேண்டிக்கொண்டனர். ராஜகோபாலாச்சாரியும், ராஜனும் திருச்சி, கோயமுத்தூர், சேலம் மாவட்டங்களில் சூறாவளிச் சுற்றுப்பயணம் செய்தனர். சென்னையிலும் திருச்சியிலும் காங்கிரஸ் கிலாபத் தொண்டர்கள் தேர்தல் புறக்கணிப்பு முயற்சியில் இறங்கினர். அதன் விளைவாக 24 தேசியவாதிகள் தேர்தலிலிருந்து விலகிக் கொண்டனர். எனினும் 1920 நவம்பர் 30ஆம் தேதி நடைபெற்ற தேர்தலில் சென்னை மாநில சட்டமன்றத்துக்கான 98 இடங்களில் 63ஐக் கைப்பற்றியது நீதிக்கட்சி. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை சட்டமன்றப் புறக்கணிப்பு வெற்றி பெறவில்லை. நீதிக்கட்சி தேசிய நீரோட்டத்திலிருந்து விலகிச் சென்ற அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்று ஒத்துழையாமை இயக்கத்தை ஒதுக்கிவிட்டு மக்களின் செல்வாக்கைப் பயன்படுத்தி ஆட்சியை எளிதில் கைப்பற்றியது.

1921 ஜனவரி 10ஆம் தேதி சென்னைக்கு வருகை தந்த கானாட் கோமகனைப் புறக்கணித்தனர். தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள். சென்னை நகரின் மூலை முழக்குகளிளெல்லாம் கோமகன் புறக்கணிப்புப் பிரச்சாரம் மும்முரமாக நடைபெற்றது. நகரில் பூரண அர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. அன்று மாலை சென்னை கடற்கரை கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு கானாட் கோமகனது வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். கடற்கரையின் மற்றொரு பகுதியில் நீதிக்கட்சியின் செல்வாக்கின் கீழிருந்த சென்னை மாநகராட்சியின் சார்பாகக் கானாட் கோமகனுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. இரண்டு நாட்களுக்குப் பின்னர் சென்னை மாநில புதிய சட்டமன்றக் கூட்டத்தைத் துவக்கி வைத்து உரையாற்றினார் கோமகன். எனினும் ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் செயல்பட்ட தமிழ்நாடு காங்கிரஸ் கானாட் கோமகனது சென்னை வருகையை வெற்றிகரமாகப் புறக்கணித்தது என்றே கூற வேண்டும்.

ஒத்துழையாமை இயக்கத்தின் ஒரு பகுதியாகத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். சென்னை தொழிலாளர் யூனியன் சார்பாக பக்கிங்காம்

தொழிற்சாலை தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மீண்டும் வேலையில் சேரச்சென்ற 800க்கும் மேற்பட்ட ஆதிதிராவிடத் தொழிலாளர்கள் தாக்கப்பட்டனர். அவர்களது குப்பங்கள் தீக்கிரையாக்கப்பட்டது. தமிழ்நாட்டின் பல பகுதிகளில் கள்ளுக்கடைகள் பகிஷ்கரிக்கப்பட்டன. கோயமுத்தூர், சேலம், தென் ஆற்காடு ஆகிய மாவட்டங்களில் கள்ளுக்கடை மறியல் தீவிரமாக நடைபெற்றது மறியலில் பலாத்காரமும் பயன்படுத்தப்பட்டது. தடை உத்தரவை மீறியதால் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

காந்தியடிகள் துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தில் ராஜபாளையம் பெரும் பங்கேற்றது. சுயாட்சி இயக்கத்தில் பங்கேற்ற நகரத் தலைவர்கள் ஒத்துழையாமை இயக்கத்திலும் தீவிரமாக ஈடுபட்டனர். திருச்சியில் நடைபெற்ற 25வது சென்னை மாகாண காங்கிரஸ் மாநாட்டில் பல பிரதிநிதிகள் இவ்வூரிலிருந்து சென்று கலந்து கொண்டனர். சண்டமாருதப் பிரசங்க எஸ். சத்தியமூர்த்தியின் வருகை இந்நகர் மக்களிடையே உற்சாகம் பிரவாகத்தை ஏற்படுத்தியது. ஐ.பி.அரங்கசாமி ராஜா, பி.எஸ்.சின்ன வெங்கட்ராஜா பெருமாள் ராஜா, டி.எ.கே. அழகுராஜா ஆகியோர் நாக்பூர் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டனர். அம்மாநாட்டில் கலந்து கொண்டு திரும்பியோர் இந்நகரில் காங்கிரஸ் இயக்கத்தைப் பலப்படுத்தினர். ஐ.பி.அரங்கசாமி ராஜா வரலாற்று சிறப்புமிக்க கதர் இயக்கத்துக்கு ராஜபாளையத்தில் உறுதியான அடித்தளம் அமைத்துக் கொடுத்தார். அதற்காக அவர் சிறைத்தண்டனை பெற்றார். அவரும் அவரது சகாக்களும் மேற்கொண்ட முயற்சியின் விளைவாக 'ராஜபாளையம் கை சர்க்கா நூல் நூற்கும் தொழிற்சாலை' துவக்கப்பட்டது. கதரின் பெருமை பற்றிய பிரச்சாரம் செய்யப்பட்டது. இப்பிரச்சாரப் பிரசுரங்கள் விடுதலை இயக்க நீரோட்டத்தில் கலந்தது. பி.எஸ்.குமாரசாமி ராஜா துவக்கிய 'விவசாயிகள் சங்கம்' கிராமங்களில் தேசிய உணர்வைப் பரப்பியது. திருவில்லிபுத்தூர் தாலுக்காவில் நடைபெற்ற அரசியல் மாநாடு கிராமங்களில் காங்கிரஸ் கமிட்டிகள் அமையக் காரணமாயிருந்தது. 1922 மார்ச் 18ம் தேதி காந்தியடிகள் கைது செய்யப்பட்டதையடுத்து ராஜபாளையத்தில் அரசியல் கொந்தளிப்பு ஏற்பட்டது. எஸ். ஸ்ரீனிவாச ஐய்யங்கார் ராஜபாளையத்தை சுய ராஜபாளையம் என்று வர்ணித்ததில் வியப்பில்லை.

ஒத்துழையாமை இயக்கத்தின் போது மலபாரில் நிகழ்ந்த மாப்பிள்ளைகள் கிளர்ச்சி தமிழ்நாட்டில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தியது. அதனால் தமிழ் நாட்டில் கிலாபத், ஒத்துழையாமை இயக்கங்கள் வலுவிழந்து போயின. முஸ்லீம்களின் வன்முறைக்கு அஞ்சிய தமிழ்நாட்டு இந்துக்கள் ஒத்துழையாமை இயக்கத்திநின்றும் ஒதுங்கிக் கொள்ளத் துவங்கினர். திருச்சியில் பலப்பட்டிருந்த இந்து முஸ்லீம் ஒற்றுமை பலமற்றுப் போயிற்று. மதுரை மாநகராட்சி உறுப்பினர்கள் காந்திக்குக் கொடுக்கவிருந்த வரவேற்பைக் கைவிட்டனர். வேலூரில் முஸ்லீம்களிடையே பதட்டநிலை ஏற்பட்டது. மாப்பிள்ளைகள் கிளர்ச்சியில் களங்கப்பட்டுப்போன ஒத்துழையாமை இயக்கத்தை மேலும் தொடர வேண்டுமாவென

ராஜகோபாலாச்சாரி சந்தேகித்தார். 1921 செப்டம்பர் மாதம் தமிழ்நாட்டுக்கு வருகை தந்த காந்தி இந்து முஸ்லீம் ஒற்றுமை கேள்விக்குறியாக இருந்ததையும் காணத்தவறவில்லை. இயக்கம் எவ்வாறு உருவெடுக்குமோ என்ற அச்சம் மக்களிடையே பரவலாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்டார் காந்தி.

மலபார் மாப்பிள்ளைகள் கிளர்ச்சியைத் தொடர்ந்து ஒத்துழையாமை இயக்கத்தை ஒடுக்க தீர்மானித்தது சென்னை அரசாங்கம். யாகூப் ஹாசன் கைது செய்யப்பட்டார். அப்துல் மஜித்ஷா 'தமிழ்நாடு' பத்திரிக்கை ஆசிரியர் வரதராஜீலு நாயுடு, 'தேசபக்தன்' ஆசிரியர் குழுவினர் ஆகியோரும் கைது செய்யப்பட்டனர். 1921 நவம்பர் 4ஆம் தேதி அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி, தனிநபர்கள் சட்டமறுப்பு இயக்கத்தில் ஈடுபடலாம் என்று எடுத்த முடிவை, திருச்சியில் கூடிய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி ஆதரித்தது. அதன்படி தடை உத்தரவை மீறிய ராஜகோபாலாச்சாரியும், எம்.வி.சுப்பிரமணிய சாஸ்திரியும் கைது செய்யப்பட்டனர். கோயமுத்தூரில் கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்ட ஈ.வே.ராமசாமி நாயக்கரும் கைதானார். வேல் இளவரசர் சென்னைக்கு வருகை தந்த போது நகரில் பூரண அர்த்தால் நடைபெற்றது. ஆனால் வன்முறையும் துப்பாக்கிச் சூடும் தமிழ்நாட்டில் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்துக்கு அவப்பெயரைத் தேடித்தந்தன. வரிகொடா இயக்கத்துக்குத் தமிழ்நாட்டில் ஆதரவில்லை. தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தின் முதுகெலும்பாக இருந்த ராகோபாலாச்சாரி சிறையில் அடைக்கப்பட்டதாலும், காங்கிரசுக்குள்ளேயே பலருக்கு ஒத்துழையாமை இயக்கத்தில் நம்பிக்கையின்மையாலும், நீதிக்கட்சி பொது மக்களிடையே செல்வாக்கு பெற்று ஆட்சியைக் கைப்பற்றி அரசாங்கத்தை ஆதரித்ததாலும் தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றி பெறவில்லை. சௌரிசௌரா வன்முறை நிகழ்ச்சியை (1922 பிப்ரவரி 4) அடுத்து காந்தியே ஒத்துழையாமை இயக்கத்தை விலக்கிக்கொண்டார்.

**சுயராஜ்யக் கட்சி, 1923-1926**

ஒத்துழையாமை இயக்கம் விலக்கிக் கொள்ளப்பட்ட போதிலும் தேசத் தலைவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. இந்திய விடுதலைப் போராட்டம் தேக்கநிலையில் இருந்த போது சுயராஜ்யக் கட்சியினர் சட்டமன்றத்துக்குள் ஒத்துழையாமை இயக்கத்தை துவக்குவதென முடிவு செய்தனர். தமிழ்நாட்டில் கஸ்தூரிரங்க ஐய்யங்கர், சீனிவாச ஐய்யங்கார், வரதராஜீலு நாயுடு, விஜயராகவாச்சாரியார், ஏ.ரங்கசாமி ஐய்யங்கார் ஆகியோர் சுயராஜ்யக் கட்சியில் சேர்ந்து சட்டமன்ற நுழைவை ஆதரித்தனர். 1923 நவம்பர் 13ஆம் தேதி நடைபெற்ற மத்திய சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுயராஜ்யக் கட்சியினருள் சத்தியமூர்த்தி, ஏ. ரங்கசாமி அய்யங்கார், ஆர்.கே.ஷண்முகம் செட்டியார், என்.சீனிவாச அய்யங்கார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் சுயராஜ்யக் கட்சி 41 இடங்களைப் பெற்றாலும்கூட அமைச்சரவையை அமைக்க மறுத்துவிட்டது. அதனால் டாக்டர் பி.சுப்பராயன்

தலைமையில் சுயேட்சை அமைச்சரவை அமைக்கப்பட்டது. சுயராஜ்யக் கட்சியும், நீதிக்கட்சியும் எதிர்க்கட்சிகளாக செயல்பட வேண்டியதாயிற்று. இரட்டை ஆட்சியைத் தோற்கடிக்கும் நோக்கத்தோடு சுயராஜ்யக் கட்சி நீதிக்கட்சியுடன் சேர்ந்து சுயேட்சை அமைச்சரவையைக் கவிழ்க்கும் முயற்சியில் ஈடுபட்டது. தமிழ்நாட்டில் சுயராஜ்யக் கட்சியினரால் இரட்டை ஆட்சியின் தீமைகளை எடுத்துக்காட்ட முடிந்ததேயொழிய அதை செயலிழக்கச் செய்ய முடியவில்லை. இரட்டை ஆட்சியின் முரண்பாடுகளுக்குள் இந்திய சுயராஜ்யக் கட்சியினர் புயலில் சிக்கிய படகென திசைதப்பித் தமிழ்நாட்டு அரசியலிலிருந்து மறைந்தனர்.

**நீல் சிறை அறப்போராட்டம், 1927**

சென்னை இராணுவப் பிரிவின் தலைவராக இருந்த கர்னல் நீல் 1857 பெருங்கிளர்ச்சியை ஒடுக்குவதில் தனித்தீவிரம் காட்டியவர். அவருடைய சேவையைப் பாராட்டி பிரிட்டிஷ் அரசாங்கம் சென்னையின் பிரதான பகுதியில் நீலின் சிலையை வைத்தது. விடுதலைப் போராட்டத்தின் போது அந்த ‘அவமானச் சின்னத்தை’ அகற்றுவதற்காக நெல்லை ந.சோமயாஜீலுவின் தலைமையில் சத்தியாக்கிரகக்குழு துவக்கப்பட்டது. மதுரை சீனிவாசநாத ஐய்யங்கார், அவரது மனைவி பத்மாசனி அம்மாள். ரெ. சிதம்பரபாரதி, டாக்டர். பி.வரதராஜீலு ஆகியோர் அச்சத்தியாகிரகத்தில் பெரும் பங்கேற்றனர். 1927 ஆகஸ்டு 11ஆம் தேதி துவங்கிய அப்போராட்டத்துக்கு சுப்பராயலு நாயுடுவும், முகமது சாலியா ராவுத்தரும் தலைமை தாங்க நீலின் சிலையை உடைத்து சேதப்படுத்தினர். அவர்கள் கைது செய்யப்பட்டு ஆறுமாதம் கடுங்காவல் தண்டனை பெற்றனர். ஆகஸ்டு மாதம் துவக்கப்பட்ட நீல் சிலை சத்தியாக்கிரகம் டிசம்பர் வரை தொடர்ந்து நடைபெற்றது. தமிழ்நாட்டின் பல மாவட்டங்களிலிருந்தும் தொண்டர்கள் சென்னைக்கு வந்து அப்போராட்டத்தில் கலந்து கொண்டனர். சோமயாஜீலு, குடியாத்தம் சாமிநாத முதலியார், பண்ருட்டி எ.ஏ.தேவநாயக ஐயா ஆகியோர் முறையே தளபதிகளாயிருந்து நீல் சிலை சத்தியாகிரகத்தை நடத்தி கைதாகி கடுந்தண்டனையைப் பெற்றனர். ‘நாகபுரியில் நடைபெற்ற தேசியக் கொடிப்போர், பர்டோலியில் நடைபெற்ற வரிகொடா இயக்கம், கேரளத்தில் நடைபெற்ற வைக்கம் சத்தியாக்கிரகம் ஆகியவற்றுக்கு இணையானதாக இருந்தது சென்னையில் நடைபெற்ற நீல் சிலைச் சத்தியாக்கிரகம் எனப் புகழாரம் சூட்டியுள்ளார் ம.பொ.சிவஞானம்.

**சைமன் குழு புறக்கணிப்பு, 1927-1929**

1928 பிப்ரவரி 3ஆம் தேதி சைமன் குழு பம்பாயில் வந்திறங்கிய போது அதை எதிர்த்து இந்தியாவெங்கிலும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சென்னையில் நடைபெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தைக் கலைக்கப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் மூன்று பேர் மாண்டனர். பிரகாசம், முத்துரங்க முதலியார், பக்தவத்சலம் ஆகியோர் தடியடிக்கு ஆளாயினர். திருவல்லிக்கேணி ஜார்ஜ் டவுனில் நிலைமையை சமாளிக்க இராணுவம் அழைக்கப்பட்டது. சைமன் குழு சென்னைக்கு

வந்தபோது ‘சைமனே திரும்பிப் போ’ என்ற முழக்கம் எழுந்தது. அக்குழுவுக்கெதிராகக் கருப்புக்கொடி காட்டப்பட்டது. கண்டன ஊர்வலமும் கடற்கரைக் கூட்டமும் நடைபெற்றன. சைமன் குழுவுக்கு அளிக்கப்பட்ட அரசாங்க வரவேற்பில் டாக்டர் பி.சுப்பராயன் கலந்து கொண்டதைக் கண்டித்து அவரது அமைச்சரவையிலிருந்து ரங்கநாத முதலியாரும், ஆரோக்கியசாமி முதலியாரும் பதவி விலகினர். சைமன் குழு மீண்டும் சென்னை வந்தபோது தீவிரமாகப் புறக்கணிக்கப்பட்டது. சைமன் குழு வருகையால் தமிழ் நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சி மீதிருந்த அதிருப்தியும் வெறுப்புணர்ச்சியும் அதிகரிக்கவே செய்தன.

**பூரண சுதந்திர சபதம்**

1927 சென்னையில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில்தான் முதன்முறையாகப் பூரண சுதந்திரமே இந்தியாவின் குறிக்கோள் என அறிவிக்கப்பட்டது. அடுத்த ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் மக்கள் பூரண சுதந்திரப் பிரச்சாரத்தில் ஈடுபட வேண்டுமென்றும், 1929 இறுதிக்குள் இந்தியாவுக்கு டொமினியன் அந்தஸ்து வழங்கப்படாவிடில் காங்கிரஸ் பூரண சுதந்திரம் கோரிப் போராடலாமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டில் ராஜகோபாலாச்சாரி மீண்டும் அரசியலில் தீவிரமாக ஈடுபடலானார். தொடக்கப்படவிருந்த போராட்டத்துக்கு மக்களைத் தயார்படுத்த தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்தார் அவர். 1930 ஜனவரி 26ஆம் தேதி தேசமெங்கும் பூரண சுதந்திர நாள் கொண்டாடப்பட்ட போது தமிழ்நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும் ஊர்தோறும் அந்நாள் கொண்டாடப்பட வேண்டும். என்று ராஜகோபாலாச்சாரி பத்திரிகைகளில் வேண்டுகோள் விடுத்தார். மதுரையிலிருந்து அவரும் அவரது பரம பக்தருமான ஏ. வைத்தியநாத ஐய்யரும் அக்கொண்டாட்டத்தில் பங்கு கொண்டனர். சென்னையில் தேசியக்கொடி ஏற்றப்பட்டது. மாலையில் திருவல்லிக்கேணி திலகர் கூட்டத்தில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதில் காங்கிரஸ் காரியக்கமிட்டி தயாரித்த பூரண சுதந்திர சபதத்தை கூட்டத்தலைவர் வரிவரியாக வாசிக்க குழுமியிருந்த அறுபதாயிரத்துக்கும் மேற்பட்டோர் அந்த வாசகங்களைத் திரும்பச் சொல்லிச் சபதமெடுத்தனர்.

**உப்பு சத்தியாக்கிரகம், 1930**

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராயிருந்த ராஜகோபாலாச்சாரி தமிழ் நாட்டில் உப்புச் சத்தியாகிரகத்தை நடத்துவதற்காக தளபதியாகக் காங்கிரஸ் மேலிடத்தால் நியமிக்கப்பட்டார். காங்கிரஸ் தலைமையகத்தை சென்னையிலிருந்து திருச்சிக்கு மாற்றி அதைச் சட்டமறுப்பு இயக்க மையமாகக் கொண்டிருந்தார் அவர். ராஜகோபாலாச்சாரி மதுரை சென்று மதுரை மாவட்டக் கமிட்டித் தலைவரான என்.எம்.ஆர்.சுப்பராமனையும் வக்கில் வைத்தியநாத அய்யரையும் சந்தித்துப் பேசி வேதாரண்யம் உப்புச் சத்தியாக்கிரகம் பற்றி முடிவுசெய்தார்.

தமிழ்ப்புத்தாண்டு நாளும் ஜாலியன் வாலாபாக் படுகொலை நாளும் ஒன்றாகச் சேர்ந்த 1930 ஏப்ரல் 13ஆம் நாளன்று ராஜாஜி, சுப்பராமன், மாவட்டங்களிலிருந்து

தேர்ந்தெடுக்கப்பட்ட 98 சத்தியாக்கிரகிகள் ஆக மொத்தம் 100 பேர் அதிகாலை 5 மணிக்குத் திருச்சியில் டாக்டர் டி.எஸ்.எஸ். ராஜனின் மகன் ராஜகோபாலாச்சாரியாரின் நெற்றியில் திலகமிட்டு வழியனுப்ப, தேசியக் கொடி பிடித்தோர் முன் செல்ல, சத்தியாக்கிரகிகள் வரிசைக்கு இருவராக அணிவகுத்துச் சென்றனர். வழிநெடுகிலும் பாரதியாரின் அச்சமில்லை என்ற பாடலை அவர்கள் பாடிச்சென்றனர். அந்த யாத்திரைக்கென்றே நாமக்கல் கவிஞர் ராமலிங்கம்பிள்ளை 'கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது, சத்தியத்தின் நித்தியத்தை நம்பும் யாரும் சேருவீர்' என்ற பாடலை புனைந்து தந்திருந்தார். சத்தியாக்கிரகிகள் அனைவரும் அப்பாடலைப் பாடிச்சென்றனர்.

தஞ்சை மாவட்ட கலெக்டராயிருந்த எ.ஜே.ராரன் சத்தியாகிரகப் படையினை வரவேற்பதோ, உபசரிப்பதோ, விருந்தளிப்பதோ, வேறு வகையில் உதவி புரிவதோ கடுமையான தண்டனைக்குரிய குற்றங்களாகும் என்று தஞ்சை மாவட்டம் முழுவதிலும் அறிவித்திருந்தார். இருப்பினும், போராட்ட வீரர்கள் கிராமம் கிராமமாகச் சென்றபோது மக்கள் தடை உத்தரவை உதாசீனப்படுத்திவிட்டு, மங்கலத் தோரணங்கள் கட்டி, வேட்டுகள் வெடித்து உற்சாகமாக வரவேற்றனர். பெண்கள் பூரண கும்பம் எடுத்தனர். திருஷ்டி கழித்தனர். குளிர்பானங்களும் பண்டங்களும் கொடுக்கப்பட்டன. பல ஊர்களில் வீரர்களுக்கு விருந்துகள் வழங்கப்பட்டன. ராஜகோபாலாச்சாரி அண்ணாமலைப்பிள்ளை, ராஜன், வேதநாகய்யா, வைத்தியநாதய்யர், எழுத்தாளர் வ.ரா. ஆகியோர் வழிக்கூட்டங்களில் பேசினர். போலீசாரின் அடக்குமுறைகளையும் அரசாங்க விசுவாசிகளின் விஷமச் செயல்களையும் மீறி யாத்திரை வெற்றிகரமாக நடைபெற்றது.

திருச்சி, தஞ்சாவூர், கும்பகோணம், மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி வழியாக பதினாறு நாட்கள் யாத்திரைக்குப் பின்னர் 1930, ஏப்ரல் 28ஆம் தேதி சத்தியாகிரகிகள் வேதாரண்யத்தை அடைந்தனர். அங்கு கூடியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் அவர்களை வாழ்த்தொலி எழுப்பி வரவேற்றனர். மறுநாள் முழுவதும் சத்தியாகிரகிகள் அனைவரும் உண்ணா நோன்பிருந்தனர். பிரார்த்தனை செய்தனர். ஏப்ரல் 30ஆம் தேதி ராஜகோபாலாச்சாரி 16 சத்தியாகிரகிகளுடன் அகஸ்தியம் பள்ளியிலுள்ள உப்பளத்தை அடைந்து சட்டத்தை மீறி உப்பை அள்ளினார்கள். ராஜகோபாலாச்சாரி மட்டும் கைது செய்யப்பட்டார். அவருக்குப் பின் க. சந்தானம், பட்டப்பாறை வேங்கட்ராம அய்யர், கே.சுப்பிரமணிய ஐய்யர், ஜி.ராமச்சந்திரன் ஆகியோர் உப்புச் சத்தியாக்கிரகத்துக்குத் தலைமை தாங்கி, சட்டத்தை மீறி சிறை சென்றனர். வேதாரண்யம் உப்புச் சத்தியாகிரகம் ஒன்றரை மாதகாலம் நடந்தது.

ராஜகோபாலாச்சாரியின் தலைமையில் திருச்சியிலிருந்து உப்புச் சத்தியாகிரகிகள் புறப்பட்ட அன்றே 'ஆந்திர கேசரி' பிரகாசம் தலைமையில் சென்னை நகரில் உப்புச் சத்தியாகிரகப் போராட்டம் துவக்கப்பட்டது. டாக்டர் நடராஜன், ஸ்ரீபாதசங்கர், ஆக்கூர் அனந்தாச்சாரி, ஜமதக்கனி, செல்வி துர்க்காபாய்

ஆகியோர் அவருக்குக் துணையாக இருந்தனர். பிரகாசம் தலைமையில் சென்ற போராட்டவீரர்கள் அதிகாலை 7 மணிக்குத் திலகர் கட்டடத்தை அடைந்து, அடுப்புகளை அமைத்து, சட்டத்தை மீறி உப்புக்காய்ச்சினர். காய்ச்சிய உப்பை விநியோகித்தனர். நாள்தோறும் அப்போராட்டம் நடைபெற்றது. பிரகாசம், நாகேஸ்வரராவ் பந்தலு ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டு தலைக்கு ஐநூறு ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் கட்ட மறுத்தால் அவர்களுடைய கார்கள் ஜப்தி செய்யப்பட்டு ஏலத்தில் விடப்பட்டன.

டாக்டர் நடராஜன், செல்வி துர்க்காபாய் தலைமையில் உயர்நீதிமன்றம் வழியாக கடற்கரை நோக்கிப் போய்கொண்டிருந்த சுமார் 300 பேர் கொண்ட சத்தியாகிரகப் படையினரை போலீஸ் குதிரைப் படையினர் அடித்து உதைத்துக் கலைத்தனர். சென்னை அருகே இருந்த சோலிங்கபுரத்தில் சங்கர ஐய்யரும், முனுசாமி முதலியாரும் உப்புச்சத்தியாகிரகம் செய்து தண்டனை பெற்றனர். வேதாரண்யம், சென்னை, சோலிங்கபுரம் மட்டுமன்றி மதுரை, தூத்துக்குடி, கடலூர், ஈரோடு, நெல்லை, திருச்சி ஆகிய நகரங்களிலும் உப்புச் சத்தியாகிரகம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கானோர் சிறைத்தண்டனை பெற்றனர். இதனால் தமிழ்நாட்டில் பரபரப்பும் விழிப்புணர்ச்சியும் ஏற்பட்டன.

**அரசாங்கத்தின் அடக்குமுறை**

1930 மே 5ஆம் தேதி காந்தி கைது செய்யப்பட்டு ஏரவாடா சிறையில் அடைக்கப்பட்டதை அடுத்து தேசம் முழுவதிலும் அர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. சென்னை நகரிலும் தமிழ்நாட்டின் பிற நகரங்களிலும் கடையடைப்பும் வேலை நிறுத்தமும் நடைபெற்றன. சென்னை கடற்கரையில் நான்கு மேடைகள் போட்டு கண்டன சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. சென்னை மாநில சட்டமன்ற நியமன உறுப்பினரான திருமதி முத்துலட்சுமி ரெட்டி, காந்தி கைது செய்யப்பட்டதைக் கண்டித்து தனது பதவியை உதறித்தள்ளினார். மதுரை பாஸ்கரஸ்தா இயற்றிய ‘காந்தியோ பரம ஏழை சந்நியாசி’ என்ற பாடல் நாடக நடிகை கே.பி.சுந்தரம்பாவால் பாடப்பட்டது. அப்பாடலின் இசைத்தட்டு தமிழ்நாட்டு மூலை முழுக்கெல்லாம் எதிரொலித்தது.

சட்டமறுப்புப் போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டதை அடுத்து அரசாங்கத்தின் அடக்கு முறையும் கட்டவிழ்த்து விடப்பட்டது. சென்னை, சைனா பஜாரில் அந்நியத் துணிக் கடைகளுக்கு முன் மறியல் செய்த சத்தியாகிரகிகள் அத்துமீறித் தாக்கப்பட்டனர். தமிழ்நாட்டின் பல பகுதிகளில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களுக்கும் ஊர்வலங்களும் பலாத்காரமாகக் கலைக்கப்பட்டன. பல்வேறு நகர மன்றங்களிலும், நகர ஜில்லா போர்டுகளிலும் பஞ்சாயத்துக்களிலும் அடக்குமுறையைக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. சட்ட விரோதப் பேச்சுக்காக ராஜகோபாலாச்சாரி கைது செய்யப்பட்டார். சத்தியமூர்த்தி, கே.பாஷயம் ஐய்யங்கார், வி.ஏ.சுந்தரம் ஆகியோரும் சிறை தண்டனை பெற்றனர். மதுரைக் கல்லூரி மாணவர் விடுதியில் போலீசார் புகுந்து தடியடிப் பிரயோகம் செய்தனர்.

கோவை நகரில் டவுன்ஹால் திடலில் நடத்தப்பட்ட காங்கிரஸ் பொதுக்கூட்டம் போலீசாரால் பலாத்காரமாகக் கலைக்கப்பட்டது. வால்பாறையில் எஸ்.ஆர்.வரதராஜீலு நாயுடு, என்.எஸ்.ராமசாமி ஐய்யர் ஆகிய தொழிற்சங்கத் தலைவர்கள் பேசவிருந்த பொதுக்கூட்டம் தடை செய்யப்பட்டது. கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தவர்கள் போலீசாரால் தாக்கப்பட்டனர்.

காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது காந்தி-இர்வின் ஒப்பந்தம் மீறப்பட்டு அரசாங்கம் சட்டமறுப்புப் போராட்ட வீரர்களைப் பழிவாங்கத் தொடங்கியது. தமிழ்நாட்டில் சிறைக்குள் இருந்த விசாரணைக் கைதிகள் தடியடிக்கும், கசையடிக்கும் உள்ளாயினர். கள்ளுக்கடை, அந்நியத்துணிக்கடை மறியல் தடை செய்யப்பட்டது. பொய்க் குற்றங்கள் சாட்டப்பட்டுக் காங்கிரஸ்காரர்கள் கைது செய்யப்பட்டனர். சுயதேவைக்கு உப்பெடுப்பதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டது. இலண்டனிலிருந்து திரும்பிய காந்தி மீண்டும் சட்டமறுப்பு இயக்கத்தைத் துவக்கியதால் கைது செய்யப்பட்டார். காந்தி கைதான செய்தி கேட்டு, அதிர்ச்சியுற்ற திண்டுக்கல் வெள்ளைச்சாமி பிள்ளை உயிர் நீத்தார். சென்னையில் ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டனர். காங்கிரஸ் காரியக் கமிட்டிகள் அனைத்தும் சட்டவிரோதமானவை என்று அறிவிக்கப்பட்டது. அவற்றின் அலுவலகங்கள் மூடப்பட்டன. தமிழ்நாடு முழுவதிலும் காங்கிரஸ் கொடிகளை இறக்கிவிட்டு அவற்றுக்குப் பதில் பிரிட்டிஷ் யூனியன் ஜாக் கொடியை ஏற்றினர் போலீசார்.

காந்தி கை செய்யப்பட்டதிலிருந்து தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு தமிழ்நாட்டில் சட்டமறுப்பு இயக்கம் உப்புச் சத்தியாகிரகத்தைவிடத் தீவிரமாக நடைபெற்றது. சிறைச்சாலைகள் நிரம்பி வழிந்தன. 1932 ஜனவரி மாதம் 26ம் தேதி சுயராஜ்ய தினக் கொண்டாட்டத்தின் போது பலர் கைது செய்யப்பட்டனர். திருப்பூரில் தடை உத்தரவை மீறி பி.எஸ்.சுந்தரம் தலைமையில் சென்ற ஊர்வலத்தை போலீஸ் அதிகாரி முகமதுவின் தலைமையில் போலீசார் மூர்க்கத்தனமாகத் தாக்கினர். அத்தாக்குதலின்போது திருப்பூர் குமாரசாமியின் மண்டை நொறுக்கப்பட்டது. கொடியைப் பிடித்தவாறே உயிர் விட்டார் திருப்பூர் ‘கொடிகாத்த குமரன்’ கோவை மாவட்டத்தில் கணக்கற்ற காங்கிரஸ் பிரமுகர்களின் வீடுகள் சோதனையிடப்பட்டன. பலர் கைது செய்யப்பட்டனர். கோவை சி.ஏ.ஐயர் முத்துவும். அவருடைய மனைவி கோவிந்தம்மாளும் சட்டத்தை மீறியமைக்காக கடுங்காவல் தண்டனை பெற்றனர். அதே போன்று ஈரோடு எம்.ஏ.ஈஸ்வரனும் கூகலூர் கே.கே.சுப்பண்ண கவுண்டரும் தண்டிக்கப்பட்டனர். தஞ்சை மாவட்டத்திலும் பலர் சட்டமீறல் குற்றத்துக்காக கைது செய்யப்பட்டனர். விருதுநகரில் காமராஜர் ஜாமீன் கட்ட மறுத்து ஓராண்டு சிறை தண்டனை பெற்றார். பல மாவட்டங்களிலும் சட்டமீறல் குற்றத்துக்காப் பலர் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டனர். சிறை தண்டனை முடிந்து வெளிவந்தவுடன் தி.க.அவிநாசிலிங்கம் 3 அரிஜன மாணவர்களுக்காக அவரது கோவை பங்களாவில் ஒரு பள்ளியைத் துவக்கினார்.

அதுவே பின்னர் பெரியநாயக்கம் பாளையத்தில் ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயமாக விரிவடைந்தது.

**தேர்தலில் வெற்றி வாகை, 1937**

1934 பிப்ரவரி மாதம் 6ஆம் தேதி சிறையிலிருந்து விடுதலையான ராஜகோபாலாச்சாரி தனது நிலையை அடியோடு மாற்றிக்கொண்டு மத்திய மாநில சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் நேரடியாகப் போட்டியிட வேண்டுமென்றார். தேர்தல்களுக்கான பிரச்சார ஏற்பாடுகளையும் அவரே கவனித்தார். 1937ல் நடைபெற்ற மத்திய சட்டமன்றத் தேர்தலில் சென்னை மாநிலத்துக்குரிய 16 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 11 தொகுதிகளில் வெற்றி பெற்றது. எஸ்.சத்தியமூர்த்தி, டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார், பி.எஸ்.குமாரசாமி ராஜா, சி.என்.முத்துரங்க முதலியார், டாக்டர்.டி.எஸ்.எஸ்.ராஜன், சாமுவேல் ஆரோ, அனந்த சயனம் அய்யங்கார், வி.வி.கிரி. கே.நாகேஸ்வரராவ், பேராசிரியர் என்.ஜி.ரங்கா, சாமி வெங்கடாசலம் செட்டியார் ஆகியோர் வெற்றிவாகை சூடிய காங்கிரஸ்காரர்களாவர். இவர்களன்றி முஸ்லீம்களுக்குரிய தென்சென்னைத் தொகுதியில் முர்த்துஸா சாகேப் பகதூர் காங்கிரஸ் ஆதரவோடு வெற்றிபெற்றார். அதேபோன்று 1937இல் நடைபெற்ற சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் மொத்த இடங்கள் 214ல் 159ஐ காங்கிரஸ் கைப்பற்றியது. இத்தேர்தலில் காங்கிரசின் வெற்றிக்காகப் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவர் அரசின் அடக்கு முறையையும் மீறி அரும்பாடுபட்டார். பட்டதாரிகள் தொகுதியில் வெற்றி பெற்ற ராஜகோபாலாச்சாரி தலைமையில் முதன் முதலாக காங்கிரஸ் அமைச்சரவை அமைக்கப்பட்டது.

**ராஜாஜி அமைச்சரவை**

நீதிக்கட்சியின் பதினேழாண்டு கால 'இரட்டை ஆட்சிக்குப்பின் சென்னை ராஜதானியில் காங்கிரஸ் ராஜாஜியின் தலைமையில் ஆட்சி அமைத்தது. மாநிலசுயாட்சித் திட்டத்தின் கீழ் ராஜாஜி அரசு கொண்டுவந்த மதுவிலக்குச் சட்டமும். ஆலயப்பிரவேசச் சட்டமும் செயற்கரிய செயல்களாகும். எனினும் மதுவிலக்குத் திட்டத்தால் ஏற்பட்ட இழப்பைச் சரிக்கட்டுவதற்காகப் புகுத்தப்பட்ட விற்பனை வரி மக்களின் குறிப்பாக வியாபாரிகளின் வெறுப்பையும் எதிர்ப்பையும் தேடித் தந்தது. மாறாக, ராஜாஜி ஆட்சியின் இந்திக் கொள்கை 'சும்மா இருந்த சங்கை ஊதிக்கெடுத்தது போல்' ஆயிற்று தமிழகத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் காட்டுத்தீ போல் பரவிற்று. இப்போராட்டத்துக்குத் தலைமை தாங்கிய பெரியார் ஈ.வே.ராமசாமி நாயக்கரின் கரம் ஓங்கிற்று. 'தமிழ்நாடு தமிழருக்கே' என்ற குரல் எழுப்பப்பட்டது. பெரியார் இந்தி எதிர்ப்பு காரணமாகக் கைது செய்யப்பட்டு, இரண்டாண்டு தண்டனை வழங்கப்பட்டு பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். ராஜாஜி கொண்டு வந்த மற்றொரு சட்டம் பொற்கொல்லர்களைக் கிளர்ந்தெழச் செய்தது. 1939இல் இரண்டாம் உலகப்போர் தொடங்கியதால் காங்கிரஸ் மாநில அமைச்சரவைப் பதவி விலகத் தீர்மானித்தது. அதன்படி ராஜாஜி 'மாநில சுயாட்சி'

முடிவுக்குவந்தது. இது தவறான முடிவு என்றும், இந்த முடிவால் பிரிட்டிஷார் மாநிலங்கள் நிர்வாகத்துக்கு நேரடிப் பொறுப்பேற்று போருக்கான முயற்சியை முடுக்கிவிட்டது என்று கூறுகிறார் கே. ராஜய்யன்.

**தனிநபர் சத்தியாக்கிரகம், 1940**

1940 அக்டோபர் 13ல் வார்தாவில் கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டிக்கூட்டத்தில் காந்தி வெளியிட்ட தனிநபர் சத்தியாகிரகத் திட்டத்தையொட்டித் தமிழ்நாட்டில் பலர் கைதாயினர். டாக்டர் டி.எஸ்.ராஜன்தான் தமிழ்நாட்டின் முதல் சத்தியாக்கிரகியாகச் சிறை சென்றவர். தமிழ்நாடு காங்கிரஸ் சர்வாதிகாரியாகப் பொறுப்பேற்ற கே.காமராஜர், தமிழ்நாடு முழுவதற்குமான சத்தியாக்கிரகிகள் பட்டியலைத் தயாரித்துக் கொண்டு காந்தியை சந்தித்துப் பேச சென்றபோது கூடூர் புகை வண்டி நிலையத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். தஞ்சை, செங்கற்பட்டு, கோவை ஆகிய மாவட்டங்களில் பெரிய நிலச்சுவான்தார்களும் வணிகர்களும் தனிநபர் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு சிறை சென்றனர்.

ராஜகோபாலாச்சாரி, சத்தியமூர்த்தி, டி.பிரகாசம், டாக்டர்.பி.சுப்பராயன், வி.ஐ.முனுசாமிப்பிள்ளை, எ.இராமநாதன், பி.கோபால் ரெட்டி. வி.வி.கிரி. எம்.பக்தவத்சலம், என்.எஸ்.வரதாச்சாரி, டி.எஸ்.அவினாசிலிங்கம் செட்டியார், பி.எஸ்.குமாரசாமி ராஜா, நாடிமுத்து பிள்ளை, நாச்சியப்பக் கவுண்டர். கே. வெங்கடசாமி நாயுடு, பன்மொழிப் புலவர், தெ.பொ.மீனாட்சி சுந்தரம், தமிழ்ப்பேராசிரியர் மறைதிருநாவுக்கரசு, திருமதி. நீலாவதி ராமசுப்பிரமணியம், ம.பொ.சிவஞானம், தினமணி ஆசிரியர் டி.எஸ்.சொக்கலிங்கம் பிள்ளை, ‘ஆனந்தவிகடன்’ ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் தனிநபர் சத்தியாகிரகத்தின் போது சிறை புகுந்த செம்மல்களாவர். தமிழ்நாட்டில் ஒத்துழையாமை இயக்கம் உப்புச்சத்தியாகிரகம் ஆகிய போராட்டங்களில் ஈடுபட்டவர்களைவிட தனிநபர் சத்தியாக்கிரகத்தில் அதிக அளவில் அதிக ஆர்வத்துடனும் காங்கிரஸ்காரர்கள் கலந்துகொண்டு சிறை தண்டனை பெற்றனர். தமிழ்நாட்டில் தேசவிடுதலைப்பேராட்டச் சுடர் விளக்கு தொடர்ந்து எரிந்து கொண்டே இருந்தது.

**புரட்சி தீவிரவாதம்**

காங்கிரஸ் ஒத்துழையாமை இயக்கத்தைக் கைவிட்டு 1935 இந்திய அரசியல் சட்டப்படி ஆட்சிப்பொறுப்பேற்றது தீவிரவாத தேசியவாதிகளுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்தது. இரண்டாம் உலகப்போர் துவங்கி பின் காங்கிரஸ் பதவி விலகியதால் ஏற்பட்ட அரசியல் சூனியத்தைப் புரட்சி தீவிரவாதிகள் நிரப்பினர். தமிழ்நாட்டில் புரட்சிப் பாடல்கள் புனையப்பட்டு பொதுக்கூட்டங்களில் பாடப்பட்டன. குறிப்பாக, பகத்சிங்கின் தீரம், தியாகம் பற்றிப் பாடல்கள் மக்களிடையே புரட்சி தேசிய உணர்ச்சியை ஏற்படுத்தியது. ‘தொழிலாளர் வர்க்கப் பாதை என்ற நூல்

பிரிட்டிஷ் பேரரசு உலகின் பிரம்மாண்டமான சிறை என்றும், புதிய இந்தியாவை உருவாக்க மக்கள் வரி கொடுக்கக்கூடாது. அரசாங்க நிறுவனங்களை அழிக்க வேண்டும். போலீஸ் மற்றும் இராணுவ நிலையங்களைத் தாக்க வேண்டும். ஆயுதப் புரட்சி செய்ய வேண்டும் என்று கூறியது. சிவகாமிநாதன் எழுதிய புரட்சிக் கவிதைகள் அடங்கிய சுதந்திர முரசு என்ற கவிதைத் தொகுப்பை ஏ.முத்தையா நாடார் மதுரையில் வெளியிட்டார்.

சிவகாசி புரட்சித் தீவிரவாதத்தின் குவிமையமாகத் திகழ்ந்தது. துரைசாமி நாடார், தனமூர்த்தி நாடார். கணபதி நாடார் ஆகியோர் தலைமறைவாகிப் புரட்சி இயக்கத்தை நடத்தி வந்தனர். புரட்சி தீவிரவாதப் பிரசுரங்களை வெளியிட்டனர். ஒரு பிரசுரம் பிட்டனுக்குச் சமாதி கட்ட வேண்டும் என்ற துணிச்சல்மிக்க இளைஞர்களைக் கேட்டுக் கொண்டது. பிரிட்டிஷ் அதிகாரிகள் கூடியிருந்த மதுரை திருமலை நாயக்கர் மகாலில் வெடிகுண்டு வைக்கப்பட்டது. சென்னை பெரம்பூரில் இருந்த ஒரு வீட்டைச் சோதனையிட்டு மோகன் குமாரமங்கலம், சுப்பிரமணிய சர்மா, ஹனுமந்தராவ், குன்சுப்ப நம்பியார் ஆகிய தலைமறைவுத் தலைவர்களைக் கைது செய்தனர். பாசிசப் புத்தகங்களும், பிரசுரங்களும் கைப்பற்றப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியை ஒழிக்க சதி செய்ததாகக் குற்றம்சாட்டி உடுமலைப்பேட்டையில் நரசிம்ம நாயக்கரையும் அவரது சகாக்களையும் கோவையில் கைது செய்து, 5 ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுத்து பெல்லாரி சிறையில் அடைத்தனர். சிறைக் கொடுமை தாங்காமல் நரசிம்ம நாயக்கர் உயிரிழந்தார்.

**வெள்ளையனே வெளியேறு இக்கம், 1942**

1942 ஆகஸ்டு 7, 8 தேதிகளில் பம்பாயில் கூடிய காங்கிரசில் வெள்ளையனே வெளியேறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அடுத்தநாள் காந்தி கைது செய்யப்பட்டார். பம்பாய் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய தமிழ்நாட்டுப் பிரதிநிதிகளான கே. காமராஜர், வேலூர் வி.எம்.உபயதுல்லா, திருவண்ணாமலை என். அண்ணாமலைப்பிள்ளை, சி.என்.முத்துரங்க முதலியார், எம்.பக்தவச்சலம், எ. சத்தியமூர்த்தி ஆகியோர் கைது செய்யப்பட்டு வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மதுரை அருகே ம.பொ.சிவஞானம் கைது செய்யப்பட்டார். காங்கிரஸ் மீது அரசாங்கம் நடத்திய திடீர்த்தாக்குதலால் மக்கள் அதிர்ச்சி அடைந்தனர். தலைவர்கள் போராட்டத்திட்டம் எதுவும் அறிவிக்காத நிலையில் மக்கள் மனம்போன போக்கில் செயல்பட்டனர். ஆகஸ்டுப் போராட்டம் துவங்கியது.

காந்தி கைது செய்யப்பட்ட செய்தி எட்டிய உடன் சென்னையில் பூர்ண அர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது. கடைகள் அடைக்கப்பட்டன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. கல்விக் கூடங்கள் காலியாகக் கிடந்தன. தொழிலாளர் ஆர்ப்பாட்டத்தை அடக்கப் போலீசார் சுட்டதில் 9 பேர் உயிரிழந்தனர். ஐரோப்பியர் நடத்திய கடைகள் மீது கற்கள் வீசப்பட்டன. நகரின் பல பகுதிகளில் நடைபெற்ற

தடியடிப் பிரயோகத்தில் பலர் காயமுற்றனர். சென்னை, செங்கற்பட்டு, வடஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

தஞ்சை மாவட்டத்தில் காங்கிரஸ் கலகக்காரர்கள் பல குழுக்களாகப் பிரிந்து கிளர்ச்சியில் ஈடுபட்டனர். சீர்காழியிலுள்ள உப்பனாற்றுப் பாலத்தை வெடி வைத்துக்தகர்க்க முயற்சித்தனர். அது சம்பந்தமாக ‘தினமணி’ துணை ஆசிரியர்கள் எம்.ராமரத்தினம், டி.வி.கணேசன், தொழிலதிபர் சுப்புராயன், சேஷீ அய்யர் ஆகியோர் மீது சதி வழக்கு தொடரப்பட்டது. பல்வேறு நாசவேலைகளுக்குக் காரணமாக இருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு க. ராஜவேலு உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.

கோயமுத்தூரிலும், சிங்காநல்லூரிலும் பஞ்சாலைத் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லாமல் தடை உத்தரவை மீறி ஊர்வலம் சென்றனர். போலீசார் குறுக்கிட்டு ஊர்வலத்தைக் கலைக்க முற்பட்ட போது கலவரம் மூண்டது. கோவை இராணுவ விமான தளம் தாக்கப்பட்டு முழுவதுமாக எரிக்கப்பட்டது. கோவைக்கு அருகேயுள்ள சூலூர் இராணுவ விமான தளமும் கடுமையாகத் தாக்கப்பட்டது. சுமார் 200 இராணுவ டாங்குகள் நாசமாக்கப்பட்டன. அக்கிளர்ச்சியின்போது இராணுவத்தினர் சுட்டத்தில் முப்பது பேர் மாண்டனர். சூலூருக்கு அருகாமையிலிருந்த கிராமத்திலிருந்த ஆண்கள் கைது செய்யப்பட்டு, ஒரு சிறு இடத்தில் ஒருவார காலம் அடைத்து வைக்கப்பட்டனர்.

மதுரை மாவட்டம் முழுவதும் கடையடைப்பு செய்யப்பட்டது. பல இடங்களில் போலீசாருக்கும் இளைஞர்களுக்குமிடையே மோதல்கள் நடைபெற்றன. மதுரையிலும் பசுமலையிலுள்ள தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தனர். மதுரையில் தடையை மீறி பேசியதற்காக எ.வைத்தியநாத அய்யர், ரெ. சிதம்பரபாரதி, கே. ராஜாராம் நாயுடு போன்ற பல பிரமுகர்கள் கைது செய்யப்பட்டனர். ஜான்ஸி ராணி பூங்காவில் தடையை மீறிக் கூடிய பொது மக்களுக்கும் போலீசாருக்குமிடையே பலமணி நேரம் போராட்டம் நடந்தது. துப்பாக்கிச் சூட்டில் ஆறு பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயமுற்றனர். மதுரை வீதிகளில் போலீஸ் வாகனங்கள் நடமாட முடியாதபடி போக்குவரத்து தடை செய்யப்பட்டது. அஞ்சலகம் தீக்கிரையாக்கப்பட்டது. அரசாங்க அலுவலகங்கள் செயலிழந்தன. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விசுவநாத நாயர் மீது திராவகம் வீசப்பட்டது. நிலைமை கட்டுக்கடங்காமல் போகவே மதுரை மாநகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் வன்முறை நிகழ்ச்சிகள் பரவலாக நடைபெற்றன. செட்டி நாட்டு இளைஞர்களும் ஆகஸ்டு கிளர்ச்சியில் தீவிரமாக ஈடுபட்டனர். திருவேகம்புத்தூர் சாலையிலுள்ள பாலங்கள் உடைக்கப்பட்டன. சாலையோரங்களிலுள்ள மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு போக்குவரத்து தடை செய்யப்பட்டது. திருவாடாணையில் பஸ்கள் தீக்கிரையாக்கப்பட்டன. துப்பாக்கிச் சூட்டில் தருமராஜன் என்பவர் உயிரிழந்தார். பலர் காயமுற்றனர். கட்டுக்கடங்காத

கூட்டம் மாஜிட்ரேட் கோட்டுக்குள் புகுந்து தஸ்தாவேஜீக்களை கொளுத்தி, கட்டிடத்துக்குத் தீ வைத்தது. அப்போது நடந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் உட்பட ஆறு பேர் இறந்தனர். ரிசர்வ் போலீஸ் படையொன்று சர்ஜான்ட் வாலட் தலைமையில் வீடுவிடாகப் புகுந்து மக்களைக் கொடுமைப்படுத்தினர். பிள்ளைகளையும் கணவன்மார்களையும் காட்டிக் கொடுக்க மறுத்த தாய்மார்கள் மானபங்கப்படுத்தப்பட்டனர். செல்லத்துரை தலைமையில் ஒரு கூட்டம் திருவாடாணை சப் ஜெயிலை உடைத்துக் காவலில் வைப்பட்டிருந்த சின்ன அண்ணாமலையையும் டி.என்.ராமநாதனையும் பிறரையும் விடுவித்தனர்.

1942 ஆகஸ்டு மாதம் முழுவதும் தமிழ் நாட்டின் பல இடங்களிலும் வன்முறைக் கலவரங்கள் நடைபெற்றன. அவையாவும் தனி நபர்களாலும், குழுக்காளலும், கூட்டங்களாலும் நடத்தப்பட்டவையேயாகும். அதனால் அப்போராட்டம் ஒரு தலைமையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்ட மக்கள் இயக்கமாக உருவெடுக்க முடியாமல் போய்விட்டது. ராஜகோபாலாச்சாரியும் அவரது ஆதரவாளர்களும் காங்கிரசிலிருந்து வெளியேறியதால் ஆகஸ்டு கிளர்ச்சியில் அவர்கள் கலந்து கொள்ளாமல் ஒதுங்கியே இருந்தனர். அதே போன்று மாணவர்களிடையேயும் தொழிலாளர்களிடையேயும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த கம்யூனிஸ்டுகள் இரண்டாவது உலகப் போரில் நேச நாடுகளை ஆதரித்ததால் அரசாங்கச் சார்புடையவர்களாக இருந்து கொண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் பலவீனப்படுத்தினர். தமிழ்நாட்டில் ாநச வேலைகள் 1942 ஆகஸ்டு மாதத்தோடு முடிந்துவிட்டன.

**“விடுதலை விடுதலை விடுதலை”**

பூனாவில் ஆகாகான் அரண்மனையில் சிறை வைக்கப்பட்டிருந்த காந்தியை விடுதலை செய்யுமாறு நாடெங்கும் பொதுக்கூட்டங்களும் மறியல்களும் நடைபெற்றன. சென்னை நகரில் அரசு தலைமை அலுவலகத்துக்கு முன்பாக மறியல் செய்யப்பட்டது. காங்கிரஸ் தொண்டர்கள் பலர் கைதாயினர். மதுரை, திருச்சி போன்ற நகரங்களில் தடை உத்தரவை மீறி ஊர்வலம் சென்றவர்களும் ஆர்ப்பாட்டம் செய்தவர்களும் கைது செய்யப்பட்டனர். லின்லித்தோ பிரபுவுக்குப் பின் வேல் பிரபு (1942-47) இந்திய வைசிராயானவுடன் இந்திய அரசியல் நிலைமையில் நல்ல மாற்றம் ஏற்பட்டது. 1944, மே 6ஆம் தேதி காந்தி விடுதலை செய்யப்பட்டார். நாடு தன் விடுதலை நோக்கி நடைபோடத் துவங்கியது.

இந்திய விடுதலையில் அக்கறை காட்டி வந்த பிரிட்டிஷ் தொழிற்கட்சி 1945 பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றது. இது இந்திய சுதந்திரப் போராட்டத்தின் வெற்றி வாய்ப்புக்கான அறிகுறியாக அமைந்தது. இந்திய சட்டமன்றத் தேர்தலில் தமிழ் மாவட்டங்களில் சென்னை நகரத் தொகுதியிலிருந்து திருமதி அம்மு சுவாமிநாதனும், செங்கற்பட்டு தென்ஆற்காடு தொகுதியிலிருந்து வெங்கடசுப்பா ரெட்டியாரும், கோவை, வடஆற்காடு, சேலம் தொகுதியிலிருந்து வி.சி.வெள்ளியங்கிரிக் கவுண்டரும், தஞ்சை திருச்சித் தொகுதியிலிருந்து டி.வி.சடகோபாச்சாரியாரும், மதுரை

இராமநாதபுரம் நெல்லைத் தொகுதியிலிருந்து ஆதித்த நாடாரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1939-ல் பாதுகாப்புக் கைதியாகச் சிறையிலடைக்கப்பட்டு 1945 செப்டம்பர் 8 ஆம் தேதி விடுதலை செய்யப்பட்ட முத்துராமலிங்கத் தேவர் இத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். வர்த்தகர்களுக்கான ஒரே தொகுதியிலிருந்து டி.எ.ராமலிங்கம் செட்டியார் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடுத்த ஆண்டு நடைபெற்ற சென்னை மாநில சட்டமன்றத் தேர்தலில் 215 தொகுதிகளில் வெற்றி பெற்ற காங்கிர 1948 ஏப்ரல் 30ஆம் தேதி டி.பிரகாசம் தலைமையில் அமைச்சரவை ஆட்சிப் பொறுப்பேற்றது. இராமநாதபுரம், வட ஆற்காடு, கோவை, மதுரை, திருநெல்வேலி, மலபார், கிழக்கு கோதாவரி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 84 அரசியல் கைதிகளைப் பிரகாசம் ஆட்சி விடுதலை செய்தது. அவர்களுள் 62 பேர் தமிழர்கள்.

**ஆனந்த சுதந்திரம்**

மத்தியில் ஜவஹர்லால் நேருவின் தலைமையில் அமைக்கப்பட்ட இடைக்கால அரசாங்கத்தில் தமிழ்நாட்டிலிருந்து சி.ராஜகோபாலாச்சாரி இடம் பெற்றார். அதேபோன்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டமன்றத்துக்காக சென்னை மாநிலத்திலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்ட 49 பிரதிநிதிகளில் 22 பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். அட்லியின் அறிவிப்பைத் தொடர்ந்து மவுண்ட்பேட்டன் பிரபு இந்திய வைசிராயாகப் பொறுப்பேற்றார். பாகிஸ்தான் பிரிவினையோடு இந்தியா பிரிட்டிஷ் பிடியினின்றும் விடுதலை பெற்றது. 1947 ஆகஸ்டு 14ஆம் தேதி நள்ளிரவில் டெல்லியில் நடைபெற்றது போன்றே சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலும் பிரிட்டிஷ் ஜாக் கொடியை இறக்கிவிட்டு அதற்குப் பதில் அசோகக் சக்கரம் பொறிக்கப்பட்ட சுதந்திர இந்தியாவின் மூவர்ணக் கொடி ஏற்றப்பட்டு பட்டொளி வீசிப் பறக்கவிடப்பட்டது. சென்னை நகரம் அலங்கார ஒளிவிளக்கு வெள்ளத்தில் மிதந்தது. நள்ளிரவிலும் தமிழ்நாட்டுத் தெருக்கள்தோறும் மக்கள் கூட்டம் ஆனந்தச் சுதந்திரக் கூத்தாடிற்று. “ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று” என்ற பாரதியாரின் பாடல் தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெல்லாம் பரவி மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தியது.

**சுயமரியாதை இயக்கம், 1925-1935**

சென்னை ராஜதானியில் இரட்டை ஆட்சியின் கீழ் நீதிக்கட்சி ஆட்சி செய்துகொண்டிருந்தபோது பெரியார் ஈ.வெ.ராமசாமி காங்கிரசை விட்டு வெளியேறி சுயமரியாதை இயக்ககத்தைத் துவக்கினார். ஈரோடு வெங்கடப்பராமசாமி (ஈ.வெ.ரா) நாயக்கர் தனது 28வது வயதிலிருந்து (1907) காங்கிர இயக்கத்தில் ஆர்வம் கொண்டார். காங்கிர மாநாடுகளுக்குச் சென்று வரத்தொடங்கினார். 1919-ஆம் ஆண்டு ஈரோடு நகர்மன்றத்தலைவர் பதவியைவிட்டு வெளியேறி காங்கிர உறுப்பினரானார். காந்தியின் தலைமையின் கீழ் நடைபெற்ற ஒத்துழையாமை இயக்கத்தில் முழு மனதுடன் ஈடுபட்டார். ஈரோட்டில் கள்ளுக்கடை மறியலை முன்னின்று நடத்தினார். காந்தியின் நிர்மானத்திட்டத்தை சிரமேற்கொண்டு

தாதம்பட்டியில் அவருக்குச் சொந்தமான 500 தென்னை மரங்களை வெட்டிச்சாய்த்தார். தீவிர கதர் பிரச்சாரத்தை மேற்கொண்டார். கள்ளுக்கடை மறியல் செய்ததற்காக கோவைச் சிறையில் அடைக்கப்பட்டார். தமிழ்நாடு காங்கிர தலைவராகப் பணியாற்றியபோது கேரளத்தில் வைக்கம் தீண்டாமை ஒழிப்பு சத்தியாகிரகத்தில் பங்கேற்றார். சேரன்மகாதேவி குருகுலத்தில் பிராமணரல்லாதாருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டித்தார். இவற்றுக்கிடையே ஈ.வெ.ரா. தொடர்ந்து காங்கிர ஆண்டுக் கூட்டங்களில் வகுப்புரிமை பற்றிப் பேசி அதற்கான தீர்மானங்களைக் கொண்டு வந்தார். அந்த தீர்மானங்கள் அனைத்தும் நிராகரிக்கப்பட்ட போது அவர் காங்கிரசை விட்டு வெளியேறினார். அப்போது அவர் தமிழ்நாடு காங்கிர செயலராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. சுருங்கக்கூறின், ஈ.வெ.ராமசாமியின் வகுப்புரிமை கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படாமையால் காங்கிரசைவிட்டு வெளியேறி சுயமரியாதை இயக்கத்தைத் துவங்கினார். காங்கிரசைவிட்டு வெளியேறியதற்குக் காரணம் “அது ஒரு வகுப்புவாத தாபனம், ஆரியப் பார்ப்பனரின் நலனுக்காகவே பாடுபட்டு வந்த ரு தாபனம், வருணாசிரம பாதுகாப்பிஸ்தாபனம் என்பதை தெளிவாக உணர்ந்தது தான்”

**முன்மாதிரி இயக்கங்கள்**

பெரியார் ஈ.வெ.ராமசாமி சுயமரியாதை இயக்கத்தைத் துவக்குவதற்கு முன்னால் வெளிநாடுகளில் சுயமரியாதைக் கொள்கைகளுக்காக அமைக்கப்பட்டு செயல்பட்டு வந்த இயக்கங்களைப் பற்றி அறிந்து கொண்டார். எடுத்துக்காட்டாக, லண்டன் பகுத்தறிவாளர் சங்கம், அமெரிக்க சுதந்திர சிந்தனையாளர் சங்கம், ரஷ்ய கடவுள் எதிர்ப்பு சங்கம், சீன வாலிப சீனர்கள் ஆகியவற்றைப் பெரியார் முன்மாதிரி இயக்கங்களாகக் கருதினார். இவற்றுள் ரஷ்ய சங்கம் அரசாங்கத்தால் ஆதரிக்கப்பட்டது. இவையன்றி ஆப்கானிஸ்தானத்திலும், துருக்கியிலும் சுயமரியாதைப் பிரச்சாரங்கள் நடைபெற்றுவந்தன. இச்சங்கங்களின் செயல்பாடுகள் பெரியாருக்கு உந்து சக்திகளாக இருந்தன.

**சுயமரியாதை விளக்கம்**

பெரியார் ஈ.வெ.ராமசாமி சுயமரியாதையை உயிருக்கு ஒப்பாகக் கருதினார். ‘சுயமரியாதையற்றவனைப் பிணமென்றுதான் சொல்ல வேண்டும்’ என்றார். சுயமரியாதை இல்லாதவர்களுக்கு இந்தியா அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுதலை அடைவதால் எந்தப் பயனுமில்லை என்று கருதினார். ஈ.வெ.ரா. அவருடைய நோக்கில் சுயமரியாதை என்பது சமத்துவம், சம உரிமை, சம வாய்ப்பு. சிக்கனம், அன்பு, இரக்கம், ஒழுக்கம் ஆகியவற்றையும், குருட்டு நம்பிக்கை, மூடப்பழக்கவழக்கங்கள், தீண்டாமை, பெண் அடிமை ஒழிப்பு, எளியோரை வலியோர் அடக்கி ஆளாமை, படித்தவர்கள் படிக்காமல் இருப்போரை ஏமாற்றாமல் இருத்தல், பகுத்தறிவு வளர்ச்சி பெறல், தன் முயற்சிக்கு ஊக்கமளித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். சுருங்கக்கூறின், சுயசிந்தனையும், சுய சார்புடைமையும் சுயமரியாதையின் இரு கண்களானால் பகுத்தறிவும் தன்மானமும் இரு கால்களாகும்.

### நீதிக்காட்சியில் ஏன் சேரவில்லை?

நீதிக்கட்சி பிராமணரல்லாதார் அனைவரது சமூக சமயத்துவத்தையும், உரிமைகளையும், சமவாய்ப்பையும் அடிப்படையாகக் கொண்டு துவக்கப்பட்டது. அக்கட்சி எதிர்ப்புகளுக்கிடையே எதற்கும் அஞ்சாமல், உறுதியுடன் இருந்து சவால்களை சமாளித்து, அவ்வியக்கத்தை அழியவிடாமல் காப்பாற்றி, மக்களிடையே சுயமரியாதை உணர்ச்சியை ஊட்டி வந்தார்கள் என்பதை பெரியார் ஈ.வெ.ரா. ஏற்றுக்கொண்டார். ஆனால் அக்கட்சி பிராமணர்களை உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்வது என்ற முடிவை 'தேன் கூட்டில் நெருப்பு வைக்கப்பட்டது போன்றது' என்றும் இந்த 'இயக்கம் செத்து, பார்ப்பன ஆதிக்கத்திற்கு மற்றொரு சாதனமாய் மாறிவிடும்' என்றும் அஞ்சிய பெரியார் ஈ.வெ.ரா. அக்கட்சியில் சேரவில்லை. ஆனால் அக்கட்சியை ஆதரித்தார். எனினும் நீதிக்கட்சியை உத்தியோக வேட்டைக்கடசியாகவே கருதினார். எனவே பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் துவக்கி அதன் தனித்தன்மையை நிலைநாட்டுவதில் குறியாக இருந்தார். ஆங்கிலம் தெரிந்த மக்களிடையே சுயமரியாதைக் கொள்கையைப் பரப்புவதற்காக ரிவோல்ட் என்ற இதழை நடத்தினார். சுயமரியாதை இயக்கம் வேர்பிடித்து வளர நீதிக்கட்சியைப் பயன்படுத்திக்கொண்டார். 1929இல் செங்கல்பட்டில் நடைபெற்ற சென்னை மாகாண சுயமரியாதை முதல் மாநாடு இதைத் தெளிபடுத்தியது. இந்த வரலாற்று முக்கியத்துவமிக்க மாநாடு சுயமரியாதை இயக்கத்தின் தோற்றுவாயாகக் கருதப்பட்டது.

### அரசியல் கட்சியல்ல

சுயமரியதை இயக்கம் ஒரு அரசியல் கட்சியைப்போன்று குறிப்பிட்ட இடத்தில் சிலர் கூடி துவக்கப்பட்ட அமைப்பல்ல. இந்த இயக்கம் பெரியார் ஈ.வெ.ரா.வின் தலைமையின் கீழ் செயல்பட்ட தனிமனித சமுதாய சீர்திருத்த இராணுவமாகும். இராணுவக் கட்டுப்பாட்டுடன் நடத்தப்பட்டது. பெரியாரின் வார்த்தைகளில் கூறுவதாயின் "சுயமரியாதை இயக்கமானது அரசியல்களின் பேரால் நமது நாட்டிலுள்ளபல கட்சிகளைப் போலல்லாமல், அன்னியர்களிடம் இருந்து யாதொருவிதமான சிறு விஷயத்தையும் எதிர்பாராமல் மக்கள் அறிவை விளக்கை அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதன் மூலம் உண்மையான விடுதலையையும், சமத்துவத்தையும், தன்மதிப்பையும் உண்டாக்கக் கூடிய ஒரு இயக்கமாகும்". அதவாது சுயமரியாதை இயக்கம் தமிழர்களின் அறிவை விரிவுபடுத்தி, மனப்பான்மையை மாற்றி, சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் இயக்கமாகும். ஏனெனில் அரசியல் தொண்டு என்து 'அயோக்கியர்களை உற்பத்தி செய்து அவர்கள் மூலம் பாமர மக்களை வஞ்சிக்கச் செய்வதே அல்லாமல் வேறில்லை" என்றார் பெரியார்.

### வேகமான வளர்ச்சி

பெரியார் ஈ.வெ.ராமசாமியால் துவக்கப்பட்ட சுயமரியாதை இயக்கம் வேகமாக வளரத் துவங்கியது. இந்த வேக வளர்ச்சியைக் கண்ட நீதிக்கட்சித் தலைவர்கள் அதன்பால் ஆர்வம் காட்டலாயினர். 1929 மே மாதம் பட்டுக்கோட்டையில் எ. குருசாமியின் தலைமையின் கீழ் மாபெரும் சுயமரியாதை நடைபெற்றது. கே.வி.அழகிரிசாமி தொண்டர் படைக்குத் தலைமை தாங்கினார். இந்த மாநாட்டைப் போல் சென்னை ராஜதானியின் பிற நகரங்களிலும் சுயமரியாதை மாநாடுகள் நடத்தப்பட்டன. அவற்றுள் ஒன்றுதான் 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடத்தப்பட்ட வரலாற்று முக்கியத்துவமிக்க சுயமரியாதை மாநாடு ஆகும்.

### இயக்கத்தின் குறிக்கோள்கள்

### 15 அம்சக்கொள்கை

1929-இல் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை இயக்க மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மூலம் இந்த இயக்கத்தின் 10 அம்சக் கொள்கையை வெளியிட்டார். பெரியார் ஈ.வெ.ரா. அவையாவன. 1) மக்கள் பிறப்பால் சாதிபேதம் அற்றவர்கள். 2) சாதிபேதம் கற்பிக்கும் மதம், வேதம், சாஸ்திரம், புராணம் இவைகளைப் பின்பற்றக்கூடாது. 3) வருணாசிரமப்படி பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர், பஞ்சமர் என்ற பிரிவுகளை ஏற்றுக்கொள்ளக்கூடாது. 4) மக்களிடையே தீண்டாமையை ஒழித்து, பொதுக்கிணறு, குளம், பள்ளிக்கூடம், சத்திரம், தெரு. கோயில் முதலியவற்றில் பொது மக்களுக்குச் சமஉரிமை இருக்க வேண்டும். 5) இவற்றுக்கு எதிர்ப்பு வந்தால் அரசாங்கம் மூலம் சட்டம் இயற்றி, அச்சட்டத்தின் மூலம் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும். 6) சாதி மத வேறுபாட்டைக் காட்டக்கூடிய பட்டம், குறியீடுகள் முதலியவற்றை உபயோகிக்கக் கூடாது. 7) பெண்களைப் பொறுத்தவரை, திருமண வயது 16க்கு மேல் இருக்க வேண்டும். கணவனுக்கும் மனைவிக்குமிடையே ஒத்துப்போக முடியாவிடில் பிரிந்து போகும் உரிமை வேண்டும். விதவைகள் மறுமணம் செய்து கொள்ள வேண்டும். கலப்பு மணம் செய்து கொள்ளலாம். ஆண்களும், பெண்களும் தங்கள் துணைகளை அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். 8) திருமணச் சடங்குகள் போன்றவை மிகவும் சுருக்கமாகவும், சிக்கனமாகவும், ஒரு நாளைக்கு மிகாமலும் இருத்தல் வேண்டும். 9) கோயில் பூசைகளுக்குப் பண விரயம் செய்யக்கூடாது. கடவுளுக்கும் பக்தனுக்குமிடையே இடைத்தரகர் கூடாது. கோயில் சொத்தை கல்விக்கும், ஆராய்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் பயன்படுத்த வேண்டும். 10) மூடப்பழக்க வழக்கங்களை ஒழித்தல், 11) பெண்களுக்கு சொத்துரிமை, உத்தியோக உரிமை அளித்தல், ஆசிரியர்கள் அனைவரும் பெண்களாகவே இருக்க வேண்டும். 12) ‘தீண்டத்தகாதோர்’ என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருப்போருக்கு உணவு, உடை, புத்தகம் ஆகியவற்றைக் கொடுத்து அவர்களுக்குக் கல்வி அளிப்பது. அவர்களுக்கு அரசாங்க நிலங்களை வழங்கல். 13) பிராமணரல்லாத இளைஞர்களுக்கு உள்ள தடைகளையும், இடர்ப்பாடுகளையும் நீக்கல், 14) கல்வி சம்பந்தமாக தாய்மொழி,

அரசாங்க மொழி தவிர பிற மொழி கல்விக்குப் பொதுப் பணம் செலவிடக்கூடாது. ஆரம்பக் கல்விக்குப் பொதுப்பணத்தை செலவழித்து கட்டாயமாக கற்பிக்க வேண்டும். உயர்நிலைக்கல்விக்கு பொது நிதியை செலவிடக்கூடாது. அரசாங்க அலுவல்களுக்குத் தேவைப்பட்டால் வகுப்புவாரி ஒதுக்கீட்டின்படி மாணவர்களைத் தேர்ந்தெடுத்து படிப்பிக்க வேண்டும். 15) சிற்றுண்டி ஓட்டல் முதலிய இடங்களில் வேறுபாடு எதுவும் இருக்கக்கூடாது.

மேற்கண்ட நோக்கங்களையும், கொள்கைகளும், கருத்துக்களும் இதற்கு முன்பிருந்த சீர்திருத்தக்காரர்கள் சொல்லியிருக்கிறார்கள் என்பதை பெரியார் ஈ.வெ.ரா. நினைவுபடுத்தத் தவறவில்லை. இத்தகைய கொள்கைகள் உலகின் பல்வேறு முன்னேறிய நாடுகளில் பின்பற்றப்படுவதையும் பெரியார் எடுத்துக்காட்டினார். எனவே, பெரியார் இத்தகைய கொள்கைகளையும், சிந்தனைகளையும் நடைமுறைப்படுத்தும் தீர்மானத்துடன் சுயமரியாதை இயக்கத்துக்குத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக்கொண்டார். “மனிதனுக்கு வெட்கமும் ரோஷமும், மான உணர்ச்சியும் ஏற்படுவதற்காகவே சுயமரியாதை இயக்கம் ஏற்பட்டது” என்று கூறிவந்தார் பெரியார்.

**மலேசியப்பயணம், 1930**

பெரியார் ஈ.வெ.ரா. செங்கல்பட்டில் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைப் பிரகடனம் செய்தபின் மலேசியாவில் சுற்றுப்பயணம் செய்து தீவிர சுயமரியாதைப் பிரச்சாரம் செய்தார். மலேசியப்பிரச்சாரப் பயணத்தை முடித்துக் கொண்டு நாகை திரும்பிய பெரியார் தாடி வளர்க்கத் துவங்கினார். தமிழ் நாடெங்கும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு உண்மை நாடுவோர் சங்கம், தாராள சிந்தனையாளர் சங்கம், பகுத்தறிவாளர் கழகம் ஆகிய அமைப்புகளைத் துவக்கினார். சமதர்ம அதிகாரியைத் தமிழாக்கம் செய்து வெளியிட்டார். 1931-ஆம் ஆண்டு விருதுநகரில் மாகாண மூன்றாவது சுயமரியாதை மாநாடு நடத்தப்பட்டது. தமிழ் நாடெங்கும் சமதர்ம சங்கங்கள் நிறுவப்பட்டது. அடுத்த ஆண்டே எகிப்து, ரஷ்யா, கிரேக்கம், துருக்கி, ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ், போர்ச்சுக்கல், இங்கிலாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் 11 மாதங்கள் சுற்றுப்பயணம் செய்து தனது சுயமரியாதை இயக்கம் பற்றி அந்நாடுகளில் இருந்த சமுதாய சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள் ஆகியோருடன் கலந்துரையாடினார். இப்பயணத்தின்போது பெரியார் மேலை நாடுகளின் அரசியல் முறைகள், சமுதாய இயக்கங்கள், பொருளாதார சமுதாய முறை, வாழ்க்கை முறை, பொது நிர்வாகம் பற்றியெல்லாம் தெரிந்து கொண்டார். புதிய கருத்துக்களோடும் அனுபவத்தோடும் தமிழ்நாடு திரும்பினார்.

**பயணத்தின் பயன்**

தமிழ்நாடு திரும்பிய பெரியார் ஈ.வெ.ரா. சுயமரியாதைப் பிரச்சாரத்தோடு தீவிர சமதர்மப் பரப்பாளரானார். மேலைநாட்டு அனுபவம் பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துக்குப் புதிய பரிமாணத்தைக்கொடுத்தது. ரஷ்யப்பொதுவுடைமைத்

தத்துவமும், நடைமுறையும் பெரியாரை வெகுவாகக் கவர்ந்தன. மார்க்சிய சிந்தாந்தத்தைஜ வழிகாட்டியாகக் கொண்டார். பிரபல தமிழ்நாட்டு கம்யூனிஸ்ட் எம்.சிங்காரவேலு செட்டியாருடன் இணைந்து சுயமரியாதைக் குறிக்கோளுடன் சமதர்மக் கருத்துக்களைச் சேர்த்து ஒரு புதிய சமூக பொருளாதாரத் திட்டத்தை உருவாக்கினார். இத்திட்டம் சுயமரியாதை இயக்க வரலாற்றில் குறிப்பிடத்தக்க முக்கிய நிகழ்ச்சியாகும். ஏனெனில், மேலைநாட்டு அனுபவம் பெரியாருக்கு தேசியப்பார்வையைக் கொடுத்தது. புரட்சி வார ஏட்டைத் துவக்கினார். தீவிர சமதர்மப் பிரச்சாரத்துக்காக பெரியார் தண்டிக்கப்பட்டு சிறை வைக்கப்படார். 1933 மே 21ம் தேதியை மே தினமாகக் கொண்டாடுமாறு வேண்டுகோள் விடுத்தார். ஓராண்டு காலம் சமதர்ம வேலைத் திட்டத்தை செயல்படுத்துவதில் கவனம் செலுத்தினார்.

**திருத்தப்பட்ட திட்டம்**

சமதர்ம சித்தாந்தத்தின் அடிப்படையில் சுயமரியாதை இயக்க வேலைத்திட்டம் கீழ்க்கண்டவாறு திருத்தி அமைக்கப்பட்டது. 1) முதலாளித்துவபிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து இந்தியாவை விடுவிப்பது. 2) தேசத்தின் கடன்களை ரத்து செய்வது. 3) அனைத்து தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், வங்கிகளையும், கப்பல், படகு போக்குவரத்து சாதனங்களையும் தேசியமயமாக்குவது. 4) அதேபோன்று தேசத்தில் உள்ள அனைத்து விவசாய நிலங்களையும், காடுகளையும், மற்ற தாவர சொத்துக்களையும் பொது மக்களுக்கு உரிமையாக்கல். 5) குடியானவர்களும், தொழிலாளர்களும் லேவா தேவிக்காரர்களிடம் பட்டிருக்கும் கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்வது. 6) அடிமை ஒப்பந்தங்கள் அனைத்தையும் ரத்து செய்வது. 7) சுதேச சமஸ்தானங்களை மாற்றி, இந்தியா முழுவதையும் தொழிலாளிகள், குடியானவர்கள் மற்றும் உடலுழைப்பு வேலைக்காரர்கள் ஆகியோரின் நேரடியான ஆட்சியின்கீழ்க் கொண்டு வருவது. 8) தொழிலாளர்களின் வேலை நேரத்தை 7 மணியாகக் குறைத்து, ஊதியத்தை உயர்த்தி, அவர்களது சுக வாழ்க்கைக்கு வேண்டிய அனைத்து வசதிகளையும் நூல் நிலையங்கள், மருத்துவமனைகள், பொழுதுபோக்கு இடங்களை ஏற்படுத்திக்கொடுப்பது. 9) தொழில் இல்லாமல் இருப்போருக்கு அரசாங்கம் வாழக்கை உத்திரவாதம் கொடுப்பது. 10) பகுத்தறிவுக்கு எதிரான குருட்டு நம்பிக்கைகள், மூடப் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை சட்டம் மூலமாக ஒழிப்பது. இந்த திருத்தப்பட்ட வேலைத் திட்டம் பெரியாரின் தேசியக் கண்ணோட்டத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

**இயக்கக் கட்சி**

பெரியார் அரசியல் கட்சிக்கு எதிரி. அதற்குக் காரணம் அரசியல் கட்சிகள் பாமர மக்களின் சமூக, சமய மற்றும் பொருளாதார உரிமைகளை ஒடுக்கும் சாதனங்களாகப் பயன்படுத்தப்படுவதேயாகும். இந்த நிலையை மாற்றுவதற்காக சுயமரியாதை இயக்கத்துக்குள் சமதர்ம கட்சி என்ற அரசியல் அமைப்பை

உருவாக்கத் தீர்மானித்தார் பெரியார். அதற்கான திட்டத்தையும் தீட்டினார். அத்திட்டத்தின் முக்கிய அம்சங்களாவன : 1) அனைத்து சட்டசபை, முனிசிபல், தாலுக்கா, மாவட்ட மன்றங்களுக்கான தேர்தல்களுக்கு வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை வழங்கல், 2) பாமர மக்களை சாதி, மத, பொருளாதார கொடுமைகளிலிருந்து விடுவித்தல், 3) பொது மக்கள் உபயோகத்துக்குத் தேவையான தொழில் முறைகள், போக்குவரத்து சாதனங்கள் ஆகியவற்றின் நிர்வாகத்தைத் தனி மனிதர்கள் பறித்துக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ளல், 4) நிலமற்ற விவசாயத்தொழிலாளிகளுக்கு வெள்ளாமையில் ஒரு நியாயமான பங்கு கிடைக்கச் செய்தல், 5) கோயில் சொத்துக்களின் வருவாய் பொது மக்களின் தொழில், கல்வி, சுகாதாரம், வீட்டுவசதி, ஆதரவற்ற அநாதைப்பிள்ளைகளுக்கான விடுதி போன்றவற்றுக்குப் பயன்படுத்துதல், 6) சாதி, மதப் பிரிவுகளைப் பற்றிய குறிப்புகளை அரசாங்க ஆவணங்களிலிருந்து நீக்கிவிடல், சாதி, சமயப் பட்டங்களைப் போட்டுக்கொள்வோரைப் பொதுப்பணிகளில் அமர்த்தாமல் இருத்தல், 7) போக்குவரத்து, வீட்டுவசதி, பால் வசதி, வைத்திய வசதி போன்றவற்றை உள்ளாட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்தல். 8) சட்டசபை, முனிசிபாலிட்டி போன்ற உள்ளாட்சி நிறுவனத் தேர்தல்களுக்கு கட்சி சார்பாக வேட்பாளர்களை நிறுத்துவது, 9) வேட்பாளர்களிடம் கட்சித் திட்டங்களுக்கு உறுதி கூறி கையொப்பம் வாங்க வேண்டும். 10) மேற்கண்டவற்றை சட்டசபைப் பிரவேசம், பிரச்சாரம், பத்திரிக்கைகள் மூலம் செய்ய வேண்டும் (குடி அரசு, தலையங்கம், 1933 ஜனவரி 1) அரசியல் கட்சிகளை எதிர்த்து வந்த பெரியார், அவரது இயக்கத்திற்குள்ளாகவே ஒரு கட்சியை உருவாக்கி இயக்க வளர்ச்சிக்கான கருவியாகப் பயன்படுத்த நினைத்தது அவரது இயல்புக்கு மாறான அரசியல் பரிசோதனையாகும்.

**சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள்**

சுயமரியாதை இயக்கம் கோப்பையில் எழுந்த புயல் அல்ல, வானத்தில் தோன்றி மறைந்த வானவில்லும் அல்ல. அது ஒரு சமுதாய, சமய, கலாச்சார சீர்திருத்த இயக்கம். சுயமரியாதை இயக்கம் சமுதாயப் புரட்சிக்கான முன்னோடி முயற்சியாகும். அந்தப் பாதையில் முளைத்தவைதான் திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் ஆகும். சுயமரியாதை இயக்கத்தின் சாதனைகள் பல. அவை வருமாறு.

1) தமிழ் நாட்டில் பிராமணர் ஆதிக்கம் படிப்படியாகக் குறைந்தது. 2) பிராமணர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த கண்மூடித்தனமான மரியாதையும், மதிப்பும், முன்னுரிமையும் முக்கியத்துவம் இழந்தன. 3) பொதுத் தேர்தல்களின் பிராமண வேட்பாளர்களுக்குப் பிராமணரல்லாத வாக்காளர்களின் ஆதரவு வெகுவாகக் குறைந்தது. 4) பண்டிகைகள், விரதங்கள், சமயச் சடங்குகள் சிறப்பிழந்தன. 5) விதவைகள் திருமணம், கலப்பு மனம், சாதி வேறுபாடு கருதாமை, தீண்டாமை ஒழிப்பு, கோவில் நுழைவு ஆகியவை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 6) புரோகித விலக்குச் சங்கங்கள் தோன்றி, மதப்புரட்டுகளை அம்பலப்படுத்தி, புரோகிதர்களின்

தேவையை மட்டுப்படுத்தியது. 7) மக்கள் வாக்கெடுப்பின் போது, ஒவ்வொரு குடிமகனும் இந்தியன் என்று கூற வேண்டும். எக்காரணம் கொண்டும் சாதிப்பெயரைச் சொல்லக்கூடாது என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அனுப்பப்பட்டன. 8) வகுப்புரிமை பிரதிநிதித்துவம் நடைமுறை சாத்தியமாயிற்று. 9) பதிவுத் திருமணங்கள் பிரபலமடைந்தன. 10) சனாதன வைதீகங்களும், புராணங்களும், வர்ணாசிரம தர்மமும் செல்வாக்கு இழந்தன. 11) பொது உணவு விடுதிகள், ஆலயங்கள், புகைவண்டி நிலையங்கள், சத்திரங்கள் போன்ற பொது இடங்களில் பிராமணர்களுக்கும் காட்டப்பட்டு வந்த வேறுபாடுகள் மறைந்தன.

## ராஜாஜி ஆட்சி, 1952-1954

### வாழ்க்கைச் சுவடுகள்

### சேலத்து மாம்பழம், 1878 – 1900

ராஜகோபாலன் 1878 டிசம்பர் 8 ஆம் நாள் தருமபுரி மாவட்டம் ஓசூருக்கு அருகே தொரப்பள்ளி என்ற ஊரில் சக்ரவர்த்தி ஐயங்காருக்கும், சிங்காரம்மாளுக்கும் மூன்றாவது மகனாகப் பிறந்தார். நரசிம்மாச்சாரியும், சீனிவாசனும் இவருக்கு மூத்தவர்கள். தொரப்பள்ளியிலும், ஓசூரிலும் பள்ளிப் படிப்பை முடித்த ராஜகோபாலன் பெங்களூர் மத்திய கல்லூாயீல் பட்டப் படிப்பையும், சென்னை மாநிலக் கல்லூாயீல் சட்டப்படிப்பையும் முடித்தார். தனது 21வது வயதில் அலமேலு மங்கம்மாவைத் திருமணம் செய்து கொண்ட ராஜகோபாலன் 1900 இல் சேலத்தில் வழக்குரைஞர் தொழிலைத் துவக்கினார். பிரபலமடைந்தபின் இவர் சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார், சி.ஆர்.ராஜாஜி என்று அழைக்கப்பட்டார். ‘சேலத்து மாம்பழம்’ என்பது இவரது செல்லப் பெயராகும்.

### அரசியல் ஆர்வம், 1900-1919

### தலைவர்களுடன் தொடர்பு

ராஜகோபாலாச்சாரி சேலத்தில் வக்கீல் தொழில் பார்த்துக்கொண்டிருந்த போது அரசியல் ஆர்வம் ஏற்பட்டது. வங்காளப் பிரிவினையின் விளைவாக எழுந்த சுதேசி இயக்கம் இவரது கவனத்தைக் கவர்ந்தது. இவர் வ.உ.சி., வெ.ராமலிங்கம் பிள்ளை ஆகியோருடன் 1906ஆம் ஆண்டு இறுதியில் கல்கத்தாவில் நடைபெற்ற காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொண்டார். 1900களில் பாலகங்காதர திலகர் எழுப்பிய ‘சுதந்திரம் எனது பிறப்புரிமை’ என்ற முழக்கம் ராஜகோபாலாச்சாரியை மிகவும் கவர்ந்தது. அதேபோன்று பாரதியின் நாட்டுப்பற்றுப் பாடல்கள் இவரைக் காந்தம் போல் ஈர்த்தன. வ.உ.சி. பிரிட்டிஷ் கப்பல் கம்பெனிக்கு எதிராக சுதேசி டீம் நேவிகேஷன் கம்பெனியைத் துவக்கிய போது இவர் நிதி வசூல் செய்தும், பங்குகளை வாங்கி நிதி உதவி செய்தும் ஊக்குவித்தார். சுப்பிரமணிய சிவா இவரது நண்பரானார். சென்னை சுதேசிகளில் ஒருவரானார்.

**நகர் மன்ற சாதனைகள்**

சேலத்தில் பிரபல வக்கீலாகப் புகழ்பெற்றிருந்த ராஜகோபாலாச்சாரி சேலம் நகர்மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் அதன் தலைவராக இரண்டு ஆண்டுகள் பணியாற்றினார். அப்போது அவர் 1) தீண்டாமை ஒழிப்புப் பணியில் தீவிர கவனம் செலுத்தினார். 2) ஒரு அரிஜன் நகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு உறுதுணையாக இருந்தார். 3) பிற்படுத்தப்பட்டோர் கல்வி வசதிக்கும், வளர்ச்சிக்கும் ஏற்பாடு செய்தார். 4) எதிர்ப்பை எதிர்க்கொண்டு சமபந்தி சாப்பாட்டை நடத்தி வைத்தார். 5) நகருக்கான பல நலத்திட்டங்களை நிறைவேற்றினார். இப்பணிகளுக்கிடையே தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்ட பி.வரதராஜீலு நாயுடுவின் சார்பாக வழக்கு மன்றத்தில் வாதாடினார். இந்த காலகட்டத்தில் ராஜகோபாலாச்சாரியின் தொழிலும் சேவையும் கைகோர்த்துச் சென்றன. 1919ஆம் ஆண்டு சென்னையில் குடியேறி உயர்நீதிமன்ற வழக்குரைஞரானார். இந்த காலகட்டத்தில் ராஜாஜி அரிஜன சமத்துவத்துக்கு அடையாளமாக அவர்களுடன் "சமபந்தி போஜனம் என்பதும், அதைவிடத் தீவிரமான சாதிபேதம் என்பதே இல்லாமல் யார் வீட்டில் யாரும் உணவு அருந்தலாம் என்ற தன்மையும் ஏற்பட்டது" என்று பதிவு செய்துள்ளார். பெரியார் ஈ.வெ.ரா., ராஜாஜி கலப்புத் திருமணத்தை ஆதரித்தார்.

**விடுதலைப்போராட்டத்தில் பங்கேற்பு, 1919-1930**

சென்னைக்கு வந்த ராஜகோபாலாச்சாரி காந்தி துவக்கிய ரௌலட் அறப்போராட்டத்தில் பங்கேற்றார். வக்கீல் தொழிலுக்கு விடை கொடுத்தார். 1919 மார்ச் 30ஆம் தேதியை அறப்போராட்ட நாளாக அறிவித்த காந்தி சென்னைக்கு வந்த போது ராஜகோபாலாச்சாரி, ஏ.க. தூரிரங்க ஐயங்கார், சி.விஜயராகவாச்சாரியார் ஆகியோருடன் கலந்து ஆலோசித்த பின்னா அறப்போராட்ட நாளை ஏப்ரல் 6-க்குள் தள்ளி வைத்தார் காந்தி. காந்தியை சந்தித்த பிறகு ராஜகோபாலாச்சாரி ராஜாஜி ஆனார்.

1921-ஆம் ஆண்டு ராஜாஜி காங்கிரஸ் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் பொதுச் செயலராகச் செயல்பட்டார். 1922-இல் கூடிய இந்திய தேசிய காங்கிரஸ் கயா மாநாட்டில் ராஜாஜி கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் தான் காந்தியின் சட்டமன்றப் புறக்கணிப்பை எதிர்த்து மோதிலால் நேருவும், சி.ஆர். தாசுவும் காங்கிரசை விட்டு வெளியேறினர். காங்கிரஸ் 'மாற்றம் வேண்டுவோர்', மாற்றம் வேண்டாதோர் என்று இரண்டு கட்சியினராகப் பிரிந்தனர். காந்தியைப் பின்பற்றி சட்டமன்றப் புறக்கணிப்பைத் தொடர வேண்டுமென்ற 'மாற்றம் வேண்டாதோர்' பக்கம் உறுதியாக நின்றார் ராஜாஜி. 1923-இல் காங்கிரஸ் பிளவுபட்ட போது ராஜாஜி சட்டமறுப்பு இயக்க விசாரணைக்குழு உறுப்பினரானார். அதிலிருந்து அவர் தேசிய அரசியலில் பிரதான பங்கேற்கலானார். ராஜாஜி 1924-ஆம் ஆண்டு

திருச்செங்கோட்டுக்கு அருகே புதுப்பாளையத்தில் காந்தி ஆசிரமம் ஆரம்பித்து கிராம மக்கள் முன்னேற்றத்துக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

**தமிழ்நாட்டுத் தலைமை, 1930-1937**

காந்தி துவக்கிய ஒத்துழையாமை இயக்கத்தின்போது ராஜாஜி தமிழ்நாட்டில் அந்த இயக்கத்துக்குத் தலைமை தாங்கி சிறப்பாக நடத்தினார். 1920-ஆம் ஆண்டு இறுதியில் நடக்கவிருந்த சட்டமன்றத்தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்று ராஜாஜியும், டி.எ.எ.ராஜனும் தமிழ்நாடு மாவட்டங்களில் சூறாவளி சுற்றுப்பயணம் மேற்கொண்டனர். 1921 ஜனவரி 10ஆம் தேதி சென்னைக்கு வந்த கானாட் கோமகனை புறக்கணிக்கப்பிரச்சாரம் செய்தார். அதன் பின்னர் 1930 ஜனவரி 26ஆம் நாளன்று தேசமெங்கும் பூரண சுதந்திர நாள் கொண்டாடப்பட்ட போது, ராஜாஜியும் அவரது அணுக்க நண்பர் மதுரை ஏ. வைத்தியநாத ஐயரும் இக்கொண்டாட்டம் தமிழ்நாட்டில் கோலாகலமாகக்கொண்டாடியதில் பிரதான பங்கேற்றனர். அதன்பின் இவ்விருவரும் மதுரையில் பின்னவர் வீட்டில் சந்தித்து தமிழ் நாட்டில் உப்புச் சத்தியாக்கிரகம் மேற்கொள்வதற்கான திட்டத்தை முடிவு செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். பி.எ. சந்திரபிரபு. ராஜாஜியின் தலைமையில் தமிழ்நாட்டில் உப்பு அறப்போராட்டம் வெற்றிகரமாக நடைபெற்றது. ராஜாஜி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

**அரசியல் அலைகள், 1937-1947**

**நிலையில் மாற்றம்**

1937க்கும் 1947க்கும் இடைப்பட்ட 10 ஆண்டுகளில் ராஜாஜயின் அரசியல் வாழ்க்கையில் பல அலைகள் எழுந்து அடங்கின. பல மாற்றங்கள் ஏற்பட்டன. சிறையிலிருந்து விடுதலையான ராஜாஜி தனது நிலையை மாற்றிக்கொண்டு மத்திய மாநில சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் பங்கேற்க வேண்டும் என்று கூறினார். ‘மாற்றம் விரும்பாதவராக’ அவர் மாற்றம் விரும்புபவராக’ மாறிவிட்டார். 1937 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, வெற்றி பெற்று, சென்னை ராஜதானியின் முதல் காங்கிரஸ் ‘பிரதமர்’ (முதலமைச்சர்) ஆனார் (1937 – 1939). அவரது மொழிக் கொள்கை தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்துக்குக் காரணமாயிற்று. இந்தி கற்றுக்கொண்டால் இந்திய அளவில் வேலை வாய்ப்புகளைப் பெறலாம் என்ற எண்ணத்தில் இந்தியை பாடமொழியாக்கினார் ராஜாஜி என்று குறிப்பிட்டுள்ளார் நம்பி ஆரூரான். இந்தியத் தலைவர்களைக் கலந்து ஆலோசிக்காமல் பிரிட்டிஷ் அரசாங்கம் ஜெர்மனி மீது போர் தொடுத்ததால் காங்கிரஸ் மத்திய-மாநில அரசாங்கங்களிலிருந்து விலகுவதென முடிவெடுத்தது. அந்த முடிவின்படி ராஜாஜி அமைச்சரவை 1939 அக்டோபர் 29ஆம் தேதி பதவி விலகியது. இந்தியப் பாதுகாப்பு விதிகளின்படி ராஜாஜி கைது செய்யப்பட்டு ஓராண்டு காலம் சிறையில் அடைக்கப்பட்டார்.

**போராட்டப் புறக்கணிப்பு**

சிறையிலிருந்து விடுதலையாகி வந்த ராஜாஜி தன் அரசியல் நிலைப்பாட்டை முற்றிலுமாக மாற்றிக் கொண்டார். பிரிட்டனுக்கு இந்தியா ஆதரவு கொடுப்பது பற்றி காங்கிரஸ் மேலிடத்துடன் கருத்து வேறுபாடு கொண்டார். பிரச்சனையை பிரிட்டிஷ் அரசாங்கத்துடன் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை எதிர்த்தார். அந்த இயக்கத்தைப் புறக்கணித்தார். தனி சுதந்திர நாடு கோரிய முஸ்லீம் லீக்குடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றார். இந்த முஸ்லீம் உடன்பாட்டுக்கான தனது திட்டத்தை வெளியிட்டார். ராஜாஜியின் நடவடிக்கைகள் காங்கிரசாரிடையே மிகுந்த மனவேதனையைத் தந்தன. இரண்டாம் உலகப்போர் முடிந்தவுடன் 1946-இல் நடைபெற்ற மாநில சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் முதலமைச்சராக முயன்றார். அம்முயற்சி பலனளிக்காமையால் அவர் தமிழ்நாடு காங்கிரசிலிருந்து விலகிக்கொண்டார். காமராசரின் ஆதரவோடு டி. பிரகாசம் முதலமைச்சரானார்.

**நேருவுடன் ராஜாஜி, 1947-1952**

**கவர்னர் ஜெனரல்**

ராஜாஜி தமிழ்நாட்டு அரசியலிலிருந்து தேசிய அரசியலுக்கு மாறினார். நேருவின் இடைக்கால அமைச்சரவையில் நிதி, கல்வி, தொழில், வினியோக அமைச்சரானார். இந்தியா விடுதலையானபின் ராஜாஜி நேருவின் ஆதரவோடு மேற்கு வங்காள ஆளுநர் பொறுப்பேற்றார். பின்னர் மௌண்ட்பாட்டன் பிரபுவுக்குப் பிறகு ராஜாஜி சுதந்திர இந்தியாவின் முதல் இந்திய கவர்னர்-ஜெனரல் ஆனார் (1948-1950). அதன் பின் இந்தியக் குடியரசுத் தலைவர் பதவிக்கு ராஜாஜியின் பெயர் பரிசீலிக்கப்பட்டது. வெள்ளையனே வெளியேறு இயக்கத்தைப் புறக்கணித்த ராஜாஜிக்கு இப்பதவியைக் கொடுக்கக் கூடாது என்பதில் வடநாட்டுக் காங்கிரஸ் தலைவர்கள் பிடிவாதமாக இருந்தனர். ராஜேந்திர பிரசாத் இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவரானார்.

**கருத்து வேறுபாடு**

நேருவின் அழைப்பின் பேரில் அவரது அமைச்சரவையில் இலாக்கா இல்லாத அமைச்சரானார். வல்லபாய் பட்டேல் இறந்த பின் பத்து மாத காலம் இந்திய உள்துறை அமைச்சர் பொறுப்பில் இருந்தார் ராஜாஜி. எனினும், நேருவும், ராஜாஜியும் ஒத்துப்போக முடியவில்லை. பல விஷயங்களில் இருவருக்குமிடையே கருத்துவேறுபாடு ஏற்பட்டன. இக்கருத்து வேறுபாடுகள் கருத்து மோதல்களாக முடிந்தன. இதன் விளைவாக ராஜாஜி அமைச்சரவையிலிருந்து விலகிக்கொண்டார்.

**பல பரிசோதனைகள், 1952 – 1967**

**இலக்கியப் பணி**

டெல்லியிலிருந்து சென்னை திரும்பிய ராஜாஜி மாநில அரசியலில் நுழைந்து சர்ச்சைக்குரிய முதலமைச்சரானார் (1952-1954). நிலைமை சமாளிக்க முடியாமல் 1954 ஏப்ரல் 13ஆம் தேதி பதவி விலகினார். நேரடி அரசியலில் இருந்து ஓய்வு பெற்ற ராஜாஜி இலக்கியப் பணியில் ஈடுபட்டார். கல்கி இதழுக்கு ராமாயணம் பற்றித் தொடர் கட்டுரைகள் எழுதினார். இவையே தொகுக்கப்பெற்று 'சக்கரவர்த்தி திருமகன்' என்ற நூலாக வெளிவந்தது. 1955 குடியரசு நாளன்று ராஜாஜிக்கு 'பாரத் ரத்னா' விருது வழங்கப்பட்டது.

**புதிய கட்சி**

காங்கிரசைவிட்டு வெளியேறிய ராஜாஜி அக்கட்சிக்கு எதிராகச் செயல்படலானார். அவரைப் போன்ற அதிருப்தியாளர்களை சேர்த்துக்கொண்டு காங்கிரஸ் சீர்திருத்தக் குழு என்ற அமைப்பை உருவாக்கினார் (1957 ஜனவரி). கே.எ.வெங்கடகிருஷ்ண ரெட்டியார் இக்குழுவின் தலைவராகச் செயல்பட்டார். இக்குழுவின் நோக்கம் தேர்தலில் காங்கிரசுக்கு எதிராகப் போட்டியிட்டு பலவீனப்படுத்துவதாகும். அந்த நோக்கத்தோடு 1957 சென்னை சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 13 இடங்களில் வென்ற இரண்டாவது பெரிய கட்சியாக உருவெடுத்தது. மக்களவை தேர்தலில் 12 இடங்களில் போட்டியிட்டு ஒரு இடத்தில் கூட வெற்றி பெற முடியவில்லை. 1957 செப்டம்பர் 28-29 தேதிகளில் மதுரையில் நடைபெற்ற மாநாட்டில் காங்கிரஸ் சீர்திருத்தக் குழுவுக்கு இந்திய தேசிய ஜனநாயக காங்கிரஸ் என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டது. பெயர் மாற்றத்தோடு இக்கட்சி தமிழ்நாட்டு அரசியல் வானிலிருந்து மறைந்துவிட்டது.

**சுதந்திரா கட்சி, 1959**

ராஜாஜி, 1959 ஜீன் 4ஆம் தேதி முரார்ரி வைத்யா, மினோ மசானி ஆகியோருடன் சுதந்திரா கட்சி என்ற தேசிய கட்சியை சென்னையில் துவக்கினார். முரார்ரி வைத்யா சுதந்திர தொழில் முனைவோர் பேரவை என்ற அமைப்பின் தலைவராக இருந்தார். மினோ மசானி கம்யூனிசத்துக்கும் நேருவுக்கும் எதிரி. ராஜாஜி நேருவின் எதிரிகளைத் தன் நண்பர்களாக்கிக் கொண்டு வலதுசாரி எதிர்ப்பு அணியை உருவாக்கினார். நேருவின் சோஷலிசக் கொள்கையால் பாதிக்கப்பட்ட ராம்கர் ராஜா, கலகண்ட மகாராஜா, தர்பங்கா மகாராஜாதி ராஜா போன்ற முன்னாள் அரசர்கள் ராஜாஜியை ஆதரித்தனர். பின்னர் என்.ஜி.ரங்கா, கே.எம். முன்ஷி, பீல்டு மார்ஷல் கே.எம். கரியப்பா, பாட்டியாலா மகாராஜா போன்ற பிரபலங்கள் ராஜாஜி பக்கம் சேர்ந்தனர். ஜெயப்பிரகாஷ் நாராயணனை சுதந்திர கட்சிக்குக் கொண்டு வருவதற்காக ராஜாஜி மேற்கொண்ட முயற்சி வெற்றிபெறவில்லை. சுதந்திரா கட்சி காங்கிரசுக்கு மாற்றாக உருவாக்கப்பட்ட வலதுசாரி மாற்று அமைப்பாகும். நேருவின் லைசன்-பெர்மிட்-ராஜை முடிவுக்குக் கொண்டுவருவதே ராஜாஜியின் சுதந்திரா

கட்சியின் மூலமந்திரமாக இருந்தது. சுதந்திராக் கட்சியை 'இன் நலக் கட்சி' என்று கூறினார் பெரியார் ஈ.வெ.ரா.

**அண்ணாவுடன் ராஜாஜி, 1962**

காங்கிரஸ் மீதான வெறுப்பு ராஜாஜியின் அரசியல் கண்ணைக் குருடாக்கிவிட்டது. ராஜாஜி திராவிடக் கட்சிகளை இனவாத வெறுப்பின் உருவம் என்று கூறியவர். அண்ணாவும் அவரது தம்பிகளும் ராஜாஜியை 'மாக்கியவல்லி', 'பிராமணக் குள்ளநரி' என்றெல்லாம் வர்ணித்தவர்கள். அதுமட்டுமல்ல. ராஜாஜியின் முதல் எதிரியான கம்யூனிஸ்டு கட்சியின் தோழமைக் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பினும் காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற ஆத்திரம் இரு அரசியல் துருவங்களையும் ஒரு குடையின்கீழ் கொண்டு வந்தது. எதிரியின் எதிரி நண்பன் என்ற அரசியல் சாணக்கியம் இப்பொருந்தாக் கூட்டணிக்கு உரமாயிற்று. சுதந்திரா கட்சி 1962 சட்டப்பேரவைத் தேர்தலில் 94 இடங்களில் போட்டியிட்டு 6 இடங்களில் வெற்றி பெற்றது. மக்களவைத் தேர்தலில் 22 இடங்களைக் கைப்பற்றியது. தி.மு.க. ராஜாஜியை சவாரிக் குதிரையாகப் பயன்படுத்திக் கொண்டது. ராஜாஜி தி.மு.கவை ஆதிரித்ததால் அக்கட்சிக்கு சமூக மதிப்பும் மரியாதையும் கிடைத்தது என்று குறிப்பிட்டுள்ளார் சி.சுப்பிரமணியம்.

**ராஜாஜியின் இந்தி எதிர்ப்பு, 1965**

1938-இல் ராஜாஜி தீவிர இந்தி ஆதரவாளராக இருந்தார். அவர் முதலமைச்சராக இருந்த போது இந்தியைக் கட்டாயப் பாடமாக்கி இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை எதிர்க்கொண்டவர். ஆனால் இந்தி ஆதரவாளரான ராஜாஜி 1956 ஜனவரி 28ஆம் தேதி ஆங்கிலம் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும் என்ற தீர்மானத்தில் பெரியார், அண்ணாத்துரையுடன் சேர்ந்து கையொப்பமிட்டார். 1957இல் மொழிகள் கமிஷனின் இந்தி ஆதரவுப் பரிந்துரைகளைக் கடுமையாக எதிர்த்தார். 1958 மார்ச் 8-ஆம் தேதி நடைபெற்ற அகில இந்திய மொழி மாநாட்டில் "ஆங்கிலம் எப்படி இந்தி ஆதரவாளர்களுக்கு அந்நிய மொழியோ, அதேபோன்று இந்தி பேசாதவர்களுக்கு இந்தி அந்நிய மொழி" என்று பிரகடனம் செய்தார். பெரியார்-அண்ணாதுரை ஆகியோரின் பிரதிநிதிபோல் பேசினார். அதுமட்டுமல்ல, 1965-ஆம் ஆண்டு தி.மு.க. முன்னின்று நடத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை ஆதரித்தார். 1965 ஜனவரி 17ஆம் தேதி திருச்சியில் சென்னை மாகாண இந்தி எதிர்ப்பு மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டில் இந்தியை ஆட்சி மொழியாக வழிசெய்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் XVIIவது பகுதியை கிழித்து அரபிக்கடலில் வீசவேண்டும் என்று முழங்கினார்.

**முக்காலி கூட்டணி, 1967**

ராஜாஜி அவரது 88வது வயதில் தமிழ் நாட்டு காங்கிரசுக்கு முடிவு கட்ட வேண்டும் என்று முழு மூச்சுடன் செயல்பட்டார். 1962 தேர்தலில் தி.மு.க.வுடன்

உடன்பாடு கொண்டிருந்த ராஜாஜி 1967 தேர்தலுக்கு அக்கட்சியுடன் முன்கூட்டியே கூட்டணியை ஏற்படுத்திக் கொண்டார். தி.மு.க.-கம்யூனிஸ்ட் உறவு இக்கூட்டணி இத்தேர்தலில் காங்கிரசை எதிர்க்கொண்டது. காமராசர் இக்கூட்டணிதான் முக்காலி கூட்டணி என்று வர்ணித்தார். 1967 தேர்தலில் இந்த முக்காலி கூட்டணிதான் வெற்றி பெற்றது. 30 ஆண்டுகளுக்குப் பிறகு காங்கிரஸ் வீழ்த்தப்பட்டது. ராஜாஜியின் ஆதரவோடும் ஆசியோடும் அண்ணாதுரை தமிழ்நாட்டு முதல் தி.மு.க. முதலமைச்சரானார். எப்படியாயினும் காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற ராஜாஜியின் தணியாத தாகம் தீர்ந்தது. தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சி அமைவதற்கு ராஜாஜி வழிவகுத்துக்கொடுத்தார்.

**இறுதி ஆண்டுகள், 1967-1972**

அண்ணாதுரைக்குப் பிறகு தமிழ்நாட்டு முதலமைச்சரான மு. கருணாநிதி மேற்கொண்ட முதல் முயற்சிகளில் ஒன்று மதுவிலக்குக் கொள்கையைத் தளர்த்தியதுதான். அதிர்ச்சி அடைந்த ராஜாஜி புதிய முதலமைச்சருடன் வாதாடிப் பார்த:தும் பயனில்லை. இதுவரை பிறருக்குப் பாடம் கற்பித்து வந்த ஆச்சாரியார் முதல் முறையாகப் பிறரிடமிருந்து பாடம் கற்றார். அதன் விளைவாக சுதந்திர கட்சி தி.மு.க. உடனான உறவை முறித்துக் கொண்டது. காமராசரின் தலைமையிலான அகில இந்திய காங்கிரசைவிட்டு வெளியேறிய அமைப்பு காங்கிரசுடன் கூட்டு சேர்ந்தார் ராஜாஜி. 1971இல் சுதந்திரா கட்சி அமைப்பு காங்கிரஸ் - ஜனசங்கம், சம்யுக்த சோஷலிச கட்சி ஆகியவற்றுடன் கூட்டணி சேர்ந்து 1971 பொதுத் தேர்தலில் இந்திரா காந்தியை எதிர்த்துப் போட்டியிட்டுப் படுதோல்வி அடைந்தது. சுதந்திரா கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 23லிருந்து 8 ஆகக் குறைந்தது. அதேபோன்று தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 27லிருந்து 19ஆகக் குறைந்தது. ராஜாஜியால் காங்கிரசின் செல்வாக்கை ஓரளவு குறைக்க முடிந்ததேயொழிய அழிக்க முடியவில்லை. சுதந்திரா கட்சிதான் காணாமல் போய்விட்டது. உடல் நலமும் மனநலனும் பாதிக்கப்பட்ட ராஜாஜி 1972 டிசம்பர் 25ஆம் தேதி 94 ஆவது வயதில் சென்னை பொது மருத்துவமனையில் இயற்கை எய்தினார்.

**குடும்பவாழ்க்கை**

1897இல் அலமேலு மங்கம்மாவை மணந்த ராஜாஜி தம்பதிகயருக்கு இரண்டு பையன்களும், இரண்டு பெண்களும் பிறந்தனர். தனது 38வது வயதில் மனைவியை இழந்த ராஜாஜி, மறுமணம் செய்து கொள்ளாமல் பிள்ளைகளை வளர்ப்பதிலேயே கவனம் செலுத்தினார். இவரது மகன் சி.ஆர்.நரசிம்மன் அரசியலுக்கு வந்து 1952லிருந்து 1962 வரை கிருஷ்ணகிரி நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். ராஜாஜியின் மகள் லட்சுமியை காந்தியின் மகன் தேவதா காந்திக்குத் திருமணம் செய்து கொடுத்தார். ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய ராஜ்மோகன் காந்தியும், தத்துவமேதை ராமச்சந்திர காந்தியும், மேற்கு வங்க ஆளுநராயிருந்த காந்திய சிந்தனையாளர் கோபாலகிருஷ்ண காந்தியும் ராஜாஜியின் பேரன்களாவர்.

**இலக்கியவாதி**

ராஜாஜி ஆங்கிலத்திலும், தமிழிலும் நன்கு பேசவும், எழுதவும் வல்லவர். சேலம் இலக்கிய மன்றத்தைத் தோற்றுவித்தவர். தமிழ் அறிவியல் சொற்கள் மன்றத்தைத் துவக்கினார். ராஜாஜியின் சிறையில் தவம், மகாபாரதம். ராமாயணம், கம்பராமாயண ஆங்கிலமொழி பெயர்ப்பு, திருக்குறள் ஆங்கில மொழி பெயர்ப்பு, பகவத்கீதை. உபநிடதம், சாக்ரடீஸ், மார்க்க அரேலியஸ் ஆகியவை சிறந்த படைப்புகள். பல சிறுகதைகள். நாவல்கள். ராஜாஜியின் சக்கரவர்த்தி திருமகன் (ராமாயணம்) நூலுக்கு 1958க்கான சாகித்ய அகாதமி விருது வழங்கப்பட்டது. ராஜாஜியின் பக்திப் பாடல்களில் கண்ணனைப் பற்றிய 'குறை ஒன்றும் இல்லை' என்ற பாடல் தேச, சர்வதேச பாராட்டைப் பெற்றது. ராஜாஜி பம்பாய் பாரதிய வித்யா பவனின் தோற்றகர்த்தாக்களில் ஒருவர். இந்திய அரசு ராஜாஜிக்கு பாரத் ரத்னா விருது வழங்கி சிறப்பித்தது.

**ராஜாஜி நிர்வாகம்**

**இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், 1950**

இந்திய அரசியலமைப்புச் சட்டம், சுதந்திர இந்தியாவில் மத்திய, மாநில அரசாங்கங்கள் அமைக்கப்படுவதற்கான அடிப்படை ஆவணமாகும். இந்த ஆவணத்தின் அடிப்படையிலேயே மாநிலங்களில் தேர்தல் நடத்தப்பட்டு அரசாங்கம் அமைக்கப்பட்டது. வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் சென்னை மாகாண சட்டப்பேரவைத் தேர்தல் 1952 மார்ச் மாதம் நடைபெற்றது.

**சட்டப்பேரவைத் தேர்தல், 1952**

**தேர்தல் தொகுதிகள்**

மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் (Representation of the People Act, 1950) கீழ் சென்னை தேர்தல் தொகுதிகளைத் தீர்மானித்தல் ஆணை (Delimitatin of Parliamentary and Assembly Constituencies (Madras) Order, 1951) பிறப்பிக்கப்பட்டது. இந்த ஆணையின்படி சென்னை சட்டப்பேரவைக்கான 375 தொகுதிகளில் தேர்தல் மூலம் வேட்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுதல் வேண்டும். மூன்று இடங்கள் போட்டியின்றி பூர்த்தி செய்யப்பட்டன. எஞ்சியிருந்த 372 இடங்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

**அரசியல் கட்சிகள்**

1952 சென்னை சட்டப்பேரவைத் தேர்தலில் பங்கேற்ற பிரதான கட்சிகள் 1) காங்கிரஸ், 2) இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, 3) டி. பிரகாசத்தின் கிசான் மஸ்த்தூர் பிரஜா கட்சி, 4) என்.ஜி. ரங்காவின் கிரிஷிகார் லோக் கட்சி. தி.மு.க. இத்தேர்தலில் கலந்து கொள்ளவில்லை. மாறாக அக்கட்சி கம்யூனிஸ்டுகளையும், காங்கிரசல்லாத முற்போக்குக் கருத்துடைய வேட்பாளர்களையும் குறிப்பிட்ட ஒப்பந்தத்தில்

கையெழுத்திட்ட பின்னர் ஆதரிப்பதென முடிவு செய்தது. சட்டமன்றத்திலும் மத்திய மக்களவையிலும் திராவிடத் தனிநாடு கோரிக்கையை ஆதரிப்போம் என்ற வாக்குறுதியில் கையொப்பமிட கம்யூனிஸ்டுகள் மறுத்துவிட்டனர் எனினும், எப்படியும் காங்கிரசைக் கவிழ்த்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் தி.மு.க. கம்யூனிஸ்டு வேட்பாளர்களை விலிய சென்று ஆதரித்தது. அதேபோன்று அதே நோக்கத்தோடு பெரியாரின் திராவிடர் கழகமும் கம்யூனிஸ்டு வேட்பாளர்கள் வெற்றிபெற ஆதரவளித்தது. பெரியார் காங்கிரசுக்கு எதிராகத் தீவிரப்பிரச்சாரம் செய்தார். கம்யூனிஸ்டுகளின்றி காமன்வீல் கட்சி. தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி வேட்பாளர்களும், 5) சுயேட்சைகளும் தி.மு.க.வின் ஆதரவைப் பெற்றனர். பி.டி.ராஜன் தலைமையிலான நீதிக்கட்சி 9 இடங்களில் போட்டியிட்டது.

**தேர்தல் முடிவுகள்**

**கட்சிகள் பெற்ற இடங்கள்**

சென்னை சட்டப்பேரவைத் தேர்தல் 1952 ஜனவரி மாதம் ஒன்பது கட்டங்களாக நடத்தப்பட்டது. மொத்தம் 2,507 வேட்பாளர்கள் 2,472 ஆண்டுகள், 35 பெண்கள் விண்ணப்பித்தனர். இவர்களுள் 79 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. 751 வேட்பாளர்கள் விலகிக் கொண்டனர். எஞ்சியிருந்தோர் தேர்தலில் போட்டியிட்டனர். தேர்தல் முடிவுகள் வருமாறு : காங்கிரஸ் 152 இந்திய கம்யூனிஸ்ட் கடசி 62, கிசான் மஸ்தூர் பிரஜா கட்சி 35, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி 19, கிரிஷிகர் லோக் கட்சி 15, சோஷலிஸ்டு கட்சி 13, காமன்வீல் கட்சி 6, சென்னை மாகாண முஸ்லீம் லீக் 5, பார்வர்ட் பிளாக் 3, அகில இந்திய ஷெடியூல்டு சாதி கூட்டமைப்பு 2, நீதிக்கட்சி 1, சுயேட்சைகள் 62 (காங்கிரஸ் 152 + கம்யூனிஸ்டு 62 + இதர கட்சிகள் - சுயேட்சைகள் 161 = 375)

**காங்கிரசுக்கு பின்னடைவு**

இந்தத் தேர்தலில் காங்கிரசுக்குப் பெரும் ஏற்பட்டது. முதலமைச்சராயிருந்த குமாரசாமி ராஜா அவரது ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார். அவரது பல அமைச்சர்களும் தோற்றனர். முன்னாள் முதலமைச்சர் டி.பிரகாசம் சென்னை துறைமுகத்தொகுதியில் தோற்கடிக்கப்பட்டார். பிரபல தொழிலதிபர் ராம்நாத் கோயங்காவும், திருக்குறள் முனுசாமியும் (உழைப்பாளர் கட்சி) அதிக வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடிக்கப்பட்டனர். அருப்புக்கோட்டையிலிருந்து முத்துராமலிங்கத்தேவரும், வண்ணாரப்பேட்டையிலிருந்து ப.ஜீவானந்தமும், மதுரை வடக்கிலிருந்து பி. ராமமூர்த்தியும் வெற்றி பெற்றனர். ஒருங்கிணைந்த சென்னை மாகாணத்தில் தமிழ் நாட்டுக்கென ஒதுக்கப்பட்ட 190 தொகுதிகளில் 96 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஆந்திரம், மலபார் பகுதிகளில் கம்யூனிஸ்டுகள் கணிசமான வெற்றி பெற்றனர். சென்னை மாகாண அளவில் காங்கிரஸ் 152 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றதால் அக்கட்சிக்குத்

தனிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை. எனவே அரசாங்கம் அமைப்பதில் சிக்கலும் சர்ச்சையும் ஏற்பட்டன.

**கம்யூனிஸ்டுகளின் செல்வாக்கு**

இந்தத் தேர்தலில் ஆந்திரா பகுதியிலிருந்து பல கம்யூனிஸ்டுகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். சென்னை மாகாணத்தில் அவர்களது செல்வாக்கு அதிகரித்துவந்தது. 1952 பிப்ரவரி மாதம் கிசான் மஸ்தூர் பிரஷா கட்சியின் தலைவர் முன்னாள் முதலமைச்சர் டி. பிரகாசம் ஐக்கிய ஜனநாயக முன்னணி என்ற கூட்டணியை உருவாக்கினார். இக்கூட்டணியில் கம்யூனிஸ்டு கட்சி, தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி, காமன்வீல் கட்சி, சுயேட்சைகள் இடம் பெற்றிருந்தன. இக்கூட்டணியின் பெயரால் குறைந்தபட்ச பொதுத்திட்டம் ஒன்றும் வெளியிடப்பட்டது. இக்கூட்டணியை 166 சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆதரிப்பதாகவும், எனவே இக்கூட்டணிக்கு அரசாங்கம் அமைப்பதற்கான வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்று கோரி பிரகாசம் ஆளுநர் ஸ்ரீபிரகாசாவுக்கு விண்ணப்பித்தார். ஆனால் காங்கிரஸ் கூட்டணிப்போர்வையில் கம்யூனிஸ்டுகள் ஆட்சியைப் பிடிப்பதையே அல்லது ஆளுநர் ஆட்சியையோ விரும்பவில்லை. எனவே காங்கிரஸ் குறுக்கு வழியில் செல்லத் துணிந்தது.

**மீண்டும் ராஜாஜி**

கு. காமராஜ் மக்கள் செல்வாக்கு பெற்ற தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராக இருந்தார். அவருக்குத் தமிழ்நாடு முதலமைச்சராவதற்கான வாய்ப்பு இருந்தது. ஆனால் ஆந்திர பிரதேச காங்கிரஸ் கமிட்டி தலைவரான என். சஞ்சீவ ரெட்டி ராஜாஜியை மீண்டும் முதலமைச்சராக்க வேண்டும் என்று விரும்பினார். அந்த விருப்பத்துக்குத் துணை போனார் ராஜாஜி பக்தரான சி. சுப்பிரமணியம். எனவே சி. சுப்பிரமணியம் முன்மொழிய, ஏ.பி.ஷெட்டி வழிமொழிய ராஜாஜி சென்னை சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித்தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் இத்தீர்வு காங்கிரஸ் மேலிடத்தின் ஒப்புதலைப் பெற வேண்டும். இந்த ஒப்புதலைப் பெறுவதற்காக சி.சுப்பிரமணியமும், டாக்டர் சௌந்தரம் ராமச்சந்திரனும் டெல்லி சென்று பண்டிதர் நேருவை சந்தித்தனர். ராஜாஜி தேர்தலில் வெற்றி பெற்று அரசாங்கத்தை அமைக்க வேண்டும் என்று கூறி சென்னை சட்டப்பேரவை காங்கிரஸ் தீர்மானத்துக்கு ஏற்பு அளித்தார் நேரு.

**தவறான முன்னுதாரணம்**

ஆனால் ராஜாஜி தேர்தலைச் சந்திக்கத் தயாராக இல்லை. இந்தியாவின் மிகப்பெரிய பதவியான கவர்னர் ஜெனரல் பதவியை வகித்துவிட்டு தேர்தலில் போட்டியிடுவது கவுரவமில்லை எனக்கூறி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று கூறியதாகப் பதிவு செய்துள்ளார். சி. சுப்பிரமணியம். இதுபற்றி நேருவின் நிலையை நன்கு அறிந்திருந்தும் சென்னை ஆளுநர் ஸ்ரீபிரகாசா ராஜாஜியை சட்டமன்ற மேலவை உறுப்பினராக நியமித்தார். நியமன உறுப்பினரான ராஜாஜிக்கு

முதலமைச்சர் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார். ஆளுநர் மக்களால் தேர்ந்தெடுக்கப்படாமல் ராஜாஜி முதலமைச்சர் ஆனதை நேரு கொஞ்சமும் விரும்பவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் இதுவே பண்டிட்ஜிக்கும், ராஜாஜிக்குமிடையே நட்பு முறிவுக்கும் ராஜாஜி காங்கிரசை விட்டு வெளியேறியதற்கும் காரணமாக இருந்தது என்று எழுதியுள்ளார் சி. சுப்பிரமணியம். அதுமட்டுமல்ல. இந்த முறைகேடான நிகழ்ச்சியே ராஜாஜியும் காமராசரும் நிரந்தர அரசியல் பகைவர்களாவதற்கும் அடிப்படையாக அமைந்தது. ஆளுநர் ஸ்ரீபிரகாசா அமைச்சரவை அமைக்கப்படுவதற்கு முன்பாகவே. அமைச்சரவையின் பரிந்துரையின்றி ராஜாஜியை முதலமைச்சராக நியமித்தது 'அரசியல் சட்ட தவறான நடைமுறை' மோசமான முன்மாதிரி, ஆளுநரின் யதேச்சாதிகாரச் செயல் என்றும் கருதப்பட்டது.

**நிர்வாகச் சாதனைகள்**

**அமைச்சரவை**

ஆளுநர் ஸ்ரீபிரகாசாவின் அழைப்பின் பேரில் 1952 ஏப்ரல் முதல் தேதி அரசாங்கம் அமைத்தார் ராஜாஜி. 1952 ஏப்ரல் 10ஆம் தேதி ராஜாஜிக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது. ராஜாஜியின் அமைச்சரவையில் ஏ.பி.ஷெட்டி, சி. சுப்பிரமணியம், கே. வெங்கடசாமி நாயுமி, என். ரெங்காரெட்டி, எம்.வி.கிருஷ்ணராவ், வி.சி.பழனிச்சாமி கவுண்டர், யு. கிருஷ்ணராவ், ஆர். நாகனகவுடா, என். சங்கரரெட்டி, எம்.ஏ. மாணிக்கவேலு நாயக்கர், கே.பி.குட்டி கிருஷ்ணன் நாயர், ராஜா ஸ்ரீ ஷன்முக ராஜேஸ்வர சேதுபதி, எ.பி.பி.பட்டாபிராம ராவ், டி.சஞ்சீவையா ஆகியோர் இடம் பெற்றனர். ஜே. சிவஷண்முகம் பிள்ளை பேரவைத் தலைவராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**நம்பிக்கைத் தீர்மானம், 1952**

சென்னை சட்டப்பேரவையில் காங்கிரஸ் தனிப்பெரும்பான்மையுடைய கட்சியாக இருந்தது. ஆனால் அறுதிப்பெரும்பான்மைக் கட்சியாக இல்லை. எனவே ராஜாஜி அரசாங்கம் சிறுபான்மை அரசாங்கமாக இருந்தது. மார்க்கத்தைவிட முடிவே முக்கியம் என்று கருதிய ராஜாஜி கட்சித் தாவல் உத்தியைக் கையாண்டார். கிரிஷ்கர் லோக் கட்சியை உடைத்து அக்கட்சியிலிருந்து பி.திம்மா ரெட்டி, நீலாத்தி ராவ் ரெட்டி, கூமிசெட்டி வெங்கடநாராயண தோரா ஆகியோரை காங்கிரசில் சேர்த்துக் கொண்டார். எம்.ஏ.மாணிக்க வேலு நாயக்கருக்கு அமைச்சரவையில் இடம் கொடுத்து அவரது காமன்வீல் கட்சியின் 6 உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றார். எஸ்.எஸ்.ராமசாமி படையாச்சியின் தலைமையிலான தமிழ்நாடு உழைப்பாளர் கட்சியின் ஆதரவையும் கோரிப் பெற்றார். சென்னை மாநில முஸ்லீம் லீக் கட்சியின் 5 உறுப்பினர்களும் காங்கிரசுக்கு ஆதரவளித்தனர்.

அதன்பின் சட்டப்பேரவை முன்னவர் சி. சுப்பிரமணியம் 1952 ஜீன் 30ஆம் தேதி நம்பிக்கைத் தீர்மானத்தைப் பேரவை விவாதத்துக்குக் கொண்டு வந்தார். விவாதத்துக்குப் பின் நம்பிக்கைத் தீர்மானம் 200க்கு 151 என்ற வாக்கு

வித்தியாசத்தில் நிறைவேற்றப்பட்டது. சுதந்திர இந்தியாவில் முதல் முறையாக சட்டப் பேரவையில் கொண்டுவரப்பட்ட நம்பிக்கைத் தீர்மானம் இதுதான். அதுமட்டுமல்ல. தமிழ்நாட்டில் கட்சித் தாவலுக்குக் காள்கோள் நாட்டிய நிகழ்ச்சியும் இதுதான். தமிழ்நாட்டு அரசியலில் சாணக்கியம் வெற்றி பெற்றது. காந்தியம் தோற்றுப் போயிற்று.

**பஞ்சப் பிரச்சினை**

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பும், விடுதலை அடைந்த பின்னரும் இந்தியாவில் பொதுவாக, தமிழ்நாட்டில் குறிப்பாக, உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு இருந்தன. இதனால் உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. டி.பிரகாசம், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா ஆகிய காங்கிரஸ் முதலமைச்சர்கள் பஞ்ச நிவாரணப்பணிகளை மேற்கொண்டனர். இருப்பினும் பஞ்சப் பிரச்சனை நீடித்தது. இப்பிரச்சனையைக் கம்யூனிஸ்டுகள் பயன்படுத்திக் கொண்டு அரசாங்கத்தைக் குறைகூறிவந்தனர். மக்களின் துயர் துடைக்க ராஜாஜி பல பஞ்ச நிவாரணப்பணிகளை மேற்கொண்டார். குறிப்பாக உணவுப்பொருட்கள் இலவசமாக வழங்கப்பட்டன. பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இடங்களில் கஞ்சி கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டது. வேலைவாய்ப்பு அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பதுக்கல்காரர்கள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டனர். அதிகாரிகளிடையே நிலவிய ஊழல் கட்டுப்படுத்தப்பட்டது. அத்தியாவசிய உணவுப்பொருட்கள் நியாய விலைக்கடைகள் மூலம் வினியோகிக்கப்பட்டன.

**உணவுப்பிரச்சனை**

இரண்டாம் உலகப்போருக்குப் பின் அறிமுகப்படுத்தப்பட்ட ‘ரேஷன்’ முறை தொடர்ந்து பின்பற்றப்பட்டது. இதனால் உணவுப் பிரச்சனையும் தொடர் கதையாக நீடித்தது. முழு கொள்முதல் கொள்கை விவசாயிகளிடையே மிகுந்த மனக்கசப்பையும் பொதுமக்களின் எதிர்ப்பையும் அதிகரித்தது. நியாயவிலைக்கடைகளின் மூலம் வினியோகிக்கப்பட்ட உணவுப்பொருட்களின் தரம் மிகவும் மோசமாக இருந்தது. அரிசியில் கள்ளச்சந்தை கட்டுக்கடங்காமல் பெருகிற்று. அனைத்து நிலைகளிலும் ஊழல் வேரூன்றியது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கத் தீர்மானித்தார் ராஜாஜி.

உணவுக்கட்டுப்பாட்டை முற்றிலும் நீக்கிவிட்டதாக அறிவித்தார். உணவுப்பொருட்களின் மீது இருந்த கட்டுப்பாடுகள் அனைத்தும் அகற்றப்பட்டன. எவ்வித அரசாங்கக் கட்டுப்பாடும் இல்லாமல் உணவுப்பொருட்களை விற்கவும், ஒரு இடத்திலிருந்து பிற இடங்களுக்குக் கொண்டு செல்வதற்கும் அனுமதிக்கப்பட்டது. சுருங்கக்கூறின், உணவுச் சந்தை சுதந்திரமாக செயல்பட அனுமதிக்கப்பட்டது. ராஜாஜியின் அதிர்ச்சி அறிவிப்பும், அதிரடி நடவடிக்கைகளும் எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தின. உணவுப்பொருட்களின் தட்டுப்பாடு தளர்ந்தது. மக்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களைக் கடைகளில் வாங்கிக் கொண்டனர். நீண்ட வரிசையில் கால்கடுக்க நிற்கும் அவல நிலை நீங்கியது.

உணவுப்பொருட்களின் விலை சீரடைந்தது. கள்ளச் சந்தையின் கதவு பூட்டப்பட்டது. ராஜாஜியின் இந்த நடவடிக்கை பொருளாதார அதிசயமாகக் கருதப்பட்டது.

எனினும், அனைத்து ரேஷன் கடைகளும் மூடப்பட்டதாலும், உணவுப் பொருள் கொள்முதலுக்காக உருவாக்கப்பட்ட நிர்வாகக் கட்டமைப்பு கலைக்கப்பட்டதாலும், வியாபாரிகள் சுதந்திரமாக பொருட்களை விற்பதற்கு அனுமதிக்கப்பட்டதாலும் பல பிரச்சனைகள் தோன்றின. ராஜாஜியின் அதிர்ச்சி வைத்தியத்தால் உடனடிப் பலன் ஏற்பட்டபோதிலும் உணவு உற்பத்தி பாதிக்கப்பட்ட போதும், தேவையான பொருட்கள் தேவையான அளவுக்குக் கிடைக்காத போதும் 'ரேஷன் முறையை' மீண்டும் கொண்டு வருவதற்கான கட்டாயம் ஏற்பட்டது. அதனால் ஏற்பட்ட பல பிரச்சனைகளை அரசாங்கம் சந்திக்க வேண்டியதாயிற்று. உணவுப்பொருள் பற்றாக்குறை இருக்கும் வரை ரேஷன் முறை தவிர்க்கமுடியாதது என்ற பிரத்யட்ச பொருளாதார உண்மை உணரப்பட்டது.

**இடைத்தேர்தல்**

ராமநாதபுரத்தில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் முத்துராமலிங்கத்தேவர் நாடாளுமன்ற மற்றும் சென்னை சட்டமன்றத் தேர்தல்களில் போட்டியிட்டு இரண்டு தொகுதிகளிலும் வெற்றி பெற்றார். அவர் ராமநாதபுரத்தில் எப்போது எந்தத் தொகுதியில் போட்டியிட்டாலும் வெற்றி பெறக்கூடியவர். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்ததால் அந்தத் தொகுதியில் இடைத்தேர்தல் நடத்தப்பட்டது. அந்த இடத்தை எப்படியும் கைப்பற்றிவிட வேண்டும் என்று முழு மூச்சுடன் வேலை செய்தார் ராஜாஜி. அங்கு வெற்றி பெறுவதைக் கவுரவப் பிரச்சனையாகக் கருதினார். அவர் முதல்வர் பதவியில் நீடிக்க வேண்டும் என்று மக்கள் கருதினால் காங்கிரஸ் வேட்பாளரைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று கூறினார். ஆனால் காங்கிரஸ் வேட்பாளர் தோற்கடிக்கப்பட்டார். ராஜாஜி மக்களின் ஆதரவை இழந்துவிட்டதாகக் கருதினார். கம்யூனிஸ்டு கட்சியினர் ராஜாஜி பதவி விலக வேண்டும் என்று கோரினர். ஆனால் ராஜாஜி கட்சித் தாவலை ஊக்குவித்து, நம்பிக்கை வாக்கெடுப்பில் வெற்றி பெற்று பதவியில் நீடித்தார். கம்யூனிஸ்டுகளை அவரது முதல் எதிரி என்று சட்டப்பேரவையில் அறிவித்தார்.

**நேர்மையான நிர்வாகம்**

டி. பிரகாசம் முதலமைச்சரானதிலிருந்து காங்கிரஸ்காரர்கள் 'அதிகார இடைத் தரகர்களாக' செயல்பட்டுவந்தனர். சலுகைகளைப் பெறுவதற்காக தலைமைச் செயலகத்தில் கட்சிக்காரர்களுடன் வந்து அமைச்சர்களையும், அதிகாரிகளையும் சந்தித்து வந்தனர். இப்பழக்கத்துக்கு முடிவு கட்ட முடிவு செய்தார் ராஜாஜி. எந்தச் சட்டப்பேரவை உறுப்பினரும் அல்லது காங்கிர பிரமுகரும் எக்காரணம் கொண்டும் தலைமைச் செயலகத்துக்கு வந்து அதிகாரிகளை சந்திக்கக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்தார். அவர்களது பிரச்சனைகளை மந்திரிகள் மூலமாக மட்டுமே முறையிட வேண்டும் என்றார். அதேபோன்று மாவட்ட ஆட்சியர்கள்

காங்கிரசாரிடமிருந்து எழுத்து மூலமாக வராத எந்த விண்ணப்பத்தையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டார். இத்தகைய நிர்வாக நடவடிக்கை மூலம் நிர்வாகம் திறமையாக நடைபெற்றது. அதிகார இடைத் தரகர்களின் குறுக்கீடுகள் குறைக்கப்பட்டன. அதிகாரப்பூர்வமற்ற நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டன. ராஜாஜியின் நிர்வாகச் சீர்திருத்தம் அடுத்துவந்த ஆட்சியாளர்களுக்கு முன் மாதிரியாகவும், முன்னுதாரணமாகவும் திகழ்ந்தது. தூய்மையான, திறமையான அரசாங்க நிர்வாகத்துக்கான அடித்தளம் அமைக்கப்பட்டது இச்செயல் இந்தியப்பொது நிர்வாக வரலாற்றில் குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும்.

**விவசாயிகள் விவகாரம்**

**பாதுகாப்பற்ற விவசாயிகள்**

உணவுப்பொருட்கள் மீதான கட்டுப்பாடுகளை நீக்கியவுடன் ராஜாஜி விவசாயிகளின் பிரச்சனைக்கு முன்னுரிமை கொடுத்தார். தமிழ்நாட்டில் காவிரிப் பகுதிகளும், ஆந்திராவில் கோதாவரி – கிருஷ்ணா பகுதிகளும் வற்றாத நீர்ப்பாசனப்பகுதிகளாகும். விளைச்சலுக்குப் பஞ்சமில்லை. ஆனால் இப்பகுதிகளுக்குச் சொந்தக்கார நிலப்பிரபுக்களும் ஜமீன்தார்களும் குத்தகைதாரர்களை இரக்கமின்றி சுரண்டி வந்தனர். உழவர்களுக்கு எவ்வித பாதுகாப்பும் இல்லை. பயிர் பகிர்வு என்ற பெயரில் குத்தகைக் கொள்ளை நடைபெற்று வந்தது. அதாவது, குத்தகைதாரர் எவ்வளவுக்கு எவ்வளவு அதிகமாக விளைவிக்கிறார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு குத்தகையை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும். இதனால் விவசாயிகள் எவ்வித ஊக்கமுமின்றி இருந்தனர். அதுமட்டுமல்ல, அவர்கள் எந்த நேரத்திலும் நிலத்திலிருந்து வெளியேற்றப்படக் கூடிய ஆபத்து அவர்களது தலை மீது தொங்கிய கூர்வாளாக இருந்தது. அவர்கள் எவ்விதமான பாதுகாப்புமின்றி இருந்தனர்.

**துயர்துடைப்பு நடவடிக்கைகள்**

ராஜாஜி விவசாயிகளின் துயர் துடைப்பதற்காக இருநோக்குக் கொள்கையைக் கொண்டுவந்தார். 1) உழவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு அளித்தல், 2) அவர்கள் செலுத்த வேண்டிய குத்தகைக்கு சட்ட வரம்பு நிர்ணயித்தல், இந்த இரண்டு நோக்கங்களையும் நிறைவேற்றும் பொருட்டுக் கொண்டு வரப்பட்டதே உழவர் பாதுகாப்புச் சட்டம். இச்சட்டம் நிலச் சுவான்தார்கள் நினைத்தபடி விவசாயிகளை வெளியேற்றும் யதேச்சதிகாரப் போக்குக் சட்டத்தடை விதித்தது. விவசாயிகளை சட்டப்படி வெளியேற்றுவதற்கான நிபந்தனைகள் மிகக் கடுமையாக்கப்பட்டன. அதேபோன்று, குத்தகை விகிதம் செலவு போக உழவருக்கு 40% நிலச் சொந்தக்காரருக்கு 60% என்று நிர்ணயிக்கப்பட்டது. ராஜாஜியின் இந்த நடவடிக்கை தஞ்சாவூர் மாவட்டத்தில் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தை வெகுவாகக் குறைத்துவிட்டது.

## கைத்தறி நெசவாளர் பிரச்சனை

### நல நடவடிக்கைகள்

கைத்தறி நெசவுத் தொழிலில் பல்லாயிரக்கணக்கானோர் ஈடுபட்டிருந்தனர். அவர்களது வாழ்க்கை ஆதாரமே நெசவுத்தொழில்தான். ஆனால் பிறருக்கு ஆடை கொடுத்த அவர்கள் முழு ஆடையின்றி இருந்தனர். வறுமையையே வாழ்க்கையாகக் கொண்டிருந்தனர். பாரம்பரிய நெசவுத் தொழிலை செய்து வந்த நெசவாளிகளின் பிரச்சனை தீர்க்கப்படாமல் இருந்தது. அவர்களது பிரச்சனைகளுக்குத் தீர்வு கண்டார். ராஜாஜி. இதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளாவன: 1) குறிப்பிட்ட துணி ரகங்கள் கைத்தறி நெசவுக்காக மட்டும் ஒதுக்கப்பட்டன. 2) நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் துவக்கப்பட்டு அவற்றின் மூலம் தேவையான நூலைப் பெற்றுக் கொண்டு, கைத்தறித் துணிகளை விற்க ஏற்பாடு செய்யப்பட்டது. 3) கைத்தறி நெசவாளர்களின் துயர் துடைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 4) கைத்தறி குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டன. 5) கதர்-கிராமக் கைத்தொழில் ஆணையம் பலப்படுத்தப்பட்டது. 5) கைத்தறித் துணி விற்பனைக்குத் தள்ளுபடிகள் கொடுக்கப்பட்டன. 6) விசைத் தறிப்போட்டியினின்றும் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சுருங்கக் கூறின், ராஜாஜியின் ஆட்சிக்காலம் கைத்தறி நெசவாளர்களின் பொற்காலம் என்று கூறலாம்.

ஆந்திர மாநிலம் அமைக்கப்படல், 1953

### தனி மாநிலக்கோரிக்கை

1908லிருந்து மொழிவழி மாநில அமைப்பு இந்திய தேசிய காங்கிரசின் கொள்கையாக இருந்தது. அக்கொள்கையின் அடிப்படையில்தான் 1911இல் பீகார் வங்காளத்திலிருந்து பிரிக்கப்பட்டது. ஒருங்கிணைந்த சென்னை ராஜதானியில் தமிழ்நாடு பிரதேச காங்கிரஸ் கமிட்டி, ஆந்திரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டி, கர்நாடக பிரதேச காங்கிரஸ் கமிட்டி, கேரளா பிரதேச காங்கிரஸ் கமிட்டி என்று மொழி அடிப்படையில் தனித்தனியே இயங்கி வந்தன. சென்னை ராஜதானியிலிருந்த தெலுங்கர்கள் 1917லிருந்தே தனி மாநிலக் கோரிக்கையை எழுப்பி வந்தனர். 1946-ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அகில இந்திய காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் மாகாணங்கள் மொழி மற்றும் கலாச்சார அடிப்படையில் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

பிரகாசம், ரங்கா போன்ற ஆந்திரத் தலைவர்கள் இந்திய உள்துறை அமைச்சர் வல்லபாய் பட்டேலை சந்தித்து ஆந்திர மாநிலம் அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அவசரத்தையும் வற்புறுத்தினர். முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் ஆட்சிக்காலத்தில் தனி ஆந்திர மாநிலக்கோரிக்கை புதுப்பலம் பெற்றது. 1947 நவம்பர் 27 ஆம் தேதி மொழி மாகாணக் கோரிக்கையை ஏற்றுக் கொண்டதாக அறிவித்தார் பிரதமர் நேரு.

**நாட்டு ஒற்றுமை**

இந்தியப் பிரிவினையால் பாதிக்கப்பட்ட இந்தியத் தலைவர்கள் நாட்டு ஒற்றுமையை மனதில் கொண்டு மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்படுவதைத் தாமதப்படுத்தி வந்தனர். இதனால் ஆந்திர ஆத்திரமடைந்தனர். 1951 சுதந்திர தினத்தன்று சுவாமி சீத்தாராம் சாகும் வரை உண்ணாவிரதம் மேற்கொண்டார். ஆந்திராவில் பதட்ட நிலை ஏற்பட்டது. ஆச்சார்ய வினோபாவே வேண்டிக் கொண்டதற்கு இணங்கி சுவாமி சீத்தாராம் உண்ணாவிரதத்தை முடித்துக்கொண்டார். ஆந்திர மக்கள் தங்கள் ஏமாற்றத்தை 1952 பொதுத் தேர்தலில் வெளிப்படுத்தினர். காங்கிரஸ் 375 இடங்களில் 152 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. ஆந்திராவில் 140 இடங்களில் 43 இடங்களை மட்டுமே பெற முடிந்தது. பல பிரபல காங்கிரஸ் தலைவர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.

**எதிர்ப்பு**

முதலமைச்சர் ராஜாஜி மேற்கொண்ட சிலநடவடிக்கைகள் எரிகின்ற நெருப்பில் எண்ணெய் விட்டதுபோல் ஆயிற்று. எடுத்துக்காட்டாக அவர் கொண்டு வந்த கிருஷ்ணா-பெண்ணார் திட்டம் கிருஷ்ணா நதிநீரைத் தமிழ்நாட்டுக்குத் திருப்பி விடுவதற்கான சூழ்ச்சி என்று ஆந்திரர்கள் கருதினர். 1952-1953இல் தனி ஆந்திர மாநிலக்கிளர்ச்சி உச்சகட்டத்தை எட்டியது. ஆந்திர மாவட்டங்களில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட ராஜாஜி மீது தார் வீசப்பட்டது. பொட்டி ஸ்ரீராமுலு உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்தார். அதன்பின் ஆந்திரா ஆர்ப்பாட்டம் காட்டுத்தீ போல் பரவிற்று.

ராஜாஜியின் உறுதி

ராஜாஜி மொழிவழி ஆந்திர மாநிலக் கோரிக்கையை ஏற்கவில்லை. குறிப்பாக சென்னை ஆந்திராவின் தலைநகர் ஆகவேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தார். “தூணையும் கட்டிப் பிடித்துக் கொண்டு அறையை விட்டு வெளியேற முடியாது, எனவே தூணை விட்டுவிட்டு அறையை விட்டு வெளியேறுங்கள்” என்றார். 1952 டிசம்பர் 19ஆம் தேதி மத்திய அரசாங்கம் சென்னை சேராத தனி ஆந்திரம் அமைவதை ஏற்றுக்கொண்டது. 1953 அக்டோபர் மாதம் பிரதமர் நேரு ஆந்திர மாநிலத்தைத் துவக்கிவைத்தார்.

**ஆந்திர பிரிவினை**

சென்னை மாகாணத்திலிருந்து ஆந்திரா பிரிக்கப்பட்டதால் பல பிரச்சனைகள் எழுந்தன. அவற்றுள் ஒன்று வடக்கு எல்லைப் பிரச்சனையாகும். ஆந்திரத் தலைவர்கள் திருப்பதியும் திருத்தணியும் ஆந்திராவுடன் இணைக்கப்பட வேண்டும் என்று கோரினர். இதை எதிர்த்து தமிழரசுக் கட்சித் தலைவர் ம.பொ.சிவஞானம் போராட்டம் நடத்தினார். மறியல் செய்தவர்கள் தடியடியைத் தாங்க வேண்டியதாயிற்று. இவ்விரு கோவில் நகரங்களும் தமிழ்நாட்டோடு சேர்க்கப்பட வேண்டும் என்று வாதாடினார். இச்சிக்கலைத் தீர்க்க அமைக்கப்பட்ட

எச்.வி.படாஸ்கா் கமிட்டியின் தீா்ப்பின்படி திருப்பதி ஆந்திராவுடனும், திருத்தணி தமிழ் நாட்டுடனும் சோ்க்கப்பட்டது. வடக்கு எல்லைப் பிரச்சனை தீா்ந்தது.

**மாநில மறுசீரமைப்பு**

சென்னை ராஜதானியிலிருந்து ஆந்திரா பிரிக்கப்பட்டபின் சென்னை மரிநலம் தமிழா்களின் மாநிலமாயிற்று மாநிலச் சீரமைப்புக் குழுவின் பரிந்துரையின்படி 1956 பிப்ரவரி 24ஆம் தேதி தற்போதைய குமரி மாவட்டமும், செங்கோட்டை வட்டமும் சென்னை மாநிலத்துடன் இணைந்தன. 1956 நவம்பா் முதல் தேதி முதல் கா்நாடகம் தனி மாநிலமாயிற்று. சென்னை மாநிலத்தில் காங்கிரசுக்குப் பெரும்பான்மை பலம் வந்துவிட்டது. காமராசரின் தலைமையில் காங்கிரஸ் பலமிக்கக் கட்சியாகத் திகழ்ந்தது. ராஜாஜி முதல்வா் பொறுப்பிலிருந்து விலகுவாா் என்று எதிா்பாா்க்கப்பட்டது. ஆனால் அவா் அப்படிச் செய்யவில்லை. முதலமைச்சா் பதவியில் நீடிக்கவே விரும்பினாா். ராஜாஜி எடுத்த இந்த முடிவு சரியல்ல என்று குறிப்பிட்டுள்ளாா் அவரது வலக்கரமாக இருந்த சி. சுப்பிரமணியம்.

**கல்விச் சீா்திருத்தம்**

**புதிய கல்விக்கொள்கை**

ராஜாஜி கல்விச்சீா்திருத்தத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தாா். கல்வியின் பயன் சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும், குறிப்பாக அடித்தட்டு மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் குறியாக இருந்தாா். பகுதிநேரக் கல்வி மூலம் இச்சாதனையைச் செய்ய முடியும் என்ற கருதினாா். அதாவது, மாணவா்கள் காலையில் நான்கு மணி நேரம் பள்ளிப் படிப்பிலும், மாலை நேரத்தில் வாழ்க்கைக்குத் தேவையான திறமைகளை வளா்த்துக்கொள்ளலாம் என்பதே ராஜாஜியின் புதிய பகுதி நேரக் கல்விக்கொள்கை. மாணவா்கள் தொழில் திறமையை வளா்த்துக் கொள்வதைப் பொறுத்தவரை ராஜாஜியின் திட்டம் வருமாறு. மாணவா்கள் முதலில் தங்களது தந்தையா் செய்து வந்த தொழிலைக் கற்றுக்கொள்ளட்டும், அதன் பின்னா் தங்கள் திறமைகளுக்கேற்ற தொழிலை அவா்கள் விருப்பம் போல் தோ்ந்தெடுத்துக்கொள்ளட்டும்.

**எதிா்ப்புப் போராட்டம்**

**தடம் புரண்ட திட்டம்**

ராஜாஜியின் புதிய கல்விக்கொள்கையும், கல்வித் திட்டமும் தமிழ் நாட்டில் போராட்டப் புயலைக் கிளப்பிவிட்டது. பெரியாா் ஈ.வெ.ராவின் திராவிடா் கழகமும், சி.என்.அண்ணாதுரையின் தி.மு.கவும் ராஜாஜியின் கல்விக் கொள்கைக்கு 'குலக்கல்வி' என்றும் 'சாதிக்கல்வி' என்றும் முத்திரை குத்தி அரசியல் பிரச்சனையாக்கினா். 'குலக்கல்வி' வா்ணாசிரம சாதி வேறுபாட்டை நிரந்தரமாக்கிவிடும் என்று போா்க்குரல் எழுப்பி பெரிய போராட்டத்தைத் துவக்கினா். பிள்ளையாா் பிடிக்கப் போய் குரங்காக மாறியதைக் கண்ட ராஜாஜி அதிா்ச்சி

அடைந்தார். அவரது புதிய கல்விக்கொள்கை தடம் புரண்டுவிட்டது. திராவிடக் கழகங்களோடு கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து கொண்டனர்.

**தி.மு.க.வின் திட்டம்**

1953 ஜீலை 13ஆம் தேதி தி.மு.க. செயற்குழு ‘மும்முனைப்போராட்டம்’ நடத்த முடிவு செய்தது. 1) குலக்கல்விப்போராட்டம், 2) கல்லக்குடி போராட்டம், 3) நேரு எதிர்ப்புப் போராட்டம். குலக்கல்விப்போராட்டத்துக்கு ஈ.வெ.கி.சம்பத் தலைமை தாங்கி ராஜாஜி வீட்டுக்கு முன் மறியல் செய்வது என்று தீர்மானிக்கப்பட்டது. இதை அறிந்த போலீசார் போராட்டம் துவங்கப்படுவதற்கு முன்பே அண்ணாதுரை, நெடுஞ்செழியன், ஈ.வெ.கி. சம்பத், மதியழகன், என்.வி. நடராஜன் ஆகியோரைக் கைது செய்தனர். சம்பத்துக்குப் பதில் மறியல் நடத்தச் சென்ற சத்தியவாணிமுத்துவும் கைது செய்யப்பட்டார். டால்மியாபரத்தை கல்லக்குடியாக மாற்றக்கோரி போராடியதற்காகக் கருணாநிதியும் 35 பேரும் கைது செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சூட்டில் பலர் காயமடைந்தனர். ராஜாஜி சென்ற இடங்களில் எல்லாம் கருப்புக்கொடி காட்டப்பட்டது.

**பதவி விலகல்**

ராஜாஜியின் கல்வித்திட்டம் உடனடியாக விலக்கிக் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டு எதிர்க்கட்சிகள் ஒரு தீர்மானத்தை சட்டப்பேரவையில் கொண்டு வந்தனர். அத்தீர்மானம் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தோற்றது. ‘குலக்கல்வி’ எதிர்ப்புப் போராட்டம் தீவிரமடைந்தது. எதிர்க்கட்சியினர் மக்களை வெற்றிகரமாக அரசாங்கத்துக்கு எதிராகத் திருப்பி விட்டனர். காமராசரும் ராஜாஜயின் கல்வித் திட்டத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அதை எதிர்த்து வெளிப்படையாகப் பேசினார். ராஜாஜிக்கு எதிராக கட்சிக்குள்ளேயே எதிர்ப்பு பலப்பட்டது. எதிர்ப்பை எதிர்கொள்ள முடியாத ராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலகினார். தமிழ்நாட்டில் புயலுக்குப்பின் அமைதி ஏற்பட்டது.

**மதிப்பீடு**

மூதறிஞர் ராஜாஜி பிறப்பாலும், வளர்ப்பாலும் பிராமணர். ஆனால் சிந்தனையாலும் செயலாலும் அவர் ஒரு தூய்மையான தேசியவாதி. செல்வாக்குமிக்க வக்கீல் தொழிலைத் துறந்து தேச விடுதலைப்போராட்டத்தில் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார். பிராமணராக இருந்தும் எவ்வித எதிர்பார்ப்புமின்றி அவர்அரிசனங்கள் மீது வைத்திருந்த அன்பும், தீண்டாமை ஒழிப்பின் அவர் காட்டிய தீவரமும் உண்மையானது. உள்ளத் தூய்மையானது. அதேபோன்று ராஜாஜி மதுவிலக்குக் கொள்கை மீது வைத்திருந்த நம்பிக்கை அடித்தட்டு மக்களின் நலனை மையமாகக் கொண்ட மெய்யான பற்றுறுதியின் வெளிப்பாடாகும். ராஜாஜியின் அறிவாற்றலும், கருத்துக் தெளிவும் கொள்கை வேறுபாட்டை வெளிப்படுத்தும் துணிவும் அவரது தனித்தன்மையாகும். நேருவின் நல்ல நண்பராகவும், காந்தியின் மனசாட்சிக் காவலராகவும் கருதப்பட்டவர். இந்தியாவின்

முதல் கவர்னர்-ஜெனரலான தமிழர். சமகால இந்திய வரலாற்றில் ராஜாஜியின் வாழ்வும் வாக்கும் பலருக்கு வழிகாட்டியாக இருந்தன. ராஜாஜி ஒரு ராஜரிஷி.

ராஜாஜியின் அறிவும், ஆற்றலும் அனுபவமும் தேசிய அரசியலில் அங்கீகாரம் பெற்ற அளவுக்கு மாநில அரசியலில் அடையாளம் காணப்படவில்லை. இருமுறை முதலமைச்சரான ராஜாஜி சர்ச்சைக்குரிய ஆட்சியாளராகவே இருந்தார். முதல் முறையாக அவர் முதலமைச்சரான போது தமிழ் நாட்டின் தலைசிறந்த காங்கிரஸ் தலைவராக இருந்த சத்தியமூர்த்தி முதலமைச்சராகும் வாய்ப்பை இழக்க நேரிட்டது. ராஜாஜியின் இந்திக் கொள்கை தமிழ்நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை வளர்த்து விட்டது. அதேபோன்று, ராஜாஜி இரண்டாவது முறையாக முதலமைச்சரானபோது சத்தியமூர்த்தியின் சீடரும், மக்கள் செல்வாக்கைப் பெற்றிருந்தவருமான காமராசர் முதலமைச்சராகும் வாய்ப்பை இழந்தார். ராஜாஜியின் கல்விக்கொள்கை தமிழ்நாட்டில் மாபெரும் அரசியல் கொந்தளிப்பை ஏற்படுத்திவிட்டது. கவர்னர் ஜெனரலாக இருந்த ராஜாஜிக்கு முதலமைச்சராகும் ஆசை இருந்தது. ஆனால் தேர்தலை சந்திக்க அதுவே தடையாக இருந்தது. ராஜாஜி மறைமுகமாக முதலமைச்சரானபோது அவரது பற்றற்ற தன்மையைப் பாதித்தது.

அரசியல் ஆதாயத்துக்காக இந்தியை ஆதரித்த ராஜாஜி இந்தி எதிர்ப்பாளரானார். கம்யூனிஸ்டுகளை முதல் விரோதியாக கருதிய அவர் கம்யூனிஸ்டுகளுடன் அரசியல் உறவு கொண்டிருந்த திராவிட முன்னேற்றக் கழகத்துடன் கூட்டணி வைத்துக்கொண்டார். காங்கிரஸ் மீதான வெறுப்பு அவரது கருத்தைக் குருடாக்கி விட்டது. அதேபோன்று நேருவின் சோஷலிசக் கொள்கைக்கு எதிராக ராஜாஜி துவக்கிய சுதந்திரா கட்சி சரியான நோக்கத்துக்காக எடுக்கப்பட்ட தவறான முடிவாகும். சுருங்கக் கூறின், ராஜாஜியின் அரசியல் சாதனைகளைவிட அவரது சிந்தனைச் சாதனைகளே நிலைத்து நிற்பவை.

திபெத், சீனா, பாகிஸ்தான், பொருளாதாரத் தனியார்மயமாதல், அணு ஆயுத பரிசோதனை பற்றிய ராஜாஜியின் தீர்வுகள் தொலைநோக்குடையவை. காலத்தால் மெய்பிக்கப்பட்டவை. ராஜாஜி வரலாற்றால் உருவாக்கப்படவுமில்லை. அவர் வரலாற்றை உருவாக்கவுமில்லை. ராஜாஜி தன்னைத் தானே உருவாக்கிக் கொண்ட வரலாற்றுச் சாதனையாளர். "ராமபிரானுடைய ஆண்மையும், கிருஷ்ணனுடைய ராஜதந்திரமும், புத்தருடைய தூய்மையும், சிபிச்சக்கரவர்த்தியின் தியாகமும், ராமானுஜரின் மதப்பக்தியும், வள்ளுவரின் வாய்மையும் சேர்ந்து உருவெடுத்து வந்திருப்பவர் ராஜாஜி" என்று புகழ் மாலை சூட்டியுள்ளார் சின்ன அண்ணாமலை.

**கு. காமராசர் ஆட்சி, 1954-1963**

**இளமைப்பருவம். 1903-1920**

காமராசர் என்ற காமாட்சி 1903 ஜீலை 15ஆம் தேதி ராமநாதபுரம் மாவட்ட விருதுநகரில் நடுத்தர நாடார் குடும்பத்தில் குமாரசாமிக்கும் சிவகாமி

அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தார். இவர் உள்ளூர் பள்ளியிலும், ஏனாதி நாயனார் வித்யாசாலாவிலும், சத்திரிய வித்யாசாலாவிலும் படித்தார். இளமையிலேயே தந்தையையும், பாட்டனாரையும் இழந்த காமாட்சி பள்ளிப்படிப்பைப் பாதியிலேயே நிறுத்த நேரிட்டது. அதன்பின் இவர் தனது சித்தப்பா கருப்பையா நாடார் துணிக் கடையிலும், திருவனந்தபுரத்தில் தாய்மாமன் காசி நாராயண நாடாரின் மரத்தொட்டியிலும் வேலை செய்தார். அப்போது காமராசருக்கு நாட்டு அரசியலிலும், சமூக சீர்திருத்தத்திலும் ஆர்வம் ஏற்பட்டது. கேரளாவில் தீண்டத்தகாதோராக் கருதப்பட்டு பல கொடுமைகளுக்கு உள்ளான ஈழவர்கள் பற்றிய அறிய நேரிட்டது. வைக்கம் அறப்போராட்டத்தில் ஆயிரத்தில் ஒருவராகக் கலந்து கொண்டார். அதன் பின்னர் சுசீந்திர ஆலய நுழைவுப் போராட்டத்திலும் பங்கேற்றார்.

**விடுதலைப் போராட்டத்தில் காமராசர், 1920-1930**

திருவனந்தபுரத்திலிருந்து விருதுநகர் திரும்பிய காமராசர் இந்திய விடுதலை போராட்டத்தில் கலந்து கொள்ளும் நோக்கத்தோடு 1919இல் காங்கிரஸ் தொண்டராகச் சேர்ந்தார். 1920ஆம் ஆண்டில் அவருக்குக் காந்தியை மதுரையில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதன்பின் அவர் விருதுநகரிலும், மாவட்டத்திலும் காங்கிரசைப் பலப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார். அப்போதுதான் அவருக்கு எ. சத்தியமூர்த்தியுடன் தொடர்பு ஏற்பட்டது. அப்போதிலிருந்து காமராசர் சத்தியமூர்த்தியின் நம்பிக்கைக்குரிய சீடரானார். திருச்சி, மதுரை போன்ற நகரங்களில் காங்கிரஸ் கிளைகளைத் துவக்கினார். காங்கிரஸ் தொண்டர்களுக்குப் பயிற்சி அளித்தார். 1920இல் துவக்கப்பட்ட ஒத்துழையாமை இயக்கத்தில் கலந்து கொண்டு மதுக்கடை மறியல் செய்தார்.

காமராசர் 1922ஆம் ஆண்டில் அப்போது காங்கிரசில் இருந்த ஈ.வெ.ராமசாமி நாயக்கர் தலைமையின் கீழ் செயல்பட்ட காங்கிரஸ் பேரவையின் செயலராக இருந்தார். அப்பேரவையின் மாநில காங்கிரஸ் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மக்களுக்கு நன்கு அறிமுகமான காமராசர் விருதுநகர் நகராட்சி உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மாவட்ட காங்கிரஸ் சிறப்புக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்து அதில் உயர்மட்டத் தலைவர்களை அழைத்துப் பங்கேற்கச் செய்தார். 1924 இல் காமராசர் சத்தியமூர்த்தியுடன் சேர்ந்து விருதுநகர் மாவட்டத்தில் தேர்தல் சுற்றுப்பயணம் செய்தார். காந்தி சீனிவாச ஐயங்காரின் விருந்தினராக இருந்தபோது காமராசர் காந்தியை சந்தித்து ஒத்துழையாமை இயக்கத்தை முன்னின்று நடத்த அனுமதி பெற்றார். மதுக்கடை மறியல் செய்தார். சைமன் குழுவை எதிர்த்து மறியல் போராட்டம் செய்தார். உப்பு அறப்போராட்டத்தில் கலந்து கொண்டு இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை பெற்றார் காமராசர். அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்டார்.

**காங்கிரஸ் தலைவர், 1930-1937**

1930ஆம் ஆண்டு அலிப்பூர் சிறையில் அடைக்கப்பட்ட காமராசர் 1931-இல் விடுதலை செய்யப்பட்டார். அவருக்கு விருதுநகரில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து அவர் ராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். காந்தி இரண்டாவது வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றபோது காந்தி இர்வின் ஒப்பந்தத்தை மீறி சட்டமறுப்புப்போராட்ட வீரர்கள் மீது பழி வாங்கப்பட்டது. அப்போது காமராசர் கைது செய்யப்பட்டு திருச்சி சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அவர் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. விடுதலையான பின் 1935 டிசம்பர் 20ஆம் தேதி காமராசர் விருதுநகரில் காங்கிரஸ் பொன்விழாவை சிறப்பாகக் கொண்டாடினார்.

1936இல் ஜவஹர்லால் நேரு தமிழ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்த போது சத்தியமூர்த்தியும், காமராசரும் உடன் சென்றனர். அடுத்த ஆண்டே காமராசர் சாத்தூர் தொகுதியிலிருந்து சென்னை சட்டப்பேரவைத் தேர்தலில் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1940 இல் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் தேர்தலுக்கான தேர்தல் நடைபெற்றது. அப்போது முதலமைச்சராக இருந்த ராஜாஜியின் ஆதரவோடு சி.பி.சுப்பையாவும், சத்தியமூர்த்தியின் ஆதரவோடும் காமராசரும் போட்டியிட்டனர். காமராசர் மூன்று வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவர் அப்பதவியில் தொடர்ந்து 16 ஆண்டுகள் நீடித்தார். சத்தியமூர்த்தி காங்கிரஸ் செயலரானார்.

**ஆட்சியாளர்களை உருவாக்குபவர், 1937-1954**

**நகர்மன்றத் தலைவர்**

1940இல் துவக்கப்பட்ட தனிநபர் அறப்போராட்டத்தின் போது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவராயிருந்த காமராசர் தமிழ்நாடு முழுவதற்குமான சத்தியாக்கிரகிகளின் பெயர்ப்பட்டியலைத் தயாரித்துக் கொண்டு காந்தியை சந்தித்துப் பேசுவதற்காக வார்தாவுக்குச் செல்லும் வழியில் கரூர் புகை வண்டி நிலையத்தில் கைது செய்யப்பட்டு வேலூர் சிறையில் அடைக்கப்பட்டார். காமராசர் சிறையில் இருந்தபோது அவர் விருதுநகர் நகர் மன்றத்தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். விடுதலையானவுடன் காமராசர் மரியாதை நிமித்தம் நகராட்சித் தலைவராகப் பொறுப்பேற்று விரைவிலேயே கட்சிப்பணிக்காகப் பதவி விலகினார்.

சிறைவாசம்

1942 ஆகஸ்டு 7-8 தேதிகளில் பம்பாயில் கூடிய காங்கிரஸ் கூட்டத்தில் ‘வெள்ளையனே வெளியேறு’ போராட்டத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்பிய காமராசர் கைது செய்யப்பட்டு அம்ரோலி சிறையில் அடைக்கப்பட்டுப் பின்னர் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். மூன்று

ஆண்டுகால சிறைவாசத்துக்குப் பின் விடுவிக்கப்பட்டார். காமராசர் சிறையிலிருந்த போது அவரது அரசியல் ஆசான் சத்தியமூர்த்தி காலமானார்.

காலத்தே செய்த உதவி

1945 ஜீலை மாதம் சிறையிலிருந்து திரும்பிய காமராசர் கட்சிப் பணியில் கருத்தூண்றி செயல்பட்டார். 1946இல் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தமிழ்நாட்டில் 205 இடங்களில் 165 இடங்களைக் காங்கிரஸ் கைப்பற்றியது. காமராசர் சாத்தூர் தொகுதியிலிருந்து சட்டப்பேரவைக்குப் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார். காமராசரின் ஆதரவோடு டி.பிரகாசம், ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா ஆகியோர் முறையே சென்னை முதலமைச்சரானார்கள் (1946-1952). அதன் காரணமாகவே அவர் 'ஆட்சியாளர்களை உருவாக்குபவர் என்று அழைக்கப்பட்டார்.

**முதலமைச்சர்**

1952இல் ராஜாஜி தமிழ்நாட்டு முதலமைச்சரானார். ராஜாஜி பதவி விலகிய பின் (1954) காமராசர் மீண்டும் மாநில காங்கிரஸ் தலைவரானார். 1954 ஏப்ரல் 13ஆம் தேதி காமராசர் தமிழ்நாட்டு முதலமைச்சரானார். 9 ஆண்டு காலம் முதலமைச்சர் பொறுப்பிலிருந்த காமராசர் (1954-1963) நேருவின் விருப்பத்திற்கேற்ப முதலமைச்சர் பதவியிலிருந்து விலகி அகில இந்திய காங்கிரஸ் தலைவரானார். 1963 லிருந்து 1975 வரை காமராசர் மத்தியிலும் மாநிலத்திலும் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தார். 1969இல் காங்கிரஸ் பிளவுபட்டவுடன் காமராசர், அமைப்பு காங்கிரஸ் என்ற தனிக்கட்சியை ஆரம்பித்து அதன் தலைவராக இருந்தார். 1975 அக்டோபர் 2ஆம் தேதி உறக்கத்திலேயே உயிர் நீத்தார்.

**காமராசரின் கை ஓங்கியது 1954**

ஆந்திரப்பிரதேசம் தனி மாநிலமான பிறகு சென்னை சட்டப்பேரவையின் எண்ணிக்கை 375லிருந்து 230 ஆகக் குறைந்தது. 140 உறுப்பினர்கள் ஆந்திராவுக்கு 5 பேர் மைசூருக்கும் சென்றுவிட்டனர். இதன் காரணமாக தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராசரின் கரம் ஓங்கியது. சட்டப்பேரவை காங்கிரஸ் தலைவர் தேர்வுக்காகக் காமராசரும், சி.சுப்பிரமணியமும் போட்டியிட்டனர். ராஜாஜி சுப்பிரமணியத்தை ஆதரிக்க, வரதாஜீலு நாயுடு காமராசர் பக்கம் இருந்தார். பெரியார் காமராசருக்கு உறுதுணையாக இருப்பதாக உறுதி அளித்தார். சி.சுப்பிரமணியம் 41 வாக்குகளைப் பெற, காமராசர் 93 வாக்குகளைப் பெற்று வெற்றிவாகை சூடினார். 1954 ஏப்ரல் 13ஆம் தேதி காமராசர் தமிழ்நாடு முதலமைச்சரானார். முதலமைச்சரான சில மாதங்களில் குடியாத்தம் இடைத்தேர்லில் போட்டியிட்டு வெற்றி பெற்றார் (1954 ஆகஸ்ட் 4).

**காமராசரின் அமைச்சரவை**

ராஜாஜி பதவிக்காலம் முடியும் முன்பே பதவி விலகியதால் காமராசர் முதலமைச்சர் பொறுப்பேற்றபின் ராஜாஜியின் அமைச்சரவையை அப்படியே வைத்துக்கொண்டார். சட்டப்பேரவை காங்கிரஸ் கட்சித் தலைவர் போட்டியில்

காமராசரை எதிர்த்துப் போட்டியிட்ட ராஜாஜி ஆதரவாளர் சி. சுப்பிரமணியம் காமராசரின் அமைச்சரவையில் இலாக்கா மாற்றத்தோடு தொடர்ந்து நீடித்தார். பின்னர் கேரளாவும், கர்நாடகமும் மாற்றி அமைக்கப்பட்டபின் அமைச்சரவையின் எண்ணிக்கை 9 ஆகக் குறைந்தது. காமராஜரின் அமைச்சரவையாகக் கருதப்பட்டது.

**காங்கிரஸ் கோப்பைக்குள் கொந்தளிப்பு**

காமராசர் முதலமைச்சர் பொறுப்பேற்றவுடன் அவர் முதலமைச்சராவதற்கு உறுதுணையாக இருந்தவர்கள் அமைச்சரவையில் இடம் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்தனர். ஆனால் காமராசர் ராஜாஜியின் அமைச்சரவையையே பெரிய மாற்றம் எதுவுமின்றி அப்படியே தக்க வைத்துக்கொண்டதால் அவர்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர். டி.ஜி.கிருஷ்ணமூர்த்தி, கோசல்ராம், மாரிசாமி ஆகியோரும் அவர்களது ஆதரவாளர்களும் ஒரு கோஷ்டியாகச் சேர்ந்து கொண்டு காமராசரின் பெயரைக் கூறிக்கொண்டு அமைச்சரவைக்கு வெளியே அமைச்சர்களைப் போல் நடந்து கொண்டனர். வி.கே. பழனிச்சாமி கவுண்டர், வி.கே. ராமசாமி முதலியார், எ. ராமசாமி நாயுடு, ஜெயராம் ரெட்டியார் போன்றோர் தங்களது அதிருப்தியை வெளிப்படையாகக் கூறிவந்தனர். குறிப்பாக, எ. ராமசாமி நாயுடு காமராசர் ஆட்சியைக் கவிழ்க்கும் நிலைக்குச் சென்று விட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். சி.சுப்பிரமணியம். இறுதியில் இவர்களது எதிர்ப்பு கோப்பைக்குள் எழுந்த கொந்தளிப்பு போல் அடங்கிவிட்டது.

**குடியாத்தம் வெற்றி**

காமராசர் முதலமைச்சரானபோது அவர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தார். ராஜாஜி போன்று மேலவை வழியாகச் செல்ல மறுத்து குடியாத்தம் இடைத்தேர்தலில் போட்டியிட்டார். தேர்தலில் பெரியாரும், அண்ணாதுரையும் காமராசருக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்தனர். கம்யூனிஸ்டு சார்பாக கே. கோதண்டராமன் போட்டியிட்டார். ‘கம்யூனிஸ்டுகளின் கோட்டையாகக் கருதப்பட்ட குடியாத்தம் தொகுதியில் காமராசர் எளிதாக வெற்றிபெற்றார்.

**ஆவடி காங்கிரஸ், 1955**

**சத்தியமூர்த்தி நகர்**

1955 ஜனவரி, 21-23 தேதிகளில் சென்னை ஆவடியில் இந்திய தேசிய காங்கிரசின் 60வது பொது மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டை நடத்தும் பொறுப்பை முதலமைச்சர் காமராசர் மேற்கொண்டார். மாநாட்டு வளாகத்துக்கு சத்தியமூர்த்தி நகர் என்ற பெயரிடப்பட்டது. யு.என்.தேபர் இம்மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். யூகோ லாவியா அதிபர் மார்ஷல் டிட்டோ சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொண்டார்.

**சோஷலிச பாணி சமுதாயம்**

ஆவடி காங்கிரஸ் மாநாட்டில்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க சோஷலிச பாணி சமுதாயம் பற்றிய தீர்மானம் நேருவால் முன்மொழியப்பட்டு, காமராசரால் வழிமொழியப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. சோஷலிச பாணி சமுதாயக் கொள்கையின் முக்கிய அம்சங்களாவன:1) பிரதான பொன் உற்பத்தி சாதனங்கள் சமுதாயத்துக்குச் சொந்தமாக அல்லது அதன் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும். 2) பொருள் உற்பத்தி படிப்படியாக துரிதப்படுத்தப்பட்டு துரிதப்படுத்தப்பட்டு அதிகரிக்கப்படும். 3) தேசிய சொத்தும், செல்வமும் மக்களிடையே சமமாகப் பகிர்ந்து அளிக்கப்படும். 4) தனியார் இலாபத்தைவிட சமுதாயப் பலனே மேல் என்பது இக்கொள்கையில் கருப்பொருளாக இருக்கும். சுருங்கக்கூறின், ஜனநாயக சமதர்ம சமுதாயமே சோஷலிச பாணி சமுதாயக் கொள்கையின் சாரமாகும். ஆவடி காங்கிர மூலம் காமராசர் தேசத் தலைவர் நிலைக்கு உயர்ந்தார். ஆவடி காங்கிரஸ் "காமராசரின் செயல்திறனையும் அவருக்குப் பின் நின்ற மக்கள் சக்தியையும் நன்கு வெளிப்படுத்தின" என்று கூறுகிறார் காமராசரின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் எம்.எ.முத்துசாமி.

**கொடிக்கொளுத்துப் போராட்டம், 1955**

1955 ஆகஸ்டு மாதம் முதல் தேதி இந்தித் திணிப்பை எதிர்த்துத் தமிழ் நாடெங்கும் இந்திய தேசியக் கொடியை எரித்துப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தார் ஈ.வெ.ரா. அந்த அறிவிப்பு பலரையும் அதிர்ச்சி அடையச் செய்தது. காமராசர் நாட்டின் எந்தப் பகுதியின் மீதும் அம்மொழி கட்டாயமாகத் திணிக்கப்படாது. தமிழ்மொழி எவ்விதத்திலும் பாதிக்காமல் மாநில அரசு பார்த்துக் கொள்ளும். எனவே பெரியார் அவர் அறிவித்த போராட்டத்தைக் கைவிட வேண்டும். காமராசர் கொடுத்த உறுதி மொழியை ஏற்றுப் பெரியார் போராட்டத்தை விலக்கிக் கொண்டார். தமிழ்நாடு மற்றொரு போராட்டத்திலிருந்து தப்பித்தது.

**தட்சிண பிரதேசத் திட்டம்**

**மாற்றுத்திட்டம்**

1950களில் மொழி வழி மாநிலக் கோரிக்கை இந்திய அரசியலை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. இந்தியப் பிரிவினைக்குப் பிறகு தேச ஒற்றுமையை ஏற்படுத்துவதில் பிரதமர் நேரு குறியாக இருந்தார். மொழிவழி மாகாண சீரமைப்பைப் பரிசீலித்த எ.கே.தார் கமிஷனும், ஜே.வி.பி.கமிட்டியும் மொழி வழி மாநிலங்கள் அமைவதற்கு சாதகமாக இல்லை. மொழி அடிப்படையில் ஆந்திரப்பிரதேசம் அமைக்கப்பட்டது. தனி மாநிலக் கோரிக்கையை அதிகரித்துவிட்டது. அத்தகைய சூழ்நிலையில் மொழிவழி மாநிலத்துக்குப் பதில் இந்தியாவை பெரிய நிர்வாகப் பகுதிகளாகப் பிரிப்பது பற்றி சில தலைவர்கள் கருத்து கூறினர்.

## ராய் திட்டம்

மேற்கு வங்காளத்தைச் சேர்ந்த டாக்டர் பி.சி.ராய் சில தலைவர்களுடன் கலந்து பேசி மொழி வழி மாநில சீரமைப்புக்குப் பதில் ஒரு மாற்றுத்திட்டத்தைக் கொண்டுவந்தார். இந்தியாவை மொழிவாரியாகப் பிரிப்பதற்குப் பதில் ஐந்து அல்லது ஆறு பெரிய ஆட்சிப் பகுதிகளாகப் பிரித்துவிடலாம் என்பதே ராயின் திட்டம். அத்திட்டத்தின்படி மேற்கு வங்காளத்தை பீகாருடன் இணைத்துப் பெரிய மாநிலப்பகுதியை உருவாக்கலாம் என்றார். அதேபோன்று தென்னிந்தியாவில் தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம் ஆகிய மாநிலங்களை ஒன்று சேர்த்து தட்சிண பிரதேசத்தை அமைப்பது பற்றிப் பரிசீலிக்கப்பட்டது.

1956-இல் அமிர்தசரசில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கூட்டத்தில் 'ராய் திட்டத்தின்' அடிப்படையில் தட்சிண பிரதேசம் அமைப்பது பற்றிய தீர்மானத்தை கோவிந்த் வல்லப பந்த் முன் மொழிய, சி.சுப்பிரமணியம் வழி மொழிந்தார். அத்தீர்மானம் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதன்பின் பெங்களூரில் கூடிய காங்கிரஸ் கமிட்டி இத்தீர்மானத்தைப் பரிசீலித்தது. இக்கூட்டத்தில் கலந்து கொண்ட நேருவும், காமராசரும் ராய் திட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. அதுமட்டுமல்ல. இத்திட்டத்தைப் பற்றி அறிந்த பெரியார் ஈ.வெ.ராமசாமி கடுமையாக எதிர்த்தார். இத்திட்டத்தை ஏற்றுக் கொண்டால் சென்னை மாநிலத்தில் காமராசரின் ஆட்சி முடிந்துவிடும் என்றும், தமிழர்கள் பிற பகுதியினரின் ஆதிக்கத்துக்குள்ளாவார்கள் என்றும் எச்சரித்தார். எனவே, தட்சிண பிரதேசத் திட்டம் குறைப்பிரவசமாயிற்று. பி.சி.ராய் திட்டம் கைவிடப்பட்டது. கடைசி நேரத்தில் பெரியார் அனுப்பிய தந்தியே இதற்குக் காரணம் என்றும், பெரிய மாநில அமைப்புத்திட்டத்தை ஏற்றுக்கொண்டிருந்தால் சமகால இந்திய வரலாற்றின் போக்கே மாறியிருக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார் சி. சுப்பிரமணியம்.

## சட்டப் பேரவைத் தேர்தல், 1957

ராஜாஜி அவரது ஆட்சிக்காலம் முடிவதற்கு முன்பே பதவி விலக நேரிட்டதால் காமராசர் முதலமைச்சர் பொறுப்பு ஏற்கவேண்டியதாயிற்று. ஆந்திரப்பிரதேசம் தனியாகப் பிரிந்து தமிழ் மாநிலம் உருவாக்கப்பட்டபின் சட்டப்பேரவைத் தேர்தல் 1957 மார்ச் 31-ஆம் தேதி நடத்தப்பட்டது. ஆந்திரப் பிரதேசம் பிரிந்து போனதால் சென்னை சட்டப்பேரவையின் எண்ணிக்கை 231 ஆகக் குறைந்தது. 1956இல் மாநில மறுசீரமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததால் இந்த எண்ணிக்கை 205 ஆயிற்று. 1957 தேர்தல் இந்த 205 இடங்களுக்காக நடத்தப்பட்டது.

## பிரதான கட்சிகள்

இந்திய தேசிய காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்டு கட்சி, பார்வர்டு பிளாக், பிரஜா சோஷலிஸ்டு கட்சி, சோஷலிஸ்டு கட்சி, காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி, திராவிட முன்னேற்றக் கழகம் ஆகியவை 1957 சட்டப்பேரவைத் தேர்தலில் பங்கேற்ற

பிரதான கட்சிகளாகும். இவைகளின்றி, வழக்கம் போல் சுயேட்சைகளும் போட்டியிட்டனர்.

**கட்சிகளின் நிலைப்பாடு**

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் காமராசர் தமிழரானதால் தி.மு.கவின் பிரச்சார முழக்கமான 'காங்கிரஸ் பிராமணர்களின் கோட்டை' முனை மழுங்கிப் போயிற்று. தாங்கள் தான் தமிழ் தேசியத்தின் தலைமக்கள் என்று தனிமைப்படுத்திக் கொள்ள முடியவில்லை. எனவே, தி.மு.க. பிராமணர் ஆதிக்கப் பிரச்சாரத்தைவிட்டு அதன் கவனத்தை பொருளாதார ஏற்றத்தாழ்வுப் பக்கம் திருப்பியது. 'வடக்கு வாழ்கிறது தெற்கு தேய்கிறது' என்ற கோஷம் எழுப்பப்பட்டது. அதேபோன்று தனி திராவிட நாடு கோரிக்கையை முன்னிலைப்படுத்தவில்லை. யாவற்றுக்கும் மேலாக திராவிட நாடு கோரிக்கையை முன்னிலைப்படுத்தவில்லை. யாவற்றுக்கும் மேலாக திராவிடர் கழகத்தலைவர் பெரியார் ஈ.வெ.ராமசாமி வலிய வந்து 'பச்சைத் தமிழர்' காமராசருக்கு ஆதரவளித்தார். அதற்கான தீர்மானம் 1956 அக்டோபர் மாதம் நடைபெற்ற அக்கழகத்தின் மத்திய ஆட்சிக் குழுக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. வலிய வந்த ஆதரவை காமராசரும் ஏற்றுக்கொண்டார். அதுமட்டுமல்ல. அவர் சில முன்னாள் திராவிட கழக உறுப்பினர்களை காங்கிரஸ் வேட்பாளர்களாக ஏற்றுக்கொள்வதாகவும் கூறினார். காமராசரின் இந்த முடிவை ஆதரிக்காதவர்கள் காங்கிரஸ் சீர்திருத்தக்கமிட்டி என்ற அமைப்பை உருவாக்கி இத்தேர்தலில் தனியாகப் போட்டியிட்டார்.

**தேர்தல் முடிவுகள்**

1957 சட்டப்பேரவைத் தேர்தல் முடிவுகள் வருமாறு, காங்கிரஸ் 204 இடங்களில் போட்டியிட்டு 151 இடங்களைக் கைப்பற்றியது. தி.மு.க.112 இடங்களில் போட்டியிட்டு 15 இடங்களில் பெற்றி பெற்றது. பிற கட்சிகளுக்குக் கிடைத்த இடங்கள் காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி 9, இந்திய கம்யூனிஸ்டு கட்சி 4, பார்வர்டு பிளாக் 3, பிராஜா சோஷலிஸ்டு கட்சி 2, சோஷலிஸ்டு கட்சி 1, சுயேட்சைகள் 22, காங்கிரசுக்கு 45.34 சதவிகித வாக்குகளும், தி.மு.க.விற்கு 12.79 சதவிகித வாக்குகளும் கிடைத்தன. காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டி 8 சதவிகித வாக்குகளைப் பெற்றது. காங்கிரசிலிருந்து இக்கமிட்டி பிரியாமல் இருந்திருந்தால் காங்கிரசுக்கு 53 சதவிகித வாக்குகளுக்கு மேல் கிடைத்திருக்கும். காமராசர் சாத்தூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**காமராசரின் இரண்டாவது அமைச்சரவை, 1957-1962**

காமராசரின் முதலாவது அமைச்சரவை ராஜாஜி அமைச்சரவையின் நீட்டிப்பாகும். அவரது இரண்டாவது அமைச்சரவை மாற்றி அமைக்கப்பட்டது. இந்த அமைச்சரவையில் இடம் பெற்ற அமைச்சர்கள் எம்.பக்தவத்சலம் (உள்துறை), சி. சுப்பிரமணியம் (நிதி), ஆர். வெங்கட்ராமன் (தொழிற்சாலைகள்), எம்.ஏ.

மாணிக்கவேலு நாயக்கர் (வருவாய்), பி. கக்கன் (பொதுப்பணி), வி. ராமய்யா (மின்சாரம்), லூர்தம்மாள் சைமன் (உள்ளாட்சி நிர்வாகம்).

**சாதி மோதல்கள், 1957**

1957 ஜீலை முதல் தேதி முதுகுளத்தூரில் இடைத்தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் பார்வர்டு பிளாக் வேட்பாளர் டி.வி.சசிவர்ண தேவர் வெற்றி பெற்றார். இவ்வெற்றியைத் தொடர்ந்து ஆங்காங்கே தேவர்களுக்கும் தலித்துகளுக்கும் மோதல்கள் ஏற்பட்டன. விரைவில் இம்மோதல்கள் ராமநாதபுரம் மாவட்டம் முழுமைக்கும் காட்டுத்தீ போல் பரவிற்று. வீடுகள் தீக்கிரையாகின. பலர் பாதிக்கப்பட்டனர்.

ராமநாதபுரம் ஆட்சியர் இச்சாதி மோதலுக்கு முடிவு காண்பதற்காக ஒரு அமைதிக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்தார். முதுகுளத்தூரைச் சேர்ந்த பார்வர்டு பிளாக் மற்றும் காங்கிரஸ் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பங்கேற்ற 33 வயதான இம்மானுவேல் சேகரன் என்ற தலித் தலைவர் பரமக்குடியில் கொல்லப்பட்டார். இக்கொலை வன்முறைக் கலவரங்களில் முடிந்தது. இக்கலவரங்களில் இருசாராரும் பாதிக்கப்பட்டனர். 1957 ஜீலை மாதத்திலிருந்து செப்டம்பர் மாதம் வரை நடைபெற்ற சாதி மோதல்கள் ராமநாதபுரக் கலவரங்கள் என்று அறியப்படுகின்றது.

இக்கலவரங்களால் மிகவும் மனம் வருந்திய காமராசர் விசாரணைக்கு உத்தரவிட்டார். எனினும் இக்கலவரம் பற்றிக் காமராசர் அமைச்சரவை மீது நம்பிக்கையில்லாத தீர்மானத்தைக் கொண்டுவந்தார் கம்யூனிஸ்டு தலைவர் எம்.கல்யாண சுந்தரம். வாக்கெடுப்பின் போது தி.மு.க. கலந்துகொள்ளவில்லை. எனவே, இத்தீர்மானம் 28க்கு 146 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்றது. கலவரத்தால் தீக்கிரையான வீடுகள் மீண்டும் கட்டிக் கொடுக்கப்பட்டன. வெகுகாலமாக புறக்கணிக்கப்பட்ட விவசாய வளர்ச்சிக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. எனினும் முதுகுளத்தூர் கலவரம் தமிழ் நாட்டில் சாதி பிரச்சனை நீருபூத்த நெருப்பாக உள்ளது என்பதை நினைவூட்டுவதாக இருந்தது.

**'தமிழ்நாடு' பெயர் மாற்றப்போராட்டம், 1957**

மொழிவழி மாநிலங்கள் அமைக்கப்பட்ட பின்னரும் தமிழ்நாடு சென்னை மாநிலம் என்றே அழைக்கப்பட்டது. சென்னை மாநிலத்துக்குத் தமிழ்நாடு என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டுமானால் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும். சட்டத்தைத் திருத்திப் பெயர் மாற்றம் செய்ய வேண்டும் எனக் கோரி விருதுநகருக்குப் பக்கத்தில் உள்ள மணல்மேடு கிராமத்தைச் சேர்ந்த சங்கரலிங்கம் 1957 ஆகஸ்டு மாதம் உண்ணாவிரதப் போராட்டத்தைத் துவக்கினார். சங்கரலிங்கம் காங்கிரஸ்காரர். இருப்பினும் அவரது கோரிக்கை ஏற்கப்படவில்லை. சங்கரலிங்கம் 76 நாட்கள் உண்ணாவிரதம் இருந்து உயிர்த்தியாகம் செய்தார். அதன்பின் நான்காண்டுகள் கழித்து ஆங்கிலத்தில் சென்னை மாநிலம் என்றும்,

தமிழில் தமிழ்நாடு என்றும் எழுதலாம் என்றும் அரசாங்கம் அறிவித்தது. தி.மு.க. தொடர்ந்து சட்டத்திருத்தத்தின் மூலம் ஆங்கிலத்திலும் தமிழ்நாடு என்றே அழைக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்திவந்தது. முதலமைச்சர் காமராசர் தமிழர்களின் உணர்வைப் புரிந்து கொண்டு தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கு வேண்டிய முயற்சியை மேற்கொள்ளும் நல்ல வாய்ப்பை இழந்துவிட்டார்.

**ஆட்சிச் சாதனைகள்**

**மக்கள் தலைவர்**

காமராசர் மக்கள் தலைவர். அவர் பாமர மக்களின் ஒருவராக இருந்து, மக்களின் ஆதரவோடு காங்கிரஸ் தலைவராகி, மக்களின் மேம்பாட்டுக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்து, வாக்காளர்களின் நம்பிக்கையைப் பெற்று, முதலமைச்சரான பின்னரும் மக்களிடையே நடமாடி அவர்களது இன்ப துன்பங்களில் பங்கேற்ற ஒரே அரசியல் தலைவர் காமராசர்தான். அவர் மக்களிடம் நெருங்கிப் பழகுவதற்காக தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் சென்றார். அடிக்கடி சுற்றுப்பயணம் மேற்கொண்டு மக்கள் பிரச்சனைகளை நேரில் கண்டறிந்து அவற்றுக்கு உரிய தீர்வு கண்டார். நிர்வாகத்தில் அதிகாரிகளுக்கும் மக்களுக்கும் இடையே இருந்த இடைவெளியை முடிந்தவரைக் குறைத்தார்.

தனிப்பட்ட முறையில் தன் செல்வாக்கைப் பெருக்கிக் கொள்ளாமல் ஊழலற்ற பொது மக்கள் நலனைப் பெருக்குவதில் முனைப்பார்வத்தோடு செயல்பட்டார். எந்த ஒரு பிரச்சனை அல்லது புகார் மீது தனிக் கவனம் செலுத்தி அதற்கான தக்க தீர்வு கண்டார். சட்டப்பேரவைக் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு குறைவாகப் பேசி, பிறர் செல்வதைக் கருத்தூன்றிக் கேட்டு, மக்கள் பிரச்சனைகளை அறிந்து கொண்டு அதற்கேற்ற தீர்வு கண்டார். ஏழை மக்களின் துன்பத்தைப் போக்காமல் இருந்தால் எந்த பதவியில் இருப்பதிலும் எந்தப் பயனும் இல்லை என்று அடிக்கடி கூறிவந்தார். கூறியபடியே செயலிலும் காட்டினார். காமராசர் மக்கள் தலைவர் மட்டுமல்ல, அவர் செயல் வீரரும் கூட.

**கல்விப்பணி**

**அனைவருக்கும் கல்வி**

தான் படிக்காவிட்டாலும் பிறர், குறிப்பாக பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட, ஏழை மக்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்று விரும்பினார் காமராசர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை கொடுப்பதில் அர்த்தமில்லை என்பதை நன்கு அறிந்த காமராசர் அனைவருக்கும் ஆரம்பக் கல்வி கொடுக்கத் திட்டமிட்டார். திட்டமிட்டால் மட்டும் போதாது. இத்திட்டத்தை நிறைவேற்ற பெரும் தொகை செலவிட வேண்டும். காமராசர் முதலமைச்சர் பொறுப்பேற்ற போது, அரசாங்கம் ஆரம்பக் கல்விக்காக செலவிடப்பட்ட தொகையை இரண்டு மடங்காக உயர்த்தினார்.

### நிர்வாகத் தலைமை

காமராசர் குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்பு அளிப்பதைக் கடமையாக மட்டும் கருதாமல் பணியாக நினைத்தார். அதை ஒரு மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும் என்று தீர்மானித்தார். இதை மனதில் கொண்டே நெ.து.சுந்தரவடிவேலுவை பொதுக் கல்வி இயக்குநராக நியமித்தார். அவரது கல்வித் தலைமையின் கீழ் பல்வேறு முற்போக்குக் கல்வித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கல்விக் கொள்கை

காமராசரின் புதிய கல்விக்கொள்கையின் சிறப்புக் கூறுகள் மூன்று : 1) கல்வியில் பின்தங்கியுள்ள இடங்களுக்கு கல்வியை விரிவுபடுத்துதல். 2) புதிய பள்ளிகளைத் திறத்தல். 3) ஆரம்ப உயர்நிலைப்பள்ளி அளவில் கல்வித் தரத்தை உயர்த்தல். பள்ளி வேலை நாட்கள் 180லிருந்து 200ஆக உயர்த்தப்பட்டன.

### கல்வித் திட்டங்கள்

இக்கல்விக் கொள்கைக்கு ஏற்ப பின்வரும் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. ராஜாஜி ஆட்சிக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட அரைநாள் படிப்பு, அரைநாள் தொழில் என்ற கல்வித் திட்டம் விலக்கிக் கொள்ளப்பட்டது. 2) பூரண மதுவிலக்கை கொண்டு வந்ததால் ஏற்பட்ட வருவாய் இழப்பின் ஒரு பகுதியைச் சரிக்கட்டுவதற்காக மூடப்பட்ட 6000 பள்ளிகளும் மீண்டும் திறக்கப்பட்டன. 3) தமிழகத்தில் 15,000 கிராமங்களில் 6,000 கிராமங்களில் எவ்வித பள்ளியும் இல்லாதிருந்தது. எனவே, 300க்கு மேல் மக்கள் தொகை கொண்ட கிராமங்களில் பள்ளிகள் திறக்கப்பட்டன. 14,000 புதிய பள்ளிகள் திறக்கப்பட்டன. ஆங்கிலேயர் ஆட்சியின்போது கல்வி வளர்ச்சி 7% ராஜாஜி ஆட்சியின் போது 12,000 பள்ளிகள் இருந்தன. காமராசரின் ஆட்சியின் போது 27,000 பள்ளிகள் நல்ல நிலையில் செயல்பட்டன. 4) 6 முதல் 11 வயது வரை உள்ள பிள்ளைகள் அனைவரையும் பள்ளிகளில் சேர்ப்பதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டது. குறிப்பாக பிற்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பாரின் பிள்ளைகளைச் சேர்க்க சிறப்பு கவனம் செலுத்தப்பட்டது.

5) பிள்ளைகள் படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிடாமல் இருக்க அனைத்துப் பள்ளிகளிலும், குறிப்பாகக் கிராமப்பள்ளிகளில் மக்கள் பங்கேற்புடன் மதிய உணவுத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்தின் விளைவாக 20,000க்கும் மேற்பட்ட பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்பட்டது. 15 லட்சம் மாணவர்கள் பயன் பெற்றனர். அறிமுகப்படுத்தப்பட்டதோடு அல்லாமல் அத்திட்டம் முறையாகவும், சரியாகவும் செயல்படுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. இத்திட்டத்தின் பங்கேற்கப் பல பெண்கள் சேவை மனப்பான்மையுடன் முன்வந்தனர். 6) பள்ளியில் சேர்வதற்கு முன் இருந்த குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து உணவு கொடுப்பதற்கான பரிசோதனைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. 7) பள்ளிகளுக்குத் தேவையான கரும்பலகை, மேஜை, நாற்காலி போன்ற கட்டுமானப் பொருட்கள் வழங்கப்பட்டன. 8) மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களிடமிருந்து நன்கொடைகள்

பொருள்களாகவோ அல்லது பணமாகவோ பெறப்பட்டன. மக்கள் மகிழ்ச்சியோடு முன்வந்து கோடிக்கணக்கான ரூபாய் நன்கொடையாகக் கொடுத்தனர். இந்த நன்கொடைகளைக் கொண்டு ஏழை மாணவ, மாணவிகளுக்கு இலவசப் புத்தகங்களும், பலகைகளும், எழுதுகோல்களும் வழங்கப்பட்டன. 9) பெற்றோரின் வருவாய் ஆண்டுக்கு ரூ.1200க்குள் இருந்தால் 10ம் வகுப்பு வரை படித்த மாணவர்களுக்கு இலவசமாகக் கல்வி அளிக்கப்பட்டது.

10) மாவட்டம்தோரும் பள்ளி மேம்பாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டன. இம்மாநாடுகள் திருவிழாக்கள் போன்றே நடத்தப்பட்டன. இவை மக்களிடையே அமோக ஆதரவைப் பெற்றன. இதைக் கேள்விப்பட்ட நேரு தமிழ் நாட்டுக்கு வந்தபோது ஒரு மாவட்ட மாநாட்டைப் பார்வையிட்டார். மக்களின் மாபெரும் இயக்கமாக விரிவடைந்த இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றிக்கு பொது கல்வி இயக்குநர் நெ.து.சுந்தரவடிவேலும் பெரிதும் துணையாக இருந்தார்.

கல்வி விரிவாக்கம் துவக்கக் கல்வி மற்றும் உயர்நிலை-மேல்நிலை பள்ளிகளோடு நின்றுவிடாமல் கல்லூரிக் கல்வி நிலைக்கும் கொண்டு செல்லப்பட்டது. கலைக்கல்லூரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது. ராஜாஜியின் கல்வித்திட்டத்தைக் கைவிட்ட காமராசர் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி போன்ற தொழில் படிப்புகளுக்குச் சேர்வதற்கான மொத்த மதிப்பெண்ணை மீண்டும் 50லிருந்து 150 ஆக உயர்த்தினார். இதனால் பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பெரிதும் பயனடைந்தனர். இரண்டு புதிய உடற்பயிற்சிக் கல்லூரிகள் துவக்கப்பட்டன. 40 ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன. ஆசிரியர் நலனில் அக்கறை கொண்ட காமராசர் ‘ஆசிரியர் ஓய்வூதியத் திட்டத்தைக’ கொண்டுவந்தார். பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஆய்வுக் கூடங்களும், நூலகங்களும் துவக்கப்பட்டன. இவற்றுக்காகச் சிறப்பு மானியங்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள் அரசியலில் பங்கேற்காமல் படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார் காமராசர். அவரது கல்விக்கொள்கையும், திட்டங்களும் அனைத்து அத்தியாவாசியக் கல்விக் கூறுகளையும் உள்ளடக்கிய முழுமையான ஒன்றாகும்.

**மும்மொழிக்கொள்கை**

பள்ளிகளில் எந்த மொழிகளைக் கற்றுக் கொடுப்பது என்பது சர்ச்சைக்குரிய பொருளாக இருந்தது. இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்தி ஆட்சி மொழியாயிற்று. ஆனால் இந்தியைக் கட்டாய பாடமாக்குவதற்கும் தமிழ்நாட்டில் கடுமையான எதிர்ப்பு இருந்தது. ஆயினும் இந்தியைக் கற்றுக் கொண்டால் வட மாநிலங்களில் வேலை தேடிச் செல்வோருக்கு இந்தி அறிவு பயன்படும் என்ற எண்ணமும் இருந்தது. இவற்றை மனதில் கொண்டு காமராசர் ஆட்சியில் மும்மொழிக் கொள்கை பின்பற்றப்பட்டது. மும்மொழிக்கொள்கை மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சகம் மாநில அரசுகளைக் கலந்து ஆலோசித்து உருவாக்கப்பட்டு தேசிய கொள்கைத் தீர்மானமாக (National Policy Resolution, 1968) வெளியிடப்பட்டது. இக்கொள்கைப்படி, இந்தி பேசும் மாநிலங்களில் இந்தி,

ஆங்கிலம் ஆகிய மொழிகளோடு ஒரு தென்னிந்திய மொழியைக் கற்பிக்க வேண்டும். அதேபோன்று, இந்தி பேசாத மாநிலங்களில் ஆங்கிலம், இந்தியோடு ஒரு மாநில மொழியைக் கற்பிக்க வேண்டும்.

மும்மொழிக் கொள்கைப்படி தமிழும் ஆங்கிலமும் கட்டாயப்பாடங்களாகவும், இந்தி விருப்பப்பாடமாகவும் கற்பிக்கப்பட்டது. இந்தி தவிர வேறு இந்திய மொழி கற்போரின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் அதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது. விருப்பப்பாடம் தேர்வுப்பாடமாக்கப்பட்டது. இந்த ஏற்பாட்டின்படி பல பள்ளிகளில் இந்தி எவ்வித கட்டாயம் இன்றி விருப்பப் பாடமாகக் கற்பிக்கப்பட்டது. எனினும் இத்திட்டத்திற்கும் எதிர்ப்பு இருந்தது.

**பொருளாதார வளர்ச்சி**

ஒரு நாட்டின் அல்லது மாநிலத்தின் பொருளாதார பலம் அதன் விவசாய மற்றும் தொழில் வளர்ச்சியைப் பொறுத்துள்ளது. விவசாய-தொழில் வளர்ச்சிக்கு மின்சாரம், நீர்ப்பாசனம், போக்குவரத்து போன்ற உட்கட்டுமான வசதிகள் இன்றியமையாதவை. இவை அனைத்தும் ஒருங்கிணைந்து நிறைவேற்றப்படுதல் வேண்டும். காமராசரின் ஆட்சிக்காலத்தில் இவற்றுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டது.

**மின்சார வசதி**

மின்சார வசதி விவசாய மற்றும் தொழில் வளர்ச்சியின் முதுகெலும்பாகும். முன்னமேயே ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நீலகிரி மலைகளில் நிர்மாணிக்கப்பட்ட பைக்காரா மின் உற்பத்தித் திட்டம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அதன் விளைவாகக் கோவை மாவட்டத்தில் பல தொழிற்சாலைகள் துவக்கப்பட்டன. காமராசரின் ஆட்சிக்காலத்தில் இத்திட்டம் வியத்தகு அளவில் விரிவடைந்தது. குந்தா திட்டம் நிறைவேற்றப்பட்டது. அதற்கு மூலகாரணமாக இருந்தவர் 1957இல் தொழில் அமைச்சர் பொறுப்பேற்ற ஆர். வெங்கட்ராமன் ஆவார். கிராமங்களில் மின்வசதி அறிமுகப்படுத்தப்பட்டது. மின்சார மோட்டார்கள் பொருத்தப்பட்டு, நீர்ப்பாசனத்தை அதிகரித்து, விவசாய உற்பத்தி பெருக்கப்பட்டது. எடுத்துக்காட்டாக, 1951லிருந்து 1966 வரை 22.103 கிராமங்களுக்கு மின்சார இணைப்பு வழங்கப்பட்டது. மின்சார பம்பு செட்டுகள் 14,373லிருந்து 26,000 ஆக உயர்த்தப்பட்டது. விவசாயத் துறையில் மட்டும் மின்சாரத்தின் பயன் 44 கோடி யூனிட்டுகளிலிருந்து 186 கோடி யூனிட்டுகளாக அதிகரித்தது. காமராசரின் ஆட்சிக்காலத்தில் மொத்தம் 5,00,000 பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டது. இவற்றின் விளைவாக தமிழ்நாடு மின்சாரத் தன்னிறைவு பெற்ற மாநிலமாகத் திகழ்ந்தது.

**நீர்ப்பாசனத் திட்டங்கள்**

ஒரு பக்கம் மின்சார வசதித் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுக் கொண்டு இருக்கையில், மற்றொரு பக்கம் நீர்ப்பாசனத் திட்டங்கள் துவக்கப்பட்டன. காமராசர்

ஆட்சிக்காலத்தில் ஆளியாறு-பரம்பிக்குளம், பவானி, மணிமுத்தாறு, காவிரி கழிமுகத்திட்டம், வைகை, அமராவதி, சாத்தனூர், கிருஷ்ணகிரி, புல்லம்பாடி வீரூர், நெய்யாறு நீர்த்தேக்கத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இவற்றுள் பரம்பிக்குளம்-ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டம் தமிழ்நாடு-கேரளா ஆகிய அண்டை மாநிலங்களின் பரஸ்பர ஒத்துழைப்பின் விளைவு என்பது குறிப்பிடத்தக்கது. பத்து கோடி ரூபாய் முதலீட்டில் முடிக்கப்பட்ட கீழ்ப்பவானித்திட்டத்தால் கோவையில் மட்டும் 2,07,000 ஏக்கர் பரப்பு நிலம் நீர்ப்பாசன வசதி பெற்றது. அதேபோன்று, மணிமுத்தாறு திட்டம் திருநெல்வேலியில் 20,000 ஏக்கர் நிலம் பயன்பெற்றது. மேட்டூர் கால்வாய் விரிவாக்கத்திட்டத்தால் 45,000 ஏக்கர் நிலம் இந்த வசதியைப் பெற்றது. சிறுபாசனத் திட்டத்தின் கீழ் 1957-1961-இல் மட்டும் 1,600 ஏரிகள் பாசன வசதிக்குப் பயன்படுத்தப்பட்டன. விளைநிலத்தில் மூன்றில் ஒரு பகுதி நிரந்தர நீர்ப்பாசனப் பகுதியாக்கப்பட்டது. அதேபோன்று சாத்தனூர். கிருஷ்ணகிரி அணைக்கட்டுகளும் குறிப்பிடத்தக்கவை. 1957-1961-இல் மட்டும் 1,628 குளங்கள் தூர்வாறப்பட்டன. சிறு நீர்ப்பாசனத்திட்டத்தின் கீழ் 2000 கிணறுகள் வடிவகால் வசதியுடன் தோண்டப்பட்டன. விவசாயிகளுக்கு 25% அரசாங்க மானியத்துடன் நீண்ட காலக் கடன்கள் கொடுக்கப்பட்டன. அவர்களுக்குத் தவணை முறையில் எண்ணெய் எஞ்சின்கள், மின்சார பம்ப்செட்டுகள் வழங்கப்பட்டன. காமராசரின் ஆட்சிக் காலத்தில் மொத்தம் 150 லட்ச ஏக்கர் நிலத்தில் 56 லட்சம் ஏக்கர், அதாவது மூன்றில் ஒரு பகுதி, நிலையான நீர்ப்பாசன வசதியுடன் விளைவிக்கப்பட்டது.

**சட்டச்சாதனைகள்**

சென்னை நிலச்சீர்திருத்தச் சட்ட (Madras Land Reforms Act, 1955)மும், சென்னைப் பண்ணையாள் பாதுகாப்புச் சட்ட (Madras Cultiating Plants Portection Act, 1955)மும் காமராசரின் விவசாய சீர்திருத்த சட்டச்சாதனைகளாகும். ஒரு சட்டம் பண்ணையாட்கள் நியாயமற்ற வழிகளில் வெளியேற்றப்படுவதைத் தடை செய்தது. மற்றொரு சட்டம் ஐவர் கொண்ட குடும்பம், 20 டாண்டாடு ஏக்கருக்கு மேல் வைத்திருப்பதற்கு உச்ச வரம்பு நிர்ணயித்தது. இதேபோன்று நியாயமான குத்தகை நிர்ணயம் செய்வதற்கும், விவசாய வருமானத்துக்கு வரி விதிப்பதற்கும் சட்டத்தீர்வு காணப்பட்டது.

**தொழில் வளர்ச்சித்திட்டங்கள்**

விவசாய வளர்ச்சித் திட்டங்களைப் போன்றே தொழில் வளர்ச்சித் திட்டங்களுக்கும் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. பல்வேறு கனரக, மத்தியரக, சிறுராகத் தொழில்கள் தொடங்கப்பட்டன. இவை, குறிப்பாக கனரகத் தொழில்கள் வெளிநாட்டு முதலீட்டுடனும், மத்திய அரசின் உதவியுடனும் தொடங்கப்பட்டன. உதாரணமாக, நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்டம் கிழக்கு ஜெர்மனி முதலீட்டைப் பெற்று மத்திய அரசின் திட்டமாக உருப்பெற்றது. அதேபோன்று நெய்வேலி அனல் மின்திட்டம் ரஷ்ய உதவியுடன் நிறைவேற்றப்பட்டது. சென்னை ரயில் பெட்டித்

தொழிற்சாலை துவக்கப்படுவதற்கு சுவிட்சர்லாந்தின் உதவி தேவைப்பட்டது. இந்துஸ்தான் டெலிபிரிண்டர் தொழிற்சாலை இத்தாலியை நிறுவனத்தின் ஒத்துழைப்போடு துவக்கப்பட்டது. நீலகிரி கச்சா பிலிம் உற்பத்தித் தொழிற்சாலை பிரெஞ்சு தொழில்நுட்ப உதவியுடன் உருவாக்கப்பட்டது. திருவெறும்பூர் கனரக கொதிகலன் தொழிற்சாலையும், ஆவடி 'டாங்க்' தொழிற்சாலையும், நத்தப்பாக்கம் அறுவை சிகிச்சை கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலையும் மத்திய அரசால் துவக்கப்பட்டத் திட்டங்களாகும். திருச்சி பெல்லும், மணலி எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் பிற தொழிற்சாலைகளாகும்.

வெளிநாடுகளின் உதவியோடு துவக்கப்பட்ட தொழில் வளர்ச்சித்திட்டங்கள், ஐந்தாண்டு திட்டங்களின் கீழ் மத்திய அரசாங்கம் ஆரம்பித்த திட்டங்கள் போக, தமிழ்நாடு அரசாங்கமும் தனியார் துறையும் போட்டி போட்டுக்கொண்டு மத்தியதர சிறுகுறு தொழிற்சாலைகளைத் துவக்கின. காமராசர் அரசாங்கம் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் தொழிற்பேட்டைகளை துவக்கப்பட்டன. இவற்றின் மூலம் நூற்றுக்கணக்கான தொழில்முனைவோர் பயனடைந்தனர். ஆயிரக்கணக்கானோருக்கு வேலை வாய்ப்புகள் கிடைத்தன. தனியார் துறையில் துணி உற்பத்தி, சிமெண்ட் உற்பத்தி, சர்க்கரை ஆலைகள் மோட்டார் மற்றும் இருசக்கர உற்பத்தி சாலைகள் துவக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, ராஜபாளையம் ராம்கோ தொழிற்சாலை, சேஷாயி காகிதத் தொழிற்சாலை, மேட்டுப்பாளையம் விஸ்கோஸ், வடபாதிமங்கலம் சர்க்கரை ஆலை, வண்டலூர் டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை, எண்ணூர் ராயல் என்பீல்டு மோட்டார் தொழிற்சாலை மற்றும் அசோக் லேலண்டு தொழிற்சாலைகள் குறிப்பிடத்தக்கவை. காமராசர் முதலமைச்சராவதற்கு முன் மகாராஷ்டிரமும், மேற்கு வங்காளமும் தொழில் வளர்ச்சியின் முன்னணி மாநிலங்களாக இருந்தன. இவரது ஆட்சிக்கால இறுதியில் தமிழ்நாடு மேற்கு வங்காளத்தைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு இந்தியாவில் இரண்டாவது இடத்தைப்பிடித்தது. இது வரலாற்று முக்கியத்துவமிக்க பொருளாதார சாதனையாகும். பொருளாதார அதிசயம்.

**அறிவியல் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்கள்**

காமராசர் ஆட்சிக்காலத்தில் பலதரப்பட்ட அறிவியல், தொழில்நுட்ப, ஆராய்ச்சி நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன. அவற்றுள் முக்கியமானவை : இந்திய தொழில்நுட்ப நிலையம், ராமானுஜம் கணித நிலையம், சென்னை அடையாற்றில் உள்ள புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவனம், திருச்சி பிராந்திய தொழில்நுட்பக் கல்லூரி, கோவை அரசாங்க பொறியியல் கல்லூரி, காரைக்குடி மின்-வேதியியல் ஆராய்ச்சி மையம், சென்னை அழகப்பா தொழில்நுட்பக் கல்லூரி, இவையன்றி பல பாலிடெக்னிக்குகளும் தொழில் பயிற்சி நிறுவனங்களும் துவக்கப்பட்டன. சென்னை அடையாறில் செயல்பட்டு வந்த தன்னார்வ உடல்நல சேவைகள் திட்டத்தின் கீழ் ஒரு மருத்துவ மையம் துவக்கப்பட்டது. தனியார் துறையிலும் பல தொழில்நுட்ப, அறிவியல் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இவற்றின் விளைவாக தமிழ்நாடு தொழில்மையமான அறிவியல்-தொழில்நுட்ப-ஆராய்ச்சிக் குவிமையமாகத் திகழ்ந்தது.

**மக்கள் தொண்டர்**

காமராசர் முதலமைச்சரான பின்னரும் மக்கள் தொண்டராகவே செயல்பட்டார். மக்கள் துன்பத்தைத் தன் துன்பமாகக் கருதினார். இதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகளைக் கூறலாம். 1955ஆம் ஆண்டு கிழக்கு ராமநாதபுரம் மாவட்டம் வெள்ளத்தாலும் புயலாலும் பெரிதும் பாதிக்கப்பட்டது. அப்போது காமராசர் அங்கு விரைந்து சென்று மக்களைச் சந்தித்து, சேதங்களை நேரில் பார்வையிட்டு, இழப்புகளை அதிகாரிகளுடன் தோராயமாகக் கணக்கிட்டு அங்கேயே ஆணைகளைப் பிறப்பித்தார். நிவாரணத் தொகையை உடனடியாகப் பட்டுவாடா செய்ய வேண்டும்மென்று உத்தரவிட்டார். அதேபோன்று 1962இல் வடஆர்க்காடு மாவட்டத்தில் உள்ள குடியாத்தத்தில் 50 அரிசனக் குடும்பங்களின் சார்பாகக் குடிநீர்க்கிணறும், மின்சார இணைப்பும் வேண்டுமெனக் கேட்டு மனு கொடுக்கப்பட்டது. அவர்களது கோரிக்கையின் நியாயத்தை அறிந்த காமராசர் அந்த இடத்திலேயே உரிய உத்தரவைப் பிறப்பித்தார். அதுமட்டுமல்ல, பின்னர் அவ்வூர் வழியே சென்ற காமராசர் மக்களைச் சந்தித்து அவர்களது கோரிக்கை நிறைவேற்றப்பட்டதா என்பதை உறுதி செய்து கொண்டார்.

**சட்டப்பேரவைக் கூட்டங்கள்**

முதலமைச்சர் காமராசர் சட்டப்பேரவைக் கூட்டங்களில் தவறாமல் கலந்து கொண்டார். விவாதங்களில் பங்கேற்பதில்லை. அவசியமாயின் விவாதத்துக்கிடையே குறுக்கிட்டு கருத்து கூறுவார். விவாதங்களில் பங்கேற்கும் பொறுப்பை சி. சுப்பிரமணியம், எம். பக்தவத்சலம், ஆர்.வெங்கட்ராமன் போன்ற அமைச்சர்களிடம் விட்டுவிட்டார். சட்டப்பேரவை விவாதங்களைக் கூர்ந்து கேட்டு பிரச்சனைகளைப் புரிந்து கொண்டு பின்னர் அமைச்சர்களுடன் விவாதித்த பின்னர் அமைச்சரவையைக் கூட்டி முடிவெடுப்பார். அனைத்துக்கட்சி உறுப்பினர்களுக்கும் பேரவையில் கருத்துகூறும் வாய்ப்புகள் வழங்கப்பட்டன.

சட்டப்பேரவையில் சி.சுப்பிரமணியத்துக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சி.என்.அண்ணாத்துரைக்குமிடையே எழுந்த விவாதங்கள் பத்திரிகைகளில் விரிவாக வெளியிடப்பட்டன. வானொலி ஒலிபரப்பு உன்னிப்புடன் கேட்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, அழகிரிசாமி அரசாங்க வழக்குரைஞராக நியமிக்கப்பட்ட விவகாரம் பேரவைக்குள் காரசாரமாக விவாதிக்கப்பட்டது. காமராசர் முதலமைச்சராக இருந்த 9 ஆண்டு காலத்தில் 6 முறையே சட்டப்பேரவையில் பேசியுள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். டாக்டர் எம்.எ. முத்துசாமி மக்கள் வரிப்பணத்தில் ஊதியத்தையும், சலுகைகளையும் பெற்றுக்கொண்டு சட்டப்பேரவை உறுப்பினர்கள் தொடர்ந்து சட்டமன்றக் கூட்டங்களைப் புறக்கணிக்கும் பழக்கம் காமராசர் ஆட்சிக்காலத்தில் இல்லை.

**அழகிரிசாமி விவகாரம்**

அழிகிரிசாமி நீதித்துறையைச் சேர்ந்தவர். ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் முதலமைச்சராக இருந்த போது அவருக்கு பிரத்யேக செயலராக இருந்தவர். அதன்பின் மாவட்ட நீதிபதியானார். சி.சுப்பிரமணியம், காமராசர் அமைச்சரவையில் சேர்ந்த பின் அழகிரிசாமி அரசாங்க வழக்குரைஞராக நியமிக்கப்பட்டார். அந்த நியமனத்தை எதிர்த்து வழக்குரைஞர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. அவ்வழக்கை விசாரித்த நீதிபதிகள் வழக்கை தள்ளுபடி செய்தனர். எனினும் அமைச்சர் சுப்பிரமணியம் அவரது உறவினர் அரசாங்கப் பதவியில் நியமிக்கப்பட காரணமாக இருந்ததாகக் கூறி சட்டப்பேரவையில் குற்றம் சாட்டப்பட்டது.

அமைச்சர் சுப்பிரமணியத்தின் மீது உரிமை மீறல் பிரச்சனையும், நம்பிக்கையில்லாத் தீர்மானமும் கொண்டுவரப்பட்டன. விவாதத்தின் போது அமைச்சர் சுப்பிரமணியம் அழகிரிசாமி நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களையும் உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தினார். நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோற்றது. அமைச்சரின் நேர்மையும், அழகிரிசாமியின் திறமையும் நிலைத்து நின்றன. பின்னர் அழகிரிசாமி சென்னை உயர்நீதிமன்ற நீதிபதியாகவும், அதன் பின் உச்ச நீதிபதியாகவும் பதவி உயர்வு பெற்றார். இந்நிகழ்ச்சி பற்றி சி. சுப்பிரமணியம் சுயசரிதையில் எழுதிவிட்டு பொது வாழ்க்கையில் இருப்போர் எவ்வித சர்ச்சைக்கும் இடம் கொடுக்காமல் இருப்பது நல்லது என்று குறிப்பிட்டுள்ளார்.

புதிய பஞ்சாயத்துப் புரட்சி

**ஐந்தாண்டுத்திட்டம்**

ஜவஹர்லால் நேரு இந்தியப் பிரதமர் பொறுப்பேற்றவுடன் திட்டக்கமிஷன் அமைக்கப்பட்டு ஐந்தாண்டுத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. முதல் திட்டத்தில் கிராம வளர்ச்சிக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு சமுதாய வளர்ச்சித்திட்டங்கள் துவக்கப்பட்டன. பின்னர் தேசிய விரிவுப்பணித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன்பின் ஆவடி காங்கிரஸ் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட சோஷலிச பணி சமுதாயத் தீர்மானத்தின் அடிப்படையில் தீட்டப்பட்ட இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் (1956-1961) ஜனநாயக அதிகாரப்பரவல் முறையின் கீழ் புதிய பஞ்சாயத்து ஆட்சி முறை நடைமுறைப்படுத்தப்பட்டது.

**வளர்ச்சித்திட்டங்கள்**

காமராஜர் ஆட்சியில் முதல் இரண்டு ஐந்தாண்டுத்திட்டங்களில் கூறப்பட்ட கிராம வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டன. குறிப்பாக, புதிய பஞ்சாயத்து ஆட்சிமுறை பற்றி மாநிலம் முழுவதிலும் கருத்தரங்கங்கள், விவாதங்கள், மாநாடுகள் நடத்தப்பட்டு மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. உள்ளாட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களும், நிதி ஆதாரமும், உள்கட்டுமான வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டன. 1960-ஆம் ஆண்டு காந்திஜெயந்தி விழாவின்போது தமிழ்நாட்டின் புதிய கிராம பஞ்சாயத்துக்களும்,

பஞ்சாயத்து ஒன்றியங்களும், மாவட்ட வளர்ச்சி மன்றங்களும் துவக்கப்பட்டன. பின்னர் இத்திட்டம் பிற கிராமங்களுக்கும், ஒன்றியங்களுக்கும், மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டன. புதிய பஞ்சாயத்து ஆட்சி முறை காமராசர் தமிழ்நாட்டில் செய்த அமைதியான ஆரவாரமற்ற அமைதியான உள்ளாட்சிப் புரட்சியாகும்.

**சட்டப்பேரவைத் தேர்தல், 1962**

தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் 1962, பிப்ரவரி 21ஆம் தேதி நடைபெற்றது. இத்தேர்தலுக்கு முன் இரட்டை உறுப்பினர் தொகுதிகள் நீக்கப்பட்டன. இத்தேர்தலின் போது தி.மு.க. காங்கிரசுக்கு எதிரான கட்சியாக வளர்ந்து கொண்டிருந்தது. காங்கிரஸ் தனித்தே போட்டியிட்டது. வழக்கம்போல் பெரியார் ஈ.வெ.ரா. காமராசரை ஆதரித்தார். காமராசர் தான் தனது உண்மையான வாரிசு, அவரது தலைமையின் கீழ் தமிழர்களின் நலன் பாதுகாப்பாக இருக்கும். காங்கிரசுக்கு வாக்களிக்காவிடில் ராஜாஜி சவாரி செய்யும் தி.மு.க. குதிரை உங்களை இரக்கமின்றி மிதித்து அழித்துவிடும் என்று பிரச்சாரம் செய்தார். காமராசரும் பெரியாரின் மக்கள் செல்வாக்கைப் பயன்படுத்திக்கொண்டார்.

தி.மு.க.வின் ஈ.வெ.கி. சம்பத் கம்யூனிஸ்டு கட்சியுடன் கூட்டணி அமைக்கலாம் என்று கூற, சி.என். அண்ணாதுரை ராஜாஜியின் சுதந்திர கட்சியுடன் அணி சேர்ந்தார். இதன் காரணமாக சம்பத் தி.மு.கவிலிருந்து பரிந்து தமிழ் தேசிய கட்சி என்ற தனிக்கட்சியைத் துவக்கியதால் தி.மு.க.வின் பலம் இத்தேர்தலில் ஓரளவு பாதிக்கப்பட்டது. ராஜாஜியின் நிலை பற்றிக் கவலைப்படாமல் தி.மு.க. இந்திய கம்யூனிஸ்டு கட்சியுடன் தேர்தல் உறவு வைத்துக்கொண்டது. அதேபோன்று தி.மு.க. முத்துராமலிங்கத் தேவரின் பார்வர்டு பிளாக் கட்சியுடனும், முகமது இஸ்மெயினின் முஸ்லீம் லீக்குடனும் தேர்தல் உடன்பாடு கொண்டது. இத்தேர்தலில் திரைப்பட உலகைச் சேர்ந்தோர் பிரதான பங்கேற்றனர். மக்களிடையே மகத்தான செல்வாக்கைப் பெற்றிருந்த எம்.ஜி.ராமச்சந்திரன் தி.மு.கவுக்குப் பிரச்சாரம் செய்தார். எஸ்.எஸ்.ராஜேந்திரன் தி.மு.கவுக்காக தேனி தொகுதியில் போட்டியிட்டார். சிவாஜி கணேசன் சம்பத்தின் தமிழ் தேசியக் கட்சியை ஆதரித்தார். காங்கிரஸ் திரைப்பட நடிகர்கள் நடித்த வாக்குரிமை என்ற திரைப்படத்தைத் தயாரித்து தேர்தல் பிரச்சாரத்திற்குப் பயன்படுத்தியது.

**தேர்தல் முடிவுகள்**

| கட்சிகள் | கட்சி | போட்டியிட்ட இடங்கள் | வென்ற இடங்கள் | சதவிகித வாக்கு | மாற்றம் |
|---|---|---|---|---|---|
| தனித்துப்போட்டி தி.மு.க. கூட்டணி | காங்கிரஸ் | 206 | 139 | 46.14% | -12 |
| | தி.முக. | 143 | 50 | 27.10% | +37 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சுதந்திரா கட்சி | 94 | 6 | 7.82% | +6 |
| | பார்வர்டு பிளாக் | 6 | 3 | 1.37% | +3 |
| | கம்யூனிஸ்டு கட்சி | 68 | 2 | 7.72% | -2 |
| | சோஷலிஸ்டு கட்சி | 7 | 1 | .38% | - |
| | பிரஜா சோஷலிஸ்டு கட்சி | 21 | 0 | 1.26% | -2 |
| | நாம் தமிழர் கட்சி | 16 | 0 | .93% | - |
| | இந்திய யூனியன் முஸ்லீம் லீக் | 6 | 0 | .71% | - |
| | ரிப்பள்ளிகள் கட்சி | 4 | 0 | .45% | - |
| | தமிழ் தேசிய கட்சி | 9 | 0 | .35% | - |
| | சோஷலிஸ்டு லேபர் | 7 | 0 | .34% | - |
| | ஜனசங்கம் | 4 | 0 | .08% | - |
| | சுயேட்சைகள் | 207 | 5 | | -17 |
| | | | **206** | | |

**முக்கியத்துவம்**

தற்காலத் தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் 1962 பொதுத்தேர்தல் முக்கியத்துவம் வாய்ந்தது. இத்தேர்தலில் காங்கிரசுக்குப் பெரும்பான்மை இடங்கள் கிடைத்தாலும் பிரதான எதிர்க்கட்சியாக தி.மு.க.50 இடங்களில் வெற்றி பெற்றது. ஆனால், அக்கட்சித் தலைவர் சி.என்.அண்ணாதுரை அவரது சொந்த காஞ்சீபுரம் தொகுதியில் காங்கிரஸ் வேட்பாளர் நடேச முதலியாரால் தோற்கடிக்கப்பட்டார். மொத்தமுள்ள 206 இடங்களில் 130 இடங்களில் வெற்றி பெற்ற காங்கிரஸ் மீண்டும் மூன்றாவது முறையாக ஆட்சியமைத்தது.

**அமைச்சரவை**

முதலமைச்சர் காமராசரின் மூன்றாவது அமைச்சரவை 1962 மார்ச் மாதம் 3ஆம் தேதி அமைக்கப்பட்டது. அதில் இடம் பெற்றோர் எம். பக்தவத்சலம் (நிதி, கல்வி), ஜோதி வெங்கடாசலம் (பொது சுகாதாரம், பெண்கள், குழந்தைகள் நலம்), ஆர்.வெங்கட்ராமன் (நிதி), எ.எம்.அப்துல் மஜீத் (உள்ளாட்சி நிர்வாகம்), பி.கக்கன் (விவசாயம்), வி.ராமய்யா (பொதுப்பணி, வருவாய்), என். நல்ல சேனாதிபதி சர்க்கரை

மன்றாடியார் (கூட்டுறவு, காடுகள்), ஜி.பூவராகன் (விளம்பரம், தகவல்). இந்த அமைச்சரவையில் நால்வர் (ஜோதி அம்மாள், மன்றாடியார், பூவராகவன், மஜீத்) புதிதாக சேர்த்துக்கொள்ளப்பட்டனர். சி. சுப்பிரமணியம் நாடாளுமன்ற உறுப்பினரானதால் இடம் பெறவில்லை. காமராசர் அமைச்சர்களுக்குக் கொடுத்த அறிவுரை, பிரச்சனையை எதிர் கொள்ளுங்கள், தவிர்க்காதீர்கள், தீர்வுகாணுங்கள், நீங்கள் செய்யும் காரியம் சிறியதாயினும் மக்கள் மகிழ்ச்சி அடைவர்.

**பதவித்துறப்பு**

**காமராசர் திட்டம்**

1962-ஆம் ஆண்டு சீன-இந்தியப்போர் (1959-1962) முடிந்த பின் பிரதமர் நேரு நாட்டின் பாதுகாப்பைப் பலப்படுத்தவும், காங்கிரஸ் கட்சியை வலுப்படுத்தவும் விரும்பினார். காங்கிரசை அனைத்து நிலைகளிலும் பலப்படுத்துவது பற்றி தமிழ்நாடு முதலமைச்சர் காமராசருடன் நேரு ஐதராபாத்தில் சந்தித்துப்பேசினார். அப்போது காமராசர் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் ஆட்சிப்பொறுப்பிலிருந்து விலகி கட்சிப்பணிகளைக் கவனித்தால் காங்கிரசைப் பலப்படுத்த முடியும் என்ற கருத்தைக் கூறினார். காமராசரின் கருத்தை நேரு ஏற்றுக்கொண்டார். இத்திட்டத்தை காங்கிரஸ் கமிட்டியும் ஏற்றுக்கொண்டது. இத்திட்டம் காமராசர் திட்டம் என்று அனைவராலும் அழைக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி காமராசர் தமிழ்நாடு முதலமைச்சர் பதவியைத் துறந்தார் (1963 அக்டோபர் 1).

**காங்கிரஸ் தலைவர்**

முதலமைச்சர் பதவியைத் துறந்து கட்சிப்பணிக்காக டெல்லி சென்ற காமராசர் அகில இந்திய காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (1963 அக்டோபர் 9). நேரு இறந்தபின் அவருக்குப் பிறகு லால்பகதூர் சாஸ்திரியும் (1964-1966), இந்திரா காந்தியும் (1966) முறையே பிரதமர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்குக் காமராசர் பெரிதும் காரணமாக இருந்தார். 1967இல் தமிழ் நாட்டில் நடைபெற்ற சட்டப்பேரவைத் தேர்தலில் காமராசர் தனது சொந்தத் தொகுதியான விருதுநகரில் தி.மு.க. வேட்பாளர் பெ. சீனிவாசனால் தோற்கடிக்கப்பட்டார். 1969இல் காங்கிரஸ் பிளவுபட்டபோது காமராசர் அமைப்பு காங்கிரஸ் என்ற கட்சியைத் துவக்கினார். 1975 அக்டோபர் 2ஆம் தேதி காமராசர் அவரது அரசியல் யாத்திரையை நிரந்தரமாக முடித்துக்கொண்டார்.

காமராசர் உழைப்பால் உயர்ந்த உத்தமர். அரசியல் துறவி. வாழ்க்கை அனுபவக் கல்வி பெற்று, இளமையிலேயே காங்கிரஸ் பேரியக்கத்துக்காகத் தன் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்டு, கிராம நிலையிலிருந்து தேசத் தலைமை அளவுக்கு செல்வாக்கு பெற்றவர். நேருவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர். தமிழ் நாட்டின் சிந்தனை சிற்பி, செயல் வீரர், தேசாபிமானி, சத்திய மூர்த்தியின் தன்மாற்று வடிவம். அரசியல் வாரிசு. ஒன்பது ஆண்டு காலம் தமிழ்நாட்டைத் தொடர்ந்து ஆட்சி செய்தவர். கரைபடாக் கரத்தவர். தன் குடும்பத்தைவிட

நாட்டையே குடும்பமாகக் கொண்டு செயல்பட்டவர் காமராசர். அவர் அபூர்வ அரசியல் பிறவி.

காமராசர் அவரது ஆட்சிக்காலத்தில் பல வரலாற்றுச் சாதனைகளைப் படைத்தவர். 'கேடில் விழுச்செல்வம் கல்வி', கல்வியே மனித ஆற்றலின் திறவுகோல், சமூக விழிப்புணர்ச்சிக்கான அளவுகோல், பொருளாதார வளர்ச்சிக்கான நெம்புகோல் என்ற உண்மையை நன்குணர்ந்தவர் காமராசர். அறியாமையை அகற்றினால்தான் வறுமை ஒழியும் என்று நம்பியவர். மக்கள் விழிப்புணர்வுடன் கூடிய பங்கேற்பும், விவசாய-தொழில் நுட்ப-அறிவியல்-பண்பாட்டு வளர்ச்சியும் ஒரே நேர்கோட்டில் செல்ல வேண்டும் என்ற தெளிவான நோக்குடன் திட்டமிட்டு செயல்பட்டவர் காமராசர். அமைச்சர்கள் சி.சுப்பிரமணியமும், ஆர். வெங்கட்ராமனும் காமராசரின் இரு செயல் கரங்களாக இருந்து அவரது கனவுக்குச் செயலுருவம் கொடுத்தனர்.

காமராசர் சிறிய அமைச்சரவையைக் கொண்டு பெரிய சாதனைகளைச் செய்தவர். அமைச்சர்களுக்குச் செயல் சுதந்திரம் கொடுத்தவர். நிர்வாகத்தில் அரசியல் குறுக்கீடுகளைக் கட்டுப்படுத்தினார். நிர்வாக நேர்மையையும், நாணயத்தையும் பாதுகாத்தார். காமராசரின் ஆட்சிக்காலத்தில்தான் அரசாங்க அதிகாரிகளும், அலுவலர்களும் மக்களோடு சேர்ந்து செயல்பட்டனர். எடுத்துக்காட்டாக பொதுக்கல்வி இயக்குநர் நெ.து.சுந்தரவடிவேலும், மாவட்ட ஆட்சியர் கி.வேங்கடசுப்ரமணியனும் மதிய உணவுத் திட்டத்தை மக்கள் பங்கேற்புடன் அனைவருக்கும் கல்வி இயக்கமாக மாற்றியது நினைவுகூறத்தக்கது. தமிழும், ஆங்கிலமும், இந்தியும் தமிழ்ச் சமுதாயம் முன்னேறுவதற்கான முப்பெரும் கருவிகள் என்று உறுதியாக நம்பினார் காமராசர். தமிழர்கள் மாநில, தேச, சர்வதேச அளவில் உயர வேண்டும் என்று விரும்பினார். காமராசர் கருப்பு காந்தி, படிக்காத மேதை, கர்மவீரன், கல்விக் கண் திறந்தவர், கிங்மேக்கர் போன்ற செல்லப் பெயர்களால் அழைக்கப்பட்ட காமராசர் ஒன்பதாண்டு காலம் தொடர்ந்து ஆட்சிப்பொறுப்பில் இருந்தமையால் அவருக்கும் மக்களுக்குமிடையே இருந்த நேரடித் தொடர்பு படிப்படியாக குறையலாயிற்று. அவர் மாநில அரசியலிலிருந்து மத்திய அரசியலுக்குச் சென்றபின் இந்த இடைவெளி அதிகரித்தது. அவர் ஆட்சியில் இருந்தபோதே நடைபெற்ற ராமநாதபுரம் கலவரங்கள் எச்சரிக்கை மணியாக ஒலித்தது. அவர் தனிமைப்படுவதை உணரத் தலைப்பட்டார். காமராசர் கொண்டு வந்த நிலச்சீர்திருத்தங்கள், குறிப்பாக நில உச்சவரம்புச் சட்டம், தவறாகப் பயன்படுத்தப்பட்டது. ஊழல் வளரலாயிற்று. காமராசரது பல விவசாய, தொழில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டாலும் அவை தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெரிய மாற்றம் எதையும் ஏற்படுத்தவில்லை என்று கருதுகிறார் கே.ராஜய்யன். காமராசர் காலத்திலேயே காங்கிரஸ் செல்வாக்கு இழக்கத் துவங்கியது. தி.மு.கவும் கம்யூனிஸ்டு கட்சியும் தங்களது செல்வாக்கை அதிகரித்துக்கொண்டிருந்தது. காமராசர் சரியான சமயத்தில் முதலமைச்சர் பதவியைத் துறந்து மத்திய

அரசியலுக்குச் சென்றார். அதன்பின் அவரது அரசியல் வாழ்க்கையில் பல ஏற்ற இறக்கங்களைச் சந்தித்தார்.

காமராசர் கடைசிவரை கர்ம வீரராகவே இருந்தார். செயலே அவரது தாரகமந்திரம், தொண்டே அவரது வாழ்க்கைப்பணி, எளிமையே அவரது இயல்பு, தூய்மையே அவரது அணிகலன், தற்காலத்தமிழ்நாட்டின் கல்வி, விவசாயம், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சிக்கான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்தவர் காமராசர். அந்த அடித்தளத்தின் மீது தான் அவருக்குப் பின் வந்தோர் கட்டிடத்தை விரிவுபடுத்தினர் அல்லது அழகுபடுத்தினர். அவையாவும் காமராசர் எழுதிய வளர்ச்சிப் புத்தகத்தின் அடிக்குறிப்புகள், பிற்சேர்க்கைகளைப் போன்றவை. காமராசரின் குறைபாடுகள் கதிரவனில் காணப்படும் கரும்புள்ளிகளைப் போன்றவை. பலர் வரலாற்றால் உருவாக்கப்படுகின்றனர். சிலர் வரலாற்றைப் படைக்கின்றனர். காமராசர் வரலாற்றை உருவாக்கியவர்களுள் ஒருவர்.

## இந்தி எதிர்ப்புப்போராட்டம்

1956-ஜனவரி – பிப்ரவரி மாதங்களில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டம் தற்காலத் தமிழ்நாட்டின் வரலாற்றுப்போக்கையே மடைமாற்றம் செய்த மாபெரும் நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சிக்கான பின்புலத்தைப் புரிந்து கொள்ளாமல் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் தன்மையையும் தாக்கத்தையும் அறிந்து கொள்வது கடினம். இதைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இந்திய மொழிக் கொள்கை பற்றிய நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும்.

### இந்திய மொழிக் கொள்கை

இந்திய விடுதலைப் போராட்ட காலத்தில் இந்திய தேசிய மொழி மற்றும் ஆட்சி மொழி பற்றிய பலத்த சர்ச்சை எழுந்தது. சர்ச்சையின் முடிவில் காங்கிரஸ் சட்டமன்றக் குழு இரண்டாகப்பிரிந்து 78க்கு 77 என்ற ஒரு வாக்கு வித்தியாசத்தில் இந்திக்கு ஆதரவாக முடிவு செய்யப்பட்டது. அதாவது, இந்தி இந்தியாவின் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்ற முடிவாயிற்று. இந்தியா விடுதலை பெற்றபின் மொழிக் கொள்கைப் பிரச்சனை அரசியல் அமைப்பு மன்றத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது. விவாத முடிவில் பின்வரும் மொழிக்கொள்கைக் கருத்துக்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றன. 1) இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக நீடிக்கும். 2) ஆங்கிலம் 1965 வரை ஆட்சி மொழியாக நீடிக்கும். 3) 1965க்குப் பின் இந்தி ஆங்கிலத்துக்குப் பதிலாக ஆட்சி மொழியாகும். 4) 1965க்குப் பின்னரும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டுமா என்பதை நாடாளுமன்றம் தீர்மானிக்கும்.

### ஆட்சி மொழிச்சட்டம்

அரசியலமைப்புச் சட்டகர்த்தாக்கள் எதிர்பார்த்தபடி 1965க்குள் இந்தி ஆங்கிலத்துக்குப் பதில் இந்திய ஆட்சி மொழி ஆவதற்கான தகுதியைப் பெறவில்லை. எனவே 1965இல் அமைக்கப்பட்ட ஆட்சி மொழிக் கமிஷன் அதன்

ஆய்வு அறிக்கையில் இந்தி ஆங்கிலத்துக்குப் பதில் படிப்படியாக ஆட்சி மொழி ஆகலாம் என்று பரிந்துரைத்தது. அதன்பின் குடிரசுத் தலைவர் பிறப்பித்த ஆணை 1965க்குப் பிறகு இந்தி பிரதான ஆட்சி மொழியாகவும், ஆங்கிலம் இணை ஆட்சி மொழியாகவும் இருக்கும் என்று அறிவித்தது. இந்த ஆணை இந்தி பேசாத மக்களிடையே, குறிப்பாக, தமிழர்களிடையே பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியது. இந்த சந்தேகத்தைப் போக்கும் பொருட்டு பிரதமர் நேரு "இந்தி பேசாத மக்கள் ஏற்றுக் கொள்ளும் வரை அவர்கள் மிது இந்தி திணிக்கப்படமாட்டாது" என்று உத்திரவாதத்தைக் கொடுத்தார். இந்த உத்திரவாதத்தை உள்ளடக்கிய ஆட்சி மொழிகள் சட்டம் 1963 இல் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நேருவின் வாக்குறுதியும், அந்த வாக்குறுதியின் அடிப்படையில் கொண்டுவரப்பட்ட சட்டமும் 'மாக்ன கார்ட்டாவு'க்கு ஒப்பானது என்று குறிப்பிட்டுள்ளார் மு.கருணாநிதி.

**கோபால்சாமி பொதுநிலை அறிக்கை**

தமிழ்நாட்டு திராவிடக் கட்சிகளுக்கு இந்தி என்பது வடநாட்டு ஆதிக்கச் சின்னம். அம்மொழி எருதுவுக்கு முன் காட்டப்படும் சிவப்புத் துணி போன்றது. இதை நன்கு அறிந்திருந்த சி. சுப்பிரமணியம் அனைத்துக் கட்சிக் கமிட்டியின் மூலம் ஒரு சுமூகமான தீர்வுகான முற்பட்டார். அதன் விளைவே அப்போது கல்விச் செயலராக இரந்த ஆர்.ஏ. கோபாலசாமி தயாரித்த அனைத்துக்கட்சி பொதுநிலை அறிக்கை ஆகும்.

இந்த அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு 1) இந்தியா பல மொழிகளைக் கொண்ட நாடு. 2) இந்தியாவில் பேசப்படும் அனைத்து மொழிகளுக்கும் தேசிய மொழிக்கான அந்தஸ்து உள்ளது. 3) இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் எந்த ஒரு மொழியையும் தேசிய மொழியாக அங்கீகரிக்கவில்லை. இந்தியை ஆட்சி மொழியாக மட்டுமே, நிர்வாகத் தொடர்பு மொழியாக ஏற்றுக்கொண்டுள்ளது. 4) இந்தி ஆங்கிலத்துக்குப் பதில் 15 ஆண்டுகளுக்குள் தேசிய மொழி ஆகக் கூடாது என்பதை அரசியல் அமைப்புச் சட்டம் தெளிவுபடுத்தியுள்ளது. 5) தமிழ் நாட்டு மக்கள் இந்தி ஆங்கிலத்துக்குப் பதில் தேச மொழியாவதையோ அல்லது ஆட்சி மொழியாவதையோ ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். இந்த பொதுநிலை அறிக்கையை தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராகவும், அனைத்துக் கட்சிக் கமிட்டி உறுப்பினரான சி.என். அண்ணாதுரை ஏற்றுக் கொண்டதோடு பாராட்டவும் செய்தார். ஆனால் நேருவுக்குப் பின் லால்பகதூர் சாஸ்திரி பிரதமரானவுடன் எடுத்த நடவடிக்கையால் தமிழ்நாடு அனைத்துக் கட்சி மேற்கொண்ட முயற்சி அனைத்தும் விழலுக்கிறைத்த நீராயிற்று.

**வாக்குறுதி மீறல், 1965**

நேருவை அடுத்துப் பிரதமரான லால் பகதூர் சாஸ்திரியும் அவரது உள்துறை அமைச்சர் குல்சாரிலால் நந்தாவும் தீவிர இந்தி ஆதரவாளர்கள். பிரதமரின் ஆதரவோடு நந்தா இந்தி மொழியை இந்திய ஆட்சி மொழியாக்கும் உறுதியுடன்

பின்வரும் அமைச்சரக ஆணையைப் பிறப்பித்தார். 1) 1965 ஜனவரி 26 குடியரசு நாளன்று இந்தி இந்திய ஒன்றியத்தின் பிரதான ஆட்சி மொழியாக இருக்கும். 2) மத்திய செயலகத்தில் சில கோப்புகளில் இந்தியில் மட்டும் குறிப்பு எழுத வேண்டும். 3) இந்தி கடிதங்களுக்கு இந்தியில் பதில் எழுத வேண்டும். 5) அதிகாரப்பூர்வமான சுற்றறிக்கைகளும், அறிவிப்புகளும் இந்தி மற்றும் ஆங்கிலத்தில் வெளியிடப்படும்.

**பதினெட்டு நாள் போராட்டம், 1965**

1965 ஜனவரி 26 ஆம் நாள் குடியரசு தினத்திலிருந்து இந்தி ஆட்சி மொழி ஆகும் என்ற மத்திய அரசின் உள்துறை அமைச்சரக ஆணை வெளியான உடனேயே தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழு கூடி குடியரசு நாளன்று கருப்புக் கொடி ஏற்றி, கருப்புச் சின்னம் அணிந்து, துக்க நாளாகக் கடைப்பிடிப்பது என்று தீர்மானித்தது. முத்தமிழ் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் திருச்சியில் இந்தி எதிர்ப்பு மாநாடு கூட்டினார். பி.டி.ராஜன் அந்த மாநாட்டுக்குத் தலைமை தாங்கினார். மதுரை மில் அதிபரும், தமிழ்நாடு பத்திரிகை ஆசிரியருமான கருமுத்து தியாகராச செட்டியார் தமிழ்க்கொடி ஏற்றி வைத்தார். கோவை விஞ்ஞானி ஜி.டி. நாயுடு இந்தித் திணிப்பை எதிர்த்துக் குரல் கொடுத்தார். இம்மாநாட்டு மேடையிலிருந்து ராஜாஜி இந்தியை ஆட்சிமொழி ஆக்கிய குடியரசு நான் தனக்கும் துக்க தினம் தான் என்று முழங்கினார். இந்தித் திணிப்பை எதிர்த்து அவர் தி.மு.கழகத்தினரைவிட தீவிரமாகப் பேசினார். ராஜாஜியுடன் நாம் தமிழர் இயக்கத்தலைவர் சி.பா.ஆதித்தனார், முஸ்லீம் லீக் தலைவர் இஸ்மாயில் சாகிப், தி.மு.க. பிரமுகர் இரா. நெடுஞ்செழியன், பார்வர்டு பிளாக் கட்சியின் மூக்கையாத் தேவர் ஆகியோர் பங்கேற்றுப்பேசினர். எனவே, தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரே குரலில் இந்தி திணிப்பை எதிர்த்தன. 15வது குடியரசு தின நாளை துக்க தினமாகக் கொண்டாடுவது தேசத்தை அவமதிப்பதாகும் என்றார் முதலமைச்சர் பக்தவத்சலம் அதுமட்டுமல்ல. இப்போராட்டத்தை முளையிலேயே கிள்ளிவிடத் தீர்மானித்தார் அவர்.

**முன்னெச்சரிக்கை நடவடிக்கை**

முதலமைச்சர் பக்தவச்சலத்தின் எச்சரிக்கையையும் மீறி போராட்டம் நடத்த முற்பட்டதால் தி.மு.க. தலைவர்கள் ஜனவரி 24ஆம் தேதி நள்ளிரவில் கைது செய்யப்பட்டனர். அண்ணாதுரை மற்றும் அவருடன் இருந்த மதியழகன், அரங்கண்ணல், இரா. செழியன், காஞ்சி மணிமொழியார், அ.பொ.அரசு, சி.வி.ராஜகோபால், இரா. சம்பந்தம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர். இவர்களன்றி என்.வி.நடராசன், நாஞ்சில் மனோகரன், சத்தியவாணிமுத்து, கே.ஆர்.ராமசாமி ஆகியோரும் சென்னையில் கைது செய்யப்பட்டனர். சென்னைக்கு வெளியே இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, குளித்தலை முத்துகிருஷ்ணன், அன்பில் தர்மலிங்கம், க. ராஜாராம் மற்றும் பலர் இரவோடு இரவாக கைது செய்யப்பட்டனர். இவர்களன்றி குன்றக்குடி அடிகளார், சி.பா. ஆதித்தனார்,

கி.ஆ.பெ.விசுவநாதம் போன்ற பிரபலங்களும் கைது செய்யப்பட்டனர். திரியை இழுத்து விட்டால் விளக்கு அணைந்துவிடுமா?

**கடற்கரைக் கூட்டம்**

தி.மு.க.வின் முன்னணித் தலைவர்கள் அனைவரும் குடியரசு நாளுக்கு முன் நள்ளிரவில் கைது செய்யப்பட்டதை அறிந்த மாணவர்கள் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தைத் தங்கள் கையில் எடுத்துக்கொண்டனர். சென்னை கடற்கரையில் கூடினார். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட சென்னை மாநிலக்கல்லூரி, சட்டக்கல்லூரி, தியாகராயர் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் சென்னை கோட்டை முன்பாக உண்ணா நோன்பு இருப்பதென்றும், குடியரசு நாளன்று நடைபெறும் தேசிய மாணவர் படை அணி வகுப்பில் பங்கேற்பதில்லை என்றும் தீர்மானித்தனர். பின்னர் அவர்கள் இந்தி புத்தகங்களைக் கொளுத்தினர். தேசிய மாணவர் படைக்கு கொடுக்கப்படும் கட்டளைகளை இந்திக்குப் பதிலாக ஆங்கிலத்தில் சொல்ல வேண்டும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றிவிட்டு அவர்கள் கலைந்து சென்றனர்.

சென்னைக் கடற்கரைக் கூட்டத்திலிருந்து திரும்பிவந்து கொண்டிருந்த மாணவர்களில் சிலர் இந்திப் புத்தகங்களைக் கொளுத்தினர். அந்த வழியாக வந்த பேருந்துகளை வழிமறித்தனர். தேசியக்கொடி தோரணங்கள் அறுத்து எறிந்தனர். தேசியக் கொடியை இறக்கினர். மாணவர்களைத் தொடர்ந்து வந்துகொண்டிருந்த போலீசார் இச்சமூக விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட மாணவர்களைத் தடியடி நடத்திக் கலைத்தனர்.

**போராட்டம்**

1956 ஜனவரி 26 ஆம் நாள் குடியரசு நாளன்று சென்னையில் சிவலிங்கம், ரெங்கநாதன் ஆகிய இருவரும் தீக்குளித்து உயிர்த்தியாகம் செய்தனர். இத்தீக்குளிப்பு நிகழ்ச்சிகள் தமிழ்நாட்டில் அதிர்ச்சி அலைகளை எழுப்பின. போராட்டம் காட்டுத்தீ போலப் பரவிற்று. குடியரசு தினத்துக்கு அடுத்த நாள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர்கள் இந்தி எதிர்ப்பைக் கண்டித்தும், கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கக் கோரியும் ஊர்வலம் நடத்தினர். ஆயுதப் படையினர் ஊர்வலத்தைத் தடுக்க முற்பட்ட போது கல்வீச்சு, கண்ணீர் புகை, துப்பாக்கிச் சூடு நடைபெற்றன. துப்பாக்கிச் சூட்டில் ராஜேந்திரன் என்ற மாணவன் இறந்தான். நெடுமாறன் படுகாயமடைந்தான். பலர் காயமுற்றனர். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து சிதம்பரத்தில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோவை ஆர்.எ.புரத்தில் நடக்க இருந்த தி.மு.க. கூட்டம் தடை செய்யப்பட்டதால் கலைந்து சென்ற கூட்டத்தினர் இந்தி படம் ஓடிக் கொண்டிருந்த கென்னடி திரையரங்கு முன் ஆர்ப்பாட்டம் செய்து திரையரங்கை மூடச் செய்தனர். இரண்டு ஆட்டோக்களுக்குத் தீ வைக்கப்பட்டது. காங்கிரஸ் உறுப்பினர்களது

வீடுகள் மீது கற்கள் வீசப்பட்டன. பந்தல் கொளுத்தப்பட்டது. 46 பேர் கை செய்யப்பட்டனர்.

**வன்முறை நிகழ்வுகள்**

சென்னையில் போராட்டத்தைத் தொடர்ந்த மாணவர்கள் சென்னை புகை வண்டி நிலையத்தின் முன்கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். மின்சார ரயில்கள் மீது கற்கள் வீசப்பட்டன. பச்சையப்பன் கல்லூரி அருகே ஒரு பேருந்துக்குத் தீ வைக்கப்பட்டது. கன்னிமாரா ஓட்டலுக்கு எதிரே இருந்த அரசு கலைக் கல்லூரி மாணவர்கள் மறியல் போராட்டம் நடத்தினர். போலீஸ் தடியடியில் இரண்டு மாணவர்கள் காயமடைந்தனர். வில்லிவாக்கத்தில் ஆயிரக்கணக்கான பள்ளி மாணவர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தினர். தபால் நிலைய இந்திப் பெயர்ப் பலகைகளும், தபால் பெட்டிகளும் உடைத்து எறியப்பட்டன. போராட்டத்தில் கைதான மாணவர்களை விடுதலை செய்யக்கோரி லயோலா கல்லூரி மாணவர்கள் உண்ணாவிரம் இருந்தனர். மாணவர்கள் போராட்டம் தீவிரமடைந்ததால் தமிழ் நாட்டில் உள்ள அனைத்துக் கல்லூரிகளையும், பள்ளிகளையும் மூடிவிட வேண்டும் என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பித்தது. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது பல இடங்களில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மொத்தம் 63 பேர் உயிரிழந்தனர்.

**தலைவர்கள் விடுதலை**

முதலமைச்சர் பக்தவத்சலம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை தி.மு.கவினர் தான் தூண்டி விட்டார்கள் என்றும், அதற்கான ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகவும் கூறினார். இருப்பினும் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகக் கைது செய்யப்பட்ட தி.மு.க. தலைவர்கள் அனைவரையும் விடுதலை செய்ய உத்தரவிட்டார். இருப்பினும் போராட்டம் நீடித்தது.

**தொடர் போராட்டம்**

தி.மு.க. தலைவர்கள் விடுவிக்கப்பட்ட போதிலும் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் 1965 பிப்ரவரி மாதத்திலும் தொடர்ந்தது. மதுரை மாணவர்கள் திருவனந்தபுரம் எக்ஸ்பிரஸ் ரயிலை நிறுத்தி, கோஷங்களை எழுப்பி, எஞ்சின் மீத கருப்புக்கொடி ஏற்றினார். நாம் தமிழர் இயக்கத்தைச் சேர்ந்த தர்மபுரிக்கு அருகே குமாரசாமி பேட்டையைச் சேர்ந்த கிருஷ்ணன் சட்டசபை முன் தீக்குளிக்கப் போவதாக முதலமைச்சருக்குக் கடிதம் எழுதியமைக்காகக் கைது செய்யப்பட்டார். மூடப்பட்ட கல்லூரிகளும் பள்ளிகளும் திறக்கப்பட்ட போதிலும் மாணவர்கள் போராட்டக்குழுவை ஏற்படுத்திப் போராட்டத்தைத் தொடர்ந்தனர். இக்குழுவுக்கு ரவிச்சந்திரன் தலைவராகவும், பெ. சீனிவாசன் செயலராகவும் இருந்து தமிழ்நாட்டுப் போராட்டத்தை ஒருங்கிணைத்தனர். போராட்டம் சென்னை, சேலம், திருச்செங்கோடு, கோவை வெள்ளக்கோவில், மதுரை, கரூர் ஆகிய இடங்களுக்குப் பரவி பல இடங்களில் வன்முறை நிகழ்ச்சிகளில் முடிந்தது. பிப்ரவரி 10-ஆம் தேதி ஒரே

நாளில் மட்டும் தமிழ் நாட்டில் 7 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. 24 பேர் இறந்தனர். 2 போலீஸ் அதிகாரிகள் திருப்பூரில் எரிக்கப்பட்டனர். கலவரங்களைக் கட்டுப்படுத்த ராணுவம் வரவழைக்கப்பட்டது. தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவிட்டது.

இப்போராட்டத்தின் போது பல மாணவர் தலைவர்களும் தி.மு.க. பிரமுகர்களும் கைது செய்யப்பட்டனர். தடையை மீறி ஊர்வலம் சென்றதாக குன்றக்குடி அடிகளார் மற்றும் ராஜகோபால், ராஜன், அருணாசலம், ஆறுமுகம் ஆகியோர் மீது வழக்கு தொடரப்பட்டது. அடிகளாருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. தடையை மீறி தண்டிக்கப்பட்ட முதல் மடாதிபதி குன்றக்குடி அடிகளார்தான் நாம் தமிழர் இயக்கத்தலைவர் சி.பா.ஆதித்தனாரும், முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதமும் கைது செய்யப்பட்டனர்.

**போராட்டம் நிறுத்தப்பட்டது**

**பதவி விலகல்**

தமிழ் நாட்டில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் எல்லை மீறிச் சென்று கொண்டிருந்ததால் மத்திய உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியமும், பெட்ரோல் துறை இணை அமைச்சர் ஒ.வி. அழகேசனும் தங்கள் பதவிகளை ராஜினாமா செய்தனர். பிரதமர் சாஸ்திரியின் வானொலி வேண்டுகோள் தமிழ் நாட்டு மக்களுக்குத் திருப்தி தருவதாக இல்லை. திருச்சியில் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் வீரப்பன் இந்தித் திணிப்பைக் கண்டித்துத் தீக்குளித்தார். சென்னையில் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. போராட்டம் உச்சகட்டத்தை எட்டியது. 12 ஊர்களில் துப்பாக்கிச் சூடு நடைபெற்றதில் 31 பேர் உயிரிழந்தனர். ராணுவத்தின் துணை கொண்டு கலவரங்களைக் கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

**கண்டனம்**

மத்திய அரசின் இந்திக் கொள்கை பற்றி பல அறிஞர்கள் கண்டனம் தெரிவித்தனர். நேருவின் உறுதி மொழிக்குச் சட்ட வடிவம் தராவிடில் இந்தியா பல பகுதிகளாகப் பிரிந்து போகக்கூடிய சூழ்நிலை உருவாகும் என்று பல வழக்குரைஞர்கள் சங்கங்கள் எச்சரித்தன. யாவற்றுக்கும் மேலாக குடியரசுத் தலைவர் எ. ராதாகிருஷ்ணன் பிரதமர் சாஸ்திரி இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்குமாறு அறிவுறுத்தினர். இவற்றின் விளைவாக மத்திய உள்துறை பிறப்பித்த ஆணை திரும்பப் பெறப்பட்டது. பிரதமர் சாஸ்திரி நேருவின் வாக்குறுதியை பின்பற்றுவதாக உறுதி அளித்தார். இதை அடுத்து முதலமைச்சர் பக்தவத்சலம் ஆங்கிலம் நிரந்தரமாக நீடிப்பதற்கான சட்டம் கொண்டுவர முயற்சிக்கப் போவதாகவும், சிறையில் உள்ள மாணவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் மாணவர் தலைவர்களுக்குக் கொடுத்த வாக்குறுதியின் பேரில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நிறுத்தப்பட்டது. 1965 பிப்ரவரி 17ஆம் தேதி பாராளுமன்ற கூட்டத்தை துவக்கி வைத்துப் பேசிய குடியரசுத் தலைவர்

ராதாகிருஷ்ணன் “இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் நீடிக்கும் என்ற நேரவின் உறுதி மொழியை நிறைவேற்றுவோம்” என்று உறுதி அளித்தார். அதன்பின் 1965 பிப்ரவரி 24ஆம் தேதி கூடிய காங்கிரஸ் செயற்குழு 1) தேர்வுகள் அனைத்தும் பிரதான பிராந்திய மொழிகளில் எழுத அனுமதித்தல், 2) மும்மொழித் திட்டத்தை முறையாக செயல்படுத்தல். 3) 1963-ஆம் ஆண்டு ஆட்சி மொழிச்சட்டத்தில் நேருவின் உறுதிமொழிக்கு உருவம் கொடுக்கும்படி சட்டத்திருத்தம் செய்ய வேண்டும் என்று பரிந்துரைத்தது. இதைத் தொடர்ந்து முதலமைச்சர் பக்தவத்சலம் சொன்ன உறுதிமொழியை அடுத்து குறு உள்நாட்டுப் போர் விலக்கிக் கொள்ளப்பட்டது. மத்திய, மாநில ஆட்சித் தலைவர்களின் விவேகமற்ற முடிவுகளாலும், பேச்சாலும், போக்காலும் தமிழ் நாட்டில் காங்கிரசின் செல்வாக்கு சரிந்தது. அச்சரிவு 1967 சட்டப்பேரவையில் எதிரொலித்தது.

**தி.மு.க.வின் பங்கு**

திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடைபெற்றதற்குப் பொறுப்பு? இந்தி எதிர்ப்புப் போராட்டம் தி.மு.க.வால் அறிவிக்கப்பட்டது. அப்போராட்டத்தைத் தி.மு.க. அல்லாத கட்சிகளும், கட்சி சாராத் தலைவர்களும் ஆதரித்தனர். போராட்டம் துவக்கப்படுவதற்கு முன்பாக, எச்சரிக்கை நடவடிக்கையாக, தி.மு.க. தலைவர்கள் அனைவரும் கைது செய்யப்பட்டு விட்டனர். எனினும் இப்போராட்டம் அறிவிக்கப்பட்டபடி குடியரசு நாளன்று மாணவர்களால் முன்னின்று நடத்தப்பட்டது. 1942-இல் காந்தி உட்பட அனைத்து காங்கிரஸ் தலைவர்களும் கைது செய்யப்பட்டவுடன் வெள்ளையனே வெளியேறு போராட்டம் மக்கள் இயக்கமானதைப் போன்று தி.மு.க. தலைவர்கள் கைது செய்யப்பட்டபின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் மாணவர் இயக்கமாக உருமாற்றம் அடைந்துவிட்டது.

தி.மு.க.தான் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டி விட்டது என்பதற்கான ஆவண ஆதாரங்கள் தன்னிடம் இருப்பதாகக் கூறிய முதலமைச்சர் பக்தவத்சலம் அவற்றை வெளியிடவில்லை. தி.மு.க. தலைவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னரும், அண்ணாதுரை மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு வகுப்புகளுக்குத் திரும்ப வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்த பிறகும் போராட்டம் டொடர்ந்தது. தி.மு.க. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை நேரடியாகத் தூண்டவில்லையாயினும் அக்கட்சி உருவாக்கிய வட இந்திய இந்தி ஏகாதிபத்திய எதிர்ப்பு உணர்ச்சி இப்போராட்டத்துக்கான உந்து சக்தியாக இருந்தது என்று கருதுகிறார் ராபர்ட் கார்டுகிரேவ். எது எப்படியாயினும் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழ் நாட்டில் தி.மு.கவின் செல்வாக்கு பன்மடங்கு பெருகவும், அக்கட்சி 1967 பொதுத் தேர்வில் அசாதாரண வெற்றி பெறுவதற்கும் காரணமாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

**முதலமைச்சரின் பங்கு**

முதலமைச்சர் பக்தவத்சலம் தேச பக்தர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்றவர். மத்திய அரசின் மொழிக் கொள்கையை மறுபேச்சின்றி கடைப்பிடித்தவர். மத்திய அரசின் மும்மொழிக்கொள்கையை சிரமேற்கொண்டு செயல்படுத்தியவர். அதுமட்டுமல்ல. கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்குவது, மாணவர் நலனுக்கு உகந்தது அல்ல, நடைமுறை சாத்தியமற்றது என்ற உளப்பூர்வமாக நம்பியவர். தமிழ் நாட்டில் உருவாகி விசுபரூபமெடுத்து வந்த இந்தி எதிர்ப்பு உணர்ச்சியையும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தையும் தேச விரோதச் செயலாகக் கருதினார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தை சட்டம் ஒழுங்கு பிரச்சனையாகக் கருதி வன்முறை நிகழ்ச்சிகளைப் போலீசாரையும், ராணுவத்தையும் கொண்டு முறியடித்துவிடலாம் என்று முடிவெடுத்தார் முதலமைச்சர். 1965 ஜனவரி 25ஆம் தேதி மாணவர்கள் மெரீனா கடற்கரைக்குச் செல்லும் முன்பு கோட்டைக்குச் சென்று முதலமைச்சரிடம் கோரிக்கை விண்ணப்பம் கொடுக்க முயன்றனர். ஆனால் முதலமைச்சர் மாணவர் தலைவர்களை சந்திக்க மறுத்துவிட்டார். நிலைமை கட்டுக்கு அடங்காமல் சென்றபின் மத்திய அரசாங்கம் எடுத்த முடிவை ஏற்றுக்கொண்டார். முதலமைச்சரின் கடுமையான மனப்பான்மையும், மாணவர்களை சந்திக்க மறுத்தலும், போலீசாரைக் கொண்டு மாணவர் கலவரத்தைக் கலைக்க முயன்றாலும் போராட்டத்தைத் தீவிரப்படுத்தி விரிவான வன்முறைக்கு வழி வகுத்துவிட்டது என்று எழுதியுள்ளார் சி. சுப்பிரமணியம். முதலமைச்சர் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உணர்ச்சிப் பகுதியைப் புரிந்து கொள்ளாமல் அந்த உணர்ச்சியைக் காயப்படுத்தியதே போராட்டத்தின் தீவிரத்துக்குக் காரணம் என்பது இவரது கணிப்பு. சுருங்கக்கூறின், இந்தி எதிர்ப்புச் செயலுக்கு முதலமைச்சரின் எதிர்ச் செயலே இப்போராட்டத்துக்கான காரணமாகும். இதன் விளைவு 1967 தேர்தலில் தெளிவாகத் தெரிந்தது.

மீஞ்சூர் பக்தவத்சலம் செல்வமும், அரசியல் செல்வாக்குமிக்க குடும்பத்தைச் சேர்ந்தவர். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர். சட்டப்புலமையும், தேசப்பற்றும், நிர்வாக அனுபவமும் மிக்கவர். இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பும் அதற்குப் பின்னரும் 17 ஆண்டு காலம் தொடர்ந்து காங்கிரஸ் அமைச்சரவைகளில் அமைச்சராக இருந்தவர். தமிழ்நாட்டின் கடைசி காங்கிரஸ் முதலமைச்சர்.

பக்தவத்சலம் முதலமைச்சர் பொறுப்பேற்ற போது உணவுப்பொருள் தட்டுப்பாடு, விலைவாசி உயர்வு, வேலையின்மை, இந்தி மொழிப்பிரச்சனை, தி.மு.க.வின் எழுச்சி ஆகிய அனைத்துப் பிரச்சனைகளையும் அரசியல் வாரிசுகளாகப் பெற்றார். இவரது ஆட்சிக் காலத்தில் மொழிப்பிரச்சனை, பிற பொருளாதாரப் பிரச்சனைகளைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு, பூதாகரமாக வெளிப்பட்டது. பொருளாதாரப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் தீவிர கவனம் செலுத்தாமல்,

விவேகமற்ற அணுகுமுறையால் பிரச்சனையைப் பெரிதுபடுத்திவிட்டார். அதன் விளைவாக தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி மீளமுடியா வீழ்ச்சி அடைந்தது. காலத்தின் குரலைக் கேட்காதவர் காலத்தால் ஒதுக்கப்படுவர் என்ற கூற்றுக்கு முன்னுதாரணம் முதலமைச்சர் பக்தவத்சலம்.

## பஞ்சமும் நிவாரணப் பணிகளும்

### தமிழகத்தை தாக்கிய பஞ்சங்கள்

தற்காலத்தில் தமிழகத்தை தாக்கிய பஞ்சங்களுள் ஒன்று கி.பி.1781 ஆம் ஆண்டு ஏற்பட்டது. சென்னைப் பகுதியையும், ஜாகிர்ப்பகுதியையும், மற்றும் தென்பகுதிகளையும் வெகுவாகப்பாதித்தன. இக்கொடிய பஞ்சத்தால் பலர் மாண்டனர். ஏராளம் மக்கள் தங்கள் தங்களது சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்து சென்னைப் பட்டணத்தில் சென்று குவிந்தனர். இப்பாதிக்கப்பட்ட மக்களுக்கு மணியகார் சத்திரம் உணவு வினியோகம் செய்தது. ஒரு வேளைக்கு சுமார் நாலாயிரம் பேருக்கு இச்சத்திரம் உணவு வழங்கியதாகக் கூறப்படுகிறது. இங்கு வந்து குவிந்த எஞ்சிய மக்கள் வடபகுதிகளுக்கு அனுப்பினர். பல மக்களின் உயிரைப் பறித்து சமூகத்தை நிலை தடுமாறவைத்த இக்கொடிய பஞ்சம் கி.பி.1784ஆம் ஆண்டு வரை நீடித்தது.

இப்பஞ்சத்தை தொடர்ந்து ஒரு கொடிய பஞ்சம் தமிழகத்தின் வடபகுதியை கி.பி.1790ஆம் ஆண்டு தாக்கியது. கி.பி.1792ஆம் ஆண்டுவரை நீடித்த இப்பஞ்சம் மக்களைப்பெரும் துன்பத்திற்குள்ளாக்கியது. இதைத்தொடர்ந்து நிலவிய நிர்வாகச் சீர்கேடும், நடைபெற்ற கொலைகளும், கொள்ளைகளும் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தின. இதன் விளைவால் விவசாயிகள் தங்களது நிலங்களை விட்டுவிட்டு வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. இக்கொடிய பஞ்சத்தின் விளைவால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவு பாதித்தது.

கி.பி.18ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் ஒரு கொடிய பஞ்சம் தமிழகத்தை தாக்கியது. இப்பஞ்சத்தின் விளைவால் தமிழகத்தின் வடபகுதி, மதுரை, இராமநாதபுரம், திண்டுக்கல் ஆகிய பகுதிகள் பெரும் பாதிப்புக்குள்ளாயின. எனவே ஏராளம் மக்கள் தங்களது விளைநிலங்களை விட்டு வெளியேற வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. நிவாரணப்பணிக்காக அரசு பெரும் தொகையை செலவு செய்வதால் நாட்டின் பொருளாதாரம் பெருமளவு பாதித்தது.

கோர விளைவுகளை ஏற்படுத்திய கொடிய பஞ்சம் ஒன்று கி.பி.1805ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்டது. இப்பஞ்சத்தால் நெல்லூர், வடஆற்காடு, தென்னார்காடு, மதுரை, திண்டுக்கல், செங்கற்பட்டு, தஞ்சை, திருச்சி ஆகிய மாவட்டங்கள் பெரும் பாதிப்பிற்குள்ளாயின. நீண்ட நாள் நீடித்த இப்பஞ்சத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டனர். எஞ்சிய பகுதிகளில் இறந்தவர்களுடைய எண்ணிக்கைத் திட்டவட்டமாகத் தெரியவில்லை. இதைத் தொடர்ந்து மதுரை உட்படப் பல்வேறு பகுதிகளில் சிறிய அளவிலான பஞ்சங்கள் ஏற்பட்டன. இதனால்

ஏற்பட்ட உணவு பற்றாக்குறையால் பலர் இறக்க வேண்டியநிலை ஏற்பட்டது. ஏராளம் பேர் அடிமைகளாயினர்.

தமிழகத்தை தாக்கிய பஞ்சங்களில் மிகக் கொடிய பஞ்சம் கி.பி. 1876, 1878ஆம் ஆண்டுகளில் ஏற்பட்டது. மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்திய இப்பஞ்சம் சென்னை மாநிலத்தை நிலைதடுமாற வைத்தது. இதுபோன்ற கொடிய பஞ்சம் இதுகாறும் தமிழகத்தை தாக்கவில்லையென செய்திக் குறிப்புக்கள் குறிப்பிடுகின்றன. மழை குறைவினால் விளைநிலங்கள் வறண்டு, வெறிச்சோடிக் காணப்பட்டன. கிராமம் கிராமமாக மக்கள் வேற்றிடங்களுக்குக் குடிபெயர்ந்து செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. எனவே கிராமங்களும், நகரங்களும் வெறிச்சோடிக் பாழடைந்து காணப்பட்டன. இப்பஞ்சம் இலட்சக்கணக்கான மக்களது உயிரைப் பறித்தது. ஒரு ஆண்டில் மட்டும் ஐம்பது இலட்சம் மக்கள் மாண்டனர் என இப்பஞ்சத்தைப்பற்றி ஆராய்ந்த குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. இப்பஞ்சம் அரசு நிர்வாகத்தையும் வெகுவாகப்பாதித்தது. எனவே அரசு இயந்திரங்கள் செயலிழந்தன. எனவே நிவாரணப் பணிகள் இப்பஞ்சகாலத்தில் முறைப்படி மேற்கொள்ளப்படவில்லை. இருப்பினும் அரசு தனது வருவாயைப் பெருக்குவதில் முனைப்புடன் செயல்பட்டது. அப்பொழுது நிதிஅமைச்சராயிருந்த சர்ஜன் ஸ்ட்ரேசி இக்கொடிய பஞ்சகாலத்தில் நிவாரண பணிகள் மேற்கொள்வதற்குப் பதிலாக மக்களிடமிருந்து வரியை வசூல் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுவந்தார்.

கி.பி.1877ஆம் ஆண்டு அரசு ஒரு பஞ்ச நிவாரணத்திட்டத்தை அரசு வகுத்தது. இதன்படி மாவட்டப்பொறியாளர்களின் அலுவலகத்தின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டது. அவர்கள் நிவாரணப்பணிகளில் ஈடுபடுத்தப்பட்டனர். அதேப் போன்று நில அளவீட்டுத் துறையின் கீழ்மட்ட ஊழியர்கள் பலரும் பஞ்ச நிவாரண பணிகளில் அமர்த்தப்பட்டனர். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உணவு தானியங்கள் கொண்டு செல்ல ரயில் வண்டிகளும், நாட்டு வண்டிகளும் பயன்படுத்தப்பட்டன. நெசவாளர்களின் நலனைப் பாதுகாக்க எண்ணிய அரசு கச்சாப்பொருட்கள் வாங்க அவர்களுக்கு முன் பணத்தை அளித்தது. நூற்கப்பட்ட நூலுக்கு அரசு சந்தை விலையைக் கொடுத்து பெற்றுக்கொண்டது. இதனால் பழனி, திண்டுக்கல் போன்ற பகுதிகளில் வாழ்ந்த நூற்பாளர்கள் நலன்கள் காக்கப்பட்டன.

நிவாரணப்பணிகள்

கி.பி. 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தை நடுநடுங்கவைத்த கொடிய பஞ்சங்களாலும், வெள்ளப்பெருக்காலும் இவற்றைத் தொடர்ந்து ஏற்பட்ட கொடிய கொள்ளை நோயாலும் இலட்சக்கணக்கான மக்கள் இறந்தனர். இறந்தவர்களின் சடலங்கள் வீடுகளிலும், சாலையோரங்களிலும் புதைப்பாரற்று அனாதைகளாகக் கிடந்தன. ஆயிரக்கணக்கான மக்கள் நாட்டைவிட்டு வெளியேறியதால் விளைநிலங்கள் வெறிச்சோடிக்கிடந்தன. கனமழையினாலும், சூறாவளிக்காற்றினாலும் விளைநிலங்களும், குடிசை வீடுகளும் நிர்மூலமாக்கப்பட்டன. அணைகளும்,

குளங்களும் உடைக்கப்பட்டன. போக்குவரத்து ஸ்தம்பித்தது. இச்சூழ்நிலையில் அரசு பல்வேறு நிவாரணப்பணிகளை மேற்கொண்டது.

ஆரம்ப காலத்தில் பஞ்சங்கள் ஏற்பட்டபோது அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடித்ததால் நிவாரணப்பணிகளில் அதிக கவனம் செலுத்தவில்லை. ஆனால் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில்தான் அரசு முறைப்படி பஞ்ச நிவாரப்பணிகளை மேற்கொண்டு பல்வேறு திட்டங்களை அறிவித்தது. கி.பி.1812ஆம் ஆண்டு 42,000 பேருக்கு வேலை வாய்ப்புக்கள் அளிப்பதற்கானத் திட்டத்தை அரசு மேற்கொண்டது. இவர்கள் பல்வேறு நிவாரணப் பணிகளில் அமர்த்தப்பட்டனர். மேலும் உணவு பற்றாக்குறையைப் போக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. உணவுபொருட்களை வினியோகம் செய்வதற்கு சுமார் பதினாயிரம் ரூபாய் முன்பணமாக வியபாரிகளுக்கு வழங்கப்பட்டது. குறிப்பாக கி.பி.1814ஆம் ஆண்டு மே மாதம் வரை அரசு 3,23,000 ரூபாயை அரசு நிவாரணத்தொகையாகச் செலவிட்டது.

இந்தியா சுதந்திரம் அடைந்த பின் பஞ்ச நிவாரணத்திற்கு முன்னுரை அளிக்கப்பட்டதோடு இதற்கெதிராகப் பல்வேறு முற்போக்குத்திட்டங்களும் தீட்டப்பட்டன. தரிசு நிலங்களை விவசாயத்திற்குக் கொண்டு வருதல், கால்வாய்கள் அமைத்தல், அணைகள், குளங்கள் கட்டுதல், போக்குவரத்து வசதியைப் பெருக்குதல், வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமையளித்தல், நவீன விவசாய முறையைக் கடைப்பிடித்தல், கால்நடைப் பராமரிப்பு, சேமிப்புத்திட்டம் செயல்படுத்தியது. இந்திய அரசால் அமலபடுத்தப்பட்ட ஐந்தாண்டு திட்டங்கள் இவற்றிற்கு முன்னுரிமை அளித்தன. எனவே பஞ்சம் ஏற்பட்டாலும் அவற்றின் வீச்சு பெருமளவு குறைக்கப்பட்டது.

**Prepared by**
**Dr. S. MURUGAVEL, M.A.,(His., Pol. Sci., Tamil), M.Ed., M.Phil., D.G.T., Ph.D.,**
Associate Professor of History, P.G. & Research Dept. of History,
RanniAnna Govt. College for Women, GandhiNagar, Tirunelveli – 627 008.